
கலைஞரின்
கடிதங்கள்



35

10.12.2002 - முதல்
05.07.2003 - வரை

சீதை பதிப்பகம்

கலைஞரின் கடிதங்கள்

தொகுதி - 35

10.12.2002 - 05.07.2003

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர்
ஆய்வக நூல்
நிலையம்
சென்னை-18
அண்ணா அறிவாலயம்

தலைவர் கலைஞர்

சீதை பதிப்பகம்,
சென்னை-05. ☎ 97907 06549/97907 06548

நூல் கிடைக்குமிடம் :

கௌரா புத்தக மையம்

9, செயின்ட் ஜான் சர்ச்சு வணிக
வளாகம், ராக்கின்ஸ் சாலை,
திருச்சி - 620 001.
9952034876 / 9943428994
04312419584.

GOWRA PUTHAGA MAIYAM

9, SAINT JOHN CHURCH COMPLEX,
ROCKINS ROAD, TRICHY - 620 001
99520 34876 / 04312419584.
gowraputhagamaiyam@gmail.com

AVAILABLE @ :

கௌரா ஏஜென்ஸீஸ்

எண்.1 சாமி தெரு,
சாய் பாபா கோவில் பின்புறம்
திருவல்லிக்கேணி, சென்னை - 05.
9790706548 / 9790706549
044 28443791.

GOWRA AGENCIES

NO : 1 SAMY STREET,
SAI BABA TEMPLE BACK SIDE
TRIPLICANE, CHENNAI - 05.
9790706548 / 044 28443791.
gowra09@gmail.com

கலைஞரின் கடிதங்கள்

KALAIGNARIN KADITHANGAL

விலை : ரூ.**300.00** CODE :**2300**

எழுதியவர் : **கலைஞர்**
தொகுப்பாசிரியர்கள் :
கோ.சண்முகநாதன் M.com BGL
முனைவர் கி. இராஜமாணிக்கம் IAS ஒய்வு
கலைஞரின் செயலாளர்கள்
பொருள் : கடிதம்
© உரிமை :
பதிப்பாசிரியர் :
எஸ். கௌமாரீஸ்வரி M.A., M.L.I.S.,
பதிப்பு :
முதற் பதிப்பு – 2022
வெளியீடு :
சீதை பதிப்பகம்
6ஏ/4, பார்த்தசாரதி சாமி தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை – 600 005
பக்கம் : 400
ஒளி அச்சு : ஜெய் ஜீனா
அச்சிட்டோர் :
கிளாசிக் பிரிண்டர்ஸ், சென்னை–2.
ISBN :

AUTHOR : KALAIGNAR
EDITORS:
K. SHANMUGANATHAN M.COM BGL
DR K. RAJAMANIKAM IAS
SUBJECT : EPISTLE
© RIGHTS :
PUBLISHER :
S.GOWMAREESWARI M.A., M.L.I.S.,
EDITION :
1ST EDITION - 2022
PUBLISHED @ :
SEETHAI PATHIPPAGAM
6A/4, PARTHASARATHI SAMY STREET,
TRIPLICANE,
CHENNAI-600 005.
PAGES : 400
TYPESET BY : JAIJEENA
PRINTED @ :
CLASSIC PRINTERS, CHENNAI - 2.
ISBN :

A2242
894.8116
கதை 35

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர்
ஆய்வக நூல்
நிலையம்
சென்னை-18
ஆவணக அறிவாலயம்



அம்மாவுக்கு....

கௌரா பதிப்பகக் குழுமம்

மு.க. ஸ்டாலின்
தமிழக முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

அணிந்துரை அல்ல இது; மிகவும் பணிந்துரை!

"கலைஞரின் கடிதங்கள்" அனைத்தையும் அச்சியற்றி, வெளியிடுவதென முடிவெடுத்து, அந்த முடிவு கனிந்து, இப்போது கடிதங்கள் அனைத்தும் 54 தொகுதிகளாக வெளிவருகின்றன.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மீது கொண்டிருக்கும் மாறாத பற்றாலும், மதிப்பாலும், மரியாதையினாலும், கழக வரலாற்றில் சிறப்பு வாய்ந்த இந்த அரிய – பெரிய பணிமுழுவதையும் ஆற்றிட முன்வந்திருக்கும் சென்னை – சீதை பதிப்பகத்தார்க்கும், அதன் உரிமையாளர் அருமை நண்பர் திரு. இராஜசேகரன் அவர்களுக்கும், நெஞ்சார்ந்த நன்றியையும், மகிழ்ச்சியையும், பாராட்டுதல்களையும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், இங்கே பதிவு செய்வது என்னுடைய முதல் கடமை ஆகும்.

இந்தத் தொகுதிகள் வெளிவருவதற்குப் பின்னணியில் இருந்து, பல்லாற்றானும் உதவிய, தலைவர் கலைஞர் அவர்களின் செயலாளர்கள் - பாசம் மிகுந்த எனது அண்ணன்மார், திரு. கோ.சண்முகநாதன், முனைவர் கி.இராஜமாணிக்கம் ஆகிய இருவர்க்கும் என்னுடைய நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. இராஜசேகரன் அவர்கள் என்னிடம், "கலைஞரின் கடிதங்கள்" தொகுதிகளுக்கு, அணிந்துரை வழங்கிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். தந்தைக்குத் தனயன் "அணி"யாகத் திகழ்ந்திட முடியுமே அன்றி; அணிந்துரை அளித்திடத் துணிவது, அதிகப்படியான செயலாக ஆகிவிடும்.

தலைவர் கலைஞர் அவர்களின் எழுத்துக்கு அணிந்துரை வழங்கிடும் உயரம் எனக்கு நிச்சயமாக இல்லை என்பதை நானறிவேன். அதனாலே அணிந்துரைக்குப் பதிலாக "பணிந்துரை" தருகிறேன் என்று சொன்னேன். அதன்படி, இது அணிந்துரை அல்ல; மிகவும் பணிந்துரை!

எழுதுவதை உயிர்மூச்சாகக் கொண்டு இயங்கிய தலைவர் கலைஞர் அவர்கள், வாழ்ந்த காலம் முழுவதும் எழுதி எழுதி இமயம்போல் குவித்தவர். அவர் எழுத்து வேந்தர்; சொல்லேருழவர்; கருத்துக் கருவூலம்; வண்ணமயமான எண்ணங்களின் வற்றாத ஊற்று!

தலைவர் கலைஞர், கழக உடன் பிறப்புகளுக்குக் கடிதம் எழுதத் தொடங்கி, மொத்தம் 4051 கடிதங்கள் எழுதியிருக்கிறார்.

ஏ அப்பா, கேட்கவே மலைப்பாக இருக்கிறது அல்லவா!

ஒரு நாளைக்கு ஒரு கடிதம் என்று வைத்துக் கொண்டாலும், தொடர்ந்து 11 ஆண்டுகள், 36 நாட்கள் கடிதம் எழுதியிருக்கிறார். இப்படி எழுதுவது தனியொரு மனிதருக்குச் சாத்தியப்படுமா என்றால்; சாத்தியப்படாத எதையும், எந்தத் துறையாக இருந்தாலும், அதை எடுத்துச் சாத்தியப்படுத்திச் சாதனை செய்து சரித்திரம் படைத்தவர் கலைஞர்!

முடியுமா, நேரம் கிடைக்குமா, உடல் நலனுக்கு ஒத்துவருமா - என்ற கேள்விகளின் முனைமுறித்துப் போட்டவர் கலைஞர். பெரும்பாலும், காலை எழுந்ததும் கடிதம் எழுதுவது, கலைஞர் தவறாது தொடர்ந்து இறுதிவரை ஆற்றிய கடமையாகவே இருந்தது. இந்த அளவுக்கு, நான்கு ஆயிரத்திற்கும் மேற்பட்ட கடிதங்கள் எழுதி வெளியிட்டிருக்கும், ஒரே அரசியல் தலைவர் அகில உலகத்திலும் அவர் ஒருவரேதான்!

கடிதம் எழுதுவது என்பது, கிரேக்கத்திலிருந்து தொடங்குகிறது. டையோஜெனீஸ் (கி.மு.412 - 323) என்ற கிரேக்க ஞானி, தன்னைக் காண அலெக்சாந்தர் விரும்பியதாக அவருடைய நண்பர் அரிஸ்ட்டிப்பஸ் எழுதிய கடிதத்திற்கு, அனுப்பிய பதில் கடிதம் பிரபலமானது.

கிரேக்க தத்துவ ஞானி சாக்ரட்டீஸின் 9 கடிதங்கள் வரலாற்றில் இடம்பெற்றிருப்பவை. இயேசுநாதரின் சீடர்கள்

எழுதிய கடிதங்கள், விவிலியத்தின் புதிய ஏற்பாட்டில் பொறிக்கப்பட்டுள்ளன. சிசரோ, ரோமாபுரியின் வரலாற்றை 835 கடிதங்களாக எழுதி வைத்திருக்கிறார்.

லியோ டால்ஸ்டாய், ஹோரஸ் வால்போல், மெக்காலே, கோல்ட் ஸ்மித், பைரன், கீட்ஸ், பெர்னாட்ஷா போன்ற அறிஞர்கள் பலரும் எழுதிய கடிதங்கள் கடித இலக்கியத்தில் முக்கியமான பங்கு வகிக்கின்றன.

கலையரசி மாதவி, கோவலனுக்கு இரண்டு கடிதங்கள் அனுப்பியதாகச் சொல்கிறது சிலப்பதிகாரம். விவேகானந்தர், அமெரிக்கா சென்றிருந்தபோது அவருடைய நண்பர்களுக்கு எழுதிய கடிதங்கள், அண்ணல் காந்தி அடிகள் பல்வேறு சூழ்நிலைகளில் எழுதிய எண்ணற்ற கடிதங்கள், பண்டித நேரு அவர்கள் சிறையில் இருந்தவாறே அவருடைய மகள் இந்திரா காந்தி அம்மையாருக்கு எழுதிய கடிதங்கள் (உலக வரலாறு) ஆகியவை கடித இலக்கியமாகப் பார்க்கப்படுகின்றன.

மறைமலை அடிகளாரின் நாவல் "கோகிலாம்பாள் கடிதங்கள்", இலக்கியச் சுவையும் தரமும் உடையது. கடிதக் இலக்கியத்தை கருத்துச்செறிவுடன் கையாண்டவர் டாக்டர் மு.வரதராசனார் அவர்கள் ஆவார்கள். அவருடைய "அன்னைக்கு', "தம்பிக்கு", "நண்பர்க்கு', "தங்கைக்கு" ஆகியவை

ஒருகட்டத்தில் மொத்தத் தமிழ் மக்களின் கவனத்தையும் கவர்ந்தவை.

அந்த வரிசையில் வைத்துப் போற்றிப் புகழத் தக்கவை, புகழ்ந்து நினைவிலே வைத்து எப்போதும் பாதுகாத்திடத் தக்கவை, பாதுகாத்துப் பாரம்பரியமாகப் படித்துப் பயன்பெறத் தக்கவை, பேரறிஞர் அண்ணா அவர்களின் "தம்பிக்கு" கடிதங்களும்; அண்ணா அவர்களைப் பின்பற்றி, தலைவர் கலைஞர் எழுதிய "உடன்பிறப்புக்கு" கடிதங்களும் ஆகும்.

தந்தை பெரியார் அவர்கள் எதிலும், எப்போதும் அறிவியல்பூர்வமான அணுகுமுறையைப் பின்பற்றியவர் என்றால்; பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அடிப்படையில் கலை உணர்வு மிக்கவர்கள் என்பதால், அறிவியல் உண்மைகளையே, கவித்துவ நடையில் எடுத்து இயம்பியவர்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அன்றாட அரசியல் பிரச்சினைகளையும், உலக நிகழ்வுகளையும், கட்சித் தோழர்களுக்கு எடுத்துச் செல்லவும், ஏற்றபடி தொகுத்துச் சொல்லவும், கடித வடிவத்தைக் கைக்கொண்டார்கள்; அந்தக் கடிதங்களை இலக்கியத் தேனில் தோய்த்து, திகட்டாத தெள்ளுதமிழில் வாரி வழங்கினார்கள். அவற்றைப் படித்துப் படித்து, தம்பிமார்களும், உடன்பிறப்புகளும், விவரங்களை அறிந்து, விழிப்புணர்ச்சி வளர்ந்திடப் பெற்றார்கள்.

அண்ணா - கலைஞர் கடிதங்கள், "வீழ்ச்சியுற்ற தமிழினத்தில் எழுச்சி வேண்டும்; விசை ஒடிந்த தேகத்தில் வன்மை வேண்டும்; சூழ்ச்சிதனை வஞ்சகத்தைப் பொறாமைதன்னைத் தொகையாக எதிர் நிறுத்தித் தூள்தூளாக்கும் காழ்ச்சிந்தை மறச்செயல்கள் மிகவும் வேண்டும்; கடல்போலச் செந்தமிழைப் பெருக்க வேண்டும்;" என்ற உயரிய, உன்னத நோக்கில் எழுதப் பட்டவை.

பேரறிஞர் அண்ணா அவர்களின் கடித இலக்கியத்தில், இல்லாததே இல்லை என உறுதியாகச் சொல்லலாம். உலக நாடுகளின் வரலாறு, இந்திய வரலாறு, சங்கத் தமிழ், இலக்கியங்கள், அரசியல் நிகழ்வுகள் என எல்லாவற்றையும்;

தமது தம்பிமார்கள் அறிந்திருக்க வேண்டும்; அறிந்திருப்பவற்றை அய்யம் திரிபறத் தெரிந்திருக்க வேண்டும்; தெரிந்து கொண்டவற்றைத் தெருக்கள்தோறும், திண்ணைகள்தோறும் கொண்டுசென்று விளக்கி உரைத்து, இன - மொழிப் பெருமையை மீட்டெடுக்க வேண்டும்; தமிழர்கள் மானமும் அறிவும் வளர்த்து மாமனிதர்களாக உயர்ந்திட வேண்டும்; என்ற பேரவாவுடன் எழுதப்பட்டவை அந்தக் கடிதங்கள்!

பேரறிஞர் அண்ணா அவர்களைப் போலவே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், உடன்பிறப்புகளுக்குக் கடிதம் எழுதும் முன்; அன்று தலையாயதான எந்தப் பிரச்சினையைப் பற்றி எழுத வேண்டும் என்பதைத் தீர்மானித்து, அந்தப் பிரச்சினையின் முழுப் பரிமாணங்களையும் அறிந்து, சிந்தித்து, சொல்ல வேண்டியவற்றை மன ஏட்டில் வரிசைப்படுத்தி; படிப்போர் வியக்கும்படி எழுதி முடிப்பதில், ஈடு இணை இல்லாதவர் என்பதை, ஒவ்வொரு கடிதத்திலும் நிரூபித்துக் காட்டி விடுவார்.

அதுமட்டுமல்ல; ஒரு கடிதத்தை எழுதியதற்குப் பிறகு, அவரே ஒரு முறை அதை நுட்பமாகப் படித்துப் பார்த்து விடுவார்; அத்துடன் விட்டு விடுவாரா? இல்லை; தமது செயலாளரைக் கூப்பிட்டுப் படிக்கச் சொல்வார்; ஏதாவது சந்தேகம் இருக்கிறதா என்று கேட்பார்; சந்தேகம் என்றால், அந்த இடத்தை எளிதில் புரிந்து கொள்ளும்படி மாற்றம் செய்வார்; அத்துடன் முடிந்ததா என்றால், இல்லை; கடிதம் அச்சியற்றப்பட்டு, "ப்ரூஃப்" வந்ததும், மீண்டும் ஒருமுறை அவரே படித்துப் பார்ப்பார் அல்லது தன்னுடைய செயலாளரை படிக்கச் சொல்லி ஊன்றிக் கேட்பார்; பின்னர் அன்றைய "முரசொலி" இதழ் முழுமையாகி வந்ததும், ஒரு முறை படிப்பார்; மாலையில் வெளியூர் - இதழ் கைக்குக் கிடைக்கும்போது, அண்ணன் ஆர்க்காட்டாரோ, அண்ணன் துரைமுருகனோ, முனைவர் பொன்முடியோ, அல்லது நானோ பக்கத்தில் இருந்தால், இதழைக் கொடுத்துப் படிக்கச் சொல்லிச் செவிமடுப்பார்.

மறுநாள், அறிவாலயத்திலோ, அல்லது இல்லத்திலோ, கழகத் தோழர்கள் யாரும் எதிர்ப்பட்டால், "கடிதம் படித்தாயா?" என்றுதான் முதலில் கேட்பார்.

இவை அனைத்தையும் அருகிருந்து நான் பார்த்திருக்கிறேன். ஒவ்வொரு முறையும் அவருடைய முகத்தில் அலுப்போ, சலிப்போ தோன்றாது. படிக்கப் படிக்க உற்சாகம் கொள்வார். கடிதத்தில் எழுதி இருப்பதை அப்படியே நினைவில் செதுக்கி வைத்திருப்பார்; எத்தனை மாதங்கள் ஆனாலும் கடிதத்தில் எழுதிய கருத்தை அப்படியே திருப்பிச் சொல்வார்; நாங்கள் அவருடைய கருத்தை, நினைவாற்றல் பிசகு காரணமாக, மாற்றிச் சொல்ல நேரிடும்போது, திருத்துவார்.

அப்பப்பா; அப்படி ஒரு தலைவரை, இன்னொரு முறை வாழ்நாளில் காண முடியுமோ? "இங்கிவரை யாம் பெறவே என்ன தவம் செய்து விட்டோம்!".

கலைஞர் ஒரு பன்முகங்கொண்ட பேராளுமை. கடித இலக்கியம், அவரது ஒரு முகம், ஒப்பிலாத் திருமுகம்!

1968-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 22-ஆம் நாள் முதல், 1977-ஆம் ஆண்டு பிப்ரவரி 13-ஆம் நாள் வரையில்

கலைஞரின் கடிதங்கள், பத்துத் தொகுதிகளாக 1986-ஆம் ஆண்டில் வெளிவந்தன; அதைத் தொடர்ந்து, 11 மற்றும் 12-ஆவது தொகுதிகள், 1993-ஆம் ஆண்டில் வெளிவந்தன.

22.10.1968-இல் தலைவர் கலைஞர் எழுதிய முதல் கடிதத்திலிருந்து, 15.11.2016 அன்று எழுதிய கடைசிக் கடிதம்வரை அனைத்துக் கடிதங்களையும் வெளியிட முடிவுசெய்து; இப்போது, சீதை பதிப்பகத்தார் வெளியிடுகிறார்கள்.

கலைஞர் கடிதங்கள் ஏற்கனவே 12 தொகுதிகளாக வெளியிடப்பட்டபோது, "என்னுரை" என்ற பகுதியில், தலைவர் கலைஞர் அவர்கள் எழுதி அளித்த முன்னுரை, அப்போதும் இப்போதும் முக்கியத்துவம் வாய்ந்தது மட்டுமல்லாமல்; வெளிவரவுள்ள "கலைஞரின் கடிதங்கள்" ... தொகுதிகள் அனைத்திற்கும் முன்னுரை - அறிமுக உரையாகக் கொள்ள வேண்டும்.

தலைவர் கலைஞரின் அந்த "என்னுரை"யில், "நண்பா" என விளித்துத் தொடங்கியும், "உடன்பிறப்பே" என விளித்துத் தொடங்கியும், இங்ஙனம் "மறவன்" என முடித்தும் "அன்புள்ள மு.க." என முடித்தும், "மறவன் மடல்" வார இதழிலும், "நம் நாடு" வார இதழிலும் மற்றும் பெரும்பாலும், நாள்தோறும் அல்லது வாரத்தில் நாலைந்து முறை "முரசொலி' நாளிதழிலும் நான் எழுதிய கட்டுரைகளின் வடிவமே "கலைஞர் கடிதம்" என்று தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டது, இப்போது வெளிவரும் "கலைஞரின் கடிதங்கள்" தொகுதிகளுக்கும் மெத்தப் பொருந்தும்.

மேலும் அந்த "என்னுரை"யில்: "என் கடிதங்கள் காலை ஏழு மணிக்குப் பிறப்பெடுக்கும்; ஒவ்வொரு நாளும்! பொதுவாழ்வில் இதுவரை; பாசறை - போர்க்களம் - பதவிப் பொறுப்பு - பணியாற்றும் வாய்ப்பு - இப்படி மாறி மாறி வரினும் சந்தித்த; இன்னமும் சந்தித்துக் கொண்டிருக்கிற சோதனைகள் எண்ணிலடங்கா!"

"குமுறல் - கொந்தளிப்பு - கவலை - கலக்கம் - ஏமாற்றம் - துரோகம் - இப்படி எத்தனையோ ஈட்டிகள் என் இதயத்தில் பாய்ந்து ரணமாக்கியுள்ளன". அந்த ரணம் ஆற்றிடும் மருந்தாகத்தான் எனது எழுத்துகள் எனக்குப் பயன்பட்டிருக்கின்றன!"

“எனது கடிதத் தொகுப்புகளில் பல செய்திகள், நிகழ்ச்சிகள், மதிப்புமிக்க தலைவர்கள், அன்புக்குரிய நண்பர்கள் விமர்சிக்கப்பட்டிருக்கலாம். அது; அந்தக் காலகட்டத்து அரசியல் தட்பவெப்பத்தைக் காட்டுவதாகவே எடுத்துக்கொள்ள வேண்டுமெனப் பணிவன்புடன் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்” என்று தலைவர் கலைஞர் அவர்கள் விளக்கிச் சொன்னதை, இந்தத் தொகுதிகளைப் படிக்கும்போது, கவனமாகக் கருத்தில் இருத்திக் கொள்ள வேண்டுமென்று விரும்பி வேண்டுகிறேன்.

தலைவர் கலைஞர், 22.10.1968 - அன்று, “அன்பு நண்பா !” என விளித்து, “ஜாக்குலின்கள்” என்று தலைப்பிட்டு எழுதிய முதல் கடிதம், அவர் எவ்வளவு

அதிசயிக்கத்தக்க நுட்பமான ஆற்றலாளர் என்பதை எடுத்துக் காட்டும்.

அமெரிக்க ஜனாதிபதி கென்னடியின் மனைவி ஜாக்குலின், தனது கணவர் கல் நெஞ்சன் ஒருவனின் துப்பாக்கிக்கு இரையானதற்குப் பின்னர், அய்ந்தாண்டுகள் பொறுத்திருந்து, தனது 39 வயதில், ஒனாசிஸ் என்ற 68 வயது கோடீஸ்வரனை, மறுமணம் செய்துகொண்டார்; இந்தத் திருமணத்தை அமெரிக்க நாட்டிலேயே பெரும்பாலானோர் விரும்பவில்லை; என்பது செய்தி.

இந்தச் செய்தியை கழகத் தோழர்கள் அறிந்துகொள்ள வேண்டும் என எண்ணிய தலைவர் கலைஞர், அந்தச் செய்தியை; கழகத்திலே இருந்த சிலர் - பாசத்தோடு பழகிய நண்பர்கள், சென்னை மாநகராட்சித் தேர்தலில் சுயேட்சை வேட்பாளர்களாக மாறிய நிகழ்வோடு ஒப்பிட்டு எழுதியிருக்கிறார்.

அங்கே, சொந்த நாட்டிலே பாராட்டப்படாத மறுமணம்; இங்கே பதவி வெறியைத் தணித்துக் கொள்ள, கழகத்தையே எதிர்த்து சுயேட்சைகளாகப் போட்டியிட்ட கழகத் தோழர்கள்.

எந்தச் செய்தியையும் மேலோட்டமாகப் பார்த்து, கடந்து செல்பவரல்ல கலைஞர். அந்தச் செய்தியை, கழகத்தை நிலைநிறுத்தவும், கழகத் தோழர்களுக்கு உணர்ச்சி ஊட்டவும், எப்படிப் பயன்படுத்தலாம் என்று நினைத்துக் காத்திருந்தவர் கலைஞர்.

15.11.2016 - அன்று தலைவர் கலைஞர், “மத்திய அரசின் அறிவிப்பும், சாதாரண மக்களின் அவதியும்” என்ற தலைப்பில் “முரசொலி”க்கு எழுதிய கடைசிக் கடிதம்; பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் பண மதிப்பிழப்பு அறிவிப்பைப் பற்றியது. ‘

அந்தக் கடிதத்தில், ஏடுகளில் வெளியான செய்திகளை எடுத்துக்காட்டி, பணமதிப்பிழப்பு நடவடிக்கையினால் நாட்டிலே ஏற்பட்ட விளைவுகளை விளக்கியிருக்கிறார்.

குபேரர்களைப் பற்றியோ, கோடி கோடியாய்ப் பணம் குவித்திருக்கும் செல்வந்தர்களைப் பற்றியோ, மேட்டுக்குடிகளைப் பற்றியோ எப்போதும் கவலைப்படாதவர் கலைஞர்.

நடுத்தர மக்கள், அடித்தள மக்கள், உழைத்து வாழும் பிரிவினர், அன்றாடங்காய்ச்சிகள் - ஆகியோரைப் பற்றியே சதாசர்வ நேரமும் நினைந்து நினைந்து கசிபவர் கலைஞர் என்பதை; பண மதிப்பிழப்பு நடவடிக்கையினால் அவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளை, அந்தக் கடைசிக் கடிதத்தில் பட்டியல் இட்டிருக்கிறார்.

அந்தப் பிரிவினர்தானே கழகத்தின் வேர்கள்! மண்ணுக்குள் மறைந்திருந்து மரத்தைத் தாங்கும் வேர்களைப் போல, கண்ணுக்கெட்டிய தூரம்வரை கழகத்தைக் காத்து நிற்பவர்கள் அவர்கள் அல்லவோ! அதனால்தான் தலைவர் கலைஞர் அவர்களுக்கு, கடைசிவரை, அவர்கள் மீது அவ்வளவு அக்கறை, ஆழ்ந்த பிடிப்பு!

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும் கடிதத்திற்குத் தலைப்பு சூட்டும்போது; சிற்பி செதுக்கியானதும் சிற்பத்திற்குக் கண் திறப்பு செய்வதைப் போல, ஒளி பொருந்திய - கருத்தாழம் மிகுந்த - நினைவில் நீடித்து நிற்கக்கூடிய, தலைப்புகளைத் தேர்ந்தெடுத்து அலங்கரிப்பார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள்:

“காகிதக் கப்பலில் கவனம் செலுத்தாதே தம்பி”
“மகுடி ஊதும் மகானுபாவர்கள்’’
“கிளிக்குப் பச்சை பூசுவதா?”
“கண்ணீரும் பன்னீரும்”

“படமும் பாடமும்”
“மூலவர் மூவர் முரசொலி”

போன்ற எண்ணற்ற தலைப்புகளை கடிதங்களுக்குச் சூட்டியிருக்கிறார். –

ஒவ்வொரு அங்குலமும் அண்ணாவின் அடியொற்றி வளர்ந்த கலைஞர்

அவர்கள்:

“நேர்மையும் பொறுப்பும், நீர்மேல் எழுத்தல்ல!”
“எருக்கம் பூவில், இனிய மணம் தேடுவதோ?”
“கண்ணுக்கு விருந்தானாய் – மனப் புண்ணுக்கு மருந்தானாய்!”
“அன்று எத்தனை பிரிவு? இன்று எத்துணைப் பரிவு?”
“இடர் எது வரினும், ஏற்பேன்“
“பறித்து வராத பாரிஜாதம்“

போன்ற நினைவில் நங்கூரம் போட்டு நிற்கும் தலைப்புகளையே சூட்டியிருக்கிறார்.

கலைஞரின் கடிதங்கள், காலத்தின் கண்ணாடி! கலைஞரின் கடிதங்கள், கற்கண்டுச் சொற்கோவை! கலைஞரின் கடிதங்கள், கருத்துச் சுரங்கம்! கலைஞரின் கடிதங்கள், வானவில்லைப் போல, வண்ணங்கள் நிறைந்த எண்ணங்களின் பசுஞ்சோலை! கலைஞரின் கடிதங்கள், கடலின் ஆழத்தைக் காட்டும், மலையின் உயரத்தை உரசும்! கலைஞரின் கடிதங்கள், நினைத்தாலே இனிக்கும், நெஞ்சமெல்லாம் மணக்கும்!

கலைஞரின் ஒவ்வொரு கடிதத்தையும் ஊன்றிப் படித்து, ஒப்பிலாப் பயன் பெறுக! “யாம் பெற்ற இன்பம், பெறுக தமிழ் வையகம்!”

அன்புடன்,

(மு.க. ஸ்டாலின்)
14.09.2021

பதிப்புரை

அரசியல் இலக்கியமான கலைஞரின் கடிதங்கள்

திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆறாவது முறையாக ஆட்சிக் கட்டிலில் அமர்த்தி, அதனை உங்களுக்குக் காணிக்கையாக்குவேன் என வங்கக் கடலோரம் பேரறிஞர் அண்ணா துயிலுமிடத்தை ஒட்டி, ஓய்வெடுக்கும் முத்தமிழறிஞர் கலைஞரின் நினைவிடத்தில் சூளுரைத்தவர் கழகத் தலைவர் தளபதி அவர்கள். தேர்தல் களத்தில் மகத்தான வெற்றி பெற்று, அந்த வெற்றியைக் கலைஞரின் ஓய்விடத்தில் காணிக்கையாக்கி, தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவர் மாண்புமிகு **முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்** அவர்கள்.

சொன்னதைச் செய்வோம் என்று சூளுரைத்து நிறைவேற்றியவர் முத்தமிழறிஞர் கலைஞர். சொல்லாமலே செய்து முடிப்பவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள். தலைவர் கலைஞரின் விருப்பப்படி, கடற்கரையில் இடம் ஒதுக்கப்படுமா என அவர் மறைந்தபோது தமிழ்நாட்டில் மட்டுமின்றி, உலகெங்கும் வாழும் தமிழர்களிடம் பதற்றம் கலந்த எதிர்பார்ப்பு மிகுந்திருந்தது. அப்போதைய ஆட்சியாளர்கள் காழ்ப்புணர்வுடன் மறுத்த நிலையில், நீதிமன்றத்தை நாடி, விடிய விடிய சட்டப் போராட்டம் நடத்தி, கடற்கரையில் தலைவர் கலைஞருக்கான இடத்தை உறுதி செய்து, உலகத் தமிழர்களின் நெஞ்சில் உயர்ந்து நின்றவர் நம் முதல்வர்.

தந்தைக்குத் தனயனாக, தலைவருக்குத் தொண்டனாக, இயக்கத்தின் தலைமையாக எல்லா நிலையிலும் தலைவர் கலைஞரின் பேராற்றலை மக்கள் நெஞ்சங்களில் நிலைத்திருக்கச் செய்யும் பெரும்பணியை முதல்வர் அவர்கள் மேற்கொண்டு வருகிறார். அத்தகைய பெரும்பணிகளில் ஒன்றைச் சீதை பதிப்பகத்திடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்தார். அதுதான், கலைஞர் கடிதங்கள் எனும் இந்த மாபெரும் தொகுப்பு. 4051 **கடிதங்களைக் கொண்ட54 பாகங்களாக** வெளியாகியுள்ள இந்தத் தொகுப்பிற்கு அணிந்துரையை மாண்புமிகு முதல்வர் அவர்களே வழங்கியிருப்பது, சீதை பதிப்பகத்தின் மீது அவர் வைத்திருக்கும் நம்பிக்கையின்

வெளிப்பாடு. அணிந்துரை என்ற சொல்லுக்குப் பதில் பணிந்துரை என அவர் பயன்படுத்தியிருப்பது தனது தந்தையும் தலைவருமான முத்தமிழறிஞர் கலைஞர் மீது எப்போதும் அவர் வைத்திருக்கும் பெருமதிப்பின் அடையாளம். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

'கலைஞரின் கவிதை மழை'யை வெளியிடும் முதல் வாய்ப்பைப் பெற்றுத் தந்த எங்கள் வழிகாட்டியான மூத்த பத்திரிகையாளர் **அய்யா சின்னகுத்தூசி**யை நினைவில் கொள்கிறோம். தலைவர் கலைஞர் அவர்களே அப்போது அதனை மெய்ப்புப் பார்த்து, முழு வடிவம் பெறச் செய்தார். ஒன்றிய அமைச்சர்கள், தோழமைக் கட்சித் தலைவர்கள், தமிழின் மிகப் பெரும் கவிஞர்கள், கழக நிர்வாகிகள் முன்னிலையில் அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் கவிதை மழை வெளியீட்டு விழா சிறப்பாக நடைபெற்றது.

அதுபோலவே, முத்தமிழறிஞர் கலைஞரின் சிறுகதை இலக்கியத்தை சிறுகதைப் பூங்கா எனும் தலைப்பில் சீதை பதிப்பகம் வெளியிட்ட போதும், மிகச் சிறப்பான விழா நடத்தப்பட்டு, அருமையான உரையை வழங்கினார் தலைவர் கலைஞர் அவர்கள். கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் அவர் ஆற்றிய உரைகளை 'கல்வி நிலையங்களில் கலைஞர்' எனக் கடலூர் இள. புகழேந்தி அவர்கள் தொகுத்திட, அதனைச் சிறப்பான முறையில் வெளியிட்டது சீதை பதிப்பகம்.

இன்றைய தகவல்-தொழில்நுட்பமும் சமூக வலைத்தளங்களும் இல்லாத காலத்தில், ஒவ்வொரு நாளும் தனது இயக்கத் தொண்டர்களுடன் உரையாடுவதற்கான ஊடகமாக உடன்பிறப்புக் கடிதங்களைத் தலைவர் கலைஞர் மிகச் சிறப்பாகக் கையாண்டார். அந்தக் கடிதங்களை முழுமையான தொகுப்பாகக் கொண்டு வரவேண்டும் என்ற எண்ணம் அவரிடம் இருந்தது. அந்த எண்ணத்தை முதல்வர் அவர்கள் நிறைவேற்றியுள்ளார்.

கடிதங்களின் முழுத் தொகுப்பு உருவாக்கப் பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர் தலைவர் கலைஞரின் நிழலாக, அவரது மனதின் குரலை அறிந்தவராக விளங்கிய உதவியாளர் **அய்யா கோ.சண்முகநாதன்** M.com BGL அவர்கள். கலைஞர் அந்தக் கடிதங்கள் பலவற்றையும் எழுதியபோதே

அருகிலிருந்து கவனித்தவர் என்பதாலும், அப்போதே மெய்ப்புப் பார்த்து அச்சுக்கு அனுப்பியவர் என்பதாலும், ஒவ்வொரு கடிதத்தின் காலகட்டத்தையும் அறிந்து முறையாகத் தொகுத்தளித்தார். தனது இறப்பிற்கு முன்பாக, கடிதத் தொகுப்புப் பணியை முழுமையாக நிறைவேற்றிவிட்டே நம்மிடமிருந்து பிரியாவிடை பெற்றிருக்கிறார் அய்யா சண்முகநாதன். எப்போதும் எங்கள் மீது அளப்பரிய அன்பைப் பொழிந்த அய்யாவை சீதை பதிப்பகம் எந்நாளும் நினைவில் கொண்டிருக்கும்.

மறவன் என்ற பெயரில் முதலில் கடிதங்களை எழுதிய தலைவர் அவர்கள் பின்னர் மு.கருணாநிதி, மு.க. என உடன்பிறப்புகளுக்குக் கடிதங்கள் எழுதியுள்ளார். பின்னர் மீண்டும் மு.கருணாநிதி என்ற பெயரிலேயே கடிதங்களைத் தொடர்ந்து எழுதியுள்ளார். தலைவர் கலைஞர் அவர்களின் கடிதங்களைக் காலவரிசைப்படுத்தி, தொகுப்பில் விடுபட்ட கடிதங்களையும் தேடி இணைப்பதில் முனைவர் **திரு கி. இராஜமாணிக்கம்** ஐ.ஏ.எஸ்.(ஓய்வு) அவர்களின் பணி அளப்பரியது. தலைவர் கலைஞரின் அருகிலிருந்து ஆட்சிப்பணியையும் இயக்கப் பணியையும் கவனித்த அவர், இந்தத் தொகுப்பு மிகச் சிறப்பான முறையில் வெளியாவதற்குத் துணை நின்றவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் படைப்புகளை வெளியிடும் ஒவ்வொரு வாய்ப்பும் சீதை பதிப்பகத்திற்குப் பெருமை தரக்கூடியதாகும்.

சீதை பதிப்பகத்தின் வெளியீடுகளைத் தலைவர் கலைஞர் அவர்களை நேரில் சந்தித்து வழங்கும் போது ஏற்பட்ட மகிழ்ச்சிக்கும் உணர்ச்சிக்கும் அளவில்லை. அதன் தொடர்ச்சியாக, கழகத் தொண்டர்களுக்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் அரசியல் இலக்கியமான முரசொலி உடன்பிறப்புக் கடிதங்கள் முழுத் தொகுப்பு எனும் இமாலயப் பணியை நிறைவேற்றியிருப்பதை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்குச் சீதை பதிப்பகத்தின் புகழ்வணக்கமாகக் கருதுகிறோம்.

இந்தப் பணியை எங்களிடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்குகிறோம்.

பதிப்பகத்தார்

உள்ளே...

தலைப்பு	ஆண்டு	பக்கம்
2853. அறிவுரைகள் அனுபவ உரையாகட்டும்!	10-12-2002	23
2854. ஏணி ஏற முடியாதவரைக் கேணியில் தள்ளுவதா?	11-12-2002	26
2855. மூன்று நாட்கள், முக்கிய நாட்கள், முத்தான நாட்கள்!	12-12-2002	30
2856. அவதூறுச் செய்திக்கு மறுப்பு!	12-12-2002	34
2857. நன்றிக்கும் நல்வாழ்த்துக்கும் உரியவராகிறார்!	13-12-2002	37
2858. கர்நாடகம் - தமிழகம்; கடிதப் போர் தேவையா ?	14-12-2002	40
2859. அபிராமி அந்தாதி - அம்மையாரை ஏமாற்றவா?	15-12-2002	44
2860. உறுதியானது மட்டுமல்ல ; உண்மை நிலையும் கூட !	18-12-2002	49
2861. தமிழர் அணி தயாராகட்டும்!	19-12-2002	55
2862. இது முறையல்ல; நீதியுமாகாது!	21-12-2002	58
2863. ஒற்றுமை ஓங்கட்டும் ; ஓநாய்கள் ஓடட்டும்!	23-12-2002	62
2864. தி.மு.க. பேரணி அமைதி போராட்டம் 2 பாளையங்கோட்டையிலிருந்து ஒரு பகுத்தறிவு முரசம் !	24-12-2002	66
2865. தி.மு.க. பேரணி அமைதி போராட்டம் 3 பாரதி பாடிய வெவ்வேறு நீதிகள்; ஏன் ? எதற்காக ?	25-12-2002	69

2866. தி.மு.க. பேரணி அமைதி போராட்டம் 4 கழித்தல் கணக்காளர்களைக் கழிப்பதே நமது கடமை !	26-12-2002	74
2867. தனியே அவர்க்கோர் குணம் என்பது இதுதானோ?	26-12-2002	78
2868. காளி சோதிடரும்; காழி சோதிடர்களும்!	27-12-2002	82
2869. இன்று காத்த உணர்வையும் ஒற்றுமையையும் என்றும் காப்போம் !	29-12-2002	87
2870. உள்ளம் பதறுகிறது!	29-12-2002	90
2871. வைகறைப் பொழுதாக விடியும் வருங்கால நம்பிக்கை!	30-12-2002	93
2872. தாசர் புத்தி தலைக்கேறலாகுமா?	30-12-2002	103
2873. “குற்றம் பார்க்கின் சுற்றமில்லை!”	31-12-2002	107
2874. தி.மு.க. கொள்கை, குறிக்கோள், கோட்பாடு!	4-1-2003	112
2875. இலக்கியச் சந்தைக்கு ஏகிடுவோம்; வாரீர்!	5-1-2003	116
2876. முதல் நாள் தொல்காப்பியம், மறுநாள் சிலப்பதிகாரம்!	6-1-2003	121
2877. நாடு வாழ, நலிவு தீர நாம் திறப்போம் ‘நெற்றிக்கண்ணை!’	9-1-2003	125
2878. நரிகள் ஊளையிடும், உன் நடையை நிறுத்தாதே!	17-1-2003	129
2879. திருவும் பொலிவும் திருவையாறுக்கு சரி! சீர்காழிக்கு மட்டும் சீர்குலைவு ஏன்?	18-1-2003	132
2880. என் மனோ நிலையில் மதுரை கழகத்தினர்க்கு இறுதி எச்சரிக்கை!	26-1-2003	137

2881. இந்த அவதூறுகள்; வெறும் பொய்க்கால் குதிரைகளே!	30-1-2003	141
2882. காப்பியக் களஞ்சியம்! உன் கரங்களை அலங்கரிக்கட்டும்!	01-02-2003	146
2883. முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு, ஒரு திறந்த மடல்!	4-2-2003	150
2884. மருத நாட்டு இளவரசி படமும், பழைய நினைவுகளும்!	6-2-2003	155
2885. பத்தாவது அவதாரத்தை பயமுறுத்திய மர்மம் என்ன?	7-2-2003	159
2886. முதலில் என் கேள்விக்கு, முதலமைச்சர் பதில் சொல்லட்டும்!	9-2-2003	164
2887. திராவிட இயக்க 90ஆம் ஆண்டு விழாவும்! இயக்கம் கண்ட ஏந்தலின் நினைவு நாளும்!	12-2-2003	165
2888. உண்மைக்கே இறுதி வெற்றி! உறுதியுடன் நில்லுங்கள்!	13-2-2003	171
2889. கார்க்கியின் தாய் காவியம்!	15-2-2003	175
2890. இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன் என்ன ஆவான்?	17-2-2003	177
2891. எழுச்சிப்பெருக்கு கண்டு என் இதயமெல்லாம் பூரித்தது !	27-02-2003	182
2892. கவலையும் - கண்டிப்பும்!	04-03-2003	187
2893. மார்ச் 29; மாபெரும் உண்ணா நோன்பு அறப்போர் !	26-03-2003	190
2894. பஞ்ச பாண்டவர்களும் பட்ஜெட்டும்!	29-03-2003	195
2895. கூர்மையாயிருப்பதெல்லாம் கொடிய முள்ளா ?	31-03-2003	206

2896. நடுநிலையாளர்கள் சீர்தூக்கிப் பார்த்திட!	2-4-2003	210
2897. போரிடும் உலகத்தை வேருடன் சாய்ப்போம்!	7-4-2003	213
2898. கண்ணை மூடிக்கொண்டு கழகத்தின்மீது கை வைத்தால்!	12-4-2003	217
2899. அறவழிப்போர் நமக்காக காத்திருக்கிறது!	13-4-2003	222
2900. இது இப்படியென்றால் அதுவும் அப்படித்தானோ?	14-4-2003	225
2901. மடலின் நோக்கமும், மார்க்சிஸ்ட் கட்சியும்!	16-4-2003	228
2902. வேலை நிறுத்தமும்! வேண்டுகோளும்!	17-04-2003	232
2903. அன்றாடம் பொய்! ஆளுக்கு ஆள் பொய்!	18-4-2003	235
2904. ஆட்சி மாறினும், கடத்தல் விவகாரக் காட்சி மாறவில்லை!	19-4-2003	239
2905. உள்ளத்தில் பதிய வைத்து ஊர் அறிய விளக்கிடுக!	20-4-2003	245
2906. விழிநீர் துடைத்திட விரைந்தெழுவீர்!	21-4-2003	249
2907. ஓரங்க நகைச்சுவை நாடகம்!	23-4-2003	251
2908. உணர்வு எது? வெறி எது? உணர்வீரே!	24-4-2003	254
2909. நாரதர் கலகம் நன்மையில் முடியும் (?)	26-4-2003	258
2910. தமிழ் நிலத்துக்கும் மொழிக்கும் உழைத்திட நீண்டகாலம் வாழவே விரும்புகிறேன்!	29-4-2003	261

2911. நாற்பது ஆண்டுகள் நான் கட்டிக்காத்த அண்ணா தந்த கருவூலம் எண்ணித்துணிக கருமம் (1)	01-05-2003	265
2912. நாற்பது ஆண்டுகள் நான் கட்டிக்காத்த அண்ணா தந்த கருவூலம் எண்ணித் துணிக கருமம் (2)	02-05-2003	269
2913. ஊரே மூக்கறையன்களாக மாற வேண்டாம் !	05-05-2003	272
2914. கெட்டிக்காரன் புளுகு எட்டே நாள் !	06-05-2003	277
2915. தமிழ் நெஞ்சமாவது தக்க பதில் கூறுமா?	08-05-2003	280
2916. மணி மண்டபமும் - " குர் - ஆன் " மணிமொழியும்!	09-05-2003	284
2917. நடக்கக் கூடாததும்; நடந்ததும்!	10-05-2003	288
2918. முதுகைக் காட்டியவனுக்கு "மூட்டைகனம்" இருந்தது!	11-05-2003	292
2919. இலைமறை காயாக ஓர் இடித்துரை!	12-05-2003	298
2920 .ஜூன் முதல் வாரம் - கழகப் பொதுக்குழு!	15-05-2003	303
2921. இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து.....!	16-05-2003	306
2922. பலர் மகிழ்வார்; சிலர்தான் மலைப்பார்!	17-05-2003	310
2923. திருநாடு; திரும்பக் காண இருக்கும் மாட்சி!	25-05-2003	314
2924. கழக அமைப்புகளில் கட்டாய இட ஒதுக்கீடு!	27-05-2003	320
2925. "இந்து" வுக்கு இது பொன்னான சந்தர்ப்பம்!	28-05-2003	324

2926. இந்தக் “ கடுகு” மனிதனின் கண்ணோட்டம் இது !	30-05-2003	329
2927. கோட்டை நாற்காலி இன்றுண்டு; நாளை கொண்டு போய்விடுவான் திராவிடக்காளை !	01-06-2003	335
2928. குதிரையா ? மாடா ? கோர்ட்டில் குழப்பம் வராதா ?	06-06-2003	339
2929. அண்ணா விரும்பிய உண்மையான அணி !	07-06-2003	344
2930. யார் தயவுக்கும் தவம் கிடக்க மாட்டோம்!	09-06-2003	349
2931. திரும்பவும் ஒரு முறை திறனை அறியும் வாய்ப்பு!	11-06-2003	354
2932. இதோ அந்தச் சர்க்கரைத் துகள்கள்!	13-06-2003	357
2933. இன்று போல் என்றும் பாதுகாப்பு அரணாக இருப்போம்!	25-06-2003	364
2934. நீதி நிமிர்ந்து கொள்ளும் - இறுதியில் நேர்மையே வெல்லும்!	26-06-2003	369
2935. அண்ணாவின் அரசாணையும் தமிழண்ணல் தடுமாற்றமும்!	27-06-2003	374
2936. தூங்குவது போலப் பாசாங்கு செய்தால்...	29-06-2003	379
2937. தமிழச்சி என்றால் இளக்காரமா?	30-06-2003	383
2938. தமிழன் நாட்டிய புகழ்க்கொடி!	02-07-2003	387
2939. இவரைத் திருத்த முடியுமா?	03-07-2003	391
2940. ஒப்பீட்டுக்கு உகந்தவரல்ல!	05-07-2003	396

2853. அறிவுரைகள் அனுபவ உரையாகட்டும்!

உடன்பிறப்பே,

அ.தி.மு.க. ஆட்சியில் கடந்த ஆகஸ்டு மாதம் ஒரு பட்ஜெட் படித்து சுமார் 700 கோடி ரூபாய் பற்றாக்குறை எனக் குறிப்பிட்டுவிட்டு, அதைச் சரி செய்திட நியாயமான முறையில் - சாதாரண, சாமான்ய, நடுத்தர மக்கள் தாங்குகிற அளவுக்கு வரி உயர்வோ, கட்டண உயர்வோ செய்யாமல் பற்றாக்குறை ஏற்பட்ட தொகையை விடப் பல மடங்கு அதிகமாக, சுமார் 5,000 கோடி ரூபாய்க்கு கட்டணங்களில், வரிகளில் மாறுதல் செய்துவிட்டு, எதிர்க்கட்சிகள் அமைதி வழியில் போராட்டம் அறிவித்தவுடன் கண்துடைப்பாக சுமார் 1,200 கோடி ரூபாய் மட்டுமே குறைத்திருப்பதாக அறிவித்துள்ளார்கள்.

உதாரணத்திற்கு ஒன்றே ஒன்றைக் குறிப்பிட வேண்டுமானால், 1997 ஆம் ஆண்டு செப்டம்பரில் தி.மு.க. ஆட்சியில், பஸ் கட்டணம் 20 பைசா என்று நிர்ணயிக்கப்பட்டு, பிறகு 1998 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18 பைசா என ஆக்கப்பட்டு, பின்னர் 1999 அக்டோபரில் 22 பைசா என உயர்த்தப்பட்டது. இப்பொழுது அ.தி.மு.க. ஆட்சியில், 8 பைசா உயர்த்தி 30 பைசா என அறிவித்து விட்டு பிறகு 28 பைசா என்று நிர்ணயித்துள்ளார்கள்.

இதனை மேலும் குறைக்க வேண்டுமென்பதுதான் பொதுமக்களின் கோரிக்கையாக இருந்து வருகிறது. பஸ் கட்டணத்தில் நியாயமான உயர்வு செய்யலாம் என்பதில் நமக்கு எந்தக் கருத்து மாறுபாடுமில்லை. இப்போது அறிவிக்கப்பட்டுள்ள பஸ் கட்டணம் 28 பைசா என்பதை இன்னமும் குறைக்கலாம்.

1999 ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியில் 4 பைசா உயர்த்தி, அதாவது 18 என்பதை 22 பைசா என அறிவித்தபோது,

செல்வி ஜெயலலிதா அவர்கள் விடுத்த அறிக்கையை ஒருமுறை நினைவுபடுத்திக் கொள்வது நல்லது!

"இப்போது பொதுமக்களைப் பெரிதும் பாதிக்கிற வகையில் கருணாநிதி பஸ் கட்டணத்தை உயர்த்தியுள்ளார். வெளியூர் செல்லும் சாதாரண பஸ்களுக்கு கிலோ மீட்டருக்கு 4 காசு உயர்த்தியிருப்பது அநியாயமாகும்.

இது ஜெயலலிதா அவர்களின் அன்றைய கண்டன அறிக்கையின் ஒரு பகுதி - 4 காசு உயர்த்தியதற்கே அம்மையார் அவ்வளவு கோபித்துக் கொண்டார். இன்றைக்கு அவரது யோசனைப்படி, அ.தி.மு.க. அரசு உயர்த்தியிருக்கிற பஸ் கட்டணம் கிலோ மீட்டருக்கு 6 பைசா அதிகமாகும்.

இதே செல்வி ஜெயலலிதா அவர்கள்தான் பஸ் கட்டண உயர்வு பற்றி தி.மு.க. ஆட்சியைக் கண்டித்து 1997ஆம் ஆண்டு செப்டம்பரில் விடுத்த அறிக்கையில்,

> "பல்வேறு நிர்வாகச் சீர்திருத்தங்கள் மூலம் போக்குவரத்துத் துறை நஷ்டத்தைக் குறைக்க வழியிருக்கும் போது, பெட்ரோலியப் பொருட்களின் விலை உயர்வையும், போக்குவரத்துக் கழகங்களில் ஏற்படும் நஷ்டத்தையும் சொல்லி பஸ் கட்டண உயர்வை ஏழையெளிய மக்கள் மீது சுமத்துவது எந்த வகையில் நியாயம்? மிகக் குறைந்த ஊதியத்தைப் பெற்றுக் கொண்டு அன்றாட வாழ்க்கைக்குப் போராடும் சாதாரண மக்கள் இந்தப் பஸ் கட்டண உயர்வை எப்படிச் சமாளிப்பார்கள்? பஸ் பயணிகள் பெரும்பாலும் சாதாரண மக்கள்தான் என்பதை அரசு கவனத்தில் எடுத்துக் கொள்ளவில்லை என்பதை இந்தக் கட்டண உயர்வு எடுத்துக் காட்டுகிறது. எதிர்ப்பு வந்த பின்னர் கட்டணக் குறைப்பு என்று கண் துடைப்பு நாடகம் நடத்தாமல், பஸ் கட்டண உயர்வை முழுமையாக ரத்து செய்ய வேண்டும்.

என்று கனல் தெறிக்கக் கூறியுள்ளார்.

அந்தக் கனலும், அனலும் கழக ஆட்சிக்கு எதிராகத்தான் கனன்று எழுமா?

அன்று கழக ஆட்சியில் நியாயமான அளவு கட்டண உயர்வுக்கே இப்படியொரு ஆவேசமான எதிர்ப்பு!

அதிலும் இப்போது பேருந்துக் கட்டண உயர்வை அறவே கைவிடுங்கள் என்று தி.மு.க. கூறவில்லை. நியாயமான அளவுக்கு

உயர்த்துங்கள். தேவையானால் உங்கள் பழைய அறிக்கையை நீங்களே ஒருமுறை படித்துப் பாருங்கள் என்றுதான் கூறுகிறோம்.

ஒரு காசு பஸ் கட்டண உயர்வு என்றாலே எத்தனை கோடி வருமானம் வரும் என்ற கணக்கைப் பாருங்கள்!

எதிர்க்கட்சியாக இருந்து சொன்ன அறிவுரைகளை, ஆளுங்கட்சியாக இருக்கும்போது அனுபவ உரைகளாக எண்ணிப் பார்த்தால்தான் ஆரோக்யமான ஜனநாயகம் மலரும் என்பதை மறந்து விடக் கூடாது.

இது, பஸ் கட்டண உயர்வுக்காக மட்டுமல்ல - பற்றாக்குறை 700 கோடிக்கும் குறைவு என்கிறபோது 5,000 கோடிக்கு வரி உயர்வு, கட்டண உயர்வு, புதிய வரிகள் என அறிவிப்புச் செய்து பெரும் சுமையை ஏற்றிவிட்டு, அதில் சுமார் 1,200 கோடி அளவுக்கு மட்டும் குறைப்பது என்பது எந்த வகையில் நியாயம் என்ற கேள்விக்கும் அ.தி.மு.க. அரசிடம் மக்கள் பதிலை எதிர்பார்க்கிறார்கள்.

அன்புள்ள,

மு.க.

10-12-2002

2854. ஏணி ஏற முடியாதவரைக் கேணியில் தள்ளுவதா?

உடன்பிறப்பே,

ஆறு மாத ஆட்சியில் நடைபெற்றுள்ள அவலங்களையும், அராஜகங்களையும், போலீஸ் ராஜ்யக் கொடுமைகளையும் அனைத்துக்கும் உச்சகட்டமாகச் சாதாரண சாமான்ய மக்களை பாதிக்கும் மினி பட்ஜட்டின் விபரீத விளைவுகளையும், தொழிலாளர்களைத் துச்சமாகக் கருதி அவர்களின் கோரிக்கைகளைக் குப்பைக் கூடையில் எறிந்ததையும், மக்களிடத்திலே விளக்கிட ஆங்காங்கு கூட்டங்கள், தெருமுனைப் பிரச்சாரங்கள் நடத்துகின்ற பணியில் தி.மு.க. அமைப்புகளும், இளைஞர் அணி அமைப்புகளும் ஈடுபட்டுள்ள இந்த நேரத்தில் பயன்படுத்திக் கொள்வதற்கான புள்ளி விவரங்களை கடந்த இரண்டு நாட்களாக எழுதி வருகிறேன்.

இன்றைக்கு விலைவாசி குறித்து ஒரு விபரத்தைத் தருகிறேன். இதனை ஆளுங்கட்சி ஆதரவுப் பத்திரிகைகள் பிரசுரிக்க மாட்டா! ஒருவேளை பிரசுரித்தாலும் என் அறிக்கை அல்லது கடிதத்தின் கழுத்தை வெட்டியோ, கைகால்களைத் துண்டித்தோ, தங்கள் எஜமானர்களுக்கு எரிச்சல் வராத அளவுக்குத் தான் கடுகளவு வெளியிடுவார்கள். பாவம்! அவர்களுக்குத் தர்மசங்கடம் வருவானேன் என்பதற்காக என் கடிதத்தையோ, அறிக்கையையோ அந்த ஏடுகளுக்கு அனுப்பித் தொல்லை தரவேண்டாம் என்று கூறிவிட்டேன்.

உணர்வுள்ள ஓரிரு ஏடுகள் இவற்றை வெளியிடக் கூடும். அப்படியே வெளியிட்டாலும்கூட, நீயும், உன் போன்ற உடன்பிறப்புகளும் இந்தப் புள்ளி விபரங்களையும், இத்துடன் ஏற்கனவே தொடர்ந்து எழுதப்பட்டுள்ள கருத்துகளையும் பொது மக்களுக்குப் போய்ச் சேரும் வண்ணம் துண்டு அறிக்கைகளாக அச்சிட்டு வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆளுங்கட்சியான அ.தி.மு.க. பேச்சாளர்கள், எவ்வளவு தரக்குறைவாகவும், நரகல் நடையிலும் நமது கழகத்தைக் குறித்து

கேட்போர் காதைப் பொத்திக் கொண்டு காத தொலைவு ஓடுகிற அளவுக்கும் காவல்துறையினரைப் பாதுகாப்பு அரணாக வைத்துக் கொண்டு கொட்டி முழக்குகிறார்கள் என்பது எனக்குத் தெரியும். இவர்களைப் போலவே, மலிவான, இழிவான சரக்குகளை விற்பதற்கு அரசியல் சந்தைக்கு வந்த அணுகுண்டு அய்யாவு, விபூதி வீரமுத்து, கோடையிடி குப்புசாமி போன்றவர்களையெல்லாம் இந்த திராவிட இயக்கம் சந்தித்தபோது, இன்றைக்கு தி.மு.க.வை, நாக்கு கொப்பளிக்கச் சுடு சொல் வீசித் தாக்குகிறவர்கள் இருந்த இடம் எதுவென்று அவர்களுக்கே தெரியாது.

எனவே கழக அமைப்புகள் சார்பிலோ, இளைஞர் அணி சார்பிலோ மற்றும் இந்த இயக்கத்தின் எந்தவொரு அமைப்பின் சார்பிலோ மேடையேறி விளக்கம் கூறுகிறவர்கள், விஷத் துளியொன்று பால் குடத்தில் விழுந்ததுபோன்று தங்கள் பேச்சுகளை அமைத்துக் கொள்ளக் கூடாது.

படிக்க நேரமிருந்து படிக்க வேண்டுமென்ற நினைப்பும் இருந்தால், நான் எழுதி வந்துள்ள கடிதங்களை, விளக்க அறிக்கைகளை உடன்பிறப்புகள் படித்து, நெஞ்சில் பதிய வைத்துக் கொண்டு மக்களிடத்தில் அவற்றில் சிலவற்றையாவது எடுத்துக் கூறினால் போதும்.

அ.தி.மு.க. ஆட்சியில் கிலோ 46 ரூபாய் என்றிருந்த மஞ்சள் விலை தி.மு.க. ஆட்சியில் 37 ரூபாய் என்று குறைந்து, இப்போது மீண்டும் 41 ரூபாய் என உயர்ந்து விட்டது.

அ.தி.மு.க. ஆட்சியில் கிலோ 36 ரூபாய் என்றிருந்த நெம்பர் 1, துவரம்பருப்பு விலை, தி.மு.க. ஆட்சியில் 29 ரூபாய் என்று குறைந்து, இப்போது மீண்டும் 32 ரூபாய் என உயர்ந்து விட்டது.

அ.தி.மு.க. ஆட்சியில் கிலோ 28 ரூபாய் என்றிருந்த நெம்பர் 2, துவரம் பருப்பு விலை, தி.மு.க. ஆட்சியில் 22 ரூபாய் என்று குறைந்து, இப்போது மீண்டும் 26 ரூபாய் என உயர்ந்து விட்டது.

அ.தி.மு.க. ஆட்சியில் கிலோ 26 ரூபாய் என்றிருந்த கடலைப்பருப்பு விலை, தி.மு.க. ஆட்சியில் 24 ரூபாய் என்று குறைந்து, இப்போது மீண்டும் 32 ரூபாய் என உயர்ந்து விட்டது.

அ.தி.மு.க. ஆட்சியில் கிலோ 58 ரூபாய் என்றிருந்த நல்லெண்ணெய் விலை, தி.மு.க. ஆட்சியில் 45 ரூபாய் என்று குறைந்து, இப்போது மீண்டும் 50 ரூபாய் என உயர்ந்து விட்டது.

அ.தி.மு.க. ஆட்சியில் கிலோ 43 ரூபாய் என்றிருந்த கடலெண்ணெய் விலை, தி.மு.க. ஆட்சியில் 35 ரூபாய் என்று குறைந்து, இப்போது மீண்டும் 44.50 ரூபாய் என உயர்ந்து விட்டது.

அ.தி.மு.க. ஆட்சியில் கிலோ 32.50 ரூபாய் என்றிருந்த பாமாயில் விலை, தி.மு.க. ஆட்சியில் 21 ரூபாய் என்று குறைந்து, இப்போது மீண்டும் 32 ரூபாய் என உயர்ந்து விட்டது.

அ.தி.மு.க. ஆட்சியில் கிலோ 26 ரூபாய் என்றிருந்த கடுகு விலை, தி.மு.க. ஆட்சியில் 20.50 ரூபாய் என்று குறைந்து, இப்போது மீண்டும் 30 ரூபாய் என உயர்ந்து விட்டது.

அ.தி.மு.க. ஆட்சியில் கிலோ 43 ரூபாய் என்றிருந்த பூண்டு விலை, தி.மு.க. ஆட்சியில் 28 ரூபாய் என்று குறைந்து, இப்போது மீண்டும் 75 ரூபாய் என உயர்ந்து விட்டது.

அ.தி.மு.க. ஆட்சியில் கிலோ 36 ரூபாய் என்றிருந்த நெம்பர் 1 உளுத்தம்பருப்பு விலை, தி.மு.க. ஆட்சியில் 30 ரூபாய் என்று குறைந்து, இப்போது மீண்டும் 34 ரூபாய் என உயர்ந்து விட்டது.

அ.தி.மு.க. ஆட்சியில் கிலோ 33 ரூபாய் என்றிருந்த நெம்பர் 2, உளுத்தம்பருப்பு விலை, தி.மு.க. ஆட்சியில் 26 ரூபாய் என்று குறைந்து, இப்போது மீண்டும் 28.50 ரூபாய் என உயர்ந்து விட்டது.

அ.தி.மு.க. ஆட்சியில் கிலோ 240 ரூபாய் என்றிருந்த மிளகு விலை, தி.மு.க. ஆட்சியில்140 ரூபாய் என்று குறைந்து, இப்போது மீண்டும் 180 ரூபாய் என உயர்ந்து விட்டது.

அ.தி.மு.க. ஆட்சியில் கிலோ 55 ரூபாய் என்றிருந்த நீள மிளகாய் விலை, தி.மு.க. ஆட்சியில் 41 ரூபாய் என்று குறைந்து, இப்போது மீண்டும் 52 ரூபாய் என உயர்ந்து விட்டது.

அ.தி.மு.க. ஆட்சியில் கிலோ 50 ரூபாய் என்றிருந்த குண்டு மிளகாய் விலை, தி.மு.க. ஆட்சியில் 40 ரூபாய் என்று குறைந்து, இப்போது மீண்டும் 48 ரூபாய் என உயர்ந்து விட்டது.

அ.தி.மு.க. ஆட்சியில் கிலோ 60 ரூபாய் என்றிருந்த தேங்காய் எண்ணெய் விலை, தி.மு.க. ஆட்சியில் 48 ரூபாய் என்று குறைந்து, இப்போது மீண்டும் 55 ரூபாய் என உயர்ந்து விட்டது.

அ.தி.மு.க. ஆட்சியில் கிலோ 34 ரூபாய் என்றிருந்த சீயக்காய் விலை, தி.மு.க. ஆட்சியில் 22.50 ரூபாய் என்று குறைந்து, இப்போது மீண்டும் 36 ரூபாய் என உயர்ந்து விட்டது.

அ.தி.மு.க. ஆட்சியில் கிலோ 19 ரூபாய் என்றிருந்த நெம்பர் 1, பொன்னி அரிசி விலை, தி.மு.க. ஆட்சியில் 15 ரூபாய் என்று குறைந்து, இப்போது மீண்டும் 20 ரூபாய் என உயர்ந்து விட்டது.

அ.தி.மு.க. ஆட்சியில் கிலோ 17 ரூபாய் என்றிருந்த நெம்பர் 2, பொன்னி அரிசி விலை, தி.மு.க. ஆட்சியில் 13 ரூபாய் என்று குறைந்து, இப்போது மீண்டும் 18 ரூபாய் என உயர்ந்து விட்டது.

அ.தி.மு.க. ஆட்சியில் கிலோ 10.50 ரூபாய் என்றிருந்த இட்லி அரிசி விலை, தி.மு.க. ஆட்சியில் 9 ரூபாய் என்று குறைந்து, இப்போது மீண்டும் 12 ரூபாய் என உயர்ந்து விட்டது.

அ.தி.மு.க. ஆட்சியில் கிலோ 12.50 ரூபாய் என்றிருந்த சிறுமணி அரிசி விலை, தி.மு.க. ஆட்சியில் 10 ரூபாய் என்று குறைந்து, இப்போது மீண்டும் 13 ரூபாய் என உயர்ந்து விட்டது.

அ.தி.மு.க. ஆட்சியில் கிலோ 140 ரூபாய் என்றிருந்த சீரகத்தின் விலை, தி.மு.க. ஆட்சியில் 120 ரூபாய் என்று குறைந்து, இப்போது மீண்டும் 150 ரூபாய் என உயர்ந்து விட்டது.

விலைவாசி குறைய வேண்டுமானால் எங்களுக்கு வாக்களியுங்கள்.....ஒரேயடியாக விலைவாசியைக் குறைப்போம் என்று தேர்தல் நேரத்தில் திருவாய் மலர்ந்தருளியவர்களை இன்றைக்கு எங்கு தேடினாலும் கிடைக்க மாட்டேன் என்கிறார்கள்.

வரி, கட்டணம் போன்றவைகளை மனம் போன போக்கில் உயர்த்தி விட்டு, ஏற்கனவே இந்த ஆட்சியில் ஏறியுள்ள விலைவாசியை சமாளிப்பதற்கு ஏணி கிடைக்காமல் திண்டாடுகிறவர்களை, கேணியில் தள்ளி விடும் காரியம் செய்கிறார்களே, நியாயமா என்று அவர்களுக்கு வாக்களித்த மக்களைப் பார்த்துக் கேளுங்கள்!

அந்தப் பிரச்சாரப் போருக்கு உடன்பிறப்புகள் ஏந்திட வேண்டிய ஆயுதங்களில் ஒன்றுதான் இந்த விலைவாசிப் பட்டியல்!

அன்புள்ள,

மு.க.

11-12-2002

2855. மூன்று நாட்கள், முக்கிய நாட்கள், முத்தான நாட்கள்!

உடன்பிறப்பே,

இந்த டிசம்பர் திங்களில் மூன்று நாட்கள் நமது கழகத்தின் முக்கியமான நாட்கள்.

டிசம்பர் 15ஆம் நாள் கழக மகளிர் கருத்தரங்கு - எதிர்பார்த்ததற்கு மேலாக அரங்கம் நிரம்பி வழிகிற அளவுக்கு மகளிர் வருகை தர இருக்கிறார்கள். கழகப் பொறுப்புகளில், உள்ளாட்சிப் பொறுப்புகளில் இருக்கும் மகளிரை மட்டுமே அழைத்திருக்கிறோம் எனினும்; அவர்களின் எண்ணிக்கையே இடம் போதாத அளவுக்கு நம்மைத் திகைப்பில் ஆழ்த்திக் கொண்டிருக்கிறது.

சிறப்புத் தலைப்புகளில் உரையாற்றுவதற்கு ஏற்கனவே கழகத்தின் முக்கிய பேச்சாளர்களாக விளங்கும் மகளிர் அணியினரை விடுத்து; மற்ற மகளிரை மட்டும் தேர்வு செய்ததில் அவர்களின் எண்ணிக்கையே ஐம்பது மகளிரைத் தாண்டுகிறது. ஒருவர் 10 நிமிடம் பேசலாம் என்று வரையறை வைத்தாலும் மொத்தம் 500 நிமிடங்கள் - அதாவது மொத்தம் எட்டு மணி நேரம் தேவைப்படுகிறது. எனவே பத்து நிமிடம் என்பதைக்கூட இன்னமும் குறைத்திடலாமா என்று ஆலோசிக்கப்படுகிறது.

மகளிர் அணியினர் எண்ணிக்கை பெருக வேண்டும் - புதியவர்களுக்கு ஊக்கம் தர வேண்டும் என்பதற்காகவும்; ஏற்கனவே மகளிர் அணியில் இருப்போர் புதியவர்களுக்கு வழிகாட்டிகளாகவும் - அணியை மேலும் வலுப்படுத்துகிறவர்களாகவும் திகழ்ந்திட நல்ல கருத்துக்களை 15ந்தேதி கருத்தரங்கில் எடுத்துக்கூற வேண்டும் என்ற நோக்கத்துடனும் தலைமைக் கழகம் இம் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறது.

பழைய - புதிய மகளிர் ஒத்துழைத்து ஏதோ இது ஒரு நாள் நிகழ்ச்சி என்ற நிலையில் மட்டும் அமையாமல்; தொடர்ந்து கழகப் பணிகளுடன் கலந்த பணிகளான சமுதாயப் பணி, அரசியல் பணி, இலக்கியப் பணி, பகுத்தறிவு பரப்பும் பணி போன்றவற்றை ஆற்றிடும் ஆற்றலும் ஆர்வமுங்கொண்டு அக்கறையுடன் மகளிர் அணி நடைபோட ஒல்லும்வகையெல்லாம் உழைத்திடும் கடமையாற்றிட உறுதியேற்பதே இந்தக் கருத்தரங்கின் பயனாக அமைந்திடல் வேண்டும்.

அடுத்து டிசம்பர் 19ஆம் நாள் - நமது கழகப் பொதுச் செயலாளர், இனமானப் பேராசிரியர் அவர்களின் பிறந்த நாள் - 81வது பிறந்த நாள் என்று குறிப்பிட்டாலும், 80வது அகவை நிறைவுற்று 81வது அகவையில் அடியெடுத்து வைக்கிறார் என்பதை மகிழ்ச்சியுடன் கொண்டாடுகின்ற நாள்!

80 வயது நிறைந்தவர்களை ஆயிரம் பிறை கண்டவர்கள் என்று வியந்து புகழ்ந்து விழியாரக் கண்டு, மொழியார வாழ்த்துவது தமிழர் மரபு!

கொள்கை உறுதியில் - தமிழ் இனப்பற்றில் - கழக வளர்ச்சியில் எழுச்சியில் - குறை காண முடியாத குணக்குன்றாம் நமது பேராசிரியருக்கு உடன் பிறந்தோரின் உவகை மலர எடுத்திடும் பிறந்த நாள் விழா வட சென்னையில் துறைமுகத் தொகுதியை ஒட்டிய மைதானத்தில் பெருந்திருவிழாவாக நடந்திட அப்பகுதி மாவட்டச் செயலாளர் தம்பி பலராமன் எழில்மிகு ஏற்பாடுகளைச் செய்திடத் தொடங்கியுள்ளார்.

இந்த இலட்சிய இயக்கம் வாழ்ந்தாலும் தாழ்ந்தாலும் - வாழும்போது வணங்காமுடித்தனமின்றியும்; தாழும்போது தாசர்புத்தி தலைக்கேறாமலும் - நிதான மனிதராய் - நேர்மைத் தமிழராய் - நிமிர்ந்து நிற்கும் பேராசிரியரின் நெஞ்சுரத்தைப் போற்ற - வாழ்த்த - நீயும் நானும் நம் போன்ற உடன்பிறப்புகளும் அந்நாளில் சென்னையில் குழுமிட இருக்கிறோம். கழகம் மேலும் வலிவு பெற பொலிவு பெற கருத்தொளி வழங்கிடவும் பெற்றிடவும் கரங்குலுக்கிட இருக்கிறோம்.

டிசம்பர் 27ஆம் நாள் - பளபளப்புக் காட்டி - பசப்பு மொழி பேசி - பாமர மக்களை, பட்டிக்காட்டு மனிதர்களை, ஏன் பட்டினத்துவாசிகளையும்கூட ஏணிகளாக்கி ஏற்றம் பெற்ற

அ.தி.மு.க. ஆட்சியின் அலங்கோலங்களை, ஆர்ப்பாட்டங்களை, அத்துமீறிடும் அடாவடிச் செயல்களை, அராஜகச் சேட்டைகளை, நெறிமுறைகளைக் குழிதோண்டிப் புதைத்து விட்டு, நீதியையே வளைக்கலாம் என ஆடுகிற ஆட்டங்களை, போடுகிற சட்டங்களை இன்னும் எத்தனை காலம் வேடிக்கை பார்ப்பது என வினா எழுப்பும் நாள்! தமிழக முழுவதும் வட்டத் தலைநகர்கள் - மாவட்டத் தலைநகர்களில் தி.மு.கழகப் பேரணிகள் - ஆர்ப்பாட்டங்கள்! ஏன்? எதற்காக?

★ மனித உரிமை பறிக்கும் மதமாற்றத் தடைச் சட்டம்.

★ பஸ் தொழிலாளியைப் பட்டினி போட பஸ்கள் தனியார் மயம்.

★ ரேஷன் அரிசி விலையோ ஆறு ரூபாய் வரை உயர்வு.

★ அத்யாவசியப் பண்ட விலை விஷம்போல் ஏற்றம்.

★ விவசாயிகளின் வயிற்றில் அடிக்க இலவச மின்சாரத்தை ரத்து செய்யும் திட்டம்.

இவற்றையும், இந்த ஆட்சியின் இன்னபிற அவலங்களையும் சகல மக்களுக்கும் எடுத்துக்காட்டி

அறப்போர்க் கோலம் பூண்டு

அணி வகுப்போம்;

ஆயிரம் பதினாயிரமாய்!

தமிழ் மண்ணில்; மொழி காத்திட, இனம் காத்திட, உரிமை காத்திட, ஜனநாயகம் காத்திட - நாம் கண்ட களங்களின் எண்ணிக்கை, கணக்கிலடங்கா!

இன்று ஆட்சியில் அமர்ந்திருப்போரைப்போல அல்லாமல்; அடக்குமுறைகளை, ஆறு மாதம், ஒரு வருடம் என சிறைவாசங்களை, தனிமைச் சிறைகளை - தடா சட்டங்களை, மிசா சட்டங்களை, தேசியப் பாதுகாப்புச் சட்டங்களைத் தாங்கிய தோள்கள் நமது தோள்கள்!

போராட்டங்கள் மக்களுக்காக - மொழிக்காக - ஜனநாயகம் காப்பதற்காக - என்றால்

அப்போது நமக்கு

புரட்சிக் கவிஞரின்

பாடல்தான் - ஆம்;

"அந்த மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை எமை மாட்ட நினைக்கும் சிறைச்சாலை" -

என்ற வரிகள்தான் நினைவுக்கு வரும். அதற்கே துணிந்து அணிவகுத்த நமது உடன்பிறப்புகள் - ஆர்ப்பாட்டம், பேரணி என்றால் அடங்கிக் கிடப்பரோ வீட்டில்?

அல்ல! அல்ல! இந்த ஆட்சிக்குப் பாடம் புகட்டும் அற வழி ஆர்ப்பாட்டப் பேரணிக்கு அணி அணியாய் வருவர்!

எனவே இத்திங்கள் இந்த மூன்று நாட்கள் நமக்கும் நமது கழகத்திற்கும் முக்கியமான நாட்கள்! முத்தான நாட்கள் !

அன்புள்ள,

மு.க.

12-12-2002

2856. அவதூறுச் செய்திக்கு மறுப்பு!

தமிழகத்தில் சமுதாயத்தின் கீழ்த்தட்டில் தள்ளப்பட்டோர் முன்னேறுவதற்கு மட்டுமே சமூகப் பிரிவுகள் அடையாளங்களாக பயன்படுத்தப்பட வேண்டுமேயல்லாமல், நாமனைவரும் தமிழர்கள் என்ற உணர்வை ஒரு போதும் இழத்தல் ஆகாது என்ற கொள்கை உடையவன் நான் என்பதையும், அந்தக் கொள்கை வழியில் அய்யா, அண்ணா காலத்திலிருந்து இயங்கி வருவதுதான் திராவிட முன்னேற்றக் கழகம் என்பதையும் தமிழ் மக்கள் நன்றாக அறிவார்கள்.

எனவே இட ஒதுக்கீடு போன்ற உரிமைக்குரல், அடித்தட்டில் சாதிப் பிரிவுகளின் காரணமாக ஒடுக்கப்பட்டிருக்கும் மக்களைக் கைதூக்கி விட வேண்டும் என்பதற்கான முழக்கமே தவிர, சாதிகளை வளர்க்க வேண்டும் என்பதற்கோ, அன்று அஞ்ஞான இருளில் மனிதனை மனிதன் தின்று வாழ்ந்தான், இன்றோ விஞ்ஞான ஒளியில் மனிதனை மனிதன் கொன்று வாழ்கிறான் என்ற நிலை மேலும் வளர்வதற்கோ அல்ல, அல்லவே அல்ல.

நாட்டில் சாதி மதங்களின் பெயரால் உருவாகும் மோதுதல்களை, தொடர்ச்சியான சர்ச்சைகளை அதன் காரணமாக ஏற்படும் உயிர், உடைமை இழப்புகளை மத நல்லிணக்கம், சமூக ஒற்றுமை இவற்றின் பெயரால் தவிர்ப்பதற்கான முயற்சிகளை முற்போக்குச் சிந்தனை படைத்தவர்கள் அனைவரும் மேற்கொண்டுள்ளனர். அவர்களில் கழகத் தலைவனாக இருக்கிற நானும் ஒருவன் என்ற முறையில் சாதி ஆதிக்கங்களோ, அதே போல சாதி அடிமைத்தனங்களோ இருத்தல் ஆகாது என்பதில் கண்ணும் கருத்துமாக இருப்பவன்.

அண்மைக் காலமாக, தமிழகத்தில் சாதியின் பெயரால் தேர்தல் நேரத்தில் சில கட்சிகள் தொடங்கப்பட்டு, அக்கட்சிகள் தி.மு. கழகத்துடன் தேர்தல் உடன்பாடு கொள்ள முன் வந்த போது கூட, அவர்கள் அந்தச் சாதிப் பெயர்களை விடுத்து, சான்றாக மக்கள் தமிழ் தேசம் என்றும், புதிய நீதிக் கட்சி என்றும், தமிழர்

பூமி என்றும், மூவேந்தர் முன்னேற்றக் கழகம் என்றும் தங்கள் கட்சிகளின் பெயர்களை அமைத்திருந்த நிலையில்தான் தி.மு.க. அணியிலே இணைந்தார்கள் என்பதை இந்த நாடு நன்கறியும்.

ஆனால் பொதுவாகவே, தமிழ்நாட்டு மக்கள் ஒரு கட்சியைத் தொடங்குகின்ற தலைவர்கள் தங்களின் மதிப்புக்குரியவர்களாக, பாராட்டுக்குரியவர்களாக இருந்தாலுங்கூட, அவர்கள் தொடங்குகின்ற கட்சி மறைமுகமாகக்கூட சாதியின் பெயரால் இருப்பதை விரும்புவதில்லை என்பதை தேர்தல் நேரத்தில் நிரூபித்துக் காட்டியிருக்கிறார்கள். தேர்தலுக்காக என்பதுகூட அல்ல, பொதுவாகவே ஒன்றே குலம் என்ற ஒரு நிலையிலிருந்து இடைக் காலத்தில் ஏற்பட்ட மாற்றங்களால் உயர்வு தாழ்வுகள், வேறுபாடுகள், ஆதிக்க எண்ணங்கள், அடிமை மனப்பான்மைகள் இவைகளின் ஆக்கிரமிப்பால் சமுதாய அமைப்பில் பெரும்கேடுகள் விளைந்தன, இன்றளவும் விளைகின்றன என்பதை யாரும் மறுக்க முடியாது.

இந்தச் சூழலில் இன்றைய, 11-12-2001 பத்திரிகை ஒன்றில் (தினமணி) வந்துள்ள ஒரு பெட்டிச் செய்தி என்னைப் பெரிதும் வேதனையுறச் செய்துள்ளது. அந்தச் செய்தி:-

> “வீரவன்னியர் பேரவைத் தலைவர் ஜெகத்ரட்சகன், பா.ம.க. நிறுவனர் ராமதாசைத் தலைவராக ஏற்றுக் கொள்கிறார். இன்னும் ஒரு மாநாட்டை நடத்தி முடித்துவிட்டு, தமது சங்கச் செயல்பாட்டை முடித்துக் கொள்ளப் போவதாக அவரே சொன்னார் என்றார் பா.ம.க. எம்.பி. துரை.
>
> கூட்டத்தில் தமது முறை வந்த போது பேசிவிட்டு அமர்ந்த துரையிடம், ராமதாஸ் எதையோ தீவிரமாக ஆலோசித்தார். அதன் பிறகு மீண்டும் பேச வந்த துரை கூறியதாவது: 10 நாள்களுக்கு முன்பு தில்லியில் பா.ம.க. எம்.பி.க்கள் நால்வரும் ஜெகத்ரட்சகனைச் சந்தித்து ஏன் தனியாகச் சங்கம் நடத்துகிறீர்கள்? அய்யா இந்த சமூகத்துக்கு என்ன குறை வைத்துள்ளார் என்று கேட்டோம். அதற்கு அவர் ராமதாஸ்தான் எனக்கும் தலைவர், நானாக விரும்பி, சங்கத்தை ஆரம்பிக்க வில்லை. கருணாநிதி கூறித்தான் ஆரம்பித்தேன். ஓரிரு

மாநாடு நடத்தி விட்டு இனி செயல்படப் போவதில்லை என்றார். ராமதாசை ஓரிரு நாள்கள் முன்பு வீட்டில் சந்தித்து, காலைத் தொட்டு ஆசி வாங்கிக் கொண்டார். எனவே இச்சமூகத்தின் ஒற்றுமையை யாரும் குலைக்க முடியாது என்றார் துரை.

இந்தப் பெட்டிச் செய்தியைப் பார்த்து அதிர்ச்சியுற்ற நான், திரு.ஜெகத்ரட்சகன் தலைவராக ஏற்றுக் கொண்டுள்ள எம்.ஜி.ஆர். கழகத் தலைவர் திரு.ஆர்.எம்.வீ. அவர்களிடம் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டேன். வீர வன்னியர் பேரவை என்று ஒரு சமூகத்தின் பெயரால், பெயர் வைக்குமாறு நான் சொல்லியிருப்பேன் என்று நீங்கள் நம்புகிறீர்களா? அல்லது உங்கள் கட்சியின் பொதுச் செயலாளராக இருக்கின்ற ஜெகத்ரட்சகனை ஒரு புதுக்கட்சி தொடங்குங்கள் என்று நான் கூறியிருப்பேன் என்று எண்ணுகிறீர்களா? என்று கேட்டேன். அவர் அது பற்றி ஜெகத்ரட்சகனிடமே கேட்கிறேன் என்று சொன்னார். பின்னர் அரை மணி நேரத்திற்கெல்லாம் திரு.ஜெகத்ரட்சகன் எம்.பி., அவர்களே என்னைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு அந்தப் பத்திரிகையில் வந்திருக்கிற பெட்டிச் செய்தியிலே உள்ள விவரங்கள் அனைத்தும் அவதூறு என்றும், அது போல யாரிடத்திலும், தங்களைப் பற்றிப் பேசவில்லை என்றும் இல்லாத ஒன்றை இட்டுக்கட்டி நான் சொல்ல மாட்டேன் என்றும் ,உடனடியாக இதற்கு மறுப்பு தெரிவிக்கிறேன் என்றும் கூறினார். அவர் மறுப்பு தெரிவித்தாலும், தெரிவிக்காவிட்டாலும் இந்தப் பிரச்சினையில் என் நிலையை விளக்க வேண்டியது அவசியம் என்பதால் சாதியின் பெயரால் கட்சிகள் தொடங்குவதையும், இயங்குவதையும் அதன் அடிப்படையிலே உருவாகிற பூசல்களையும் என்றைக்கும் நான் விரும்புகிறவனும் அல்ல, ஏற்றுக் கொள்கிறவனும் அல்ல. எனவே டிசம்பர் 11 ஆம் தேதி பத்திரிகையில் (தினமணி) வந்துள்ள பெட்டிச் செய்தியில் என் பெயரைக் குறிப்பிட்டிருப்பதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்! மறுக்கிறேன்! என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

12-12-2002

2857. நன்றிக்கும் நல்வாழ்த்துக்கும் உரியவராகிறார்!

உடன்பிறப்பே,

"வருகிறது உதயம்" என்ற தலைப்பில் 15.12.2002 தேதியிட்ட 'ஆனந்தவிகடன்' இதழில் வெளிவந்துள்ள கட்டுரையைப் படித்தேன்.

"எமது நீண்ட இரவு முடிவுக்கு வந்து கொண்டிருக்கிறது. உதயத்தைக் காண முடிகிறது"

என இலங்கைப் பிரதமர் ரணில் விக்ரமசிங்கே அவர்கள் தழுதழுத்த குரலில் சொல்லியிருக்கிறார் என்று தொடங்கி,

"நாம் வன்முறையில் பற்றுகொண்ட போர் வெறியர்கள் என்று சொல்லி வந்தவர்களுக்கு மத்தியில் நேர்மை யுடனும் உறுதியுடனும் சமாதானத்தைத் தழுவி வந்திருக்கிறோம்"

என்பதாக பிரபாகரன் அறிவித்திருக்கிறார் எனக் குறிப்பிட்டுள்ள 'விகடன்' முடிவாக அந்தக் கட்டுரையில்;

"வைராக்கியம் கொண்ட இந்த இருவரும் சேர்ந்து இலங்கையில் வெள்ளைக் கொடி நாட்டிக் கொண் டிருக்கிறார்கள். அது படபடத்துப் பறக்கட்டும்"

என்று வாழ்த்தியிருக்கிறது.

முதன்முதலில் 1956ஆம் ஆண்டு சிதம்பரத்தில் நடைபெற்ற தி.மு.கழகப் பொதுக்குழுவில் ஈழத் தமிழர்கள் தந்தை செல்வநாயகம் தலைமையில் நடத்தும் உரிமைப் போராட்டத்தில் வெற்றி பெறுவதற்கும் இலங்கையில் அமைதியான வாழ்வு நடத்துவதற்கும் வாழ்த்தும் ஆதரவும் வழங்கிடும் தீர்மானத்தை நானும் திரு. பொன்னம்பலனாரும் முன்மொழிந்து வழிமொழிந்தவர்கள் என்ற நினைவுடனும்; அந்த உரிமைகள்

கோரும் போராட்டம் பற்றி அப்போது நமது தலைவர் அண்ணா அவர்கள் ஆற்றிய சொற்பொழிவை எண்ணிப் பார்த்திடும் பெருமிதத்துடனும் - அந்நாட்களுக்குப் பிறகு, கலங்கிடத்தக்க - கண்ணீர் விடத்தக்க - பெருமூச்சு விடத்தக்க எத்தனை நிகழ்வுகள் ஈழத்திலும் இங்கே தமிழகத்திலும் நடைபெற்று விட்டன என்பதை ஞாபகப்படுத்திக் கொள்ளக்கூடிய சோகத்துடனும்,

விகடனின் அந்த வாழ்த்தினை, ஒருமுறைக்கு இரு முறை படித்தேன்.

வெளிக்கடை சிறைக் கொடுமை எனத் தொடங்கி, இரு தரப்பிலும் தலா இருபதாயிரம் பேர்களின் உயிர்களைக் குடித்த பிறகல்லவா; இலங்கைத் தீவில் மண்டியிருந்த அந்தகார இருள் மெல்ல விலகத் தொடங்கியிருக்கிறது.

மாநில சுயாட்சி மலர்வதற்கு இலங்கை அரசும் ஒப்புதல் தந்து; தனிநாடு கோரிக்கையை வலியுறுத்த வில்லையென்று போராளிகளும் இணக்கம் தெரிவித்து; இன்று உருவாகியிருக்கிற இந்த இனிய அமைதியான சூழல் ஏற்படுவதற்கு தமிழகத்திலே யுள்ள எல்லாக் கட்சிகளுமே ஒரு காலத்தில் பெரு முயற்சி எடுத்ததுண்டு; அவற்றில் தி.மு. கழகத்திற்கும் உரிய பங்குண்டு!

இடையிடையே ஏற்பட்ட அல்லது ஏற்படுத்தப்பட்ட நிகழ்வுகளை எதிர்கொண்டு; தி.மு.க. எத்துணை தியாகம் செய்திருக்கிறது என்பதையும் - தமிழ் மக்களின் எழுச்சியை அமைதியான பேரணிகள் வாயிலாக, அகில இந்தியத் தலைவர்களை கலந்து கொள்ளச் செய்த மாநாடுகள் மூலமாக, பதவிகளையே துறந்ததின் மூலமாக, போராடிச் சிறை புகுந்ததின் வாயிலாக, இலங்கைத் தமிழரிடையே அமைதியான வாழ்வு பூத்துக் குலுங்க வேண்டுமென விரும்பிச் செயல்பட்டது என்பதையும் அறியாதவர் இருக்க முடியாது.

போராளிகளுக்கிடையே சகோதர யுத்தம் தவிர்க்கப்பட்டிருந்தால் - சமரச முயற்சிக்கு இரு தரப்பிலும் இணக்கம் தெரிவித்துள்ள நிலை; முன்பே ஏற்பட்டிருந்தால் -

நினைத்தாலே நெஞ்சு நடுங்கும் பல சோகச் சம்பவங்கள் நடந்தே இருக்க முடியாது!

என் செய்வது; "நடந்தவைகள் நடந்தவைகளாக இருக்கட்டும், இனி நடப்பவைகளாவது நல்லவைகளாக இருக்கட்டும்" என்று அன்றைக்கு புதுவை மாநாட்டிலே முழங்கினாரே, அண்ணன் தளபதி அழகிரி அவர்கள் - அந்தப் பொன்மொழியாம் புத்துணர்வு நல்கிடும் அறிவுரையை செயல்படுத்த அனைவருமே முன்வர வேண்டும்.

அதிலும் குறிப்பாக இலங்கைத் தமிழ் ஈழத்தில் - அது நடைமுறைக்கு வரவேண்டும்.

நம்மைப் பொறுத்தவரையில் 2000ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் கழக ஆட்சி நடைபெற்றபோது இலங்கை எதிர்க்கட்சித் தலைவராக என்னை வந்து சந்தித்த ரணில் விக்ரமசிங்கே அவர்கள், அப்போதே இந்தப் பிரச்சினை சுமுகமாகத் தீர்க்கப்பட வேண்டும் மென்பதிலே அதிக அக்கறையுடையவராக இருந்தார். எதிர்க்கட்சியாக இருந்தால் ஒரு பேச்சு; ஆளுங்கட்சியானால் ஒரு பேச்சு என்ற மாறுபட்ட நிலையெடுக்காமல் இன்றைய தினம் ஒன்றுபட்ட கருத்து உருவாகி; அதனால் 'அமைதி விடியல்' ஏற்படுவதற்கு ஒத்துழைத்தமைக்கு அவர் எல்லோருடைய நன்றிக்கும் நல்வாழ்த்துக்கும் உரியவராகிறார்.

அன்புள்ள,

மு.க.

13-12-2002

2858. கர்நாடகம் - தமிழகம்; கடிதப் போர் தேவையா ?

உடன்பிறப்பே,

இந்தியக் கூட்டாட்சி அமைப்பில் இடம்பெற்றுள்ள மாநிலங்கள் மேலும் அதிகாரங்கள் பெற்று சுயாட்சித் தன்மையுடன் இந்திய நாட்டு இறையாண்மையையும் ஒருமைப்பாட்டையும் போற்றிக் காத்திடும் நிலையை நாம் வலியுறுத்தி வருவது ஒருபுறமிருந்தாலும், அதே நேரத்தில் மாநிலங்களுக்கிடையேயான நட்புணர்வும், நல்லுறவும் எந்த வகையிலும் பாதிக்கப்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு, அந்தந்த மாநிலங்களில் உள்ள பிரதான கட்சிகளுக்கும் கட்சிகளின் தலைவர்களுக்கும் உண்டு எனினும் மிக முக்கியமாக ஒவ்வொரு மாநிலத்திலுமுள்ள அரசுகளுக்கும் உண்டு என்பதை மறந்து விடக் கூடாது.

எந்தக் கட்சிச் சார்புடைய அரசாக அது அமைந்திருந்தாலும், மாநிலங்களுக்கிடையேயான பிரச்சினைகளில்; அவற்றைக் கட்சிக் கண்ணோட்டத்துடனோ; அல்லது தனிப்பட்ட விருப்பு வெறுப்பு அடிப்படையிலோ அணுகுவது என்பது ஒரு மாநில மக்களை இன்னொரு மாநில மக்களுக்கு பகையாளிகளாகவே ஆக்கி விடுவதற்கு மிகச் சுலபமாக வழி வகுத்து விடும்.

உதாரணமாக காவிரிப்பிரச்சினையில் கர்நாடகத்துக்கும் தமிழகத்திற்குமிடையேயான கசப்புணர்ச்சி: மெல்ல மெல்ல அதிகமாகப் பெருகி, அதன் விளைவுகளை அனுபவ ரீதியாகப் பார்த்து வருகிறோம்.

தமிழகம் - கர்நாடகம் ஆகிய இரு மாநில அரசுகளின் அணுகுமுறையில் ஏற்பட்ட தொய்வு; தொடர்ந்து ஒரு பகையை உருவாக்கி விட்டதை எவரே மறுக்க முடியும்?

இவர்களும் காவிரி ஆணையம் போன்ற பிரதமர் தலைமையில் உள்ள அமைப்புக்கே மதிப்பு அளிக்காமல் - வெளிப்படையாகவே புறக்கணித்துக் காட்டியது ஏற்கத்தக்கதல்ல!

அவர்களும் அங்கே உண்மையிலேயே தண்ணீர் பற்றாக்குறை என்றால்; அதை விரிவாக உரிய இடத்தில் விளக்கித் தமது இயலாமையை மென்மையாகத் தெரிவித்திருக்கலாம். ஆனால் அவர்கள் அதற்கு மாறாக தமிழகத்திற்கு ஒரு சொட்டுத் தண்ணீர்கூடக் கொடுக்க முடியாது என்று பிடிவாதம் பிடித்திருக்கத் தேவையில்லை!

இதுபோலவே பிரச்சினை பின்னுக்குத் தள்ளப்பட்டு - இரு மாநிலங்களின் முதல்வர்களது தன்முனைப்பே தலை தூக்கி நின்று; இறுதியாக ஒரு கட்டத்தில் பிரதமர் வாஜ்பாய் அவர்கள் மீதே நம்பிக்கையில்லையென்று கண்டனம் தெரிவித்து; பின்னர் உச்சநீதிமன்றத்தின் தாக்கீதுக்கிணங்க அந்த வார்த்தைகளைத் திரும்பப் பெற வேண்டிய சூழ்நிலையும் நமது மாநில முதல்வருக்கு ஏற்பட்டது.

அடுத்து கர்நாடக முன்னாள் அமைச்சர் நாகப்பாவை வீரப்பன் கடத்திய செய்தி வெளி வந்தவுடனே, நாகப்பாவை விடுவிக்கிற பொறுப்பை இரு மாநில அரசுகளும் இணைந்து ஏற்றுக் கொண்டு; நிறைவேற்றுவதற்குப் பதிலாக; கடத்தலுக்குக் காரணம் நீயா நானா எனத் தர்க்கம் செய்து கொண்டே; நாகப்பா உயிரோடு விடுபடாமல் போனதற்கும் - வீரப்பன் விடுபட்டு தப்பியதற்கும் இரு அரசுகளின் பேச்சுக்களும் செயல்பாடுகளுமே காரணமாகி விட்ட நிலையைத்தான் இன்றைக்குக் காண முடிகிறது.

நாகப்பாவின் கொடுமையான முடிவினால் கர்நாடக மாநில மக்கள் கொந்தளித்ததைவிட, ஆயிரம் மடங்கு அதிகமாகக் கொந்தளித்து, குறைந்த பட்சம் அங்குள்ள ஆயிரம் தமிழ்க் குடும்பங்களிலாவது பிணங்கள் விழுகிற நிலைமை உருவாகியிருக்கும்; கடத்தப்பட்ட நடிகர் ராஜ்குமாருக்கு இந்தக் கதி ஏற்பட்டிருந்தால் என்பதை; இரு மாநில மக்கள் மட்டுமல்ல, இந்திய மக்களில் ஏறத்தாழ சரி பகுதிப் பேர் அறிவார்கள்.

ராஜ்குமார் கடத்தப்பட்ட செய்தி வந்தவுடன்; அவரை மீட்பதற்கு எத்துணை முயற்சிகள் கர்நாடக அரசுடன் இணைந்து அன்றைய தமிழக தி.மு.க. அரசினால் மேற்கொள்ளப்பட்டன - எத்தனை தூதர்கள் வீரப்பனிடம் சென்று வந்தனர் - நானும் அமைச்சர்களும் பெங்களூர் சென்று முதல்வர் கிருஷ்ணாவுடன் விவாதித்தது மட்டுமல்ல; ராஜ்குமார் வீட்டுக்கே சென்று அவர்

மனைவி மக்களுக்கு எவ்வளவு ஆறுதல் கூறினோம் - எவ்வளவு தைரியம் கூறினோம் - அதேபோல் கிருஷ்ணா அவர்களும் எத்தனை முறை சென்னைக்கு வந்து கலந்து பேசி, முடிவுகள் மேற்கொண்டார்.

ஆனால் இப்போது நாகப்பா கடத்தப்பட்டார் என்றவுடன்; அதற்குக் காரணம் அதிகாரி ஒருவர் மாற்றப்பட்டதுதான் என்று தமிழ் நாட்டிலிருந்து முதல் குரல் கிளம்பவும் - அதற்கு எதிர்க்குரல் கர்நாடகத்திலிருந்து கிளம்பவும்; இப்படியாக தண்ணீருக்குள் விழுந்து தவிக்கும் குழந்தையைக் காப்பாற்றுவதை விட்டு விட்டு; ஏன் விழுந்தது என்ற ஆராய்ச்சியில் ஈடுபட்டுப் பொழுதைக் கழித்துக் குழந்தையைக் கோட்டை விட்ட கதையாக - நாகப்பா கடத்தல் கதை சோகத்தில் முடிந்து விட்டது.

முடிந்த பிறகாவது இரு மாநிலங்களுக்கிடையே நல்லுறவோ, நட்புணர்வோடு கூடிய அணுகுமுறையோ தென்படுகிறதா என்றால்;

இல்லை என்றுதான் வேதனையோடு சொல்ல வேண்டியுள்ளது. -

பத்திரிகைகளில் வந்த அரைகுறைச் செய்திகளை வைத்துக் கொண்டு; இரு தரப்பிலும் இப்போது அரசாங்க சார்பிலான கடிதப் போர் தொடங்கியுள்ளது.

நாகப்பாவை கர்நாடக அதிரடிப்படை தாக்கியதா? தமிழக அதிரடிப்படை தாக்கியதா? அல்லது வீரப்பனால் நாகப்பா சுடப்பட்டுக் கொல்லப்பட்டாரா?

இதிலே ஒரு குழப்பத்தை - விடை காண முடியாத ஒரு சிக்கலை - முதலில் ஏற்படுத்தியது தமிழ்நாட்டிலிருந்து வெளிவந்த சென்னைப் பதிப்பு 8-12-2002 தேதியிட்ட மாலைப் பத்திரிகை ஒன்றுதான் என்பதை தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும்..

★ தமிழக அதிரடிப்படை தாக்குதல்

★ நாகப்பா விடுதலை

★ வீரப்பன் தப்பி ஓட்டம்

“தமிழக போலீஸ் நடத்திய அதிரடி தாக்குதலில்

நாகப்பாவை விட்டு விட்டு வீரப்பன் தப்பி ஓடிவிட்டான். நாகப்பா விடுதலையானதாகத் தெரிகிறது”

இப்படிக் கொட்டை எழுத்துச் செய்தியை முதல் பக்கத்திலே போடச் செய்தது யார்?

இதில் போலீசுக்கு தொடர்பு உண்டா ? -

தமிழகப் போலீஸ் தந்த செய்தியா? அல்லது அந்தப் பத்திரிகையின் தவறான தகவலா?

இவற்றையெல்லாம்
காவல்துறைக்குப்
பொறுப்பேற்றுள்ள
முதலமைச்சர் ஜெயலலிதா
விசாரித்தறிவார்களேயானால்;

‘கடிதப் போர்’ தேவையில்லாமல் ஆகியிருக்கும் - இரு மாநிலங்களுக்கிடையே இனியாவது அமைதியான அணுகுமுறைக்கு - அறிவுபூர்வமான அணுகுமுறைக்கு - வழி அமையும் சூழ்நிலை ஏற்படும்.

அன்புள்ள,

மு.க.

14-12-2002

2859. அபிராமி அந்தாதி - அம்மையாரை ஏமாற்றவா?

உடன்பிறப்பே,

சென்னை மாநகர திரையரங்கு உரிமையாளர்கள் சங்கப் பொதுச் செயலாளர் அபிராமி ராமனாதன் அவர்கள், நேற்றையதினம் அ.தி.மு.க. பொதுச் செயலாளரைச் சந்தித்து, திரையரங்குகள் சம்பந்தப்பட்ட பல்வேறு கோரிக்கைகளை வைத்துள்ளார். அதைப்பற்றி நமக்கு எந்தவிதமான காழ்ப்பும் கிடையாது.

ஆனால் அவர் விடுத்துள்ள அறிக்கையில், திரையரங்குகளைக் காப்பாற்றினால்தான் திரைத்துறைக்கு நல்ல நேரம் ஏற்படும் என்பதால், கடந்த ஐந்தாண்டுக் கால ஆட்சியில் பல இன்னல்களைச் சந்தித்து, வேறு வழி யில்லாமல் கடலில் சிக்கிய மரக்கலம் போல் இருந்த எங்களைக் காப்பாற்ற வேண்டும் என்று குறிப்பிட்டுள்ள வார்த்தைகள்தான் தெளிவாக்கப்பட வேண்டியவை. திரைப்படத் துறையில் நடிகர், நடிகையர்தான் நடிப்பார்கள். அதுவும்கூட திரைப்படத்திலேதான்! ஆனால் தற்போது என்ன நிலை?

1996ஆம் ஆண்டு நான் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு, புரட்சிக் கலைஞர் விஜயகாந்த் முன்னின்று திரைப்படத் துறையின் சார்பில் எனக்கொரு விழா - கலைஞரின் கலையுலகப் பொன் விழா என்ற பெயரில் எடுத்தார். அதற்குப் பிறகு கழகம் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு 1998ஆம் ஆண்டு ஏ.வி.எம். சரவணன் அவர்களைத் தலைவராகக் கொண்டு, ஒரு குழுவினை அமைத்து - முதல்வர் கலைஞர் - பவள விழா என்ற பெயரில் ஒரு விழா நடத்தப்பட்டது. இந்த பவள விழா குழுவின் செயலாளர்களாக இருந்தவர்களில் ஒருவர்தான் இந்த அபிராமி ராமனாதன். கடந்த ஐந்தாண்டுக் கால ஆட்சியில் பல இன்னல்களைச் சந்தித்து, வேறு வழியில்லாமல் கடலில் சிக்கிய மரக்கலம் போல இருந்ததாக தற்போது அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறாரே, இதே அபிராமி ராமனாதன் அப்போது கழக ஆட்சியில் நடைபெற்ற கலைஞரின்

பவள விழா மலரிலே ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். அந்தக் கட்டுரை ஒன்றைப் படித்தாலே இந்த நண்பர் எப்படிப்பட்டவர் என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம்.

கலைஞர் வாழ்வதால் கலைகள் சிறப்படைகிறது. கலை சம்பந்தப்பட்ட தொழிலாளர்கள் நிறுவனங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. திரைப்படத் துறையின் இன்ப துன்பங்களை கலைஞர் தூய உள்ளத்தோடு பகிர்ந்து கொள்வார். திரையரங்கத் தொழில் நலிந்து கிடந்தது. நாங்கள் செய்வதறியாது தவித்தோம். கலைஞர் அவர்களிடம் எங்கள் கோரிக்கைகளை வைத்தோம். எங்கள் மீது திணிக்கப்பட்டிருந்த வரிச் சுமையைக் குறைத்தார். புத்துயிர் பெற்றோம். பிறகு பிரச்சினை இல்லாமல் பிழைப்பு நடத்தினோம். மீண்டும் சோதனை வந்தது. புதிய படங்கள்கூட திருட்டு வீடியோ மூலம் களவாடப்பட்டது. திரையரங்கத் தொழில் ஸ்தம்பித்தது. மீண்டும் கலைஞரிடம் சென்று முறையிட்டோம். எங்கள் கோரிக்கைகளை ஏற்று திருட்டு வீடியோக்காரர்களைக் குண்டர் சட்டத்தில் கைது செய்ய உத்தரவிட்டார். அதற்காகத் தனிப்போலீஸ் படையை அமைத்தார். பழைய படங்களுக்கு 20 விழுக்காடுகளும், புதிய படங்களுக்கு 30 விழுக்காடுகளுமாக வரியைக் குறைத்தார். நாங்களும், எங்களைச் சார்ந்த தொழிலாளர்களும் பெருமகிழ்ச்சி அடைந்தோம். என்னுடைய வருமானத்தில் ஒரு பகுதி ஏழைகளுக்குச் செல்கிறது. வருடந்தோறும் ஏழை மாணவ மாணவிகளுக்கு இலவச சீருடைகள், புத்தகங்கள் வழங்கி வருகிறேன். கலைஞர், என்னைப் போன்றவர்களை வாழ வைப்பதால்தான், நாங்கள் ஆயிரக்கணக்கான ஏழைகளுக்குத் தொண்டு செய்ய முடிகிறது. ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணலாம் என்பது பழைய மொழி. ஏழையின் சிரிப்பில் கலைஞரைக் காணலாம் என்பது தான் எங்கள் மொழி. திரைப் படத்துறைக்குக் கலைஞரின் காலம் பொற்காலம். வாழ்க கலைஞர் பல்லாண்டுகள்!

இதுதான் நேற்று அறிக்கை விடுத்துள்ள அபிராமி ராமனாதன், பவள விழா மலரிலே எழுதியுள்ள கட்டுரை. அன்றைக்கும் இன்றைக்கும் எவ்வளவு முரண்பாடு! அவர் அப்போது பவள விழா மலரிலே வெளியிட்ட கருத்து உண்மையா? தற்போது அறிக்கையிலே வெளியிட்டிருப்பது உண்மையா? ஏன் இந்த இரட்டை வேடம்? அம்மையாரின் தயவுக்காக "அபிராமி அந்தாதி

பாடுவதாக இருந்தால் அதுபற்றி யாருக்கும் ஆட்சேபணை இல்லை. அதற்காக ஐந்தாண்டு கழக ஆட்சியைத் தாக்குவது போல, அம்மையாரை ஏமாற்றத் தேவையில்லையல்லவா? கழக ஆட்சிக் காலத்தில் திரைப்படத் துறைக்காக செய்யப்பட்ட சலுகைகள்! அவைகளை மறந்து விட்டு பொற்காலப் புகழ் பாடிக் கொண்டிருக்கின்ற ஒருசில கலையுலக நண்பர்களின் நினைவிற்காக வருமாறு :-

- 1989ஆம் ஆண்டு கழக ஆட்சியில்தான் குறைந்த செலவில் தயாரிக்கப்படும் தரமான தமிழ்த் திரைப்படங்களுக்கு 3 லட்சம் ரூபாய் என்றும், 2 லட்சம் ரூபாய் என்றும் மானியம் வழங்க உத்தரவிடப்பட்டது.
- 17-7-1996 முதல் இந்த மானியம் ஐந்து இலட்சமாக உயர்த்தப்பட்டதும் தி.மு.கழக ஆட்சியிலேதான்.
- 1994, 1995 ஆகிய ஆண்டுகளில் அ.தி.மு.க. ஆட்சியில் இந்த மானியத் தொகை வழங்கப்பட வில்லை. ஆனால் அந்த ஆண்டுகளுக்கும் சேர்த்து, கழகம் 1996இல் ஆட்சிக்கு வந்த பிறகு மானியத் தொகை வழங்கப்பட்டது.
- தொல்பொருள் ஆய்வுத் துறையின் கட்டுப்பாட்டில் வரும் புராதனச் சின்னங்கள் மற்றும் அதுபோன்ற கலைச் சின்னங்கள் உள்ள இடங்களில் படப்பிடிப்புகளை நடத்திட, படத்தயாரிப்பாளர் செலுத்தி வந்த படப்பிடிப்புக் கட்டணம் ஒரு இடத்திற்கு ஒரு நாளைக்கு 5 ஆயிரம் ரூபாய் என்றிருந்ததை 1000 ரூபாய் என்று கழக அரசு பொறுப்பேற்றவுடன் குறைத்தது. தமிழ்த் திரைப்படங்களில் நடிக்கும் சண்டைப் பயிற்சியாளர்கள் சண்டைக்காட்சியின்போது உயிரிழக்க நேர்ந்தால், அவர்களின் குடும்பத்திற்கு ஒரு இலட்ச ரூபாயும், செயல்பட முடியாத அளவிற்கு காயம்பட்டு ஊனமடைய நேர்ந்தால் 50 ஆயிரம் ரூபாயும் நிவாரண நிதியாக வழங்கும் திட்டம் 1996 முதல் கழக ஆட்சியில்

செயல்படுத்தப்பட்டு வருகிறது. குறைந்த செலவில் தயாரிக்கப்படும் தமிழ்ப் படங்களை ஊக்குவிக்கும் நோக்கத்துடன், தகுதி வாய்ந்த தமிழ்த் திரைப்படங்களுக்கு அவை வெளியிடப்பட்டது முதல் நான்கு வாரங்கள் வரை, கேளிக்கை வரியிலிருந்து விலக்களிக்கும் திட்டம் முதன்முதலாக கழக ஆட்சியில் 12-12-1996 முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

- 1989ஆம் ஆண்டுக்கு முன்பு ராஜா சாண்டோ விருது மட்டுமே தரப்பட்டு வந்தது. 1989-90 ஆகிய இரண்டு ஆண்டுகளில், கழக ஆட்சியில் கலைவாணர் விருது, எம்.ஜி.ஆர். விருது, அறிஞர் அண்ணா விருது, பாவேந்தர் பாரதிதாசன் விருது என கலைத்துறை வித்தகர் விருதுகள் அறிவிக்கப்பட்டன. 20-3-97 அன்று கவியரசு கண்ணதாசன் விருது, 10-1-2000 அன்று நடிகர் திலகம் சிவாஜி விருது, 30-8-2000 அன்று தியாகராஜ பாகவதர் விருதும் கழக ஆட்சியிலே தான் அறிவிக்கப்பட்டது.

- 1994, 1995ஆம் ஆண்டுகளில் வழங்கப்படாமல் இருந்த கலைத் துறை வித்தகர் விருதுகளும் கழக ஆட்சியிலேதான் பின்னர் பொறுப்புக்கு வந்ததும் வழங்கப்பட்டன.

- சிறந்த படங்களுக்கு வழங்கப்படும் பரிசுத் தொகை கழக ஆட்சியிலேதான் உயர்த்தப்பட்டது

- 1989ஆம் ஆண்டு கழக ஆட்சியில் திரைப் படங்களுக்கு கேளிக்கை வரி 54 விழுக்காட்டி லிருந்து 40 விழுக்காடாக குறைக்கப்பட்டது.

- 1-8-1998 முதல் கழக ஆட்சியில் இந்த 40 விழுக்காட்டிலிருந்து 30 விழுக்காடாகவும், 2000 முதல் 25 விழுக்காடாகவும் மேலும் குறைக்கப்பட்டது. பத்தாண்டுகளுக்கு முன் வந்த திரைப்படங்களுக்கு கேளிக்கை வரி 40 விழுக்காட்டிலிருந்து 20 விழுக்காடாகக்

குறைக்கப்பட்டது.

- திரைப்படத் துறைக்கு 1-8-98 முதல் ஆண்டுக்கு 40 கோடி ரூபாய் அளவுக்கும், 12-6-2000 முதல் ஆண்டுக்கு 60 கோடி ரூபாய் அளவுக்கும் வரிச் சலுகைகள் தமிழ்த் திரைப்பட வரலாற்றிலேயே இல்லாத அளவிற்கு வழங்கப்பட்டது.

- விற்பனை வரிச் சட்டத்தின்படி, திரைப்படங் களுக்கான உரிமை மாற்றம் மீது 1-4-1986 முதல் 11-11-1999 வரை செலுத்த வேண்டிய வரியினைத் தள்ளுபடி செய்ததுடன், உரிமை மாற்றத்திற்கான விற்பனை வரியை 12-11-1999 முதல் 11 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடு என குறைக்கப்பட்டது. 1-4-2000 முதல் திரைப்படங்கள் குத்தகை மீதான 4 விழுக்காடு விற்பனை வரி அறவே நீக்கப்பட்டது.

இதற்கு மேலும் சலுகைகள் தேவைப்படுவதை நானறிவேன். அவற்றையும் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் தனது கட்சியின் ஆட்சி வாயிலாக வழங்குவதற்கு, கலைத்துறையிலே எனக்குள்ள 50 ஆண்டுக்கு மேற்பட்ட தொடர்பு காரணமாக, நானும் திரையுலகத்தாருடன் இணைந்து இந்த அறிக்கை வாயிலாக பரிந்துரை செய்கிறேன். இது நண்பர் ராமனாதனை முன்னிட்டு அல்ல! அத்துறையில் உள்ள நன்றியுள்ளவர்களை முன்னிட்டு!

அன்புள்ள,

மு.க.

15-12-2002

2860. உறுதியானது மட்டுமல்ல ; உண்மை நிலையும் கூட !

உடன்பிறப்பே,

தமிழகத்தில் மக்கள் விரோத அரசு ஒன்றினை எதிர்த்துப் போரிடும் களத்தில் நின்று கொண்டிருக்கும் கட்சிகள், தங்களுக்குள் கருத்து மோதல் நடத்திக் கொண்டு எதிர்ப்பு அணியை பலவீனப்படுத்துவது கூடாது என்பதைச் கட்டிக்காட்டி; தி.மு.க.வைத் தேவையில்லாமல் வம்புக்கிழுக்கும் கட்சிகளுடன் நாம் மோதிக் கொள்ளப் போவதில்லை என்று கூறியிருந்தேன்.

அதற்கிடையே இன்றைய 17.12.2002 தேதியிட்ட 'தினத்தந்தி'; 'தினமணி' இதழ்களில்; இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி மாநிலத் தலைவர் திரு. நல்லகண்ணு அவர்கள் கூறியதாக முறையே பின்வரும் வாசகங்கள் இடம் பெற்றுள்ளன.

★ "மதச்சார்பற்ற நிலை - மதவாதம் ஆகியவை குறித்து கருணாநிதியினால் இன்னும் உறுதியான நிலை எடுக்க முடியவில்லை ."

★ "மத வெறியா? மத ஒற்றுமையா? என்பதில், கருணாநிதி தெளிவான முடிவுக்கு வர வேண்டும்"

என் மனம் நிறைந்த அன்புக்கும் மரியாதைக்குமுரிய நல்லகண்ணு அவர்களுக்கு நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

மதச்சார்பற்ற நிலை, மதவாதம் குறித்து நான் இன்னமும் உறுதியான நிலை எடுக்கவில்லை என்கிற - நல்லகண்ணு அவர்களின் குற்றச்சாட்டுக்கு இன்றல்ல; 2001ஆம் ஆண்டு செப்டம்பர் 21ஆம் தேதி 'முரசொலி'யிலேயே "மத நல்லிணக்கமா? மதச் சார்பின்மையா?" என்ற தலைப்பில் விளக்கமளித்து, அது பிற ஏடுகளிலும் வெளியிடப்பட்டிருக்கிறது.

அந்த விளக்கத்தை அப்படியே சிந்தாமல் சிதறாமல் இப்போது மீண்டும் நினைவூட்டுகிறேன்.

★

"மதச் சார்பற்றவர்கள் என்றும் மதச் சார்பற்ற அணியினர் என்றும் இன்றைய தினம் தங்களை அடையாளம் காட்டிக் கொள்கிற அரசியல்வாதிகளைக் காண முடிகிறது. இது பற்றிய சில கருத்துக்களை எடுத்துரைப்பதற்கு மதப்பற்றுடைய ஆன்றோர்களும் சான்றோர்களும் என்னை அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஒரு துளியளவும் யாருடைய மனத்தையும் புண்படுத்த வேண்டுமென்பது என் நோக்கமல்ல. வழக்கத்தில் சொல்லிக் கொள்ளப்படுகிற - அல்லது தங்கள் கட்சிகளின் கூட்டணியை அடையாளம் காட்டிக் கொள்கிற ஒரு சொற்றொடராக இப்போது "மதச் சார்பற்ற அணி" என்ற பெயர் பயன்படுத்திக் கொள்ளப்படுகிறது. முதலில் "சார்பு" என்றால் அதற்குப் பொருள் என்ன என்பதைப் புரிந்து கொண்டால் "சார்பற்ற" என்பதற்கான பொருள் எளிதாகப் புரிந்து விடும். "இராமன்" என்ற பெயரைக் கேட்டவுடனே அவரை இந்து மதத்தைச் சார்ந்தவர் என்று கூறி விட முடிகிறது.

"இருதயராஜ்" என்ற பெயர், கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்த ஒருவருக்குரியது எனத் தெரிந்து கொள்கிறோம்.

"இஸ்மாயில்" என்ற பெயருக்குரியவர் ஒரு முஸ்லிம் என்று உறுதிப்படுத்துகிறோம்.

எனவே இராமனாயினும், இருதயராஜாயினும், இஸ்மாயிலாயினும் முறையே இந்து, கிறிஸ்துவ, முஸ்லிம் என்ற மதங்களைச் சார்ந்தவர்களாகத்தான் இருக்கிறார்கள்.

இவர்களில் எவரையும் மதச் சார்பற்றவர் என்று கூறிவிட முடியாது. இராமனைப் பார்த்து, "நீங்கள் மதச் சார்பற்றவரா?" என்று கேட்டால்; "இல்லை ! இல்லை ! நான் இந்து மதம்!" என்கிறார். மதம் பற்றிப் பெரியார் அவர்களிடம் காந்தியடிகளார் விவாதித்த போது "இந்து மதம் என்று எதுவுமில்லையென்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். அதற்கான திட்டவட்டமான விதி இல்லை என்பதையும் ஏற்றுக் கொள்கிறேன். அதனால்தான் இந்துக்கள் என்று நம்மை நாம் கூறிக் கொள்வதின் மூலம் நாம் விரும்பும் முறையில் அதற்கான இலட்சியங்களை நாம் உருவாக்கிக் கொள்ள முடியும்" என்று காந்தியடிகள் கூறியுள்ளதின் அடிப்படையில்தான் "இந்து மதம்" என்று இங்கே நான் குறிப்பிடுகிறேன். இராமனைக் கேட்டது போல இருதயராஜைப் பார்த்து; "நீங்கள் மதச்

சார்பற்றவரா?" என்று கேட்டால் "இல்லை இல்லை! நான் கிறிஸ்தவர்" என்றே பதில் வரும். அதே மாதிரி, இஸ்மாயிலைப் பார்த்து "நீங்கள் மதச் சார்பற்றவரா?" என்று கேட்டாலும் "இல்லை இல்லை நான் முஸ்லிம் மதத்தைச் சார்ந்தவன்" என்ற பதிலே வரும்.

இப்போது இராமனும், இருதயராஜும், இஸ்மாயிலும், மூன்று தனித்தனி அரசியல் கட்சிகளில் இருப்பதாக வைத்துக் கொள்வோம். இவர்கள் மூவரும் சேர்ந்து ஒரு கூட்டணி அமைத்து அதற்கு மதச் சார்பற்ற கூட்டணி என்று பெயர் வைத்துக் கொண்டால் அது எப்படி சரியாக இருக்க முடியும்? மூன்று மதங்களைச் சேர்ந்தவர்கள் இருக்கும் அரசியல் கூட்டணி - "சேர்ந்தவர்கள்" என்பதற்கும் "சார்ந்தவர்கள்" என்பதற்கும் பெரிய அளவுக்குப் பொருள் வேறுபாடு இல்லை எனினும்; மதப் பற்றுடையவர்களைக் கொண்ட அரசியல் கட்சிகளின் கூட்டணிக்கு மதச் சார்பற்ற கூட்டணி பென்று பெயர் சூட்டிக் கொள்வது பொருந்தவில்லை என்பதே என் கருத்தாகும்.

எந்தவொரு மதப்பற்றுக்கும் இடம் தராமல் இருப்போர் அமைத்திடும் கூட்டணிதான் மதச் சார்பற்ற கூட்டணியாக இருக்க முடியும். அதற்காக; மதப்பற்று அற்றவர்கள் கூடி கூட்டணி அமைக்க வேண்டுமென்று நான் கூறுவதாக அர்த்தமல்ல! மத நம்பிக்கையுடைய நிலையில் உள்ள அரசியல் கட்சிகள் அமைத்திடும் கூட்டணியில்; இந்து, முஸ்லிம், கிறிஸ்தவ மதங்களில் பற்றுடையோர் - அம்மதங்களைச் சார்ந்தோர் இடம் பெறும்போது; அந்த அணிக்கு "மதச் சார்பற்ற அணி" என்ற பெயரை விட "மத நல்லிணக்க அணி" என்ற பெயரேதான் பொருந்தக் கூடியதாகும்.

அரசியற் கொள்கைகளில் ஒற்றுமையும் இருக்கலாம், மாறுபாடும் இருக்கலாம்; ஆனால் மதப்பற்றை அறவே துறந்தவர்கள் என்ற அடிப்படையிலே ஓர் அணி அமையுமானால் அதுதான் உண்மையிலேயே மதச் சார்பற்ற அணி என்ற பெயருக்குப் பொருத்தமுடையதாகும்.

எனவே இப்போது அகில இந்திய அளவிலோ அல்லது மாநில அளவிலோ அமைகின்ற கட்சிகளின் கூட்டணிகள் அனைத்துமே மத நல்லிணக்க அணிகளாக இருக்க முடியுமே தவிர

- இருக்கின்றனவே தவிர - எதுவுமே மதச் சார்பற்ற அணியென்று கூறிக் கொள்ளும் நிலையிலே உள்ளவை அல்ல!

எல்லா மதங்களுக்கும் அவைகளுக்குரிய உரிமைகளை அளிப்பதும் - ஒரு மதத்துடன் இன்னொரு மதம் மோதிக் கொள்ளாமல் இருக்க வேண்டுமென்பதும் - மத நல்லிணக்கக் கொள்கையே தவிர, மதச் சார்பற்ற கொள்கை ஆகி விட முடியாது. மதப்பற்றுடைய அரசியல் கட்சிகளுடனே மதச் சார்பற்ற அதாவது மதப்பற்றில்லாத ஓரிரு கட்சிகள் கூட்டணி உறவு கொண்டிருக்கலாம். அதற்காக மொத்தக் கூட்டணியே மதச் சார்பற்ற கூட்டணி ஆகி விடாது. மத நல்லிணக்கக் கூட்டணியாக மட்டுமே இருக்க முடியும்.

உதாரணமாக, கம்யூனிஸ்டுக் கட்சிகள் இடம் பெற்றுள்ள ஒரு கூட்டணி என்றாலும், தி.மு.க., பா.ம.க., ம.தி.மு.க. போன்ற கட்சிகள் இடம் பெற்றுள்ள கூட்டணி என்றாலும் அக்கூட்டணியில் இடம் பெற்றுள்ள கட்சிகளின் எண்ணிக்கை அடிப்படையில் மத நல்லிணக்கக் கூட்டணி என்பதுதான் இரு சார்பிலும் பொருத்தமான பெயரே தவிர; ஒரு அணியில் கம்யூனிஸ்டுகள் இருப்பதாலோ அல்லது ஒரு அணியில் தி.மு.க., பா.ம.க., ம.தி.மு.க. இருப்பதாலோ மதச் சார்பற்ற கூட்டணி என்பது பொருத்தமான பெயராகாது!

மதச் சார்பின்மை என்று கூறிக் கொண்டுள்ள ஒரு அணியில் மத நம்பிக்கையில்லாத கட்சிகளும் மத நம்பிக்கையுடைய கட்சிகளும் இருப்பது போலவே; அந்த அணியினால் மதவாத அணி என்று குறை கூறப்படுகிற அணியிலும் மத நம்பிக்கையற்ற கட்சிகள் இருக்கின்றன என்பதையும்; எண்ணிப் பார்க்கும்போது; மதச் சார்பின்மை என்பது எல்லா மதங்களையும் பொதுவாக நோக்குவது என்று பொருள் கொள்வதற்குப் பதில் எல்லா மதங்களும் ஒன்றுக்கொன்று இணக்கமாக இருப்பது என்ற பொருள் கொண்டு அதற்கேற்ப செயல்படுவதே இன்றைய நிலைக்கு ஏற்றதாகும் என்பதால் “மத நல்லிணக்கம்” என்பதே சரியானதும் பொருத்தமானதுமான சொற்றொடர் ஆகும்.

★

உடன்பிறப்பே, இந்த விளக்கமளித்ததற்கு

இரண்டு நாள் கழித்து அதே ஆண்டு 2001 செப்டம்பர் 24 ஆம் தேதி முரசொலியில் நான் விடையளித்திருந்த கேள்வி பதில் பகுதியையும் நினைவூட்ட விரும்பு கிறேன்.

கேள்வி:- "அரசியலில் மதத்தைக் கலக்கக் கூடாது, நிர்வாகத்தில் மதத்தைக் கலக்கக் கூடாது, நீதியில் மதத்தைக் கலக்கக் கூடாது, கல்வியில் மதம் கூடாது, மதம், தனி நபர் சார்ந்ததாக மட்டுமே இருக்க வேண்டும்'' என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் ஏடு (தீக்கதிர்) எழுதியுள்ள தலையங்கம் குறித்துத் தங்கள் கருத்து என்ன?

பதில்:- நூற்றுக்கு நூறு ஏற்புடைய கருத்து. இந்தக் கருத்தை அப்படியே ஏற்றுக்கொண்டு மதங்களுக்கிடையே மோதுதல்கள் - எரிச்சலூட்டும் இழிவான விமர்சனங்கள் - இவை எதுவும் ஏற்படாமலும் - மதங்களுக்கிடையே அவற்றின் உரிமைகளைப் பாதுகாத்தும்; ஒன்றுக்கொன்று ஏற்றத் தாழ்வு காட்டாமலும் தன்னை ஒரு மதச் சார்பில் அடையாளம் காட்டிக்கொள்ளாமலும் நடைபெறுகிற அரசை, அரசியல் சட்டத்திலேயே 'மதச்சார்பின்மை' என்ற சொல் குறிக்கப்பட்டிருப்பதின் அடிப்படையில் "மதச் சார்பற்ற அரசு " என அழைக்கிறோம்.

ஆனால் அதே நேரத்தில் அரசியல் கட்சிகளுக்கிடையே அணிகள் உருவாகிறபோது; அந்தக் கட்சிகளில் மதப் பற்றுடையவர்களும் தங்களை ஒரு மதச் சார்பில் அடையாளம் காட்டிக் கொள்வோரும் இருப்பதால் அந்த அணியை அப்படியே முழுமையாக "மதச் சார்பற்ற அணி" என்று கூற முடியாமல் "மத நல்லிணக்க அணி" என்று கூறுவதே பொருத்தமானது என்று நான் ஒரு கருத்தைச் சொல்லியிருந்தேன். இதனை கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்கள் ஏற்காமல், கண்டனமும் கேலியும் செய்கிறார்கள்.

தி.மு.க. அணியில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் இருந்த போது அந்தத் தலைவர்கள் இருக்கும் மேடையில் ஏற மாட்டோம் என்று மறுத்தவர்கள் - தி.மு.க. நடத்திய அனைத்துக் கட்சி ஆலோசனைக் கூட்டங்களில் கூட ஒன்றாக அமர்ந்து பேச மாட்டோம் என்று அந்தக் காலத்தில் கழகத் தலைமை அலுவலகமான "அன்பகம்" கட்டிடத்தில் தனி அறையில் அமர்ந்து கொண்டு "முஸ்லிம் லீக்" தலைவர்கள் அந்தக் கூட்டத்திலிருந்து சென்ற பிறகு மட்டுமே அந்த ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள்தான் கம்யூனிஸ்டு தலைவர்கள் என்பதையும்; அந்தக் காலகட்டமெல்லாம் தாண்டித்தான் மதச் சார்பின்மையை மட்டும் பிடிவாதமாகப் பிடித்துக் கொண்டிராமல்; மத நல்லிணக்கத்தையேற்று, அந்தக் கூட்டணியில் தங்களை

இணைத்துக் கொண்டார்கள் என்பது எவரும் மறுக்க இயலாத வரலாறு.

அப்படி இணைந்ததால் தி.மு.க.வின் மதச் சார்பின்மைக் கொள்கைக்கோ, கம்யூனிஸ்டுகளின் மதச் சார்பின்மைக் கொள்கைக்கோ மாசு எதுவும் வந்துவிடவில்லை . மாறாக; இந்து மதச் சார்புடைய கட்சியினரும் இருந்த அந்தக் கூட்டணியில் முஸ்லிம்லீக்கும் சேர்ந்ததால் மத நல்லிணக்க அணியாக அந்த அணி விளங்க முடிந்தது. 1967 தேர்தலுக்கு முன்பு அண்ணா தலைமையில் சென்னை விருகம்பாக்கத்தில் நடைபெற்ற தி.மு.க. மாநாட்டில் சுதந்திராக் கட்சி நிறுவனத் தலைவர் மூதறிஞர் ராஜாஜி, முஸ்லிம் லீக் தலைவர் கண்ணியத்துக்குரிய காயிதே மில்லத் முகமது இஸ்மாயில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தலைவர் திரு . பி. ராமமூர்த்தி, சிலம்புச் செல்வர் திரு. ம.பொ.சி., பார்வார்டு பிளாக் தலைவர் திரு. மூக்கையா தேவர் ஆகியோர் கலந்து கொண்ட அந்த அணி ஜனநாயக அணியாக மட்டுமல்ல; மத நல்லிணக்க அணியாகவுமல்லவா விளங்கியது!

★

நான் எடுத்துக்காட்டியுள்ள என் விளக்கத்திற்கும்; வினா விடையில் தெரிவித்துள்ள கருத்துக்கும் முத்தாய்ப்பாகத் திகழ்வது தந்தை பெரியார் அவர்களின் கருத்தாகும்.

> மதச் சார்பற்ற என்பதற்கு எல்லா மதங்களையும் ஒன்று போலக் கருத வேண்டும் என்று பொருள் கூறுவது அயோக்கியத்தனமாகும். மதச் சார்பற்ற என்றால் எந்த மதத்தையும் சாராத என்பதுதான் பொருள்”
>
> (தந்தை பெரியார்)

எனவே, மதச் சார்பின்மை பற்றிய கொள்கையில் தி.மு.கழகம் உறுதியான நிலை மட்டுமல்ல; உண்மையான நிலையும் எடுத்துள்ளது என்பதை திரு. நல்லக்கண்ணு போன்றவர்களுக்கு மீண்டும் தெளிவுபடுத்திடக் கிடைத்த வாய்ப்பாகவே இதனைக் கருதுகிறேன்.

அன்புள்ள,

மு.க.

18-12-2002

2861. தமிழர் அணி தயாராகட்டும்!

உடன்பிறப்பே,

உலகத் தமிழ் இரண்டாவது மாநாடு, பேரறிஞர் அண்ணா முதலமைச்சராக இருந்த போது, 1968ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் நடைபெற்றபோது, சென்னைக் கடற்கரையில் தமிழ்ச் சான்றோர், ஆன்றோர் சிலைகள் அமைக்கப் பெற்று அந்த மாநாட்டின் பொலிவை மேலும் பல மடங்கு உயர்த்திய உண்மையை உணராதார் எவருமிலர்.

அப்போது வைக்கப்பட்ட சிலைகளில் ஒன்று தான்;

“இவளோ கொங்கச் செல்வி குடமலையாட்டி
தென்றமிழ்ப் பாவை செய்த தவக்கொழுந்து
ஒரு மாமணியா யுலகிற் கோங்கிய
திரு மா மணி”

என இளங்கோவடிகளால் சிறப்பிக்கப்பட்ட கண்ணகியின் சிலையாகும்.

அந்தச் சிலை எவ்வாறு அமைய வேண்டுமென அண்ணா அவர்களும், நானும், நாவலரும், சிலம்புச் செல்வர் ம.பொ.சி.யும் கலந்து பேசி,

கண்ணகி, நீதி கேட்பதற்காகப் பாண்டிய மன்னன் அவைக்குள் நுழைந்த போது, “காவி யுகு நீரும் கையிற் தனிச் சிலம்பும் ஆவி குடி போன அவ்வடிவும் கொண்டு வந்தாள்” என்று இளங்கோவடிகள் சித்தரித்துள்ளவாறே சிலை அமைய வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டு, அவ்வாறே சிலை தயாரிக்கப்பட்ட சிற்பக்கூடத்திற்கு அண்ணாவும், நாவலரும், பேராசிரியரும், நானும் எத்தனையோ முறை சென்று பார்வையிட்டு, திருத்தங்கள் கூறி, அப்படி வைக்கப்பட்டது அந்தச் சிலை.

சிலை அமைக்கப்பட்டு 33 ஆண்டுகள் கழிந்த பிறகு இப்போது யாரோ நிமித்திகர்கள் கூறியுள்ள சோதிடம் அல்லது

வாஸ்து சாத்திரப்படி, அச் சிலையை அகற்றியுள்ள நிகழ்ச்சி நடைபெற்றுள்ளதாக அறியும்போது அதிர்ச்சியால் நெஞ்சம் பதைக்கிறது.

நிமித்திகரின் சோதிடத்தைப் பொய்யாக்குகிறேன் என்று கூறி, அரண்மனை வாழ்வைத் துறந்தார் இளங்கோவடிகள்.

அந்த இளங்கோவடிகள் காவியநாயகியாகக் கண்ணகியைக் கொண்டு தமிழர்களுக்கு அளித்த இலக்கியக் கருவூலம்தான் சிலப்பதிகாரம்.

மதுரையம்பதிக்கு நீதி கேட்க வந்த போதுகூட, அந்த ஈகைவான் கொடியன்னாள், மழை நிகர் கொடை வள்ளல் மாநாய்கன் திருச்செல்வி என்று தன்னைப் பற்றிச் சொல்லிக் கொள்ளாமல், அந்தப் போதிலார் திருவினாள், புறாவுக்கு உடல் தந்து புகழ் பெற்ற மன்னவரின் வரலாற்றை - தேர்க்காலில் மகனையிட்டு நியாயம் காத்த மனுநீதிச் சோழனது பெருங்கதையை - நீதியின் இலக்கணமாகப் பெற்றுப் பெருமை கொண்ட திருமாவளவன் கரிகால் சோழனது பூம்புகாரே எனது ஊர்! பெருவணிகன் மாசாத்துவானின் மருமகள் என்று தமிழச்சிக்கே யுரிய பண்பாடு மாறாமல், பாண்டிய மன்னனிடம் அறிமுகப்படுத்திக் கொண்டாள் என்று சிறப்பிக்கின்ற அந்தச் சிலப்பதிகாரத்தையே இழிவுபடுத்தும் முறையில், சோதிடப் பொய்மைக்கு இடமளித்து கண்ணகி சிலையை, ஏதோ ஒரு பொய்க் காரணம் காட்டி, அகற்றி அந்தச் சிலையிருந்த இடத்தில் புதிய சாலையொன்றையும் அமைத்திருப்பது தமிழ்நாட்டு வரலாற்றில் தாங்க முடியாத அவமானகரமான நிகழ்ச்சியாகும்.

இந்நிகழ்ச்சி குறித்து நெஞ்சம் பதறித் தங்கள் கண்டனத்தை தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் இளங்கோவன், பா.ம.க. நிறுவனர் டாக்டர் இராமதாஸ், மறுமலர்ச்சி தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, பழ. நெடுமாறன், சுப்ரீம் ஸ்டார் சரத்குமார் ஆகியோர் தெரிவித்துள்ளார்கள்.

இந்த வரிசையில் தமிழர் தன்மானம் பேணுகின்ற மற்ற இயக்கங்களின் தலைவர்களும், குறிப்பாகத் தமிழ்ச் சான்றோர்களும், புலவர் பெருமக்களும், கவிஞர்களும் இடம் பெறுவார்கள் என்று நம்புகிறேன்.

மீண்டும் கண்ணகி சிலை, முன்பு அமைக்கப்பட்டிருந்த இடத்திலேயே அமைக்கப்பட வேண்டும்.

இந்த வேண்டுகோள் மறுக்கப்படுமேயானால்,

போராட்டத்தைத் தவிர வேறு வழி என்ன இருக்கிறது?

எங்குற்றான் என் தமிழன்?
இங்குற்ற இழிவுதனை எதிர்ப்பதற்குத்
துணிவின்றிச்

செங்குத்துத் தூணைப் போல்
நிற்கின்றானா?

அங்கத்தில் துடிப்பின்றிக்
கிடக்கின்றானா?

அய்யோ பாவம்! அவனுக்குச்
சங்கத்தில் பாட்டெழுதி
அரங்கேற்றுங்கள்!

தங்கத்தில் சிலையொன்று
அமைத்திடுங்கள்!

என்ற கேள்வி எழும் நிலைமைக்கும், கேலி புரியும் நிலைமைக்கும் ஆளாகாமல் அறப்போர் புரியத் தமிழர் அணி தயாராகட்டும்!

அன்புள்ள,

மு.க.

19-12-2002

2862. இது முறையல்ல; நீதியுமாகாது!

உடன்பிறப்பே,

12 நாட்களுக்கு மேலாகத் தொடர்ந்து நடந்து வருகிற போக்குவரத்துத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தை ஒரு முடிவுக்குக் கொண்டுவந்து, பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்க்கு நிம்மதியையும் - லட்சக்கணக்கான பொதுமக்களுக்கு ஓர் ஆறுதலையும் ஏற்படுத்த அ.தி.மு.க. அரசு முன்வரவேண்டுமென்றும் - அதற்கேற்ற வகையில் அரசுத்தரப்பிலும், தொழிலாளர் தரப்பிலும் சிறிது விட்டுக் கொடுத்துப் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்றும் அறிக்கை வாயிலாகக் கேட்டுக் கொண்டிருந்தேன்.

கடந்த ஆண்டுகளில் 20 சதவிகிதம் போனஸ் வாங்கிய தொழிலாளர்கள், இந்த ஆண்டு அதனைத் தவணை முறையில் பெற்றிட வழி வகுத்து, உடனடியாக 10 சதவிகிதமும் - எஞ்சியுள்ள 10 சதவிகித போனசைத் தவணை முறையிலும் வழங்குவதற்கு அரசு முன்வர வேண்டுமென்று கருத்து வெளியிட்டிருந்தேன். இதனை ஏற்றுக்கொள்வதாகத் தொழிலாளர் தரப்பிலிருந்து எனக்குக் கூறப்பட்டுள்ளது.

எனவே இதில் வீம்புக்கோ, வீண்பிடிவாதத்திற்கோ இரு தரப்பிலும் இடமின்றி, சுமுகத் தீர்வு காண்பதின் மூலம், நாள்தோறும் பொது மக்கள் படும் கஷ்டத்திலிருந்து அவர்கள் விடுபட முடியும் என்பதுடன், தொழிலாளர்களும் முப்பதாயிரத்துக்கு மேற்பட்டோர் சிறைக் கோட்டங்களில் சீரழிவதிலிருந்து விடுதலையாகிட முடியும்.

மாநில முழுதும், எல்லா நகரங்களிலும், ஊர்களிலும் ஓர் அமைதியற்ற நிலைமை தொடர்ந்திட வேண்டுமா என்பதை அரசினர் எண்ணிப் பார்த்திட வேண்டும்.

மாநிலக் காவல்துறை தலைவர் செய்தியாளர்களுக்குக் கொடுத்த தகவலின்படியே, முப்பதாயிரத்துக்கு மேற்பட்ட தொழிலாளர்கள் கைதாகி ரிமாண்ட் செய்யப்பட்டுள்ளனர்

என்கிறபோது, இந்தப் போராட்டம் தொடர்ந்தால் சிறைச்சாலைகளில் இடம் இல்லாமற்போகும் என்பதுடன், பல்வேறு சுகாதாரக் கேடுகளும், நோய் நொடிகளும் அந்தத் தொழிலாளர்களை வாட்டிடும் வேதனையும் உருவாகக் கூடும்.

தொழிலாளர் வீட்டுப் பெண்களும் இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டு, அவர்களும் சிறை செல்லும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதற்கெல்லாம் ஒரு நல்ல முடிவு காண்பதற்குப் பதிலாக, தொழிலாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமென எச்சரிப்பதும், இரண்டாயிரம் கோடி ரூபாய் போக்குவரத்துக் கழகத்திற்கு நஷ்டம் என்று கணக்குக் காட்டுவதும் பிரச்சினையைத் தீர்க்கக் கூடியவை அல்ல!

தனியார் பஸ்கள் லாபத்தில் இயங்குகின்றன என்றால், அவர்கள் லாபகரமான வழித்தடங்களில் மட்டுமே குறியாக இருந்து, அவற்றில் பஸ்களை ஓட்டுகின்றனர் என்பதை மறந்து விடக் கூடாது.

அரசு பஸ்கள் என்கிற போது லாபக் கணக்கு பார்க்காமல், நஷ்டம் வருகிற வழித் தடங்களில் கூட கிராமப்புறத்து மக்களின் போக்குவரத்து வசதியைக் கருத்திற் கொண்டு, பஸ்களை இயக்க வேண்டியுள்ளது என்பது, அலட்சியப்படுத்தக்கூடிய ஒன்றல்ல.

நஷ்டக்கணக்கு 2035.02 கோடி ரூபாய் என்ற விபரம் இன்று சில பத்திரிகைகளில் வந்துள்ளதைப் பார்த்தால், ஆண்டுதோறும் எனக் கணக்கெடுத்துக் கொண்டால் 1991-92ல் 21.78 கோடி ரூபாய் நஷ்டம், 92-93ல் 50.46 கோடி ரூபாய் நஷ்டம், 93-94ல் 48.03 கோடி ரூபாய் நஷ்டம், 94-95ல் 41.21 கோடி ரூபாய் நஷ்டம், 95-96ல் 207.37 கோடி ரூபாய் நஷ்டம், 1996-97ல் 310.67 கோடி ரூபாய் நஷ்டம், 97-98ல் 229.37 கோடி ரூபாய் நஷ்டம், 98-99ல் 411.39 கோடி ரூபாய் நஷ்டம், 99-2000ல் 317.77 கோடி ரூபாய் நஷ்டம், 2000-2001ல் 232.84 கோடி ரூபாய் நஷ்டம் -ஆக மொத்தம் 1870.89 கோடி ரூபாய் நஷ்டத்துடன் ஆரம்பத்தில் 1991க்கு முன்பு இருந்த நஷ்டம் 164.13 கோடி ரூபாயையும் சேர்த்தால் 2035.02 கோடி ரூபாய் நஷ்டம் என்றாகிறது.

இப்படிப் படிப்படியாக உயர்ந்த நஷ்டக் கணக்கை ஏதோ தி.மு.க. ஆட்சியில்தான் ஏற்பட்டதாகக்கூறி, அதையும் போனஸ் பிரச்சினையையும் இணைத்துப் பேசுவது எந்த வகையிலும் சரியாகாது!

ஏனெனில், 96-97ல் அந்த ஆண்டுக்கு 310 கோடி ரூபாய் நஷ்டக் கணக்கு இருந்த போதே, 18 சதவீதம் போனசும்,97-98ல் 229 கோடி ரூபாய் நஷ்டம் இருந்த போதே, 19 சதவீதம் போனசும், அடுத்தடுத்த ஆண்டுகளில் ஒவ்வொரு ஆண்டும் 20 சதவீதம் போனசும் தி.மு.கழக ஆட்சியில் தொடர்ந்து வழங்கப் பட்டிருக்கிறது.

மொத்த நஷ்டக் கணக்கு என்று பார்த்தால்கூட, 98-99ஆம் ஆண்டு வரை 1,484.41 கோடி ரூபாய் நஷ்டம் என்ற மொத்த கணக்கு இருந்த நிலையில்தான் 20 சதவீத போனஸ் வழங்கப்பட்டது. அவ்வளவு ஏன்? 2035 கோடி ரூபாய் அளவுக்கு 31-3-2001 வரையில் நஷ்டம் இருந்த போதுதான் கடந்த ஆண்டு கழக ஆட்சியில் 20 சதவீதம் போனஸ் வழங்கப்பட்டது. எனவே 10 வருட நஷ்டக் கணக்கை மொத்தமாக எடுத்துக் கொண்டு, போனஸ் பிரச்சினையில் இந்த அரசு வாதம் செய்வது எள்ளளவும் எடுபடக் கூடியதல்ல!

1996க்குப் பிறகு 9,681 புதிய பேருந்துகள் கழக ஆட்சிக் காலத்திலே ஐந்தே ஆண்டுகளில் வாங்கப்பட்டிருக்கின்றன. மத்திய அரசு அ.தி.மு.க.ஆட்சிக் காலத்தில் லிட்டர் ஒன்றுக்கு 2.38 ரூபாய் அளவிற்கு மட்டுமே டீசல் விலையை உயர்த்தியது என்பதற்கு மாறாக, 1996க்குப் பிறகு கழக ஆட்சிக் காலத்தில் டீசல் விலை லிட்டர் ஒன்றுக்கு 10.21 ரூபாய் அதிகமாக உயர்த்தப்பட்டது. மூன்றாண்டுக்கு ஒரு முறை தொழிற்சங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி ஒப்பந்தம் செய்வது என்ற அடிப்படையில், அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 300 ரூபாய் முதல் 520 ரூபாய் வரை தான் ஊதிய உயர்வு வழங்கப்பட்டது. ஆனால் 1996க்குப் பிறகு கழக ஆட்சிக் காலத்தில் 500 ரூபாய் முதல் 1850 ரூபாய் வரை ஊதிய உயர்வு தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டது. நிர்வாகத்தில் சிக்கனம் கடைப்பிடிக்கப்பட்டிருந்தும் கூட, இந்தச் செலவினங்கள் தவிர்க்க முடியாதவை என்பதை எவரும் எளிதில் புரிந்து கொள்ள இயலும்.

எனவே தவிர்க்க முடியாத பல்வேறு காரணங்களால், ஆண்டுதோறும் ஏற்பட்ட இழப்பைப் பூதாகாரமாகக் கூட்டிப் பெருக்கிக் காட்டி, அதனைத் தொழிலாளியின் தலையில் கட்டி, அவர்களைத் தண்டிப்பது என்பது முறையல்ல, நீதியுமாகாது!

பொது மக்களுக்கான நன்மைகளுக்கு பொறுப்பேற்க வேண்டிய அரசு என்ற முறையில், கல்வி, மருத்துவம் ஆகியவற்றுக்குச் செலவிடுவது போல முழுமையாக இல்லாவிடினும் ஓரளவு நிதியிழப்பைச் சமாளித்துக் கொண்டு, பொது மக்களுக்கான போக்குவரத்து வசதியையும் செய்ய வேண்டிய கடமை அரசுக்கு இருக்கிறது.

மக்கள் நல்வாழ்வுக்கான எந்தவொரு திட்டமானாலும், அதனைச் செயல்படுத்தப் பணியாற்றிடும் அலுவலர் மற்றும் தொழிலாளர்க்குத் தரப்படும் ஊதியத்தையும் இணைத்துத்தான் கணக்கிடப்படுவதால் அதுவும் திட்டச் செலவேயாகிறது என்று நான் பல முறை கருத்தறிவித்திருக்கிறேன். அந்தக் கருத்தின்படி பார்த்தால், போக்குவரத்துக் கழகங்களின் நஷ்டக் கணக்கைக் காட்டி அந்தத் தொழிலாளர்களின் போனஸ் பிரச்சினையில் கடினமான நிலையெடுத்துப் பிடிவாதம் காட்டுவது முற்றிலும் தவறான செயலாகும்.

இருப்பினும், இப்போது உருவாகி விட்ட இந்தச் சூழ்நிலையில், இரு தரப்பினரும் விட்டுக் கொடுத்துப் பிரச்சினைக்கு நல்ல முடிவு காண்பதே வரவேற்கத் தக்கதாக இருக்கும்.

இந்தக் கருத்து அலட்சியப்படுத்தப்படுமேயானால், அனைத்துத் தொழிற்சங்கங்களும் இணைந்து 23-11-2001 அன்று நடத்தவிருக்கின்ற பொது வேலை நிறுத்தத்திற்கு, தி.மு. கழகம் ஏற்கனவே உறுதியளித்துள்ளவாறு ஆதரவு தரும் என்பதுடன், ஆங்காங்குள்ள கழக அமைப்புகளும், குறிப்பாக கழகச் சார்புடைய தொழிற்சங்க அமைப்புகளும் ஆதரவு தருமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

அன்புள்ள,

மு.க.

21-12-2002

2863. ஒற்றுமை ஓங்கட்டும் ; ஓநாய்கள் ஓடட்டும்!

உடன்பிறப்பே,

கடற்கரை நடைபாதையில் போய்க்கொண்டிருக்கிறோம்; அதேபாதையில் நம் எதிரே வருகிற இருவர் நம்மைப் பார்த்து ஏதோ பேசிக்கொள்கிறார்கள் பேசுவது மட்டுமல்ல, லேசாகவும் சிரித்துக் கொள்கிறார்கள். இருவரில் ஒருவர் நமது முகத்தையே ஏற இறங்கப் பார்க்கிறார். நமக்கே சந்தேகம் வந்துவிடுகிறது. ஒருவேளை நமது மூக்குக்கண்ணாடி சரியாகப் பொருந்தாமல் வளைந்து கிடக்கிறதோ என்று. நமக்கு நாமே நமது மூக்குக்கண்ணாடியை சரி செய்துகொண்டு அந்தப் பாதையில் தொடர்ந்து நடக்கிறோம்.

சிறிது தொலைவு சென்றதும் இரண்டு மூன்று பேர் நடுத்தர வயதினர், நம்மைப் பார்த்துவிட்டு அவர்களுக்குள்ளேயே உரையாடிக்கொண்டு போகிறார்கள். அது நமது காதுகளிலும் விழுகிறது.

“என்னய்யா, இவனுங்க இன்னைக்கு கடற்கரையிலே நடைப் பயிற்சிக்கு வந்துட்டானுங்க?”

“ஆமாம்! வேடிக்கையாக இருக்கு! ஒன்று சேரவே மாட்டானுங்கன்னு மகிழ்ச்சியா இருந்தோம்; இன்னைக்கு கூட்டமா வந்துட்டானுங்க! குதூகலமா வேற வந்துட்டானுங்க! இவனுங்க சேரமாட்டானுங்கன்னு நினைச்ச நமக்குத்தான் நெஞ்சிலே சவுக்கடி விழுந்திருக்கு! ஆமாம்; இப்ப எதுக்கு சேந்தானுங்க? எப்படி சேந்தானுங்க?”

“ஏன்ய்யா - அஞ்சு விரல் கையிலே இருந்தா அஞ்சும் ஒட்டிகிட்டு ஒண்ணாவா இருக்கு. ஆனால் சமயம் வரும்போது அஞ்சு விரலும் ஒண்ணா சேர்ந்து தானே ஒரு பளுவைத் தூக்குது! ஒரு பகையின் மூக்கை உடைக்குது!”

“ஓ! அப்படி ஒரு நோக்கத்துக்காக சேர்ந்துருக்காங்களா? என்ன அப்படி ஒரு நோக்கம்?”

“ஊர் மக்கள் உபத்திரவம் போக்க! ஊர் கெடுக்கிற ஊதாரிகளை ஒழிக்க ஒற்றுமையா இருக்கிறது மூலமே; அவுங்களையெல்லாம் ஓட ஓட விரட்டினதா ஆயிடும் - அதுக்காகத்தான் அவுங்க தலைமை ஆணையிட்டு - “தம்பிகளே! கடுகுகளை மலையாக்கிக் கொண்டு கசப்பை வளர்த்துக் கொள்ளாமல் - உங்கள் எதிரே மலைகள்போல் குவிந்திருக்கும் குப்பை மேடுகளைக் காலால் எற்றி அகற்றுங்கள்” என்று கூறியிருக்கிறதாம்”,

“எவ்வளவு நாளைக்கு இந்த ஒற்றுமையும் உறவும் நிலைக்கப் போகுதாம்? நாரதர் வேலை செய்றதுக்குன்னே சில பத்திரிகைகள் இருக்குதே - அந்தப் பத்திரிகைகள் ஒருத்தருக்கொருத்தரை முள்ளுவச்சு முடுக்கிவிட்டு மோதிக்கொள்ளச் செய்திடாதா?”

“நாரதர் கலகம் நன்மையிலேதான் முடியும்னு புராணிகர்களே சொல்லுவாங்களே; நீங்க சொல்ற பேப்பர்கள் பிராமின் பேப்பர்களைச் சொல்றிங்களா?”

“பிராமின் பேப்பர்களையும் சிலதை சொல்றேன் - நான்பிராமின்னு சொல்லிகிட்டு, நானும் பிராமின் தான்னு காட்டிக்கிற பேப்பர்காரர்களையும் சொல்றேன். அந்த மாதிரி டைப் ஆளுங்க சும்மான்னு இருக்க மாட்டாங்க - பொழுதுக்கும் ஒருத்தருக்கொருத்தர் சண்டை போட்டுகிட்டு இருந்திட்டு - பொது விவகாரம் - பொது எதிரியை எதிர்ப்பதுன்னு வரும்போது ஒன்றுகூடி கிளம்பினா, காந்தாரி வயிறு மாதிரி சில கடுதாசுகளுக்கு நெஞ்சு எரிய ஆரம்பிச்சு; கதை கட்டிவிட ஆரம்பிக்கும். அதையெல்லாம், இந்தத் தம்பிங்க சமாளிப்பாங்களா?”

“சமாளிப்பாங்க ! சாக்ரடீஸ் சொன்னாரே; ‘உன்னையே நீ அறிவாய்’ என்று! அதுமாதிரி அவுங்களை அவுங்களே புரிஞ்சுகிட்டு - பால பாடத்திலே படிச்சிருப்பாங்களே - விறகு குச்சிகள் ஒருகட்டாக இருக்கும்போது ஒடிக்க முடியலே - தனித்தனி குச்சியா ஆனதும் சுலபமா ஒடிக்க முடிஞ்சதுன்னு. அதையும் ஞாபகம் வச்சுகிட்டு; அதே போல நாலு எருதுகள் ஒன்றாக இருந்தபோது எதிர்க்க முடியாம பயந்த சிங்கம்; அந்த எருதுகள் சண்டை போட்டுக்கொண்டு தனித்தனியா ஆனதும் பாய்ந்து கொன்றது என்று - அதையும் மறந்துடாம நடந்துகிட்டாங்கன்னா;

இவுங்க தலையிலே இருக்கிற ஒரு ரோமத்தைக்கூட எதிரியாலே அசைக்க முடியாதுங்கிறதை அனுபவ ரீதியா உணருவாங்க!"

உடன்பிறப்பே; என்ன ஆச்சரியத்துடன் என்னைப் பார்க்கிறாய்? கால்வலியால் கடற்கரைப் பக்கமே போகாமல் இருந்தவன்; இப்போது திடீரெனக் கடற்கரை நடைபாதைக்குப் போய் - அங்கே நம்முடைய கழகத்தினர் ஒன்றுசேர்ந்து சென்றதையும், அதை இருவர் வியப்புடன் நோக்கியதையும், வேறு சிலர் அது பற்றி விமர்சன விரிவுரையே ஆற்றியதையும் வரி விடாமல் அப்படியே குறிப்பிடுகிறானே என்று தானே அப்படி வியப்பு மேலிடப் பார்க்கிறாய்!

எந்த ஒரு குடும்பத்திலும் ஆரம்பத்தில் ஒருவர் இருவராக இருந்து, பிறகு தாத்தா - பாட்டி, அப்பா, அம்மா, மகன்கள், மகள்கள், பேரன் பேத்திகள், கொள்ளுப்பேரன் பேர்த்தி என்று அந்தக் குடும்பம் ஆல்போல் தழைத்து விடுமேயானால் - "ஆல்;" விழுதுகளுடன் ஒரு மரமாக நின்று விடும்! ஆனால் "ஆள்;" விழுதுகளுடன் ஒரு மரமாக நிற்க முடியாமல்; விழுதுகளே மரங்களாகித் தனித்தனியே மரங்களாக நிற்பது என்பதும் இயற்கைதானே! நாம் காண்பதும் தானே!

விழுதுகள் இணைந்து எத்தனை மரமாக நிற்பினும் எல்லாமே ஆலின் ஒரே இனம்தானே! அதுபோல நாமும் இன உணர்வில் ஒரே இனம்தானே! அந்த உணர்வு மட்டும் பட்டுப் போகாமல், பட்டுப்போக இடம் தராமல் பாச உணர்வுடன் தலைமைக் கழக ஆணைப்படி, வரும் 27ஆம் நாள் அமைதிப்படையை அறப்போர்ப்படையை ஆங்காங்கு நடத்திக் காட்டுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

★ மனித உரிமை பறிக்கும் மத மாற்றத் தடைச் சட்டம்

★ பஸ் தொழிலாளியைப் பட்டினி போடப் பஸ்கள் தனியார் மயம்

★ ரேஷன் அரிசி விலையோ ஆறு ரூபாய் வரை உயர்வு

★ அத்தியாவசியப் பண்ட விலை விஷம்போல் ஏற்றம்

★ விவசாயிகளின் வயிற்றில் அடிக்க இலவச மின்சாரத்தை ரத்து செய்யும் திட்டம்.

இவ்வாறு
அநியாயச் சட்டங்களையும்
திட்டங்களையும் தாங்கமுடியாமல்
அவதிக்குள்ளாகி
அல்லற்படும் - மக்களின்

அவதியை வெளிப்படுத்திக்காட்ட
அராஜக ஆட்சியைக் கண்டித்திட

மாவட்டத் தலைநகர்களில்
வட்டத் தலைநகர்களில்

தலைமைக் கழகம் அறிவித்துள்ள விபரப்படி தி.மு. கழகப் பேரணிகளும், அமைதி ஆர்ப்பாட்டங்களும் நடைபெறுகின்றன. அந்நாள்தான் டிசம்பர் 27- உடன்பிறப்புகள் ஒற்றுமையுடன் அணி வகுக்க வேண்டிய நாள் - தமிழகத்தைப் பிடித்த பிணி தீர்க்க - தலை நிமிர்ந்து வீறுநடை போட வேண்டிய நாள்

கலகக்காரர் பேச்சுக்கும் எழுத்துக்கும் காது கொடுக்காமல் - அதில் கவனம் செலுத்தாமல்

நமது குடும்பத்திற்குள் எட்டிப் பார்த்து ஓட்டுக் கேட்கும் செவிட்டு சைத்தான்களின் வதந்தி பரப்பும் வக்கிரச் செயல்களுக்கு வளைந்து கொடுக்காமல்

“வாகை சூடுவோம் - வஞ்சகத்தைப்
பந்தாடுவோம். வாரீர்! வாரீர்!”

என அனைத்து உடன்பிறப்புகளையும் அழைத்து

அணியை அலைகடலென ஆக்கிடுவோம் -

உடன் எழுக உறுதி பூணுக உண்மை என்றும் வெல்க

உடன்பிறப்பே, கவனம். கவனம்!!

ஒற்றுமை ஓங்கட்டும்;

ஓநாய்கள் ஓடட்டும்!

அன்புள்ள,

மு.க.

23-12-2002

2864. தி.மு.க. பேரணி அமைதி போராட்டம் 2

பாளையங்கோட்டையிலிருந்து

ஒரு பகுத்தறிவு முரசம் !

உடன்பிறப்பே,

நேற்றைய கடிதத்தில் வரும் டிசம்பர் 27-ல் தி.மு.கழகச் சார்பில் மாவட்டத் தலைநகரங்களிலும், வட்டத் தலைநகர்களிலும் நடைபெற இருக்கிற மகத்தான மக்கள் எழுச்சியை உணர்த்துகின்ற பேரணி ஆர்ப்பாட்டம் எதற்காக என்பதையும் விளக்கி- நமது பேரணிகள் ஆங்காங்கு கட்டுப்பாடு குலையாமலும் கசப்புணர்வுக்கு இடம் தராமலும் கடமையொன்றையே குறிக்கோளாகக் கொண்டு நடைபெற வேண்டுமென உன்னையும் ஏனைய உடன்பிறப்புகளையும் கேட்டுக் கொண்டிருந்தேன்.

அந்த நாளில் நாம் எடுத்து விளக்கும் முக்கியமான பிரச்சினைகளில் ஒன்றுதான் மதமாற்றத் தடை சட்டத்தின் மாய்மாலத்தை வெளிப்படுத்துவதாகும்.

எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்த போது மண்டைக்காடு மதக் கலவரத்தையொட்டிப் பரிந்துரைக்கப்பட்ட ஒன்றை; அவர் சட்டமாக நிறைவேற்றி நடைமுறைப்படுத்த எண்ணிடாமல் அவராலேயே கிடப்பிலே போடப்பட்டிருந்ததை ஏறத்தாழ 15 ஆண்டுகளுக்குப் பிறகு எடுத்துத் தூசி தட்டி, எதிர்க்கட்சியினர் மற்றும் சிறுபான்மை மக்களின் பிரதிநிதிகள், தலித் அமைப்புகள் அத்தனை பகுதியிலுமிருந்து வந்திடும் எதிர்ப்பைத் துச்சமெனக் கருதி சட்டமாகக் கொண்டு வந்து இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்களுக்கும் வழிகாட்டக்கூடிய சட்டம் என அ.தி.மு.க. அரசு அறிவித்த பிறகு; தமிழ்நாட்டு மக்கள் அலறித் துடித்து "அய்யகோ! மீண்டும் ஆரியமாயையா? அதன் ஆதிக்கமா?" என அகல விழி திறந்து கேட்க ஆரம்பித்துள்ளனர்.

எப்படியும் 'கேட்டினும் ஒரு நன்மையுண்டு' என்பதே போல் மீண்டும் திராவிட இயக்கம் பற்றியும் - அந்த இயக்கம்

அரசியலுடன்கூட கடவுள், மதம், சாதிப் பிரிவுகள் - மூடநம்பிக்கை என்பன போன்றவற்றில் கடைப்பிடிக்கும் கொள்கையும்; இன்றைய தினம் நாடு தழுவிய விவாதத்திற்கு வந்துள்ளன. இந்த விவாதத்தின் மூலம் பெரியாரும் அண்ணாவும் மற்றும் முற்போக்கு முனைப்பு கொண்ட தலைவர்களும் சான்றோர்களும் ஏற்றி வைத்த பகுத்தறிவு விளக்கின் வெளிச்சம் பரவிட வழியேற்பட்டிருப்பது, மிகுந்த மகிழ்ச்சியளிக்கிற விஷயமாகும்.

செல்வி ஜெயலலிதா கொண்டு வந்துள்ள மத மாற்றத் தடைச் சட்டம் பற்றி மாற்றுக் கருத்துக்களை எடுத்து வைக்கும் கூட்டங்கள் என்ன, ஏடுகளில் நடத்தப்படும் விவாதங்கள் என்ன; தொலைக்காட்சிகளில் நடைபெறும் நேருக்கு நேர் நிகழ்ச்சிகள் என்ன; இவற்றையெல்லாம் காதில் மட்டுமே வாங்கிக் கொள்ளாமல், கருத்திலும் தேக்கி வைத்து - அவற்றைச் செயல்படுத்திடக் காளையர் பட்டாளம் ஆங்காங்கு எழுகின்ற காட்சியினையும் காண முடிகிறதென்றால்; கேட்டினும் ஒரு நன்மை என்பது மெய்ப்பிக்கப்படும் பொன்மொழியாகவே திகழ்கிறது என்பேன்.

நாடு தழுவிய இந்த விவாத அரங்கில்; இதோ ஒரு சிறிய புத்தகம் எனக்குக் கிடைத்தது. ஐந்து ரூபாய் விலையில் அழகான அச்சுக்கோப்புடன், நெல்லை பாளையங்கோட்டை - "யாதுமாகி" என்ற வெளியீட்டு நிறுவனத்தினர் அனுப்பி வைத்துள்ளனர்.

அந்தப் புத்தகத்தில்; "இந்துத் தலைவர்களிடையே 'தலித்' பற்றியதான பார்வை தற்போது மாறியிருக்கிறதா?" என ஒரு கேள்வி கேட்டு அதற்குப் பதிலும் தரப்பட்டுள்ளது.

> "அவர்கள் மாறியதாகக் காட்டிக் கொள்கிறார்கள். இன்னும் இந்துத் தலைவர்களிடையேகூட சங்கராச் சாரியார் என்ன சொல்கிறார்? 'அம்பேத்கரை பின்பற்றும் மக்கள்' என்கிறார். வெளிப்படையாகப் பெயர் சொல்லக்கூட அவருக்கு மனமில்லை.
>
> இவர்கள் சுத்தமாக இல்லையென்று ஒரு காலத்திலே சொன்னார்கள். இப்பொழுது எதிர்ப்பு வந்துவிட்டதால் அதை விட்டு விட்டார்கள். யாருடைய சுத்தம் பற்றி யார் பேசுவது? அழுக்குகளை உரமாக்கி அழகான பயிர்களை உருவாக்கும் மனிதன் அசுத்தமானவன். மடாதிபதி சுத்தமானவரா? அசுத்தம் என்பது உடல்

உழைப்பை மதிக்காத அதை கரண்டி வாழுபவரின் பேச்சாகும். 'திரௌபதி சுத்தமாக இருந்தா ஆபத்திலே கிருஷ்ணனைக் கூப்பிட்டாள்?

கூப்பிட்டவுடன் உதவிக்கு அவர் வரவில்லையா' என்று கேட்கிறார்களே வைணவர்கள். இந்தக் கேள்விக்கு சங்கராச்சாரியார் பதில் சொல்வாரா?

நூற்றுக்கு இருபது பேராக இருக்கிற தலித் மக்கள் மதம் மாறிப்போய் விடவும் கூடாது. இருக்கிற இடத்திலே 'இந்து' என்ற பெயரோடு தலித்துக ளும் பிற்படுத்தப்பட்ட மக்களும் பார்ப்பனர்களின் ஆன்மிக அதிகாரத்தை ஏற்றுக் கொள்ளவேண்டும். பங்காரு அடிகளார் போலப் புதிய நெறிகளைக் கண்டு பிடிக்கக்கூடாது. இதுதான் அவரது எண்ணமாகும்.

தமிழ்நாட்டில் மதச் சிறுபான்மை சமூகங்களுடைய உருவாக்கம் என்ன? வட இந்தியாவைப் போல அல்ல இங்கே. மிகப் பெரிய கலைச் செல்வங்கள் உடைய கோயில்கள் இருக்கின்றனவே. இவற்றின் மீது இவற்றை உருவாக்கி விட்டு இன்றைக்கு வேறு மதத்தில் இருக்கிற மக்களுக்கு ஒரு பங்கு இருந்ததல்லவா? அப்படியானால் அவர்கள் இதையெல்லாம் விட்டுவிட்டு ஏன் போனார்கள்? போகவில்லை. அவர்கள் துரத்தப்பட்டார்கள் என்பதுதான் உண்மை.

மழையிலும், வெயிலிலும் நின்று கொண்டு இருக்கிற மக்கள் கோயிலுக்குள் நுழைய முடியாது. மழைக்குக்கூட நுழைய முடியாது. ஏனெனில் சாதியினால் தாழ்ந்தவர்கள். எந்தக் கோயில் திற ந்திருந்ததோ அந்தக் கோயிலுக்கு அவர்கள் போய்விட்டார்கள். எனவே 'இங்கிருந்து துரத்தப்பட்டவர்கள்',

அன்புள்ள,

மு.க.

24-12-2002

2865. தி.மு.க. பேரணி அமைதி போராட்டம் 3

பாரதி பாடிய வெவ்வேறு நீதிகள்;
ஏன் ? எதற்காக ?

உடன்பிறப்பே,

டிசம்பர் 27ஆம் நாளுக்கு இடையில் இன்னும் இரண்டு நாட்களே இருக்கின்றன. ஆங்காங்கு மாவட்டத் தலைநகரங்களிலும், வட்டத் தலைநகரங்களிலும் கழகப் பேரணியும் ஆர்ப்பாட்டமும் அறவழியிலும் அண்ணா கற்பித்த கட்டுப்பாட்டு உணர்வுடனும் மக்களின் எழுச்சியை மாநிலமாளுபவர்களின் மண்டையில் உறைக்குமளவுக்குக் காட்டிட நமது மண்டிலக் கழகங்களின் தளபதிகளும் மாவட்டக் கழகத் தளகர்த்தர்களும் ஒன்றியக் கழக, கிளைக் கழக மற்றும் பல்வேறு கழக அணிகளின் வீரர்களுடன் கலந்து பேசி ஒருங்கிணைந்து செயல்படுவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

இன்றைக்கா, நேற்றைக்கா இந்த இயக்கத்தின் தொடக்கக் காலத்திலிருந்து நம்மிலே பலர், அடியெடுத்து வைத்ததே அறப்போர்க்களத்தில்தானே! அதனால் நாம் ஈடுபடும் களங்களில் கடமைக்கும், கண்ணியத்துக்கும், கட்டுப்பாட்டுக்கும் இனிமேல் தான் வகுப்பு நடத்திப் பயிற்சி கொடுக்க வேண்டும் என்றில்லாமல் - பயிற்சி மிகப்பெற்றுள்ள பாசறை வீரர்களும் வீராங்கனைகளும் 27ந்தேதி பேரணி, ஆர்ப்பாட்டங்களை பெருமை பொங்கிட நடத்திடுவர் என்பதில் கிஞ்சிற்றும் அய்யமில்லை.

பேரணியின் குறிக்கோளில் ஒன்றை நேற்று விளக்கியிருந்தேன், மதமாற்றத் தடைச் சட்டத்தை நாம் எதிர்ப்பதை திசை திருப்பி; மீண்டும் 'அவாள்' ஆதிக்கத்திற்கு "சிரஞ்சீவி"த்தன்மை உண்டாக்கிக் கொள்வதற்காக நம்மை 'இந்துக்களின் விரோதி' என்று குற்றஞ்சாட்டி குழப்படி செய்ய முனைகிறது குள்ளநரிக் கூட்டம்.

இந்து மதத்திலிருந்து வேறு மதத்திற்கு மாறிட வேண்டுமென்ற எண்ணம் ஏன் ஏற்படுகிறது? இங்கு வேரூன்றி விஷம் கக்கும் தீண்டாமைக் கொடுமையும்; தமிழனின் தாய்மொழியாம் - அந்த உயிர்மொழி கூட ஆண்டவனை அர்ச்சனை செய்வதற்கு அருகதை உடையதல்ல என்று கூறும் ஆணவமும்; தன்மானத்துடன் சிந்திக்கும் ஒருவனை யாருமே வலியுறுத்தாமல் இந்துமதத்தை விட்டு வேறு மதத்திற்கு செல்லலாம் என்று முடிவெடுத்திடத்தானே தூண்டும். அப்படி விருப்பப்பட்டுச் செயல்படுகிறவர்களையும் - கட்டாய மத மாற்றம் என்று கூறித் தண்டிக்க வழி காணும் தகாப்போக்கு இந்த அரசில் இடம் பெறாது என்று எவரேனும் கணிக்க முடியுமா?

பொடா சட்டம் நிறைவேற்றியதின் நோக்க மென்ன? ஆனால் அது தமிழ்நாட்டில் முறையாகச் செயல்படுத்தப்பட்டதா?

அரசியல் ரீதியாகவும், தனிப்பட்ட காழ்ப்பு காரணமாகவும் மதமாற்றத் தடைச் சட்டத்தைப் பிரயோகிக்கும் நிலையைத் தடுத்திடத்தான்; நாம் இந்தச் சட்டத்தைக் கடுமையாகக் கண்டித்து எதிர்க்கிறோம்.

பெரும்பாலும் இஸ்லாமியர் எவரும் மதம் மாறுவதில்லை. கிறிஸ்தவர் யாரும் மதம் மாறுவதில்லை. அந்த அவசியம் அந்த மதங்களில் இருப்போர்க்கு ஏற்படுவதில்லை. ஏதோ உதாரணத்திற்கு வேண்டுமானால் ஓரிருவர் அல்லது ஓரிரு நிகழ்வுகளைக் காட்ட முடியும். ஆனால் "மத மாற்றம்" என்கிற போது பெரும்பாலும் இந்துக்கள் மதம் மாறுவது என்பதே நினைவுக்கு வருவது; என்ன காரணத்தினால் என்பதைச் சிந்திக்க வேண்டாமா?

கிறிஸ்தவரை அந்த மதம் கிறிஸ்துவர் என அங்கீகரிக்கிறது.

இஸ்லாமியரை அந்த மதம் இஸ்லாமியர் என அங்கீகரிக்கிறது.

ஆனால் சூத்திரர்களையும், பஞ்சமர்கள், தலித்துகள் எனப்படுகிறவர்களையும் இந்துக்கள் என்று பட்டியலிடப்படுகிறது எனினும் அவர்கள் இந்துக்கள் என அங்கீகரிக்கப்பட்டு இந்துக்களில் பிராமணர்களுக்குரிய அத்தனை உரிமைகளும் இந்த சூத்திரர்களுக்கோ, தலித் மக்களுக்கோ சமுதாய ரீதியாக வழங்கப்படுகிறதா?

இந்து மதம் எனக் கூறிவிட்டு; அந்த மதத்தை சேர்ந்தவர்கள் எனக் கூறப்படும் பிராமணர்களுக்கு ஒரு நீதி - சூத்திரருக்கு ஒரு நீதி - தலித்துக்கு ஒரு நீதியென்று; நீதியிலேயே ஏற்றத்தாழ்வு கடைப் பிடிக்கப்பட்டால் அது ஏற்கத்தக்கதாகுமா?

'சூத்திரன்' என்பதற்கு 'வேசிமகன்' என்று அர்த்தமும் எழுதி வைத்துவிட்டு - அடிமை என்றும் பொருள் கூறிவிட்டு - தஸ்யூ எனப்படும் தாசன் என்றும் 'திருடன்' என்றும் குறிப்பிட்டுவிட்டு - அந்த சூத்திரனும் இருக்கிற மதம் இந்து மதம் என்றால்; அந்த மதத்தை இதைவிட இழிவுபடுத்த வேறு எவராலும் முடியுமா? இந்து மதம் என்ற அந்தப் பெயரைக்கூட காஞ்சிபுரம் பெரிய சங்கராச்சாரியார் ஏற்றுக் கொண்டதில்லை - இந்து என்பது ஒரு மதமே அல்ல என்று விளக்கமளித்திருக்கிறார் - நாம் இது போன்ற விளக்கங்களையெல்லாம் விலக்கிவிட்டு; "இந்து மதம்" என்பதையே ஒப்புக் கொள்வதாக வைத்துக் கொண்டால்; அந்த மதத்திற்குள்

"சூத்திரருக்கொரு நீதி
தண்டச்சோறுண்ணும்
பார்ப்புக்கு வேறொரு நீதி"

என்று பாரதியார் பாடியது போல வெவ்வேறு நீதிகள் ஏன்? எதற்காக?

"ஜாதி மாத்ரோப ஜீவிவா காமம்ஸ்யாத் ப்ராஹ்மணப்ருவ
தர்மப் பிரவக்தா நருப் தேர் நது சூத்ர; கதாசன்"

இது மனு தர்ம சாஸ்திரம் - இதன்படி பிராமண குலத்தில் பிறந்தவனே அமைச்சனாகத் தகுந்தவன். அறிவில் சிறந்தவனாக இருந்தாலும் ஒரு சூத்திரன் அமைச்சராகத் தகுதி உடையவனல்ல என்பதாம்.

அந்த மனுவின் கட்டளையை நிறைவேற்றுகிற முயற்சிதானே இன்றைக்கும் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

அதற்குத் 'துந்தனா' போடுகிற கும்பலும் பாட்டுப்பாடிக் கொண்டு; ஆட்டம் போட்டுக் கொண்டிருக்கிறதே;

இந்து மதத்தில் இந்த இழிவுகளும் - வர்ண வேறு பாடுகளும் - தலையில் பிறந்தவன், காலில் பிறந்த வன் என்ற உயர்வு தாழ்வுகளும் - காஞ்சி சங்கர மடத் திலேயே சாதி

வேறுபாடு என்ற சதிகாரச் செயலும் - போன்ற பொல்லாங்குகள் போக்கப்படுமேயானால்

எம்மதமும் சம்மதமே என்று
கூறும் எங்களுக்கு;
இம்மதம் மட்டும் சம்மதமில்லாமல்
போய்விடுமா என்ன?

இதுபோன்ற அநீதிகளையெல்லாம் எடுத்துச் சொல்லி; இவையனைத்தும் இந்து மதத்திற்கு அணி மணிகளாக இருக்கலாமா என்று கேட்கும் "பெரியார் சுயமரியாதைப் பிரச்சார வெளியீடான "ஞான சூரியன்" நூலுக்கு அந்தக் காலத்திலேயே அணிந்துரை எழுதி, இந்து மதத்தின் பெயரால் நடை பெறும் பொய்புரட்டுகளைக் கண்டித்திருப்பவர் கப்பலோட்டிய தமிழன் செக்கிழுத்த செம்மல் சிவஞானபோதத்திற்கு உரையெழுதிய சிதம்பரனார் என்பதையும் இன்றைக்கும் கல்மேல் எழுத்தாக அந்த அணிந்துரையைக் காண முடியும் என்பதையும் நினைவூட்டுகிறேன்.

எனவே; இந்து என்று கூறப்படும் ஒரு மதத்தின் பெயரை அல்ல; நாம் விமர்சிப்பது அந்தப் பெயரை வைத்துக் கொண்டு ஏற்கனவே சமுதாய ரீதியில் உயர்ந்தோர் மேலும் மேலும் உயர்ந்து கொண்டே போகவும் - அந்த மதத்திலேயே பெரும் பிரிவினர்

சூத்திரர்களாய்

பஞ்சமர்களாய்

தலித்துகளாய்

இழிவுபடுத்தப்படவுமான நிலையை அனுமதிக்கலாமா என்பதே நமது கேள்வி!

நமது நியாயமான இந்தக் கேள்வியை வேள்வியிலும் - வேண்டுதலிலும் - வேதம் பரப்புதலிலும் - விருப்பமுடன் ஈடுபட்டு; என்றைக்கும் முன் போல ஆதிக்கம் செலுத்திக் கொண்டே இருந்திடலா மெனக் கனவு கண்டு கொண்டிருப்போர், தி.மு. கழகம் இந்துக்களின் விரோதி என்று திசை திருப்பி; தமிழ்க்குடி மக்களை - தாசானுதாசர்களாக - சூத்திரர்களாக - அடிமைகளாக - தங்களின் கட்டளைக்கு அடிபணியும் "காலில் விழுந்தான்"களாக வைத்துக் கொண்டேயிருக்கலாம் என்பதற்

காகவே; மத மாற்றத் தடைச் சட்டம் எனும் மோகனாஸ்திரத்தை பிரயோகித்திருக்கிறார்கள்.

மதியிலிகள்தான் மயங்கிச் சாய்வர்!

மரணமே எதிர்நின்று அச்சுறுத்தினாலும் மானமுடையோர்; மயங்கிடார்! மண்டியிடார்!

இதனை அறைகூவலாக்கிடவே;

டிசம்பர் 27- பேரணி - அறவழி ஆர்ப்பாட்டம்!

அன்புள்ள,

மு.க.

25-12-2002

2866. தி.மு.க. பேரணி அமைதி போராட்டம் 4

கழித்தல் கணக்காளர்களைக் கழிப்பதே நமது கடமை !

உடன்பிறப்பே,

டிசம்பர் 27ஆம் நாள் கழகப் பேரணி மற்றும் அமைதி ஆர்ப்பாட்டம் குறித்து நான் உனக்கு எழுதிய கடிதங்களில் அ.தி.மு.க. அரசின் மதமாற்றத் தடைச் சட்டத்தின் மாய்மாலம் குறித்து விளக்கியிருக்கிறேன்.

அந்நாளில் மேலும் நமது கழகம் மக்கள் முன் எடுத்து வைக்கும் பிரச்சினைகள் யாவை என்பதையும் அதற்கென மக்கள் சக்தியைத் திரட்ட வேண்டிய பணியினை எவ்வாறு ஆற்றிட வேண்டுமென்பதையும் இன்றைய கடிதத்தில் காண்போம்.

தமிழகத்தில் போக்குவரத்துக் கழகங்களின் மீது எப்போதுமே இந்த ஆட்சியாளருக்கு ஒரு கோபம் உண்டு - அதே சமயம் ஒரு மோகமும் உண்டு!

தனியார் துறையிலிருந்த பஸ் போக்குவரத்துத் தடங்கள் மிகப் பெரும்பாலானவற்றை உச்சநீதி மன்றமே பாராட்டுகின்ற அளவுக்கு அரசுடைமையாக்கியவன் - அவ்வாறு உடைமையாக்கப்பட்டவை களை தனித்தனி போக்குவரத்துக் கழக நிறுவனங்களாக்கி, லட்சக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கி, அவர்தம் உரிமைகளைப் பெருக்கி, சலுகைகளையும் ஏராளமாக அளித்தவன் என்பதெல்லாம் இன்றுள்ள ஆட்சியாளருக்கு என் மீதுள்ள கோபத்திற்குக் காரணம்!

மோகத்திற்குக் காரணம்; "ஆகா! இத்தனை பேருந்து வழித் தடங்கள் இருக்கின்றனவே இவற்றைத் தனியார் மயமாக்கினால் எவ்வளவு பெரிய வியாபாரம் எல்லா வகையிலும்" நடத்தலாம் என்பதேயாகும்

இந்த இரண்டு உணர்வுகளும் பின்னிப் பிணைந்திடுவதால்; அப்படிப் பிணையும் உணர்வில் இரண்டாம் உணர்வே வென்றிடுவதால்; இலாபம் கிடைக்கும் பஸ் வழித் தடங்களையும் விலைகூற முன் வந்துள்ளனர்.

அந்தப் பேருந்துகளில் பணியாற்றிய பரிதாபத்திற்குரிய தொழிலாளர்கள் பல்லாயிரம் பேர் வீட்டுக்கு அனுப்பப் பெற்று பட்டினியும் பசியுமாக புழுப் போலத் துடிக்கப் போவது பற்றி இவர்கள் கவலைப்படுவதாயில்லை.

திருச்சிக்கு ரயில் கட்டணம் சென்னையிலிருந்து ஐந்து ரூபாய்தான் உயர்வு; ஆனால் பஸ் கட்டணம்; சென்னையிலிருந்து திருச்சிக்கு 23 ரூபாய் உயர்வு என்றால் "விதியே!" என்று இருக்கும் மக்களைப் பார்த்துவிட்டு; பிறகு எதற்காக அரசினர் அலட்டிக் கொள்ள வேண்டும்!

இப்படித்தான் ஒவ்வொன்றும்; மின் கட்டண உயர்வு, சமையல் எண்ணெய் வரியும் - அத்துடன் விலை உயர்வும், யூரியா வரி உயர்வு, பருத்தி பின்னலாடை வரி உயர்வு, படிப்புக் கட்டணம் உயர்வு, ஒரு முனை வரியைப் பலமுனை வரியாக்கி வாங்குபவரையும், வணிகர்களையும் வதைத்திடும் கொடுமை - "ஏன்?" என்று கேட்டால் சிறைவாசம்! - "உம்" என்றால் வனவாசம் என்பதற்குப் பயந்து, மக்கள் மண்டியிட்டுக் கிடப்பர் என்ற மமதைதானே இதற்கெல்லாம் காரணம்.

அதுதான் போகட்டுமென்றால் அத்யாவசியப் பண்டங்களின் விலை என்று பார்த்தால்;

2001 தி.மு.க. ஆட்சியில் கிலோ மஞ்சள் 37 ரூபாய் என்பது; இன்றைக்கு 60 ரூபாய் -

தி.மு.க. ஆட்சியில் ரூபாய் 22க்கு விற்ற ஒரு கிலோ துவரம்பருப்பு இப்போது 36 ரூபாய் -

நல்லெண்ணெய்; தி.மு.க. ஆட்சியில் கிலோ 45 ரூபாய் - இந்த ஆட்சியில் கிலோ 64 ரூபாய் -

தி.மு.க. ஆட்சியில் கிலோ 35 ரூபாய் விற்ற கடலை எண்ணெய் இந்த ஆட்சியில் 56 ரூபாய் -

தி.மு.க. ஆட்சியில் கிலோ 41 ரூபாய் விற்ற மிளகாய் இந்த ஆட்சியில் 55 ரூபாய் -

வெளிச் சந்தை அரிசி ஒரு கிலோ பொன்னி (நெ.1) தி.மு.க. ஆட்சியில் 15 ரூபாய் - இன்றைய ஆட்சியில் 22 ரூபாய் -

நியாய விலைக்கடையில் 10 கிலோ அரிசி வரையில் கிலோ ரூ. 3.50 என்கிறார்கள். இன்னொரு பத்து கிலோ வாங்கினால் கிலோ 6.00 ரூபாய் என்கிறார்கள். எனவே நியாய விலைக்கடை அரிசி விலை தி.மு.க. ஆட்சியை விட இரண்டு மடங்கு அதிகம்.

இத்தனைக்கும் பொறுமை காத்திடுகிறீர்களே; இதோ உங்கள் தலையில் இடிவிழப் போகிறது, அதற்கு என்ன செய்யப் போகிறீர்கள்? பேசாமல் சாகப் போகிறீர்களா என்று விவசாயிகளைப் பார்த்துக் கேட்பது போல இலவச மின்சாரத்தை ரத்து செய்திட "முஸ்தீபு" கள் நடந்து கொண்டிருக்கின்றன.

அரசு அலுவலர், சலுகை பெற முடியாவிடினும்; உரிமையும் இழந்து தவிக்கின்றனர்.

மக்கள் நலப் பணியாளர்கள் வாழ்வு மண்ணாக்கப்பட்டு 13 ஆயிரம் பேர் பட்டினி கிடக்கிறார்கள், மனைவி மக்களுடன்!

சாலைப் பணியாளர்கள் 10,000 பேர் வேலையிலிருந்து நீக்கப்பட்டு வேதனைத் தீயில் குடும்பத்துடன் பொசுங்குகிறார்கள்.

அடுத்து போக்குவரத்துத் தொழிலாளர்கள் - பல்லாயிரவரை பழிவாங்கும் முயற்சிக்குப் பட்டுக் குஞ்சம் கட்டப்படுகிறது.

மேலும் பல்லாயிரவரை வேலை நீக்கம் செய்திட திட்டம் தீட்டப்பட்டாகிவிட்டது; அந்தத் தீ விரைவிலே பற்ற இருக்கிறது!

இந்த அழகில் டெல்லியில் போய்; தமிழக அரசின் சார்பில் பேசப்படுகிறது; வேலை வாய்ப்புகளைப் பெருக்கப் போகிறோம் என்று!

உடன்பிறப்பே,

27 ஆம் நாள் நீ சந்திக்கும் தமிழ் மக்களிடம் பட்டிதொட்டி பட்டினக்கரை எங்கணும் நினைவுபடுத்து - ஆதாரபூர்வமாக நினைவுபடுத்து - நமது அரசியல் நாகரிகப் பண்போடு நினைவுபடுத்து - இவர்களால் வேலை வாய்ப்பை 'பெருக்க'வும் முடியாது - தமிழக வளத்தைக் 'கூட்ட'வும் முடியாது - நாடு

வாழ நல்ல திட்டங்களை 'வகுக்க'வும் முடியாது - இவர்களுக்கு தெரிந்ததெல்லாம் கடந்த காலக் கழக ஆட்சியின் திட்டங்களைக் 'கழிப்பது' மட்டுமே,

★ ஏழைப் பெண்கள் திருமண உதவித் திட்டம்;

★ உழவர் சந்தைகள் திட்டம்;

★ பெரியார் நினைவு சமத்துவபுரத் திட்டம்;

★ அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்;

★ நமக்கு நாமே திட்டம்;

★ இலவச வேட்டி சேலைகள் திட்டம்;

★ கால்நடைகள் பாதுகாப்புத் திட்டம்;

★ வாழ்ந்து காட்டுவோம் திட்டம்;

போன்ற பல திட்டங்களை கழித்துப் போட்டவர்கள் அல்லவா இந்த அரசினர்!

எனவே இந்தக் கழித்தல் கணக்காளர்களை ஆட்சியிலிருந்து கழிப்பதே நமது கடமையென்று உணர்த்தி; அந்த ஜனநாயகத் தீர்ப்பு வழங்கிடக் காத்திருக்குமாறு விளக்கமுடன் வேண்டுகோள் விடுத்திடுக!

மீண்டும் உன்னையும் ஏனைய உடன்பிறப்புகளை யும் கேட்டுக் கொள்கிறேன்; ஓநாய்கள் ஊளையிடுகின்றன என்பதற்காக உன் பயணத்தை நிறுத்தாதே!

கடமையை மறவாதே!

அன்புள்ள,

மு.க.

26-12-2002

2867. தனியே அவர்க்கோர் குணம் என்பது இதுதானோ?

உடன்பிறப்பே,

கண்ணகி சிலை பிரச்சினை, தெருவோரத்து சாதாரண மனிதனைத் தொடவில்லையென்று ஆங்கில ஏடு ஒன்று தனது தலையங்கத்திலே குறிப்பிட்டு, ஒன்று மில்லாத பிரச்சினைக்காக நிழல் யுத்தம் நடத்துவதாகக் கேலி புரிந்துள்ளது. பாவம்! இந்தப் பத்திரிகை நிறுவனத்தின் ஆங்கிலப் பதிப்பாயினும், தமிழ்ப் பதிப்பாயினும் அதுகளுக்கு எது நியாயம் என்று தெரிந்திருப்பினும் கூட, வேண்டுமென்றே திட்டமிட்டு தி.மு. கழகத்தையும் சேர்த்துத் தாக்குவதிலும் கேலி புரிவதிலும் ஒரு தனி இன்பம்!

மன்னிக்கவும்! இன்பத்துக்காக மட்டுமல்ல - தங்கள் இலட்சியத்திற்காகவும் இப்பணியில் ஈடுபட்டிருக்கின்றன.

கண்ணகி என்ற பெயரும், கண்ணகியின் பெருமையும், இன்று நேற்றல்ல - எத்தனையோ நூற்றாண்டுகளாகச் சாதாரண சாமானிய தெருவோரத்து மனிதர்களைக் கவர்ந்துள்ளவைகளாகும் என்பதை, ஏனோ மறந்து விட்டார் தலையங்கம் தீட்ட எழுதுகோல் எடுத்தவர்.

“கண்ணகியானால் கடுகிப் போ;
மாதவியானால் மடி மேல் வா!
கழுத்தில் விழுந்த மாலை
கழற்ற முடியலியே

என்று தெருக்கூத்துகளில் கண்ணகியைக் கர்ணகி என்றும், மாநாய்கன், மாசாத்துவான் ஆகியோரை மாணாக்கன்செட்டி, மாச்சோட்டான்செட்டி என்றும் பாடி மகிழ்ந்து, அழைத்து மகிழ்ந்து விடிய விடிய நடத்தப்பட்ட சம்பூர்ண கோவலன் கதையை பார்த்துக் களித்த பாமர மக்கள் இன்னமும் கிராமப் புறங்களில் இருக்கிறார்கள்.

எனவே கண்ணகி என்ற பெயரோ, அவள் கட்டிக் காத்த கற்பு நெறியோ, அவள் நீதி கேட்டு நெடுஞ்செழிய பாண்டியனின் அவைக்களத்தில் போராடியதோ, தெருவோரத்து சாதாரண மனிதனின் நினைவை விட்டு நெடுந்தொலைவு அகன்று விடவில்லை.

தெருக் கூத்துகளில், புராணக் கதை போல நடத்தப்பட்டு, சாதாரண மக்களின் இதயம் கவர்ந்த கண்ணகியின் கதைதான்; இலக்கிய மேதைகள், தமிழ் அறிஞர்களின் பெரு முயற்சியினால் நடுத்தர மக்கள், படித்த இளைஞர்கள், படிக்கும் மாணவர்கள் மத்தியிலும் ஒரு காவியப் பேழையாகப் போற்றப்படும் நிலை பெற்றது.

அடியேன்! என் பங்கிற்காக நான் ஆற்றிய தொண்டுதான் நான் எழுதிய சிலப்பதிகாரம் எனும் நாடகக் காப்பியமும், பூம்புகார் திரை ஓவியமுமாகும்.

அந்த நாடகக் காப்பியத்தின் ஆங்கில மொழி பெயர்ப்பு நூலுக்கு அறிஞர் அண்ணா எழுதிய அணிந்துரையில்;

புகழ்மிகு புலவராம் இளங்கோவடிகள் நம்மையும் - கண்ணகி, கோவலனையும் - மகிழ்ச்சி திரும்பிய புதுவாழ்விற்கு இட்டுச் செல்லவில்லை. ரத்தக் கண்ணீர் வடிக்கும் காட்சிக்கு நம்மை அழைத்துச் செல்கிறார். கோவலன் தலை கொய்யப்பட்ட போது - கடுங்கோபம் கொண்டெழுந்த கண்ணகியைச் சித்தரித்த கருணாநிதி, உணர்ச்சி இமயத்திற்கு மேலும் மேலும் எழுகிறார்.

எந்தப் பெண்தான் தன் கணவனின் சாவைத் தாங்கிட முடியும்? எந்தப் பெண் தான் தன் கொழுநனுக்கு இழைத்திட்ட கொடுமையை - இழிவைத் தாங்கிட முடியும்?

இதோ - கோவலன் தலையிழந்து - தவறாகக் குற்றம் சாட்டப்பட்டு - அவசரத்தில் நீதி வழங்கப்பட்டு - கல்லாக் களிமகன் ஒருவனால் கொல்லப்பட்டுக் கிடக்கிறான்.

ஆனால், ஆதரவற்ற ஒரு பெண்ணான கண்ணகியால் என்ன செய்ய முடியும்? இச்செயலுக்கு அரசர் குடிப் பிறந்த மன்னனே பொறுப்பு!

செயல் தவறானது! ஆனால் செய்தவன் சாதாரண மனிதனல்ல! கடும் வலியும் - கற்றறிந்த நெஞ்சுங் கொண்ட பாண்டியன் உத்தரவிட்டு நிகழ்ந்த செயல் இது!

ஏன்? எப்படி?

இக்கேள்விகள் கண்ணகி முன் எழுந்தன. அவளது கோபக் கனல் அனைவரையும் உலுக்கி விடுகிறது! அவள், இழந்ததை நினைத்து வருந்திட - வாளாயிருக்க மறுத்தாள்!

கோவலன் மீது பழிப் பெயர் ஏறிட அனுமதிக்க மறுத்தாள்! இல்லை! இல்லை! இந்நிலத்தில் நீதி நிலைத்திட வேண்டும்! நீதி - அதை நான் பெற்றே தீருவேன்! - இடி முழக்கமென முழங்கினாள். கொலு மண்டபம் நோக்கி நடை போட்டாள், நீதி கேட்டுப் பெற!

தனது வாதங்களை முன் வைத்தாள் கண்ணகி! அவளது எழுச்சி மிகு பேச்சையும், எச்சரிக்கையையும் கருணாநிதி எடுத்துரைக்கும்போது மயிர்க்கூச்செறிகிறது.

கண்ணகியோடு நாமும் சேர்ந்து அவள் காட்டும் சினத்திலும், பழிப்பிலும், குற்றம் சாட்டுதலிலும், எழுச்சியிலும் பங்கு கொண்டு பாராளும் மன்னன் முன் வாதாட வேண்டும் என்ற உணர்வை - உள்ளத்து எழுச்சியை அந்தக் காட்சி உருவாக்கி விடுகிறது.

வெடிக்கிறது எரிமலை - கொந்தளிக்கிறது கடல் - கூந்தல் மலர் இழந்த கைம் பெண் நீதி தேவதையாக மாறுகிறாள்.

மன்னனா! நீ! ஏ! பாண்டியனே! மன்னனும் நீயல்ல! வளநாடும் உன்னுடையதல்ல!

- என்று முழங்குகிறாள். பத்தினித் தெய்வம். அனைத்தும் அடங்கி ஆத்திரம் வெளிப்படுகிறது!

இத்தகு காட்சியை உணர்ச்சி உருவோடு அமைப்பது ஒரு எழுத்தாளனுக்கு எளிதான காரியமல்ல! ஆனால், கருணாநிதி யாரையும் விஞ்சுகின்ற அளவில் வெற்றி

கொண்டுள்ளார்! தான் ஒரு ஒப்புவமையற்ற நடையழகு காட்டும் எழுத்தாளர் என்பதால்!

உடன்பிறப்பே, நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் என்று பாரதி பாடிய இந்தக் காவியத்துடன் என் நெஞ்சம் எவ்வளவு ஒன்றிப் போய்க் கிடக்கிறது என்பதை நான் எழுதத் தேவையில்லை. அண்ணாவின் அணிந்துரையே எடுத்துக் காட்டுகிறது.

அந்தக் காவியத்தின் நாயகி கற்பரசி கண்ணகியின் சிலை அகற்றப்பட்டதைக் கண்டிக்க மனமில்லாதவர்கள், அந்தச் சிலையை அதே இடத்தில் அமைத்திட வேண்டுமெனக் குரல் கொடுப்போரைக் குறைத்து மதிப்பிட்டுக் குதர்க்கம் செய்வதுதான்,

"தமிழன் என்றோர் இனமுண்டு
தனியே அவர்க்கோர் குணமுண்டு"

என்றாரே, நாமக்கல் கவிஞர்! அந்த தனி குணம் இதுதானோ?

அன்புள்ள,

மு.க.

26-12-2002

2868. காளி சோதிடரும்; காழி சோதிடர்களும்!

உடன்பிறப்பே,

1940ஆம் ஆண்டு வாக்கில் என் 16வது வயதில், திருவாரூர் உயர்நிலைப்பள்ளியில் படித்துக் கொண்டிருந்தேன். முரசொலி சொர்ணம் இருக்கிறாரே, அவர் எனக்கு உறவு! அவரது தந்தை எனக்கு அண்ணன் முறையாவார்! அவர் பெயர் கிருஷ்ணன்! அவர்கள் வீட்டில் தங்கித்தான் நான் சுமார் ஓராண்டுக்கு மேலாகப் படித்துக் கொண்டிருந்தேன். அவர் பழுத்த வைதீகர்! மாலை ஆறு மணிக்கு துர்க்கை அம்மன் கோவிலுக்குப் போனால் இரவு 10 மணிக்குத்தான் வீடு திரும்புவார். அவ்வளவு பக்தி வழிபாடு!

பெரியாரைப் பற்றியோ, சுயமரியாதைக் கொள்கைகள் பற்றியோ நான் பேசினால் அவற்றைக் கடுகளவுகூட ஏற்றுக் கொள்ள மாட்டார். அ்தன்னியில் ரேகை சாஸ்திரம், சோதிடம், இவற்றில் அபார நம்பிக்கையுடையவர்.

ஒருநாள் அவர் என்னைப் பார்த்து, நாளைக் காலையில் பிரசித்தி பெற்ற ஒரு சோதிடர் நம் வீட்டுக்கு வருகிறார். அவர் கடந்த காலம், நிகழ்காலம், எதிர் காலம் பற்றிப் பிரமாதமாக சோதிடம் சொல்லக் கூடியவர். காளியின் அருள் பெற்றவர். நீ ஸ்கூலுக்குப் போய் விடாதே! உன்னைப் பற்றியும் அவரிடம் சோதிடம் கேட்கலாம் என்றார்.

நான் சிரித்துக் கொண்டே சொன்னேன். கடந்த காலத்தைப் பற்றியும், நிகழ் காலத்தைப் பற்றியும் சொல்ல, காளி அருள் பெற்ற சோதிடர் தேவையில்லையே! அதை நானே சொல்லி விடுவேனே என்று!

முட்டாள்தனமாகப் பேசாதே! முக்காலம் உணர்ந்தவர் அவர்! நாளைக்குப் பார் அவர் சக்தியை!

– என்று கிருஷ்ண அண்ணன் என்னைக் கடிந்து கொள்ளவே நானும் அமைதியாக இருந்து விட்டேன்.

அவர் சொன்னபடியே, மறுநாள் காலையில் சுமார் ஐம்பது வயதுக்கு மேல் மதிக்கத்தக்க கொழு கொழு என உடல்வாகு கொண்ட சோதிடரும், அவருடன் நாற்பது வயதுக்கும் குறைவாக மதிக்கக்கூடிய வயதுடைய அவரது மனைவியும் அந்த வீட்டுக்கு வந்தார்கள். அவர்களை வரவேற்று உபசரித்து வீட்டுத் தாழ்வாரத்தில் சிற்றுண்டி வழங்கப்பட்டது.

நான், வீட்டின் கொல்லைப்புறமுள்ள கிணற்றடிக்கு சென்று; குளிப்பதற்காக வாளியில் தண்ணீர் மொண்டு கொண்டிருந்தேன்.

அப்போது அந்த சோதிடரின் மனைவி கிணற்றடிக்கு வந்தார்! என்னைப் பார்த்து ஏன் தம்பி நீதான் அவருக்கு மூத்த மகனா? என்று கேட்டார்.

உடனே என் பகுத்தறிவு. வேலை செய்யத் தொடங்கி விட்டது: ஆமாம்! நான் மூத்த மகன்தான் என்று முதல் பொய்யைச் சொன்னேன்.

அம்மையாரின் அடுத்த கேள்வி, ஏன் தம்பி? இந்த வீடு சொந்த வீடா? வாடகை வீடா? சொந்த வீடென்று எனக்குத் தெரியுமென்றாலும், சொந்த வீடில்லை! இது வாடகை வீடுதான்! என்றேன்.

“நீ எந்த வகுப்பு படிக்கிறே தம்பி?”

“நானா? நான் படிக்கவில்லை. சங்கீதம் கற்றுக் கொள்கிறேன்.”

இப்படி அந்த அம்மாவின் பல கேள்விகளுக்கு நான் பொய்யாகவே பதில்களைச் சொன்னேன். இப்போது அவை எல்லாம் சரியாக நினைவு இல்லை. உண்மை சொல்லியிருந்தால் தானே நினைவில் இருக்கும்.

என்னிடம் தவறான தகவல்களைப் பெற்றுக் கொண்டு சோதிடரின் மனைவி, வீட்டுக்குள் நுழைந்து, சோதிடர் அமர்ந்திருந்த தாழ்வாரத்துக்கு எதிர் தாழ்வாரத்தில் அமர்ந்து கொண்டார்.

நானும் சிறிது நேரத்துக்கெல்லாம் வீட்டுக்குள் போய், காளி சோதிடர் எப்படிக் கதை விடுகிறார் என்பதைக் கவனிக்கத் தொடங்கினேன். சோதிடர், தனக்கு எதிர் தாழ்வாரத்தில் அமர்ந்திருந்த அவரது மனைவியை உற்று நோக்கிக் கொண்டே, சுவடிகளைப் புரட்டியவாறு சோதிடம் சொல்லிக் கொண்டிருந்தார்.

"அய்யனே! நீங்க இப்ப வாடகை வீட்டிலே குடியிருக்கீங்க. கூடிய சீக்கிரம் சுக்கிர திசை ஆரம்பம் உங்களுக்கு - இதே ஊர்லே பெரிய பங்களாவைச் சொந்தமா வாங்குவீங்க!"

"இதுவே, சொந்த வீடு தானே?" என்றார் கிருஷ்ண அண்ணன், முகமாற்றத்துடன்.

சோதிடர் சமாளித்துக் கொண்டு, "இருக்கலாம் - இருந்தாலும் இன்னொரு பங்களா வாங்குவீங்கன்னு சோதிடத்திலே சொல்லுது!" என்றார்.

"சோதிடர் தொடர்ந்தார்."

"உங்க மூத்த பையன் இப்ப சங்கீதம் படிக்கிறான். எதிர்காலத்திலே பெரிய சங்கீத வித்வானாவான்."

"அய்யா சோதிடரே! என் பையன்கள் யாரும் சங்கீதமே கற்றுக் கொள்ளவில்லை"

"இதோ நிற்கிறானே! இந்தப் பையன் உங்க மூத்த பையன்தானே?"

"அட போங்கய்யா! இவன் எனக்குத் தம்பி முறை வேணும்!"

எனக்கு சிரிப்பு தாங்கவில்லை. நான் சிரிப்பதைக் கிருஷ்ண அண்ணனும் பார்த்து விட்டார். முக்கியமாக சோதிடரும் அவர் மனைவியும் பார்த்து விட்டு; அவர்கள் என்னால் ஏமாற்றப்பட்டு விட்டதைப் புரிந்து கொண்டார்கள்.

அதற்குள் "என்னய்யா - உங்கள் சோதிடம்! மண்ணாங்கட்டி! இவன் சொன்னது சரியாத்தான் இருக்கு! சரி! சரி! மூட்டையை கட்டுங்க!" என்று கிருஷ்ண அண்ணன் வேகமாக எழுந்து விட்டார்.

சோதிடரும் அவர் மனைவியும் ஆத்திரத்துடன் என்னைப் பார்த்தார்கள். நான் மெல்லப் புன்னகை புரிந்தது கண்டு, மேலும் சீற்றத்துடன் சோதிடர் சொன்னார்;

"இதோ இந்தப் பையனுக்கு அற்ப ஆயுசு! இருபது வயதுக்கு மேல் இருக்க மாட்டான். அதற்குள் ஒரு பெரிய மரண கண்டம் சம்பவிக்கும்."

சொல்லிவிட்டு சோதிட ஜோடி புறப்பட்டு விட்டது.

என் சொந்த வாழ்வில் நிகழ்ந்த இந்தச் சம்பவத்தை ஏன் நினைவூட்டுகிறேன் என்றால், சோதிடம் என்ற நிலையில் வியாபார ரீதியாகப் பயன்படுத்தப்படும் இந்தக் கலை, ஒரு மேஜிக் வித்தை போல மட்டும் மக்களைக் கவர்ந்திடுவதற்கும் மேலாக ஒரு படி மேலே போய், பொதுப் பிரச்சினைகளிலும் தனது ஏமாற்றுக் கரத்தை நீட்டுவதை ஏற்றுக் கொள்ள முடியாது என்பதற்காகத்தான்!

அப்படித்தான் அறிஞர் அண்ணா அவர்களின் கருத்துப்படி 33 ஆண்டுகளுக்கு முன்பு கடற்கரையில் வைக்கப்பட்ட கண்ணகி சிலையினால் நாட்டுக்கே ஆபத்து - அரசுக்கே ஆபத்து என்று, அன்றொரு நாள் என் வீட்டுக்கு வந்த காளி சோதிடரைப் போல சில 'காழி சோதிடர்கள் இன்று புறப்பட்டிருக்கிறார்கள் புதிய உபதேசம் புரிய!

வாஸ்து என்பது கட்டிடங்கள் அமைக்கும்போது காற்று வீசும் திசை பார்த்து, மண்வாகு பார்த்து கட்டுவதற்காகக் கடைப்பிடிக்கப்பட்டால், அதில் எனக்குக் கருத்து மாறுபாடில்லை.

அதற்குச் சாத்திரரீதியாக வியாக்யானங்கள் செய்வதைத்தான் மறுக்க வேண்டியிருக்கிறது.

கழிப்பறையின் பக்கத்தில் கண்ணகி சிலை இருப்பதா? கலங்குகிறார்கள் காழி சோதிடர்கள்! அதற்காக? அதற்காக? கழிப்பறையை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டுமே தவிர, கண்ணகியையே மாற்றுவது என்பது என்ன வாதம்?

மாணிக்கம், முத்து கொண்ட சிலம்புகளை உடைக்க முயலுவது போல, சிலை இருப்பது நாட்டின் பொருளாதாரத்தையும் வாணிபத்தையும் அழித்து விடுமாம்! அள்ளி விடுகிறார்கள் பொருளாதார மேதைகள்!

காந்தியடிகளின் கையில் தடியிருப்பது போலவும், ஔவையின் கையில் கம்பு இருப்பது போலவும், பாரதியின் கையில் பிரம்பு இருப்பது போலவும், கட்டபொம்மன் கையில் வாள் இருப்பது போலவும் உள்ள சிலைகளினால், கலகம் விளையும் - களங்கள் அமையும் - எனவே அந்தச் சிலைகளை அகற்றி விடுங்கள் என்று காழிகளை விட்டுச் சொல்லச் செய்ய எவ்வளவு நேரமாகும்? அல்லது எவ்வளவுதான் செலவாகி விடும்?

கோட்டையைச் சுற்றி அகழி இருப்பதால் கஜானா நிரம்புவதில்லை! தமிழக அரசியல் அலைக்கழிக்கப்படுகிறது! என்று ஒரு பிரச்சாரம் -

இதற்கு என்ன செய்யலாம்! கோட்டையையே தூக்கிக் கொண்டு போய் வேறிடத்தில் வைத்து விடச் சொல்கிறார்களா காழிகள்?

காளி சோதிடராவது பரவாயில்லை! வீட்டை ஏமாற்றுகிறார்!

காழிகள் நாட்டையே ஏமாற்ற முனைகிறார்களே! எப்படி ஏற்றுக் கொள்வது?

அன்புள்ள,

மு.க.

27-12-2002

2869. இன்று காத்த உணர்வையும் ஒற்றுமையையும் என்றும் காப்போம் !

உடன்பிறப்பே,

அநியாய - அக்கிரம - அராஜக - அநீதி வடிவான - அடாவடி மிகுந்த - ஜனநாயகம் மெலிந்து, சர்வாதிகாரம் மலிந்த அ.தி.மு.க. அரசின் மக்கள் விரோதப் போக்கைக் கண்டித்து, அணி வகுத்து வா! அறப்போர்க் கொடியேந்தி வா! அன்பு உடன்பிறப்பே; வா! வா! என அழைத்தேன்.

நீயோ, அலை கடல் ஆர்ப்பரித்து ஊருக்குள் நுழைந்தது போல மாநில முழுதுமுள்ள மாவட்டத் தலைநகர்களில் - வட்டத் தலைநகரங்களில் - உன் பேருருவைக் காட்டி முழங்கி என்னை மகிழ்ச்சியில் ஆழ்த்திவிட்டாய்! மாற்றாரை மருட்சியில் புதைத்து விட்டாய்!

என்ன சொல்லி திசை திருப்பலாம்- என்ன செய்து திசை திருப்பலாம் என்று எண்ணெய் வடியும் முகத்தினராய் எதிர் வரிசையினர் - கைபிசைந்து நிற்குமளவுக்கு; களங்கள் அமைத்துக் காரியம் சாதித்து விட்டாய்!

ஏ, அப்பா, நாம் நினைத்துப் பார்க்காத அளவுக்கு எழுச்சி! பிரமாண்டக் கூட்டம்! எங்கிருந்து கிளம்பினர் இத்தனை ஆயிரம் பேர்! இவர்கள் எழுப்பிய முழக்கங்கள் அனைத்துமே; ஏழை, எளிய, நடுத்தர மற்றும் சிறுபான்மை மக்களின் நெஞ்சின் அடித் தளத்திலேயிருந்து கிளம்புகிற உணர்வுகள் அல்லவா!

ஓரிடம் ஈரிடம் என்றால் சரி; கூட்டத்தைக் கூட்டி வந்து காட்டினார்கள் என்று கதை விடலாம் - ஆனால் இவர்கள் மாவட்டந்தோறும் - வட்டந் தோறும் மக்களின் பிரச்சினைகளுக்காகக் குரல் கொடுக்கிற - வாதாடுகிற - போராடவும் தயாரா யிருக்கிற வீரர்களையும் வீராங்கனைகளையும் கொண்ட அணிவகுப்புகளாகவன்றோ திரண்டு நின்றனர்.

இத்தனைக்கும் செய்தி நிறுவனங்களின் பூரண ஒத்துழைப்பு இல்லை - நடுங்கிக் கொண்டே நியாயத்திற்காகக் குரல்

எழுப்பக்கூடிய நிலைமை அந்த நிறுவனங்களுக்கு! இருக்கும் ஒன்றிரண்டும் ஏதோ தயவு தாட்சண்யத்துக்குத்தான்; அதுவும் கிள்ளி விட்டால் மட்டுமே பள்ளியெழும் பழக்கமுடையவை! இத்தகைய வசதி வாய்ப்புக் குறைவுகளுக் கிடையிலேயும்; இந்த உடன்பிறப்பு உருகி உருகி அழைக்கிறானேயென்று ஓடோடி வந்து, ஊருக்கு ஊர் உதய சூரியனின் கதிர்களைப் போல ஒளி பாய்ச்சிய உன் போன்ற உடன்பிறப்புகளை - ஒலி முழக்கிய கம்பீரத்தை, காட்சிப் பெட்டிகளில் கண்டும், கழக நிர்வாகிகள் சொல்லக் கேட்டும் எவ்வளவு களிப்புற்றேன் தெரியுமா?

ஆனாலும் சேலத்தில் நடைபெற்ற பேரணியில் கலந்துகொண்டு உணர்ச்சி பொங்கிட முழக்கமிட்ட ஜலகண்டபுரம் பேரூர்க் கழக 1-வது வார்டு அவைத் தலைவர் மதலையப்பன் எனும் கழகக் கண்மணி பேரணியிலேயே உடல் நலிவுற்று வீட்டுக்குள் சென்றதும் உயிர் விட்டார் என்பதும் -

விழுப்புரம் பேரணியில் காணை மல்லிகைப்பட்டு கழகச் செயல் வீரர் தெய்வசிகாமணியும் - ஆவேச முழக்கமிட்டுச் சுருண்டு விழுந்து மருத்துவமனைக்குச் செல்லும் வழியிலேயே மரணமுற்றார் என்பதும் -

என் நெஞ்சைத் துளைத்திட்ட நிகழ்ச்சிகளாகும். அந்தக் குடும்பங்களுக்குக் கழகம் எல்லா வகையிலும் துணை நிற்கும்.

திருவள்ளூர் மாவட்டத்தில் பேரணிக்காக வாகனத்தில் வந்தவர்கள் 15 பேர் வாகனம் கவிழ்ந்து படுகாயமுற்றனர் என்ற செய்தியும், செங்கல்வராயன் என்ற கழக வாலிபர் அந்த விபத்தில் இறந்த செய்தியும் - பெரு மகிழ்ச்சிக்கிடையே எனக்குப் பேரதிர்ச்சி தந்தவைகளாகும்!

இந்த ஒரு சில வேதனை நிகழ்வுகள் தவிர்த்து பொதுவாக நமது கழகம் எதிர்காலத்தில் சந்திக்க வேண்டிய தியாகப் போராட்டங்களுக்கு ஒரு ஒத்திகையாக ஏற்கனவே நடந்த இளைஞர் அணி மறியல் அறப்போரும் இப்போது கழகம் நடத்திய மாநிலம் தழுவிய பேரணி ஆர்ப்பாட்டங்களும் அமைந்துள்ளன எனில் அது மிகையாகாது!

அறப்போர் நடத்தப் போகும் கழகத்திற்கு அடிக்கடி ஒத்திகை ஏன் என்று கேட்கத் தோன்றும் - இலங்கையில் கிரிக்கெட் ஆடிவிட்டு, அடுத்த வாரம் இங்கிலாந்தில் கிரிக்கெட் பந்தயத்தில் கலந்து கொள்ளப் போனால்; அப்போதும் ஒருமுறைக்கு இருமுறை

அந்த அணிகள் ஒத்திகை பார்த்துக் கொள்வதில்லையா, அது போலத்தான்!

விளையாட்டுக்கே அப்படியென்றால்; அறப்போர் உச்சகட்டத்திற்கு ஒவ்வொரு கட்டமாகத்தானே போக வேண்டும்!

இந்தப் போரணி வெற்றி கண்டே - ஆளுங்கட்சியினர் 'பேய்க் கூச்சல்' போடுகின்றனர்! என்ன அவதூறு கூறி இந்த வெற்றியைத் திசை திருப்பலாம் என்று திட்டம் போடுகின்றனர்! -

விஷமம் செய்வதில் வித்தகம் புரியக் கூடிய சில ஏடுகளைக் கொண்டு; அந்த ஊரில் தகராறு - இந்த ஊரில் புகைச்சல் என்று நமது உடன்பிறப்புகளையே உசுப்பி விடப் பார்த்தனர். பாவம்; அவர்களின் திட்டம் உருப்படவில்லை !

இன்று நேற்றல்ல - நம்மை எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்பு; நமது இயக்கம் முளை விட்டெழுந்த காலத்திலிருந்தே எதிர் தரப்பினர் தமது மூளையைக் கசக்கிப் பிழிந்துகொண்டு - அதில் கடும் நஞ்சு கலந்து கொடுத்துப் பார்த்தனர் - நம் நெஞ்சம் கவர்ந்த இந்த இலட்சியத்தைக் கொல்ல அந்த நஞ்சுக்கு ஆற்றலில்லை!

வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எந்த நிலையில் இருந்தாலும் தமிழகத்தை வாழவைத்துக் கொண்டிருப்போம்! -

வாய்மை, நமக்கு வலிமை நிறைந்த போர்வாளாக இருக்கும் வரையில்; நேர்மை நம் கைக் கேடயமாக இருக்கும் வரையில் நம்மை வளைக்க நினைக்கும் வஞ்சகம் பொடிப் பொடியாகும் எனும் சூளுரையுடன்,

இன்று காத்திட்ட
உணர்வையும்
ஒற்றுமையையும்

என்றும் காத்து, கழகத்தையும் காப்போம்! கயவர் தம் பிடியிலிருந்து தமிழ் இனத்தையும் காப்போம்.

நன்றிக்குரிய உடன்பிறப்புகளே!
நடந்திடுவோம் வாரீர்; "அண்ணா வாழ்க!"

என ஒலித்தவாறு!

அன்புள்ள,

மு.க.

29-12-2002

2870. உள்ளம் பதறுகிறது!

உடன்பிறப்பே,

உலகமாந்தர்க்கு அன்பையும், அறவழியையும் போதித்து, அறமும், அன்பும் எங்கே விற்கப்படும் என்று விலாசம் தேடுகிற விஷக்கொடுக்கு மனம் படைத்தவர்களால் சித்ரவதைக்குள்ளாகி சிலுவையில் அறையப்பட்ட சீலராம் இயேசுநாதரின் பெருமை பேசும் கிறிஸ்துமஸ் தினத்தன்று, கேரள மாநிலம் திருவனந்தபுரத்தில் நடைபெற்ற மிகக் கொடிய வெறியாட்ட நிகழ்ச்சியொன்றை தினகரன் ஏடு செய்தியாக வெளியிட்டுள்ளது.

ஏழு வயதே கொண்ட இளஞ்சிறுமி ஒருத்திக்கு நேர்ந்த துயரம் - கொடூரம் - பரிதாப முடிவு!

செய்தியைப் படித்தவுடன் பாவேந்தர் பாரதிதாசன், எழுதிய அந்தக் கவிதை வரிகள்தான் என் நெஞ்சுக்குள்ளிருந்து விழிகள் வழியாகக் கண்ணீர்த் துளிகளாக எட்டிப் பார்த்தன!

ஏழு வயதே எழிற் கருங்கண் மலர்!
ஒரு தாமரை முகம்! ஒரு சிறு மணியிடை!
சுவைத்தறியாத சுவை தருங் கனிவாய்!
இவற்றையுடைய இளம் பெண் - அவள்தான்,
கூவத் தெரியாக் குயிலின் குஞ்சு,
தாவாச் சிறுமான், மோவா அரும்பு!

பாரதிதாசன் கவிதையால் தீட்டிய அந்த ஓவியம், உயிர் பெற்ற ஷாலினி என்ற தங்கப் பதுமையாக கேரளத்தில் பூந்துறை எனுமிடத்தில் ஆண்ட்ரூஸ் என்பவரின் மகளாகப் பிறந்து, ஏழு வயதில் இரண்டாம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கும்போது தான், அந்தக் கவின் அரும்பைப் பறிக்க மட்டுமல்ல! கசக்கி எறிய ஒரு காமக் கயவனின் மூச்சே புயலாகத் தாக்கியிருக்கிறது.

இதோ, செய்தியைப் படித்துப் பார்! செந்தேள் ஆயிரம் சேர்ந்து நம் இதயத்தில் கொட்டுவது போல் இருக்கிறது!

தினகரனில் வந்தபடி செய்தி விபரம் வருமாறு:-

"கேரள மாநிலம் பூந்துறை என்னுமிடத்தைச் சேர்ந்தவர் ஆண்ட்ரூஸ். இவரது மகள் ஷாலினி (வயது ஏழு) 2-ம் வகுப்பு படித்து வந்தாள். ஆண்ட்ரூசின் மனைவி இறந்து விட்டதால் அவர் மற்றொரு திருமணம் செய்து கொண்டார். ஷாலினியும் அவளது சகோதரனும் பாட்டி வீட்டில் வளர்ந்து வந்தனர். இவர்களது பக்கத்து வீட்டைச் சேர்ந்த செபாஸ்டியன் (வயது 22). இவருக்கு சிறுமி ஷாலினி மீது ஒரு கண் இருந்தது. சிறுமியாக இருந்தாலும் ஷாலினி அழகாக இருப்பாளாம்.

இந்த நிலையில் கிறிஸ்துமஸ் பண்டிகை தினத்தன்று பூந்துறை தேவாலயத்தில் கிறிஸ்துமஸ் கொண்டாடப்பட்டது. தேவாலயத்திற்கு செபாஸ்டியனும் சென்றிருந்தார். குடும்பத்துடன் ஷாலினியும் தேவாலயம் சென்றிருந்தாள். அங்கு ஷாலினியிடம் தேவாலயத்தின் மேல் பகுதியில் உள்ள மணியை காட்டி தருவதாக செபாஸ்டியன் கூறினார்.

சிறுமியும் அவருடன் ஆலயத்தின் மேல் பகுதிக்கு சென்றாள். அப்போது அங்கு வைத்து சிறுமியை செபாஸ்டியன் கற்பழித்தார். சிறுமி தப்பியோட முயன்றாள். ஆனால் அந்தக் காமவெறியனின் இறுகிய பிடியில் இருந்து தப்ப முடியவில்லை. தொடர்ந்து மூச்சு பேச்சின்றிக் கிடந்தாள். அவள் செத்து விட்டதாக செபாஸ்டியன் நினைத்தார். ஆனால் உடலில் சில அசைவுகக் கூறி விடுவாள் என நினைத்த செபாஸ்டியன், ஒரு கயிற்றால் சிறுமியின் கழுத்தை நெரித்து கொலை செய்தார். பின்னர், பிணத்தைத் தேவாலயத்தின் மேல் பகுதியில் மறைத்து வைத்து விட்டு வந்தார்.

வெகுநேரமாகியும் சிறுமியைக் காணாததைத் தொடர்ந்து வீட்டினர் தேடினர். அப்போது சிலர் செபாஸ்டியனுடன் சிறுமியைப் பார்த்ததாகக் கூறினர். தொடர்ந்து பூந்துறை போலீசில் புகார் செய்யப்பட்டது. போலீசார் செபாஸ்டியனிடம் துருவித் துருவி விசாரித்ததில் உண்மைகள் தெரிய வந்தது. போலீசார் அவரைக் கைது செய்தனர்.

உயிரிழந்தவள் - அதற்கு முன்பு வெறியனின் பிடியில் சிக்கி - தேவாலயத்திலேயே தன் திருவிழந்தவள் பெயர் ஷாலினி!

அந்த மகிழம்பூவை மிதித்துத் துவைத்தவனுக்கோ செபாஸ்டியன் என்று பெயர்!

அதனால் மதம், விசுவரூபமெடுக்கவில்லை! மதச் சண்டைக்கு எள்ளின் மூக்களவு கூட இடமில்லாமற் போயிற்று. இருவரும் வெவ்வேறு மதங்களைச் சேர்ந்தோராக இருந்திருப்பின், பிரளயம் ஒன்றே ஏற்பட்டிருக்கும்! எரிமலையே வெடித்துச் சிதறி யிருக்கும்!

ஆம்! நாட்டு நிலையும், அரசியல் நிலையும், சமுதாய நிலையும் அப்படித்தானே இருக்கிறது!

பூந்துறை தேவாலயத்தில் மட்டுமல்ல! வசதியற்ற இடமாயினும், வாய்ப்பு மாத்திரம் கிடைத்து விட்டால், மனச்சாட்சியில்லாதவர்கள், தங்களின் பசி தீர்த்துக் கொள்ள, எந்தப் பாதகம் செய்யவும் தயாராக இருப்பார்கள் என்பதற்கு, பல எடுத்துக்காட்டுகளில் இதுவும் ஒன்று!

கயவன், கைது செய்யப்பட்டான் என்று செய்தி முடிகிறது!

இவர்களுக்கு விமோசனமே கிடையாது என்பார்கள் சான்றோர்கள்!

விடுதலையே கிடையாது என்கிற அளவுக்கு, இவர் போன்றோர் தண்டிக்கப்பட வேண்டுமே என்று செய்தியைப் படிக்கும் நமதுள்ளம் பதறுகிறது!

அன்புள்ள,

மு.க.

29-12-2002

2871. வைகறைப் பொழுதாக விடியும் வருங்கால நம்பிக்கை!

உடன்பிறப்பே,

நமது தலைவர் அண்ணா அவர்கள் சொல்லேருழவர் - எழுத்து வேந்தர் - கருத்துக் கருவூலம் - சிந்தனைச் சுரங்கம் - எண்ணங்களை வண்ணமாக வடிக்கும் ஆற்றலாளர் - அவரைப் பற்றி இத்தனை ஒப்புக் கொள்ளப்பட்ட உண்மைகளுக்குப் பிறகும்; இன்னும் பலவற்றை அறிந்துகொள்ள வேண்டும், அதற்காக இன்னும் படிக்க வேண்டியவைகளைப் படிக்க வேண்டுமெனத் துடித்தவர் அவர்.

கடைசிப் பயணமாகக் காஞ்சிபுரம் பயணம் செல்கிறோம் எனத் தெரிந்தும் - செல்லும் வழியில் வெல்லத் தமிழில் உரை நிகழ்த்தி, கலைவாணர் சிலையை சென்னையில் திறந்து வைத்து விட்டுத் தான் சென்றார்.

வரவேற்று அழைத்துச் செல்ல மருத்துவமனைக்கே வந்துவிட்டது மரணம் என்பதை அறிந்து கொண்ட பிறகும்; படித்து முடிக்காமலிருந்த புத்தகம் ஒன்றைப் படித்து முடித்து விட்டுத்தான் மனநிறைவு கொண்டார்.

காலம் இனி நாட்கணக்குதான் என உணர்ந்த நிலையிலே தான் 'காஞ்சி' இதழில்; உயில் போன்று - நமக்கெல்லாம் உயிர் போன்று ஒரு கடிதத்தை 'தம்பிக்கு மடல்' என எழுதினார்.

இப்படி எழுதவோ பேசவோ எதிலும் ஓய்வு கொள்ளாமல் இறுதிவரை அலுப்பின்றி அயராதுழைத்து எழுதிக்கொண்டும் பேசிக் கொண்டும் அண்ணா இருந்தமைக்கு; அவர் முதலில் ஏற்றுக்கொண்டிருந்த தலைமையும் ஒரு காரணம் - ஆம்; அதுவேதான் காரணம்!

முடியாத அளவுக்கு உடல் தளர்ந்த நிலையிலும் - தந்தை பெரியார் முடிவாகப் பேசிய உரை தானே; "இறுதிப்பேருரை"

என்று இன்றைக்கும் போற்றப்படுகிறது. அவர் எழுதிக் கொண்டேயிருப்பதையும் பேசிக்கொண்டே யிருப்பதையும் அருகிலிருந்து பார்த்து சுவைத்த அந்தக் குருகுலத்து மாணவர்களில் ஒருவனாக சில காலம் நானும் இருந்தவனல்லவா!

உடன்பிறப்பே, ஆளாக்கியவரும், வழிகாட்டியவருமான இரு தலைவர்களைப் பற்றி நான் இந்தக் குறிப்புக்களை அளிப்பதற்குக் காரணம் இல்லாமல் இல்லை.

இந்த இரு மேதைகளையும் பின்பற்றித்தான்; அவர்கள் அளவுக்கு இல்லாவிடினும் அவர்கள் கடைப்பிடித்த எழுத்து, பேச்சு, செயல் ஆகியவற்றைத் தாங்களும் கடைப்பிடித்து; அவற்றின் வாயிலாக இயக்கத்தின் கொள்கை கோட்பாடுகளைப் பரப்பிடும் பணியில் திரும்பிய பக்கமெல்லாம் திறமைமிகு இளைஞர்கள் தோன்றினார்கள். அதுவும் புகழுடன் தோன்றினார்கள். அரசியல் மட்டுமில்லாமல் அருந்தமிழ் இலக்கியங்கள், வரலாற்றுச் செய்திகள், விஞ்ஞானப் புதுமைகள், பகுத்தறிவுச் சிந்தனைகள் என பல்வேறு துறைகளில் பற்றுக்கொண்டும் - அவற்றைப் பரப்பிடும் ஆர்வங்கொண்டும் திராவிட இயக்கம் வளர்த்தனர்.

எத்தனை எழுத்தாளர்கள் - எத்தனை அருமையான ஏடுகள் - எத்தனை புத்தகங்கள் - மலைப்புத் தோன்றுமளவுக்கு; மாற்றாருக்குத் திகைப்புத் தோன்றுமளவுக்கு மளமளவென - மலையுச்சியென வளர்ந்த இந்த எழுச்சியில் ஒரு தொய்வு!

ஆம்; எழுதுங்களேன் என்று வலியுறுத்துமளவுக்கு இனம் தெரியாத ஒரு சோம்பல் இளைய தலைமுறையிடம் - குறிப்பாக நமதியக்கத்தில் காண முடிகிறதே; அது ஏன்?

இந்தக் கேள்வியை இன்னமும் இரவு பகல் என்று பாராமல் இடையறாது எழுதிக் கொண்டிருக்கிற நான் தானே கேட்கிறேன்! அந்த உரிமை இருப்பதால்!

எனக்குள்ள வருத்தமெல்லாம் நமது பத்திரிகை அலுவலகங்களில் பணியாற்றுகிற ஆசிரியர் பகுதியைச் சேர்ந்த வாலிபர்கள் கூட; அன்றாடம் நாளேடுகளை, ஏன்; வார ஏடுகளைக் கூடப் பார்ப்பதில், படிப்பதில் அக்கறை காட்டுவதில்லையே என்றுதான்!

முரசொலியில் நான் எழுதுகிற கடிதத்தையே நானே மூன்று முறை அது அச்சான பிறகுகூட படிப்பேன். அதற்குப் பிறகு அது வெளிவந்த பிறகும் ஒரு முறை படிப்பேன். கழக முன்னணியினர் சிலரைப் பார்க்கும்போது "நேற்று முரசொலி படித்தீர்களா?" என்று கேட்டால் "படிக்கவில்லை" என்று பெருமிதமாகச் சொல்வார்கள்; அல்லது படித்ததாக என்னிடமே பொய் சொல்வார்கள். இவர்களைப் போய் நான் ஏதாவது கட்டுரை, புத்தகம் எழுதக் கூடாதா என்று கேட்டு என்ன பயன்? சிலர் இருக்கிறார்கள் - எழுதாமலே எந்நேரமும்

இயக்கத்திற்காக உழைத்துக் கொண்டிருப்பவர்கள் - அவர்கள் எழுத்தாற்றல் பேச்சாற்றல் பெறாமல் இருக்கலாம், ஆனால் இரண்டையும் சேர்த்து நமது லட்சியம் வென்றிடப் பாடுபட்டுக் கொண்டிருப்பவர்கள்.

அவர்களும் ஊக்கம் பெற்றிட - உற்சாகமடைந்திட - புதிய கருத்துக்களை அறிந்திட - எழுத்தாற்றல் பெற்றிருப்போர் 'எமக்கென்ன வந்தது' என்பது போல இருந்திடாமல்; இலட்சிய வெற்றிக்காக எழுதிடலாம்! பேசிடலாம்!

ஆனால் இப்போது அதிலே ஒரு தேக்கம் காண முடிகிறது. அதுவே எனக்கு ஏக்கமாகவும் அமைகிறது!

எத்தனையோ எழுத்தாளர்களின் பேனாக்கள் ஈட்டிமுனைகளாக மாறி; நமது உடன்பிறப்புகளுக்கு அறப் போர்க்களத்திலே பயன்பட்டிருக்கின்றன.

கதைகளாக - கட்டுரைகளாக - கவிதைகளாக அவர்தம் கற்பனை உலைக்களத்தில் இந்தச் சமுதாயம் முன்னேறுவதற்கு தயாரிக்கப்பட்ட கருவிகள் ஆயிரம்! ஆயிரம்! எண்ணி மாளாது!

இப்போதோ; ஒன்றிரண்டு, ஓரிருவர் என விரல் விட்டு எண்ணிடக் கூடிய அளவுக்கு!

அவர்களையும் நான் வாழ்த்தி, பாராட்டி உற்சாகப் படுத்தாமலிருந்தால் இன்னும் இலட்சிய சிந்தனையாளர்களுக்குப் பஞ்சம் வந்து விடுமோ என்ற பயத்தில்தான் இதை எழுதுகிறேன்.

இயக்கத்துக்கு ஒரு பிரச்சினை இப்போது! வேண்டுமென்றே நமது விரோதிகளால் இட்டுக் கட்டப்பட்ட பிரச்சினை! இதைப்

பெரிதுபடுத்தி, தமிழகத்தில் பெரும்பாலானோர் எனப்படும் இந்துக்களுக்கு என்னையும் கழகத்தையும் பகை எனக் கற்பித்து அந்தப் பொய்மாயத்திலேயே கழகத்தின் மீது புழுதி வாரித் தூற்றி, தங்கள் ஆதிக்கத்தை நிலைப்படுத்திக் கொள்ளலாம் என ஒரு நப்பாசை சில நயவஞ்சகர்களுக்கு!

அவர்களுக்கு சரியான விளக்க மிகுந்த பதிலை; நாவன்மையும் சொல்வன்மையும் கொண்ட நமது தம்பிமார்கள் இருவர் அளித்திருப்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். என்னை மையமாக வைத்து கழகத்தை வீழ்த்திட முனைவோர்க்கு அளிக்கப்பட்ட பதில் என்பதால் என்னைப் பற்றி தம்பிமார்கள் மிகையாக எழுதியிருப்பதையும் சொல்லியிருப்பதையும் அப்படியே தர வேண்டிய சூழலுக்கு ஆளாகியிருக்கிறேன் - முதலில் கழக வெளியீட்டுச் செயலாளர் தம்பி திருச்சி செல்வேந்திரன் முரசொலியில் எழுதிய கட்டுரையின் ஒரு பகுதி வருமாறு:

"கலைஞர் மதத்தின் எதிரி பக்தர்களின் எதிரி என்கிறார்கள். ஆரம்ப காலம் தொட்டுத் தொடர்ந்து இதனையே செய்வதாகக் சொல்கிறார்கள். அதற்காகவே சட்டம் அவர் பேரில் பாயும் என்கிறார்கள். சொல்பவர்கள் இந்து மத ஆதரவாளர்கள் எனச் சொல்லிக் கொள்ளும் கட்சியினர் - கூட்டத்தார்.

கலைஞர் மதவாதியாகிவிட்டார் - இந்து மதச்சார்பான கட்சிக்கு ஆதரவாளராகி விட்டார்; சிறுபான்மையினரின் எதிரியாகிவிட்டார். எனவே அவரைப் புறக்கணிக்க வேண்டும் என்கிறார்கள் மதச்சார்பற்ற இடதுசாரிகள் என்று சொல்லிக் கொள்ளும் மற்ற சில கட்சியினர், கூட்டத்தார்! இந்த இரண்டில் எது சரி? முதல் குற்றச்சாட்டா - இரண்டாவது குற்றச்சாட்டா?

இந்து மத எதிரி கலைஞருக்கு ஓட்டுப் போடாதே. அவர் முஸ்லிம் கிறித்துவ சிறுபான்மையினரின் ஆதரவாளர் என்பது ஒரு கட்சி! இல்லை ; அவர் இந்து ஆதரவாளர் - எனவே முசுலிம்களும் கிறித்தவர்களும் ஓட்டுப் போடாதீர்கள் என்பது மற்றொரு கட்சி. இது அவர்களுக்கே வேடிக்கையாய் தெரியவில்லையா? இதில் எது உண்மை?

இரண்டு அணிகளுக்குள்ளும் மறைந்து நின்று - திராவிட இயக்கத்தின் பாரம்பரிய எதிரிகள் நடத்த முயலும் வாலி வதம்தான்

இந்தப் பிரச்சாரப் போர்! எதைச் சொல்லியாவது கலைஞரை ஒழிக்க வேண்டும்.

மதச்சார்பற்ற அணி மேடையிலிருந்தே ஒரு நல்லவரின் குரல். கலைஞர் மதவாதியல்ல. அவர் சேர்ந்துள்ள அணிதான் சரியில்லை என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் நல்லக்கண்ணு கூறுகிறார். திராவிட இயக்கத்தின்- இனத்தின் பாரம்பரிய எதிரிகள் பட்டியலில் இந்திய கம்யூனிஸ்டுகள் பங்கு கொள்வதில்லை பல நேரங்களில்!

பெரியாரின் பாதையிலிருந்து கலைஞரும் தி.மு.க.வும் விலகி பாரதிய ஜனதாவின் பாதையில் போய் விட்டார்கள் என்று மேலே கண்ட இரண்டு அணியினரும் பாடும் அதே பாட்டை 'ஒருவர்' வேறு 'மெட்'டில் பாடுகின்றார்.

பெரியாருடனும் - அவர் கொள்கையுடனும் ஆன கலைஞரின் உறவு கொள்கை உறுதியால் வந்தது. கொள்கை புரிந்து - கோட்பாடு தெரிந்து - கழகத்தின் களப்பணியாளனாய் - கர்ம வீரனாய் - விழுப்புண்களோடு பாண்டிச்சேரி வீதியில் வீழ்ந்து கிடந்தபோது பெரியாரால் பரிந்தெடுத்துக் கொள்ளப்பட்டு 'குடியரசு' ஏட்டின் துணை ஆசிரியராய்த் தொடங்கியது கலைஞருடைய பெரியார் தொடர்பு,

கலைஞர் தன் கொள்கையில் உறுதியாய் இருக்கிறார். அதற்காகத் தன் கடமைகளில் 1960 தொடங்கி இன்றுவரை மத உணர்வுகளுக்கு எதிராக நடந்துகொண்ட ஒரு சம்பவத்தைக் காட்டுங்கள். திருவாரூர்த் தேரோட்டம் முதல் இந்து சமய அறநிலையத் துறைக்குட்பட்ட உட்படாத கோவில்களில் நடந்து முடிந்த திருக்குட நன்னீராட்டு விழாக்கள் எத்தனை? எண்ணில் அடங்குமா?

மன்னார்குடி ராசகோபாலசாமி கோவில் வாசகர் கொலை செய்யப்பட்டபோது சட்டத்திற்கும் அப்பாற்பட்டு அர்ச்சகர் குடும்பத்திற்கு கலைஞர் செய்த மனிதாபிமான உதவியை அர்ச்சகர்கள் சங்கமே பாராட்டவில்லையா? நேர்மையுள்ளம் கொண்ட பிராமணர்கள் பாராட்டவில்லையா?

ஏன்? இதே காஞ்சி சங்கர மடத்தார் கலைஞரை வாழ்த்தி அவர் இருக்குமிடத்திற்கே 1989 தேர்தலுக்கு முன்னர் பிரசாதம்

அனுப்பவில்லையா? கலைஞர் அதனை பெற்றுக்கொண்டார் என்பதற்காக 'விடுதலை' கண்டனம் செய்யவில்லையா? கலைஞர் தன்னுடைய கருத்துக்களை அறுபதாண்டுகளாய் மாற்றிக் கொள்ளவில்லையே!

நான்கு வேதங்களையும் கரைத்துக் குடித்த வேத விற்பன்னர் என இன்று வரை பாராட்டப்படும் அக்னிஹோத்ரம் ராமானுஜ தாத்தாச்சாரியார் எனும் 90 வயது நிறைந்த பெரியவர், சென்ற மாதம் கூட கலைஞரின் கருத்தை ஏற்றுக்கொண்டுள்ளார், பாராட்டியுள்ளார். (குமுதம் ரிப்போர்ட்டர் பேட்டி)

திருமுருக கிருபானந்தவாரியார், கண்டித்துள்ளாரா? "அவரும் (கடவுளும்) கருணாநிதி- இவரும் கருணாநிதி" என்று மனமுருகக் கலைஞரைப் போற்றி இருக்கிறார்.

சக்தி வழிபாட்டு இயக்கத்தின் தலைவர் மேல்மருவத்தூர் பங்காரு அடிகளார், கோபப்பட்டிருக்கிறாரா?

பல ரிஷிகளும், பல அசுரரும் பிறந்த கதைகளைப் பாசுரங்களை, 'உலா'க்களை, பிரபந்தங்களை, அந்தாதிகளை ஒரு தந்தை தன் பிள்ளைகளுக்கும் - பெற்றோருக்கும் படித்துப் பொருள் சொல்ல முடியுமா? இவைகளை எழுதியவர்கள் நீங்கள்! அச்சுப் போட்டவர்கள் நீங்கள்? கடையில் வைத்து விற்று காசு பண்ணுபவர்கள் நீங்கள்! இவைகள் விற்கப்படும் இடங்களே திருக்கோவில்களில் உள்ள மண்டபங்கள்! மனம் புண்படுவது உண்மையானால் மனுஸ்மிருதியையும் இந்த நூல்களையும் தடை செய்யுங்கள். இருப்பதனால்தானே படித்துக் காட்டுகிறார் கலைஞர்? எழுதியவர்கள் மகான்கள். அச்சுப் போட்டவன் பரம பக்தன். விற்பவன் பக்திமான். படித்துச் சொல்கிறவன் மட்டும் மாபாவியா?" உடன்பிறப்பே தம்பி திருச்சி செல்வேந்திரன் எழுத்தும் சொல்லும் வாதிடும் திறன் பெற்றவை! வென்றிடும் புகழ் பெற்றவை!

இதோ - போரிடும் வாள் போல - சீறிடும் சிம்மம் போல மற்றொரு முழக்கம் - ஆம்; சொல் முழக்கம், சிறைச் சாலை சந்திப்பிலே வெளிப்பட்டு சந்தித்த தம்பி நன்மாறன் அவர்களால் எழுத்து முழக்கமாக 'சங்கொலி' எனும் ம.தி.மு.க. இதழில் எதிரொலித்துள்ளது. வேலூர் சிறையிலே அடைபட்டிருக்கும்

தம்பி வைகோ தன்னை சந்திக்க வந்தவரிடம் சொன்னது இவ்வாறு கட்டுரையாக வந்துள்ளது.

"தமிழக அரசியல் அரங்கத்தில் "அ.தி.மு.க.வின் பொதுக்குழு ஒரு அதிரடித் தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது குறித்துக் கூறவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. தி.மு.கழகத் தலைவர் அண்ணன் கலைஞர் அவர்கள் இந்துக்களை இழிவுபடுத்தியதாகக் குற்றம் சாட்டி அரசாங்கம் வழக்குத் தொடுக்க வேண்டுமென்பதுதான் அத்தீர்மானம். அம்மையார் காலால் இட்டதைத் தலையால் செய்துகாட்ட வேண்டிய துர்ப்பாக்கியம் அக்கட்சியினருக்கு!

சமய நம்பிக்கையை எதிர்த்துப் பேசவில்லை கலைஞர். இழிவுபடுத்தும் நோக்கம் கிஞ்சிற்றும் இல்லை, அவர்தம் பேச்சில்! உரிய விளக்கங்களைத் தக்க விதத்தில் தந்த பின்னரும் "வழக்குப் போடுவோம்" என ஆர்ப்பரிக்க என்ன காரணம்! எல்லாம் அதிகாரத் திமிரும், அகங்காரமும், தருகிற ஆணவம்தான் காரணம்! மணிமுடி தரித்த மன்னர்களும் மண்டலாதிபதிகளும் ஆணவத்தால் அழிந்து சரித்திரத்தின் குப்பைத் தொட்டிக்குப் போய்ச் சேர்ந்தார்கள் என்பது அதிகார வெறிபிடித்த அம்மையாருக்கு எப்படிப் புரியும்?

"வழக்கு என்னை வளைக்குமானால் அந்நாளே என் வாழ்விலோர் திருநாள்!" என்று முழங்கினார் முத்தமிழ் அறிஞர். அவர் சந்திக்காத வழக்குகளா? களங்கள் ஒன்றா, இரண்டா? அவர் கண்டவை முப்படைகளையும் சுட்டு விரலசைவில் ஏவிவிடும் வல்லமையுடன், "உயிரையே பறித்தாலும் கேட்பார் இல்லை" எனும் அதிகார பலத்துடன் நெருக்கடி நிலைச் சர்வாதிகாரம் கொக்கரித்தபோது, "கருத்துச் சுதந்திரத்தை" நாட்டிலே நிலைநாட்ட சர்வ பரித் தியாகத்துக்கும் தயார் என்று தன்னந்தனியாக "தானே தயாரித்த கையெழுத்துப் பிரசுரத்தாள் களுடன் அண்ணா சாலையில் மக்களைச் சந்தித்த திராவிடத்துச் சிங்கத்தை" எதிர்த்து இன்று வஞ்சக "வாகம்" அன்றோ வரிந்து கட்டி ஆர்ப்பரிக்கிறது! அந்தச் சம்பவம் 1976 ஜூன் 3ஆம் நாள் நிகழ்ந்த போது பாளையங்கோட்டை சிறைச்சாலையில் கவலை யோடும், ஆத்திரத்தோடும் தோழர்களுடன் நான் குமுறிய பழைய நினைவுகள் வலம் வருகின்றன.

"அண்ணா கண்ட கழகம் தடை செய்யப்படும்" என்று டில்லி துரைத்தனம் முடிவு செய்துவிட்டது எனும் செய்தியை உள்ளடக்கி "அழிந்தது இனி இயக்கம்" என்ற தலையங்கங்களும் வெளிவந்த நேரம், தஞ்சை பெத்தண்ணன் கலையரங்கில் கலைஞர் அவர்கள் "எதிரிகள் வியூகத்தை உள்ளிருந்து உடைத்து வெளியேற பாரதத்துக் கண்ணன் கற்றுத் தர வில்லை அபிமன்னனுக்கு. ஆனால் காஞ்சி தந்த அண்ணன் எனக்குக் கற்றுத் தந்துள்ளார். உள்ளிருந்து பகைவர் வியூகத்தை உடைத்து வெளியேறுவேன்" என்று முரசொலி பிரசுரித்த பேச்சினையும் "மரணத்தை முத்தமிட்டான் கணைக்கால் இரும்பொறை மானம் காக்க! அவ்வழியில் மடிவோமே தவிர மண்டியிடோம்" என்ற உடன்பிறப்பு மடலினையும் தோழர்கள் மத்தியில் கொட்டடியில் உரக்க நான் வாசித்ததும் மனக் கண்ணில் நிழலாடுகின்றன.

இதனை நான் தம்பி நன்மாறனிடம் விவரிக்கும் நாள் வெண்தாடி வேந்தரின் சுவாசம் அடங்கிய நாள்! ஆனால் அவர் தலை நிமிர வைத்த உணர்வுகள் என்றும் மறையாது! அண்ணன் பேராசிரியர் அவர்களின் பிறந்த நாள் விழாப் பொதுக் கூட்டத்தில் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரையினைப் படித்த போது என் மனதில் ஏற்பட்ட வேதனையைச் சொல்லவே விரும்புகிறேன். "சாக்ரடீசாகச் சாகவே விரும்புகிறேன் - சாணக்கியனாக வாழ விரும்பவில்லை" எனக் கூறியுள்ளார் கலைஞர் தனது உரையில், சாணக்கியனாக வாழ விரும்பவில்லை என்றது நூற்றுக்கு நூறு சரி - வஞ்சகத்தாலும், நரித்தனத்தாலும் எண்ணியதைச் சாதிக்க வேண்டும் என்றான் கவுடில்யன்.

"ஈன்றாள் பசிகாண்பான் ஆயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை"

என்ற தமிழ் மாமுனியின் முப்பாலுக்கு ஓவியம் தீட்டியவரல்லவா கலைஞர். அக்கருத்தினையே தன் உரையில் தந்துள்ளார். ஆனால் "சாக்ரடீசாக சாக விரும்புகிறேன்" இப்படிச் சொல்லலாமா அவர்! சொல்லிடும் நிலைமைக்கு தமிழகம் தாழ்வடையலாமா?

அன்று விஷக் கோப்பையை தீர்ப்பளித்தது கிரேக்கம். மண்டிக் கிடந்த மவுடீகத்தை எதிர்த்து முழங்கினான் சாக்ரடீஸ் - வெறும் பேச்சாளன் அல்ல. யுத்த களத்திலும் ஆயுதம் ஏந்திப்

42242
க 894-8116
கருணை 35

போரிட்டவன். ஆயினும் வஞ்சகர் சூழ்ச்சி அச்சிந்தனையாளனைச் சாய்த்தது - கிரேக்கத்துத் தலைவாயிலில் "ஏன், எதனால், எப்படி" என்று கேளுங்கள் எனப் பகுத்தறிவைப் பிரகடனம் செய்த சாக்ரடீசை தமிழ்நாட்டின் கோடிக்கணக்கான மக்களுக்கு அறிமுகம் செய்தவரே கலைஞர் அவர்கள்தான். ராஜா ராணி திரைப்படத்தில் கலையுலக இமயமாம் நடிகர் திலகம் "சாக்ரடீசாக" மாற "ஏதென்சு நகரத்து எழில் மிக்க வாலிபர்களே! இதோ சாக்ரடீசு அழைக்கிறான் ஓடி வாருங்கள்" என்று கன்னலும் கனலும் கலந்திட்ட தமிழில் வசனங்களைத் தந்தார் கலைஞர். அது அன்றைய கிரேக்கத்தினைச் சித்தரிக்கும் சித்திரம். ஆனால் திராவிட இயக்கம் வாகை சூடிய தாயகம் நம் தமிழகம்.

"சாக்ரடீசினைச் சாய்த்த கிரேக்கமாகிவிட தமிழகத்தை அனுமதியோம்" என அண்ணாவின் தம்பிமார்கள் சபதம் ஏற்க வேண்டிய வேளை வந்து விட்டது. தம்பி என்ற உரிமையுடன் வேண்டிக் கொள்கிறேன். "அண்ணன் அவர்களே! இனி இக் கருத்தை நீங்கள் சொல்லவேண்டாம். நாம் தோற்று விடவில்லை. தோற்கவும் மாட்டோம். திராவிட இயக்கம் வீழ்ந்திடாது. வீறு கொண்டு எழும். கண்ணின் மணிகளே, இரண்டு வாரங்களுக்கு முன்னரே நான் சொன்னேன். 'திராவிட இயக்கத்தின் வைரிகள் சல்லடம் கட்டுகிறார்கள். அழித்துவிடலாம் என்று மனப்பால் குடிக்கிறார்கள். இந்த அறை கூவலை எதிர்கொண்டு சந்திக்க ஆயத்தமாவோம்' எனக் கூறினேன். 'நான்கு எருதுகள் பிரிந்து சென்றதால் தனித்தனியாக சாய்க்கப்பட்டன' என்று மாணவப் பருவத்துப் பாடத்தை உடன்பிறப்பு பாடலில் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டதை ஆழமாக திராவிட இயக்க உணர்வாளர்கள் அனைவரும் சிந்தித்துச் செயல்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டு விட்டது.

உடன்பிறப்பே,

இரு தம்பிமார்கள் - ஒருவர் தி.மு.க.வில் என்னுடன் இருப்பவர்களில் ஒருவர் - இன்னொருவர் இருந்தவர் - வேறு இயக்கம் கண்டாலும் என் இதயத்தில் இருப்பவர்களில் ஒருவர்!

இவர்களிருவருக்கு மட்டுமல்ல, இந்த உணர்வும் தெளிவும், இலட்சியப் பற்றும் இன உணர்வும் கொண்ட இளைஞர்கள் அனைவருக்கும் வர வேண்டும்.

ஆம்; வந்தாக வேண்டும்! அதற்கே இந்தக் கடிதம். இந்து மதத்தை சீரழிக்கும் இழிவுகளும் கேடுபாடுகளும் மனித உரிமையைப் பாழ்படுத்துவதால் அதனை எடுத்து விளக்கி; பெரியார், அண்ணா வழிநின்று மதங்களிடையே நல்லிணக்கம் காண விரும்பும் தி.மு.கழகத்தின் மீது சட்டப்படியான கடும் நடவடிக்கை எடுத்திட ஆளுங்கட்சி துடித்தெழுந்து தீர்மானிக்கும்போது தானாடாவிடினும் தன் தசையாடும் என்ற முதுமொழி செயலாக்கம் பெறும் என எதிர்பார்க்கப்பட்டு அது நிறைவேறாத நிலையில் தம்பி வைகோவின் கருத்தும், தம்பி செல்வேந்திரனின் கட்டுரையும் நெஞ்சுக்கு எவ்வளவு இதமாக இருக்கிறது தெரியுமா? வருங்காலத்தைப் பற்றிய நம்பிக்கையுமல்லவா வைகறைப் பொழுதாக விடிந்திருக்கிறது!

அன்புள்ள,

மு.க.

30-12-2002

2872. தாசர் புத்தி தலைக்கேறலாகுமா?

உடன்பிறப்பே,

தந்தை பெரியார், சமுதாயத்துக்கு, நாட்டுக்கு, ஏன், ஒவ்வொரு தனி மனிதனின் தன்மான வாழ்வுக்குத் தேவையான எத்தனையோ கருத்துகளைக் கூறியிருக்கிறார்.

சுயமரியாதைத் திருமணங்களால் தமிழனுடைய மானம் மரியாதை எவ்வாறு காப்பாற்றப்படுகிறது என்று அவர் பல திருமணங்களில் சுட்டிக்காட்டிப் பேசியதைத்தான் எடுத்துக்காட்ட வேண்டுமேயல்லாமல்,

“திருமணம் என்பது குட்டி போடுற வேலைக்காக!”

என்று அவர் திருமண விழாக்களில் கிண்டலாகக் கூறியதை வைத்துக்கொண்டு, திருமணமே கூடாது என்ற முடிவுக்கு அவரது கட்சித் தொண்டர்கள் வந்து விட முடியுமா? அப்படி வந்து விட்டார்களா என்றால், இல்லை என்ற பதில்தான் கிடைக்கும்.

திருமணத்திற்குத் தலைமையேற்க ஒப்புக்கொண்டு, அதற்குரிய போக்குவரத்துக்கான வழிச் செலவும் பெற்றுக்கொண்டு மணவிழாவில் தலைமையேற்றுப் பேசும்போது, கல்யாணம் என்பது ஒரு முட்டாள்தனமான காரியம் என்றுதான் பெரும்பாலும் பெரியார் தன் பேச்சைத் தொடங்குவார். அதற்காகத் திருமண வீட்டார், உடனே திருமணத்தை நிறுத்தி விட வேண்டும் என்பது அவரது எண்ணமா? இல்லை! இல்லவே இல்லை!

சிலப்பதிகாரமும், ராமாயணத்தைப் போல, மகா பாரதத்தைப் போல ஒரு புராண இதிகாசம் என்ற கருத்தில் பெரியார் என்றைக்கோ எழுதியதை இன்றைக்கு சோவும், வீரமணி அவர்களும் ஜோடி சேர்ந்துகொண்டு எடுத்துக்காட்டி, எனவே கண்ணகி சிலையை மீண்டும் வைக்க வேண்டுமென்பதை மறுத்துரைக்கிறார்களே!

வீரமணி அவர்களை சிந்தித்துப் பார்க்குமாறு கேட்டுக்கொள்கிறேன். பெரியார் கண்ணகியைப் பற்றிக்

கடுமையாகக் கூறியதை, கை தட்டி வரவேற்றுத் தனது பத்திரிகையில் படம் போட்டு வெளியிட்டுப் பரவசமடைகிற சோ அவர்கள், பெரியார் சீதையைப் பற்றியும், வால்மீகி ராமாயணத்தில் சீதையை இராவணன் எப்படித் தூக்கிச் சென்றான் என்பதைப் பற்றியும், சீதைக்கு, லவனும், குசனும் எப்படிப் பிறந்தார்கள் என்பதைப் பற்றியும் எழுதியிருப்பதையும், சொல்லியிருப்பதையும், தனது துக்ளக் ஏட்டில் வெளியிட்டு மகிழ்வாரா என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டாமா?

தமிழ் மக்களுக்கென்று வரலாறுகள் தொன்மைக் காலத்திலிருந்து எழுதப்பட்டதில்லை. அண்மையில் தி.மு.க. ஆட்சியில்தான் டாக்டர் மு.வ. போன்ற தமிழறிஞர்களைக்கொண்டு தொல் பழங்காலம் தொடங்கி, தொடர்ந்திடும் வரலாற்று ஏடுகளை உருவாக்குகிற முயற்சி மேற்கொள்ளப்பட்டது என்பதை நாடு நன்கறியும்.

இந்த நிலையில் நமது சங்க கால இலக்கியங்களும், சிலப்பதிகாரம் போன்ற காவியங்களும்தான் தமிழக வரலாற்றுக் குறிப்புகளை, ஏதோ ஒரு அளவுக்காவது வழங்கிக்கொண்டிருக்கின்றன.

திருக்குறளிலே கூட சில பகுதிகள் குறித்து கருத்து வேறுபாடுடைய பெரியார் அவர்கள், அவரே முன்னின்று குறள் மாநாடு நடத்தியதை மறந்து விட முடியாது.

இஸ்லாம் மதம், கிறிஸ்துவ மதம் போன்ற மதங்களைக்கூட பெரியார் அவர்கள் கடுமையாக விமர்சித்தது உண்டு. ஆனால் அதே நேரத்தில், அந்த மதங்களில் மனித நேயம் போற்றப்படுவதையும், சாதி வேறுபாடுகளால் சமத்துவநிலை பாதிக்கப்படாமலிருப்பதையும், அவர் சிலாகித்துப் பேசியும் இருக்கிறார். அவர்கள் அழைக்கிற விழாக்களுக்குச் சென்றுமிருக்கிறார்.

இன்னும் ஒரு படி மேலே சென்று, தன்னை ஒரு இந்து பகுத்தறிவுவாதி என்றும் கூறியிருக்கிறார்.

நமக்குச் சரியென்று படாத சில நம்பிக்கைகள் மற்றவர்களுக்குச் சரியென்று படும்போது, அவர்களாக உணர்ந்து திருந்திக்கொள்ளாத வரையில் வலியச் சென்று நமது கருத்தை வற்புறுத்தித் திணிக்கக் கூடாது என்பதில் பெரியார் உறுதியாக

இருந்தவர். அதற்காக தனது கருத்துக்குத் தாழ்போட்டு மூடிவைக்க வேண்டுமென்று அஞ்சுகிற நெஞ்சமும் படைத்தவரல்ல அவர்!

தமிழ் மக்களிடையே உலவுகிற பல்வேறு பழங்கதைகளில் அல்லது காவியங்களில் அல்லது இதிகாசங்களில் காணப்படும் பெண்களில் தனித்தன்மை வாய்ந்தவள் கண்ணகி - ஒரு நடுத்தரக் குடும்பத்திலே பிறந்து, நாடாண்ட பாண்டிய மன்னனையே நீதி கேட்டு முழக்கமிட்ட வீராங்கனை - அந்தக் கண்ணகி!

"சிலப்பதிகாரம், காலத்தையும் கடந்த கருத்தமைதி கொண்டது. அதன் போதனை தமிழ்நாட்டில் மட்டும் முடங்கிக் கிடப்பதல்ல! அது வையகம் முழுமைக்கும் உரிய பாடம்! உயர்ந்த தரமுள்ள காவியம்! உலக மகா காவியங்களில் ஒன்றெனக் கருதப்பட வேண்டும்"

என்று அறிஞர் அண்ணா கூறியுள்ளது, பெரியார் கருத்துக்கு எதிரானதல்ல!

பாவேந்தர் பாரதிதாசன் எழுதியுள்ள பாண்டியன் பரிசு என்ற நூலில் - கதாநாயகன் வேலன், கதாநாயகி அன்னத்தைப் பற்றி இருவிதமாக வர்ணிப்பது போல இரண்டு பகுதிகள்!

அன்னம் மடிந்துபோய் மண்ணுக்குள் புதைக்கப்பட்டதாகக் கேள்வியுற்று, அதனைத் தோண்டி யெடுத்து, அழுகிய நிலையில் உள்ள அந்த உருவைக் கண்டு,

பேன்நாறி வீழ்குழலைத் தேனா றென்றும்
பீளைஒழு கும்விழியை நீல மென்றும்
மேல்நாறும் சளிமூக்கை எட்பூ என்றும்
வெறுங்குறும்பிக் காதை எழில் வள்ளை என்றும்
ஊன் நாறும் ஊத்தைப்பல் வாய்உ தட்டை
ஒளிமுல்லை செவ்வாம்பல் கோவை என்றும்
தோல் நாறும் கன்னம்கண்ணாடி என்றும்"
வேலன், மனம் வெறுத்துத் தூற்றுகிறான்.

(ஆனால் அங்கு அன்னமே உயிருடன் வந்து பின்னால் நிற்கிறாள்)

உடனே வேலன், அவளைப் பார்த்து -

"இரண்டுமுகில்! இரண்டுநிலா!
உனைநான் பெற்றேன்

புதுவையம்! புதுவையம் இதுதான் என்றான்!
பூவைநீ இலாவையம் விழலே என்றான்.”

வேலன், அந்தப் பெண்ணழகை அவள் பிணமான நிலையில் தாழ்த்திக் கூறியதற்கும் - அவள் உயிரோடு வந்த நிலையில் உயர்த்திக் கூறியதற்கும் - அவனது மனோநிலைதானே காரணம்! அதாவது ஓவியமாக ஒரு பெண்ணைப் பார்ப்பதற்கும், அவள் உடலை அறுத்து கூறுபோட்டுப் பார்ப்பதற்கும் இடையே எழும் இரு வேறு கருத்துக்களில், அவள் அழகை எள்ளி நகையாடும் கருத்தை மட்டுமே எடுத்துக்கொள்வோம் என்போர், கண்ணகி பற்றிய கடும் விமர்சனத்தைப் பயன்படுத்தி, கண்ணகி சிலை நாட்டுவதை மறுப்போராவர்! மறுப்பதற்கு அவர்களின் மனோநிலை மட்டும் காரணமில்லை! யாருக்கோ மண்டியிட்டு, தமிழ்ப் பண்பாட்டை யாருடைய காலடியிலோ விழச்செய்திடத் தங்களையுமறியாத தாசர் புத்தி தலைக்கேறியதுங் கூட முக்கிய காரணமாகும்.

அன்புள்ள,

மு.க.

30-12-2002

2873. "குற்றம் பார்க்கின் சுற்றமில்லை!"

உடன்பிறப்பே,

1961ஆம் ஆண்டு வாக்கில், கழகத்தில் ஏற்பட்ட உட்பூசல் பற்றி அறிஞர் அண்ணா அவர்கள், 23.4.61 அன்று "திராவிட நாடு இதழில் தீட்டிய 'குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை' என்ற ஒரு நீண்ட கட்டுரையை நேற்றிரவு நினைவுகூர்ந்தபோது, அந்தக் கட்டுரையின் முடிவுரையாக,

கொள்கை மறவாதீர்!
கோபத்துக்கு ஆளாகாதீர்!
கூடி வாழ்வது பொறுப்பான காரியம்

- அறிவீர்.

குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை!

என அவர் உருக்கமுடன் குறிப்பிட்டிருந்தது என் மனத்தில் பதிந்திருந்தபடியால், உனக்கு இந்தக் கடிதம் எழுத வேண்டுமென்று தோன்றியது.

அண்மையில் நடந்து முடிந்த உள்ளாட்சித் தேர்தலில் கழகத்தினர் ஆங்காங்கு செயல்பட்ட முறை குறித்தும், தோழமைக்கட்சிகளின் பங்குப் பணி குறித்தும், அறிந்து பரிந்துரைக்க தலைமைக் கழகம் ஆய்வுக் குழுக்களை அமைத்தது.

இதற்கு முன்பு பல தேர்தல்களில் அமைக்கப்பட்ட ஆய்வுக் குழுக்களைத் தொடர்ந்து தலைமைக்கழகம் நடவடிக்கை எதுவும் எடுத்ததில்லை.

ஆனால் இந்த முறை, உள்ளாட்சித் தேர்தலை முன்னிட்டு, நான்கு குழுக்களாக ஆய்வுக் குழுக்கள் அமைக்கப்பட்டு, அந்தக் குழுக்கள், எந்தெந்த மாவட்டங்களுக்கு, எந்தெந்தத் தேதிகளில் வருகிறார்கள் என்று அறிவிக்கப்பட்டு அவ்வாறே குழுக்கள் சென்று கலந்து, குறித்துக்கொண்டு வந்த புகார்களைத் தலைவர்

என்ற முறையில் என்னுடனும் பொதுச் செயலாளர், பொருளாளர் ஆகியோருடனும் கலந்து பேசி, கழகக் கட்டுப்பாட்டை மீறியோர் எவரோ, அவர் மீது விளக்கம் கேட்டல் அல்லது தற்காலிகமாக விலக்கி வைத்தல் ஆகிய நடவடிக்கைகள் மேற்கொண்டு அந்த விபரங்கள் முரசொலி, தினகரன் ஏடுகள் வாயிலாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளன.

ஆய்வுக் குழு தந்த புகார்கள் அடிப்படையில், தலைமை எடுத்துள்ள இந்த மென்மையான நடவடிக்கைகள்கூட, மறுபரிசீலனைக்கு உட்படவே முடியாது என்ற நிலையில் இறுதியானவை அல்ல!

ஏனெனில் சில ஆய்வுக் குழுக்கள், போன இடத்தில் புகார்களை மட்டும் பெற்றுக் கொண்டு அவற்றைப் பட்டியலிட்டுக் கோத்து எம்மிடம் அளித்திடும் கடமையைச் செய்திருக்கிறார்களே தவிர, புகார் கொடுத்தவர்களையோ, அல்லது யார் மீது புகாரோ, அவர்களையோ நேரில் அழைத்து விசாரித்தறிந்து ஆய்வுப்பணியை ஆற்றியதாகத் தெரியவில்லை. அதாவது குறிப்பிட்ட சில பகுதிகளில்!

ஒரு சில மாவட்டச் செயலாளர் சொன்னாலே போதும் - ஓரிரு மண்டலப் பொறுப்பாளர் சொன்னாலே போதும் - மற்றும் விருப்பு வெறுப்பு அடிப்படையில் புகார் கொடுத்தவர்கள் சொல்வதெல்லாம் உண்மையாகத் தானிருக்கும் என்ற முறையில், பழைய விரோதங்களைத் தீர்த்துக் கொள்ளும் வகையில் வீண்பழி போடப்பட்ட புகார்கள்கூட, சில ஆய்வுக் குழுக்களில் ஏற்றுக் கொள்ளப்பட்டு நடவடிக்கைக்கான பரிந்துரைக்கு உள்ளாகியிருக்கின்றன.

இவையனைத்தையும் மனத்திற்கொண்டுதான் நானும், பொதுச் செயலாளரும், பொருளாளரும் ஒவ்வொரு ஆய்வுக் குழுவினரிடமும் கலந்து பேசி, இடை நீக்கம் செய்து வைத்தல் - விளக்கம் கேட்டல் என்ற இருவகையான நடவடிக்கை அறிவிப்புகளைத் தலைமைக் கழகச் சார்பில் செய்துள்ளோம்.

தற்போது அமைக்கப்பட்டு ஆய்ந்து வந்த ஆய்வுக் குழு அறிக்கைகளையும், பரிந்துரைகளையும், புகார்களையும் வைத்து இந்த அளவுக்குத்தான் தலைமைக் கழகம் தீர்வு காண இயலும்.

இந்தத் தீர்வுகளினால் பாதிக்கப்பட்டுள்ள சிலர், கழகத்திற்கு விரோதமாகவோ, கட்டுப்பாட்டை மீறியோ, தாங்கள் எந்தத்

தவறும் செய்யவில்லை யென்று நேரிலும், கடித வாயிலாகவும் நெடுந்தூரத்தில் உள்ளோர் தொலைபேசி மூலமும் தெரிவித்து வருந்துகின்றனர்.

அவர்களின் முறையீடுகள் உண்மையாக இருக்கு மேயானால், வேண்டுமென்றே திட்டமிட்டு யாரும் பழி வாங்கப்படுவதற்கு தலைமைக் கழகம் துணை போகாது என்பதையும், அவர்கள் அளிக்கின்ற விளக்கங்களை அலட்சியப்படுத்தாமல் ஆய்வு செய்து, நியாயமிருப்பின், நீதி வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பத்து என்பதை பதினொன்று என ஆக்குவதுதான் எனக்கு மகிழ்ச்சி தருமே தவிர, பத்தை ஒன்பதாக்குவது என்பது எனக்குப் பிடித்த காரியமல்ல! என்று அண்ணா அவர்கள் அடிக்கடி சொன்னதை நானோ அல்லது தலைமையில் இருப்பவர்களோ மறந்தவர்களல்லர்!

அதே நேரத்தில் அண்ணா சொன்ன கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற மூன்று முழக்கங்களில் தி.மு.க., முக்கியமாகக் கடைப்பிடிக்க வேண்டியது மூன்றாவது முழக்கமான கட்டுப்பாடு என்பதுதான் என்று தந்தை பெரியார் ஒரு முறை கட்டளையிட்டது போல் சொன்னதையும், மறந்து விடாத காரணத்தால் தான், உள்ளாட்சித் தேர்தலையொட்டிய இந்த ஆய்வுக் குழுக்கள் அனுப்பப்பட்டன.

ஆய்வுக் குழுவிலே இடம் பெற்றவர்களுக்கும் முதல் அனுபவம், அக் குழுக்களின் பரிந்துரை கேட்டு நடவடிக்கை மேற்கொள்வதும் தலைமைக் கழகத்திற்கும் முதல் அனுபவம். அதனால் ஏற்பட்டுள்ள குறைகளைக் களைவதென்பது கடினமான காரியமும் அல்ல!

அவ்வப்போது மேலமைப்புகளால் பரிந்துரைக்கப்படும் பிரச்சினைகளில் மட்டுமே தலைமைக் கழகம் ஆராய்ந்து நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது. ஆனால், இந்தத் தடவை ஒட்டுமொத்தமாக மாநில அளவில் மாவட்டந்தோறும் ஒரே சமயத்தில் ஆய்வுக் குழுக்கள் மூலம் விசாரணை நடத்த முனைந்து, அவற்றில் புகார்களை மட்டுமே பெறும் குழுவாக ஒன்றிரண்டு இருந்து, அதனால் பாதிக்கப்பட்ட உடன்பிறப்புகளுக்கு மன உளைச்சல் ஏற்பட்டிருக்கிறது.

அந்த உளைச்சலைப் போக்கிடவும், உவகையுடனும், உற்சாகத்துடனும், உடன்பிறப்புகள் தொடர்ந்து கழகப் பணியாற்றிடவும் வழி வகை காணப்படும் என உறுதி அளிக்கிறேன். இந்த உறுதி, உள்ளொன்று வைத்துப் புறமொன்று நடந்து கொள்ளாத உண்மையான உடன்பிறப்புகளுக்கு மட்டுந்தான் என்பதையும் மறந்து விட வேண்டாம்.

1966-67 ஆம் ஆண்டு டிசம்பர் 29, 30, 31, ஜனவரி 1 ஆகிய நான்கு நாட்கள் சென்னை விருகம்பாக்கத்தில் அறிஞர் அண்ணா தலைமையில் மாநில மாநாடு நடத்திட, அங்கு மண்டியிருந்த காடுகளை யெல்லாம் அழித்துச் செப்பனிட்டோம் - மாநாட்டில் தலைமையுரை யாற்றிய அண்ணா அவர்கள்,

> "என் கூட்டுத் தோழர்கள் சிந்திய வியர்வை இந்தக் கழகம்! நான் வேறு, என் தோழர்கள் வேறு அல்லர்! அவர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்தால் நான்! என்னைப் பிரித்துப் பார்த்தால் அவர்கள்! நிலம் போலும் பொறுமை உங்களிடையே வளரட்டும். இங்கிருந்த காட்டை அழித்தது பெரிதல்ல - தேவையற்ற எண்ணக்காடுகளை அழியுங்கள்! தன்னை வெல்வான்தான் தரணியை வெல்வான்! ஆத்திரத்தால் அல்ல - அடங்கிப் போவதால்தான் தரணியை வெல்ல முடியும்! அதற்குக் கழகம், நல்ல பயிற்சிக் கூடம்!

என்று குறிப்பிட்ட அந்த வாசகம்; உன் போன்ற ஒவ்வொரு உடன்பிறப்பின் நெஞ்சிலும் பதிந்திருக்குமேயானால்,

"நீர் இடித்து நீர் விலகாது" என்ற பழமொழியை நிரூபித்துக் காட்ட முடியும்.

எனவே பேதத்தை மறந்து விட்டு, வா! உன் வாதத்தை எடுத்து வைத்து வாய்மைக்கு வாகை சூட இந்தக் கழகத்தின் வாசற்கதவு எப்போதும் திறந்திருக்கும்!

"தன்னை வெல்வான் தரணியை வெல்வான்!"

நான் தனிமையாக அடைக்கப்பட்டிருந்த பாளையங் கோட்டை சிறை வாசலில் பதிக்கப்பட்டிருந்த வாசகமல்லவா இது! இதை எத்தனை கூட்டங்களில் அண்ணா சொல்லியிருக்கிறார் - அதைத்தானே சென்னையில் மாநில மாநாட்டிலும் சொன்னார்

- அண்ணா வழியில் அயராது உழைப்போம்! என்பது வெறும் வார்த்தை அலங்காரமாக இராமல், உண்மையிலேயே ஒன்று பட்டு உழைத்திட சிற்றூர் பேரூர் முதல் தலைநகராம் சென்னை மாநகர் வரையிலே உள்ள உடன்பிறப்புகள் உறுதி எடுத்துக் கொள்வோம்!

உயர்த்திப் பிடிப்போம் ஒற்றுமைக் கொடியை!

தன் மானம் காத்திட!

தமிழர் கலாச்சாரம் காத்திட!

தமிழ்ப் பண்பாட்டுச் சின்னம் கண்ணகி சிலையை நிலைநாட்டும் மாபெரும் மாநாட்டில் சந்திப்போம். இப்போதே தயாராகிடு உடன்பிறப்பே! குடும்பத்துடன் சென்னைக்குப் பயணம் புறப்பட!

அன்புள்ள,

மு.க.

31-12-2002

2874. தி.மு.க. கொள்கை, குறிக்கோள், கோட்பாடு!

உடன்பிறப்பே,

நேற்றையதினம் (2-1-2003) சென்னையில், செய்தியாளர்கள் என்னிடம், இன்று இந்திய நாட்டில் இமயம் முதல் குமரி வரையில் விவாதிக்கப்படும் இந்துத்துவா பற்றி வினா எழுப்பினார்கள். அதற்கு நான் அளித்த பதில், திராவிட இயக்கம் தொடக்கக் காலத்திலிருந்து கொண்டுள்ள கொள்கை, கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டதாகும். அது வருமாறு:-

பகுத்தறிவுக்கு ஒவ்வாத விஷயங்களை, சாதி-மத வேறுபாட்டு உணர்வுகளை, மனித நேயத்தையும், மனித உரிமைகளையும் மறுத்திடும் கொடுமைகளை திராவிடத்துவா என்று பெயரிட்டு அழைத்தாலும் அதை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. இதுதான் தி.மு. கழகத்தின் கொள்கை

இவ்வாறு குறிப்பிட்ட இந்த விளக்கத்தை டெல்லியிலே உள்ள சில பத்திரிகைகள் தெளிவாகப் புரிந்து கொள்ளாமல் அவர்கள் விருப்பம்போல் வெளியிட்டிருக்கிறார்கள். அது தவறு என்பதைச் சுட்டிக்காட்டி, அவர்கள் திருத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்துத்துவா என்பது ஒரு வாழ்க்கை முறை, கலாச்சாரப் பிரதிபலிப்பு என்றெல்லாம் கூறப்படுகிறது. வாழ்க்கை முறை, கலாச்சாரம் என்று கூறுவதில் நமக்கு மாறுபாடான கருத்து இல்லை. ஆனால், அதை ஒரு குறிப்பிட்ட மதப் பெயரோடு இணைப்பதுதான், மற்ற மதங்களிலிருந்து அன்னியப்படுத்துகின்ற ஒன்றாக இருக்கிறது என்பதனை 1996 ஆம் ஆண்டு திருச்சியில் நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழகச் சிறப்பு மாநாட்டிலே நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திலேயே சுட்டிக் காட்டியிருக்கிறோம்.

அறிஞர் அண்ணா அவர்களால் வகுக்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் குறிக்கோள் என்பது, தமிழகம், ஆந்திரம்,

கேரளம், கர்நாடகம் ஆகிய நான்கு மொழி வழி மாநிலங்களிலும் இந்திய அரசுரிமை, ஒருமைத்தன்மை, அரசியல் அமைப்புச் சட்டம் ஆகியவற்றுக்கு உட்பட்டு நெருங்கிய திராவிடக் கலாச்சார கூட்டுறவு நிலவப் பாடுபடுவதாகும். அத்துடன் சமதர்மம், சமயச் சார்பின்மை, ஜனநாயகம் ஆகிய இலட்சியங்களில் முழு ஈடுபாடும், பற்றும் கொண்டு இந்திய நாட்டின் இறையாண்மை, ஒற்றுமை, ஒருமைப்பாடு ஆகியவற்றைக் கட்டிக்காத்து, பகுத்தறிவு அடிப்படையில் சமுதாய மறுமலர்ச்சிக்கான சீர்திருத்தப் பணியாற்றிடவும், வறுமையை வென்று எல்லோரும் நல்வாழ்வு பெற வழிவகை கண்டிடவும், பிற மொழி ஆதிக்கத்திற்கு இடம் தராமல், அந்தந்த மாநில மொழிகளை வளர்த்திடவும், அவைகளுக்கான உரிய இடத்தைப் பெற்றுத் தரவும், மாநிலங்களில் சுயாட்சியும், மத்தியில் கூட்டாட்சியும் உருவாகிடவும் தொண்டாற்றுவது என்பதைக் கோட்பாடாகக் கொண்டதும் தி.மு. கழகமாகும்.

குறிக்கோள் என்ற தலைப்பில் குறிப்பிடப்படும் திராவிடக் கலாச்சாரம் என்பது ஏதோ தி.மு. கழகம் புதிதாகக் கண்டுபிடித்த சொற்றொடரல்ல. இந்தக் கலாச்சாரம் இந்திய நாட்டின் தொன்மையான மூத்தக் கலாச்சாரங்களில் ஒன்று. இந்தத் திராவிடக் கலாச்சாரத்தை மேம்படுத்துவதும், பின்பற்றுவதும், பாதுகாப்பதும் நம்முடைய கடமை என்பது மாத்திரமல்லாமல், வாழ்க்கை முறைக்கு இந்தக் கலாச்சாரம் எந்த அளவிற்கு பெருந்துணையாக அமைந்திருக்கிறது என்பதையும் உணர்ந்திடக் கடமைப்பட்டிருக்கிறோம்.

நமது கலாச்சாரத்தை பல்வேறு கோணங்களில் எடுத்துச் சொல்லி அதனைப் பரப்பியும், வலுப்படுத்தியும் வாழ வைத்துக் கொண்டிருப்பதற்குப் பயன்பட்ட பழம்பெரும் நூல்களும் உண்டு. ஆன்றோர்களும், சான்றோர்களும் உண்டு. அணிதேர்ப் புரவி ஆட் பெரும் படையுடன் வாழ்ந்த மன்னர்களும் உண்டு. கவிஞர்களும் உண்டு, பல்துறை கலைஞர்களும் உண்டு.

திரும்பிய பக்கம் எல்லாம் தெய்வச் சிலைகளும், அவைகளைச் சார்ந்த குலம் கோத்திரங்களும் நூற்றுக்கணக்கில், ஆயிரக்கணக்கில் என்றிருந்த நிலை மாற்றிட, ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் நன்றே நினைமின் என்ற திருமந்திரக் கனி தந்தவர் திருமூலர் - திராவிடக் கலாச்சாரத் தோன்றல்!

அழைத்துவரச் சொல்லி அரசு கட்டளை என்ற ஆணையினைக் காட்டியபோது, நாமார்க்குங் குடியல்லோம் (அடிமையல்லோம்) என்று திருத்தாண்டகம் பாடிய திருநாவுக்கரசர் சமணராகவும், சைவராகவும் இருந்தாரெனினும் திராவிடத் தமிழர் - அந்தக் கலாச்சாரத்திற்கு உரியவர்.

‘கலம் சுரக்கும், நிதியம்; கணக்கு இலா,
நிலம் சுரக்கும், நிறை வளம்; நல் மணி,
பிலம் சுரக்கும்; பெறுவதற்கு அரிய தம்
குலம் சுரக்கும், ஒழுக்கம் - குடிக்கு எலாம்‘

கம்பர் எழுதிய இந்த நாட்டு வளம், நாடு எப்படி இருந்தது என்பதைச் சுட்டிக்காட்டினாலுங்கூட, எப்படி இருக்க வேண்டுமென்பதையும் வரையறுத்துக் காட்டுகிறது. அதனால்தான் வாழ்க்கை முறை எப்படி இருக்க வேண்டும் என்பதையும்,

‘பெருந் தடங்கண் பிறைநுதலார்க்கு எலாம்,
பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்,
வருந்தி வந்தவர்க்கு ஈதலும், வைகலும்,
விருந்தும், அன்றி, விளைவன யாவையே?’

என்று, கம்பரின் இந்தப் பாடல் விளக்குகிறது, எப்படி வாழ்க்கை முறை இருந்தது என்பதை வர்ணிப்பதின் மூலம்!

சாதி, மதம், சமயம் இவைகளை சங்கடம் என்றும்,

கண்மூடி வழக்கமெல்லாம் மண்மூடிப் போக! என்று சாபமிட்டும்,

சாதியும் மதமும் சமயமும் தவிர்த்தேன், சாத்திரக் குப்பையும் தணந்தேன் என்று கூறியும்,

வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன் என்று வருந்தியும்,

வாழ்க்கை முறைக்கும் கலாச்சாரத்திற்கும் ஏற்றது எதுவென அருட்பா வாயிலாக கருத்து வழங்கிய அடிகளார் இராமலிங்கனாரின் வழித் தோன்றல்கள் நாமென தலைநிமிர வைத்துள்ளதும் இந்தக் கலாச்சாரம்தான்.

இவருக்கு முன்னே, “பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை” என்ற குறள் தந்த அய்யன்

வள்ளுவரும் திராவிடக் கலாச்சாரத்தின் வழிநின்று வாழ்க்கை முறை வகுத்தவர்தான். அவருக்கும் முன்வாழ்ந்து பழந்தமிழ் இலக்கண, இலக்கிய நூல் யாத்தளித்த அய்யன் தொல்காப்பியரும் பழந்தமிழர் வாழ்க்கை முறையையும், பண்பாட்டையும் தொகுத்து வழங்கியவர்தான்.

தமிழ்க் குலத்தினர் போற்றும் கற்புக்கும், அவர்கள் மெய்ப்பித்துக் காட்டிய வீரத்திற்கும், நீதி வழுவா நோ்மைக்கும், நீதி தவறின் அதற்குப் பதிலாக உயிரையே மாய்த்துக் கொள்ளும் மான உணர்வுக்கும், எடுத்துக்காட்டாய்த் திகழ்வது நமது கலாச்சாரம் என்பதை நானிலம் அறியச் செய்கிறது! இளங்கோ அடிகளின் சிலப்பதிகாரம். இத்தனை பெருமையும் வாய்ந்த கலாச்சாரத்திற்கும், வாழ்க்கை முறைக்கும் நாம் சொந்தக்காரர் கள் என்பதால்தான், நமக்கென்றுள்ள திராவிடக் கலாச்சாரத்தைக் காப்பதிலும்,

நமது தாய்மொழியைப் போற்றி வளர்ப்பதிலும், நமது தமிழகத்தின் உயர்வை, முன்னேற்றத்தை நிலைநாட்டுவதிலும்,

தமிழகம் உள்ளிட்ட இந்தியத் தாயகத்தின் ஒருமைப்பாடு, ஒற்றுமையுடன் இறையாண்மையைப் பாதுகாப்பதிலும்,

அக்கறையும் ஆர்வமும் மிகக் கொண்டு திராவிட முன்னேற்றக் கழகம் அயர்வின்றி தன் பணியை ஆற்றி வருகிறது. இந்தக் கழகம் தொடக்கத்திலிருந்து ஏற்றுக்கொண்டிருக்கின்ற கொள்கை, குறிக்கோள், கோட்பாடுகளான தாய்மொழி காப்பது - பிற மொழி ஆதிக்கம் அகற்றுவது - சாதி பேதமற்ற சமுதாயம் அமைப்பது - மனித நேயம் போற்றி, மத நல்லிணக்கம் காண்பது, பகுத்தறிவு வழி நடப்பது, வன்முறை தவிர்த்து வறுமையை வெல்வது, இவை அனைத்தையும் முழுமையாக நடைமுறைப்படுத்தி, தன்னாட்சி பெற்ற தமிழகம் காண மாநில சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி என்ற முழக்கத்தை வலுப்படுத்துவது என்று எடுத்துள்ள நிலைப்பாட்டினை மீண்டும் ஒரு முறை உன் போன்ற உடன்பிறப்புகளுக்கும், உலகத்தாருக்கும் நினைவு படுத்தவே இந்தக் கடிதம்.

அன்புள்ள,

மு.க.

4-1-2003

2875. இலக்கியச் சந்தைக்கு ஏகிடுவோம்; வாரீர்!

உடன்பிறப்பே,

தொல்காப்பியப் பூங்கா வெளியீட்டு விழாவுக்கான அழைப்பிதழ், தமிழ்க்கனிப் பதிப்பகத்தினரால் அச்சியற்றப் பெற்றுள்ளது. அதை உன் போன்ற தம்பிகளுக்கும், தங்கைகளுக்குமாக எல்லோருக்கும் அனுப்பி வைக்க இயலாத அளவுக்கு தட்டுப்பாடு காரணமாக, இந்தக் கடிதத்தையே நீ அழைப்பாகக் கருதிக்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மகிழ்ச்சி பொங்கிட இந்த விழா நடைபெறுகிறது என்றாலும், தம்பி முரசொலி மாறன் வந்து கலந்து கொள்ள முடியாமல் பல்லாயிரம் கல் தொலைவில் மருத்துவமனையில் இருக்கிறாரே என்ற கவலை என் நெஞ்சைப் பிசைந்து கொண்டுதானிருக்கிறது.

எதுவுமே என் வாழ்க்கையில் நான் விரும்புவது போல நூறு சதவிகிதமும் நடப்பதில்லை. குறைவையும் நிறைவாகக் கொண்டு - அல்லது அப்படி நிறைவடைந்திருப்பதைப்போல் காட்டிக் கொண்டு, மனத்துக்குள் மௌனமாக அழுவது, எனக்குப் பழக்கமாகி விட்டதும், என்னைப் பக்குவப்படுத்தி விட்டதுமான நல்ல பயிற்சியாகும். அதனால்தான் இதுவரையில் ஆயுளும் கெட்டியாக இருக்கிறது போலும்!

அடடே! அழைப்பு எனக் கூறிவிட்டு, எங்கெங்கோ அலைந்து கொண்டிருக்கிறேனே!

உடன்பிறப்பே, தொல்காப்பியப் பூங்கா பற்றி இலண்டன் தமிழோசையில் ஒலிபரப்புவதற்காக என்னைப் பேட்டி கண்டனர். இலக்கியம் சார்ந்த பல கேள்விகளுக்குப் பதில் அளித்திருக்கிறேன்.

கல்கி இதழின் சார்பில் இன்று காலையில் ஒரு சிறப்புச் சந்திப்பு.

இரண்டு சந்திப்புகளிலுமே தொல்காப்பியத்திற்கு உரையெழுதிட எப்படித் துணிந்தீர்? என்ற கேள்விதான் எழுந்து நின்றது.

உரை ஆசிரியர் இளம்பூரணர், தொல்காப்பியம் முழுமைக்கும் உரை யெழுதியுள்ளார். பேராசிரியராம் மற்றொரு உரை யாசிரியர் தொல்காப்பியத்தில் மெய்ப் பாட்டியல், உவம இயல், செய்யுளியல், மரபியல் என பொருளதிகாரத்தில் ஒரு பகுதிக்கு உரை இயற்றியுள்ளார்.

உரையாசிரியர் நச்சினார்க்கினியர், எழுத்ததிகாரம் - சொல்லதிகாரம், அகத் திணை, புறத்திணை, களவியல், கற்பியல், பொருளியல், செய்யுளியல் ஆகியவற்றுக்கு உரை கண்டிருக்கிறார்.

சேனாவராயர், தெய்வச்சிலையார், கல்லாடனார் ஆகியோர் சொல்லதிகாரத்துக்கு மட்டும் உரை வழங்கியுள்ளனர்.

பிற்காலத்துப் பெரும்புலவர் வெள்ளை வாரணனார், பொருளதிகாரத்திற்கு முழுமையான உரையும், செய்யுளியல் மரபியலுக்கு தொகுப்புரை மற்றும் ஆய்வுரையும் தீட்டியுள்ளார்.

பட்டியலிட்டுள்ள இந்த அறிவுசால் பெரியோர் போன்று ஆற்றல் வாய்ந்தோன் நானல்லன் என்பதை நன்குணர்ந்த காரணத்தால், சங்க இலக்கியத்தில் தேர்வு செய்த பாக்களுக்கு சங்கத் தமிழ் சொல்லோவியத் தொகுப்பு தந்தது போலவும் - திருக்குறளில் குறிப்பிட்ட பாக்களுக்கு குறளோவியம் தீட்டியது போலவும் - தொல்காப்பியப் பூங்காவில் சிறந்த நறுமண மலர்களைப் பறித்து அளித்திடவே தொல்காப்பியப் பூங்காவில் நுழைந்தேன் என்பதை இலண்டன் தமிழோசை நிலையத்தார்க் கும், கல்கி இதழாளர்களுக்கும் விளக்கியிருக்கிறேன்.

உடன்பிறப்பே, இந்தப் பூங்காவில் நுழைந்து பார்த்தால்தான், பன்னெடு நாட்களுக்கு முன்னே பழந்தமிழர் காலத்திலேயே வளர்ந்திருந்த அறிவியலை எப்படிப் பிரதிபலிக்கிறது தொல்காப்பியம் என்பது புரியும்.

தொல்காப்பியத்தில் குறிப்பாகவும், சிறப்பாகவும் பல்வேறு இயல்புகள், பழங்கால வாழ்க்கை முறைமைகள், இன்றைக்கும் போற்றிப் பின்பற்ற வேண்டிய அடிப்படைக் கட்டமைப்பு, ஒருசில;

நவீனப் புது உலகத்திற்கும், வழக்கங்களுக்கும் ஒத்துவர இயலாத நிலையுடையதாயினும், ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பிருந்த பழந்தமிழர் வரலாற்றுப் பெட்டகம் என்பதை நினைவூட்டும் கருவூலம் என்றெல்லாம் பெருமிதம் கொள்ளும்போது, அவற்றுக்கெல்லாம் சிகரமாக மரபியலில் பின்வரும் நூற்பா அமைந்துள்ளதைக் கண்டு வியப்பு மேலிடுகிறது.

ஒன்றறி வதுவே உற்றறி வதுவே இரண்டறி வதுவே அதனொடு நாவே மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே நான்கறிவதுவே அவற்றொடு கண்ணே ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே ஆறறி வதுவே அவற்றொடு மனனே நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே (பொருளதிகாரம்-மரபியல்-நூற்பா 27)

இதன் பொருள் விளக்கம் :-

ஓரறிவுள்ள உயிர், உடம்பினால் அறியக் கூடியது. ஈரறிவுள்ள உயிர் என்பது உடம்பினாலும், வாயினாலும் அறியக்கூடியது. மூவறிவுயிராவது உடம்பினால் - வாயினால் - மூக்கினால் என மூன்றினாலும் அறியக்கூடியது. நாலறிவுயிராவது உடம்பு, வாய், மூக்கு, கண் ஆகியவற்றால் அறியக் கூடியது. ஐயறிவு உயிர் என்பது உடம்பு, வாய், மூக்கு, கண், செவி ஆகியவற்றால் அறியக்கூடியது. இவைகளேயன்னியில் ஆறாவதாக மனத்தினாலே அறியக்கூடியதே ஆறறிவு எனப்படும். இவ்வாறு உயிர்கள் ஆறு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

அது மட்டுமன்றி, ஓரறிவு முதல் ஆறு அறிவு வரை பெற்றுள்ள உயிரினங்கள் எவை எவை என்பதையும் பட்டியலிட்டுக் காட்டுகிற பாங்கினை தொல்காப்பியத்தின் மரபியல் உணர்த்தும்போது எந்த அளவுக்கு மிகப் பழங்காலத்திலேயே அறிவியல் அடிப்படையில் வாழ்க்கை இலக்கணம் வகுக்கப்பெற்றுள்ளது என்ற மலைப்பு ஏற்படத்தான் செய்கிறது.

உலகில் வாழும் எல்லாவுயிர்களையும், அவற்றின் உடலில் அமைந்துள்ள ஐம்பொறிகளையும், உய்த்துணரும் உட்கருவியாகிய மனத்தினையுங் கொண்டு அவ்வுயிர்கள் ஓரறிவு

முதல் ஆறறிவீறாகப் படிப்படியே அறிவினாற் சிறந்து விளங்குந் திறத்தினை நமக்கு நெடுங்காலத்திற்கு முன்னரே வாழ்ந்த நுண்ணுணர்வாளர்கள் ஆராய்ந்து வெளிப்படுத்தியுள்ளனர். உயிர்கள் தாம் பெற்றுள்ள மெய், வாய், மூக்கு, கண், செவி என்னும் ஐம்பொறிகளின் வாயிலாகவும், அகக்கருவியாகிய மனத்தின் வாயிலாகவும் முறையே ஊறு, சுவை, நாற்றம், ஒளி, ஒலி என்னும் ஐம்புலவுணர்வுகளையும், உய்த்துணர்வினையும் பெற்று அறிவினால் வளர்ச்சி பெற்றுள்ள திறத்தை நுனித்துணர்ந்து அவற்றை அறுவகையுயிர்களாகப் பகுத்துரைக்கும் இவ்வுயிர்ப் பாகுபாடு பண்டைத் தமிழர் கண்டுணர்த்திய பொருளிலக்கண மரபாகும்.

புல்லும், மரனும் ஓரறி வினவே பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே (பொருளதிகாரம்-மரபியல்-நூற்பா 28)

எனும் நூற்பா, புல்லும் மரமும் எனும் இருவகைத் தாவரங்களும் உடம்பினால் அறிந்து கொள்ளக்கூடிய ஓரறிவுடைய உயிர்களாகும் என்பதைக் குறிப்பிடுகிறது. பிறவும் என இந்த இரண்டிலும் அல்லாத பிற உயிர்கள் என்றும் உணர்த்தப்படுகிறது. அவற்றுக்கும் உடலால் அறிந்து கொள்ளக்கூடிய ஓரறிவுதான். தாவரங்கள் பற்றியும் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே, தமிழன் பெற்றிருந்த அறிவியல் கருவூலம் தொல்காப்பியம் என்பதற்கு இதைவிடச் சான்று வேறு எதுவும் தேவையா?

இதுபோன்ற பழங்காலப் புதுமைகளையும் - புதிய வளர்ச்சிக்குத் தேவையான நல்உரம் போன்ற பழமைகளையும் உள்ளடக்கிய தொல்காப்பிய வாழ்க்கை இலக்கணத்தை ஓர் இலக்கியமாக வடித்து வைத்துள்ளேன்.

வெளியீட்டு விழா நமது இனமானப் பேராசிரியர் தலைமையில் நடைபெறுகிறது. வெளியிடுபவர் தன்மானத் தமிழறிஞர் முனைவர் தமிழண்ணல். முதல் நூலினை தம்பி டி.ஆர். பாலு பெற்றுக் கொள்கிறார். வரவேற்புரையாற்றிட இருப்பவர் தம்பி துரைமுருகன். அணிந்துரையாற்றுகிறார் அன்புப் புலவர் முனைவர் நன்னன். தமிழர்தம் அறிவுச் செல்வங்களாம் முனைவர் சாலமன் பாப்பையா, கவிக்கோ அப்துல் ரகுமான், முனைவர் ஔவை நடராசன், காவியக்கவிஞர் வாலி, தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

கவிஞர் நிர்மலா சுரேஷ் தொகுப்புரையும், கனிமொழி நன்றியுரையும் ஆற்றிட,

எனக்கு ஏற்புரையாற்றும் நன்றிக்கடன் - உடன்பிறப்பே, உனக்கு என் அழைப்பை ஏற்கும் அன்புக்கடன்! இலக்கியச் சந்தைக்கு ஏகிடுவோம் வாரீர்!

என்று இசைச்சித்தர் சிதம்பரம் ஜெயராம், எப்போதோ பாடியது, இன்னமும் செவிகளில் ரீங்காரம் செய்து கொண்டிருக்கிறது.

அன்புள்ள,

மு.க.

5-1-2003

2876. முதல் நாள் தொல்காப்பியம், மறுநாள் சிலப்பதிகாரம்!

உடன்பிறப்பே,

என் போன்றோர் இளைஞர்களாக இருந்தபோது தெருக்கூத்துகளில், சிறப்பு நாடகங்களில் சம்பூர்ண கோவலன் என்ற தலைப்பிலும், கர்ணகி என்ற தலைப்பிலும் சிலப்பதிகார இலக்கியத்தை, கலைத் துறையின் பெயரால் சிதைத்துக் கொண்டிருந்தது நினைவில் இருக்கிறது.

கழுத்தில் விழுந்த மாலை கழற்ற முடியவில்லையே காரிகையே இது, யார் செய்த சூதோ?

என்று கோவலன் வேடமிட்டவர், அவருக்குத் தெரிந்த இராக ஆலாபனைகளைச் செய்து பாடுவதும் - மாதவியானால் மடிமேல் வா! - கர்ணகியானால் கடுகிப் போ! என்று வசனம் பேசுவதும், அந்தக் காலத்துச் சிலப்பதிகார நாடகங்களாக இருந்தன.

இதற்கு நாடகப் புலவர் திரு. சங்கரதாஸ் சுவாமிகளும் விதிவிலக்கல்ல!

அந்தக் கர்ணகி - கண்ணகி என்ற பெயரில் திரைப்படமாக வந்த போதும், கவின்மிகு திரைப்பட உரைநடை ஆசிரியரான தணிகாசலம் என்ற இளங்கோவனின் எழுத்துத்திறனை வியந்து பாராட்டி எழுதிய அறிஞர் அண்ணா அவர்கள், இஞ்சிப் பத்தரே மேல்! என்று எழுதிய அந்த விமர்சனத்தில் இளங்கோவடிகளின் சிலப் பதிகாரத்தை திரைக்கதை வசனகர்த்தா இளங் கோவன் திசை திருப்பிச் சிதைத்து விட்டார் என்றே வருத்தம் தெரிவித்திருந்தார், திராவிடநாடு வார இதழில்!

காலமாறுதலில், அந்தக் கால மாறுதலுக்குக் காரணமான தமிழ் மொழி உணர்வு - கலை உணர்வு - இலக்கிய உணர்வு இவற்றின் தாக்கமாக சிலப்பதிகாரக் கதாபாத்திரங்களான கண்ணகி, மாதவி, கோவலன், பாண்டிய மன்னன், கவுந்தியடிகள்

போன்றோரின் உண்மை உருவங்கள் மக்கள் மன்றத்திற்கு அடையாளம் காட்டப்பெற்றன.

முனைவர் - தமிழ்ப் பேரறிஞர் மு. வரதராசனார் அவர்கள் அந்தக் கதாபாத்திரங்கள் ஒவ்வொருவரைப் பற்றியும், தனித்தனி நூல்களே எழுதி வெளியிட்டார். அவர்தம் சிறப்புக்கும் புகழ் மாலை சூட்டினார்.

அதே போல சிலம்புச்செல்வரும், சிலப்பதிகாரச் செம்மலுமான ம.பொ. சிவஞானம் அவர்களும், சிலப்பதிகாரக் கதாபாத்திரங்கள் இலக்கியச் செல்வங்கள் என்பதை நிலைநிறுத்தும் வண்ணம் எழுதினார், பேசினார்.

ஒரு காலத்தில் பல்வேறு வகையிலும் களங்கப்படுத்தப்பட்ட கதாபாத்திரங்களின் நிலைமாறி, எழுத்திலும் பேச்சிலும் இலக்கியக் கதாபாத்திரங்களாக எடுத்தியம்பப்பெற்ற சிலப்பதிகாரம் எத்தகைய வரலாற்றுச் சிறப்பையும் பழம் பெரும் பண்பாட்டையும் தன்னகத்தே கொண்டது என்பதை விளக்கும் வகையில்தான், ஏறத்தாழ இருபத்தி ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு, தஞ்சைத் தரணியில் காவிரிப்பூம்பட்டினத்தில் கழக அரசின் சார்பாகப் பூம்புகார் கண்டேன்.

அத்துடன்,

கருணாநிதி, யாரையும் விஞ்சுகிற அளவுக்கு வெற்றி கண்டுள்ளார், தான் ஒரு ஒப்புவமையற்ற நடையழகு காட்டும் எழுத்தாளர் என்பதால்!

என்று அண்ணா அவர்களால் ஆங்கிலத்திலும், தமிழிலும் அணிந்துரை வரையப்பட்ட சிலப்பதிகார நாடகக் காப்பியம் என்ற நூலையும் வெளியிட்டேன். அந்நூல் ஆங்கிலத்திலும் மொழி பெயர்க்கப் பெற்றது.

இவ்வண்ணம், சிலப்பதிகாரம் - திருக்குறள் - சங்க இலக்கியம் எனும் தமிழ்க் கருவூலங்களால் கவரப்பட்ட எனக்கு தொல்காப்பியப் பூங்காவில் உலவிட வேண்டுமென்ற ஆவல் தோன்றுவது இயல்பு தானே!

உடன்பிறப்பே, அதிலே ஒன்றைக் கவனித்தாயா? தொல்காப்பியப் பூங்கா வெளியீட்டு விழாவைத் தொடர்ந்து

மறுநாள் சிலப்பதிகாரச் செல்வி கண்ணகியின் சிலை திறப்பு விழா.

ஆம்! போதிலார் திருவினாள் புகழுடை வடிவு என்றும், தீதிலா வடமீனின் திறம் இவள் திறம் என்றும், மாதரார் தொழுதேத்த வயங்கிய பெருங் குணத்துக் காதலாள் பெயர்மன்னும் கண்ணகியென்பாள் மன்னோ

என்று அந்தப் பெருமாட்டியின் புகழ் பேசுகிறது சிலப்பதிகாரம்.

கற்பின் கொழுந்தாம் அந்தப் பொற்பின் செல்விக்கு அறிஞர் அண்ணா ஆட்சியில் கடற்கரையில் கவின்மிகு சிலை கண்டார். நீதிக்காக வாதாடுவது போல! நீலக் கடலோரத்திலே கண்ணகியும் நிமிர்ந்து நின்றாள்.

ஆனால், சிலப்பதிகாரக் கண்ணகி என்ன வேதனை அனுபவித்தாளோ, அந்த வேதனையை விட அதிக வேதனையை, சிலை வடிவக் கண்ணகி அனுபவித்து விட்டாள். முப்பது ஆண்டுகளுக்கு மேலாக நிம்மதியாக நின்றிருந்த நம் கண்ணகியின் சிலைக்கு, கற்பரசியின் சிலைக்கு, ஆபத்து, வாஸ்து என்ற வக்கிர வடிவத்திலே வந்து விட்டது.

அன்று கோவலன் வெட்டுண்டபோது கண்ணகி அவன்மீது வீழ்ந்து புரண்டு அழுதாள். இன்று அவள் சிலையே வெட்டுண்டு, அரசு அருங்காட்சியகத்தில் புரண்டு கொண்டிருக்கிறது.

வாதாடிப் பார்த்தோம் - நியாயத்திற்காக அரசிடம் போராடிப் பார்த்தோம் - நீதியை உயிராக - உயிரை விட மேலாக மதிக்கும் நெடுஞ்செழியப் பாண்டியனா இன்றைக்கு இருக்கிறான்?

அவனிடமே கண்ணகிக்கு அன்று நீதி கிடைப்பது எளிதாக இல்லையென்கிறபோது, இன்று கண்ணகியின் சிலைக்குக் கிடைத்து விடுமா அந்த நீதி?

தெருவிலே தூக்கி வீசப்பட்ட குழந்தையைத் தூக்கி மடியிலே வைத்துக்கொண்டு கொஞ்சி மகிழும் தாயைப்போல, எங்கள் பழந்தமிழ்ப் பண்பாட்டுச் சின்னமாம் பத்தினித் தெய்வம் கண்ணகியை அகத்திலேயே எடுத்து வைத்துக் கொண்டோம். ஆம்! அன்பு அகத்திலே வைத்துக் கொண்டோம் என இன்புறுகிறோம்.

அன்பகத்தில்தான் கழகத்தின் இளைஞர் அணி இயங்குகிறது - மீஞ்சூரில் தீனதயாளன் என்ற சிற்பி கண்ணகி சிலை வடிக்கிறார். அறிவாலயத்தின் முகப்பில் அண்ணா பூங்காவில் அமைந்துள்ள அண்ணா சிலையை வடித்தவர் - சிலை அமைக்கும் பணியையும், திறப்பு விழா நிகழ்ச்சியையும் இவற்றுக்காகும் செலவினையும் இளைஞர் அணி ஏற்றுக் கொள்ளுமென்று அணியின் செயலாளர் மு.க. ஸ்டாலின் ஒப்புதல் தந்து, உற்ற நண்பர்களுடன் இணைந்து உழைத்திடுகின்றார்.

உடன்பிறப்பே, 11ஆம் நாள் தொல்காப்பியப் பூங்காவில் உலவிட நீ வரும்போது, மறுநாள் 12ஆம் தேதி கண்ணகி சிலை திறப்பு விழாவிலும் கலந்து கொள்வாய்!

இடையில் கழகச் செயற்குழு கூட்டம் 12 காலையில் கூடுகிறது.

செயற்குழு உறுப்பினர்களாயிருப்போருக்கு மூன்று நிகழ்ச்சி!

செயற்குழு உறுப்பினரல்லாதோர்க்கு ஜனவரி 11, ஜனவரி 12 இரண்டு நாள் நிகழ்ச்சி -

முதல் நாள் தொல்காப்பிய நிகழ்ச்சி!

மறுநாள் சிலப்பதிகார நிகழ்ச்சி!

இரு காப்பியங்களின் காலமும் அப்படித்தான் என்பதாலோ என்னவோ, நிகழ்ச்சிகளின் வரிசையும் அப்படியே அமைந்து விட்டிருக்கிறது.

அன்புள்ள,

மு.க.

6-1-2003

2877. நாடு வாழ, நலிவு தீர நாம் திறப்போம் ‘நெற்றிக்கண்ணை!’

உடன்பிறப்பே,

‘சமுதாயம் என்பது - பாபம், ஒரு பரிதாபமான சொல்!
அதன்மீது பழியைப் போட்டு
ஆயிர மாயிரம் அநீதிகளை
கன்னி கழியாக் கயவர்கள் பிரசவிக்கிறார்கள்!
அந்த அனாதைப் பிள்ளைகளோ;
அரசாஜகக் கல்விக் கூடங்களில் சட்டம் படிக்கின்றனர்!
படிக்கும் சட்டங்கள் பயனற்றுப் போகாமல்
வெடிக்கும் குண்டுகளாய் வேகமாய்
மாறுகின்றன!வன்முறையன்றோ இஃதென்று
கேட்டால் - வேறு
நன்முறை என்ன கற்றுத் தந்தது சமுதாயம்?
இந்தக் கேள்வி, நறுக்கென எழுகிறது!
பாபம் சமுதாயம், பரிதாபத்திற்குரிய சமுதாயம்!
கன்னக் கோல் பிடிக்கின்ற திருடனும் - திருவிழாக்
கூட்டத்தில்
கத்தரிக்கோல் வைக்கின்ற சிறுவனும்
கையும் களவுமாய்ப் பிடிபடும்போது
கடவுளே, நான் என்ன செய்வேன்?
கண்ணிலாச் சமுதாயம் என்னைக் கல்வனாக்கிற்று
என்றுதான் கதறுவர்!
பாபம் சமுதாயம், பரிதாபத்திற்குரிய சமுதாயம்!
மாடனைக் காடனைத் தெய்வமென்று

மனிதப் பிஞ்சுகள் தலையைக் கிள்ளியெடுத்து
மாயாவி கொடுக்கும் நரபலி கண்டு - அட

மாபாவி என அலறித் துடித்தால் - அவனும்
சொல்கிறான்;
நானென்ன செய்வேன், இந்த நாசகார
'சமுதாயம் இப்படி என்னை ஆக்கிற்றென்று!
பாபம் சமுதாயம், பரிதாபத்திற்குரிய சமுதாயம்!

பழங்காலச் சிலைகளின்
கைகால் ஒடித்தும் முறித்தும்
பலநாட்டு வாணிபம் நடத்தும்
கொள்ளையன்கூட
வெள்ளையாய்க் கூறுகிறான்
'சமுதாயக் கொடுமையால்... இந்தச்
சண்டாளத் தொழிலுக்கு வந்தேன் என்று!
பாபம் சமுதாயம், பரிதாபத்திற்குரிய சமுதாயம்!
பச்சை விளக்கு காட்டப்படாத காரணத்தால்
இச்சைக்கேற்ற இந்த விளக்கை
ஏற்றிக் கொண்டேன் என்கிறாள்;
சிவப்பு விளக்கு சீமாட்டி!...

சீ! தூ! இஃதோர் பிழைப்பா என்றால்;
தூ! தூ! இந்த 'சமுதாயம் என்கிறாள்;
பாபம் சமுதாயம், பரிதாபத்திற்குரிய சமுதாயம்!

இதில்.... மொத்தத்தில்
என்னவோ ஓர் உண்மை - முழு
வெளிச்சம் காட்டத்தான் செய்கிறது.
சமுதாய முற்போக்கு அடித்தளம் கட்டாமல்
சமதர்மப் பொருளாதார மாளிகை எழுப்பி
சர்வதேச அரசியல் கலசங்கள் அமைத்தாலும் - அது
சடசட எனவே நொறுங்கி விழுந்திடும்!

மனித மலர்க் கூட்டம் - தன் தோட்டத்திற்குப்
புனித வேலி யொன்றைப் போட்டுக் கொண்டது
அதன் பேர்தான் சமுதாயம்!

பூமியில் முதன் முதலாய்த் தோன்றியது மனிதனல்ல
புழு, பூச்சி, மீன், குரங்கு, மிருகங்கள், பறவை இனமே!
பூர்வ ஜென்ம வாசனைக்குப் பொருள் விளக்கம்
புரிகிறதா - இப்போது?...

அடுத்த ஜென்மம், அதற்கு அடுத்த ஜென்மம் - என்பதெல்லாம்

ஆயிரங்கோடி ஆண்டுக்குப்பின்
மாறப்போகும் மனிதன் எடுக்கப் போகும் -
ஜென்மம்தானே?
நிலத்தில் உதித்தது மனித ஜாதி!
நிச்சயமாய்ச் சொல்வேன் அப்போது ஒன்றே ஜாதி!
நெருப்பைக் கண்டு, நீரைத் தடுத்து, குடும்பப்
பொறுப்பையும் ஏற்ற பின்னர், சமுகம் பிறந்தது!...
பிறந்த சமுகம் பரந்து விரிந்து
பிரிவினை வரப்புடன் பெரிய சமுதாயம் ஆனது!
பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்
சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையான் - இந்த
குறள் மொழிக் கொப்ப குழுக்கள் அமைந்தன.
குறுமதியாளர் குறுக்கே புகுந்து
அறநெறிக் கொவ்வா ஜாதிகள் கண்டனர்...
அன்புளம் வீழ்ந்தது - வம்புகள் பெருகின!...
அஞ்ஞான இருளில் மனிதனை மனிதன்
தின்று வாழ்ந்தான்! இன்றோ
விஞ்ஞான ஒளியில் மனிதனை மனிதன்
கொன்று வாழ்கிறான்.....!
அணி மலர்த் தோட்டம்தான் சமுதாயம் - எனினும்
தனி மலர் ஒவ்வொன்றும் நறுமணம் தந்திடல்
வேண்டும்...

ஆடு, மாடு, பன்றி முதல் கழுதை வரை
ஆடையிலே உரசிச் செல்லும் -
ஆலயத்தைச் சுற்றி வரும்,
ஆண்டவன் பெற்ற பிள்ளைகள்
ஒரு சில வகுப்பார் மட்டும்
தீண்டினால் திருநீல கண்டம் என்பார்...
சரிதானா இக்கொடுமை எனக் கேட்டால்
சமுதாயத்தில் அன்று முதல் இருந்து வரும் நீதி என்பார்
பாபம் சமுதாயம், பரிதாபத்திற்குரிய சமுதாயம்!

நான் நம்பவில்லை சிவனார் நெற்றிக்கண் திறந்த கதை!
இருந்தாலும் இங்கிருக்கும்
இழிவான சமுதாயத் தீமைகளை
எரித்துப் போட்டுச் சாம்பலாக்க
நடக்க வேண்டும் அந்தக் கதையென விரும்புகின்றேன்...
நாம் திறப்போம் நெற்றிக் கண்ணை!
நாடு வாழ, நலிவு தீர
நமது பார்வை சமுதாயத்தின் மீது
நன்றாகப் பாயட்டும்!

அன்புள்ள,

மு.க.

9-1-2003

2878. நரிகள் ஊளையிடும், உன் நடையை நிறுத்தாதே!

உடன்பிறப்பே,

நரிகள் ஊளையிடும்,
அதற்காக நீ உன் நடையை நிறுத்தாதே!
நடுங்கி, ஓடுங்கி, ஓரம் ஒதுங்கத் தேவையில்லை
நாம் போவது கொள்ளையடிக்க அல்லவே!
கொள்ளைகளைத் தடுத்து நிறுத்தத் தானே!

கொள்கை பரப்ப –
குறிக்கோளை எட்டிப் பிடிக்க –
வெற்றிக் குன்றின் மீது ஏறிக் கொடி நாட்ட!

தூவப்படும் எதிரிகளின் கலக விதைகள் முள்ளாக
விளைந்து
தூயவனே! உன் கால்களில் குத்தும். உன்னைத்
தொடர்ந்து வருவோர் பாதங்களைக் காயப்
படுத்தாதிருக்க அதைத்
தூக்கி, முனை முறித்துத் தொலைவில் போட்டுவிடுக!
பாதையில் குறுக்கிடும் காட்டாறு கண்டு
பதறத் தேவையில்லை – உன்
பாட்டன், பூட்டன், தாய், தந்தையர் கடந்தது
எப்படி எனக் கணக்கிட்டுப்
பாலம் அமைத்தோ, தோள்பலம் காட்டி நீந்தியோ
பாதியில் பயணம் தடைபடாமல் ஏறுக கரையில்!
ஊளையிடும் நரிகளின் கூட்டம் ஒன்று வலப்புறம்
போகும்

மற்றொன்று இடப்புறம் போகும் - அவை
வலம் போனால் என்ன? இடம் போனால் என்ன?
மேலே

விழுந்து பிடுங்காத அளவுக்குப் பார்த்துக் கொள்க!
புதர்களில் விலங்குகள் மலைப்பாம்புகள் புரளும் -
அந்த
இடர் களைய மட்டுமே கையில் ஆயுதம் தேவை!
பதர் என மண்டும் மனிதப் பகையினை மாய்க்க

பண்பெனும் வாளும் அன்பெனும் கவசமும்
ஏந்திச் செல்க!

உறைபனி மூடிய முகடுகள் மீது
ஊக்கமுடன் நீ ஏறிடும்போது,
உட்பூசலற்ற காவணி இருந்தால் தோது.
ஒருக்காலும் அது வழுக்கவே வழுக்காது!
ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாய்க் குவிந்த
அழுக்குச் சிந்தனை, ஆதிக்கச் சுமைகள்
அகற்றிடவே உன் பயணம்! அதனை மறந்து
அகதியாய்த் தமிழனை விட்டு விடாதே!
பாயிரம்பாடி உனக்குப் பாராட்டு படித்து,
பதவியைக் காட்டிப் பல்லக்கும் சுமந்திட,
பகைவர்கள் நண்பராய்க் காட்சி தருவர் - அந்தப்
படுகுழியில் விழாமல் உன்னையும் காத்து
இனத்தையும் காத்திடு!
அய்யா பெரியார் வாழ்க என முரசறைந்து பாடு!
அறிஞர் அண்ணா வாழ்க என சங்கொலித்து ஆடு!
களைப்பின்றித் தொடரலாம் கடும் பயணம் அனைத்தும்!
உழைப்பின்றி இருப்போரைச் சிற்றெறும்பும் பழிக்கும்!
கடமையினை உணர்ந்து, கண்ணியத்தில் மலர்ந்து
வெல்க!

கட்டுப்பாடு குலையாமல் கழகப் பயணம் செல்க!
கணநேரமும் ஓய்வில்லை என்று சபதம் செய்க!

உடன்பிறப்பே;

வளம் பரப்பத் தமிழகத்தில் மழையாய்ப் பெய்க!
எலிகளுக்கும் கரையானுக்கும்
இடையிடையே உன் வழியில்
தீனி போட்டாலும் போடு! ஆனால், சில
ஏடுகளுக்கு மட்டும் தீனி போடாமல் எச்சரிக்கையாய்
இருந்திடு!

நூறாயிரம் காலத்துப் பயிரப்பா கழகம் – இதனை
வேரோடு வீழ்த்திட எத்தர்கள் சிலபேர்
தேனோடு விஷம் கலந்து தருகின்றார் கவனி! நம்
ஊனோடும் உயிரோடும் இணைந்த கொள்கைக்கு
நடத்திடுவோம் வெற்றி பவனி!

அன்புள்ள,

மு.க.

17-1-2003

2879. திருவும் பொலிவும் திருவையாறுக்கு சரி! சீர்காழிக்கு மட்டும் சீர்குலைவு ஏன்?

உடன்பிறப்பே,

பகுத்தறிவுக்கு ஒவ்வாத விஷயங்களை ஏற்றுக் கொள்வதில்லை என்பது தி.மு.க. கொள்கைகளில் ஒன்று.

இப்படி நான் ஒரு பேட்டியில் சொன்னதை ஏகடியம் செய்து நண்பர் சோ அவர்கள் அவரது துக்ளக் ஏட்டில், பதில் விளக்கமொன்று அளித்திருக்கிறார்.

பகுத்தறிவு அடிப்படையில் மறுமலர்ச்சிக்கான சீர்திருத்தப்பணி ஆற்றுதல்

என்பதாக தி.மு. கழக கொள்கை, குறிக்கோள் இடம் பெற்றுள்ள சட்டதிட்ட புத்தகத்தில் இருக்கிறது.

இதையும் இதனையொத்த மற்ற கொள்கை, குறிக் கோள்களையும் ஒரு பேட்டியில் நான் குறிப்பிட்ட போது, பகுத்தறிவுக்கு ஒவ்வாத விஷயங்களை தி.மு.க. ஏற்றுக் கொள்ளாது என்று சுட்டிக் காட்டினேன்.

அதைக் கேலி செய்து நண்பர் சோ அவர்கள் தன் பேனாவை வேகமாக ஓட்டியிருக்கிறார். அது வருமாறு:- சிலையைக் கும்பிடுவதிலிருந்து, உள்ளத்திற்கு நல்லது செய்ய ரம்ஜான் கஞ்சி குடிப்பது உட்பட - சமாதிகளுக்கு மரியாதை செலுத்துவது வரை - எல்லாமே பகுத்தறிவுக்கு ஏற்ற விஷயங்களைத்தான் தி.மு.க. ஏற்கும் என்பது உண்மையே!

கிண்டல் என்று எண்ணிக் கொண்டு சோ அவர்கள் அளித்துள்ள பதில் இது!

(1) சிலையைக் கும்பிடுவதிலிருந்து என்று அவர் குறிப்பிட்டு, சீற்றமடைவதற்கு நமக்குக் காரணம் தெரியாமல் இல்லை.

பெரியார், அண்ணா, காமராஜர், கால்டுவெல், பசும்பொன் தேவர், பாபாசாகேப் அம்பேத்கர் போன்ற தலைவர்களின் சிலைகளும், தமிழர் பண்பாடு கூறும் புலவர்கள், கவிஞர்கள், கண்ணகி, ஔவையார் போன்றோர் சிலைகளும் நாட்டப்படுவதற்கு முன்பு, இவர்களையன்னியில் எத்தனையோ பேர்களின் சிலைகள் இந்தத் தமிழ் மண்ணில் அமைக்கப்பட்டிருக் கின்றன. அப்போதெல்லாம் சோ போன்றவர்களுக்கு ஏற்படாத கவலையும் - கனல் தெறிக்கும் உணர்வும் - அண்மைக் காலமாக ஏற்பட்டிருப்பதற்குக் காரணம் தேடி அலைய வேண்டிய அவசிய மில்லை. இருவகையான பண்பாடுகளின் மோதுதலில் விளையும் பகையே தவிர, வேறென்னவாக இருக்கமுடியும்?

மிக மிக முக்கியமாக பெரியார் சிலைகளும், அண்ணா சிலைகளும், அம்பேத்கர் சிலைகளும் 'சோவை ஒத்தவர்களின் விழிகளுக்கு வெறுப்பேற்றக் கூடியவைதான்! ஆம்! விழுந்து விட்ட ஒரு பெரிய சமுதாயத்தின் கால் நிமிர்த்தி கம்பீரமாக எழுந்து நிற்கச் செய்தது மட்டுமல்லாமல் - இனப் பெருமை, இன உணர்வு, இன எழுச்சி இவற்றுக்கெல்லாம் முரசு கொட்டியவர்கள் அல்லவா?

எனவேதான், அந்தச் சிலைகளை அமைப்பதும் - சிலைக்குரியோரின் சிறப்புகளைச் சொல்லி விழா நடத்துவதும் - மாலை அணிவித்து மரியாதை செய்வதும் - சிலருக்கு எரிச்சலூட்டும் நிகழ்ச்சிகளாக இருக்கிறது!

(2) இஸ்லாமியர் நடத்தும் ரம்சான் விருந்தில் கலந்துகொண்டு கஞ்சி குடிப்பதாகக் கூறி, அது பகுத்தறிவா என்று கேலி செய்பவரைக் கேட்கிறேன்! ஒருவேளை - கஞ்சிக்குப் பதிலாக பாயசம் பருகினால் தான் அது பகுத்தறிவு என்பது அவர்களது வாதமா?

ஓர் இந்து ஆலய விழாவில், ரம்சான் விழா விருந்து போல ஒரு இம்பீரியல் ஓட்டலிலோ - அசோகா ஓட்டலிலோ - தி.மு.கழகத்தினரை விருந்துக்கு அழைத்து கஞ்சியோ, கூழோ வழங்கினால், வரமாட்டோம் என்றா சொல்கிறோம்!

கழக ஆட்சியில் தமிழகத்தில் நூற்றுக்கணக்கான இந்து ஆலயங்களில் அமைச்சர்களும் கலந்து கொண்ட சம பந்தி விருந்துகள் நடந்தனவே! நான் மதுரை மீனாட்சியம்மன் கோயில்

விருந்திலும், மயிலை கபாலீஸ்வரர் கோயில் விருந்திலும் கலந்து கொண்டேனே! பத்திரிகைகளில் படங்களும் செய்திகளும் வந்திருக்கின்றனவே!

(3) சமாதிகளுக்கு மரியாதை செலுத்துவது பகுத்தறிவா என்று சோ கேட்கிறார்!

அது ஒரு பண்பாடு! - சீனா, ருஷ்யா போன்ற நாடுகளில் இருந்து நாத்திகர்களான அதிபர்களும், பிரதமர்களும் கூட இந்தியாவுக்கு வந்தால் டெல்லியில் காந்தி, நேரு சமாதிகளுக்கு சென்று மலர் தூவி மரியாதை செலுத்துகிறார்கள்.

பாவம்! நண்பர் சோ அவர்கள் பண்பாட்டு வழியில் கடைப்பிடிக்கப்படும் மரியாதை நிமித்தமான - நன்றி காட்டும் கடமை நிமித்தமான - மத நல்லிணக்கம் நிமித்தமான - நிகழ்வுகளையும், பகுத்தறிவுக்குப் புறம்பாக மக்களை ஏமாற்றும் மந்திர தந்திர மோசடிகளையும், கலந்து பிசைந்து அருந்தி அஜீர்ணத்துக்கு ஆளாகிறார்.

சிலை திறப்பு விழா

படத் திறப்பு விழா

நினைவு போற்றும் நிகழ்ச்சி

இவற்றைப் பற்றியெல்லாம், தந்தை பெரியார் அவர்கள் அடிக்கடி பேசியிருக்கிறார், எழுதியிருக்கிறார்.

குறிப்பாக நண்பர் வே. ஆனைமுத்து அவர்களைப் பதிப்பாசிரியராகக் கொண்டு வெளி வந்துள்ள பெரியார் ஈ.வெ. ரா. சிந்தனைகள் என்ற பெரும் நூலில் இருந்து இரண்டு எடுத்துக்காட்டுகளைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

நாம் உருவப் படத் திறப்பு விழா நடத்துவது என்பது பூஜை செய்யவோ, தேங்காய் பழம் ஆராதனை செய்து, விழுந்து கும்பிட்டுப் பக்தி செய்து, நமக்கு வேண்டியதைக் கோரிப் பிரார்த்தனை செய்யவோ, நாம் செய்த - செய்யும் பாவத்தை மன்னிக்கும்படி கேட்கவோ அல்ல. அப்படிப்பட்ட சக்தி இருப்பதாகக் கருதிக்கூட நாம் எந்தப் படத்திறப்பு விழாவும் செய்வதில்லை. மற்றும் எப்படிப்பட்ட படத்திற்கும் பூஜை செய்யும்படியோ, கோவில்களிலோ தேர், இரதம், விமானம், சப்பரம்

ஆகியவைகளிலோ வைத்து ஊர்வலம் ஆராதனை செய்யும்படி வலியுறுத்துவதற்காகவோ அல்ல.

(பெரியார் கட்டுரை, குடியரசு (10.1.1948)

ஒருவரைப் பெருமைப்படுத்துவதற்கென்றே ஒருவருடைய படத்திறப்போ அல்லது சிலைத் திறப்போ நடத்தப்படுமானால் அதை எல்லோருக்கும் நடத்தி, எல்லோரையும் பெருமைப்படுத்தலாம். ஆனால், அந்த நோக்கத்தின்மீது இதுபோன்ற நிகழ்ச்சி நடத்தப்படுவதில்லை. யார் ஒருவர் மக்கள் நன்மைக்குப் பாடுபடுபவராகவும், ஒழுக்கத்தில் சிறந்து, தன்னலமற்ற சேவையில் ஈடுபட்டும் விளங்குகிறாரோ அவர் மற்ற மக்கள் யாவரும் அப்பண்புகளைப் பின்பற்றுவதற்கு எடுத்துக்காட்டாக இருக்கிறார். அப்பேர்ப்பட்டவரை மக்கள் உணரும்படி செய்ய வேண்டும். அவரின் உயரிய பண்புகளையும், சேவைகளையும் மற்ற மக்களும் பின்பற்றி நடக்கும் வண்ணம் செய்ய வேண்டும். அதற்கென்று அவரின் குணங்களை மக்கள் பார்த்து, தமது வாழ்க்கையில் பின்பற்றி வந்த தகாத காரியங்களை விட்டொழித்துத் திருந்தி வாழவேண்டும் என்பதற்காகவே படத் திறப்பும், சிலைத் திறப்புமான நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. உருவ வழிபாடு வேறு - பண்பு வழிபாடு வேறு, -பலர் எங்களை உங்களுக்குத் தான் உருவ வழிபாடு கிடையாதே, இதை மட்டும் பின்பற்றலாமா என்று கேட்கலாம். ஆனால், உருவ வழிபாட்டுக்கென்று இது நடத்தப்படுவதில்லை. இது குண வழிபாடு, பண்பு வழிபாடு என்பதை அடிப்படையாகக் கொண்டது. ஒருவரின் குணத்தையும், பண்பையும் மக்கள் அறிந்து அதன்படி நடக்க வேண்டும் என்பதற்காக நடத்தப்படுவதாகும்.

பெரியார் பேச்சு, திருச்சி (17-3-1956)

உடன்பிறப்பே, திருவையாறு தியாகய்யர்வாள் சமாதியில் ஆண்டு தோறும் நடைபெறும் தியாகப் பிரமோற்சவம், தியாக அய்யர், முத்துசாமி தீட்சதர், சியாமா சாஸ்திரி ஆகிய மும்மூர்த்திகள் விழாக்கள், அவர்கள் மறைந்த

மேதைகள் என்பதற்காக தமிழ் மக்கள் கூடுகிறார்கள் - இசைவாணர்கள் குவிகிறார்கள்.

அதே போல சீர்காழியில் முத்துத் தாண்டவர், மாரி முத்தா பிள்ளை, அருணாசலக் கவிராயர் ஆகியோரும் மூன்று இசைப் பேரறிஞர்கள்தான்! ஆனால் தமிழ் இசைப் பேரறிஞர்கள்! முதலில் நான் குறிப்பிட்ட சங்கீத மும்மூர்த்திகளுக்கு முற்பட்டவர்கள்!

ஆனால் திருவையாறுக்குள்ள திருவும், பொலிவும், சீர்காழிக்கு இல்லையே ஏன்?

இந்தக் கேள்வியை எழுப்புவதுதான் பகுத்தறிவு! தமிழ்ப் பண்பாடு பற்றிய அறிவு!

மோட்சத்துக்கு வழி காட்டுகிறேன், மூணு ரூபாய் கொடு! என்று மோசடி செய்கிறவனிடம் ஏமாறாதே என்று தடுப்பதும் பகுத்தறிவுதான்!

இருதரப்பு மூவரையும் போற்றுகிறோம்! ஆனால் சீர்காழி தரப்பு சீந்துவாரற்று சிறப்பிழந்து கிடக்கிறதே ஏன்? என்று கேட்பதும் பகுத்தறிவுதான்!

நண்பர் சோ இதைப் புரிந்து கொண்டால் நல்லது!

அன்புள்ள,

மு.க.

18-1-2003

2880. என் மனோ நிலையில் மதுரை கழகத்தினர்க்கு இறுதி எச்சரிக்கை!

உடன்பிறப்பே,

கடற்கரை நடைபாதையில் போய்க்கொண்டிருக்கிறோம்; அதேபாதையில் நம் எதிரே வருகிற இருவர் நம்மைப் பார்த்து ஏதோ பேசிக்கொள்கிறார்கள் - பேசுவது மட்டுமல்ல, லேசாகவும் சிரித்துக் கொள்கிறார்கள். இருவரில் ஒருவர் நமது முகத்தையே ஏற இறங்கப் பார்க்கிறார். நமக்கே சந்தேகம் வந்து விடுகிறது. ஒருவேளை, நமது மூக்குக்கண்ணாடி சரியாகப் பொருந்தாமல் வளைந்து கிடக்கிறதோ என்று, நமக்கு நாமே நமது மூக்குக்கண்ணாடியை சரி செய்துகொண்டு அந்தப் பாதையில் தொடர்ந்து நடக்கிறோம்.

சிறிது தொலைவு சென்றதும், இரண்டு மூன்று பேர் நடுத்தர வயதினர், நம்மைப் பார்த்துவிட்டு அவர்களுக்குள்ளேயே உரையாடிக்கொண்டு போகிறார்கள். அது நமது காதுகளிலும் விழுகிறது.

என்னய்யா! இவனுங்க இன்னைக்கு கடற்கரையிலே நடைப் பயிற்சிக்கு வந்துட்டானுங்க?

ஆமாம்! வேடிக்கையாக இருக்கு! ஒன்று சேரவே மாட்டானுங்கன்னு, மகிழ்ச்சியா இருந்தோம், இன்னைக்கு கூட்டமா வந்துட்டானுங்க! குதூகலமா வேற வந்துட்டானுங்க! இவனுங்க சேரமாட்டானுங்கன்னு நினைச்ச நமக்குத்தான் நெஞ்சிலே சவுக்கடி விழுந்திருக்கு! ஆமாம்! இப்ப எதுக்கு சேந்தானுங்க? எப்படி சேந்தானுங்க?

ஏன்ய்யா - அஞ்சு விரல் கையிலே இருந்தா அஞ்சும் ஒட்டிகிட்டு ஒண்ணாவா இருக்கு! ஆனால் சமயம் வரும்போது, அஞ்சு விரலும் ஒண்ணா சேர்ந்து தானே ஒரு பளுவைத் தூக்குது! ஒரு பகையின் மூக்கை உடைக்குது!

ஓ! அப்படி ஒரு நோக்கத்துக்காக சேர்ந்துருக்காங்களா? என்ன அப்படி ஒரு நோக்கம்?

ஊர் மக்கள் உபத்திரவம் போக்க! ஊர் கெடுக்கிற ஊதாரிகளை ஒழிக்க! ஒற்றுமையா இருந்தா மட்டுமே, அவுங்களையெல்லாம் ஓட ஓட விரட்டினதா ஆயிடும் - அதுக்காகத்தான் அவுங்க தலைமை ஆணையிட்டு - தம்பிகளே! கடுகுகளை மலையாக்கிக் கொண்டு கசப்பை வளர்த்துக் கொள்ளாமல் - உங்கள் எதிரே மலைகள்போல் குவிந்திருக்கும் குப்பை மேடுகளைக் காலால் எற்றி அகற்றுங்கள்! என்று கூறியிருக்கிறதாம்.

எவ்வளவு நாளைக்கு இந்த ஒற்றுமையும், உறவும் நிலைக்கப் போகுதாம்? பொழுதுக்கும் ஒருத்தருக் கொருத்தர் சண்டை போட்டுகிட்டு இருந்திட்டு - பொது விவகாரம் - பொது எதிரியை எதிர்ப்பதுன்னு வரும்போது ஒன்றுகூடி கிளம்பினா, காந்தாரி வயிறு மாதிரி சில பேருக்கு நெஞ்சு எரிய ஆரம்பிச்சு, கலகம் செய்ய ஆரம்பிக்கும். அதையெல்லாம், இந்தத் தம்பிங்க சமாளிப்பாங்களா?

சமாளிப்பாங்க! சாக்ரடீஸ் சொன்னாரே! உன்னையே நீ அறிவாய் என்று! அதுமாதிரி அவுங்களை அவுங்களே புரிஞ்சுகிட்டு - பால பாடத்திலே படிச்சிருப்பாங்களே - விறகு குச்சிகள் ஒருகட்டாக இருக்கும்போது ஒடிக்க முடியலே - தனித்தனி குச்சியா ஆனதும், சுலபமா ஒடிக்க முடிஞ்சதுன்னு அதையும் ஞாபகம் வச்சுகிட்டு, அதே போல நாலு எருதுகள் ஒன்றாக இருந்தபோது எதிர்க்க முடியாம பயந்த சிங்கம், அந்த எருதுகள் சண்டை போட்டுக்கொண்டு தனித்தனியா ஆனதும் பாய்ந்து கொன்றது என்று - அதையும் மறந்துடாம நடந்து கிட்டாங்கன்னா, இவுங்க தலையிலே இருக்கிற ஒரு ரோமத்தைக்கூட எதிரியாலே அசைக்க முடியாதுங்கிறதை அனுபவ ரீதியா உணருவாங்க!

உடன்பிறப்பே! என்ன ஆச்சரியத்துடன் என்னைப் பார்க்கிறாய்? கால்வலியால் கடற்கரைப் பக்கமே போகாமல் இருந்தவன், இப்போது திடீரெனக் கடற்கரை நடைபாதைக்குப் போய் - அங்கே நம்முடைய கழகத்தினர் ஒன்றுசேர்ந்து சென்றதையும், அதை இருவர் வியப்புடன் நோக்கியதையும், வேறு சிலர் அது பற்றி விமர்சன விரிவுரையே ஆற்றியதையும் வரி விடாமல் அப்படியே குறிப்பிடுகிறானே என்றுதானே அப்படி வியப்பு மேலிடப் பார்க்கிறாய்!

எந்த ஒரு குடும்பத்திலும் ஆரம்பத்தில் ஒருவர் இருவராக இருந்து, பிறகு தாத்தா - பாட்டி, அப்பா, அம்மா, மகன்கள், மகள்கள், பேரன், பேத்திகள், கொள்ளுப்பேரன், பேர்த்தி என்று அந்தக் குடும்பம் ஆல்போல் தழைத்து விடுமேயானால் - ஆல், விழுதுகளுடன் ஒரு மரமாக நின்று விடும்! ஆனால் ஆள், விழுதுகளுடன் ஒரு மரமாக நிற்க முடியாமல், விழுதுகளே மரங்களாகித் தனித்தனியே மரங்களாக நிற்பது என்பதும் இயற்கைதானே! நாம் காண்பதும் தானே!

விழுதுகள் இணைந்து எத்தனை மரமாக நிற்பினும், எல்லாமே ஆலின் ஒரே இனம்தானே! அதுபோல நாமும், இன உணர்வில் ஒரே இனம்தானே! அந்த உணர்வு மட்டும் பட்டுப் போகாமல், பட்டுப்போக இடம் தராமல் பாச உணர்வுடன் ஒருவரோடு ஒருவர் உறவாடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

உடன்பிறப்பே, இவ்வாறு நான் பலமுறை கடிதங்களில் கருத்துகள் வெளியிட்டும்கூட, அவற்றை சில உடன்பிறப்புகள் "இது நமக்கு எழுதியது அல்ல" என்று எண்ணிக்கொண்டு கழகத்திற்குள் ஒற்றுமையை கலைத்து, உறவை குலைத்து நமது உன்னத லட்சியங்களை ஊனப்படுத்தும் செயலில் இன்னமும் ஈடுபட்டுக் கொண்டு வருகிறார்கள். இதற்கு உதாரணமாக, மதுரை மாநகரை குறிப்பிட விரும்புகிறேன். அதில் ஏற்பட்டுள்ள என் மனக்கிலேசம் இதோ, இந்த அறிக்கையாக எழுதப்பட்டு எல்லா ஏடுகளுக்கும் தரப்பட்டுள்ளது.

"மதுரையில் மாநகர் தி.மு.கழகத்தில் தனிப்பட்ட கோபதாபங்களாலும், மன மாச்சர்யங்களாலும் தொடர்ந்து உருவாகி வந்த பிரச்சினைகள் பற்றி விவாதித்து நல்ல முடிவெடுக்க நானும், பொதுச் செயலாளர் பேராசிரியரும், பொருளாளரும் இருசாராரையும் 19.1.2003 அன்று சென்னை அண்ணா அறிவாலயத்திற்கு அழைத்துக் கலந்துபேசி அனைவரின் கருத்துகளையும் கேட்டறிந்தோம்.

அதன் அடிப்படையில், இனிமேல் இருசாராரும் ஒன்றுபட்டுப் பணியாற்றிடவும், கழகக் கட்டுப்பாடு காத்திடவும் வேண்டி சில வழிமுறைகளை வகுத்து, அவற்றை எல்லோரும் ஏற்றுக்கொண்ட அளவில் அவற்றை செம்மையாக நிறைவேற்ற இரு சார்பிலும் மொத்தமாக ஏழு பேர் கொண்ட ஓர் ஆலோசனைக் குழு அமைத்து

அறிவிக்கப்பட்டது. அக்குழுவின் அமைப்பாளராக மாநகர் மாவட்டச் செயலாளர் திரு.வேலுசாமியும் நியமிக்கப்பட்டார். ஏதேனும் பிரச்சினைகள் எழுந்தால் தலைமைக் கழகம் தலையிட்டு நடவடிக்கை எடுக்கும் என்றும் அறிவுறுத்தப்பட்டது.

ஆனால், 25.1.2003 அன்று தி.மு.க. மாணவர் அணியினர் ஏற்பாடு செய்த வீரவணக்க நாள் பொதுக் கூட்ட நிகழ்ச்சி தொடர்பாக, ஒரேமனதாக ஒப்புக் கொள்ளப்பட்ட முடிவுகள் மீறப்பட்டுள்ளன. எனவே அந்த மாணவர் அணியின் அமைப்பாளர் திரு.கிரம்மர் சுரேஷ் மீது, பொதுச் செயலாளர் கழக சட்டதிட்ட விதிமுறைப்படி ஒழுங்கு நடவடிக்கை எடுத்துள்ளார்.

கிரம்மர் சுரேஷின் இந்தக் கட்டுப்பாடற்ற செயலுக்கு மாநகர் மாவட்டக் கழக நிர்வாகமும் மறைமுகமாகத் துணை போயிருக்கிறது என்று வந்துள்ள புகாரின் மீதும், ஏழு பேர் குழுவில் எவரேனும் ஒழுங்குமுறை மீறியிருந்தால் அவர்கள் மீதும், தலைமைக் கழகம் விசாரணை நடத்தி பொதுச் செயலாளர் வாயிலாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்துக் கொள்கிறேன். கழகத்திற்கு ஒழுங்குமுறையும், ஒற்றுமையும், கட்டுப்பாடும்தான் முக்கியம். அதற்கு ஊறு விளைவிப்பவர் யாராயிருந்தாலும் அல்லது எவ்வளவு முக்கிய பொறுப்பில் இருந்தாலும் நடவடிக்கை எடுத்திடத் தலைமைக் கழகம் தயங்காது.

எனக்குள்ள மனோநிலையில் மதுரைக் கழக நிலை குறித்து இதையே இறுதி எச்சரிக்கையாக அறிவிக்கிறேன்.

உடன்பிறப்பே, நான் குறிப்பிட்ட அறிக்கை இதுதான்.

இதற்கு மேலும் கழகத்தை குலைப்பதற்கு, ஓரிருவர் அவர்களால் இயன்ற முயற்சிகளை செய்வார்களேயானால், நானும் இந்தத் தலைமைப் பொறுப்பில் என்னால் இயன்றவைகளை செய்து, இந்தக் கழகத்தை காக்கும் கடமையை நிறைவேற்ற வேண்டியவனாக இருப்பேன் என்பதைச் சூளுரையாக அறிவிக்கிறேன்.

அன்புள்ள,

மு.க.

26-1-2003

2881. இந்த அவதூறுகள்; வெறும் பொய்க்கால் குதிரைகளே!

உடன்பிறப்பே,

காவேரி பிரச்சினை பற்றி சட்டப் பேரவையில் எப்போது பேசப்பட்டாலும் நிதியமைச்சர் பொன்னையன் அவர்கள் திரும்பத் திரும்ப 1974ஆம் ஆண்டோடு காவேரி ஒப்பந்தம் முடிந்துவிட்டதென்று 68ஆம் ஆண்டு நான் கூறியதாகச் சொல்லி வருகிறார்.

எங்கே அந்த வார்த்தையை ஆதாரத்தோடு காட்டுங்கள்! என்று கேட்டால் 74ஆம் ஆண்டுவரை அந்த ஒப்பந்தம் செயல்திறன் உடையதாக இருக்கும் என்று கருணாநிதி சொன்னார் என்று கூறுகிறார். ஒரு மாநிலத்தின் நிதி அமைச்சர் பொறுப்பை வகிப்பவருக்கு செயல்திறன் உடையதாக இருக்கும் என்பதற்கும், ஒப்பந்தம் முடிந்து விட்டது என்று கூறுவதற்கும் உள்ள பொருள் வித்தியாசம் கூட புரியவில்லையே என்பதற்காக நாம் கவலைப்படத்தான் வேண்டும். பொன்னையன் அவர்கள் சொல்கிற அந்த 1968ஆம் ஆண்டு என்பது பேரறிஞர் அண்ணா அவர்கள் முதல்வராக இருந்த காலகட்டம். அப்போது நான் பொதுப்பணித்துறை அமைச்சர். 20-8-1968 அன்று புதுடெல்லியில் திரு.கே.எல்.ராவ் முன்னிலையில் காவிரி குறித்து நடந்த முதலமைச்சர்கள் பேச்சுவார்த்தைக்குப் பிறகு 24-8-1968 அன்று பேரவையில் முதலமைச்சர் அண்ணா அவர்களின் ஒப்புதலுடன் நான் படித்த ஓர் அறிக்கையினைத்தான் பொன்னையன் அவர்கள் ஏதோ புதையலைத் தேடி எடுத்து வந்ததைப் போல எண்ணிக் கொண்டு செயல்திறன் என்ற தமிழுக்கு, உண்மையான பொருள் தெரியாமல் காவேரி ஒப்பந்தம் 1974ஆம் ஆண்டோடு செத்துவிட்டதென்று நான் சொல்லி விட்டதாகப் பொய் கூறி வருகிறார்.

திரு.பொன்னையன் அவர்களுக்கு நினைவூட்டுகிறேன். 13-9-1969 அன்று தமிழகச் சட்டப் பேரவையில் சோஷலிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. க.ர. நல்லசிவம் அவர்கள் 1974இல் காவேரி ஒப்பந்தம் முடிவடையப் போகிறது என்று பொருள்பட பேசினார். அப்போது முதல்வராக இருந்த நான் குறுக்கிட்டு பேசியது என்ன என்பது அவையின் நடவடிக்கை குறிப்பிலே உள்ளது. நிதி அமைச்சர் அதனை நூலகத்திலே பெற்று படித்துப் பார்த்துக் கொள்வது நல்லது. 1974ஆம் ஆண்டோடு இந்த ஒப்பந்தம் முடிவடையப் போவதில்லை. 1974ஆம் ஆண்டில் ஒரு மறு பரிசீலனை தான். அந்த மறு பரிசீலனையில் லிமிட் ப்ளோஸ் பாதிக்கப்படாத அளவில் மறு பரிசீலனை செய்து சர்ப்ளஸ் வாட்டர், அதிகப்படியாக வருகிற தண்ணீரை எப்படிப் பகிர்ந்து கொள்வது என்பதுதான் 1974ல் வருகிற ஒப்பந்தம். ஆகவே இது சம்பந்தமாக உறுப்பினர்கள் குழப்பமான கருத்துக்களை வெளியிட வேண்டாம். 1974ஆம் ஆண்டோடு ஒப்பந்தம் தீர்ந்து விடப் போவதில்லை. அது என்றைக்கும் நிரந்தரமான ஒப்பந்தம்.

இவ்வாறு நான் 13-9-1969ல் பேரவையில் பேசியிருக்கின்ற போது காவேரி ஒப்பந்தம் 74ஆம்ஆண்டோடு முடிந்து விட்டதாக நான் கூறியதாக திரும்பத் திரும்ப ஒரு அமைச்சரே கூறுவது அபத்தமான அவதூறாகும். இதற்குப் பிறகு தொடர்ந்து பல முறை நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளால் பயன் ஏற்படாத காரணத்தால் இந்தத் தகராறை நடுவர் மன்றத்தின் தீர்ப்புக்கு விட வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டுக் கொண்டு 8-11-1970இல் பிரதமருக்கு கடிதம் எழுதினோம்.

8-7-1971 அன்று தமிழகச் சட்டப் பேரவையிலே ஒரு தீர்மானத்தையும் நானே முன்மொழிந்து அது நிறைவேற்றப்பட்டது. அந்தத் தீர்மான வாசகம் வருமாறு :-

தமிழ்நாடு, கர்நாடகா (மைசூர்) அரசுகளுக்கிடையே 1892, 1924ஆம் ஆண்டுகளில் கையெழுத்தான ஒப்பந்தங்களின் விதிகள் அனைத்தையும் மீறி கர்நாடகத்தில் ஹேமாவதி, கபினி, ஹேரங்கி, சொர்ணவதி அணைத் திட்டங்களையும் வேறு சில முக்கிய அணைத் திட்டங்களையும் அவைகளுக் கான திட்ட விவரங்களைப் பற்றி தமிழ் நாடு அரசுக்கு கர்நாடக அரசு முறைப்படி

தெரிவித்து தமிழ்நாடு அரசின் முன் ஒப்புதல் பெறாமலும், இந்திய அரசின் அனுமதியை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளாமலும், இதனால் இந்திய ஒருமைப்பாட்டுக்கு ஊறு நேரிடுவது பற்றிப் பொருட்படுத்தாமலும் தன் போக்கில் நிறைவேற்றி வருவது குறித்து இப்பேரவை தனது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துக் கொள்கிறது.

71ஆம் ஆண்டு இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதோடு விட்டு விடவில்லை. 1972ஆம் ஆண்டு மே 29 முதல் 31 வரை தமிழ்நாடு, கர்நாடகம், கேரளம் ஆகிய மூன்று மாநிலங்களின் முதலமைச்சர்கள் கூட்டம் நடைபெற்று, ஒரு உடன்பாடு ஏற்பட்டது. அதன்படி காவிரி நீர் பிரச்சினை குறித்து தற்போது என்ன நிலை இருந்த போதிலும், அதற்கு மேற்பட்டு காவிரி நீரைத் தேக்கி வைப்பதாலோ காவிரி நீரைப் பயன்படுத்துவதாலோ பிரச்சினையை மேலும் சிக்கலாக்க எந்த மாநிலமும் முயற்சி எடுக்கக் கூடாது. (No State will take any step to make the solution of the problem difficult either by impounding or by utilizing water of Cauvery beyond what it is at present) இந்த ஒப்பந்தத்தையொட்டி காவேரி நீர் குறித்த தகவலைத் திரட்ட மத்திய அரசு ஒரு குழுவினையும் 72ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் அமைத்தது.

எனவே 1974ஆம்ஆண்டிற்கு முன்பு ஆட்சிப் பொறுப்பிலே இருந்த தி.மு.கழக அரசு காவேரிப் பிரச்சினையில் எந்த முயற்சியும் எடுக்காமல் மௌனமாக இருந்தது என்ற குற்றச்சாட்டு மௌடீகமானது. பின்னர் தி.மு.கழகம் 1989-90இல் ஆட்சிக்கு வந்த போது, தமிழகச் சட்டமன்றத்திலே 24-4-1990 அன்று நடுவர் மன்றத்தை வலியுறுத்தி ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி அதனை மத்திய அரசுக்கு அனுப்பி வைத்து அப்போது வி.பி. சிங் பிரதமராக இருந்ததால் அவரிடமும் வலியுறுத்தி முயற்சித்தது. அத்துடன் உச்ச நீதிமன்றமும் நடுவர் மன்றம் அமைக்க உத்தரவிட்டது. 28-7-90 அன்று நடுவர் மன்றத்திடம் கழக ஆட்சியிலே இடைக்காலத் தீர்ப்பினை வழங்க வேண்டுமென்று மனு செய்ததின் காரணமாக இடைக்காலத் தீர்ப்பும் வழங்கப்பட்டது.

இந்தத் தீர்ப்புக்குப் பிறகு 1991 முதல் 1996 வரை ஜெயலலிதா ஆட்சிதான் தமிழ்நாட்டிலே நடை பெற்றது.

அப்போது நடுவர் மன்றத்தின் இடைக் காலத் தீர்ப்பை நிறைவேற்ற எந்த முயற்சியும் எடுக்கவில்லை. பின்னர் 96இல் தி.மு.கழகம் பொறுப்பிற்கு வந்த பிறகு தொடர்ந்து மத்திய அரசை வலியுறுத்திய காரணத்தினால் 98ஆம் ஆண்டு பிரதமர் தலைமையில் நான்கு முதலமைச்சர்களையும் உறுப்பினர்களாகக் கொண்டு காவேரி ஆணையம் அமைக்கப்பட்டது. உச்சநீதிமன்ற வழிகாட்டுதலின்படி காவேரி ஆணையம் அமைப்பது குறித்தும், அதற்கான விதிமுறைகள், பிரிவுகள் குறித்தும் மத்திய அரசு அனுப்பி வைத்த அறிக்கையின் மீது தி.மு.கழக அரசு பரிந்துரை அனுப்பிட அனைத்துக் கட்சித் தலைவர்களையும் அழைத்து, அவர்களின் கருத்தை எதிரொலிக்கும் அறிக்கையினை அனுப்பிவைத்து அதன் பிறகே காவேரி ஆணையம் அமைந்தது.

ஆனால் அனைத்துக் கட்சிகளின் விருப்பப்படி தி.மு.கழக ஆட்சி வலியுறுத்தி அமையப் பெற்ற காவேரி ஆணையம் பற்றி காழ்ப்புணர்ச்சி காரணமாக ஜெயலலிதா தொடர்ந்து முன்னுக்குப் பின் முரணான கருத்துகளைக் கூறி வருகிறார். சட்டப் பேரவையிலேயே அது பல் இல்லாத ஆணையம் என்றார். ஆணையக் கூட்டத்தில் கலந்து கொள்ள மாட்டேன் என்றார். பின்னர் கலந்து கொள்வதாகக் கூறி டெல்லி சென்று அந்தக் கூட்டம் நடந்து கொண்டிருந்த போதே வெளி நடப்பு செய்தார். ஆணையத்தின் தலைவரான பிரதமரின் நம்பிக்கை பற்றி சந்தேகிப்பதாக தெரிவித்தார். உச்ச நீதிமன்ற ஆணையின் பேரில் பின்னர் அதனைத் திருத்திக் கொள்வதாக அறிவித்தார்.

ஆனால் கழக அரசின் முயற்சியினால் அமையப்பெற்ற காவேரி ஆணையத்தையும், அந்த உடன்பாட்டினையும் முன்னாள் மராட்டிய ஆளுநர் சி. சுப்பிரமணியம், மக்கள் தலைவர் ஜி.கே. மூப்பனார் உள்ளிட்ட எல்லா கட்சித் தலைவர்களும் அனைத்து ஏடுகளும் பாராட்டியதை தமிழ்நாடே நன்கறியும்.

எனினும் ஒவ்வொரு சட்டமன்றத் தொடரின் போதும் காவேரி பிரச்சினையிலே தி.மு.கழகம் துரோகம் செய்து விட்டதாக திரும்பத் திரும்ப ஜெயலலிதா கூறி வருகிறார். அவரை நாம் கேட்கின்ற ஒரே கேள்வி; தி.மு.கழகம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்த காலத்திலே ஏதோ ஒரு ஆண்டு காவிரி தண்ணீர் அறவே வராமல்

இந்த ஆண்டினைப் போல வறண்டது உண்டா? தமிழகத்திலே உள்ள அனைத்து மாவட்டங்களும் வறட்சி மாவட்டங்கள் என்று அறிவிக்கப்படும் நிலை அப்போது ஏற்பட்டது உண்டா? பட்டினிச் சாவுகள் அன்றாடம் நடைபெற்றது உண்டா? அண்டை மாநிலங்களோடு சரியான அணுகுமுறை இல்லாமல் பழகத் தெரியாமல் விவசாயத்திற்குத் தேவையான தண்ணீரைப் பெற்றுத் தர அக்கறை இல்லாமல் அனைவரையும் எடுத்தேன் கவிழ்த்தேன் என்று பேசுவதும், பிறகு தும்பை விட்டு விட்டு வாலைப் பிடிப்பதுமாக உள்ள நிலைமை தி.மு.க. ஆட்சியில் இருந்ததற்கு ஏதாவது சான்று காட்ட முடியுமா? காவேரி பிரச்சினையில் அனைத்துக் கட்சித் தலைவர்களின் ஒப்புதலைப் பெறாமல் கழக அரசு ஒரு துரும்பைக்கூட எடுத்துப் போட்டதில்லை என்ற உண்மை இந்த நாடே அறிந்திருக்கும்போது; தி.மு.க. மீது வீண் பழி சுமத்தி திசை திருப்பும் இந்த ஆட்சியாளரின் அவதூறுகள் வெறும் பொய்க்கால் குதிரைகளேயாகும்!

அன்புள்ள,

மு.க.

30-1-2003

2882. காப்பியக் களஞ்சியம்!
உன் கரங்களை அலங்கரிக்கட்டும்!

உடன்பிறப்பே,

இந்த ஆண்டு முரசொலி பொங்கல் மலருக்குப் பதிலாக தொல்காப்பியப் பூங்கா சிறப்பு மலர், பேரறிஞர் அண்ணா நினைவு நாளையொட்டி வெளிவருகிறது.

பூங்காற்றாகத் தமிழர்க்கு விளங்கி, அந்தத் தமிழர்க்கு இன்னலொன்று விளைந்திடின் புயல் காற்றாக மாறிடும் அண்ணாவின் நினைவினைத் தொடர்ந்து போற்றிடும் கழகத்தின் படைக்கலனாம் முரசொலி, அவர் நினைவு நாளில் காப்பியக் களஞ்சியம் என்ற தலைப்பில் தொல்காப்பியப் பூங்காவின் சிறப்பு மலரை வெளியிடுவது அண்ணனுக்கு அஞ்சலி செலுத்தத்தான் என்பதை நீ அறியாமல் இருக்க முடியாது.

என் நீண்ட நாள் அவா நிறைவேறத் தொடங்கிய இடம், குளிர் தருக்களும் - தெளிந்த நீரோடைகளும் - திரை கடல் எழிலும் - சிறிதாயினும் சீர்மிகு கடற்கரையும் கொண்ட கோவா எனும்போது மீண்டுமொரு முறை அங்கு சென்று வரவேண்டு மென்ற விருப்பம் என்னை ஆட்டிப்படைக்கிறது.

அவ்வளவு நிம்மதியான இடம். ஒரு தொலைபேசியின் கூப்பாடுகூட இல்லாத நாட்கள், அந்த இனிய நாட்கள். ஒரே ஒரு நாள் பெங்களூரில் இருந்து தினச் சுடர் ஆசிரியர் மணி அவர்கள் கூப்பிட்டார். நல்ல நண்பர். அவர் கேட்டார், என்ன வீரப்பனைச் சந்திக்கச் சென்றிருப்பதாக தமிழக முதலமைச்சர் சொல்லியுள்ளாரே என்று! இல்லை, இல்லை - அது தவறு - பின்லேடன் என்னை வந்து கோவாவில் சந்திப்பதாகத் தகவல் கொடுத்துள்ளார், அதற்காக வந்திருக்கிறேன் என்றேன். மணியின் சிரிப்பு மணியோசையாகவே அமைந்தது.

அந்த ஓர் உரையாடலைத் தவிர, வேறு எந்த தொலைபேசி தொடர்பு கூட இல்லாமல், அந்தப் பகுதி முழுதும் அடர்ந்து வளைத்துக் கொண்டிருந்த அழகான இடங்கள் எதையும் பார்த்துக் களிக்க வேண்டுமென்ற ஆவல்கூட அணுவளவும்

இல்லாமல் - கோவாவில் என் விடுதியின் குடிலுக்குள் என்னையே நான் சிறைப்படுத்திக்கொண்டு எழுதினேன், எழுதினேன், எழுதிக்கொண்டே யிருந்தேன்.

எழுதுவதற்கு எடுத்தாண்ட தொல்காப்பிய நூற்பாக்கள் 144 - ஆம்! இலக்கியத்துக்கே முழுமையாகச் சென்றுவிடுவோம் என்று அரசியலுக்கு ஓய்வு கொடுத்திட முனைந்தாலும், அடிக்கடி என் பொது வாழ்வில் குறுக்கிட்ட 144 என்ற எண்ணே மனக்கண் முன் வந்து அரசியலை நினை வூட்டியது.

அந்த 144! சிதம்பரத்தில் நடைபெற இருந்த முதலிரவு நிகழ்ச்சிக்கே தடை போட்டு திருவாரூருக்கு என்னைத் திரும்ப விரட்டிவிட்டு, வர்ணாஸ்ரம மாநாட்டை விமரிசையாக நடத்திடப் பாதுகாப்பாகப் பயன்படுத்தப்பட்ட 1944 ஆம் ஆண்டு காங்கிரஸ் ஆட்சியின் தடைச் சட்டமல்லவா? அந்த நினைவில் சொல்லுகிறேன், அவ்வளவு தான்!

பரணி பல பாடி பாங்குடன் வாழ்ந்த பைந்தமிழ் நாட்டில் - சொரணை சிறிதுமிலா சுயநலத்துச் சோதரர்கள் சிலர் கூடி, வருணத்தை நிலைநாட்ட வகையின்றி, கரணங்கள் போட்டாலும், மரணத்தின் உச்சியிலே மானங்காக்க, மறத்தமிழா போராடு!

அன்று நடத்திய முரசொலி துண்டு அறிக்கை ஏட்டில் இந்தப் பாட்டு எழுதினேன் என்றுதான் 144 தடையுத்தரவு - ஆம்! சுமார் 60 ஆண்டுகளுக்கு முன் என் எழுதுகோல் எதற்காக அசைந்ததோ, அதே ஈட்டி முனைக் கூர்மையுடன்தான் இன்றைக்கும் அசைந்து கொண்டிருக்கிறது.

இடையே வளைவில்லை - நெளிவில்லை - வழுக்கல் - சருக்கல் - எதுவுமே அழுக்கு மனம் படைத்து அக்கரை பச்சைகளாயிருப்போர்க்கு ஏற்பட்டதுபோல் ஏற்பட்டதுமில்லை - அந்தத் தீங்கு இங்கு எட்டிப்பார்த்ததுமில்லை.

அந்த உறுதி தந்த வலிமையும், செழுமையும், வளப்ப மும்தான் வாலிபத்தில் எழுதியதுபோல், பேசியதுபோல் எண்பதை நெருங்கும் இந்த வயதிலும் எழுதிடவும், பேசிடவும் முடிகிறது. உள்ளத்தில் தூய்மை உண்டேடல், வாக்கிலும் ஒளியுண்டாம்! வார்த்தையிலும் கீர்த்தி உண்டாம்!

இதனை மெய்ப்பிப்பதே தொல்காப்பியப் பூங்கா என நெஞ்சு நிமிர்த்திக்கூற என்னால் முடிகிறது. ஆணவத்தால் அல்ல! ஆம், அடக்கமுடையோர் என் போல் யாருளர் என்று கேட்கும் அடக்கமிகு ஆணவத்துடன்தான் கூறுகிறேன்.

அந்த அடக்கமிகு பெருமிதத்துடன் தீட்டிய தொல் காப்பியப் பூங்கா - வெளியிடப்பட்ட ஒரு சில வாரங்களுக்குள்ளாகவே முதற் பதிப்பு விற்பனையாகி, இரண்டாம் பதிப்புக்கு அச்சகம் நோக்கி விரைந்து கொண்டிருக்கிறது தமிழ்க்கனி பதிப்பகம் என்கிற போது தமிழின் முன்னே தாழ்ந்திடும் என் தலை, நிமிர்ந்து நிற்பதில் தவறில்லையே!

இப்பூங்காவின் வெளியீட்டு விழாவன்று கலந்து கொண்டு, கற்கண்டு மொழியில் பாராட்டியோர் சொற் கண்டு சொக்கிப் போனேன்.

காப்பியக் களஞ்சியமாக, இப்போது பூங்கா இனிய தென்றலை அள்ளித் தருகிறது.

இங்கிலாந்து பிரதமர் டோனி பிளேருடன், மத்திய தொழில் வர்த்தகத் துறை அமைச்சராக இருந்த தம்பி முரசொலி மாறன் 1997ஆம் ஆண்டு நடத்திய பேச்சு வார்த்தைக்குப் பின்னர், அங்கிருந்து எனக்கு எழுதிய கருத்து நிறைந்த பாசமிகுந்த கடிதம், முதன் முதலாக இந்தக் காப்பியக் களஞ்சியத்திலே இடம் பெற்றுள்ளது.

மேலும், இந்தியக் குடியரசுத் தலைவர் மாண்புமிகு அப்துல் கலாம் அவர்கள் தொல்காப்பியப் பூங்காவினை படித்து விட்டு எழுதிய கடிதம், பிரதமர் வாஜ்பய் அவர்களின் வாழ்த்துக் கடிதம், மத்திய அரசின் திட்டக் குழு உறுப்பினராக உள்ள டாக்டர் வேங்கட சுப்பிரமணியம், கழகப் பொதுச் செயலாளர் பேராசிரியர், வேலூர் சிறைவாழ் தம்பி வைகோ, மத்திய அமைச்சர் டி.ஆர். பாலு, தம்பி துரைமுருகன், சான்றோர்கள் வா.செ. குழந்தைசாமி, மா. நன்னன், தமிழண்ணல், அவ்வை நடராஜன், சாலமன் பாப்பையா, குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், க.ப. அறவாணன், சுஜாதா, சின்னக்குத்தூசி, சு. சமுத்திரம், மணவை முஸ்தபா, முக்தா சீனிவாசன், நடிகர் சிவக்குமார் மற்றும் கவிஞர்கள் சுரதா, வைரமுத்து, அப்துல் ரகுமான், வாலி, ஈரோடு தமிழன்பன், வேழவேந்தன், மேத்தா, பொன். செல்வகணபதி, நிர்மலா சுரேஷ், கனிமொழி ஆகிய இத்தனை பேருடைய எழுத்தோவியங்கள்!

மனோன்மணியம் பல்கலைக்கழகத் துணை வேந்தராக இருந்த க.ப. அறவாணன் அவர்கள், தொல்காப்பிய எழுத்ததிகாரம் மட்டும் 1849-லும், சொல்லதிகாரம் 1853லும், தொல்காப்பிய முழு மூலம் சாமுவேல் பிள்ளை என்பாரால் 1858-லும் வெளிவந்தன. 1900க்குப் பின், நீதிக் கட்சி வரவும், தொடர்ந்து பரிணாமம்

பெற்ற திராவிட இயக்கமும், பெரியார் வருகையும் நேர்ந்த பின்தான், திருக்குறள், ஆரிய வேதநூல்களுக்கு இணையான, மேலான திராவிட வேதமாக, முன்நிறுத்தப் பெற்றது. சமற்கிருத பாணினியத்திற்கு இணையாகவும், மேலாகவும் தொல்காப்பியம் முன்நிறுத்தப்பட்டது. திருக்குறள் கல்வியும், தொல்காப்பியக் கல்வியும் மேலோங்கத் திராவிட இயக்கமே வளர்ப்பு அன்னையாக விளங்கிற்று.

என்பதாகவும்,

பிரபல எழுத்தாளரும், இலக்கிய விமர்சகருமான சுஜாதா அவர்கள், முதலில் அகத்தியம் என்பது என்ன? நிஜமாகவே அந்தப் பெயரில் ஓர் இலக்கண நூல் இருந்ததா என்பதை உங்களுடன் யோசிக்க விரும்புகிறேன்.

அகத்தியர் ஓர் அந்தணர் என்றும், அவர் முதல் சங்க காலத்தைச் சேர்ந்தவர் என்றும் சொல்லும் மரபு இருந்திருக்கிறது. இது எவ்வளவு உண்மை என்பதை ஆராயுமுன்னர், ஒரு செய்தி உண்மையா என்று பார்ப்பதற்கு நான் முக்கியமாகக் கருதும் தகுதியைச் சொல்லிவிடுகிறேன். மனிதர்களையும், தேவர்களையும், தெய்வங்களையும், புராணத்தையும், சரித்திரத்தையும் கலக்காத செய்திகளை மட்டுமே நாம் நம்பலாம். இதை அறிவியல் முறையின் ஓர் அவசியமான தகுதியாக நான் கருதுகிறேன்.

என்பதாகவும் ஆய்ந்தறிந்து வழங்கியுள்ள அருமையான கருத்துகள் இந்தக் காப்பியக் களஞ்சியத்தில் இடம் பெற்றுள்ளன. இன்று நாளை படித்து மகிழ மட்டுமல்ல. என்றும் நூலகத்தில் இடம் பெற்று காலக் கண்ணாடியாக - வரலாற்றுப் பேழையாக - வருங்காலச் சந்ததிக்கு பண்பாட்டுப் புதையலாக - அமைய வேண்டிய ஒன்று வரப் போகிற காப்பியக் களஞ்சியம் என்பதால் -

பற்று வைத்தாய் தமிழ் மீது - ரூபாய்
பத்து வைத்திருந்தால் - இம்மலர் வாங்கி
பத்திரப்படுத்து! ஆம், படித்த பிறகுதான்!

அன்புள்ள,

மு.க.

01-02-2003

2883. முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு, ஒரு திறந்த மடல்!

அன்புள்ள சகோதரி ஜெயலலிதா அவர்களுக்கு,

இதுவரை உடன்பிறப்புகளுக்கே முரசொலி வாயிலாகக் கடிதம் எழுதி வந்த நான், இன்றைய தினம் உடன்பிறப்பு என்ற முறையில் இல்லாவிடினும், தமிழ்ப் பண்பாட்டின் அடிப்படையில் சகோதரி என அழைத்து இம்மடல் எழுதுகிறேன். உடன்பிறப்பை அல்லது சகோதர சகோதரியை நீ - நான் என ஒருமையில் விளிப்பதுண்டு எனினும், ஒரு முதலமைச்சர் பொறுப்பில் இருக்கிறீர்கள் என்பதால் மரியாதைச் சொற்களைப் பயன்படுத்தி எழுதுவதே என்னை ஆளாக்கிய பெரியாரும், வளர்த்த அன்னையொத்த அண்ணாவும் கற்றுத்தந்த பாடம் என்பதால் அவ்வாறே இக்கடிதம் தங்களுக்கு எழுதுகிறேன்.

தாங்கள் அண்மையில் சட்டப் பேரவையில், ஆளுநர் உரையின் மீது இரண்டு மணி நேரம் பதிலுரை பகர்ந்த போது, காங்கிரஸ் கட்சித் தலைவர் நண்பர் எஸ்.ஆர். பாலசுப்பிரமணியத்தை அகம்பாவம் கொண்டவர் என்று அர்ச்சித்தீர்கள். என்னையும், பேராசிரியரையும் மற்றும் சட்டப் பேரவை உறுப்பினர்களான கழக முன்னணியினரையும் மிக மட்டரகமான அளவில் கேலி செய்து பேசினீர்கள். ஒரு தோற்றத்துக்கு அது மமதையான பேச்சு எனப் பலர் விமர்சித்தாலும்கூட, என்னைப் பொறுத்தவரையில் தாங்கள் அன்று பேரவையில் தலைவர்களைப் பற்றியும் உறுப்பினர் சிலரைப் பற்றியும் பேசியது மமதைப் பேச்சு அல்ல, மனம் போன போக்கில் பேசிய பேச்சு என்றே எடுத்துக் கொள்கிறேன்.

அந்த உன்னத உரையில் எனக்கு ஓர் முக்கியமான அறிவுரையும் கூறியுள்ளீர்கள். இலக்கியத்துடன் இரு! அரசியலை விட்டு விலகி விடு! என்கிற பொருள் கொண்ட பொன்னான அறிவுரை அது!

ஆம், எனக்கு அரசியல் லாயக்கு இல்லைதான்! அரசியலில் வெற்றிகளைப் பெற்று அந்த வெற்றியின் விளைவாகக் கிடைக்கும்

பதவியைக் கொண்டு, பணமலை குவிக்கவோ, கோடி கோடியாகத் திட்டங்களை அறிவித்து அதில் கொல்லைப்புற வழியாகத் திரவியம் திரட்டவோ, இதற்குத் தடை, அதற்குத் தடை எனச் சட்டம் இயற்றி மிரட்டி, இறுதியில் தடைக்கே தடை விதிக்கும் சட்டங்களைச் செய்து கறுப்புப் பணக் கருவூலத்தை நிரப்பவோ கற்றறியாத - கற்றிட விரும்பாத - ஓர் அப்பாவிக்கு அரசியல் அரங்கில் ஆடவும் தெரியாது! பாடவும் தெரியாது! இதற்கெல்லாம் மேலாக அரசியல் ஜாம்பவான் என்று காட்டிக் கொண்டு அரசாங்க நிலங்களையும் உடைமைகளையும் சுருட்டிக் கொள்ளவும் தெரியாது - அதில் சிக்கிக் கொண்டால் திரும்ப ஒப்படைத்து விடுகிறேன் என்று சொல்லித் தப்பித்துக் கொள்ள முயற்சி செய்திடும் பயிற்சி பெற்ற திருடர்களின் தந்திரமும் தெரியாது - இத்தனையும் தெரியாத எனக்கு அரசியல் தகுதி இல்லைதான்.

என் நெஞ்சில் அரசியலுக்கு இரண்டாம் இடம் தான் என்ற முடிவுக்கு முதலிடம் அளித்திடுவேன் என்பதில் இரு கருத்துக்கு இடமே இல்லை. இது இலக்கியத்தின் மீது ஏற்பட்டுள்ள காதலால் மட்டுமல்ல. அரசியலில் எனக்கு ஏற்பட்டுள்ள அண்மைக்கால வெறுப்புதான் முக்கியமான முழு முதல் காரணமாகும். ஏறத்தாழ அறுபத்தி ஐந்து ஆண்டுக் காலம் தமிழ்ச் சமுதாயத்தின் ஒவ்வொரு அங்குல முன்னேற்றத்திற்காகவும் தலை நிமிர்ந்து அரசியல் நடத்திய ஒருவன், இப்போது அந்தத் தலை குனிந்து அரசியல் நடத்த வேண்டிய நிலைமைக்கு ஆளாவதற்கு முன்பு, அவனாகவே அதை விட்டு அகன்று விடுவது அறிவுடைமையல்லவா? ஒன்றே போதுமென்ற குடும்ப நலத் திட்ட உபதேசத்தை உதாசீனப்படுத்திய விளைவை அனுபவிக்க வேண்டுமல்லவா?

ஏதோ நீங்கள் உங்கள் ஆட்சியில் என் மீது தொடரக் கூடும் எனக் கருதுகிற வழக்குகளுக்காக அல்ல. அந்த வழக்குகள் தங்கள் மூளையின் முனைப்பான திட்டங்களாக இருந்தால், நான் அவற்றை அரசியலுக்கு அப்பாலும் நின்று, அண்ணாவின் மீது ஆணையாகச் சந்திக்கத் தயாராக இருக்கிறேன் என்பதை அறைகூவலாகவே விடுக்கிறேன். இன்னுமொன்று, புதிய வீராணம் திட்டத்துக்குக் கல்நாட்டக் கடலூரில் விழா நடத்தி, அதில் பேசியிருக்கிறீர்கள். வீராணத்தை நினைத்தாலே ஊழலும், கருணாநிதியின் பெயரும்தான் ஞாபகத்திற்கு வருகிறதென்று பேசியிருக்கிறீர்கள். தி.மு.க. ஆட்சியில் அண்ணா முதல்வராக இருந்த போது

தொடங்கிய அந்த வீராணம் திட்டத்திற்கு, அண்ணா மறைந்த பிறகு நான் முதல்வராக இருந்த போது டெண்டர் விடப்பட்டது. இப்போது சுமார் 700 கோடி ரூபாய்க்கு மேற்பட்ட மதிப்புடையதாக அறிவிக்கப்படும் அத் திட்டத்தின் மதிப்பீடு அப்போது சுமார் இருபது கோடி ரூபாய்தான். அது டெண்டர் விடப்பட்டு குறைந்த டெண்டர் கேட்டவருக்கே முறைப்படி வழங்கப்பட்டது. அதில் ஊழல் நடந்ததாக எம்.ஜி.ஆர். குற்றம் சாட்டி அதற்கு சர்க்காரியா கமிஷன் விசாரணை நடைபெற்று, அந்தக் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட வில்லையென்று சர்க்காரியா விசாரணைக் கமிஷன் முடிவும் அறிவித்தது.

இப்போது 700 கோடி ரூபாய் புது வீராணம் திட்டத்தில் எத்தனை கோடி, எப்படியெல்லாம் ஊழல் என்று ஏடுகள் ஆதாரங்களை அள்ளி வீசும்போது, தாங்கள் கடலூரில் போய் நின்று கொண்டு இந்தக் கருணாநிதி மீது வீணாக மண்ணை வாரி இறைக்கிறீர்களே! அது தங்கள் தலையிலும், கண்களிலும் படிந்து மறைப்பதை உணராமல்! அதுதான் வேதனையான வேடிக்கையாக இருக்கிறது!

மக்கள் விரோத அரசாகத் தங்கள் அரசை மாற்றிக் கொண்டதுடன் நில்லாமல், ஜனநாயகம் கொழிக்க வேண்டிய சட்டப் பேரவையையும் தாங்களும், மாண்புமிகு பேரவைத் தலைவரும் சேர்ந்து கொண்டு இட்லர், முஸோலினி, இடி அமீன் ஆட்சிகளை இரண்டாவது, மூன்றாவது இடங்களுக்குத் தள்ளி விட்டீர்கள்.

தாங்கள் நடத்தும் தர்பாருக்கு, தடையேதுமின்றித் துணை நின்று நடுநிலை தவறி எதிர்க்கட்சிகளைப் பந்தாடும் அவைத் தலைவர் காளிமுத்து - கழக உறுப்பினர்களிடையே தலைமைக்குக் கட்டுப்படும் தன்மை இல்லை என்று முழங்குகிறார்.

ஆனால் இதே காளிமுத்து, அவரது கட்சிக்குள் எப்படிக் கட்டுப்பட்டு இருந்தார் என்பதை அன்றைய முதல் அமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களுக்குத் தாங்களே தங்கள் கைப்பட எழுதிய கடிதங்களில் குறிப்பிட்டுள்ளதைத் தாங்கள் மறந்திருக்க முடியாது.

காளிமுத்து ஒருவரைத் தவிர, மற்ற அனைவருமே கட்சிக் கட்டுப்பாட்டிற்குள் வந்து விட்டனர்.

கழகம் ஒன்று, ஒற்றுமையாக இருக்கிறோம், கோஷ்டிகள் இல்லை என்று எவ்வளவுதான் நான் சொன்னாலும், அதற்காக எவ்வளவு பாடுபட்டாலும் - தனி கோஷ்டி உண்டு என்று பிரகடனப்படுத்திக் கொண்டு, தனி கோஷ்டியின் தலைவராக காளிமுத்து செயல்பட்டு வரும்போது நடவடிக்கை இல்லையேல், இனி நான் செய்வதற்கு ஒன்றுமில்லை.

தாங்கள் எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு அறிவுரை கூறுவது என்பது இப்போது புதிதல்ல - அப்போதே மக்கள் திலகம் எம்.ஜி.ஆருக்கு, கைப்பட கடிதங்கள் எழுதி அறிவுரை கூறியவர்தான் தாங்கள் - அவைகளில் ஒரு சில சாம்பிள்கள் இதோ :- (தங்கள் கையெழுத்திலேயே)

எழுத்துச் சுதந்திரத்தைப் பறிக்க, அப்போது முதலமைச்சர் எம்.ஜி.ஆருக்கு யோசனை சொல்லி தாங்கள் இட்ட கட்டளைகள் இதோ!

தமிழகத்தில் எங்கு அச்சிடப்பட்டாலும், print செய்தாலும் - அந்தப் பத்திரிகை, சஞ்சிகை, புத்தகங்கள் - Registrar of Books செய்தித் துறைக்கு அனுப்பிட வேண்டும். அப்படி வருகின்ற எல்லாவற்றையும், உடனுக்குடன் வரிக்கு வரி படித்து, மேல் நடவடிக்கை எடுத்திட வேண்டும். காவல்துறைக்கும், இத்தகைய நடவடிக்கை எடுக்க, அச்சேறும் முன்பே தடுக்க அதிகாரம் உள்ளது.

அடக்கத்தைப் பற்றி இப்போது அறிவுரை கூறும் தாங்கள், அப்போது சக நடிகராக இருந்த கலைஞானி கமலஹாசனைப் பற்றி சொன்ன அகம்பாவமற்ற வார்த்தைகள் இதோ:-

கமலஹாசன் படம் ரிலீஸ் ஆன நாளன்று - ஒவ்வொரு நாளேட்டிலும் முழு பக்க விளம்பரங்கள் கொடுத்தானே? நீங்கள் பார்த்தீர்களோ இல்லையோ - நான் கவனித்தேன். தனக்காக விளம்பரம், முழு பக்க விளம்பரம் கொடுக்கமட்டும் கமலஹாசனுக்குத் தெரிகிறது - ஆனால் உங்களை, இவ்வளவு மக்கள் செல்வாக்குடைய முதலமைச்சரை அழைத்துவிட்டு விளம்பரமே செய்யவில்லை என்றால், அவன் உங்களைக் கிள்ளுக்கீரை என்றா நினைத்தான்?

அறிவுரைகள் மட்டுமல்ல, எம்.ஜி.ஆருக்கு! அச்சுறுத்தலுக்கும் அடையாளமாக தாங்கள் எழுதிய கடிதமும் உண்டு. அது; இது!

எதைப் பற்றியுமே என்னிடம் சொல்வதில்லை என்றால் - நான் என்ன நினைப்பது, எப்படி செயல்படுவது? நான் இருக்க வேண்டும் என்று நீங்கள் விரும்பினால் என் நிலைமை என்ன என்பதை தெளிவு படுத்துங்கள். வேண்டாம் என்றால் சொல்லுங்கள். போய்விடுகிறேன். ஆனால் இப்படியே இங்கேயே வைத்துக்கொண்டு என்னை அவமானப்படுத்தாதீர்கள்.

உங்கள் அம்மு,

இவ்வளவு உரிமையோடும், உத்தரவிடும் பாணியிலும் அருமை நண்பர் எம்.ஜி.ஆருக்குத் தாங்கள் எழுதியுள்ள கடித வாசகங்களுடன் ஒப்பிடும் போதும், தாங்கள் எம்.ஜி.ஆர். தங்கள் மீது பொறாமைப்படுகிறார் என்று தங்கள் கைப்பட பிரதமர் ராஜிவ் காந்திக்கே கடிதம் எழுதியதை ஒப்பிடும் போதும் என்னைப் பற்றியும் எமது கழகத் தலைவர்கள், காங்கிரஸ் தலைவர் பற்றியும் பேரவையில் பேசியவை சர்வ சாதாரணம் என்பதை நான் அறிவேன்.

இன்னும் உண்டு ஏராள ஆதாரங்கள் - ஆம், தாங்கள் எம்.ஜி.ஆருக்கு தங்கள் கைப்பட எழுதிய இது போன்ற கடிதங்கள் இன்னும் பல உண்டு.

அவற்றையும் வெளியிட முடியும். ஆனால் தங்களை சகோதரி என விளித்து விட்ட காரணத்தால் அவற்றில் சிலவற்றை வெளியிடுவதில்லையென்று முடிவு செய்து விட்டேன்.

விளைவுகளைப் பற்றிக் கவலைப்பட மாட்டேன் -

மானம் பெரிது! மரணமே வரினும்
மானமே பெரிது! எனும் வீரத் தமிழ் மரபில்
விளைந்த பயிர் நான்! உயிர் வெல்லமல்ல!

இவண்,

மு.க.

4-2-2003

2884. மருத நாட்டு இளவரசி படமும், பழைய நினைவுகளும்!

உடன்பிறப்பே,

1952ஆம் ஆண்டு அதாவது 51 ஆண்டுகட்கு முன்பு, நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களை அறிமுகப்படுத்திய முதல் படம் பராசக்திக்கு நான்தான் திரைக்கதை வசனமும், இரண்டொரு பாடல்களும் எழுதினேன். அந்த முதல் படத்திலேயே அவர் குணசேகரன் என்ற கதாநாயகன் பாத்திரத்தில் தோன்றி "கல்லைத்தான் மண்ணைத்தான் காய்ச்சித்தான் குடிக்கத்தான் கற்பித்தானா? என்று ஏழையின் குரலை எதிரொலித்தார். வஞ்சனைப் பேய்கள் என்பார் - அந்த மரத்தில் என்பார் - இந்தக் குளத்தில் என்பார் - நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த நிலைகெட்ட மனிதரை நினைந்துவிட்டால்! என்ற பாரதி பாடல் மூலம் பகுத்தறிவுக் கணை தொடுத்தார் -

பராசக்திக்குச் சில ஆண்டுகளுக்கு முன்பு, திரைப்படத்தில் சிறு சிறு பாத்திரங்கள் மட்டுமே தாங்கி நடித்த மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்கள் 1947 ஆம் ஆண்டு ஏ.எஸ்.ஏ.சாமி திரைக்கதை எழுதி 'டைரக்ஷன் செய்த 'ராஜகுமாரி படத்திற்கு நானும் வசனம் எழுதவும் - அந்தப் படத்தில் கதாநாயகன் பாத்திரம் ஏற்று நடிக்கவுமான வாய்ப்பை முதன்முதலாகப் பெற்றிருந்தார். பின்னர் 1950ல் தான் எம்.ஜி.ஆர்.அவர்கள் முழுப் படமும் 'காண்டீபன் என்ற கதாநாயகனாக நடித்துப் பெரு வெற்றி பெற்ற படமான - நான் திரைக்கதை வசனம் எழுதிய 'மருதநாட்டு இளவரசி வெளிவந்தது.

மருதநாட்டு இளவரசி வெளிவந்தபோது, அப்படத்தை மதுரையில் ஒரு பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டுவிட்டு, நானும், மதுரை முத்துவும் ஒரு தியேட்டரில் மக்களோடு மக்களாக அமர்ந்து பார்த்தோம்.

அதன்பிறகு அந்தப் படத்தை 53 ஆண்டுகளுக்குப் பிறகு நேற்றுத்தான் "கே டி.வி.யில் பார்த்திடும் வாய்ப்பு கிடைத்தது.

எம்.ஜி.ஆர்., வி.என்.ஜானகி, எம்.ஜி.சக்கரபாணி, பி.எஸ். வீரப்பா, புளிமூட்டை ராமசாமி, சி.எஸ்.டி.சிங் ஆகியோர் நடித்த படம். டைரக்ஷன் எ.காசிலிங்கம்.

இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு தொலைக்காட்சி சின்னத்திரையில் "மருதநாட்டு இளவரசி படத்தைக் கண்டபோது, அந்நாள் நினைவுகள் என் நெஞ்சில் நிழலாடத் தொடங்கிவிட்டன.

அந்தக் காலத்தில் வசனங்களை வசீகரமாகவும் - ஒவ்வொரு வார்த்தைக்கும் உயிர் கொடுத்தும் பேசக் கூடிய ஆற்றல் படைத்தவர் அன்பு நண்பர் எம்.ஜி.சக்கரபாணி -

"மருதநாட்டுக் கோட்டையிலே குறிஞ்சி நாட்டுக் கொடி பறக்கிறது. அத்துடன் மருத நாட்டான் மானமும் சேர்ந்து பறக்கிறது.

என்று வெற்றி வெறியில் அவர் வீராப்பாகப் பேசிய வசனமும் -

"நடக்கும் பொன்வண்டே! ஏன் நடுங்குகிறாய்?" எனக்

காமதாகத்துடன் எழுப்பும் கேள்வியும் -

காதலியிடம் காதலன் காண்டீபன், மிருக ஜாதியில் புலி மானைக் கொல்லுகிறது -மனித ஜாதியில் மான் புலியைக் கொல்லுகிறது எனக் கொஞ்சிடும் உரையாடலும் -

வசனத்தால் மட்டுமே வெற்றி பெற்ற படம் என்று, அன்றைய பிரபல விமர்சன ஏடு பேசும் படம் சிறப்புரை எழுதியது, நேற்று படம் பார்த்தபோது நினைவுக்கு வந்தது.

வசனம் தொடர்பாக படப்பிடிப்பின்போது ஒரு வேடிக்கை நிகழ்ச்சியும் நடந்தது. படத்தில் வில்லனாக நடித்த சி.எஸ்.டி. சிங் என்பவருக்கு தமிழில் அதிகப் புலமை இல்லை. அவர் எம்.ஜி.சக்கரபாணியிடம் சென்று என்னைப் பற்றிக் குறைபட்டுக் கொண்டிருக்கிறார்.

பாருங்கள் சார்! வசன கர்த்தா மு.க. அவர்கள் சில வசனங்களில் பி.எஸ். வீரப்பா பெயரைக் குறிப்பிட்டிருக்கிறார். அவருக்கு நண்பர் என்பதால்! ஆனால் என் பெயர் எதிலும் குறிப்பிடவில்லை.

அந்தப் புகார், சக்கரபாணி அவர்கள் மூலம் என்னிடம் வந்தது. எந்த வசனத்தில் அப்படி வீரப்பா பெயர் வந்திருக்கிறது என்று கேட்டேன் சிங் அவர்களிடம்!

அவர் சொன்னார், வி.என்.ஜானகி பேசும்போது, வீரப் பண் பாடி, வெற்றி முரசு ஒலித்து என்று குறிப்பிடுகிறாரே என்றார்!

எனக்கு சிரிப்பு வந்து விட்டது! அப்படியா? - சிங்கம் என்று வசனம் வரும்போதெல்லாம் உமது பெயரில் உள்ள சிங் வருகிறதே! என்றேன்.

ஓகோ, அப்படியா? சரிசரி! என்று திருப்தி அடைந்தார்.

படக் குழுவினர் அனைவரும் அவரை நினைத்து நினைத்து சிரித்தோம்.

கதை என்னவோ, ராஜா ராணிக் கதை போலத் தான்! ஆனால் ஒரு சாதாரண ஏழை வாலிபனாகத்தான் எம்.ஜி.ஆரின் பாத்திரம்!

இளவரசிக்கோ, அரண்மனை ஆடம்பர வாழ்வு பிடிப்பதில்லை! அவற்றில் வெறுப்பு! சாதாரண சாமான்ய மக்களுடன் பழகிடவே விரும்புகிறாள்! அதற்காக ஏழைப் பெண் வேடமிட்டு தலைநகருக்கு வெளியே வருபவள், காண்டீபனைக் கண்டு காதலால் இணைகிறாள் - கதை முடிவில் காண்டீபன், மன்னர் பரம்பரை என அறியப்படினும், அவன் மக்கள் தலைவனாகவே பொறுப்பு ஏற்கிறான்! மகுடத்தைப் புறக்கணித்து விடுகிறான்.

இளவரசியாகப் பாத்திரமேற்ற வி.என்.ஜானகி ஏழ்மையைத் தன் காதலனுடன் பகிர்ந்து கொள்ளும் இடம், ஐம்பத்தி மூன்று ஆண்டுகளுக்கு முன்பே எவ்வளவு அருமையாக அவரது நடிப்பின்மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

ஒரு காட்சியில் காதலன் (எம்.ஜி.ஆர்.) காதலி (வி.என்.ஜானகி) கஞ்சிக் கலயத்தைக் கையிலேந்தி உரையாடுவது - அப்போது காதலன் சொல்லுகிறான், என்ன தயங்குறே? குடி! இந்தக் கஞ்சிகூட இல்லாம உலகத்திலே எத்தனை ஏழைகள் பசியோடு பரிதவிக்கிறாங்க! காதலன் இப்படிச் சொன்னதும் கலயத்துக் கூழ் மளமளவென மருத நாட்டு இளவரசியின் வயிற்றைச் சென்றடைகிறது!

நகைச்சுவைக் காட்சியாக புளி மூட்டை ராமசாமியின் சேட்டைகள், இப்போதும் நம்மை சிரித்திடச் செய்யத்

தவறவில்லை. கலைவாணரின் தயாரிப்பல்லவா அவர்! அதில் அவர் சோடை போகவில்லை!

யாராவது அருகிருந்து தும்மினால் போதும்! புளி மூட்டையாருக்கு ஆவேசம் வந்துவிடும்- ஆகாயத்துக்கும் பூமிக்கும் துள்ளிக் குதித்து, அனைவரையும் உதைத்துத் துரத்துவார்!

இந்த அசட்டுத்தனமான செயல், கதை முடிவில் கதாநாயகனையே மரண தண்டனையிலிருந்து காப்பாற்றுகிறது என 'கிளைமாக்ஸ் காட்சி!

தும்மல் - கெட்ட சகுனம், கெடுதி விளைவிக்கும் என்ற மூட நம்பிக்கையாளர் கூற்றுக்கு மாற்றாக - தும்மலால் துன்பம் நீங்கி, நன்மையும் விளையும் என்பதற்கு எடுத்துக்காட்டாக அந்தக் கதாபாத்திரமும் காட்சியும்!

நான் முழுமையாக வசனம் எழுதிய முதல் திரைப்படம் மருதநாட்டு இளவரசியை 'கே டி.வி.யில் காண நேரிட்டதால்; பழைய நினைவுகளை உன்னுடன் பகிர்ந்து கொண்டேன் அவ்வளவுதான்!

இதையும் யாராவது வேலூரில் போய், இலக்கிய வியாபாரி கருணாநிதி என்று சொன்னதுபோல், சினிமா வியாபாரி கருணாநிதி என்று செப்பினும் செப்புவர்!

செப்பட்டுமே! அதனால் என்ன! அவர்களுக்கும் இது, பழைய வியாபாரம்தானே!

அன்புள்ள,

மு.க.

6-2-2003

2885. பத்தாவது அவதாரத்தை பயமுறுத்திய மர்மம் என்ன?

உடன்பிறப்பே,

பகவான் விஷ்ணு பத்து அவதாரங்கள் எடுத்துள்ளார் என்று அந்த அவதாரங்களையும், அவதார மகிமைகளையும் பட்டியல் போட்டுக் காட்டும் பக்த சிரோன்மணிகளை, ஆத்திக அன்பர்களை அறிவோம்.

மீனின் உடல் அமைப்புடன் மச்சாவதாரம் - ஆமையின் உடலமைப்புடன் ஆமை அவதாரம் அதாவது கூர்மாவதாரம் - பன்றி முகத்துடன் வராகாவதாரம் - சிங்க முகத்துடன் நரசிம்மாவதாரம் - குட்டையான உருவத்துடன் வாமனாவதாரம் - கையில் கோடரியுடன் பரசுராமவதாரம் - வில்லேந்திய இராமாவதாரம் - கலப்பையுடன் பலராமவதாரம் - குழலூதிய கோபாலகிருஷ்ணாவதாரம் - குதிரை உருவுடன் கல்கி அவதாரம் - எனப் பத்து அவதாரங்களில் இந்தக் கலியுகத்தில் அவர் எடுத்துள்ளதாகச் சொல்லப்படுவதுதான் கல்கி அவதாரம்!

என்ன திடீரென திரு அவதாரங்கள் பற்றிப் பேசத் தொடங்கிவிட்டாய்? சாத்திர புராணங்களுடன் ஏதாவது சமரச ஏற்பாடா? திகைப்புடன் நீ கேட்பாய் என்று நான் நினைக்கமாட்டேன். திருமூலர் சொன்ன ஒன்றே குலம் ஒருவனே தேவன் எனும் வாசகத்தைப் பேரறிஞர் அண்ணா அவர்கள் திராவிட இயக்கத்தினரின் உள்ளத்தில் பதிய வைத்து, உதட்டாலும் வாய்மையுடன் உச்சரிக்கச் செய்திருக்கும்போது, இலட்சியத்துக்காக நடைபெறும் யுத்தத்தில் எம் கையில் வெள்ளைக் கொடிக்கு வேலையே இல்லை! பிடித்தால் வெற்றிக்கொடி! இல்லையேல் வீழட்டும் நம் குடியே! என்று இளமையிலேயே வாய்க்கரிசி வாங்கிப் போட்டுக் கொண்டு பெரியாரின் கரம் பிடித்து, அண்ணாவின் அடியொற்றி நடக்கத் தொடங்கியவன் நான்.

இப்போது அவதார வரிசை பற்றி எழுதத் தொடங்கியதற்கு பக்திபூர்வமான காரணம் எதுவுமில்லை. பத்திரிகைபூர்வமான காரணம் மட்டுமே உண்டு!

சொன்னால் உன் நினைவுக்குச் சட் என்று வருமே! பத்தாவது அவதாரத்தின் பெயருள்ள பிரபல வாரப் பத்திரிகையொன்று உண்டல்லவா! அதன் மீது ஆயிரம் கருத்து வேறுபாடுகள் ஆத்திக ஆன்மீக விஷயங்களில் இருந்தாலும், அரசியலில் நடுநிலையாகத் துணிவுடன் மனத்திற்பட்டதை எடுத்துக்கூறும் ஏடு என்ற மதிப்பை நிலையாகப் பெற்ற பத்திரிகை அல்லவா!

தன்னுடைய சொந்தக் கட்சியென்றும் பாராமல் 1949ஆம் ஆண்டிலேயே, சரியான தேதி குறிப்பிட வேண்டுமானால் 19-6-1949 அன்று எழுதப்பட்ட தலையங்கத்தில் புகாருக்குப் பதில் வேண்டும் என்ற தலைப்பில், தான் சார்ந்துள்ள காங்கிரஸ் கட்சியின் அமைச்சர் என்றும் பாராமல் நிதியமைச்சர் கோபால ரெட்டியைப் பற்றி அந்தப் பத்திரிகை, பின்வருமாறு எழுதியது.

அது சின்ன விஷயமல்ல! கனம் கோபால ரெட்டியின் சொந்த வாழ்க்கை பற்றிய புகார் அல்ல! பொது மக்களின் பணத்தில் பத்து லட்சம் ரூபாய் சம்பந்தப்பட்ட காரியம். ஆகையால் அதை பொது ஜனங்கள் அலட்சியம் செய்ய முடியாது. மந்திரிமார்களும் அலட்சியம் செய்யக் கூடாது. ஸ்வதந்திரா - ஆங்கில வார ஏட்டில் வந்த புகாரைப் பற்றி நேயர்கள் பலருக்குத் தெரிந்திருக்கலாம். இங்கே சுருக்கமாகத் தெரியப்படுத்துகிறோம். சுதர்சன் லிமிடெட் என்று ஒரு கம்பெனி இருக்கிறது. அதில் கனம் கோபால ரெட்டி தாம் மந்திரியாகும் வரையில் டைரக்டராக இருந்தார். மந்திரி பதவிக்கு வந்ததும் தம் மனைவியின் பேரில் பங்குகளை மாற்றிவிட்டார். அந்தக் கம்பெனி டைரக்டர்கள் ஒன்பது பேரில் கனம் கோபால ரெட்டியின் சகோதரரும், மைத்துனரும், இரண்டு ஷட்டகர்களும், இன்னும் சில உறவினரும் இருக்கிறார்கள். இந்தக் கம்பெனியார் நிலக்கடலை எண்ணெய் தயாரிக்கும் மில் வைக்கப் போகிறார்கள். இதற்காக இயந்திரங்களுக்கு ஆர்டர் செய்திருக்கிறார்கள். இயந்திரங்கள் இன்னும் வந்து சேரவில்லை. வேலை ஆரம்பிக்கவும் இல்லை. இந்தக் கம்பெனிக்குச் சென்னை சர்க்கார் கைத்தொழில்களுக்குக் கடன் கொடுக்கும் திட்டத்தின்படி, பத்து லட்சம் ரூபாய் சொற்ப வட்டிக்குக் கடனாகக் கொடுத்திருக்கிறார்கள். கடன் சென்ற 1948ல் சாங்ஷன் செய்யப்பட்டது. இந்தக் கம்பெனியின்

பங்குதாரர்கள் கூட்டம் சமீபத்தில் கனம் கோபால ரெட்டியின் இல்லத்தில் நடந்தது. மேலே கூறியவைதான் விவரங்கள். இந்த விவரங்களை வைத்துக் கொண்டு ஸ்வதந்திரா ஆசிரியர் ஸ்ரீ காஸா சுப்பராவ், கனம் கோபால ரெட்டி மீது குற்றம் சுமத்தியிருக்கிறார். கனம் நிதி மந்திரி தமது செல்வாக்கைப் பயன்படுத்தி இன்னும் தொழிலே ஆரம்பிக்காத ஒரு கம்பெனிக்குப் பத்து லட்சம் ரூபாய் கடன் வாங்கிக் கொடுத்ததாகப் புகார் சொல்கிறார். அந்தக் கம்பெனி டைரக்டர்கள் 100க்கு 12 வீதம் வட்டி வாங்கி லேவா தேவி செய்கிறவர்கள் என்று சுட்டிக் காட்டுகிறார். ஸ்வதந்திரா ஆசிரியர் ஸ்ரீ காஸா சுப்பராவ் தென்னாட்டின் திறமை வாய்ந்த பத்திரிகாசிரியர்களில் ஒருவர். சென்னை சர்க்கார் அமைத்துள்ள பத்திரிகை ஆலோசனைக் கமிட்டியில் காஸா சுப்பராவ் ஒரு அங்கத்தினர். எனவே, ஸ்வதந்திராவின் குற்றச் சாட்டுக்குச் சரியான பதில் நம்முடைய மந்திரிகள் கொடுப்பார்கள் என்று எதிர் பார்த்தோம். ஆனால் நாளது வரையில், மந்திரிகளின் தரப்பில் பதில் ஒன்றும் வரவில்லை. காஸா சுப்பராவ் அப்படித்தான் ஏதாவது எழுதுவார். அதற்கு ஏன் பதில் சொல்லவேண்டும்? என்று நம்முடைய மந்திரிமார்கள் கருதினால் அது பெருந்தவறாகும்.

இப்படி நியாய உணர்வோடு - பாண்டியன் அவைக் களத்தில் கனல் கக்கும் விழிகளுடன் நீதி கேட்டு வாதாடிய கண்ணகியைப் போல், 1949ல் காங்கிரஸ் அமைச்சரவையைப் பார்த்து கேள்வி கேட்ட அந்தப் பத்திரிகையின் பெயரை இன்னமும் பத்தாவது அவ தாரம் என்ற புனைப்பெயரில் ஒளியவைப்பானேன்?

உன்னைப் போன்ற உடன்பிறப்புகளுக்கு முன்னால் ஒட்டகத்தைத் துணிபோட்டு மூடி, அது ஓநாய் என்று கூறி ஏமாற்றி ஜெயிக்க முடியுமா?

இதோ அந்தத் துணியை விலக்கித் தூர எறிந்து விடுகிறேன். காங்கிரஸ் நிதி அமைச்சராயினும் கவலைப்படாமல் - கலங்கிடாமல் - நடுநிலை நின்று கணை தொடுத்த அந்த ஏடுதான் கல்கி ஏடு!

நமது அண்ணாவை, தமிழ்நாட்டு பெர்னாட்ஷா என்று மனமார அழைத்த மாமனிதர் பேராசிரியர் கல்கி கிருஷ்ணமூர்த்தி அவர்களை ஆசிரியராகக் கொண்டிருந்த ஏடு!

அந்தத் துணிச்சல்மிகு எழுத்தாளரின் பேனா முனைதான், அன்றைய அரசுக்கு அஞ்சாமல், சொந்தக் கட்சி ஆட்சியின்

அமைச்சராயிற்றே என்றும் தாட்சண்யம் காட்டாமல், தர்மம் என்பது உச்சரிக்க மட்டும் உபயோகமாகி, உமிழப்பட்டுவிடும் தாம்பூலம் அல்ல என்ற உணர்வுடன் உறுதியுடன் கோபால ரெட்டியாரைக் குற்றக் கூண்டில் நிறுத்தி கேள்விக் கணைகள் தொடுத்தது.

ஆனால் இன்று?

கிராமப்புறத்திலே கிழடுகள் பேசக் கேட்டிருக்கிறோம் - நேற்று ஒன்று வீரமாகப் பேசி, இன்றைக்கு அப்படிப் பேசியதையே மாற்றிப் பேசுபவரைப் பார்த்து, கிழடுகள் கேலியாகச் சொல்லிச் சிரிக்கும். காலம் கலி காலம் அப்பா! இப்படித்தான் பிரண்டு பேசுவார்கள்! என்று!

பிரண்டு என்பது பிறழ்ந்து என்பது திரிந்து வந்தது போலும்!

கிழடுகளின் கேலிக்குள்ளாகும் கலிகாலத்திற்காக பத்து அவதாரமெடுத்த, பகவான் எடுத்த அவதாரம் தானே கல்கி அவதாரம்!

அந்தப் பெயர் கொண்ட ஏடு, பிரண்டு எழுதுவதற்கும் சில வாரங்கள் - சில மாதங்கள் இடைவெளி வேண்டாமா?

இதோ அந்த இடைவெளி கூட இல்லாமல், 2.2.2003 தேதியிட்ட கல்கி தலையங்கத்தில், ஆட்சியாளர்கள் ஏற்கெனவே சாத்தான்குள மக்களை 'மகிழ்விக்கும் பணிகளில் இறங்கியிருப்பதாகக் கருணாநிதி வெளிப்படையாகவே பேசியிருக்கிறார். பத்திரிகைச் செய்திகளும் இதை உறுதி செய்கின்றன. தேர்தல் நன்னடத்தை விதிகளை மீறவும், அதே சமயம் அவற்றுக்குள் சிக்காமல் தப்பவும் ஆளுங்கட்சிக்கு நன்றாகவே தெரியும்.

தமிழகத்தில் அ.தி.மு.க. அல்லாத அனைத்துக் கட்சிகளுமே தங்களுக்கிடையேயான வேறுபாடுகளை மறந்து மாநிலத்தின் நன்மை குறித்து யோசிக்க வேண்டிய கட்டம் இது. இன்றைய அ.தி.மு.க. ஆட்சியின் போக்கை மக்கள் விரும்பவில்லை. லஞ்சம் கொடுத்துக் கூட அ.தி.மு.க.வால் வாக்குகளைப் பெற முடியவில்லை என்பது நிரூபணமாக வேண்டும்.

இம்முறை அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் தமிழகம் என்ன நன்மை கண்டது? அல்லது முன்னேற்றம் கண்டது? ஜெயலலிதா பேரிலான வழக்குகள் நீக்கப்படவும், நீர்த்துப் போகவும் செய்தது

நீங்கலாக, என்ன சாதனை நடந்தேறியிருக்கிறது? ஜனநாயக மரபுகளும், பத்திரிகை சுதந்திரமும் எப்படியெல்லாம் புறக்கணிக்கப்பட்டு அவமதிக்கப்பட்டன?... இவற்றையும் இன்னும் பலவற்றையும் எடுத்துச் சொல்லி அ.தி.மு.க.வைத் தோற்கடிப்பது முக்கியம்! ஜனநாயகத்தை ஜெயிக்க வைப்பது அதனினும் முக்கியம்!

என்று காரசாரமாக தமிழ் மக்களுக்கும், கட்சிகளுக்கும் வேண்டுகோள் விடுத்த கல்கி,

அந்தோ! பரிதாபம் - அடுத்த வாரமே 9-2-2003 தேதியிட்ட இதழில், அப்படியே ரவுண்ட் அபவ்ட் டர்ன் ஆகி பக்கம் தவறாமல் முதலமைச்சர் படங்களை வெளியிட்டு -

ஐந்தாறு ஆண்கள், பெண்களிடம் பேட்டி எடுத்ததாகப் பிரசுரித்து, அன்னலட்சுமி ஜெயலலிதா என்ற பட்டத்தையும் வழங்கியிருக்கிறது!

சாத்தான்குளத்தில் சம்மட்டியடி கொடுக்க வேண்டுமென்று சல்லடம் கட்டிய அடுத்த வாரமே, சாத்தான், அன்னலட்சுமியான அதிசயம் எப்படி நடந்தது?

எந்த சாத்தான், கையில் சவுக்குடனும் - கண் பார்வையில் மிரட்டலுடனும் கல்கியைக் கலக்கியது? குழப்பியது? கோழையாக்கியது?

நடப்பதே வேறு! ஜாக்ரதை - என்று நடுங்க வைப்பது!

ஏன் உமக்கு வீண் வம்பு? உமது பெயரும் பட்டியலில் இருக்கிறது என்று பக்குவமாய் பயமுறுத்துவது!

இப்படி நடுங்க வைக்கும் சாகசங்கள் நந்தன் காலத்திலிருந்து நடந்து கொண்டுதானிருக்கிறது.

ஆனால், சாகத் துணிந்தவனுக்கு சமுத்திரம் முழங்கால் மட்டம் என்று உறுதி கொண்டவனுக்கு இதெல்லாம் தூசு!

கலங்கி ஓடுகிறவனுக்குக் கால முழுதும், ஏன்? காலமான பிறகும் கூட கரையாத மாசு!

அன்புள்ள,

மு.க.

7-2-2003

2886. முதலில் என் கேள்விக்கு, முதலமைச்சர் பதில் சொல்லட்டும்!

உடன்பிறப்பே,

"என்னுடைய கேள்விக்கு என்ன பதில் என்று கடலூரில், வேலூரில், காஞ்சிபுரத்தில் அரசு விழாக்களில் முதல் அமைச்சர் ஜெயலலிதா என்னைப் பார்த்துத் தொடர்ந்து கேட்டு வருகிறார்.

கருணாநிதி ஏன் சட்டசபைக்கு வரவில்லை. மற்ற குட்டிச்சாத்தான்கள் ஏன் காளிமுத்துவை வசைபாடுகிறார்கள்?

இந்தக் கேள்விகளுக்குத்தான் நான் பதில் சொல்ல முடியவில்லையென்று ஜெயலலிதா கொக்கரிக்கிறார்.

இந்தக் கேள்விகள் ஜெயலலிதா இப்போது ஒரு வாரமாகக் கேட்பவை.

ஆனால், எனது இரண்டு முக்கியமான கேள்விகள் ஜெயலலிதாவினால் பதில் சொல்லப்படாமல் மூன்று நான்கு ஆண்டுகளுக்கு மேலாக நிலுவையில் நிற்கின்றன.

1. தன்னுடைய செல்வாக்கு வளர்வது கண்டு எம்.ஜி.ஆர். தன்மீது பொறாமைப்படுகிறார், என்று பிரதமர் ராஜீவ் காந்திக்கு ஜெயலலிதா, தனது கைப்படவே ஆங்கிலத்தில் கடிதம் எழுதி, அந்தக் கடிதம் பத்திரிகைகளில் வெளி வந்தது உண்டா இல்லையா?

2. இ.பி.ஆர்.எல்.எப். தலைவர் பத்மநாபாவும், அவருடன் சுமார் 10 பேரும் விடுதலைப் புலிகளால் சென்னையில் கொல்லப்பட்ட பிறகும், அடுத்த இரண்டு மாதத்திற்கெல்லாம் இந்து, எக்ஸ்பிரஸ் ஏடுகளுக்கு ஜெயலலிதா அளித்த சிறப்புத் தனிப் பேட்டியில், இப்போதெல்லாம் விடுதலைப் புலிகள் சரியாகி விட்டார்கள். அவர்களுக்கு இந்திய அரசும், மாநில அரசும், தமிழ்நாட்டு மக்களும் எல்லா உதவிகளும் செய்யவேண்டும் என்று வலியுறுத்திக் கூறியது உண்டா இல்லையா?

அன்புள்ள,

மு.க.

9-2-2003

2887. திராவிட இயக்க 90ஆம் ஆண்டு விழாவும்! இயக்கம் கண்ட ஏந்தலின் நினைவு நாளும்!

உடன்பிறப்பே,

திராவிட இயக்க வரலாறு என்ற பெரியதோர் நூல் எழுதிட முனைந்து, சுமார் 350 பக்கங்களில் திராவிட இயக்கத்தின் தோற்றம் பற்றி மட்டுமே எழுதி முடித்து வெளியிட்டு, தொடர் வரலாற்றை இன்னும் பல பாகங்களாக எழுதுவதற்குக் குறிப்புகள் தயாரித்து வைத்திருக்கும் தம்பி முரசொலி மாறனின் திராவிட இயக்க வரலாறு நூலை எடுத்துப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

திராவிட இயக்க முன்னோடிகள் மூவர் - டாக்டர் நடேசனார், டாக்டர் நாயர், தியாகராயர் -அவர்களில் 1913ஆம் ஆண்டிலேயே திராவிடர் சங்கம் என்ற பெயரில் ஓர் அமைப்பைத் தொடங்கிய டாக்டர் நடேசனார் பற்றித்தான் முதலில் குறிப்பிட்டு, இந்த மகத்தான பேரியக்கத்தின் வரலாற்றை எழுதத் தொடங்குகிறார் தம்பி முரசொலிமாறன். இதோ! அதைப் படியுங்கள்.

இருபதாம் நூற்றாண்டின் துவக்க காலம்...

குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமானால், 1912ஆம் ஆண்டு!

சென்னை நகரில் பணியாற்றிய அரசு ஊழியர்கள் சிலர், தாங்கள் பிராமணரல்லாதாராய் இருந்த ஒரே காரணத்தாலேயே, உத்தியோகத் துறையில் புறக்கணிக்கப்பட்டதையும், வேலை உயர்வு - போன்ற நியாயமாகக் கிடைக்க வேண்டிய வாய்ப்புகள் மறுக்கப்பட்டதையும் உணர்ந்து, மனம் புழுங்கி கலந்துரையாடவும், இணைந்து செயல்படவும், ஒன்று பட்டுத் தங்கள் குறைகளை எடுத்துரைக்கவும் 1912ஆம் ஆண்டு 'மெட்ராஸ் யுனைட்டெட் லீக் (Madras United League) என்னும் அமைப்பினை உருவாக்கினர்.

இந்த அமைப்பிற்கு வழிகாட்டியாகவும், துணையாகவும் இருந்தவர் அப்போது சென்னையில் சிறந்த டாக்டர்களில் ஒருவராக விளங்கிய நடேசனார் ஆவார்.

அவர்தாம் திராவிட இயக்கத்தின் நிறுவுநர்!

அவரே அந்த அமைப்பின் செயலாளராகவும் இருந்து அரும்பணியாற்றினார்.

ஓராண்டிற்குள் அந்த அமைப்பின் உறுப்பினர் தொகை 300 ஆயிற்று.

'லீக்கின் கூட்டங்கள் திருவல்லிக்கேணி பெரிய தெருவில் அமைந்திருந்த டாக்டர் நடேசனார் இல்லத்திலேயே நடைபெற்றன.

திரு. சரவண பிள்ளை (பின்னால் தஞ்சையில் 'டெபுடிகலெக்டர் ஆனவர்), திரு. ஜி.வீராசாமி நாயுடு, துரைசாமி முதலியார் (பொறியியல் துறையைச் சேர்ந்தவர்), திரு. எஸ். நாராயணசாமி நாயுடு (வருவாய் வாரியத்தின் ஷெரீப்பாகப் பணியாற்றியவர்) - போன்ற பின்னாளில் பெரும் உத்தியோகங்கள் ஏற்ற பிராமணரல்லாதார் 'மெட்ராஸ் யுனைட்டெட் லீக் அமைவதற்குப் பாடுபட்டதாகத் திரு.பி.ரெங்கசாமி நாயுடு கூறுகிறார். முதன்முதலாக அவர்கள் ஏற்றுக்கொண்ட சமுதாயப் பணி முதியோர் கல்வியாகும். அதன் உறுப்பினர்களாகவிருந்த அரசு ஊழியர்களே தங்களது மாலை நேர ஓய்வுக் காலத்தை இந்தப் பணிக்குச் செலவிட்டனர்.

ஆண்டுதோறும், பல்கலைக் கழகப் பட்டம் பெறும் பிராமணரல்லாத இளம் பட்டதாரிகளுக்கு வரவேற்பு நடத்தி, அவர்களை ஒருவருக்கொருவர் அறிமுகப்படுத்தி, அவர்களது சமுதாயக் கடமையை நினைவுறுத்துவதும் அந்த அமைப்பின் பணிகளில் ஒன்றாக இருந்தது.

அப்போதெல்லாம் பல்கலைக் கழகப் பட்டம் பெறும் பிராமணரல்லாத மாணவர்கள் எண்ணிக்கை, மிகமிகக் குறைவாக இருந்தமையால் இது சாத்தியமாயிற்று.

ஒருமுறை திவான்பகதூர் பி.கேசவப் பிள்ளை தலைமையில் அத்தகைய வரவேற்புக் கூட்டம் நடைபெற்றது. (சர்) பி.தியாகராயர், பனகல் அரசர் போன்றோர் அந்த வைபவத்திற்கு வருகை தந்திருந்தனர். பட்டதாரிகளின் சார்பாக, வரவேற்பிற்கு நன்றி கூறிப் பேசிய ஓர் இளைஞர் தமது பேச்சுத் திறனால் அனைவரது உள்ளத்தையும் கவர்ந்தார். அவர்தாம் பின்னாளில் நீதிக்கட்சிப் பிரமுகராகவும், சுதந்திர இந்தியாவின் முதல் நிதி அமைச்சராகவும் விளங்கிய (சர்) ஆர்.கே.சண்முகம் (செட்டியார்) ஆவார்.

1913ஆம் ஆண்டு 'மெட்ராஸ் யுனைட்டெட் லீக்கின் முதலாவது ஆண்டு நிறைவு விழாக் கூட்டம், டாக்டர் நடேசனாரின் சேப்பாக்கம் மருத்துவமனையில் உள்ள தோட்டத்தில் நடைபெற்றது. அன்று அங்கு கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானம், ஓர் இனத்தின் தனித்தன்மையைக் கண்டறிந்து, ஓர் இயக்கத்திற்கே பெயர் சூட்டிய தீர்மானமாகும். அது 'மெட்ராஸ் யுனைட்டெட் லீக் என்கிற பெயரை மாற்றுவது பற்றிய தீர்மானம்! சங்கத்தின் பெயர் அதன் நோக்கங்களைப் பிரதிபலிப்பதாக இல்லை - என்பதை அனைவரும் ஒப்புக்கொண்டு அதற்குச் சரியான பெயரைச் சூட்டும் விவாதம் நடைபெற்றது.

பிராமணரல்லாதார் சங்கம் - எனப் பெயரிடலாம் என்கிற கருத்து சொல்லப்பட்டது.

அது எதிர்மறைப் (negative) பெயராக இருப்பதால் அப்பெயருக்குக் கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டு, இறுதியில், 'மெட்ராஸ் யுனைட்டெட் லீக் என்னும் பெயரை 'திராவிடர் சங்கம் (Dravidian Association) என்று மாற்றுவதென்று ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அன்று முதல் அந்தச் சங்கம் இயக்கிவிட்ட உணர்வுகள் திராவிட இயக்கம் என்று பெயர் பெறலாயின.

கே.எம்.பாலசுப்ரமணியம் குறிப்பிடுவதுபோல, திராவிடர் சங்கம் டாக்டர் (நடேசனார்) பெற்ற குழந்தை. அதுவே நீதிக்கட்சியின் தந்தை. திராவிடர் சங்கம் - என்று பெயர் மாற்றப்பட்ட பிறகு, அதன் உறுப்பினர் தொகை 500 ஆயிற்று. 1914ஆம் ஆண்டு, திருவல்லிக்கேணி உயர்நிலைப் பள்ளி ஒன்றின் மாடியில் உள்ள கூடத்தில், திராவிட சங்கத்தின் முதலாண்டு நிறைவு விழா நடைபெற்றது. அந்நிகழ்ச்சியோடு பிராமணரல்லாத பட்டதாரிகளுக்கு ஒரு வரவேற்பும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

விழாவிற்குத் தலைமை வகிக்க ஒப்புக் கொண்டிருந்த வெங்கடகிரி அரசர் உடல்நலக் குறைவு காரணமாக வர இயலவில்லை. அப்போது ஸ்மால்காஸ் கோர்ட்டுகளின் பிரதம நீதிபதியாகவும், (Chief Judge of Small Cause Courts) பிறகு சென்னை உயர்நீதிமன்ற நீதிபதியாகவும் உயர்ந்த சி.கிருஷ்ணன் அந்நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்தார். அன்றைய தினம் சிறப்புரையாற்றியவர் டாக்டர் டி.எம்.நாயர் ஆவார். கூடியிருந்த

மாணவர்களும், அரசு ஊழியர்களும் என்றும் நினைவுகூரத்தக்க அரியதோர் உரையை அவர் ஆற்றினார். இளைஞர்கள் துணிவு பெறவேண்டுமென்றும், தங்கள் குறைபாடுகளைத் தைரியத்துடன் எடுத்து வைக்க வேண்டுமென்றும், அந்த அமைப்பின் தேவையைப் பொது மக்கள் உணருமளவிற்கு அதை வலிவுள்ளதாக்கப் பாடுபட வேண்டுமென்றும் அவர் வற்புறுத்தினார்.

விழியுங்கள்! எழுங்கள்! இன்றேல் என்றும் நீவிர் வீழ்ந்து பட்டோராவீர்!!! (Awake, Arise or before ever fallen!) என்று கூறி அவர் தமது சொற்பொழிவை முடித்தாரென்றால், அன்றைய பிராமணரல்லாத இளைய தலைமுறையினரிடையே அவர் எத்தகைய எழுச்சியுரையாற்றினார் என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

போதிய நிதி வசதி இல்லாத நிலையில், திராவிட சங்கம் இரண்டு கருத்து விளக்க நூல்களை 1915இல் வெளியிட்டது.

அவற்றில் குறிப்பிடத்தக்கது, பிராமணரல்லாதார் கடிதங்கள் (Non-Brahmin Letters) என்பதாகும். அப்போதைய சென்னை மாகாணத்தில் பிராமணரல்லாதாரின் இழிநிலையை விளக்கி, அவர்களை ஒன்றுபட்டு இயங்கக் கோரும் 21 கடிதங்கள் அந்தப் பிரசுரத்தில் அடங்கியிருந்தன.

- இத்தகைய உண்மைப் படப்பிடிப்பைக் கொண்ட பிரசுரங்கள், படித்த பிராமணரல்லாதாரிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி வந்தன.

வெறும் உபதேசங்கள் கொண்ட பிரசுரங்களை வெளியிடுவதோடு மட்டும் நிற்காமல், ஆக்கபூர்வமாகத் திராவிடர் முன்னேற்றத்திற்கு எதையாவது செய்ய வேண்டும் என்கிற துடிப்பு மிகுந்த நடேசனார், இன்னொரு நற்பணியையும் துவக்கி வைத்தார்.

அப்போதெல்லாம் பிராமணர்கள் நடத்தும் விடுதிகளில், பிராமணரல்லாதார் சென்று எடுப்புச் சாப்பாடுதான் வாங்கிச் செல்லலாமே தவிர, அங்கேயே உட்கார்ந்து சாப்பிட அனுமதிக்கப்படுவதில்லை. இதனால், உயர் கல்வி பெறுவதற்குச் சென்னை வந்துள்ள பிராமணரல்லாத மாணவர்கள் மிகவும் சிரமப்பட்டார்கள். (அப்போது சென்னையிலும், திருச்சியிலும்தான்

முதல் தரக் (First Grade) கல்லூரிகள் இருந்தன.) அவர்கள் தங்கிப் படிப்பதற்குத் தேவையான 'ஹாஸ்டல் எதுவுமில்லை.

இதை உணர்ந்த டாக்டர் நடேசனார் 1916ஆம் ஆண்டு ஜூன் மாதம் சென்னையில் 'திராவிட சங்க விடுதி (Dravidian Association Hostel) என்கிற 'ஹாஸ்டல் ஒன்றைத் துவக்கினார். திருவல்லிக்கேணி அக்பர் சாகிப் தெருவில் உள்ள ஒரு பெரிய கட்டிடத்தில் பிராமணரல்லாத மாணவர்களுக்கென்று பிரத்யேகமாக அந்த விடுதி செயல்படத் துவங்கிற்று.

மாணவர்பால் பற்றும் பாசமும் கொண்ட டாக்டர் சி.நடேச முதலியார், 'திராவிடர் விடுதியை எவ்வளவு சிறப்பாக நடத்தினார் என்பதை, அவ்விடுதியில் தங்கியிருந்த மாணவர்கள் என்றும் நன்றி உணர்வுடன் நினைவு கொள்வர்.

- என்று ஒரு பெரியவர் அந்த நற்பணியினை விவரிக்கிறார்.

உலகத்தில் எந்த ஒரு மறுமலர்ச்சி இயக்கமும் இளைஞர் சமுதாயத்தால் - சிறப்பாக மாணவர் சமுதாயத்தால்தான் துவக்கப்பட்டிருக்கிறது. இதற்குத் திராவிட இயக்கமும் விதிவிலக்கன்று.

டாக்டர் நடேசனார், சென்னை பூவிருந்தவல்லி நெடுஞ்சாலையில் உள்ள 'நீல விலாஸ் என்கிற வழக்கறிஞர் எஸ்.ஜி.சடகோபன் இல்லத்தில், நகரத்தின் அனைத்துக் கல்லூரி மாணவர்களையும் திரட்டி ஒரு கூட்டம் நடத்தினார். அதில் சொற்பொழிவாற்றிய டாக்டர் டி.எம்.நாயர், இந்தச் சமுதாயத்தின் இளைஞர்கள் கிளர்ந்தெழுந்து இந்த இயக்கத்திற்குப் பேராதரவு நல்காவிடில், அவர்களுக்கு ஒளிமயமான எதிர்காலம் இல்லை என்பதை வலியுறுத்தி, உணர்ச்சி மயமான சொற்பொழிவு நிகழ்த்தினார்.

இந்நிகழ்ச்சி அநேகமாக 1916ஆம் ஆண்டில் நடந்தது என்று திரு.எஸ்.ஜி.மணவாள இராமானுஜம் நினைவு கூர்கிறார். அப்போது நடேசனாரின் ஆக்கப் பணிகளால் திராவிட சங்கம் சமுதாயத்துப் 'பெரியவர்களின் மனதிலெல்லாம் இடம் பெற்றிருந்தது.

உடன்பிறப்பே, மிகப் பொருத்தமானதும், தேவையானதுமான நேரத்தில் தம்பி மாறன் எழுதியுள்ள புத்தகத்தில் உள்ள நடேசனார் வாழ்க்கைக் குறிப்பு பெரும்பாலும் திராவிட இன உணர்வு

பரப்புகின்ற பணிக்கே அவரது முழு வாழ்வும் பயன்படுத்தப்பட்டது என்பதை எடுத்துக் காட்டுகிறது.

1920ஆம் ஆண்டும், 1923ஆம் ஆண்டும் என இரு முறை சென்னை சட்டசபைத் தேர்தலில் பெரும் வெற்றி பெற்று சட்டசபையில் சமூக நீதிக்காக வாதாடி கம்யூனல் ஜி.ஓ நிறைவேற்றப்படக் காரணமாக இருந்தவர்களில் முக்கியமானவர் நடேசனார் ஆவார்.

நீதிக்கட்சியின் உதயம் 1916ல் எனினும், 1912ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட மெட்ராஸ் யுனைடெட் லீக் என்ற பார்ப்பனரல்லாதார் அமைப்புக்கு 1913ல் திராவிடர் சங்கம் எனப் பெயரிட்டுத் தொடங்கியவர் நடேசனார்தான்.

1875ஆம் ஆண்டு பிறந்த அவர், 1937 பிப்ரவரி 18ஆம் நாள் தனது 62ஆம் வயதில் மறைந்தார் எனினும், அவர் உருவாக்கிய திராவிட இயக்க உணர்வு மறையவில்லை, மறையாது.

அவரது 66ஆம் நினைவுநாளுக்கு இன்னும் ஏழு நாட்களே இருக்கின்றன.

இந்த ஆண்டு முதல் திராவிட இயக்கத்திற்கு வித்தூன்றிய அந்த வித்தகர் நினைவுநாளையும் - அவர் உருவாக்கிய திராவிடர் சங்கத்தின் 90ஆம் ஆண்டு விழா, இந்த ஆண்டு வருவதால் அந்த நாளையும் - இந்த ஆண்டே ஒரு சேரக் கொண்டாட வேண்டுமென்று விரும்புகிறேன்.

சென்னை சேப்பாக்கம் திருவல்லிக்கேணி பகுதியில் பிறந்து, வாழ்ந்து திராவிட உணர்வூட்டிய அந்தத் தீரரின் புகழ் பாடிடவும், அவர் கண்ட திராவிட இயக்கத்தின் பணி பரவிடவும் சென்னை மாவட்டக் கழக உடன்பிறப்புகள், பிப்ரவரி 18 அன்று நான் குறிப்பிட்டுள்ள இரு நாட்களையும் எழுச்சி நாட்களாக இணைத்துக் கொண்டாடுமாறு அன்புடன் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

வாழ்க நடேசனார் புகழ்!

வெல்க அவர் கண்ட திராவிட இயக்கம்!

அன்புள்ள,

மு.க.

12-2-2003

2888. உண்மைக்கே இறுதி வெற்றி!
உறுதியுடன் நில்லுங்கள்!

உடன்பிறப்பே,

காரிருள் அகத்தில் நல்ல
கதிரொளி நீ தான்! இந்தப் பாரிடைத் துயில்வோர்
கண்ணிற்
பாய்ந்திடும் எழுச்சி நீதான்! ஊரினை நாட்டை இந்த
உலகினை ஒன்று சேர்க்கப் பேரறிவாளர் நெஞ்சிற்
பிறந்த பத்திரிகைப் பெண்ணே! அறிஞர்தம் இதய
ஓடை
ஆழநீர் தன்னை மொண்டு செறிதரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றிக் குறுகிய செயல்கள் தீர்த்துக்
குவலயம் ஓங்கச் செய்வாய்! நறுமண இதழ்ப்
பெண்ணே உன்
நலம் காணார் ஞாலம் காணார்

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பத்திரிகைகளைப் பற்றிச் சொன்ன பத்தரை மாற்றுப் பசும்பொன் போன்ற கருத்துகளின் கோவை இக்கவிதை. அதில் ஒரு பகுதியை மட்டும் நீ காண்கிறாய்.

பத்திரிகையைப் பெண் என்றே கூறிச் சிறப்பிக்கிறார் பாவேந்தர்.

பேரறிவாளர் நெஞ்சிற் பிறந்த பத்திரிகைப் பெண்ணே! என்கிறார்.

நறுமண இதழ்ப் பெண்ணே! என்கிறார்.

ஆனால் ஒரு பெண்ணின் ஆட்சியில், பெண் என வர்ணிக்கப்படும் பத்திரிகைக்கு வந்திடும் துயர் கொஞ்ச நஞ்சமா?

நீதி, ஒரு தூண்!
நிர்வாகம், ஒரு தூண்!
சட்டமன்றம், ஒரு தூண்!
நான்காவது தூணாக பத்திரிகை!

என்று ஜனநாயகத்தின் தூண்களைக் குறிப்பிடுவர். ஆன்றோரும் சான்றோரும்!

பத்திரிகைப் பெண்ணைப் படாதபாடுபடுத்தி - பயமுறுத்தி - பணிய வைத்திட முனைந்து, அதில் வெற்றியும் பெற்று வீராப்பு பேசி, வெற்றி கிட்டாத நிலையில் வெறி கொண்டு தாக்கிடும் பெண்ணரசு தர்பாரில் ஜனநாயகத் தூண்களில் நான்கில் ஒன்றெனப்படும் பத்திரிகைத் தூண், பதைப்பது கண்டு பரவசமுறத் தயாராக இல்லை. ஏனைய மூன்று தூண்களும்!

காரணம், அந்தத் தூண்களும் ஆடிப்போய்த்தான் கிடக்கின்றன. என்றைக்கு ஜனநாயக மண்டபம் கீழே சாய்ந்திடுமோ என்று அத்தூண்கள் கலங்குவதும், அவற்றை ஜனநாயக மண்டபம், சிரித்தபடி பார்த்து - நீங்கள் ஆடிப்போய் விழுந்து விட்ட காரணத்தால், நானும் விழுந்து கிடக்கிறேனே பார்க்கவில்லையா? நான் விழுந்து, மணிக்கணக்கில் நேரமாகிவிட்டதே தெரியாதா? எனக் கேட்பதையும், அந்தச் சிரிப்பு வெறும் தோற்றம்தான் - கண்ணீர் ஒப்பனை செய்து கொண்டு வருகிறது என்ற உண்மையும் எல்லாத் தூண்களுக்குமே புரியத்தான் செய்கிறது.

என்னதான் ஒப்பனை செய்து கொண்டாலும், பூ வைத்துப் பொட்டிட்டுக் கொண்டாலும் - கண்ணுக்கு மை, உதட்டுக்குச் சாயம் என்று பூசிக் கொண்டாலும், முகம் எப்படியிருக்கிறது என்பதை, கண்ணாடி கறாராகச் சொல்லிவிடுகிறது.

கண்ணாடி பார்ப்பது போலும், மேலும் திருத்திக் கொள்வது போலும்தான், ஆட்சியிலிருப்போர் அன்றாடம் பத்திரிகை பார்ப்பதுமாகும்.

என் முகமே கண்ணாடி! எனக்கேன் இன்னொரு கண்ணாடி?

என்பவர்களிடம் எமக்கு வேலையில்லையென்று விலகிவிடுவர் விவேகிகள்!

இருப்பதை மறைக்காமல் காட்டும்
கண்ணாடியின் மீது கடுங்கோபம்

கொண்டு, அதனைத் தூக்கி எறிவதும், தூள் ஆக்குவதும் ஒரு துரைத்தனத்திற்கு அழகல்ல!

துடுக்குத்தனத்தின் இயல்பாகும்!

இந்த நிலை இன்று தமிழகத்தில் இருப்பதால்தான் பாவேந்தர் சொன்னது போல்,

தெருப் பெருக்கிடுவோருக்கும்,

செகம் காக்கும் பெரியோர்க்கும்,

கை இருப்பிற் பத்திரிகை நாளும்

இருந்திடல் வேண்டும்!

எனில், அந்தப் பத்திரிகைகளில், உண்மை, ஒளி உமிழ வேண்டும்! நடந்தது நடந்தபடி நாட்டு நடப்புகளை நாகரிகமாக உரைக்கும் நாணயத் தன்மை வேண்டும்! அவ்வாறு உரைத்திடும் ஏடுகளுக்கு உறை போட்டு வை என உத்திரவிட்டு, மீறினால் சிறை வைக்கும் இமல்டா ஆட்சியின் கொடுமை எங்கும் தலைகாட்டக் கூடாது!

ஆனால் இங்கு நடக்கிறதா, நல்லாட்சி? வல்லாட்சி நடப்பதாக எண்ணிக் கொண்டு, வாள் கொண்டு செய்தித்தாள் சிரம் நறுக்குவேன் என மிரட்டுகின்றார்!

நீதிமன்ற வழக்கு ஒன்று - முன்பிருந்த ஆட்சியிலே தொடர்ந்தது - பல்வேறு தங்குதடைகள் எழுப்பியதால் தாமதித்து இப்போது விசாரணை - அன்று சாட்சியமளித்தோர் சிலர், இன்று புது சத்தியம் செய்து புரண்டு கொண்டனர். அதற்கெல்லாம் மறு விசாரணை வரலாம். அது வேறு விஷயம்! இதற்கிடையே அரசு சாட்சி ஒருவர் - அவர்தான் அந்த வழக்கில் விசாரணை செய்து சொத்துப் பட்டியல் தந்தவர். பத்திர ஆதாரங்களைப் பதிய வைத்தவர் - அவர் நீதிமன்றத்தில் வளைந்து நெளியாமல், குனிந்து கூனாமல் உண்மை உரைப்பதாக உறுதியுடன் கூறுகிறார். இன்றைய அரசின் வழக்கறிஞர் தனக்கு ஒத்துழைப்பு தரவில்லையென்று! இன்னும் பல தகவல்கள் - அரசை அதிரச் செய்யும் தகவல்கள்!

இவற்றையெல்லாம் வெளியிடக் கூடாது என்று இரவோடிரவாக ஏடுகளுக்கு ஆணையிடப்படுகிறது. மிரளாமல்,

உருளாமல் ஓரிரு பத்திரிகைகளில் மட்டும் உண்மைச் செய்தி வருகிறது.

மற்ற ஏடுகள் பலவும், காரிருள் அகத்தில் கதிரொளியாக இராமல் காரிருளாகவே காட்சி தருகின்றன.

காரணம், கதிரொளி கிளம்பினால் காராக்கிரகம் கிடைக்கும்!

அதை நினைத்து நடுங்குகின்றன - மனத்துக்குள் புழுங்குகின்றன!

என் செய்வது?

குறுகிய செயல்கள் தீர்த்துக் குவலயம் ஓங்கச் செய்வாய்!

எனப் புரட்சிக் கவிஞர் கூவி அழைப்பதைக் கூர்ந்து கேள் பத்திரிகைப் பெண்ணே!

என்று நானும் கூறி அழைக்கிறேன்.

உண்மையை ஒளிக்கச் சொல்லும் ஆட்சியாளருக்கு முன்னால் உறுதியுடன் நில்லுங்கள்!

இறுதி வெற்றி உண்மைக்கே!

இதனைப் புவியாள்வோர்

புரிந்து கொள்ள,

உறுதியுடன் நில்லுங்கள்!

அன்புள்ள,

மு.க.

13-2-2003

2889. கார்க்கியின் தாய் காவியம்!

எந்தவொரு வார இதழ், நாளிதழ், திங்கள் இதழ் சிறப்புப் பேட்டி என்றாலும், தங்களுக்குப் பிடித்த வெளிநாட்டுப் புதினம் எது? என்று கேள்வி எழுந்தபோதெல்லாம், நான் அதற்குச் சொன்ன ஒரே பதில் மாக்ஸிம் கார்க்கியின் தாய் என்ற புதினம் என்பதுதான்.

பலமுறை சிறைவாசம் அனுபவித்த கால கட்டங்களில் அந்தப் புத்தகத்தை நான் துணைக்கு அழைத்துக் கொள்வேன்.

கார்க்கியின் தாய் எனும் புதினத்தை ருஷ்ய மொழியிலிருந்து நேரடியாகச் சிறப்புற மொழி பெயர்த்த நண்பர் ரகுநாதன் அவர்கள், அவரது முன்னுரையில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

தாய் வெளியானதைக் கண்ட ருஷ்யாவின் ஜார் அரசாங்கம், ஆத்திரம் தாங்காமல் கார்க்கியின் மீது நடவடிக்கை எடுக்கத் துணிந்தது. ஆனால், அந்த நடவடிக்கைக்கான அரசாங்கத் தஸ்தாவேஜிகள் எவற்றிலும், கார்க்கியை ஓர் எழுத்தாளன் என்று குறிப்பிடக்கூட, ஜார் அரசாங்கம் விரும்பவில்லை. மாக்ஸிம் கார்க்கி என்ற கார்க்கியின் புனைப் பெயர் உலகப் பிரசித்தி பெற்றிருந்த போதிலுங்கூட, அந்தப் பெயரைக் குறிப்பிடவில்லை. கார்க்கியின் இயற் பெயரான 'அலெக்ஸி மாக்ஸிமோவிச் பெஷ்கோவ் என்பதை மட்டும் குறிப்பிட்டு, அதன் அருகில் ஒரு கொல்லுலைத் தொழிலாளி என்றும் குறிப்பிட்டு, கார்க்கியின் இலக்கிய மேதையைத் திரையிட்டு மறைக்க எண்ணியது ஜார் அரசாங்கம். ஆனால் கார்க்கியோ, ஜார் அரசாங்கத்தின் காவல் நாய்களின் கையிலே சிக்கவே இல்லை. காப்ரித் தீவு என்ற இடத்தில் பத்திரமாக வாழ்ந்து வந்தார். பின்னர், கார்க்கி ருஷ்யாவுக்குத் திரும்பி வந்த காலத்தில் ருஷ்ய மக்கள் அவருக்கு அமோக வரவேற்பளித்துக் கௌரவித்தார்கள்.

கார்க்கியின் இலக்கியத்தில், பாட்டாளி மக்கள் மனிதர்களாக உலவுகிறார்கள். வீரர்களாகத் திரிகிறார்கள். தமது வாழ்க்கைச் சூழ்நிலையிலிருந்தே தவிர்க்க முடியாதவாறு பொங்கியெழும் தொழிலாளி வர்க்கத்தின் தர்மாவேச தாகத்தைச் சித்தரித்தார்

கார்க்கி. நீறுபூத்த நெருப்பாகக் கிடக்கும் அவர்களது போராட்ட சக்தி, எப்படி வர்க்க உணர்ச்சி பெற்று கனிந்து, சிவந்து, வான்முட்டியோங்கும் செந்தழற் பிழம்பாக வளர்கிறது என்பதைச் சித்தரித்தார் கார்க்கி. அடிமைத்தனத்தின் நுகத் தடியில் கழுத்தைக் கொடுத்துத் தடிப்பேறிய மக்களின் மனிதத் தன்மை, எப்படி அந்தத் தளையைத் தகர்த்து விடுபட முடியும், எப்படி விடுபடுகிறது என்ற சூட்சுமத்தை விளக்கினார் கார்க்கி.

நண்பர் ரகுநாதனைப் போன்ற எழுத்தாளர்களைக் கவர்ந்தது போலவே, என்னையும் கவர்ந்தவர் கார்க்கி. சோவியத் நாட்டில் கார்க்கி பிறந்த இடத்துக்கு அவர் பெயர் சூட்டப்பட்டுள்ளது. அவர் பிறந்த சிறிய இல்லம் இன்று மகத்தான தேசிய சின்னமாக மாற்றப்பட்டுள்ளது. மாஸ்கோ நகரத்து மாபெரும் பூங்கா, கார்க்கியின் பெயரால் அழைக்கப்படுகிறது. இலட்சிய வெறியுடன் போராடி, சிறைக்கோட்டம் பலமுறை சென்று, இலக்கியச் சிற்பியாகவும் விளங்கிய அந்த மாமேதைக்கு என்னாலியன்ற நினைவுச் சின்னம் ஒன்று அமைத்திட விரும்புகிறேன்.

அந்த நினைவுச் சின்னம்தான் மாக்சிம் கார்க்கி யின் மகத்தான படைப்பு தாய் எனும் புரட்சிப் புதினத்தை, கார்க்கியின் 'தாய் காவியம் எனும் தலைப்பில் கவிதை நடைத் தொடராகக் குங்குமம் வார இதழில் எழுதுகிறேன். இக்கவிதை நடைத் தொடர் மார்ச் திங்கள் மகளிர் வாரம் தொடங்கி, தொடர்ந்து வெளிவரும். எழுத்து வடிவில் பூத்த புரட்சிப்பூ ஒன்று! என் நெஞ்சில் எப்போதும் மணம் வீசும் பூ!

மாக்சிம் கார்க்கி எனும் மாபெரும் எழுத்தாளன்
மன்பதைக்குத் தந்திட்ட சிகப்புப்பூ! செம்பூ!
அன்னை யென்றும், தாய் என்றும்
அழைக்கப்படும் அற்புதப் பூ!
பல மொழிகளில் மணம் பரப்பும் அப்பூவை
கலை வண்ணமுடன் கவிதை நடையில்
வழங்குகின்றேன்.

அன்புள்ள,

மு. கருணாநிதி

15-2-2003

2890. இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன் என்ன ஆவான்?

உடன்பிறப்பே,

காவல்துறையினருக்கு விருது வழங்கும் அரசு விழாவிலே, 14-2-2003 அன்று பேசிய முதலமைச்சர் ஜெயலலிதா, வழக்கம்போல் எரிச்சல் கொட்டி என் மீது தாக்குதல் கணை தொடுத்துள்ளார். அதிலே 1998க்குப் பிறகு மூன்றாண்டு காலம் விருது வழங்கப்படவில்லை என்று கூறியிருக்கிறார். 1998ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் திருச்சியில் இந்த விருது வழங்கும் விழா கழக ஆட்சிக் காலத்தில் நடைபெற்றது. அதற்குப் பிறகு 1999ஆம் ஆண்டும், 2000ஆம் ஆண்டும் கழக ஆட்சிக் காலத்தில் வழங்கப்படவில்லை என்பது உண்மைதான். அதற்குக் காரணம் 1999ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றதாலும், 2001ஆம் ஆண்டு சட்டப் பேரவைக்கு பொதுத் தேர்தல் நடைபெற்றதாலும், அந்த நேரத்தில் அரசு விழாக்களை நடத்துவது மரபல்ல என்பதாலும் அவை நடத்தப்படவில்லை.

காவல்துறையினருக்கு இந்தப் பதக்கம் வழங்கும் திட்டத்தை முதன் முதலாக அறிவித்ததே 1969ஆம் ஆண்டு தி.மு.கழக ஆட்சியிலேதான். கழக ஆட்சியில் ஒவ்வொரு ஆண்டும் தவறாமல் இந்த விருதுகள் வழங்கப்பட்டு, பின்னர் வந்த அ.தி.மு.க. ஆட்சியிலே இந்தத் திட்டத்தையே நிறுத்தி விட்டார்கள். 1989ஆம் ஆண்டு மூன்றாவது முறையாக நான் பொறுப்பேற்ற பிறகுதான், இந்தத் திட்டத்தை மறுபடியும் அறிமுகப்படுத்தி இப்போது தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

96ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பிற்கு வந்த பிறகு, அதற்கு முன்பு நடைபெற்ற ஐந்தாண்டு கால ஆட்சியில் காவல்துறையின் ஈரல் ஓரளவிற்கு கெட்டுவிட்டது என்றும், ஆனால், அதனை சரிப்படுத்தி விட முடியும் என்றும் குறிப்பிட்டதை வைத்துக் கொண்டு ஒவ்வொரு காவல்துறை விழாவிலும் ஜெயலலிதா கெட்டுப்போன விஷயத்தையே திரும்பத் திரும்பச் சொல்லி, காவல்துறையினருக்கு என்னை விரோதி போலக் காட்டிட முனைகிறார்.

1997ஆம் ஆண்டு மார்ச் திங்களில் நடைபெற்ற இதுபோன்ற பதக்கம் வழங்கும் விழாவில் நான் பேசும்போது, தமிழகக் காவல்துறை கடந்த காலத்திலே ஓரளவு சீர்குலைந்து விட்டது என்றாலும் கூட, இன்றைக்கு அந்தச் சீர்குலைவு ஒழுங்காக ஆக்கப்பட்டு செம்மையான முறையிலே காவல்துறை பணி புரியத் தொடங்கியிருக்கிறது என்று குறிப்பிட்டு அதற்கு உதாரணமாக காவல்துறையினரால் ஆற்றப்பட்ட பணிகள் பற்றி விளக்கினேன். பின்னர் 1998ஆம் ஆண்டு செப்டம்பர் 30ந்தேதியன்று திருச்சி மாநகரில் பதக்கம் வழங்கும் விழா நடைபெற்றபோது அதிலே கலந்து கொண்ட நான், கடந்த இரண்டாண்டு காலத்தில் காவல் துறையின் செயல்பாடுகள் பாராட்டத்தக்க வகையில் இருக்கின்றன என்றும் குறிப்பிட்டேன்.

சென்னை விழாவில் ஜெயலலிதா பேசும்போது, காவல்துறையினரை சென்னைக்கே அழைத்து குறைகேட்ட ஒரேயொரு முதல்வர் அவர்தான் என்று பெருமைப்பட்டுக் கொண்டுள்ளார். குறை கேட்பது என்ற பெயரால் ஒரே நேரத்தில் ஐம்பது, அறுபது பேரை அறைக்குள் அழைத்து அவர்களிடமிருந்து மனுக்களைப் பெற்றுக் கொண்டது உண்மைதான். ஆனால், அந்த மனுக்களில் எத்தனை பேருடைய பிரச்சினைகள் தீர்க்கப்பட்டன என்பதுதான் முக்கியம். கடந்த ஓராண்டு காலமாக காவல்துறையிலே உள்ள சிறப்பு பிரிவினருக்கு பயணப்படி ஒரு மாதத்திற்கு கூட வழங்கப்படவில்லை. இந்தியா விலேயே இத்தனை மாத காலத்திற்கு தொடர்ந்து சிறப்புப் பிரிவு காவல்துறையினருக்கு பயணப்படி வழங்காமல் உள்ள ஒரே மாநிலம் தமிழ்நாடு என்ற பெருமையை வேண்டுமென்றால், ஜெயலலிதா கூறிக் கொள்ளலாம்.

ஜெயலலிதாவின் கடந்த கால அ.தி.மு.க. ஆட்சியில் அவரிடம் முக்கிய பொறுப்புகள் வகித்த காவல் துறை அதிகாரிகளுக்கு, கழக ஆட்சியின் போதும் மிக முக்கியமான பொறுப்புகளையும் இன்னும் சொல்ல வேண்டுமென்றால், அவர்கள் ஜெயலலிதா ஆட்சியிலே வகித்து வந்த அதே பதவிகளையும் அளித்து கௌரவிக்கப்பட்டது. ஆனால், கழக ஆட்சியில் முக்கிய துறைகளில் பணியாற்றிய காவல் துறை அதிகாரிகளை இப்போது ஜெயலலிதா ஆட்சியில் பந்தாடி, அவர்களுக்கு எந்தவொரு முக்கிய பணிகளையும் தராமல் ஒதுக்கியிருப்பதில் வேண்டுமானால், இந்த மாநிலம் இந்தியாவிலேயே முதல் மாநிலம் என்று அவர் பெருமைப்பட்டுக் கொள்ளலாம்.

தனக்கு மிகவும் வேண்டியவர் என்ற ஒரே காரணத்திற்காக ஓய்வு பெற்ற மூத்த காவல்துறை அதிகாரி ஒருவரை, மற்ற மூத்த காவல்துறை அதிகாரிகளையெல்லாம் நம்பாமல் அழைத்து, இரண்டாண்டு காலமாக அவருக்கு அரசு ஊதியமும் அளித்து, அதன் காரணமாக எந்தப் பயனும் இல்லாமல் இருப்பதற்கு உதாரணமாக இந்தியாவிலே வேறு எந்த மாநிலமும் இல்லை என்று கூறிக் கொள்ளலாம்.

மாநிலத்திலே தலைமைப் பொறுப்பிலே டி.ஜி.பி. யாக இருந்த அதிகாரியை தற்காலிகப் பதவி நீக்கம் செய்ததிலும், இந்தியாவிலேயே முதன் மாநிலம் ஜெயலலிதா ஆட்சியிலே உள்ள இந்த மாநிலம்தான். அந்த அதிகாரி தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட வேண்டிய அளவிற்கு தகுதியற்றவர் என்றால், அவரை அந்தப் பதவியிலே அமர வைத்ததும் இந்த அம்மையார்தான்.

காவல்துறைக்குத் தி.மு.கழக அரசு எதையும் செய்யவில்லை என்பதைப்போல, தொடர்ந்து ஜெயலலிதா ஒவ்வொரு காவல் துறை நிகழ்ச்சியிலும் சொல்லி வருகிறார்.

ஆனால், தி.மு.கழக ஆட்சியிலே நான் முதலமைச்சராக இருந்த போதுதான் 1969ஆம் ஆண்டு ஒரு முறையும், 1989ஆம் ஆண்டு ஒரு முறையும் முறையே ஆர்.ஏ. கோபாலசாமி, ஐ.சி.எஸ்., பி. சபாநாயகம், ஐ.ஏ.எஸ்., ஆகியோர் தலைமையில் காவல் துறைக்காக இரண்டு கமிஷன்கள் அமைக்கப்பட்டன என்பதும், இந்தியாவிலேயே காவல் துறைக்காகத் தனியாக முதன் முதலாக கமிஷன் அமைக்கப்பட்டது கழக ஆட்சியிலே தான் என்பதும், அவற்றின் பரிந்துரைகளை நிறைவேற்றியதும் கழக ஆட்சிதான் என்பதும் தெளிவாகும்.

மத்திய அரசின் காவல்துறைப் பணியாளருக்கு ஈடாக, இன்னும் சொல்ல வேண்டுமேயானால் அதைவிட அதிகமாக, மாநில அரசிலே பணியாற்றும் காவல் துறையினருக்கு ஊதியமாக வழங்கியது இந்தியாவிலேயே முதன்முதலாக தமிழ்நாட்டில் தி.மு.க. ஆட்சியில்தான்.

1991 முதல் 1995-96 வரை ஜெயலலிதா ஆட்சி புரிந்த போது காவல் துறைக்காக செய்யப்பட்ட மொத்த நிதி ஒதுக்கீடு 1716 கோடி ரூபாய். 96-97 முதல் 2000-2001ஆம் ஆண்டு வரை நடைபெற்ற கழக ஆட்சியில், காவல்துறைக்காகச் செய்யப்பட்ட மொத்த நிதி ஒதுக்கீடு 3,988 கோடி ரூபாய். அதாவது ஜெயலலிதா ஒதுக்கியதைப்போல இரண்டு

மடங்கு தொகை இந்தத் துறைக்காகக் கழக ஆட்சியிலே நிதி ஒதுக்கப்பட்டது. காவல் துறையினர் பணிக்காலத்தில் வீரதீரச் செயல்களில் ஈடுபட்டு மறைந்து விட்டால் அவர்களுடைய குடும்பங்களுக்கு கருணைத்தொகையாக இரண்டு இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது 97 ஆம் ஆண்டு தி.மு.கழக ஆட்சியிலேதான்! இதுதவிர காப்பீட்டுத் திட்டத்தின்படி, ஒரு இலட்சம் ரூபாய் இழப்பீட்டுத் தொகையாகவும், தமிழ்நாடு குடும்பப் பாதுகாப்பு நலநிதியிலிருந்து ஒரு இலட்சம் ரூபாயும் வழங்கப்படும்.

கள்ளச் சாராயத்தை மிகச் சீரிய முறையில் தடுத்துச் சாதனை புரியும் ஆய்வாளர் மற்றும் உதவி ஆய்வாளர்களுக்கு 1996 ஆம் ஆண்டு முதல் உத்தமர் காந்தி பதக்கமும், பத்தாயிரம் ரூபாய் பண முடிப்பும் கொடுக்கப்படுகிறது.

ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் 92-93 இல் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஆனால் பணி நியமனம் செய்யப்படாமல் இருந்த 329 காவலர்கள், கழக ஆட்சிக் காலத்தில் நியமனம் செய்யப்பட்டார்கள். அதைப் போலவே ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில், காவலர்களாகத் தேர்வு செய்யப்பட்டு, பட்டியல் வெளியிடப்படாமல் இருந்த பத்தாயிரம் காவலர்களில் 97 இல் 5801 காவலர்களும், 3052 பெண் காவலர்களும் கழக ஆட்சிக் காலத்தில் நியமனம் செய்யப்பட்டார்கள். இன்னும் சொல்லவேண்டுமேயானால், தமிழகத்திலே பெண் போலீஸ் என்பதே 1971 ஆம் ஆண்டு தி.மு.கழக ஆட்சியில் அறிமுகப்படுத்தப்பட்டதுதான். அப்போது தொடங்கப்பட்ட பெண் போலீசாரின் எண்ணிக்கைதான் படிப்படியாக உயர்ந்தது.

ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் தேர்வு செய்யப்பட்டு, பணி நியமனம் செய்யப்படாமல் இருந்த உதவி ஆய்வாளர்களுக்குக் கழக ஆட்சியிலே பணி நியமனம் தரப்பட்டது.

பத்தாண்டுகள் பிழையின்றி பணி முடித்த இரண்டாம் நிலை காவலர்கள் 18,100 பேர், முதல்நிலை காவலர்களாக கழக ஆட்சிக் காலத்தில் பதவி உயர்வு பெற்றனர். பத்தாண்டுகள் இரண்டாம் நிலை காவலர்களாகவும், ஐந்தாண்டுகள் முதல் நிலைக் காவலர்களாகவும் பணி முடித்த தகுதி பெற்ற 22,400 முதல் நிலைக் காவலர்கள், தலைமைக் காவலர்களாக பதவி உயர்வு பெற்றதும் கழக ஆட்சிக் காலத்தில்தான். அதுபோலவே, 25 ஆண்டுகள் மொத்தப் பணிக்காலம் முடித்து அதில் தலைமைக்

காவலர்களாக பத்து ஆண்டுகள் பணி முடித்தவர்கள் பதவி உயர்வு பெறுவதற்காகச் சிறப்பு உதவி ஆய்வாளர் என்ற பதவி உயர்வு பெற வழி வகுக்கப்பட்டதும் கழக ஆட்சிக் காலத்தில்தான்.

தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தின் சார்பில், ஜெயலலிதாவின் ஐந்தாண்டுக் கால ஆட்சியில் காவலர்களுக்கு வீடு கட்டுவதற்காக ஒதுக்கப்பட்ட தொகை 48 கோடி ரூபாய். கழக ஆட்சியில் நான்கு ஆண்டு காலத்தில் மட்டும் காவலர்களுக்கு வீடு கட்டுவதற்காக ஒதுக்கப்பட்ட தொகை 190 கோடி ரூபாய். அந்த வீட்டு வசதிக் கழகத்தின் தலைவராக இருந்தவர்தான் தற்போது தமிழகத்தின் காவல் துறை தலைவராக இருக்கிறார் என்பதால், முதலமைச்சர் அவரைக் கேட்டால் இந்த விவரத்தை தெளிவாக்குவார்.

எனவே முதலமைச்சர் ஜெயலலிதா அவர்கள், திரும்பத் திரும்ப கழக அரசின் மீதும் என் மீதும், தொடர்ந்து தாக்குதல் கணைகளை மக்கள் வரிப் பணத்திலே நடைபெறும் அரசு விழாக்களில் விடுப்பது சரியல்ல. அரசு விழாக்கள் என்றால் அங்கே அரசின் சாதனைகளைத்தான் கூற வேண்டும். அப்படி கூறுவதற்கு எதுவும் இல்லையென்றால், மற்றவர்கள் மீது குறை கூறுவதையாவது நிறுத்திக் கொள்ள வேண்டும்.

மேலும் தான் ஒரு முதலமைச்சர் பொறுப்பிலே இருக்கிறோம், அதற்கென்று சில கண்ணியத்தைக் கடைப்பிடிக்க வேண்டும், பேச்சிலே தரம் இருக்க வேண்டும், மற்றக் கட்சிகளையோ, அவற்றின் தலைவர்களையோ குறை கூறலாம், ஆனால் அதிலே விரசம் இருக்கக் கூடாது, பண்பாடு பாதுகாக்கப்பட வேண்டும் என்பதைப் புரிந்து கொண்டு இனியாவது பேசுவது நல்லது.

இந்த என் வேண்டுகோள் விழலுக்கு இறைத்த நீராகும் என்பது தெரிந்திருந்தும், இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்

கெடுப்பா ரிலானுங் கெடும்

என்ற குறளை நினைவுகூர்ந்தாவது, திருந்த மாட்டாரா என்ற நப்பாசையினால்தான் இதனைக் குறிப்பிட வேண்டியதாயிற்று!

அன்புள்ள,

மு.க.

17-2-2003

2891. எழுச்சிப்பெருக்கு கண்டு என் இதயமெல்லாம் பூரித்தது !

உடன்பிறப்பே,

மதுரையிலே தொல்காப்பியப் பூங்கா இரண்டாம் பதிப்பு வெளியீட்டு விழா மற்றொரு சித்திரைத் திருவிழா போலவே நடைபெற்று முடிந்தது. நான் மதுரை விழாவில் குறிப்பிட்டவாறு இந்த விழா இத்தனை எழுச்சியுடன் நடைபெற மூல காரணமாக மு.க அழகிரியும், கழக முன்னோடிகளும், உடன்பிறப்பு களும், கவிப்பேரரசு வைரமுத்துவும், தம்பி டி.ஆர். பாலுவும் செயல்பட்டார்கள் என்றால் அது மிகையாகாது. நூலின் முதல் பதிப்பில் எத்தனை புத்தகங்கள் அச்சிடுவது என்ற முடிவு எடுத்தபோது, நூலின் விலை 500 ரூபாய் என்றிருப்பதாலும், நூல் மொத்தம் 535 பக்கங்களைக் கொண்டு பெரியதாக இருப்பதாலும் ஆயிரம் புத்தகங்கள் அச்சடிக்கலாம் என்று முடிவெடுக்கப்பட்டது. ஆனால் பணி தொடங்கப்பட்ட பிறகு இதற்கு பெரிய எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ள நிலையில் அந்த எண்ணிக்கை 3000 என்ற அளவிற்கு உயர்த்தப்பட்டு, அவ்வாறே அச்சிடப்பட்டது. ஆனால் அந்த 3000 புத்தகங்களும் 15 நாட்களுக்குள்ளாகவே விற்றுத் தீர்ந்து விட்டன. இந்த நிலையில் இரண்டாம் பதிப்புதானே, ஆயிரம் புத்தகங்களே அதிகம் என்ற நிலையில்தான் ஆயிரம் புத்தகங்கள் அச்சிடப்பட்டன.

தமிழ்க்கனிப் பதிப்பக அலுவலகத்திலிருந்து மதுரை விழாவிற்கு 500 புத்தகங்கள் அனுப்பி வைக்கலாமா என்று கேட்ட போது, அச்சடித்த ஆயிரம் புத்தகங்களே போதுமா என்ற நிலை உள்ளது, எனவே அனைத்தையும் கொடுத்து அனுப்பும்படி கூறினார்கள். ஆனால் விழா முடிவில் அந்த ஆயிரம் புத்தகங்களும் விற்றுத் தீர்ந்தது. மதுரைக்குப் புறப்படுவதற்கு முன்பே அச்சகத்தாருடன் தொடர்பு கொண்டு மூன்றாம் பதிப்பாக மேலும் ஆயிரம் புத்தகங்களைத் தயாரிக்கும் பணியினை தொடங்கிடுமாறு கூறி விட்டுத்தான் சென்றேன். விழா முடிந்த பிறகு அங்கே

அளிக்கப்பட்ட நிதிக்கே தற்போது தயாரிக்கப்படும் நிலையில் உள்ள மூன்றாம் பதிப்பு ஆயிரம் புத்தகங்களும் கொடுக்கப்பட வேண்டியிருப்பதால், நான்காம் பதிப்பையும் விரைவில் தயாரிக்க வேண்டிய நிலை உள்ளது.

மதுரையிலே விழா நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் மதுரையைச் சுற்றியுள்ள பல்வேறு மாவட்டங்களின் சார்பில் ஏராளமான நூல்கள் வேண்டுமென விரும்பிக்கேட்டு, அதற்கேற்ப அந்த நூல்களுக்கான தொகையும் தரப்பட்டுள்ளது. விழாவிலே தனிப்பட்ட முறையிலே பணம் கொடுத்து நூல் பெற்றவர்களைத் தவிர, நான் தங்கியிருந்த இடத்திற்கு வந்து மறுநாள் காலையிலும் மாலையிலுமாக நூல் பெற்றவர்களின் எண்ணிக்கையும் ஏராளம். இதிலே மதுரையைச் சுற்றியுள்ள மாவட்டங்களின் சார்பில் கழக முன்னோடிகளும், மாவட்டக் கழகச் செயலாளர்களும் தங்கள் தங்கள் ஆர்வத்திற்கேற்ப இந்த நூற்களை விற்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து அதற்காக பெரும் நிதியினைச் சேர்த்து என்னிடம் ஒப்படைத் திருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் நன்றி செலுத்துவதற்காகவும், முக்கியமாக யார் யார் எவ்வளவு தொகை கொடுத்திருக்கிறார்கள் என்பது அனைத்துக் கழக உடன்பிறப்புகளுக்கும் தெரிவிக்கப்பட வேண்டும் என்பதற்காகவும் அதனைக் குறிப்பிட விரும்புகிறேன்.

சிவகங்கை மாவட்டத்தின் சார்பில் திருப்பத்தூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், இராம. சிவராமன், அரூர் பேரூராட்சித் தலைவர் தனபால், முகவூர் மாதவன், காரைக்குடி எல். வெங்கடாசலம், புலி துரை கணேசன், சேவுகன் என்கிற புலிக்குட்டி சீனிவாசன், காரைக்குடி கே.ஜி.எஸ். கனகராஜ், ஆதம் ஜட்ஜி, சிங்கம்புணரி சந்திரகாந்தி, ஜி. குமரன், ஒழுக மங்களம் திருநாவுக்கரசு, பிரான்மலை மனோகரன் ஆகியோர் இரண்டு இலட்சம் ரூபாய் கொடுத்துள்ளார்கள்.

சிவகங்கை மாவட்டத்தின் சார்பில் முன்னாள் அமைச்சரும், மண்டலப் பொறுப்பாளருமான தா.கிருட்டிணன், மாவட்டக் கழகச் செயலாளர் பெரியகருப்பன் ஆகியோர் ஒன்றரை இலட்சம் ரூபாய் வழங்கியுள்ளார்கள்.

திண்டுக்கல் கிழக்கு, மேற்கு மாவட்டங்களின் சார்பில் முன்னாள் அமைச்சர், மண்டலப் பொறுப்பாளர் ஐ. பெரியசாமி,

மாவட்டக் கழகச் செயலாளர்கள் ஆர்.சக்கரபாணி, எம்.எல்.ஏ., மு. முருகேசன் ஆகியோர் இரண்டரை லட்சம் ரூபாய் அளித் துள்ளார்கள்.

திண்டுக்கல் மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் ஹைதர் அலி, மாவட்ட துணைச் செயலாளர் வெள்ளைச்சாமி, ஒட்டன்சத்திரம் மோகன், கே.என். நல்லமுத்து ஆகியோர் வாயிலாக ஒரு இலட்சம் ரூபாய் தரப்பட்டுள்ளது.

ராமனாதபுரம் மாவட்டக் கழகத்தின் சார்பில் மண்டலப் பொறுப்பாளர் சுப. தங்கவேலன், மாவட்டக் கழகச் செயலாளர் சுப.த. சம்பத் ஆகியோர் மூலமாக 50 ஆயிரம் ரூபாயும் வழங்கப்பட்டுள்ளது.

ராமனாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த எம்.ஏ. சேக், தலைமைச் செயற்குழு உறுப்பினர் அபிராமம் மோகன், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் மிசா. மாரிமுத்து, பிரணவநாதன், நகர்மன்றத் தலைவர் திருமதி பவானி இராசேந்திரன், ஆர்.எஸ். மங்கலம் நல்லசேதுபதி, சக்தி ஆகியோர் இரண்டு இலட்சம் ரூபாய் தந்துள்ளார்கள்.

விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்த சட்டப்பேரவை முன்னாள் உறுப்பினர் தங்கம் தென்னரசு, மாநில மாணவர் அணி துணை அமைப்பாளர் ஆதவன் என்கிற ஜலாலுதீன், மிசா கந்தசாமி, குன்னூர் சீனிவாசன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் மகாமூர்த்தி, ஒன்றியச் செயலாளர்கள் பொன்னுத் தம்பி, சண்முகசாமி, புலவர் நடராஜன் ஆகியோர் வழங்கியது இரண்டு இலட்சம் ரூபாய்.

தேனி மாவட்டத்தைச் சேர்ந்த மாநில விவசாய அணி இணைச் செயலாளர் போடி முத்து மனோகரன், உத்தமபாளையம் பேரூராட்சித் தலைவர் சையத் மீரான், கம்பம் இளங்கோவன், எம். ராமச்சந்திரன், பெரியகுளம் செல்லப்பாண்டி, போடி ஒன்றியப் பெருந்தலைவர் செல்வன், பழனி முருகன், தேனி இரவிவர்மா ஆகியோர் ஒரு லட்சம் ரூபாய் கொடுத்து நூல்களைப் பெற்றுச் சென்றார்கள்.

மதுரை மாநகர் மாவட்டக் கழகத்தின் சார்பில் பொறுப்பாளர் சொ. காவேரிமணியம் மற்றும் கழக உடன்பிறப்புகள் மூலமாக 25 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

மதுரை தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த எம்.எல். ராஜ், திருமங்கலம் அதியமான், கண்ணன், அழகுராஜ், ஒன்றியச் செயலாளர் பிச்சை, வழக்கறிஞர் பழனிச்சாமி, உசிலை குபேந்திரன் ஆகியோர் மூலமாக ஒன்றரை இலட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டது.

மதுரை வடக்கு மாவட்டக் கழகத்தைச் சேர்ந்த மாவட்டக் கழகச் செயலாளர் பி. மூர்த்தி மூலமாக ஒரு இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டது.

மேலும் அந்த மாவட்டத்தைச் சேர்ந்த ஆர்.எஸ்.டி. பாண்டியன், மாவட்ட அவைத் தலைவர் அம்பிகாபதி, கள்ளந்தரி முத்துராமலிங்கம், துரை இராசேந்திரன், கிழக்கு ஒன்றியச் செயலாளர் அசோக்குமார், பொதுக்குழு உறுப்பினர் அருணாசலம், அயூப்கான், வழக்கறிஞர் சந்திரசேகரன், கள்ளிக்குடி இராம மூர்த்தி, அலங்காநல்லூர் மதுரை வீரன் ஆகியோர் மூலமாக ஒரு இலட்சம் ரூபாயும் தரப்பட்டுள்ளது.

மீதத் தொகை தனிப்பட்டவர்களாலும், தமிழ் ஆர்வலர்களாலும், சிறு சிறு தொழிலதிபர்களாலும் வழங்கப்பட்டது. இதிலே சில மாவட்டக் கழகங்களின் சார்பில் மொத்தமாக நிதி வசூலித்துக் கொடுத்தவர்களுக்கு இன்னும் ஒரு வார காலத்தில் தி.மு.க. அறக்கட்டளை மூலமாக நூல்கள் வழங்கப்படவுள்ளன. அந்த நூல்களை அவர்கள் பெற்றதும் நிதி கொடுத்து உதவிய அத்தனை பேருக்கும் இந்த நூல்கள் பரவிட வேண்டும் என்பதும், இந்த நூலுக்காக எவ்வளவு ரூபாய் வசூலானது என்பதை விட இந்த நூலினைப் பெற்று எத்தனை பேர் இதனைப் படித்தார்கள் என்பதை அறிந்து கொள்வதிலும்தான் எனக்கு மிகப் பெரிய மகிழ்ச்சி ஏற்படும். தமிழக வரலாற்றில், ஏன் இந்திய வரலாற்றிலேகூட ஒரு புத்தகம் இரண்டே மாதங்களில் நான்கு பதிப்புகள் வெளியிடப்பட்டது; அதிலும் 500 ரூபாய் மதிப்புள்ள இந்த அளவிற்கான பெரிய புத்தகம் வெளியிடப்பட்டது என்ற பெருமை தொல்காப்பியப் பூங்காவிற்கு கிடைத்துள்ளது என்பதை எண்ணும் போது நான் ஒரு மாத காலம் ஓய்வின்றி, உணவின்றி, உறக்கமின்றி பட்டபாட்டிற்கு தகுந்த அங்கீகாரம் கிடைத்ததாகவே எண்ணி பெருமிதம் கொள்கிறேன்.

எனவே இந்த நூல் இந்த அளவிற்கு பரவிட தங்கள் தங்கள் மாவட்டங்களில் நிதி வசூலித்துக் கொடுத்துதவிய கடமை

உணர்வு கொண்ட மாவட்டக் கழகங்களின் செயலாளர்களுக்கும், அவர்களைப் போலவே நிர்வாகப் பொறுப்பில் இல்லாத நிலையிலும் அக்கறையோடு நிதி வசூலித்துக் கொடுத்த கழக உடன்பிறப்புகளுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன், அவர்கள் தந்துள்ள நிதிக்கான நூலினை இன்னும் பெறாதவர்கள் அடுத்த வாரத்தில் அவற்றைப் பெற்று, அவர்களிடம் நிதி அளித்தோர் அனைவருக்கும் இதனை முறையாக ஒப்படைத்துவிட வேண்டும் மென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

மதுரை விழாவில் கழக உடன்பிறப்புகளும், மற்றும் தமிழ் ஆர்வலர்களும் சிறார், இளைஞர், மகளிர், மாணவர், வாலிபர், ஆசிரியர்கள், செய்தியாளர்கள் என இலக்கியப் பற்றாளர்களும் வழங்கியுள்ள தொகை 29 இலட்சம் ரூபாயில், புத்தகம் அச்சியற்றவும் மற்ற செலவுகளுக்குமாக 9 இலட்சம் ரூபாய் போக மீதமுள்ள 20 இலட்சம் ரூபாயில் தமிழ்க்கனி பதிப்பகம் இனியும் தொடர்ந்து இலக்கியம் மற்றும் வரலாற்று நூல்களை வெளியிடு வதற்கான வளர்ச்சி நிதியாக 10 இலட்சம் ரூபாயும், நமது கழக உடன்பிறப்புகளில் நலிவுற்ற குடும்பத்து பிள்ளைகளின் மேல்நிலைப் படிப்புக்காகவும் வசதியற்ற கழகத் தொண்டர்களின் மருத்துவச் செலவுக்காகவும் 10 இலட்சம் ரூபாயும் என்று ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக முன்னரே அறிவித்துள்ளேன்..

கண்ணியமாகவும், கட்டுப்பாட்டுடனும் காண்போர் வியப்புறும் வண்ணம் கண்கொள்ளாக் காட்சியாகவும் மதுரையில் விழா நடைபெற்றது கண்டு சில இதழாளர்களுக்குக் கண் எரிச்சலை விட அதிகமாக வயிற்றெரிச்சல் ஏற்பட்டு இட்டுக்கட்டிய செய்திகளை வெளியிட்டுத் தங்களுக்குத் தாங்களே சுய இன்பம் தேடிக் கொண்டார்கள் என்பதைத் தவிர, மதுரைக் கழக உடன்பிறப்புகளும், மதுரைப் பொதுமக்களும் காட்டிய மட்டற்ற மகிழ்ச்சிப் பெருக்கில் தோய்ந்திருந்து மாசற்ற எழுச்சிப் பெருக்கு கண்டு என் இதயம் மெல்லாம் பூரிக்கிறது என்பதை நெஞ்சு நிமிர்த்தித் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புள்ள,

மு.க

27-02-2003

2892. கவலையும் - கண்டிப்பும்!

உடன்பிறப்பே,

நமது திராவிட முன்னேற்றக் கழகத்தின் கிளை அமைப்புகளின் தேர்தல்கள் பெரும் பகுதி எல்லா மாவட்டங்களிலும் நிறைவுற்று மிகக் குறைந்த எண்ணிக்கையிலான அமைப்புகளுக்கே இன்னும் தேர்தல் நடைபெறாமலிருக்கிறது. அவற்றையும் படிப்படியாக விரைவில் முடித்து; வரும் ஜூன் திங்களுக்குள்ளாக புதிய பொதுக்குழு உறுப்பினர்கள் கூடி தலைமைக் கழகத் தேர்தலை நடத்துவதென்று உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

ஒரு மாபெரும் ஜனநாயக இயக்கமான நமது தி.மு. கழகம், 54 ஆண்டுக்கால தமிழக அரசியல் வரலாற்றில் இருபது ஆண்டுக்காலம் நமது இணையற்ற தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையிலும் - அடுத்து 1969 முதல் ஏறத்தாழ 34 ஆண்டுகளாக என் தலைமையிலும் அண்ணா வழியில் அயராதுழைத்து ஆட்சியிலமர்ந்து 14 ஆண்டுக் காலத்திற்கு மேலாக அரிய சாதனைகள் புரிந்தும் - எதிர்க்கட்சியாக இருப்பினும் தமிழ் மக்களின் அனைத்து உரிமைகளுக்குமான அறப்போர்கள் நடத்தியும் - முறையே சாதனை முத்திரைகளையும் தியாக முத்திரைகளையும் பெற்றுத் தீரமுடன் திகழ்கிறது.

இந்த உண்மையானதும் உறுதி கொண்டதுமான திராவிட இயக்கத்தில் ஓர் உறுப்பினராக இருப்பதைப் பெருமையாகக் கருதுகிற உடன்பிறப்புகள் பலரை நான் நேரிடையாகவே அறிவேன்.

அண்ணா இருந்த காலத்தில் கழகத்தின் உறுப்பினர் அட்டை பெற்றவர்கள்; அந்த அட்டை; கசங்கி, மடிப்புகள் நிறைந்து, அழுக்கேறி, முனை கிழிந்து, பழைமையிலும் பழைமையாக ஆகிவிட்ட நிலையிலும் அந்த அட்டையைப் பத்திரப்படுத்தி வைத்திருப்பதையும் அதைக் கொண்டு வந்து காட்டுவதையும் எண்ணிடும்போது என் நெஞ்சத்தில் எத்தனையோ நினைவலைகள்!

வீட்டில் தாத்தா பாட்டிகள் வைத்து விட்டுப் போன நினைவுப் பொருள்களைக் கூட இப்படிக் கட்டிக் காப்பதில்லை. இந்த இயக்கத்தில் ஓர் உறுப்பினர் என்று அடையாளம் காட்டுகிற அட்டைக்கு அவ்வளவு மதிப்பு தந்து மீண்டும் மீண்டும் உறுப்பினர்களாகத் தங்களைப் புதுப்பித்துக் கொள்கிறார்கள்.

அவர்களையெல்லாம் வணங்கியும் - வாழ்த்தியும் - போற்றிடவும் - புகழ்ந்திடவும் - அவர்களுக்கு நலிவு, இழப்பு வரின் நமது குடும்பத்தினர் என்ற உணர்வோடு கட்டிக் காக்கவும் கடமைப்பட்டிருக்கிறது இந்த இயக்கத்தின் தலைமை!

சொல்வதுடன் அல்லாமல் செயலிலும் காட்டி வருவதற்குச் சான்றுகளும் நிரம்ப உண்டு.

அத்தகைய உணர்வுமிக்க கழகத்தின் பொதுத் தேர்தல் நடைபெறும்போது ஒருசில இடங்களில் பொறுப்பில் உள்ள நம்மவர்களே நடந்து கொள்ளும் முறை கண்டும் - கேட்டும் - நான் மனம் நொந்து போகிறேன்.

பாசம், நேசம் என்பதெல்லாம் நேரில் பார்க்கும் போதுதான்; பிறகு உட்கட்சி ஜனநாயகத்திற்கே ஒன்றிரண்டு இடங்களில் நாசம், மோசம்! நம்மிடையிலேயும் நாணயமற்றவர்கள் விரல் விட்டு எண்ணக் கூடிய அளவுக்கு குறைந்த தொகையினராக இருப்பினும் அவர்களை நான் பாற்குடத்தில் ஒரு துளி விஷம் என்றே கருதுகிறேன். இதனை நான் மனமுடைந்தே சொல்லுகிறேன்.

ஒரு துளி, இரு துளிதானே விஷம் என்று விட்டு விட முடிகிறதா? அதனால் ஒரு குடம் பால் அல்லவா பாஷாணமாகிவிடக் கூடும்!

இந்த உட்கட்சித் தேர்தலில் தங்களை அறியாமலே தவறு புரிந்தோர் - அறிந்தே தவறு புரிந்தோர் - இல்லாத உறுப்பினர்களை இருப்பதாகச் சேர்த்தோர் - இருக்கும் உறுப்பினர்களை இல்லாமல் ஆக்கினோர்; இந்தக் குதர்க்கவாதிகள்; தாங்கள் புரியும் குற்றத்துக்குத் தலைமைக் கழகத்திலிருந்து அனுப்பி வைக்கப்பட்ட ஆணையாளர்கள் சிலரையே கைக்குள்ளும், பைக்குள்ளும் போட்டுக் கொண்டு புரிந்துள்ள அநாகரிகச் செயல்கள் தலைமைக் கழகத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு அவர்கள் மீது கடுமையான நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கிறது. சிலரது கடந்த காலக் கட்சிப் பணி கருதி கவுரவமான நிலையில் நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளது.

இல்லாவிடில் கள்ளிச்செடிகள் போல - களைகள் போல இந்த நாணயமற்ற செயல்கள் மிகுந்து குவிந்து கழகத்தையே கலனாக்கிவிடும் - முளையிலேயே கிள்ளி எறிய வேண்டும்; வளர விட்டு விட்டால் முள் மரத்தைத் தழைத்தோங்கிட விட்டதுபோல் ஆகிவிடும்.

இப்போது சிறிய அளவில்தான் - ஆனால் சிறப்பாக வரக் கூடியவர்கள், சீராக வளரக் கூடியவர்கள் என நான் எண்ணிய - எதிர்பார்த்த - அதற்கான வகையில் ஊக்கமளிக்கப்பட்டவர்களிடமே எனக்கு இந்த உள் கட்சித் தேர்தலில் ஏற்பட்டது ஏமாற்றமேயாகும். என் செய்வது; என்றாவது ஒரு நாள் திருந்திடுவர் என நம்புகிறேன். என் நம்பிக்கை வீண் போனால்; நாணயமற்றவர்கள் பட்டியலை நானே வெளியிட வேண்டியிருக்கும்.

என்னவோ எழுதுகிறான் - ஏதோ எழுதுகிறான் என்று அலட்சியப்படுத்தினால்; தங்கள் போக்கிலேயே போய்க் கொண்டிருந்தால், உட்கட்சி ஜனநாயகத்தை உருக்குலைக்க உறுதுணையிருக்கிறது என்று, என் கருத்தை உதாசீனப்படுத்தினால்; அதன் விளைவு விபரீதமாக இருக்குமென எச்சரிக்கிறேன்.

இவற்றின் எதிரொலியாகத்தான் இரண்டு மூன்று நாட்களாக 'முரசொலி'யில் சில கழகப் பிரமுகர்களின் பெயர்களை மறைத்து பொதுவான நிலையில் பெட்டிச் செய்திகள் வெளி வருகின்றன.

அவர்களின் பெயர்கள் வருமளவுக்கோ, புதிதாக யார் பெயரும் இணையும் அளவுக்கோ - அந்தப் பெட்டிச் செய்திகள் விபரமான விளக்கங்களுடன் வராத அளவுக்குத் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு - கழகத்தையும் கழக ஜனநாயகத்தையும் பாதிக்கச் செய்தவர்கள், செய்ய நினைப்பவர்களுக்கு இருக்கவேண்டுமென்று அறிவுறுத்துகிறேன். அது என் கடமை. அதனால் சொல்லுகிறேன். பிறகு அவர்கள் விருப்பம்.

அன்புள்ள,

மு.க.

04-03-2003

2893. மார்ச் 29; மாபெரும் உண்ணா நோன்பு அறப்போர் !

உடன்பிறப்பே,

"நான்கு பக்கமும் வேடர் சுற்றிட நடுவில் சிக்கிய மான் போல் - கரையில் இட்டதோர் மீன் போல்" என்று புரட்சிக் கவிஞர் பாடுவாரே அதுபோன்ற நிலையில் இன்றைய தமிழ்நாடு!

இயற்கைக் கோளாறுகளான புயல், வெள்ளம், வறட்சி இவைகள் இயற்கையாகவே வரக் கூடிய பிரச்சினைகள். இவற்றையல்லாது செயற்கையாக வரவழைத்துக் கொள்ளக் கூடிய பிரச்சினைகள்; இப்படி இருகூறுகளாகப் பிரச்சினைகளைப் பிரிக்கலாம் எனினும்; ஜெயலலிதாவின் ஆட்சி நடைபெறுகிற தமிழ்நாட்டில் இயற்கையினால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளும் - ஆட்சியாளர்கள் இந்தப் பாதிப்பு பற்றிக் கிஞ்சிற்றும் கவலைப்படாமல் மக்கள் தலையிலும், முதுகிலும், தோளிலும் ஏற்றுகிற சுமைகளும் - அந்தச் கமைகளைத் தாங்க முடியாமல் எலும்பொடிந்து, நரம்பு அறுந்து, கூனிக் குறுகி, எழுந்தே நடமாட முடியாமல் அழுந்திக் கிடக்கிற மக்களின் தாங்க முடியாத துயரங்களும் சாதாரண, சாமானிய, நடுத்தர மக்களின் வாழ்க்கைப் பிரச்சினைகளும் - தமிழ்ப் பெருங்குடி மக்களை கடுஞ் சோதனைகளுக்கு ஆளாக்கியிருக்கிற நேரம் இது.

கள்ளருந்திவிட்ட கடுவனைக் கருந்தேளும் கொட்டி விட்டது போன்ற நிலையில் ஆட்டம் போடுகிற ஆட்சியாளர்களை நாம் பெற்றிருப்பதால்; அவர்களுக்கு அந்தச் சேட்டைகளிலே இருக்கிற நாட்டம்; இயற்கையின் பாதிப்புகளை எதிர்த்து சமாளிக்கும் கடமையிலே இருக்குமென எதிர்பார்ப்பதற்கிலை. ஏதோ ஒப்புக்குச் சப்பாணி என்பது போல கண் துடைப்புக் காரியங்கள் ஒன்றிரண்டைச் செய்வது போல நடித்து விட்டு; அதற்கு விளம்பரச் செலவு மாத்திரம் வெகு கோடிகளுக்குக் கணக்குக் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். சாப்பிட்டதற்கு அடையாளம் வயிறு நிரம்பியிருப்பதுதானே தவிர இதோ பார் கழுவிய கையில் ஈரம்

போகாமல் இருக்கிறது என்று காட்டுவதல்ல! ஆனால் அதைத்தான் இன்றைய ஜெயலலிதா ஆட்சி செய்து கொண்டிருக் கிறது.

அது மட்டுமல்ல; காலிலோ, கையிலோ காயம்பட்டு வந்து நிற்பவருக்குத் தக்க மருந்து தடவுவதற்குப் பதிலாக - ஆற்று மணலை அதுவும் பெருமணலாக அள்ளி அந்தக் காயத்தில் அழுத்தித் தடவிடும் வேதனையான விந்தையாக; வறட்சியால் வளைக்கப்பட்டுள்ள தமிழக மக்களின் நெஞ்சத்துப் புண்களை ஆற்றுகிறோம் என்ற பெயரால் மின் கட்டணம் போன்ற கட்டணங்கள் ஏற்றம் - இலவச மின்சார திட்டத்துக்கு சமாதி - வரி உயர்வு - சலுகைகள் பறிப்பு - உரிமைகளுக்கு வேட்டு என்ற ரீதியில் ஆற்று மணல் தேயக்கும் சிகிச்சை நடத்திக் கொண்டிருக்கிறார்கள் - விஷத் துளிகளை மருந்து என்ற பெயரால் பாலில் கலந்து கொடுத்துள்ள இந்த அரசின் 'பட்ஜெட்' பற்றி பிறகு ஒரு நாள் விளக்கமாக உனக்கும் ஏனைய உடன்பிறப்புகளுக்கும் கடிதம் எழுத இருக்கிறேன்.

அதற்கிடையே இந்த நிதி நிலை அறிக்கை வெளி யிடப்படுவதற்கு முன்னரே 12-3-2003 புதன்கிழமை காலை சென்னை மாநகரில் தி.மு.க. உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளின் கூட்டத்தில் ஒரு முக்கியமான தீர்மானத்தை நிறைவேற்றிட வேண்டிய, ஜன க்ஷநாயக ரீதியான - எதேச்சாதிகாரத்தை எதிர்க்கும் அளவிலான, கொடுங்கோன்மை; கொல்லைப்புற வழியாக; குடை பிடித்துக் கொண்டு முகத்தை மறைத்துக் கொண்டு நுழைந்துள்ள சூழ்ச்சிக்குப் பணிய மாட்டோம் என்ற சுதந்திர கீதம் இசைத்திடும் விதமாக;

இவை எல்லாவற்றையும் காட்டிலும் மனிதநேய அடிப்படையிலான ஒரு கடமையை இந்தக் கட்சிகள் ஆற்றவேண்டியுள்ளது. மற்ற கட்சியினரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு என்னைப் பொறுத்த வரையிலும் சொல்வதானால் தானாடாவிடினும் தன் தசையாடும் என்கிற "சகோதர பாச உணர்வு"டன் ஆற்ற வேண்டிய கடமையும் கூட. இது எனக்கு ஏறத்தாழ இருநூற்றி ஐம்பது நாட்களுக்கு மேலாக அருமைத் தம்பி வைகோ வேலூர் சிறையிலும் - அவர் தலைமையில் இயங்கும் "மறுமலர்ச்சி தி.மு.க."வின் செயல்வீரர்கள் சிலர் வேறு பல சிறைகளிலும் அடைக்கப்பட்டிருக்கிறார்கள்.

இடையில் ஒரு நாள் சிறையில் அவரைச் சந்தித்தேன் - நாற்பது நிமிடங்களுக்கு மேல் பேசினோம் என்று ஏடுகளில் செய்தி வந்திருந்த போதிலும் - அதில் எங்கள் இருவரின் கண்ணீர் கலந்த நேரம் தான் அதிகம் - பேசாமல் பேசிக் கொண்ட நேரம்தான் முக்கியமான நேரம் - அந்தத் துன்பத்தைத் தாங்கிக் கொள்ள முடியாமல்தான் தோழமைக் கட்சியினரை அழைத்துக் கலந்து பேசினோம். அந்தக் கூட்டத்தில் வடித்தெடுத்த தீர்மானம்தான் இது :

> பயங்கரவாத தடைச்சட்டமான பொடா சட்டம் நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்டபோதே, தி.மு.கழகம் உள்ளிட்ட தேசிய ஜனநாயகக் கூட்டணிக் கட்சிகளும் ஏனைய எதிர்க் கட்சிகளும் இச்சட்டம் அரசியல் எதிரிகளை நசுக்குவதற்கும், அரசியல் பழிவாங்கும் நோக்கத்திற்கும் மாநில அரசுகளால் - பயன்படுத்தப்படக்கூடும் என்கிற ஐயத்தை எழுப்பின. ஏனைய எதிர்க்கட்சிகள் பொடா சட்டமே கூடாது என்று எதிர்ப்பு தெரிவித்தன.
>
> அப்போது உள்துறை இலாகா பொறுப்பில் உள்ள துணைப் பிரதமர் அத்வானி அவர்கள், பொடா சட்டம் தவறாகப் பயன்படுத்தப்பட மாட்டாது என்று நாடாளுமன்றத்திலேயே உறுதி அளித்தார்,
>
> ஆனால், தற்போது இச்சட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.வைகோ, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.பழ.நெடுமாறன் உள்ளிட்ட பலர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.
>
> ஆயுதம் தாங்கி கலவரத்தை உருவாக்கி உயிர்ப்பலி கொள்ளும் பயங்கரவாதிகளை ஒடுக்குவதற்காக என்று சொல்லப்பட்ட சட்டத்தைப் பயன்படுத்தி, தேர்தல் ஆணையப் பதிவுபெற்ற ஒரு கட்சியின் பொதுச் செயலாளரும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான திரு.வைகோவையும் அவரது கட்சியைச் சார்ந்த நிர்வாகிகளையும், தமிழர் தேசிய இயக்கத்தின் தலைவர் திரு.நெடுமாறன் போன்றவர்களையும் கைது செய்திருப்பது, இந்திய

அரசின் துணைப் பிரதமர் நாடாளுமன்றத்தில் வழங்கிய உறுதி மொழிக்கு எதிரானதாகும்.

பொடா சட்டத்தை அறிமுகப்படுத்திய மத்திய அரசின் உறுதிமொழியை மதிக்காமல் தமிழ்நாடு அரசு இக்கொடுஞ் செயலில் ஈடுபட்டிருப்பது மிகுந்த கண்டனத்துக்குரியது. எனவே, நாடாளுமன்றத்தில் வழங்கியுள்ள உறுதிமொழியைக் காப்பாற்றும் வகையில் திரு.வைகோ, திரு.நெடுமாறன் உள்ளிட்ட அனைவரையும் விடுதலை செய்ய வேண்டுமென மத்திய - மாநில அரசுகளை இக்கூட்டம் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

இந்தத் தீர்மானத்தை மக்கள் பிரச்சினையாக மக்கள் மத்தியில் எடுத்துச் செல்ல 29.3.2003 -சனிக் கிழமையன்று மாநிலம் முழுவதும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டுள்ள கட்சிகளின் செயல்வீரர்களும் கட்சி சார்பற்ற பொதுமக்களும் மாவட்டத் தலைநகரங்களில் ஒரு நாள் அடையாள உண்ணாநோன்பில் ஈடுபடுவதென்றும் முடிவு செய்யப்படுகிறது.

உடன்பிறப்பே, இந்தத் தீர்மானத்தை நடைமுறைப் படுத்தி உண்ணாநோன்பு மேற்கொள்வதற்கு முன்பே; நான் எதிர்பார்த்தேன்; இந்த அரசு தம்பி வைகோ வையும் நண்பர் நெடுமாறனையும் விடுதலை செய்து விடக் கூடுமென்று!

"அதெல்லாம் ஒரு நல்லரசு செய்யவேண்டிய வேலையல்லவா?" என்று கேட்கத் தோன்றும் இந்த அரசுக்கு!

"பொடா சட்டத்தைத் தவறாகப் பயன்படுத்த மாட்டோம்" என்று உறுதியளிக்கப்பட்டதற்கு மாறாக இன்று தம்பி வைகோவையும் நண்பர் பழ.நெடுமாறனையும் சிறையில் தள்ளி சுமார் இருநூறு நாட்களுக்கு மேல் துன்புறுத்த வேண்டிய நோக்கம்தான் என்ன?

அத்துடன் விட்டார்களா? பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு அவர்கள் மீதிருந்த வழக்குகளை தூசு தட்டி எடுத்து அவர்களை மூலைக்கு மூலை நீதி மன்றங்களுக்கு அலைய வைத்து அலைக்கழிக் கிறார்களே; மனித உரிமையில்

அக்கறையுடையோர், மனித நேயத்தில் ஒன்றிப் போனோர் எவர்தான் இக் கொடுமைகளைப் பொறுத்துக் கொள்ள முடியும்?-

பொறுத்துப் பொறுத்துப் பார்த்து பொறுமைக்கும் ஓர் அளவுண்டு என்ற அறிவுரைக்கேற்ப; அடையாள உண்ணாநோன்பு; ஒரு நாள் கடைப்பிடித்து நமது உணர்வினை; ஆம் ஒட்டு மொத்த தமிழ்க் குலத்தின் உணர்வினை வெளிப்படுத்துவது என்று முடிவு செய்துள்ளோம்.

சென்னை மாநகரில் அனைத்துக் கட்சி உண்ணா நோன்பினை, வரும் 29-3-2003 சனிக்கிழமை காலை நான் தொடங்கி வைக்கிறேன். சென்னையிலும், மற்றும் எல்லா மாவட்டத் தலைநகர்களிலும் இந்த அடையாள நோன்பினில் அனைத்துக் கட்சித் தலைவர்களும் கலந்து கொள்வர்- தொடங்கி வைப்பர் - அல்லது நிறைவு செய்வர்!

உடன்பிறப்பே, நமது உணர்வை உணர்த்தும் இந்த நிகழ்ச்சி; அமைதி வழியில் நாம் கடைப்பிடிக்கிற ஒரு போராட்டமே ஆகும். இது ஏதோ ஒரு கட்சிக்குரியது; - எனவே அந்தக் கட்சிதான் கடமைப்பட்டது என்ற எண்ணம் கடுகளவு ஏற்படுவதற்கும் இடம் தராமல்; நமது கழக உடன்பிறப்புகளும், மற்ற கட்சிகளின் செயல்வீரர்களும் ஆயிரக்கணக்கில் இந்த உண்ணா நோன்புப் போராட்டத்தில் கலந்து கொள்ளுமாறு வேண்டுகிறேன்.

இது ஜனநாயக நாடு - தமிழகத்தை இன்று ஆள்பவர்கள் ஜனநாயகத்திற்கு சவால் விட்டு அதனைச் சாக அடிக்க முனைந்தாலும் - அதற்கு இடம் தராமல் அனைத்து எதிர்க்கட்சிகளும் ஜனநாயகம் காத்திடும் போர் முனையில் அணிவகுத்திருக்கின்றன என்ற நம்பிக்கையை மக்களிடத்தில் உறுதிப்படுத்துவதற்காக இந்த உண்ணா நோன்புப் போராட்டம் பயன்படுவதால்; அனைத்துக் கட்சிகளில் முன்னணியினரும், செயல்வீரர்களும் பொது மக்களும் கலந்து கொண்டு வெற்றிகரமாக நடத்தித் தர "வாரீர் வாரீர்" என்று அழைக்கின்றேன்.

அன்புள்ள,

மு.க.

26-03-2003

2894. பஞ்ச பாண்டவர்களும் பட்ஜெட்டும்!

உடன்பிறப்பே,

நிதிநிலை அறிக்கை என்பது மிகவும் ரகசியமான ஒன்று. அதிலே உள்ள தகவல்கள் அந்த அறிக்கை அவையிலே படிக்கப்படுவதற்கு முன்பு வெளியிடப்படக் கூடாது. அரசும் சட்டமன்றப் பேரவைக் கூட்டத்தை அறிவித்த பிறகு எந்த முக்கிய அறிவிப்பையும் அவைக்கு வெளியே செய்யக் கூடாது. ஆனால் நிதிநிலை அறிக்கையிலே வெளிவந்த விவசாயிகளுக்கு மானியம் வழங்கும் திட்டத்தை, நிதி நிலை அறிக்கை படிக்கப்படுவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பே முதலமைச்சர் ஜெயலலிதா தன் பெயரில் அறிக்கையாகவே வெளியிட்டிருக்கின்றார். இது எந்த அளவிற்கு அவை மரபை மீறிய செயல் என்பதற்கு பேரவைத் தலைவர்தான் விளக்கம் கூற வேண்டும்.

இதைப்போலவே மரபினை மீறுகின்ற வகையில் நிதியமைச்சர் நிதிநிலை அறிக்கையைப் படிக்கும் போது அதிலே உள்ள வாசகங்களைத்தான் அப்படியே படிக்க வேண்டுமென்பதற்கு மாறாக ஜெயலலிதா என்று அச்சடிக்கப்பட்டதை மாற்றி அம்மா, அம்மா என்று படித்தது நியாயமா என்பதையும் பேரவைத் தலைவர் விளக்க வேண்டும்.

நிதி நிலை அறிக்கை தயாரிக்கப்படுவதற்கு முன்பு விவசாயிகளின் பிரதிநிதிகள், வியாபாரிகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் - ஆசிரியர்கள் பிரதிநிதிகள் ஆகியோரை அழைத்துப் பேசுகின்ற மரபையோ, நிதிநிலை அறிக்கையிலே துறை வாரியாகத் தலைப்பிட்டு அந்தத் துறையின் சாதனைகளைப் பற்றிய விவரங்களை வெளியிடும் முறையையோ, நிதிநிலை அறிக்கையின் துவக்கத்திலே அய்யன் திருவள்ளுவரின் திருக்குறளிலிருந்து ஒரு குறளை கையாண்டிடும் எண்ணத்தையோ இந்த அரசு கொண்டிடவில்லை.

மேலும் நிதிநிலை அறிக்கையிலே பல இடங்களில் கடந்த கால ஆட்சியைக் குறை கூறி, கழக ஆட்சியிலே வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றவில்லை, அதனால் அப்போது வளர்ச்சி இல்லை என்ற குறைபாட்டினைக் கூறியிருக்கிறார்கள். ஆனால் அதே நிதிநிலை அறிக்கையில் 11வது நிதி ஆணையம் தமிழகத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யும்போது, தமிழகம் ஏற்கனவே வளர்ச்சி பெற்ற மாநிலம் என்ற அடிப்படையில் தமிழகத்திற்கு உரிய நிதியினை வழங்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்டும்போது, தமிழகம் கழக ஆட்சிக் காலத்திலேயே வளர்ச்சி பெற்றுள்ளது என்பதை தங்களையும் அறியாமல் ஒப்புக் கொள்கிறார்கள். இதிலிருந்தே இவர்களுடைய முரண்பாடான நிலைப்பாட்டினைப் புரிந்து கொள்ளலாம்.

நாங்குநேரியில் உயர்தொழில் நுட்ப பூங்கா அமைக்க கழக ஆட்சியில் சுமார் 2000 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு, மத்திய அரசின் தொழில் அமைச்சர் முரசொலி மாறன் முயற்சியால் அங்கே பொருளாதார ஏற்றுமதி வளர்ச்சி மையம் அமைப்பதற்கான அனுமதி கிடைக்கப்பட்டு, அடிக்கல் நாட்டு விழாவும் நடைபெற்றது. அந்த மிகப்பெரிய பயனுள்ள திட்டத்தை அப்படியே நிதிநிலை அறிக்கையில் மறைத்து விட்டார்கள்.

பேரவையில் முதல் அமைச்சர் ஜெயலலிதா மார்ச் 25ந்தேதி குறுக்கிட்டுப் பேசுகையில், தி.மு.கழக ஆட்சியில் 1989-90ஆம் ஆண்டு வருவாய்க் கணக்கின்படி 3,846 கோடி ரூபாய் வருவாய் என்றும், அந்த ஆண்டு 260.3 கோடி ரூபாய்க்கு புதிய வரி விதிக்கப்பட்டது என்றும், அது மொத்த வருவாயில் 6.77 சதவிகிதம் என்றும், அதைப் போலவே 1990-91ஆம் ஆண்டு கழக ஆட்சியில் புதிய வரியின் சதவிகிதம் 5.50 சதவிகிதம் என்றும், ஆனால் தற்போது இந்த ஆண்டு புதிய வரிகளின் விகிதம் 190 சதவிகிதம்தான் என்றும் இதிலிருந்து யார் அதிகமாக வரி போட்டுள்ளார்கள் என்பதைத் தெரிந்து கொள்ளலாம் என்றும் தெரிவித்து, அது மாலை முரசு ஏட்டிலும் வெளிவந்துள்ளது.

முதலமைச்சர் ஜெயலலிதா பேரவையிலே தெரிவித்த இந்தத் தகவல்கள் உண்மையானவைதானா?

1989-90ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் ரூ.260.3 கோடி ரூபாய்க்கு புதிய வரிகளை கழக ஆட்சியிலே விதித்ததாக முதல்வர் ஜெயலலிதா பேரவையில் சுட்டிக்காட்டியது உண்மையா?

அந்த ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை பக்கம் 56இல் "வரிகள் மூலம் நாம் எழுப்ப இருக்கும் ரூ.50 கோடியும் சேர்ந்து வரும் ஆண்டின் பற்றாக்குறை ரூ. 64.77 கோடியாக குறையும்" என்று குறிப்பிடப்பட்டிருப்பதிலிருந்து; அந்த ஆண்டு புதிதாக விதித்த வரி; ஜெயலலிதா அவையிலே தெரிவித்ததைப் போல 260 கோடி ரூபாயல்ல என்பதும், 50 கோடி ரூபாய்தான் என்பதும் 'பட்ஜெட்' என்றால் என்னவென்று அறியாத பாமரனுக்குக் கூட விளங்கும். பாவம்; முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு விளங்கவில்லை.

அந்த 89-90ஆம் ஆண்டிற்கான வருவாய்க் கணக்கில் வருவாய் 3,846 கோடி ரூபாயில் இந்த 50 கோடி ரூபாய் வரி என்பது 1.30 சதவிகிதம்தான். எனவே ஜெயலலிதா 260 கோடி ரூபாய்க்கு அந்த ஆண்டு புதிதாக வரி விதிக்கப்பட்டதாகவும், அது வருவாய்க் கணக்கிலே 6.77 சதவிகிதம் என்று கூறியதும் முற்றிலும் தவறான பொய்த் தகவல் ஆகும்.

அதுபோலவே ஜெயலலிதா தொடர்ந்து கூறும் போது 1990-91வது நிதியாண்டில் தி.மு.க. அரசு விதித்த புதிய வரிகள் 242 கோடி ரூபாய் என்றும், அந்த ஆண்டு ஒட்டு மொத்த வருவாய் 4397 கோடியே 46 இலட்சம் ரூபாய் என்றும், சதவீதக் கணக்கில் பார்த்தால் 5.50 சதவிகிதம் என்றும் தெரிவித்திருக்கிறார். இந்தப் புள்ளி விவரமாவது உண்மையா?

90-91ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை பக்கம் 71இல் "நிதி நிலை அறிக்கையில் அறிமுகப்படுத்தப் பட்ட வரி மாற்றங்களினால் நிகரமாக ரூபாய் 62 கோடி அளவுக்குக் கிடைக்கும்" என்று அச்சடிக்கப்பட்டுள்ளது. ஆனால் ஜெயலலிதா அவையில் புதிய வரிகள் 242 கோடி ரூபாய்க்கு அந்த ஆண்டு விதிக்கப்பட்டதாகக் கூறியிருப்பது தவறானதும் திட்டமிட்டு இட்டுக் கட்டியதுமான புள்ளி விவரமாகும்.

தொடர்ந்து ஜெயலலிதா அந்த ஆண்டு ஒட்டுமொத்த வருவாய் 4397.46 கோடி என்று தெரிவித்திருக்கிறார். அந்த ஆண்டில் வருவாய்க் கணக்கில் வரக்கூடுமென்று நிதிநிலை அறிக்கையில் மதிப்பிடப்பட்ட தொகைதான் 4397.46 கோடி. அதை ஒட்டு மொத்த வருவாய் என்று ஜெயலலிதா கூறியிருக்கிறார். எல்லாம் தனக்குத் தெரியும் என்ற நிலையில் இறுமாப்போடு பேசும் ஜெயலலிதாவுக்கு ஆரம்பம் முதல் ஒட்டுமொத்த வருவாய்க்கும்,

வருவாய்க் கணக்கில் வரும் வருவாய்க்கும், வரி வருவாய்க்கும் உள்ள வித்தியாசம் தெரியாமல் இருப்பது வேதனைதான்.

அந்த ஆண்டு கழக ஆட்சியில் புதிதாக விதிக்கப்பட்ட 62 கோடி ரூபாய் வரி அந்த ஆண்டு வருவாய்க் கணக்கில் 1.41 சதவிகிதம்தான். ஆனால் ஜெயலலிதா பேரவையிலே அந்த ஆண்டு 5.50 சதவிகிதம் கழக ஆட்சியில் புதிதாக வரி விதிக்கப்பட்டதாகவும், ஆனால் தற்போது அ.தி.மு.க. ஆட்சியிலே விதிக்கப்பட்டிருப்பது 1.90 சதவிகிதம் என்பது அவை உறுப்பினர்களையும் நாட்டு மக்களையும் ஏமாற்றுகின்ற சூழ்ச்சியாகும்.

உண்மை விவரம் என்னவென்றால் தி.மு.கழக ஆட்சியில் விதிக்கப்பட்ட வரி, 1989ஆம் ஆண்டு 1.30 சதவிகிதம், 1990ஆம் ஆண்டு 1.41 சதவிகிதம், தற்போது இந்த ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியில் விதிக்கப்பட்டுள்ள வரி 1.90 சதவிகிதம். எனவே முதலமைச்சர் ஜெயலலிதா அவையிலே கூறியதைப் போல அ.தி.மு.க. ஆட்சியை விட தி.மு.கழக ஆட்சியிலே அதிக வரி விதிக்கப்பட்டது என்பது உண்மைக்கு மாறான தகவலாகும். கடைந்தெடுத்த பொய்யாகும்.

மேலும் ஜெயலலிதா; இந்த ஆண்டு வரியை கழக அரசின் 1996-2001ஆம் ஆண்டுகளோடு ஒப்பிடாமல் அந்த ஐந்தாண்டுகளையும் விட்டு விட்டு 1989ஆம் ஆண்டு ஆட்சியோடு ஒப்பிட்டதிலிருந்தே, அந்த ஐந்தாண்டுகளில் கழக அரசு அதிக அளவிற்கு புதிதாக வரி விதிக்கவில்லை என்பதைப் புரிந்து கொள்ளலாம். இன்னும் புள்ளி விவரத்தோடு கூற வேண்டுமேயானால் அந்த ஐந்தாண்டுக்கால கழக ஆட்சியில் 2,700 கோடி ரூபாய் அளவிற்கு வரிச் சலுகைகள் வியாபாரிகளுக்கும், அவர்கள் மூலமாக மக்களுக்கும் அளிக்கப்பட்டது.

இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கை பக்கம் 88இல் "வருவாய்ப் பற்றாக்குறை, நிதிப் பற்றாக்குறையில் 35 சதவிகிதத்திற்கு மேல் அதிகரித்தால் அது நடைமுறைக்கு உகந்த அறிவார்ந்த செயலாக இருக்காது" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பக்கம் 89இல் இவர்களே தந்த புள்ளிவிவரப்படி 2003-2004ஆம் ஆண்டுக்கான நிதிப் பற்றாக்குறை 6944 கோடி ரூபாய். அதே 2003-2004ஆம் ஆண்டுக்கு வருவாய்ப் பற்றாக்குறை 3933 கோடி ரூபாய். நிதிப்

பற்றாக் குறையில் வருவாய்ப் பற்றாக்குறை 56.44 சதவிகிதம். இவர்களே 35 சதவிகிதத்திற்கு மேலான நிதிநிலை அறிக்கையை தயாரித்து விட்டு இவர்களே அது நடைமுறைக்கு உகந்த அறிவார்ந்த செயலாக இருக்காது என்றும் தெரிவித்திருக்கிறார்கள்; சரியான பரமார்த்த குருவின் சீடர்கள்!

கழக ஆட்சியிலே நிதி நெருக்கடி என்று இன்னமும் புலம்புகிறார்கள். கழக ஆட்சியில் நிதி நெருக்கடியைக் காரணமாக காட்டி எந்தச் சலுகையாவது நிறுத்தப்பட்டது உண்டா? எந்தத் திட்டங்களையாவது நிறைவேற்றாமல் இருந்தது உண்டா? தொழிலாளர்களின் சலுகைகள் பறிக்கப்பட்டது உண்டா ? இலவச மின்சாரத்தை ரத்து செய்தது உண்டா?

சாத்தான்குளம் தொகுதி வெற்றிக்குப் பிறகு அங்கே சென்று 50 இலட்சம் ரூபாய் செலவில் மகளிர் கல்லூரி தொடங்கப்படும் என்று ஜெயலலிதா அறிவித்தார். ஆனால் அதற்காக நிதி ஒதுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

போக்குவரத்துத் துறை சார்பில் எத்தனை பேருந்துகள் இந்த ஆண்டு எவ்வளவு ரூபாயில் வாங்கப்படும் என்று நிதிநிலை அறிக்கையிலே ஒவ்வொரு ஆண்டும் குறிப்பிடுவதைப் போல இந்த ஆண்டு குறிப்பிடவில்லை. காரணம் பேருந்துகளை தனியாருக்குத் தாரை வார்க்கப் போவதாலா?

இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே; அரசு பெற்றுள்ள கடன்கள் மீதான வட்டிச் செலவுகள், வாய்க் கணக்கிலான மொத்த வரவுகளில் 15 சதவிகிதத்திற்குக் குறைவாக இருக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

அதை விட அதிகமாக இருந்தால்; அந்த "அறிவார்ந்த நிதி மேலாண்மையின் அடிப்படை கோட்பாடுகளை அரசு புறக்கணிக்க முற்பட்டால் அது தன்னைத்தானே இடருக்கு உள்ளாக்கிக் கொள்ள வழி வகுக்கும்" என்று நிதிநிலை அறிக்கையிலே கூறியிருக்கிறார்கள்.

ஆனால் கழக ஆட்சிக் காலத்தில் 96-97இல் இது 12.34 சதவிகிதம்; 97-98இல் 12.98 சதவிகிதம்; 98-99இல் 14.88 சதவிகிதம். ஆனால் அ.தி.மு.க. ஆட்சியில் இது கடந்த ஆண்டு 18.67 சதவிகிதம், இந்த ஆண்டு 30.06 சதவிகிதம்.

தி.மு.கழக ஆட்சியின்போது உணவு மானியத்திற்காக 1540 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டதற்கு மாறாக கடந்த ஆண்டு 1240 கோடி ரூபாயாகக் குறைக்கப்பட்டது.

இந்த ஆண்டு இந்தத் தொகையையும் குறைத்து 600 கோடி ரூபாய்தான் ஒதுக்கப்பட்டுள்ளது. மத்திய அரசு அரிசி விலையைக் குறைத்துக் கொடுக்க ஒப்புக் கொண்ட காரணத்தால் இது சாத்தியமாகும் என்று அரசு தரப்பில் கூறப்படுகிறது. மத்திய அரசு அரிசி விலையைக் குறைத்துக் கொடுத்தால் பிறகு ரேஷனில் 20 கிலோ அரிசியையும் கிலோ ஒன்றுக்கு 3.50 விலைக்கே தரலாமே!

விவசாயிகளுக்கு கழக ஆட்சிக் காலத்தில் கொண்டுவரப்பட்டு, 13 ஆண்டுகளாக எவ்வளவோ நிர்ப்பந்தங்களுக்கிடையிலும், நிதி நெருக்கடிக்கிடையிலும் காப்பாற்றப்பட்டு வந்த இலவச மின்சாரம் என்பது ஜெயலலிதா ஆட்சியில் ரத்து செய்யப்பட்ட தோடு, வீடுகளுக்கான மின் கட்டணமும் மிக அதிக அளவிற்கு உயர்த்தப்பட்டுள்ள கொடுமையும் நடைபெற்றுள்ளது.

இலவச மின்சாரம் பற்றிய கடந்த காலச் சரித்திரத்தைக் கூற வேண்டுமேயானால், 1989ஆம் ஆண்டு ஐந்து குதிரைத் திறனுக்கு குறைவான விவசாய மின் விசை ஏற்றங்களுக்கான மின் கட்டணம் ஒரு குதிரைத் திறனுக்கு ரூ.75 என இருந்தது. அந்த ஆண்டு தி.மு.கழகம் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, அக்டோபர் 89இல் இந்த 75 ரூபாய் என்றிருந்த மின் கட்டணத்தை 50 ரூபாய் என குறைத்தோம். அதன் காரணமாக 9 இலட்சம் விவசாயிகள் பயன் பெற்றனர்.

தொடர்ந்து 1990ஆம் ஆண்டு மார்ச் திங்கள், நிதி நிலை அறிக்கையில் - ஏழரை மற்றும் பத்து குதிரைத் திறன் வரையில் இருந்த கட்டணமான ஒரு குதிரைத் திறனுக்கு 75 ரூபாய் என்பதை 50 ரூபாயாகக் குறைத்தோம். இதன் காரணமாக மேலும் ஒன்றரை இலட்சம் விவசாயிகள் பயன் அடைந்தனர்.

27-10-1990 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுதான் வரலாற்றுச் சிறப்புமிக்க முடிவாகும். அதுதான் தமிழகம் முழுவதும் உள்ள சுமார் 13 இலட்சம் விவசாயிகளுக்கு பயனளிக்கக் கூடிய விவசாயப் பம்பு செட்டுகளுக்காக இலவச மின்சாரம் வழங்கும் திட்டமாகும். இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் தரப்படாத இந்தச்

சலுகை கழக ஆட்சியிலேதான் முதன் முதலாகத் தரப்பட்டது. அதிலும்கூட இதற்கான சலுகை முன் தேதியிட்டு 1-9-1990 முதல் இலவசமாக வழங்கப்படும் என்று 17-11-1990 அன்று ஆணை யிடப்பட்டது.

ஜெயலலிதா 1991ஆம் ஆண்டு பொறுப்பிற்கு வந்ததும் வராததுமாக விவசாயிகளுக்கு கழக ஆட்சியிலே வழங்கப்பட்ட இலவச மின்சாரத்தை ரத்து செய்வதாக அறிவித்தார். இதற்கு தி.மு.கழகமும், விவசாயிகள் சங்கங்களும், எதிர்க்கட்சிகளும் எதிர்ப்பு தெரிவித்ததின் பேரில், பெரிய விவசாயிகளுக்கு மின் கட்டணம் விதிக்கிறோம் என்ற பெயரால், 1992ஆம் ஆண்டு, ஜூன் திங்களில் அ.தி.மு.க. அரசு, ஒரு குதிரை சக்திக்கு ஆண்டு ஒன்றுக்கு 100 ரூபாய் வீதம் கட்டணம் வசூலிக்கப்படும் என்றும், அதனை ஆறு மாதங்களுக்கு ஒரு முறை செலுத்தலாம் என்றும், 25 ஆயிரம் ரூபாய் செலுத்தி முன்னுரிமைத் திட்டத்தின்கீழ் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பைக்கோரிப் பெற்றவர்கள் ஒரு குதிரை சக்திக்கு 150 ரூபாய் வீதம் மின் கட்டணம் செலுத்த வேண்டுமென்றும் அறிவித்தது.

அப்போது அரசின் சார்பில் செய்த அறிவிப்பில் மின்சார பம்பு செட் வைத்துள்ள சிறு விவசாயிகளின் எண்ணிக்கை சுமார் 98 ஆயிரம் என்றும், அவர்களைத் தவிர 11.50 இலட்சம் பம்பு செட்டுகளை வைத்துள்ள மற்ற விவசாயிகள் மின் கட்டணம் செலுத்த வேண்டுமென்றும் கூறப்பட்டது.

இதனைக் கண்டித்து, 11-6-1992 அன்று தமிழகம் முழுவதும் விளக்கப் பொதுக் கூட்டங்கள் நடத்தவும், 13-6-1992 அன்று கண்டனப் பேரணி நடத்தவும், 16-6-1992 அன்று நாடு தழுவிய அளவில் பொது வேலை நிறுத்தம் நடத்தவும் கழகத்தின் சார்பில் முடிவு செய்யப்பட்டது. 11-6-1992 அன்று மதுரையில் நடைபெற்ற கூட்டத்தில் நானும், கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் ஏ.நல்லசிவன், ப.மாணிக்கம் ஆகியோரும் கலந்து கொண்டோம். 13-6-1992 அன்று இலவச மின்சாரத்தை ரத்து செய்ததைக் கண்டித்து கழகத்தின் சார்பில் நடத்தவிருந்த வாகனப் பேரணிக்கு அரசின் சார்பில் அனுமதி மறுக்கப்பட்டது. தடையை மீறி பேரணியில் கலந்து கொள்ள வந்த விவசாயிகளும், கழகத்தினருமாக பத்தாயிரம் பேர் தமிழகம் முழுவதும் கைது

செய்யப்பட்டனர். அந்த வரிசையில் பா.ம.க. தலைவர் டாக்டர் ராமதாஸ் அவர்களையும் கைது செய்து ரிமாண்ட் செய்தார்கள்.

இலவச மின்சாரம் ரத்து செய்யப்பட்டதைக் கண்டித்து தமிழகம் முழுவதும் கடுமையாக எதிர்ப்பு ஏற்படத் தொடங்கியது. அதனைச் சமாளிக்க முடியாமல் ஜெயலலிதா அரசு 2-6-92 அன்றும் 18-6-92 அன்றும் வெளியிட்ட விவசாய மின் கட்டண உத்தரவுகளை ரத்து செய்தது.

4-12-2001இல் முதல்வர் பொறுப்பிலே இருந்த ஓ.பன்னீர்செல்வம் கூறும்போது, "விவசாயிகளுக்காக வழங்கப்படும் இலவச மின்சாரத் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்" என்றார். 13-2-2002 அன்று ஆண்டிப்பட்டி தேர்தல் பிரச்சாரத்தின் போது ஜெயலலிதாவே பேசி, பத்திரிகைகளில் முதல் பக்கத் தலைப்பே "இலவச மின்சாரத் திட்டம் நீடிக்கும், ரேஷன் அரிசி விலை உயராது - ஜெயலலிதா வாக்குறுதி" என்பதுதான்.

ஆண்டிப்பட்டி தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் மாத்திரமல்ல; 3-4-2002 அன்று ஜெயலலிதா சட்டப் பேரவையிலேயே "விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் நீடிக்கும். அவர்கள் பயன்படுத்தும் மின்சாரத்தின் அளவு எவ்வளவு என்பதை தெரிந்து கொள்வதற்கும், எவ்வளவு யூனிட் மின்சாரம் தேவைப் படுகிறது என்பதைத் தெரிந்து கொள்வதற்கும்தான் மீட்டர் பொருத்தப்படுகிறது" என்றார்.

இதையெல்லாம் அவர்களே மறந்துவிட்டோ, அல்லது மக்கள் மறந்து விடுவார்கள் என்று நம்பியோ, எதிர்க்கட்சிக்காரர்கள் சுட்டிக்காட்டினால் அவற்றை அலட்சியப்படுத்துகின்ற அளவிற்கு அதிகாரம் இருக்கிறது என்ற ஆணவத்தாலோ இலவச மின்சாரம் தற்போது ரத்து செய்யப்பட்டுள்ளது.

கழக ஆட்சியில் செய்யப்பட்ட மின் கட்டண உயர்விற்கும் அ.தி.மு.க. ஆட்சியில் செய்யப்படும் மின் கட்டண உயர்விற்கும் உள்ள வேறுபாடுகள் என்ன?

17-2-1997இல் கழக ஆட்சியில் மின் கட்டண உயர்வு அறிவிக்கப்பட்டது. அப்போது மாதம் 50 யூனிட் வரை மின்சாரம் பயன்படுத்துபவர்களுக்கு கட்டணம் உயர்த்தப்படவே இல்லை. 51 யூனிட் முதல் இப்போது 16.61 சதவிகித அளவிற்கு மின் கட் உயர்வு செய்யப்பட்டுள்ளது. இதுவரை வொ மின்சாரம் காரணமாக

பயன்பெற்ற விவசாயிகளின் எண்ணிக்கை 15,04,000. தற்போது செய்யப் மாறுதலின் காரணமாக அரசுக்கு 1398 கோடி வருவாய் கிடைக்குமென கூறப்பட்டுள்ளது.

இதன் காரணமாக ஏற்படும் எதிர்ப்பைச் சமாளிப்பதற்காக தற்போது மானியம் தரப்போவதாக பம்மாத்து செய்கிறார்கள். இது நேராக மூக்கைத் தொடுவதற்குப் பதிலாக கழுத்தைச் சுற்றி மூக்கைத் தொடுகிறேன் என்பதற்கு சமமானதாகும். இதுவரையில் நேரடியாகவே இலவச மின்சாரம் என்ற சலுகையைப் பெற்றுவந்த விவசாயிகளுக்கு, கொடுப்பதாக சொல்லப்படுகின்ற மானியம் ஒழுங்காகப் போய் சேராது என்பதும், அடுத்து வருகின்ற ஆட்சியை ஏன் கட்டுப்படுத்தாது என்பதும்தான் இந்த முறையை எதிர்ப்பவர்களுடைய கருத்தாகும்.

அ.தி.மு.க. அரசு பதவியேற்றது முதல் அரசு அலுவலர் மீது தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது. கழக ஆட்சியில் அவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த பல்வேறு சலுகைகள் தற்போது நிறுத்தப்பட்டு விட்டன. நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப் படும் போது பறிக்கப்பட்ட பல்வேறு சலுகைகள் மீண்டும் வழங்கப்படும் என்ற நம்பிக்கையோடு அவர்கள் இருந்த நிலையில் ஓய்வு பெறும் அரசு அலுவலர்களின் பல்வேறு சலுகைகளையும் பறித்துள்ளது.

அரசு அலுவலர்கள் ஓய்வு பெறுகிறபோது பென்ஷனுள் பெற இதுவரை 30 ஆண்டுகள் பணியினை முடித்திருந்தாலே போதும் என்று கழக ஆட்சியில் சலுகை வழங்கப்பட்டது. ஆனால் இனி 33 ஆண்டுகள் பணி முடித்தவர்களுக்கே முழுப் பென்ஷன் வழங்கப்படுமாம்.

ஓய்வு பெறுகிறவர்கள் கடைசியாகப் பெறும் சம்பளத்தில் 50 சதவிகிதம் ஓய்வூதியமாக இதுவரை வழங்கப்பட்டு வந்தது. இதுவும் கழக ஆட்சியில் வழங்கப்பட்ட சலுகைதான். இது மாற்றப்பட்டு, இனிமேல் கடைசியாகப் பணியாற்றிய பத்து மாதங்களில் சராசரி சம்பளத்தின் அடிப்படையில்தான் பென்ஷன் வழங்கப்படுமாம்.

ஓய்வு பெறுகிறவர்களின் பணிக் கொடையில் 50 சதவிகிதம் கடன் பத்திரமாகவும், 50 சதவிகிதம் ரொக்கமாகவும் இனி வழங்கப்படுமாம்.

ஓய்வு பெறும்போது தற்போது 11 மாத விடுப்பை சரண்டர் செய்யலாம். இனி 10 மாத விடுப்பை மட்டுமே சரண்டர் செய்ய முடியுமாம்.

இதுவரை சரண்டர் விடுப்புக்கு அடிப்படை ஊதியத்துடன், அகவிலைப்படி, வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி ஆகியவையும் சேர்க்கப்பட்டு கணக்கிடப்படும். கழக ஆட்சியில் வழங்கப்பட்ட இந்தச் சலுகையும் ரத்து செய்யப்பட்டு, இனி அடிப்படை ஊதியத்துடன் அகவிலைப்படி மட்டுமே சேர்க்கப் படுமாம்.

ஓய்வு பெறுகிறபோது பெறுகின்ற கம்யூடேஷன் இதுவரை ஊதியத்தில் 40 சதவிகிதம் வழங்கப்பட்டு வந்தது. இனிமேல் அது 26 சதவிகித அளவிற்கு மட்டுமே வழங்கப்படுமாம்.

6வது ஊதிய விகித மாற்றத்தின்போது வருங்கால வைப்பு நிதியில் சேர்க்கப்பட்ட 60 சதவிகித நிலுவைத் தொகை 1-4-2003க்குப் பிறகு ரொக்கமாக வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. இதுவும் மாற்றப்பட்டு, ஓய்வு பெற்ற பிறகு 3 ஆண்டில் 3 தவணைகளாக வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

உற்பத்தித் துறையில் உள்ள பொதுத் துறை மற்றும் கூட்டுறவுத் துறை நிறுவனங்கள் அனைத்திலும் உள்ள தனது பங்குகளை அரசு விலக்கிக் கொள்ளும் என்று (நிதிநிலை அறிக்கை பக்கம் 95) கூறப்பட்டுள்ளது. இது மிகப் பெரும் பாதகத்தை தமிழகத்திலே உருவாக்கும். இதனால் அந்தப் பொதுத் துறை நிறுவனங்களிலும், கூட்டுறவுத் துறை நிறுவனங்களிலும் உள்ள லட்சக்கணக்கான அலுவலர்கள் பாதிக்கப்படுவார்கள்.

அவர்களை வீட்டிற்கு அனுப்புவதற்காக அங்கே உள்ள பணியாளர்கள் தாங்களாகவே முன்வந்து பணியிலிருந்து ஓய்வு பெறும் திட்டம் ஒன்றை கொண்டு வரப்போவதாக அறிவித்திருக்கிறார்கள்.

தமிழ்நாடு மின் வாரியத்தை வணிக ரீதியாக, ஆதாயபூர்வமாக ஆக்க இந்த அரசு முயற்சி மேற்கொள்ளும் என்று கூறப்பட்டுள்ளது. அரசு மின் வாரியத்தை ஆதாயபூர்வமாக நடத்த முடியாது. மக்களுக்கு நலன் ஏற்படுத்துவதற்காகத்தான் பயன்படுத்த வேண்டும். எனவே மின் கட்டண உயர்வும், இலவச மின்சார

ரத்தும் சரியான முடிவல்ல. ஏழை எளிய நடுத்தர மக்களின் ஈரல் குலையைக் கசக்கிப் பிழியும் முடிவுகளேயாகும்.

இந்தப் பட்ஜெட்டைப் பற்றி பொதுவாகக் கூற வேண்டுமேயானால், பஞ்ச பாண்டவர்கள் எத்தனை பேர் என்று கேட்டதற்கு, கட்டில் காலைப் போல மூன்று பேர் என்று சொல்லி, இரண்டு விரல்களைக் காட்டி, ஒன்று என்று எழுதி, பின்னர் அதையும் அழித்து விட்டக் கதையாக இருக்கின்றது.

அன்புள்ள,

மு.க.

29-03-2003

2895. கூர்மையாயிருப்பதெல்லாம் கொடிய முள்ளா ?

உடன்பிறப்பே,

ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுக்க முனைவதைக் கண்டித்து இந்த ஆண்டு பிப்ரவரி 10ஆம் நாள் ஒரு கவிதை எழுதியிருந்தேன்.

“விவேகமும் விஞ்ஞானமும் ஆக்கப் பணிகள்
வேர்விட்டு விழுதுவிட்டுக் கிளைப்பதற்குத்தான்
வேரில், விழுதில், விஷ நீர் ஊற்றி
வீழ்த்த அல்ல; உலகை விசாரத்தில் ஆழ்த்த அல்ல!”

என அச்சுறுத்திவிட்டு, அப்போதே மனக்கண் முன்னால் சில காட்சிகளைக் கொண்டு வந்து நிறுத்தினேன்.

“எத்தனை பூவும் பிஞ்சுகளும்
எத்தனை மலரும் மொட்டுகளும்,
எத்தனை காயும் கனிகளும்
எத்தனை கொடிகளும் செடிகளும்,
வாடி வதங்கி மரணக்குழிகளை
தேடிப் போவதற்கு வழிவகுக்கும்!”

இந்தக் கேள்விக்கு விடை இதோ ஈராக் மண்ணில் கிடைத்துக் கொண்டிருக்கிறது. தொலைக்காட்சிகளில் அதை முழுமையாகப் பார்க்க முடியாமல் கண்ணீர்த் திரை மறைத்து விடுகிறது. என் பேரக் குழந்தை கேட்கிறான்; தொலைக்காட்சியைப் பார்த்துவிட்டு; பாக்தாத் நகரில் மாட மாளிகைகள், அரசுக் கட்டிடங்கள், தொலைத் தொடர்பு அலுவலகங்கள் குண்டு வீச்சால் தகர்க்கப்பட்டு இடிந்து நொறுங்குவதைப் பார்த்துக் கேட்கிறான்; “இப்படி இடிக்கிறாங்களே மறுபடியும் எப்படிக் கட்டுவாங்க?” என்று!

அந்தப் பிஞ்சு உள்ளம் அந்தக் கேள்வியோடு நிறுத்தவில்லை - அரும்பனைய குழந்தைகள் ஆவி போன பிணங்களாக

அடுக்கப்படுவது கண்டு, "இந்தப் பாப்பாக்கள் மறுபடியும் பிழைப்பாங்களா - நடப்பாங்களா" என்றும் கேட்கிறான். இந்தக் கேள்வியை என் பேரன் கேட்கும்போதே என் மனம் படாதபாடுபடுகிறதே, ஈராக்கில் இந்த இழப்பு ஏற்பட்ட வீட்டில் இறந்த குழந்தையைப் பற்றி; இருக்கிற குழந்தை, தன் தாயிடம் கேட்டால் அவள் என்ன பாடுபடுவாள்?

அவள் படும் பாட்டைக் கேள்விப்படுகிறோம் - அழுத குரலைக் கேட்கிறோம் - அமெரிக்க நாட்டு அதிபரைத் தவிர இருதயமிருப்போர் அனைவரும், ஒப்புக்கு அனுதாபம் தெரிவிப்பவர்களாக அல்லாமல், உண்மையிலேயே விழிநீர் பெருக்குகிறோம்.

திருச்சியில் நடைபெற்ற இலக்கிய விழா வொன்றில் பேராசிரியர் அறிவொளி அவர்கள் பேசும் போது, நா தழுதழுக்கச் சொன்னார் "திராவிடர்களின் பண்டைய நாகரிகப் பண்பாட்டுச் சின்னங்களை நினைவூட்டும் பாக்தாத் மீது அமெரிக்கத் தாக்குதல், என்கிறபோது நமது பழம் பெரும் பாரசீக சுமேரிய நாகரிகத்தை எண்ணிக் கலங்குகிறோம்" என்று

நமக்குள்ள நாகரிகத் தொடர்புக்கும் அப்பால் பார்த்தால்கூட; நாடு பிடிக்கும் ஆசையும், ஆதிக்கத்தை அகிலம் முழுவதும் பரப்பிடும் வெறியும் அமெரிக்க அதிபருக்கு அடங்காத பசிப் பிணியாக உருவெடுத்து, இந்தியா போன்ற இரஷ்யா போன்ற நாடுகள் எதிர்ப்பு காட்டியும்; ஐ.நா. மன்றமே அங்கீகரிக்காத ஒரு போருக்கு பச்சைக் கொடி காட்டி; இந்தப் பூமியின் ஒரு பகுதியை இரத்த வண்ணமாக்கிக் கொண்டிருக்கிறார்.

காணுகிறோம் தொலைக்காட்சியில் மற்றும் ஏடுகளில்; போர்ச் செய்தி! தரையில் தாமரை இலைகளைக் குருதியில் தோய்த்துப் பரப்பியது போல் திட்டுத்திட்டாக ரத்தம் தேங்கியுள்ள காட்சிகள்!

உலகப் போர்கள் ஒன்றிரண்டைக் கண்ட பிறகும்; ஓராயிரம் ஈராயிரம் என வளர்ந்து இறுதியாக இலட்சக்கணக்கில் மனிதர்கள் மாண்டு மடிந்து - குடும்பம் குடும்பமாக அழிந்து - ஊர் ஊராக - நகர் நகராக - ஒழிந்து நாசமாகியும் - இன்னமும் ஆயுதங்களுக்குத் தீனி தேடி அமெரிக்கா போன்ற நாகரிக நாடுகள் நாக்கைச் சப்புக் கொட்டுவதும் அதற்கு 'ஆமாம் சாமி நாடுகள்' சில தலையாட்டித் தம்பிரான்கள் வேலை பார்ப்பதும்; அய்யகோ; கொடுமை கொடுமை

இப்பொழுதெல்லாம் ஒரு வாசகம் கற்றுக் கொண்டு முதலில் ஊர் மக்களை ஏமாற்றியவர்கள் இன்று உலக மக்களையே ஏமாற்றத் துணிந்து விட்டார்கள்.

தீவிரவாதம்!
தீவிரவாதம்!
தீவிரவாதிகள்!
தீவிரவாதிகள்!

உண்மையிலேயே தீவிரவாதம் என்ற கொடிய முள் முறிக்கப்பட வேண்டியதுதான் ! அது விஷ முள் என்கிறபோது நமக்கு வேண்டாத முள் - வெறுத்து ஒதுக்க வேண்டிய முள்தான் - அதற்காக முள் போலக் கூர்மையாக இருக்கிற; உடலுக்குள் மருந்தைச் செலுத்தக் கூடிய ஊசி கூட முள்ளாகி விடுமா? தையல் ஊசியும் அத்தகையதுதானா? பக்தர்கள் மொழியில் கேட்க வேண்டுமானால் "செக்கு" "சிவலிங்கம்" இரண்டும் ஒன்றுதானா? இரண்டும் ஒரே வடிவில் இருப்பதால்!

தீவிரவாதியென்றால் முதலில் சிலருடைய நினைவிலும் கண்ணிலும் தென்படுவது இஸ்லாமியராக இருந்து - இன்றைய பரிணாம வளர்ச்சியின் பரிதாபத்தில் இஸ்லாமிய நாடுகளே தீவிரவாத நாடுகளாக சுட்டிக்காட்டப்படுகிற - ஓர் அரசியல் தந்திரம் ஆலகால விருட்சமாக வளர்ந்திருக்கிறது; அதுதான் பரிதாபம்!

எல்லா நாடுகளுமே தீவிரவாதத்தை ஆதரிக்கும் நாடுகள் என்று தள்ளவும் முடியாது - அல்லது எதிர்க்கிற நாடுகள் என்று கொள்ளவும் முடியாது.

பொதுவாக தீவிரவாதம் பொல்லாதது; அது பொசுக்கப்பட வேண்டும் - போக்கப்பட வேண்டும் - என்றால் அந்த தீவிரவாதம் இஸ்லாமிய நாடுகளில் மட்டுமே இருப்பதாகவும்-இஸ்லாமல்லாத நாடுகளில் தீவிரவாதம் துளியும் தலை காட்டுவதில்லை என்பதும் அரசியலுக்காகச் சொல்லப்படும் கற்பனைகளாக இருத்தலாகாது!

"உலக முழுவதும் தீவிரவாதம்" என்ற பிரச்சார வளையத்துக்குள் ஈராக்கை இணைத்து, தலையைக் கொடுத்து விட்டு இப்போது விழிக்கிற அமெரிக்கா,

கௌரவம் பார்க்காமல் இந்தக் கொடுமைகளிலிருந்து உலகம் விடுபட; தன்னை இந்தப் போரில் இருந்து விடுவித்துக் கொள்ள வேண்டும்.

போரிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளாத வரையில் அசோகன் மன்னனாக இருந்தான் -

விடுவித்துக் கொண்ட பிறகு மனிதனாக மதிக்கப்பட்டான்.

மனிதனாக இல்லாமல்
மன்னனாக இருந்து என்ன பயன்?

அன்புள்ள,
மு.க.
31-03-2003

2896. நடுநிலையாளர்கள் சீர்தூக்கிப் பார்த்திட!

உடன்பிறப்பே,

2003-2004ஆம் ஆண்டிற்கான, ஜெயலலிதா அரசின் நிதிநிலை அறிக்கை குறித்துச் சில விளக்கங்களை 29-3-2003 தேதியிட்ட ஏடுகளில் நான் எழுதியிருந்தேன். அதற்கு நேற்றைய தினம் பேரவையிலே ஜெயலலிதா பதில் அளித்திருக்கிறார். அதற்கான விளக்கத்தை தர வேண்டியது என் கடமையெனக் கருதுகிறேன்.

25-3-2003 இல் பேரவையில் ஜெயலலிதா தி.மு.கழக ஆட்சியைக் குற்றஞ்சாட்டி பேசியது ஏடுகளில் வெளிவந்தது வருமாறு:-

மாலை முரசு ஏட்டில் வெளிவந்த செய்தி, தி.மு.க. ஆட்சியில் 1989-90ல் நிதி ஆதாரங்களைப் பெருக்க 260.3 கோடி ரூபாய்க்கு புதிய வரி போடப்பட்டது. அந்த ஆண்டு மொத்த வருவாய் ரூ.3,845.74 கோடி ஆகும். இதில் புதிய வரி 6.77 சதவீதமாகும். அதுபோல,1990-91ல் புதிய வரி சதவீதம் 5.50 ஆகும். இந்த அரசில் 2003-2004இல் கூடுதல் வரிகள் ரூ.430 கோடிக்கு போடப்பட்டுள்ளது. புதிய வரிகள் சதவீதம் 1.90 ஆகும். இதிலிருந்தே மக்கள் மீது அதிக வரி யார் போட்டுள்ளார் என்று தெரியும், என்பதாக ஜெயலலிதா கூறியிருந்தார்.

26-3-2003 தேதியிட்ட தினமணி இதழில், 1989-90ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியில் புதிய வரிகள் ரூ.260.30 கோடி. வருவாய்க் கணக்கில் வரவுகள் ரூ.3,845.74 கோடி. இதன்படி வரி விதிப்பு 6.77 சதவிகிதம். 1990-91ஆம் ஆண்டு வருவாய்க் கணக்கில் வரவுகள் ரூ.4,397.46 கோடி. புதிய வரிகள் ரூ.242 கோடி. இதன்படி அந்த ஆண்டுக்கான வரி விதிப்பு 5.50 சதவீதம். ஆனால் நடப்பு ஆண்டுக்கு வருவாய்க் கணக்கில் வரவுகள் ரூ.22,665.90 கோடி. புதிய வரிகள் ரூ.430 கோடி. இதன்படி வரி

விதிப்பு 1.90 சதவீதம். இதிலிருந்து எந்த ஆட்சிக் காலத்தில் வரி விதிப்பு குறைவு என்பதை மக்கள் அறிவார்கள் என்று செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

26-3-03 தேதிய இந்து இதழில் Ms.Jayalalita said the previous DMK regime imposed during 1989-90 new taxes to the tune of Rs.260.30 crores, whc was 6.77 percent of the total revenue receipts, But the fresh levy of Rs.430 Crores ow was only 1.9 percent of the over all revenue receipts என்று வெளியிடப்பட்டுள்ளது.

முதலமைச்சர் ஜெயலலிதா பேரவையில் பேசியதாக, மற்ற ஏடுகளிலும் இவ்விதமாகத்தான் செய்தி வந்துள்ளது. இந்தச் செய்தியிலிருந்து பேரவையிலே ஜெயலலிதா, தி.மு.கழக ஆட்சியில் புதிதாக விதிக்கப்பட்ட வரியையும், தற்போது அவருடைய ஆட்சியில் விதிக்கப்பட்ட புதிய வரியையும் ஒப்பிட்டுக் காட்டி, அதிலே சதவிகித ரீதியாக கணக்கிட்டு, தி.மு.கழக ஆட்சியில் அதிக வரி விதிக்கப்பட்டதாகக் குற்றஞ்சாட்டியிருப்பதை அறிந்து கொள்ள முடியும். இந்தச் செய்திகளின் அடிப்படையிலேதான், நான் எழுதும்போது, அந்த ஆண்டுகளிலே கழக அரசின் சார்பில் நிதி நிலை அறிக்கையிலே ஜெயலலிதா குறிப்பிட்டதைப் போல 260 கோடி ரூபாய்க்கு புதிய வரிகள் போடப்படவில்லை என்றும், 89-90இல் 50 கோடி ரூபாய்க்கும், 90-91இல் 62 கோடி ரூபாய்க்கும்தான் புதிதாக வரி போடப்பட்டது என்றும், ஜெயலலிதா அவையிலே தெரிவித்த புள்ளி விவரம் தவறானது என்றும் குறிப்பிட்டுக் காட்டியிருந்தேன்.

இதற்குத்தான் நேற்றைய தினம் பேரவையிலே ஜெயலலிதா பதில் அளித்திருக்கிறார். அந்தப் பதிலில்,

1989 - 90ஆம் ஆண்டில் அடிஷனல் மொபிலி சேஷன் என்ற தலைப்பில் புதிய வரிகள் மற்றும் இதர நிதி திரட்டும் நடவடிக்கைகளினால் ரூ.260 கோடியே 30 லட்சம் திரட்டப்பட்டுள்ளது என்று கூறியிருந்தேன் என்று ஜெயலலிதா தெரிவித்திருக்கிறார். 25 ஆம் தேதி பேரவையில் ஜெயலலிதா பேசியதாக அனைத்து ஏடுகளும் வெளியிட்ட செய்தி- 1989-90இல் தி.மு.க. ஆட்சியில் புதிய வரியாக ரூ.260 கோடியே 30 லட்சம் போடப்பட்டதாக ஜெயலலிதா பேசினார் என்பதுதான். ஆனால் நேற்றைக்கு பேரவையிலே, 89 - 90இல் புதிய வரிகள்

மற்றும் இதர நிதி திரட்டும் நடவடிக்கைகளினால் ரூ.260 கோடியே 30 லட்சம் திரட்டப்பட்டுள்ளது என்று கூறியிருந்தேன் என்று ஜெயலலிதா மாற்றிக் கூறுகிறார் என்றால், பேரவையிலேயே ஒரு முதலமைச்சர் எந்த அளவிற்கு புள்ளி விவரங்களை மாற்றிக் கூறி அவையின் உறுப்பினர்களையும், நாட்டு மக்களையும் ஏமாற்றுகிறார் என்பதை தெளிவாகத் தெரிந்து கொள்ள முடிகிறது அல்லவா?

25ஆம் தேதி கூறும்போது தி.மு.க. ஆட்சியில் புதிய வரிகள் எவ்வளவு, தற்போது அ.தி.மு.க. ஆட்சியிலே புதிய வரிகள் எவ்வளவு என்று ஒப்பிட்டுக் காட்டி விட்டு, தற்போது, தி.மு.க. ஆட்சியில் புதிய வரிகள் மற்றும் இதர நிதி திரட்டும் நடவடிக்கைகளையும் சேர்த்துச் சொன்னேன் என்று மாற்றிச் சொல்வது எப்படி நியாயம்? உண்மையிலேயே உரிமைக் குழுவிடம் அனுப்ப வேண்டிய விவகாரம் இதுதான்.

ஜெயலலிதா குறிப்பிடுவதைப் போல சதவிகித விவரங்களையெல்லாம் விடுத்து, தி.மு.கழக ஆட்சியிலே 1989-90இல் புதிதாக விதிக்கப்பட்ட வரி 50 கோடி ரூபாயாகும். 1990-91இல் புதிதாக விதிக்கப்பட்ட வரி 62 கோடி ரூபாயாகும். ஜெயலலிதா ஆட்சியில் அவர் வந்ததும் வராததுமாக வெளியிட்ட இடைக்கால நிதிநிலை அறிக்கையில் 135 கோடி ரூபாய்க்கும், கடந்த ஆண்டு 690 கோடி ரூபாய்க்கும், இந்த ஆண்டு 430 கோடி ரூபாய்க்கும் புதிய வரிகளை விதித்திருக்கிறார். 25ந்தேதியன்று பேரவையில் ஜெயலலிதா கூறும்போது - அ.தி.மு.க. ஆட்சியை விட, தி.மு. கழக ஆட்சியிலே அதிக வரி விதிக்கப்பட்டதாகவும், அ.தி.மு.க. ஆட்சியிலேதான் வரி குறைவு என்றும் குற்றச்சாட்டாகக் கூறினார்.

ஆனால் நேற்றையதினம் பேரவையிலே பேசும் போது, தி.மு.கழக ஆட்சியிலே தேவையற்ற வரிச் சலுகைகளையெல்லாம் அளித்து நிதி நிலையை கெடுத்து விட்டதாகக் கூறியிருக்கிறார். 25ந்தேதி கூறும்போது வரியை உயர்த்தி விட்டதாக! 31ந்தேதி கூறும்போது வரிச் சலுகைகளை அதிகமாக அளித்து விட்டதாக! இந்த இரண்டு கூற்றினையும், நடுநிலையாளர்கள்தான் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும்.

அன்புள்ள,

மு.க.

2-4-2003

2897. போரிடும் உலகத்தை வேருடன் சாய்ப்போம்!

உடன்பிறப்பே,

பேரழிவு ஏற்படுத்தக் கூடிய ஆயுதங்களை ஏராளமாகக் குவித்து வைத்திருக்கிறது ஈராக் - எனவே அந்த ஆயுதங்களை, ஈராக் ஒப்படைக்கத் தயாராக இருக்க வேண்டும் என்று ஆணை பிறப்பித்தது அமெரிக்கா.

அதற்கு ஐ.நா. மன்றம் முதலில் தயங்கி, பிறகு தலையசைத்தது, ஐ.நா. செயலர் கோபி அன்னான் அவர்களும் தன் மனத்துக்குள் இது தேவையா என்று கேட்டுவிட்டு, அதன் பின்னர், அமெரிக்காவின் சோதனைக்கு ஈராக் இணங்க வேண்டும் என்று கருத்துதிர்த்தார்.

இராணுவத் துறை அதிகாரிகள் என்ன! விஞ்ஞானிகள் என்ன! ஆராய்ச்சியாளர்கள் என்ன! இப்படிப் பல்வேறு துறையைச் சார்ந்த அமெரிக்கப் பிரமுகர்கள் ஈராக்கிற்குச் சென்று ஆராய்ச்சியில் ஈடு பட்டனர், சோதனை நடத்தினர்.

முடிவாக அவர்கள் கூறியது, எமது சோதனை யில் பேரிழப்புப் போர் ஆயுதங்கள் எதுவும் காணப்பட வில்லை என்பதாகும்.

ஆனால் அந்தச் சோதனையின் முடிவு பற்றிய அறிவிப்புகளை, அமெரிக்கா நம்பத் தயாராக இல்லை! எனவே மீண்டும் மீண்டும், அந்தப் பயங்கர ஆயுதங்கள் பற்றியே பேசப்பட்டது. போதாததற்கு அந்த நேரம் ஈராக்கின் வீர முழக்கங்கள், அமெரிக்கா மீதும், அந்த நாட்டுடன் இந்தப் போருக்காக இணைந்த நாடுகள் மீதும் வீசப்படும் குண்டுகளாக வெடிக்கத் தொடங்கின.

ஒரு நாயைக் கொல்வதாக இருந்தால் கூட அதற்குப் பைத்தியம் பிடித்து விட்டது என்று காரணம் கூறு எனப் பழமொழியிருக்கிறதல்லவா! அந்தப் பழமொழியை அப்படியே

பின்பற்றி அமெரிக்கா, ஈராக்கின் வசமுள்ள பேரழிவுப் போர்க் கருவிகள் குறித்தே தனது குற்றச்சாட்டைத் தொடர்ந்து எடுத்து வைத்து வந்தது.

ரசாயனப் பொருட்களைப் பயன்படுத்தி, உயிர்க் கொல்லிக் கருவிகளைப் போரில் பிரயோகித்து ஈராக் போரிடப் போகிறது - அதனாலேதான், ஈராக்கை அழிக்க விரும்புகிறது அமெரிக்கா என்று, உலக முழுவதும் செய்தி பரப்பப்பட்டது.

அப்படியொரு திட்டம் தன்னிடமில்லையென்று ஈராக் இடைவிடாது சொல்லி வந்த போதிலும், ஐ.நா. மன்றத்தின் அபிப்பிராயத்தையும், பல்வேறு நாடுகளின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் அமெரிக்கா, ஈராக் களத்தில் கால் வைத்துவிட்டது.

ஆரம்பப் பள்ளிகளில் ஆட்டுக்குட்டி, ஓநாய் கதை படித்திருக்கிறோம்.

நான் குடிக்கும் தண்ணீரை ஏன் கலக்கினாய்? இது ஓநாய் கேள்வி.

வீண் பழி போடுகிறாய்! நீ வாய்க்காலின் மேட்டுப் பகுதியிலிருந்து தண்ணீர் குடிக்கிறாய். நான் கீழ்ப் பகுதியிலிருந்து குடிக்கிறேன். எப்படிக் கலக்க முடியும்? இது ஆட்டுக்குட்டி பதில்.

எந்தப் பகுதியானால் என்ன? நான் குடிக்கும் நீரை நீ, கலக்குகிறாய்! கலங்கிய நீரையே நான் குடிக்க வேண்டியுள்ளது

யாரை வேண்டுமானாலும் கேட்போம். அவர்கள் நியாயத்தைச் சொல்லட்டும். வாய்க்காலில் கீழே தண்ணீர் குடிக்கும் நான், மேலே நிற்கும் தாங்கள் குடிக்கும் தண்ணீரைக் கலக்க முடியுமா?

அடேய், அற்பப் பதரே! நான் குடிக்க வேண்டிய தண்ணீரை இன்றைக்கு நீ கலக்காமல் இருக்கலாம் - ஆனால் உன்னுடைய பாட்டனோ, பாட்டியோ அந்தப் பகுதியில் தண்ணீரைக் கலக்கியிருக்கலாம் அல்லவா! அதற்கான தண்டனையை நீ இப்போது ஏற்பதே முறை என்று சொல்லிக் கொண்டே ஓநாய், ஆட்டுக்குட்டியின் மீது பாய்ந்து அதை விழுங்கி ஏப்ப மிட்டது. இந்தக் கதை இப்போது ஈராக் - அமெரிக்கா போருக்கும் பொருந்துகிறதல்லவா!

ஏறத்தாழ ஈராக்கை ஏப்பம் விட்ட நிலையில்தான் போரின் போக்கு போய்க் கொண்டிருக்கிறது. ஈராக், பேரழிவு ஆயுதங்களை வைத்திருக்கிறது, அதனால் தான் போர் நடத்துகிறோம் என்று அமெரிக்கா சொன்னது, ஓநாய்க்குக் கிடைத்தது போன்ற ஒரு போலிக் காரணமே தவிர, உண்மைக் காரணமல்ல.

உண்மையிலேயே ஈராக்கிடம் அத்தகைய பேரழிவு ஆயுதங்கள் இருந்தால், அவற்றில் ஒன்றிரண்டையாவது அந்த நாட்டுப் போர்ப் படையினர் பயன்படுத்தியிருப்பார்கள் அல்லவா?

அப்படிப் பயன்டுத்தியதாகவே செய்தி இல்லை - இதிலிருந்தே ஈராக்கிடம் பேரழிவு ஆயுதம் எதுவும், எப்போதும் இல்லை என்பது தெளிவாகிறது.

அத்தகைய அழிவு ஆயுதம் இருந்திருந்தால் ஈராக் இந்த நிலைமையில் அதைப் பயன்படுத்தியிருக்குமே! அந்த ஆயுதம் இல்லை. ஆகவே பயன்படுத்த வில்லை! அழிவுக்கான எந்த ஆயுதத்தையும் ஈராக் பயன்படுத்தாததிலிருந்து, இது அமெரிக்காவும், சில நாடுகளும் போர் நடத்துவதற்காக புனையப்பட்ட பொய் என்றே கருத வேண்டியிருக்கிறது. இக்கடிதம் உன் கைக்கு வந்து சேர்வதற்குள்ளாக ஈராக் ஒரு முடிவு எடுக்க வேண்டிய நிலைக்கு உள்ளாகலாம், அல்லது மேலும் சில நாட்களாகலாம்.

முடிவாக சதாம் உசேன், சங்கிலியில் பிணைக்கப்படலாம் - அல்லது ஆவி போக்கப்படலாம் - அதற்காக அவர் கவலைப்பட்டுக் கொண்டிருக்கவில்லை. ஆனால் ஈராக் மக்களின் எதிர்கால வாழ்வு எந்த அளவு அஸ்தமித்து விட்டிருக்கிறது என்பதையும் - எத்தனை குடும்பங்கள் கணவனையோ - தந்தையையோ - தமையனையோ - தனயனையோ - தாய் தமைக்கைகளையோ - குழந்தைகளையோ இழந்துவிட்டு குமுறிக் கொண்டிருக்கின்றன என்பதையும் நினைத்துப் பார்க்கவே முடியவில்லை.

நெஞ்சில் விழுந்துள்ள அந்தத் துன்பச் சுமையைத் தாங்கும் வலிமை, ஒரு சிறிதுமில்லை என்பதுதான் உண்மை.

போரிடும் உலகத்தை வேருடன் சாய்ப்போம்

என்ற புரட்சிக் கவிஞரின் கவிதை வரிகள், என் காதுகளில் ரீங்காரம் செய்து கொண்டிருக்கின்றன. அமைதியான வளம்

நிறைந்த புதிய ஈராக்கை அந்த மக்களுக்கு அமைத்துத் தருவோம் என்று

அமெரிக்காவும் அதன் துணை நாடுகளும் அறிவித்துள்ளன.

நாளை வரப்போகிற அமைதிக்காக, வளத்திற்காக இன்றுள்ள அமைதியை அழித்து, வளத்தை வீழ்த்த வேண்டுமா?

கண்ணை விற்றுச் சித்திரம்

வாங்குகிற கதைதான்.

அன்புள்ள,

மு.க.

7-4-2003

2898. கண்ணை மூடிக்கொண்டு கழகத்தின்மீது கை வைத்தால்!

உடன்பிறப்பே,

கடந்த வாரம் கடையடைப்புப் போராட்டம் என வணிகப் பெருமக்களே அறிவித்து அவர்கள் நடத்திய அமைதிப் போராட்டம் முடிவுற்று - தொடக்கப் போராட்டமாக அரசு அலுவலர், ஆசிரியர்கள், அவர்களே அறிவித்து நடத்திய ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம், மிரட்டலைக் கண்டு மிரளாமல் அமைதியாக நடைபெற்று முடிவுற்று - இதற்கிடையே அரசாங்கமே எதிர்க்கட்சிகள் மீது, குறிப்பாக தி.மு.க. மீது, திட்டமிட்டு வேண்டுமென்றே மோதிக் கொண்டு மூட்டிவிட்ட போலீஸ் அராஜகப் போராட்டத்தின் காரணமாக, ஒரு நாள் தமிழகத்தில் புயலே வீசி ஆளுங்கட்சி என்ற மரம் கிளையிழந்து, இலை உதிர்ந்து, களையிழந்து நிற்கின்ற காட்சியினைக் காணுகிறோம்.

இளைஞரணிச் செயலாளர் மு.க. ஸ்டாலின், தம்பிகள் டாக்டர் பொன்முடி, எ.வ. வேலு, இள. புகழேந்தி, எஸ்.ஏ.எம். உசேன், ஜெ. அன்பழகன் ஆகிய சட்டமன்ற உறுப்பினர்கள், இராணி மேரிக் கல்லூரி மாணவிகள், தங்களின் பழம்பெருமை வாய்ந்த கல்லூரிக் கட்டிடத்தை இடித்துத் தூளாக்கிடும் கொடுஞ்செயலில் அரசு ஈடுபடுவதை எதிர்த்து நடத்துகிற அறநெறி அமைதிப் போராட்டத்திற்கு நரம்பியல் மேதை டாக்டர் ராமமூர்த்தி அவர்கள் ஆதரவு தரச் சென்றதுபோல, அக்கல்லூரியின் பழைய மாணவி 102 வயதுடைய ஆலிவ் பால் அம்மையார் அவர்கள் சென்றதுபோல, வேறு பல அரசியல் கட்சிகளின் மரியாதைக்குரிய தலைவர்கள் சென்றதுபோல, கழகத்தின் தார்மீக ஆதரவு அந்த மாணவியர்க்கு உண்டு என்பதை எடுத்துக் கூற மட்டுமே ஸ்டாலினும் மற்ற சட்டமன்றக் கழக உறுப்பினர்களும் அங்கு சென்றிருக்கிறார்கள்.

செல்லும்போது கல்லூரி வாயிற்புறத்தில் காவலர்கள் இருந்தும் அவர்கள், இவர்களைத் தடுத்து நிறுத்தவில்லை.

அப்படி நிறுத்தியதாக எந்தப் பத்திரிகையிலும் ஒரு செய்தி கூட வரவில்லை. இவர்களைக் கண்டதும் மாணவிகள் அனைவரும் சூழ்ந்து வரவேற்று, ஆங்கோர் பகுதியில் பரவலாக அமர்ந்திடவே அவர்களுக்கு வாழ்த்துக் கூறி, ஆதரவை அறிவித்து விட்டு இவர்கள் திரும்பி வந்து விட்டார்கள்.

அந்த மாணவிகளின் பிரதிநிதிகள் சில பேர் இந்த நிகழ்ச்சிக்கு இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பே அண்ணா அறிவாலயத்திற்கு வந்து என்னைச் சந்தித்து, தங்களின் கருத்துக்கும், முயற்சிக்கும் என்னிடத்திலே ஆதரவு கேட்டனர். கழகத்தின் நேரடி ஆதரவு இல்லாவிடினும், தார்மீக ஆதரவு உண்டு என வாழ்த்தி அனுப்பினேன். நான் அண்ணா அறிவாலயத்தில் அந்த மாணவிகளிடம் சொன்னதைத்தான் கழகச் சட்டமன்ற உறுப்பினர்களும் குறிப்பாக, மு.க. ஸ்டாலினும் கல்லூரியில் அவர்களைச் சந்தித்த போதும் நினைவூட்டியிருக்கிறார்கள்.

இதைத் தாங்கிக் கொள்ள முடியாத முதலமைச்சர் ஜெயலலிதா, குதர்க்கமாகவும், குரூரமாகவும் சிந்தித்து, கல்லூரி வாசல் காவலாளியைத் தாக்கவும், மிரட்டவும், வன்முறை வார்த்தைகளைப் பயன்படுத்தவுமான காரியங்களில் இவர்கள் ஈடுபட்டதாக இட்டுக்கட்டி, அப்படியே கல்லூரி முதல்வரிடம் பொய்ப் புகாரை எழுதி வாங்கிடக் கட்டளையிட்டு, பின்னர் அந்தப் பொய்ப்புகாரின் மீது நடவடிக்கை என்ற பெயரால் நள்ளிரவுக் கைதுப் படலக் காட்சியை நடத்திப் பார்த்துக் களித்திருக்கிறார். இது பொய்ப் புகார் என்பதை இந்தக் கல்லூரி மாணவிகளே பேட்டிகளில் கூறியிருக்கிறார்கள்.

இந்தக் காட்டுமிராண்டித்தன தர்பாரைக் கண்டித்து, அடுத்த கணமே தமிழகம் போர்க்கோலம் பூண்டது - ஏன், புதுவையிலும் களம் அமைந்து முன்னணியினரும், உடன்பிறப்புகளும் சிறை புகுந்தனர் என்பது செய்தி! நாடாளுமன்றம், மாநிலங்களவை வரையிலே, கல்லூரி கட்டிட இடிப்புக்கும் - ஜெயலலிதா அரசின் காட்டு மிராண்டித்தன நடவடிக்கைகளுக்கும் கடும் எதிர்ப்பு!

இங்கே தமிழக சட்டப்பேரவையிலும், காங்கிரஸ் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, பாட்டாளி மக்கள் கட்சி ஆகிய கட்சிகளின் உறுப்பினர்கள் இந்த அரசு தி.மு.க. மீது அடக்குமுறை நடத்துவதற்கும், அரசு

அலுவலர் - ஆசிரியர் பல லட்சம் பேர் அலட்சியப்படுத்தப்பட்டு மிரட்டப்படுவதற்கும் கண்டனம் தெரிவித்து, அத்துடன் அடையாள வேலை நிறுத்தத்தில் அவர்கள் 99 சதவிகிதம் பேர் ஈடுபட்டுள்ள நிலையையும் எடுத்துக்காட்டி, இவற்றைக் குறித்து விவாதிக்க வாய்ப்பு கேட்டு, அது வழங்கப்படாதது மட்டுமல்ல, அவர்கள் அனைவரும் வெளியேற்றப்பட்டு, அவர்கள் சாலை மறியலில் ஈடுபட வேண்டிய நிலை உருவாகி, அவர்கள் கைது செய்யப்பட்டு காவல் நிலைய மொன்றில் அடைத்து வைக்கவும் பட்டனர்.

அப்போது அண்ணா அறிவாலயத்தில் செய்தியாளர்களிடம் பேசிக் கொண்டிருந்த எனக்கு எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் கைதாகி, காவல் நிலையத்தில் வைக்கப்பட்ட தகவல் தெரிவிக்கப்பட்டது. நான் செய்தியாளர்களிடம், இப்போதே நான் அந்தக் காவல் நிலையம் சென்று கைதாகியுள்ள எதிர்க்கட்சித் தலைவர்களையும், உறுப்பினர்களையும் சந்திக்கப் போவதாகச் சொல்லிவிட்டு செய்தியாளர்கள் சிலரும் என்னைப் பின்தொடர்ந்து வர, காவல் நிலையம் சென்று அங்கு கைது செய்யப்பட்டு வைக்கப்பட்டிருந்த எதிர்க்கட்சியினரைச் சந்தித்து விட்டுத் திரும்பினேன். அடுத்து ஓர் அரைமணி நேரம் கழித்து காவல் நிலையத்தில் அடைக்கப்பட்டிருந்தவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

ஆனால் நான் அவர்களைப் பார்த்திட காவல் நிலையம் சென்று வந்ததை, முதலமைச்சர் ஜெயலலிதா, சட்டப் பேரவையில் எவ்வளவு நாகரிகமற்ற முறையில் விமர்சித்திருக்கிறார் என்பதை ஏடுகளில் நீயும், மற்றவர்களும் படித்திருக்கக் கூடும்.

முன்னாள் முதல்வர் கருணாநிதி, நான்கைந்து வாகனங்கள் பின்தொடர வடக்கு கடற்கரை காவல் நிலையத்துக்குச் சென்று கொண்டிருப்பதாக தகவல் வந்தது. அவர் உறுப்பினர்களை பார்த்து விட்டு அப்படியே சென்று விட்டால் பரவாயில்லை. சாலையில் உட்கார்ந்தால், அப்படியே பத்திரமாக தூக்கிக் கொண்டு போய் விட கூறியிருந்தேன். அவர் அப்படி சாகசம் செய்யவில்லை. அவர் 43 உறுப்பினர்களுடன் போட்டோவுக்கு போஸ் கொடுத்து படம் எடுத்து விட்டு அண்ணா அறிவாலயம் சென்று விட்டார்

இவ்வாறு சட்டப் பேரவையில் ஒரு முதலமைச்சர் பேசியிருப்பது, இந்த ஆட்சியின் ஜனநாயக அலங்கோல முகத்தைப்

பிரதிபலிக்கும் கண்ணாடியாகவே அமைந்திருக்கிறது. (உபயம் - பேரவைத் தலைவர் காளிமுத்து)

பாவம்! முதல்வரின் உளவுத் துறைக்கே தெரிய வில்லையாம். நான் போய் சாலை மறியல் செய்யப் போகிறேனா அல்லது காவல் நிலையத்தில் அடைபட்டிருந்த சட்டமன்ற உறுப்பினர்களைச் சந்திக்கப் போகிறேனா என்ற தகவல்!

செய்தியாளர் கூட்டத்தில் பகிரங்கமாகவே சொல்லி விட்டுத்தான், நான் கடற்கரை காமராஜர் சாலையில் காரில் செல்கிறேன். காவல் நிலையம் சென்று எதிர்க்கட்சித் தலைவர்களையும், உறுப்பினர்களையும் சந்திக்கப் போவதாக!

இது உளவுத் துறையினர் காதில் விழாத ரகசியமா? நமது உளவுத் துறை அவ்வளவு மோசமா?

இல்லை! நமது உளவுத் துறை திறமை வாய்ந்த துறைதான் - அவர்கள் நான் எங்கு போகிறேன் - எதற்காகப் போகிறேன் என்பதை அறிந்துதான் என்னைப் பின் தொடர்ந்திருப்பார்கள்!

ஆனால் ஜெயலலிதா, தான் பேரவையில் என்னைப் பற்றிக் கிண்டல் அடிப்பதற்காகவே, இப்படியொரு கற்பனையை அடிப்படையாக அமைத்துக் கொண்டிருக்கிறார்.

நான் சாகசம் எதுவும் செய்யாமலே, போட்டோவுக்கு போஸ் கொடுத்துவிட்டு சென்று விட்டதாகவும் பேரவையில் பேசியிருக்கிறார்.

நாட்டு மக்களுக்கு நன்றாகவே தெரியும். சாகசமும், போட்டோவுக்கு போஸ் கொடுப்பதும் யாருக்குக் கை வந்த கலை என்பது நாட்டு மக்களுக்கு நன்றாகவே தெரியும்.

புயல் அடிப்பது போல், ஒரே நாளில் நிகழ்ச்சிகள் நடந்துள்ளன - ஆட்சியாளரின் மூன்றாண்டு சிறை போன்ற வீண் மிரட்டல்கள் எல்லாம் தூள் தூளாகி விட்டிருக்கிறது - 28 மாவட்டங்களில் வறட்சி அறிவிப்போடு நிற்கிறது - ஆக்கப் பணிகள் தூக்கப் பணிகளாகவே இருக்கின்றன - இலவச மின்சார ரத்துப் பிரச்சினை எரிமலையாய் கனன்று கொண்டிருக்கிறது - விவசாயிகளின் விழிநீர்தான் காவிரியாய்ப் பெருக்கெடுக்கிறது - குடிநீருக்கு மக்கள் அல்லாடும் நிலை எல்லாப் பகுதிகளிலும் - வரிக்கு மேல் வரி போட்டு வாட்டும் வேதனை - வணிகப் பெருமக்களின் மீது

அடக்குமுறை - தொழிலாளர் துயருக்கோ அளவில்லை - அரசு அலுவலர், ஆசிரியர் உரிமைகள், சலுகைகள் பறிப்பு - இப்படி அலைமோதும் ஆயிரம் பிரச்சினைகளைத் திசை திருப்ப தி.மு.க. மீது கை வைத்துப் பார்க்கிறது இந்த ஆட்சி, கண்ணை மூடிக் கொண்டு!

கண்ணை மூடிக் கொண்டு கைவைப்பதால், எச்சரிக்க வேண்டியிருக்கிறது -

தேன் கூடு என்று தெரியாமல் - தி.மு.க. மீது கண்ணை மூடிக் கொண்டு கை வைத்தால்?.....

கேள்வியோடு நிறுத்துகிறேன்.

அன்புள்ள,

மு.க.

12-4-2003

2899. அறவழிப்போர் நமக்காக காத்திருக்கிறது!

உடன்பிறப்பே,

அ.தி.மு.க. ஆட்சியின் எதேச்சாதிகாரத்தைக் கண்டித்தும், இளைஞர் அணிச் செயலாளர் மு.க.ஸ்டாலின் மற்றும் க.பொன்முடி, எஸ்.ஏ.எம்.உசேன், எ.வ.வேலு, இள.புகழேந்தி, ஜெ.அன்பழகன் ஆகிய சட்டமன்ற உறுப்பினர்களை விடுவிக்கக் கோரியும் நடைபெறுகிற எழுச்சிமிகு அறப்போராட்டத்தின் காட்சிகளை தொலைக்காட்சிகளில் காணும்போது 11-4-2003 அன்று கடலூர் மாவட்டம் குறிஞ்சிப்பாடியில், தம்பி பன்னீர்செல்வம் தலைமையில் நடைபெற்ற அறப் போராட்டத்தில், கழகத்தினர் மீது போலீசார் நடத்திய தடியடிப் பிரயோகம் கொடுமையினுங் கொடுமை! தாய்மார்கள் என்றும் பாராது அவர்களைத் தரையில் உருட்டிப் போலீசார் மிதித்த குரூரச் செயல் எந்தவொரு வெறிபிடித்த துரைத்தனத்திலும் காணமுடியாத ஒன்றாகும்.

இதற்கெல்லாம் மேலாக - கொடுமையின் சிகரமாக - கடலூரில் இரண்டு கழக உடன்பிறப்புகள் தங்கள் உடலில் மண்ணெண்ணெய் ஊற்றிக் கொண்டு தீக்குளிக்க முற்படுகிறார்கள். அச்செயல் கழகம் ஏற்றுக்கொண்டுள்ள முறையல்ல. ஆனால், எண்ணெயை உடலில் ஊற்றிக் கொண்டவர்களைப் பிடித்திழுத்து அமைதிப்படுத்தி, அவர்கள் உயிரைக் காப்பாற்றிட போலீசார் முற்படாமல், அவர்களை அடித்துத் துவைத்து, கன்னங்களிலும் நெற்றியிலும் ரத்தம் கட்டுகிற அளவுக்கும், ரத்தம் சொட்டுகிற அளவுக்கும் நையப்புடைத்தது, அவர்களைத் தீக்குளித்து மடியவே விட்டிருக்கலாம் போலிருந்தது.

இவ்வளவு வன்னெஞ்சமுடையவர்களும் காவல் துறையில் இருக்கிறார்களா? ஆம், இருக்கிறார்கள்! அந்தக் கொடியவர்களைத் தொலைக்காட்சியில் காணவும் நேரிட்டுள்ளதே!

உடன்பிறப்பே, உனக்கும் சொல்கிறேன், உன் போன்ற என் உயிரனைய உடன்பிறப்புகளுக்கும் சொல்கிறேன் - உன்

உயிரும் - உன் அரும்பணியும் - இயக்கத்திற்கும், நாட்டுக்கும் நிரம்பத் தேவை என்பதை உணர்ந்தவன் என்ற காரணத்தினால் சொல்லுகிறேன் - எந்தவொரு சோதனையிலும், வேதனையிலும் தீக்குளித்தல் போன்ற தற்கொலை முயற்சிகளில் ஈடுபடாதீர்கள்.

அந்த முயற்சியில் ஈடுபட்ட என் உடன்பிறப்புகள் இருவரை, உடன்பிறப்புகளுடன் பிறவாதவர்கள், உள்ளம் இருக்க வேண்டிய இடத்தில் ஒரு பள்ளம் மட்டுமே உடையவர்கள், படுத்திய பாட்டை எண்ணும் போது இரவெல்லாம் எனக்கு உறக்கமில்லை. இன்னமும், அந்தக் கொடிய காட்சியை நினைத்து நினைத்துத் துடித்துக் கொண்டிருக்கிறேன்.

உன் போன்ற உடன்பிறப்புகளின் துடிப்பு எனக்குப் புரிகிறது - நாடு வேக வேகமாகக் காடாகிக் கொண்டு வருகிறது - நடுநிலை ஏடுகளே கூட ஒன்றிரண்டு தவிர, மற்றவை இன்றைக்கு மண்டியிட்டுக் கிடந்தால்தான் வாழமுடியும் என்கிற கோழைத் தனத்தின் முகட்டில் நிற்க வேண்டிய நிலைமைக்கு உள்ளாகியிருக்கின்றன - மாநிலத்தில் எந்தவொரு இடத்திலும், அது ஆளுநர் மாளிகையானாலும் சரி - ஆட்சி இயந்திரம் சுழல வேண்டிய கோட்டையானாலும் சரி - ஆட்சிக்கு மக்கள் குரலை எதிரொலிக்க வேண்டிய மாமன்றமானாலும் சரி - நிர்வாக அலுவல்கள் நடைபெறவேண்டிய கேந்திரங்களானாலும் சரி - எங்கு சென்றாலும் அல்லற்படுவோருக்கு அடி மேல் அடி கிடைக்கிறதே தவிர, அபயமளிப்போர் - அச்சம் தவிர்ப்போர் - மனத்துக்கு அமைதி வழங்குவோர் - யாருமில்லை!

இந்த நிலை இன்றைக்கு நெருப்பாறாகப் பெருக்கெடுத்துள்ளது - இந்த ஆற்றைக் கடக்கவும் - ஆற்றின் வேகம் தணிக்கவும் - ஏன், ஆற்றையே அகற்றவும் மகத்தான சக்தியாக விரைவில் உருவெடுக்க இருக்கிறது, அனைத்துக் கட்சிகளின் அணி வகுப்பு!

அந்த அணியைத் திரட்டுவோம் - அதற்கானப் பணியை முடுக்குவோம் - தமிழகத்தைப் பீடித்துள்ள பிணியை நீக்குவோம்.

அதற்கான அறவழிப்போர் நமக்காகக் காத்திருக்கிறது!

பாலைவனச் சுடுமணலைத் தாண்டி, தமிழகத்தைப் பசுஞ்சோலையாகக் காண விரைந்து நடத்துவோம் பயணம்!

வீழ்ச்சியுறு தமிழகத்தில் எழுச்சி வேண்டும்!
விசை ஒடிந்த தேகத்தில் வன்மை வேண்டும்!
சூழ்ச்சிதனை வஞ்சகத்தைப் பொறாமை தன்னைத்
தொகையாக எதிர்நிறுத்தித் தூள் தூளாக்கும்
காழ்ச்சிந்தை, மறச்செயல்கள் மிகவும் வேண்டும்!

அனபுள்ள,

மு.க.

13-4-2003

2900. இது இப்படியென்றால் அதுவும் அப்படித்தானோ?

உடன்பிறப்பே,

சில நாட்களுக்கு முன்பு ராஜாராம், சரவணன் என்ற இரண்டு பேர் போலீசாரால் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். அதற்குப் போலீஸ் தரப்பில் சொல்லப்பட்ட காரணங்களை நாம் மறுக்கவில்லை. அப்படியே நம்பினோம். அவர்கள் தாதாக்களின் பட்டியலில் இடம் பெற்றவர்கள் என்று போலீசார் சுட்டிக் காட்டியதோடு, போலீசாரை எதிர்த்துப் போரிட்டுத் தப்பித்துச் செல்ல முயன்றவர்கள் எனப் போலீசார் தந்த தகவலை, நாம் ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கவில்லை. ஆனால் ஓரிரு வழக்கறிஞர்கள், அந்த இருவரின் மரணத்தில் மர்மமிருப்பதாக அறிவித்து, சட்டப்படி நடவடிக்கை எடுத்து வருவதாகச் செய்திகள் வந்தன.

நமக்கும் கூட போலீசாரின் கூற்றுகளை எந்த அளவுக்கு நம்புவது என்ற சந்தேகம். தற்போது ராணி மேரிக் கல்லூரி மாணவிகள் போராட்டம் குறித்தும், அந்த மாணவிகளைக் காணச் சென்ற சட்டமன்ற உறுப்பினர்கள் மு.க.ஸ்டாலின், மற்றும் பொன்முடி, உசேன், எ.வ.வேலு, இள.புகழேந்தி, ஜெ.அன்பழகன் ஆகியோர் அந்த மாணவியர் மத்தியில் என்ன பேசினார்கள், எப்படி நடந்து கொண்டார்கள் என்பது குறித்து போலீசார் தயாரித்துள்ள தகவல் அறிக்கையையும், அதன் அடிப்படையில் போலீஸ் துறைக்கும் அமைச்சரான முதலமைச்சர் ஜெயலலிதா சட்டப்பேரவையில் ஆற்றிய உரையையும் பார்க்கும் போது, ராஜாராம், சரவணன் இருவரும் சுட்டுக் கொல்லப்பட்டதற்கு கூறப்படும் காரணங்களும்கூட நம்புதற்கிடமில்லாதவைகளோ எனத் தோன்றுவதில் ஆச்சரியமில்லை.

கல்லூரிக்குள் ஸ்டாலினும், மற்றவர்களும் சென்றபோது கதவுகள் திறந்தே இருந்தன.

இவர்களை யாரும், உள்ளே போகக் கூடாது என்று தடுத்து நிறுத்தவில்லை. அதுபோன்ற செய்தி எந்தப் பத்திரிகையிலும் அன்று வரவில்லை.

ஆனால் ஜெயலலிதாவும், அவரது போலீசும் சொல்கிறது! ஸ்டாலின் குழுவினர் தடுத்து நிறுத்தப்பட்டதாகவும் - அதையும் மீறி அந்தக் குழுவினர் காவலாளியைத் தாக்கி விட்டு உள்ளே நுழைந்து விட்டனர் என்பதாகவும்!

சரி, தடுத்து நிறுத்தியது உண்மையானால் பிறகு, அந்தக் குழுவினர் மாணவிகள் மத்தியில் சென்று உரையாற்றும்போது ஏன் குறுக்கிட்டுத் தடுக்கவில்லை?

ஸ்டாலின் என்ன பேசியதாக ஜெயலலிதா சட்டப் பேரவையிலே சொல்லியிருக்கிறார்?

போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துங்கள், கடற்கரைச் சாலையில் முதலமைச்சரின் காரை மறியுங்கள் என்று ஸ்டாலின் பேசினாராம்.

ஸ்டாலின் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் கல்லூரிக்குச் சென்றது - மாணவிகளைச் சந்தித்தது - உரையாற்றியது எல்லாம் ஏப்ரல் 8ந்தேதியன்று நடந்ததாகும். ஆனால் இவர்கள் கல்லூரிக்கு சென்றதற்கு நாலு நாட்களுக்கு முன்பே, ஏப்ரல் 3ந்தேதி யன்றே, கடற்கரை சாலையில் மாணவிகளால் முதலமைச்சர் கார் மறிக்கப்பட்டு - அவர் வேறு வழியில் செல்வதாக பத்திரிகைகளில் செய்திகள் வந்துள்ளன. எனவே, எவ்வளவு பெரிய அப்பட்டமான பொய்யை போலீசும், போலீஸ் அமைச்சரும் பொதுவில் கூறியிருக்கிறார்கள் என்பது புரிகிறதா? இல்லையா?

எனவே ராணி மேரிக் கல்லூரியில், எல்லோருடைய கண் எதிரில் நடந்தவைகளையே திரித்துக் கூறி, அரசியலாக்கிப் பழி வாங்கும் மனம் படைத்த இந்தப் போலீஸ் துறையும், போலீஸ் அமைச்சரும், தீவிரவாதிகள் ராஜாராம் - சரவணன் மரணம் குறித்து வெளியிடுகிற விபரங்களையும், சந்தேகத்துடனே தானே பார்க்க வேண்டியிருக்கிறது!

இது போன்ற செயல்கள், பொதுவாகப் போலீஸ் துறையின் மீது, மக்கள் வைக்க வேண்டிய நம்பகத் தன்மையையே கெடுத்துக் குட்டிச் சுவராக்கிவிடக் கூடும் என்பதை, அந்தத் துறையில்

இருக்கிற தூய்மையாளர்களும், மூத்த அதிகாரிகளும் சிந்தித்துப் பார்ப்பார்களேயானால், இந்த மாநிலத்தைச் சட்டம் ஒழுங்குச் சீரழிவிலிருந்து கைதூக்கிக் காப்பாற்றி விடக் கடமையாற்றி யவர்களாவார்கள்!

இல்லையேல், உம் என்றால் சிறைவாசம் - ஏன் என்றால் வனவாசம் எனத் தலைவிரித்தாடிய எதேச்சாதிகாரிகளான ரஷ்ய நாட்டு ஜார் மன்னன் - பிரஞ்சு நாட்டு லூயி மன்னன் - போன்றோர் நடத்திய ஆட்சிக்கும், இன்று தமிழகத்தில் நடைபெறுகிற ஆட்சிக்கும் சிறு துளி வேறு பாடுமில்லை யென்று வரலாறு செதுக்கி வைக்கும்.

குறிப்பு :- இராணிமேரிக் கல்லூரிக்கு வந்து, தங்களுக்கு ஆறுதல் கூறிய கழகச் சட்டமன்ற உறுப்பினர்களையும் அவர்களில் மு.க.ஸ்டாலினையும் வரவேற்றுப் பாராட்டியதோடு - அவர்கள் மீது போலீசும் - போலீஸ் அமைச்சர் அவர்களும் போடுவது வீண் பழி என்பதையும் விளக்கி, அன்று நடந்த உண்மை நிகழ்ச்சி என்ன என்பதையும் பேட்டிகள் வாயிலாக அந்தக் கல்லூரி மாணவிகளே வெளிப்படையாகச் சொல்லியிருப்பது குறிப்பிடத்தக்கது.

இராணி மேரிக் கல்லூரியின் முதல்வரை விடுப்பில் அனுப்பி வைத்ததும், கல்லூரிக்கு புதிய முதல்வரை நியமித்து அவரை விட்டுப் பொய்ப் புகார் எழுதச் செய்ததும், அதற்குப் போலீசாரின் ஒத்துழைப்பு என்ற கூட்டுச் சதி நடைபெற்றதும் - அவற்றின் தொகுப்புரையாக, போலீஸ் அமைச்சரின் பொய்யுரை அமைந் திருப்பதும் - கூர்மையாகக் கவனிக்கப்படும்போது எல்லாமே இப்படித்தானா என்ற சந்தேகம் எழுவது இயல்புதானே!

அன்புள்ள,

மு.க.

14-4-2003

2901. மடலின் நோக்கமும், மார்க்சிஸ்ட் கட்சியும்!

உடன்பிறப்பே,

தி.மு.க. ஆதரவுடன் விவசாய சங்கங்கள் நடத்தும் போராட்டத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு பங்கேற்காது என்று அக்கட்சியின் மாநிலச் செயலாளர் நண்பர் வரதராசன் அவர்கள் மதுரையில் அறிவித்துள்ளார்.

அதே போல, தி.மு.க. கூட்டும் அனைத்துக் கட்சித் தலைவர்கள் ஆலோசனைக் கூட்டத்திலும் கலந்து கொள்ளாது என்று அறிவித்துள்ளனர் அக்கட்சியின் சார்பில்!

தேசிய ஜனநாயகக் கூட்டணியிலிருந்து தி.மு.க. வெளியேறினால் தவிர, அக்கூட்டங்களில் மார்க்சிஸ்ட் கட்சி கலந்துகொள்ள முடியாது என்பது அக் கட்சி எடுத்துள்ள நிலை என்றும் விளக்கப்பட்டிருக்கிறது. இந்த விளக்கத்தையும் அறிவிப்பையும் வெளியிடும்போதே மார்க்சிஸ்ட் தலைவர்கள், தி.மு.க. இரட்டை நிலை எடுப்பதாகக் கிண்டல் செய்திடவும் தவறுவதில்லை.

சில வாரங்களுக்கு முன்பு, சட்டமன்றத்திலிருந்து பரிதி இளம்வழுதி சஸ்பெண்ட் செய்யப்பட்ட பொழுதும்; அவர் கைது செய்யப்பட்டபொழுதும் தி.மு.க., பா.ம.க., ம.தி.மு.க. ஆகிய கட்சிகளின் தலைவர்கள் கலந்துகொண்டதும், தி.மு.க. முன்னின்று நடத்தியதுமான மாபெரும் கண்டனக் கூட்டத்தில் இரண்டு கம்யூனிஸ்டு கட்சித் தலைவர்களான நண்பர் நல்லக்கண்ணு அவர்களும், நண்பர் வரதராசன் அவர்களும் கலந்து கொண்டனர். அந்தக் கூட்டத்தில் நண்பர் வரதராஜன் ஆற்றிய ஆவேச உரை, இன்னும் என் செவிகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. அப்பொழுது தி.மு.க., பா.ம.க., ம.தி.மு.க. ஆகிய கட்சிகள் தேசிய

ஜனநாயகக் கூட்டணியில் இப்போது இருப்பது போலத்தான் இருந்தன. ஆனாலும், அந்த அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் மார்க்சிஸ்ட் கட்சி கலந்து கொண்டது.

இப்போது தி.மு.க. ஆதரவுடன் விவசாயிகள் நடத்த இருக்கும் கண்டன ஆர்ப்பாட்டத்தில், மார்க்சிஸ்ட் கட்சியினர் கலந்து கொள்ளமாட்டோம் என்று அறிவித்துள்ளனர்.

ஆனால் சில மாதங்களுக்கு முன்பு, தி.மு.க. சார்புடைய தொழிற்சங்கமான தொ.மு.ச.வுடன் தோளொடு தோள் நின்று போக்குவரத்துத் தொழிலாளர் கோரிக்கைகளை வலியுறுத்தி ஒருமுகமாக நின்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி சார்புடைய சி.ஐ.டி.யு. போராடியதை மறந்துவிட முடியாது. அப்போதும் இப்போது போலவே தி.மு.க., தேசிய ஜனநாயகக் கூட்டணியில்தான் இருந்தது.

எனவே, தொழிலாளர் போராட்டத்துக்கு ஒரு நிலை - விவசாயிகள் போராட்டத்துக்கு ஒரு நிலை - என்று இரு நிலையா? என்று நாம் கேட்க விரும்பவில்லை.

பரிதி இளம்வழுதி எம்.எல்.ஏ. மீது நடவடிக்கை, கைது என்றால் ஒரு நிலை - மு.க.ஸ்டாலின் மற்றும் பொன்முடி, உசேன், எ.வ. வேலு, இள.புகழேந்தி, ஜெ.அன்பழகன் ஆகிய எம்.எல்.ஏ.க்கள் மீது நடவடிக்கை, கைது, கொலை முயற்சி வழக்கேகூட என்றால் அதற்கு வேறு நிலை - இதற்குப் பெயர் தானே இரட்டை நிலை!

இப்படி வேறுபட்ட நிலைகள் எடுப்பதற்கு, இந்த இரு நிகழ்ச்சிகளுக்கிடையே தி.மு.க.வுக்கும், மார்க்சிஸ்டுக்குமிடையே எந்த மனத் தாங்கலும் ஏற்பட்டுவிடவில்லையே!

இன்னும் சொல்லப்போனால், பேரவையில் முதலமைச்சர் ஜெயலலிதா மார்க்சிஸ்ட் கட்சியையும், மேற்கு வங்கத்தில் (Rigging) மோசடி செய்துதான் வாக்குகளைப் பெற்று அரசு அமைக்கப்படுகிறது என்று, மற்றொரு மாநில அரசு குறித்து பொறுப்பை உணராமல் கடுமையாகவும், இழிவாகவும் பேசியதற்கு தி.மு.க. சார்பாக நான் கண்டனம் தெரிவித்திருக்கிறேன்.

தி.மு.க. போலில்லாமல் (?) எப்பொழுதுமே மக்கள் பிரச்சினைகளைப் பற்றி மட்டுமே பேசக் கூடிய மார்க்சிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் முதல்வரின் பேச்சை எதிர்த்து வெளிநடப்பு

செய்ததையும் - அதைக்கூட முதல் நாளுடன் நிறுத்தாமல், மறுநாளும் மக்கள் பிரச்சினையைப் போலவே கட்சியின் மானப் பிரச்சினைக்கும் முக்கிய இடமளித்து சட்டமன்றத்தில் வந்து போராடியும் - தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்தியபோது அந்த நேரம் உள்ளேயிருந்த காங்கிரஸ் கட்சியும், பாட்டாளி மக்கள் கட்சியும், இரு கம்யூனிஸ்டு கட்சிகளின் உணர்வுகளை அலட்சியப்படுத்தவில்லை. ஒன்று சேர்ந்தே போராடின. பேரவை நிகழ்ச்சிகளை தி.மு.க. இத்தொடர் முழுதும் புறக் கணித்திருந்தமையால், வெளியில் இருந்த கழகத்தின் சார்பில் நானும், கழக உறுப்பினர்களும் காவல் நிலையம் சென்று அவர்களைச் சந்தித்தோம்.

ஆம், இந்த ஒத்துழைப்பை காங்கிரஸ் கட்சி மட்டுமல்ல. தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இருக்கிற தி.மு.க.வும், பா.ம.க.வும் ஜனநாயக உணர்வுடன் வழங்கியிருக்கின்றன.

இன்றைய நிலையிலே கூட, இன்னமும் என் மன நிறைவுக்குக் குந்தகம் ஏற்படாத அளவில்தான், மார்க்சிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் நண்பர் வரதராசன் அவர்களின் மதுரை பேட்டி அமைந் திருக்கிறது என்பேன்.

அ.தி.மு.க. அரசு எதிர்க்கட்சிகளை ஒடுக்கும் நோக்கில், தலைவர்களை நள்ளிரவில் கைது செய்வது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. பழிதீர்க்கும் நோக்குடன் தி.மு.க. இளைஞர் அணிச் செயலர் மு.க.ஸ்டாலின் கைது செய்யப்பட்டுள்ளார்.

நண்பர் வரதராசன் அவர்கள் குறிப்பிட்டுள்ள இந்தப் பிரச்சினைக்கு மட்டுமல்லாமல், எல்லாப் பிரிவு மக்களும் இன்றுள்ள அ.தி.மு.க. அரசினால் பெரும் பாதிப்புக்கு ஆளாகி, அறவழிக் கிளர்ச்சிகளில் ஈடுபட்டிருப்பதையும் நம்மைப் போலவே மார்க்சிஸ்ட் கட்சியும் வெளிப்படுத்திப் போராடிக் கொண்டிருக்கிறது.

இப்படி ஒவ்வொரு கட்சியும் தனித்து நின்று ஆளுங்கட்சியின் அராஜகத்திற்கும் மக்கள் விரோதச் செயலுக்கும் எதிரான போராட்டங்களை நடத்துவது - பொதுக் கூட்டங்கள் மூலம் மக்களைத் திரட்டுவது - ஒருபுறமிருந்தாலும், ஒரு கட்டத்தில் எதிர்க் கட்சிகள் கூட்டணியாக நின்று ஜனநாயகம் காத்திடும்

போர்க் குரல் எழுப்பக் கடமைப்பட்டவை என்பதை, மறந்து விடக்கூடாது.

எனவே, தமிழகத்தில் மக்கள் விரோத அ.தி.மு.க. அரசுக்கு எதிராகக் குரல் எழுப்பும் அரசியல் இயக்கங்கள், அந்த உணர்வை ஒருமித்த குரலில் எழுப்பிட முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தக் கூட்டு முயற்சியிலிருந்து மார்க்சிஸ்டு கட்சி ஒதுங்கி நிற்கக் கூடாது என்பது தான் இந்த மடலின் நோக்கம்.

அன்புள்ள,

மு.க.

16-4-2003

2902. வேலை நிறுத்தமும்! வேண்டுகோளும்!

உடன்பிறப்பே,

அரசு அலுவலர்கள், கோரிக்கை வலியுறுத்துகிற அறப்போராட்டமாயினும், பஸ் தொழிலாளர் நலன்களைக் காத்திட நடைபெறும் அமைதி வழிப் போராட்டமாயினும், பறித்த உரிமைகளை மீண்டும் வழங்கிட வேண்டுகிற ஆசிரியர்களின் ஜனநாயக ரீதியான போராட்டமாயினும், கும்பி எரியக் குடல் காய்ந்திட குமுறுகின்ற விவசாயிகளின் வேதனையை வெளிப்படுத்தும் போராட்டமாயினும், பல முனை வரிகளால் மட்டுமின்றி, பல்வேறு அதிகாரிகளால் படும்பாட்டை எடுத்துச் சொல்லி, மீண்டும் பழைய நிலை தொடர்வதற்கு ஆவன செய்திட வலியுறுத்தும் வணிகப் பெருமக்களின் கடையடைப்புப் போராட்டமாயினும், தொன்மைக் காலத்துக் கல்லூரியை இடிக்காதீர்கள் என்று தொடர்ந்து கேட்டு வருகிற ராணி மேரிக் கல்லூரி மாணவிகளின் போராட்டமாயினும், எல்லாப் போராட்டங்களிலுமே முதலமைச்சரோ, அல்லது யாராவது ஒரு மூத்த அமைச்சரோ, உடனடியாக சம்பந்தப்பட்டவர்களின் பிரதிநிதிகளை அழைத்துப் பேசி, உரிய தீர்வு காண்பது என்பது இந்த ஆட்சியில் குதிரைக் கொம்பாகவே ஆகி விட்டது.

தப்பித் தவறி எப்போதாவது, ஆடிப் பிறை கண்டது போல பேச்சுவார்த்தை நடைபெற்றாலும், அந்தப் பேச்சு வார்த்தையில் கண்ட ஒப்பந்தமோ, அளித்த அரசின் உறுதிமொழியோ இதுவரையில் நடைமுறைப்படுத்தப்பட்டதுமில்லை. காப்பாற்றப்பட்டதுமில்லை.

தி.மு.க. ஆட்சியில் மாநிலத்தில் எந்தப் பிரிவு மக்களின் பிரச்சினையானாலும் வீண் கௌரவம் பார்க்காமல், பிரச்சினைக்குரியவர்களை அழைத்துப் பேசி - குறிப்பிட்ட பிரிவினரின் பிரதிநிதிகளுடன் தொடர்பு கொண்டு, அவர்களுக்குரிய மரியாதையை வழங்கி - ஒரு நாள், இருநாள், ஏன் ஒரு வார காலம் கூட விவாதித்து, எந்தப் பிரச்சினைக்கும் தீர்வு காணும் வழக்கம் கடைப்பிடிக்கப்பட்டது.

ஆனால், இன்றைக்கு தமிழகம் உள்ளிட்ட அனைத்திந்திய அளவில் லாரிகள் வேலை நிறுத்தம்! அதன் காரணமாகப் போக்குவரத்துப் பாதிப்பு - பொது மக்களுக்குப் பாதிப்பு - வணிகப் பெருமக்களுக்குப் பாதிப்பு.

இந்தியாவில் இப்படிப்பட்ட லாரிகள் வேலை நிறுத்தம் என்பது இதுதான் முதன் முறையாக நடைபெறுவதல்ல - இதற்கு முன்பும் பல முறை நடைபெற்றிருக்கிறது.

தமிழ்நாட்டு அளவிலே அந்த வேலை நிறுத்தம் நடைபெற்றாலும் அல்லது இந்திய நாட்டு அளவிலே நடைபெற்றாலும், அதனால் ஏற்படும் பாதிப்புகளுக்குத் தமிழக அரசுக்கும் பொறுப்பு உண்டு என்பதை உணர்ந்து, தமிழ்நாடு லாரி உரிமையாளர் சங்கத் தலைவர் திரு. செங்கோடன் போன்றவர்களை அழைத்து நானே அவர்களுடன் நேரிடையாகப் பேச்சுவார்த்தை நடத்தி, பிரச்சினை தீர்வதற்கு வழி கண்டிருக்கிறேன்.

இப்போது நடைபெறுகிற வேலை நிறுத்தம் இந்திய அளவில் என்றாலும், தென்னிந்திய மாநிலங்களைத்தான் பெரிதும் பாதித்துள்ளது.

உதாரணமாக, ஒரு கிலோ தக்காளி ரூபாய் 3க்கு விற்றது, இப்போது 24 ரூபாய்.

கேரட் 14 ரூபாயிலிருந்து 20 ரூபாய் ஆகியுள்ளது.

50 பைசாவுக்கு ஒரு முருங்கைக்காய் என்றிருந்தது, இப்போது 3 ரூபாய் என உயர்ந்துள்ளது.

25 பைசாவுக்குக் கிடைத்த வாழை இலை இப்போது ஒரு இலை 4 ரூபாய்.

சாம்பார் வெங்காயம் 12 ரூபாயிலிருந்து 16 ரூபாய் அளவுக்கு உயர்வு.

இப்படிக் காய்கறி போன்ற பொருள்கள் கிட்டுவது கடினமாகி, கிடைத்தாலும் அதிக விலையாகி, ஏழை நடுத்தர மக்கள் சிரமத்துக்குள்ளாகியுள்ளனர்.

இந்த நிலையைத் தவிர்த்திட மாநில அரசு, முன்கூட்டியே எச்சரிக்கையுடன் செயல்பட்டு, மத்திய அரசுடனும் தொடர்பு கொண்டு ஆவன செய்திட முயற்சி எடுத்திருக்கலாம்.

இன்று வந்துள்ள செய்தியின்படி மத்திய அரசு, லாரி உரிமையாளர்களின் சங்கப் பிரதிநிதிகளை அழைத்துப் பேசுவது, வரவேற்கத்தக்கது எனினும், சற்றுத் தாமதமானது.

தி.மு.க. சார்பில் 15-4-2003 அன்று மாலை இது குறித்து பிரதமர் வாஜ்பய் அவர்களுக்கு, அவசரக் கடிதம் அனுப்பியுள்ளேன்.

அரசின் சார்பிலும் - லாரி உரிமையாளர்கள் சார்பிலும் நடைபெறும் பேச்சுவார்த்தையில், பொதுமக்களின் பாதிப்புகளையும் எண்ணிப் பார்த்து நல்ல முடிவினை விரைவில் காண வேண்டுமென்பதே நமது வேண்டுகோள்.

அன்புள்ள,

மு.க.

17-04-2003

2903. அன்றாடம் பொய்!
ஆளுக்கு ஆள் பொய்!

உடன்பிறப்பே,

கல்யாண வைபோகமே என்ற ஒரு இசைப்பாடல் கேட்டிருக்கிறோம் அல்லவா! அதுபோல இன்று நான் எழுதும் கடிதத்தின் சாராம்சம், கைதான-வைபோகமே என்று அமைந்துள்ளதை உனக்குச் சுட்டிக் காட்டும் அவசியம் எனக்கு ஏற்பட்டுள்ளது.

ஜெயலலிதா, ஆட்சிக்கு வந்ததும் வராததுமாக, நள்ளிரவில் ஆலிவர் சாலையில் வீடு புகுந்து, மாடிப்படிகள் ஏறி, கதவை உடைத்து, மாடியில் உள்ள படுக்கையறைக்குள் நுழைந்து, - என்னையும் தாக்கித் தூக்கி - என் மனைவியை அவமானப் படுத்தி - என்னைக் காத்திட முயன்ற என் கண்மணி முரசொலி மாறனையும், உருட்டிப் புரட்டி எடுத்து இன்னமும் அவர் அமெரிக்க மருத்துவமனையில் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிற நிலையை உருவாக்கி என்னை சிறையில் அடைத்தார்களே! அந்தக் கைது சம்பவத்தை நான் இப்போது சொல்ல வரவில்லை.

நான் இக்கடிதத்தில் குறிப்பிட முனைவது, அண்மையில் அதாவது 9-4-2003 இரவு, சென்னை வேளச்சேரியில் கழக இளைஞர் அணிச் செயலாளர் மு.க. ஸ்டாலின் கைது செய்யப்பட்ட விதம் - அவர் மீது வழக்கு தொடரப்பட்ட முறை - அவருடன் வேறு சில சட்டமன்ற உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டுள்ள நிகழ்வுகள் - இந்தச் சட்ட விரோதமான அரசின் முறைகேடுகளுக்குப் பயன்படுத்தப்பட்ட மனித உருவிலான கருவிகள் - இவற்றைப் பற்றித் தனித்தனியாக இல்லாவிடினும், ஒரே ஒரு குறிப்பை மட்டும் உன் போன்றோர்க்கு நினைவுபடுத்தினால், அது கடுகைத் துளைத்து ஏழ் கடலைப் புகட்டிக் குறுகத் தரித்த குறள் என்ற வர்ணனைக்கு ஒப்பான சிறப்புடையதாக அமையும்.

இதைச் சுட்டிக் காட்டுவதற்கு முன்பு, கொஞ்சம் இதன் பின்னணியை நோக்குவோம்.

செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலிருக்கிற பழம் பெரும் கம்பீரம் வாய்ந்த தலைமைச் செயலகத்தை மாற்றுவது என முதலமைச்சர் ஜெயலலிதா முதலில் அறிவித்தார். தொடக்கத்தில், மாமல்லபுரம் பக்கம் இடம் பார்த்து அதற்கான பரபரப்பு காட்டினார்கள் - அதன் விளைவாக, அந்தப் பகுதியில் உள்ள நிலங்களுக்கு, மனைகளுக்கு அசாத்திய கிராக்கி ஏற்பட்டது. சிலர் ஆதாயமும் பெற்றனர்.

அடுத்தாற்போல, சென்னைக் கடற்கரையில் உள்ள மீனவர்கள், ஏழை எளியோர், நடுத்தர வர்க்கத்தினருக்காகக் கழக ஆட்சியில் கட்டித் தரப்பட்ட குடிசை மாற்று வாரிய வீடுகளுக்குக் குறி வைத்தனர். அந்த மக்கள், எங்கள் வாழ்வு பறி போகிறதே என எரிமலையாயினர். என்ன காரணத்தினாலோ அதைக் கைவிட்டனர்.

கடைசியாக இராணி மேரிக் கல்லூரி, இவர்களின் கண்ணில் பட்டது. இந்தக் கடற்கரை சாலையில் எதையாவது ஒன்றை இடிக்க வேண்டுமென்று நினைத்தோம். டி.ஜி.பி. அலுவலகத்தை இடிக்க முனைந்தோம். ஆட்சி மாறி அந்தப் பழைய வரலாற்றுச் சிறப்பு கொண்ட கட்டிடம் தி.மு.க. ஆட்சியில் புதுப் பொலிவு பெற்றுவிட்டது. எனவே கண்ணகி சிலையை இடித்துத் தூக்கி எறிந்தோம். இப்போது இராணி மேரிக் கல்லூரியை இடித்துத் தகர்த்து விட்டால், எண்ணம் ஈடேறும் - எரிச்சலும் அடங்கும் என்று எழுந்தனர் இடித்துத் துவம்சம் செய்திட!

ஆனால் அந்தக் கல்லூரி மாணவிகள், அதற்கு இடம் தர முடியாது என அறப்போரில் குதித்தனர். அந்தக் கல்லூரியின் பழைய மாணவி 102 வயதுடைய ஆலிவ் பால் என்ற அம்மையார் என்ன - நரம்பியல் மேதை டாக்டர் ராமமூர்த்தி என்ன - மற்றும் மூத்த அரசியல்வாதிகள் - அறிஞர் பெருமக்கள் - பழம் பெரும்பண்பாடு காக்கும் பெரியோர்கள் என, இவர்கள் எல்லாம் அந்தக் கல்லூரிக்குச் சென்று, போராடிக் கொண்டிருந்த மாணவிகளுக்கு ஆறுதல் வழங்கினர்.

ஒரு நாள் அந்த மாணவிகளில் சுமார் பதினைந்து பேர், அண்ணா அறிவாலயத்துக்கு வந்து என்னைச் சந்தித்து என்னிடம் நிலையை விளக்கி ஆதரவு கேட்டனர். அந்த நிகழ்ச்சியைப் படம் எடுக்க வந்த தொலைக்காட்சிகளைக்கூட நான் அனுமதிக்க வில்லை. மாணவிகள் கொண்டு வந்திருந்த புகைப்படக்

கருவிகளில் அவர்களே படம் பிடித்துக் கொண்டனர். உங்களுக்கு எங்கள் தார்மீக ஆதரவு உண்டு என்று ஆறுதல் கூறி அனுப்பி வைத்தேன்.

அடுத்து ஒரு நாள் 8-4-2003 அன்று காலையில், சட்டமன்ற உறுப்பினர்கள் என்ற முறையில் கடமையாற்றிட மு.க. ஸ்டாலினும், அவருடன் க. பொன்முடி, எஸ்.ஏ.எம். உசேன், எ.வ. வேலு, இள. புகழேந்தி, ஜெ. அன்பழகன் ஆகிய சட்டமன்ற உறுப்பினர்களும் இராணி மேரிக் கல்லூரிக்குச் சென்றிருக்கிறார்கள்.

கல்லூரி வாசலில் காவலாளிகளில் யாருமோ - அல்லது காவல் துறை அதிகாரியோ - யாருமே தடுக்க வில்லை. தடுத்திருந்து இவர்கள் மீறிப் போயிருந்தால் அது அன்று மாலையோ அல்லது மறுநாள் காலையோ பத்திரிகைகளில் செய்தியாக வந்திருக்கும். இவர்கள் மாணவிகளால் வரவேற்கப் பட்டார்கள். மாணவிகள் குழுமியிருந்த பகுதியில் சில வார்த்தைகள் பேசினார்கள். அதாவது, எங்களின் தார்மீக ஆதரவு உங்களுக்கு உண்டு என்று!

ஜெயலலிதா சொன்னதுபோல, வேறு எந்தத் தூண்டுதல் பேச்சும் இல்லை - முதலமைச்சர் காரை இந்த வழியில் விடாமல் மறியுங்கள் என்று கூறவே இல்லை - அப்படிக் கூற வேண்டிய நிலையும் இல்லை - ஏனென்றால், அந்த மாணவிகள் ஸ்டாலினும், சட்டமன்ற உறுப்பினர்களும் அந்தக் கல்லூரிக்குச் சென்ற அந்த 8ந்தேதிக்கு முன்பே, ஏப்ரல் மூன்றாம் தேதியன்றே முதலமைச்சரின் காரை மறிக்கத் தொடங்கி, அவரும் கடற்கரை சாலையை விடுத்து வேறு வழியாகக் கோட்டைக்குச் சென்று வந்தார் என்பது ஆதாரபூர்வமான செய்திகள்.

இத்தனைக்கும் பிறகு, ஸ்டாலின் மீதும் மற்றும் ஐந்து சட்டமன்ற உறுப்பினர்கள் மீதும் 8ந்தேதி காலையில் நடந்த நிகழ்ச்சிக்கு புகார் தயாரித்து, 9ந்தேதி இரவு வீடு புகுந்து ஸ்டாலினைக் கைது செய்த அந்த கைதான-வைபோகம் பற்றித் தான் ஒன்று சொல்லப் போகிறேன்.

இராணி மேரிக் கல்லூரி முதல்வர் ராஜலட்சுமி என்பவர், 8-4-2003 அன்று 1-30 மணிக்கு கல்லூரி நுழைவு வாசலில் இருந்த மன்னர்மன்னன் என்ற ஆய்வாளரிடம் புகார் கொடுத்ததாகவும்,

அதனை அந்த ஆய்வாளர் வெகு அருகில் உள்ள மெரினா காவல் நிலையம் சென்று 1.45 மணிக்கு இ.பி.கோ. 143, 448, 353,

506(2) மற்றும் 109 சட்டப் பிரிவுகளின் கீழ் பதிவு செய்ததாகவும், குறிப்பிடப்பட்டுள்ளது. அந்தப் புகார் உடனடியாக, எழும்பூர் நீதிமன்றத்தில் குற்றவியல் நடைமுறைச் சட்டப்பிரிவுகளில் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால் 26 மணி நேரக் கால தாமதத்திற்குப் பிறகு, மறுநாள் 9-4-2003 அன்று மதியம் 2.40 மணிக்குத்தான் எழும்பூர் 13வது குற்றவியல் நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அன்று இரவு தான் ஸ்டாலின் கைதான வைபோகம்.

என் செய்வது? பொய்யான புகார் - பொய்யான வழக்கு - பொய்க்கு மேல் பொய்யாக - மு.க.ஸ்டாலின் கடலூர் சிறையில் அடைக்கப்பட்ட பிறகு மேலும் ஒரு சட்டப் பிரிவு 307ன்படி கொலை முயற்சி வழக்கு என்று!

தங்களின் உயிருக்குயிரான பழம்பெரும் நினைவுச் சின்னமான கல்லூரியைப் பழுது பார்ப்பதற்குப் பதிலாக - இடிக்கிற முயற்சியை மேற்கொண்டு - தலைமைச் செயலகம் அமைக்கப் போகிறோம் என்று தலைவிரித்தாடும் இந்த அரசின் போக்கை எதிர்த்த மாணவிகளின் அறப்போரினைக் காணவும், அவர்களுக்கு ஆறுதல் கூறவும் சென்ற குற்றத்திற்காக(?) கொலை முயற்சி வழக்கு வரையில் போய் விட்டார்கள் பார்த்தாயா?

அதுமட்டுமல்ல, அந்தக் கல்லூரியின் ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவிகள் மீதும் - விரிவுரையாளர்களான ஆசிரியர்கள் மீதும் - திருட்டு வழக்கு உட்பட பல வழக்குகள் - சட்டப் பிரிவு 379ன்படி தொடரப்பட்டுள்ளன.

பொய் சொன்ன வாய்க்குப் போஜனம் கிடைக்காது என்பது கிராமியப் பழமொழி. பொய் சொல்லி, அதனால் பிழைக்கிற பிழைப்பு இருக்கிறதே! அந்தப் பிழைப்பு நாயும் பிழைக்கும் என்று பாரதி சொன்னதைச் சொன்னால் நாய்களுக்குக் கோபம் வரும்! அன்றாடம் பொய்! ஆளுக்கு ஆள் பொய்! என்றாகி விட்டது இந்த ஆட்சியிலும் அதிகாரிகள் மட்டத்திலும்!

அன்புள்ள,

மு.க.

18-4-2003

2904. ஆட்சி மாறினும், கடத்தல் விவகாரக் காட்சி மாறவில்லை!

உடன்பிறப்பே,

1978ஆம் ஆண்டுவாக்கில் மரங்களை வெட்டிக் கடத்தல் என்று ஆரம்பமான சந்தனக் கடத்தல் வீரப்பனின் சாகசம், பின்னர் மனிதர்களைக் கடத்துதல் என்ற அளவுக்கு வளர்ந்து - தமிழகம், கர்நாடகம் ஆகிய மாநில அரசுகளும் அதிரடிப் படைகள் அமைத்து, வீரப்பனைப் பிடிப்பதற்காகக் கோடிக்கணக்கில் செலவிட்டதையும், அப்படியும் கூட கடத்தப்பட்டவர்களில் சிலரைக் காப்பாற்றி மீட்க முடியாமல் பலி கொடுக்க நேரிட்டதையும் - அரசியல் காழ்ப்புணர்ச்சிகளுக்கு அப்பாற்பட்டு சிந்திப்பவர்களால் தெளிவாக உணர முடியும்.

ஏதோ, தி.மு.க. ஆட்சியில்தான் வீரப்பனின் கடத்தல் விவகாரங்கள் நடைபெற்றதாக ஒரு பிரச்சாரம், அடிப்படை சிறிதுமில்லாது செய்யப்படுகிறது.

அது மட்டுமல்ல, அண்மையில் சட்டப் பேரவையில் வீரப்பன் விவகாரம் பற்றிப் பேசிய முதலமைச்சர் ஜெயலலிதா, நடிகர் ராஜ்குமார், தி.மு.க. ஆட்சியில் தமிழ்நாட்டு எல்லையிலிருந்து கடத்தப்பட்டார். கர்நாடக முன்னாள் அமைச்சர் நாகப்பா, கர்நாடக எல்லையிலிருந்து கடத்தப்பட்டார். கருணாநிதி ஆட்சி புரிந்தபோது தமிழ்நாட்டில் வீரப்பன் கடத்துவது சாத்தியம், எனது ஆட்சி நடைபெறும் போது தமிழ்நாட்டில் வீரப்பன் கடத்துவது அசாத்தியம் என்று பெருமைப்பட்டுக் கொண்டார்.

யாரானாலும் ஒன்றை மறந்துவிடக் கூடாது, இரண்டு மாநில எல்லைகளுக்கும் திரு. தேவாரம்தான் நாகப்பா கடத்தப்பட்டபோதும், கொல்லப்பட்ட போதும் கூட்டு அதிரடிப்படைத் தலைவராக இருந்தார்!

வீரப்பன் நடத்திய கடத்தல் சம்பவங்கள் தமிழ் நாட்டில் குறிப்பாக, ஜெயலலிதா ஆட்சியில் நடைபெற்றதற்கான பட்டியலையும் இக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளேன்.

எனவே இதில் எந்த மாநிலம், வீரப்பன் விவகாரத்தில் ஏமாந்தது என்பதோ அல்லது எந்தக் கட்சி ஆட்சியில் இந்தக் கடத்தல்கள் நடைபெற்றன என்பதோ முக்கியமல்ல!

இதோ ஆண்டுவாரியாக 1987லிருந்து வீரப்பன் கும்பல் நடத்திய கடத்தல் சம்பவங்கள் யாருடைய ஆட்சிக் காலத்தில் நடைபெற்றன என்பதை, அந்த ஆண்டுக் கணக்கை வைத்து உன் போன்ற உடன்பிறப்புகள் அறிந்து கொள்வீர்கள் என்று நம்புகிறேன்.

14-7-1987 அன்று, வீரப்பன் கும்பல் சத்திய மங்கலம் வன அலுவலர் சிதம்பரம் என்பவரைச் சுட்டுக் கொலை செய்தது.

7-8-1989 அன்று, தமிழ்நாடு பார்கூர் காவல் நிலைய எல்லையில், வனக் காவலர் பழனிச்சாமி, வாச்சர் சுப்பிரமணியம் மற்றும் மஸ்தி என்ற நபர் ஆகிய மூவரையும் வீரப்பனுடைய கும்பல் கொலை செய்தது.

4-7-1991 அன்று, பெண்ணாகரத்தில் வீரப்பன் கும்பல் ஒரு காவலரைச் சுட்டுக் கொன்றுவிட்டு, துப்பாக்கி ஒன்றையும் திருடிக்கொண்டு தப்பிச் சென்று விட்டது.

1993இல் சுரைக்காய் மடுவு என்ற இடத்தில் கண்ணிவெடிகள் வெடித்து ஐந்து காவலர்கள் உட்பட 22 பேர் மாண்டார்கள். காவல் துறை அதிகாரி கோபாலகிருஷ்ணன் படுகாயமடைந்தார்.

3-12-1994 அன்று, வீரப்பனால் காவல் துறை துணை கண்காணிப்பாளர் சிதம்பரநாதன் உட்பட மூன்று பேர் கடத்தப்பட்டனர். அவர்களை விடுவிக்க வீரப்பன் விதித்த நிபந்தனைகளாவன:-

* அதிரடிப் போலீஸ் படையை வாபஸ் பெற வேண்டும்.
* வீரப்பனைத் தேடும் பணியைக் கைவிட வேண்டும்.
* வீரப்பனுடைய அண்ணன் மாதய்யனை விடுதலை செய்ய வேண்டும்.
* வீரப்பன் சரண் அடைந்தால் அவன் மீது வழக்கு போடக் கூடாது.

இதுகுறித்து 4-12-1994 அன்று, கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சங்கர், ஐ.ஏ.எஸ்., விடுத்த அறிக்கையில் வீரப்பனால் கடத்தப்பட்டிருக்கிறவர்களுடைய உயிரைக் காப்பாற்றுவதுதான் முக்கியம். எனவே வீரப்பன் நிபந்தனைப்படி, வீரப்பனைத் தேடும் பணி நிறுத்தப்பட்டுவிட்டது என்று தெரிவித்தார்.

மீண்டும் 6-12-1994 அன்று, அரசின் சார்பில் கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் நிருபர்களிடம் பேசும்போது;

வீரப்பனிடமிருந்து எனக்குச் செய்தி வந்துள்ளது. அந்தச் செய்தியிலே வீரப்பன் கேட்டுக்கொண்டபடி வீரப்பனோ, அவரது பிரதிநிதியோ என்னைச் சந்திக்கலாம். அவருக்கு எந்த ஆபத்தும் ஏற்படாது என்று உறுதி அளிக்கப்படுகிறது. மேலும், பணயமாக பிடித்து வைக்கப்பட்டிருப்பவர்களுக்குத் தேவையான உணவுப் பொருளைக் கொண்டு செல்ல தடை எதுவும் இருக்காது. அதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டு விட்டன. வீரப்பனுடைய ஆட்கள் மலைக் கிராமங்களுக்கு நேரிலே வந்து, எவ்விதத் தடையும் இல்லாமல் உணவுப் பொருளை எடுத்துச் செல்லலாம்.

நிருபர் :- வீரப்பனுடைய தூதுவன் வர, அரசுத் தரப்பில் வாகன வசதி செய்து கொடுக்கிறீர்களே, இந்த நிலையிலே தூதுவன் துப்பாக்கியுடன் வந்து பேசுகின்றானே, இது சரியா?

கலெக்டர் :- அவர் சொந்த பாதுகாப்புக்கு துப்பாக்கியுடன் வருகிறார். காரணம், அவர் காட்டுக்குள் போகிறார், வருகிறார், எனவே துப்பாக்கி ஏந்துகிறார் என்று தெரிவித்தார்.

இந்தப் பிரச்சினையிலே அப்போது தலைமைச் செயலாளராக இருந்த திரு. அரிபாஸ்கர், ஐ.ஏ.எஸ்., செய்தியாளர்களிடம் கூறும்போது, வீரப்பனுடைய தளபதி

பேபி இரண்டு கோரிக்கைகளைச் சொன்னார். ஒன்று, வீரப்பன் கோஷ்டியினர் காட்டுக்குள் உணவு கொண்டு வரும்போது, எவ்வித துன்புறுத்தலுக்கும் ஆளாகக் கூடாது. மற்றொன்று, சிறையிலே உள்ள வீரப்பன் கோஷ்டியை தளபதி பேபி பார்க்க அனுமதிக்கப்பட வேண்டும். இந்த நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டால், மற்ற கோரிக்கைகள் பிறகு தெரிவிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார். இந்தக் கோரிக்கைகளை அரசு பரிசீலனை செய்து வருகிறது. இப்போது அரசினுடைய மிக முக்கியமான முன்னுரிமை கடத்தப்பட்ட போலீஸ் அதிகாரிகளையும், மற்றவர்களையும் மீட்பதுதான். விசேஷ அதிரடிப் படையின் பணிகள் நிறுத்தப்பட்டு விட்டன. இந்தப் படைகளை அனுப்பினால் வீரப்பன் போலீஸ் அதிகாரிகளையும், மற்றவர்களையும் கொன்றுவிடக் கூடும். பேச்சுவார்த்தை முடிந்து, மீண்டும் அவர்கள் காட்டுக்குள் செல்ல முழு பாதுகாப்பும் அளிக்கப்படும் என்றார்.

இதற்குப் பிறகு வீரப்பன் தம்பி அர்ஜுனன் செய்தியாளர்களிடம் சொன்னது; நாங்கள் சரண் அடைய மாட்டோம். தண்டனை அனுபவிக்க மாட்டோம். எங்களுக்கு மன்னிப்பு கொடுத்து, ஜனாதிபதி எழுத்து மூலம் உத்தரவு கொடுக்க வேண்டும். அப்போதுதான் ஆயுதங்களை ஒப்படைப்போம் என்பதாகும்.

இதற்குப் பிறகு மீண்டும் தலைமைச் செயலாளர் அரிபாஸ்கர் கூறியதாவது :- ஒரு அடிப்படை விஷயத்தை நாம் மறந்துவிடக் கூடாது. இது உயிர்கள் சம்பந்தப்பட்ட விஷயம். போலீஸ் துணை கண்காணிப்பாளர் மற்றும் இரண்டு நபர்களை நாம் மீட்க வேண்டும்.

செய்தியாளர் :- வீரப்பன் இருக்குமிடம் அரசுக்குத் தெரியுமா?

தலைமைச் செயலாளர் :- வீரப்பன் இருக்கும் இடம் அரசுக்குத் தெரியும். ஆனால் 3 பேர்களையும் மீட்க அரசு பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கிறது.

சட்டப் பேரவையில் அப்போது முதல் அமைச்சர் ஜெயலலிதா பேசியதாவது:- வீரப்பனிடம் 3 உயிர்கள் சிக்கிக் கொண்டிருந்த சூழ்நிலையில், அந்த வீரர்களுக்கு எந்த ஆபத்தும் ஏற்படக் கூடாது என்கிற எண்ணத்தினால்தான்

காவல் துறையினரையும், மாவட்ட ஆட்சித் தலைவரையும் தகுந்த எச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தினேன். மாவட்ட ஆட்சித் தலைவர் எனது ஆணையின் பேரில் பேச்சுவார்த்தை நடத்த ஆரம்பித்தார். மூன்றாவது நாளில் வீரப்பன் கூட்டத்தைச் சேர்ந்த பேபி மாவட்ட ஆட்சித் தலைவரைச் சந்தித்துப் பேசினான். பேபி, பின்னர் வீரப்பனின் மனைவியையும், வேறு சிலரையும் பாதுகாப்பாக வைத்துள்ள இடத்திற்குச் சென்று பார்த்து விட்டு வந்தான். வீரப்பனின் தம்பி அர்ச்சுனன் 12-12-1994 அன்று மருத்துவ சிகிச்சை செய்து கொள்வதற்கும், வீரப்பனின் நிபந்தனைகளைத் தெரிவிப்பதற்கும் வந்தான். சிறையில் அடைக்கப்பட்டிருக்கின்ற அவனது சகோதரன் மாதையனைப் பார்ப்பதற்கும், தனது காயத்திற்கு மருத்துவச் சிகிச்சை செய்து கொள்வதற்கும் அர்ச்சுனனுக்கு அனுமதி வழங்கப்பட்டது. நாம் வெளிப்படுத்துகின்ற எந்தச் செய்தியும் மேற்கொண்டுள்ள பணிக்கு இடையூறாகப் போவது மட்டுமின்றி, மூன்று பேர்களின் உயிருக்கும் ஆபத்தை ஏற்படுத்திவிடும் என்கின்ற எச்சரிக்கை உணர்வும்தான் பல செய்திகளை நாங்கள் வெளியிட முடியாமல் போனதற்குக் காரணம்.

இவ்வாறு ஜெயலலிதா 20.3.1995 அன்று பேரவையிலே பேசினார்.

மீண்டும் 1-1-1995 அன்று ஈரோடு மாவட்டம், பர்கூர் காவல் நிலைய எல்லையில் வீரப்பன் கும்பல் ராஜேந்திரன், சுப்பிரமணியம் என்ற இரு காவலர்களையும், உடையார் என்ற வாட்சரையும் கடத்திச் சென்றது.

17-2-1996 அன்று ஈரோடு மாவட்டம், ஆசனூர் காவல் நிலைய எல்லையில் வீரப்பன் கும்பல் மறைந்திருந்து நடத்திய துப்பாக்கிச் சூட்டில், காவல் துறை கண்காணிப்பாளர் தமிழ்ச்செல்வன் காயமடைந்து அவரது கை விரல்கள் துண்டிக்கப்பட்டன. செல்வராஜ் என்ற தலைமைக் காவலர் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தார்.

எனவே, வீரப்பனின் கடத்தல் நடவடிக்கைகள் எல்லா ஆட்சியிலும் நடைபெற்றிருக்கின்றன. மேலே சொன்ன அனைத்துக் கடத்தல் சம்பவங்களும் தமிழ்நாட்டில் நடந்தவை தான். யாருடைய ஆட்சியில் இல்லை என்று யாரும் தனிப்பட்ட முறையில் பெருமைப்பட்டுக்கொள்ள முடியாது.

ஜெயலலிதா ஆட்சிப் பொறுப்பேற்றதும், 2001 ஆம் ஆண்டு ஜூன் திங்களில் அதிரடிப்படையை தேவாரம் தலைமையிலே மாற்றி அமைத்தார். இந்த அதிரடிப் படைக்கு செய்யப்பட்ட செலவினத்தை ஒப்பிட்டு நோக்குவதற்காக, அண்மையில் சட்டப் பேரவையில் முதலமைச்சர் ஜெயலலிதா வெளியிட்ட புள்ளி விவரங்களை அப்படியே தருகிறேன்.

1999-2000ல் 2 கோடியே 27 லட்சம் ரூபாய், 2000-2001இல் 3 கோடியே 36 லட்சம் ரூபாய், 2001-2002ல் 9 கோடியே 47 லட்சம் ரூபாய், 2002-2003ல் 7 கோடியே 62 லட்சம் ரூபாய்.

ஆட்சிகள் மாறின - அதிரடிப்படை தலைவர்கள் மாறினார்கள் - ஆனால் வீரப்பன் கடத்தல் விவகாரக் காட்சிகள் எந்த ஆட்சியிலும் மாறவில்லை என்பதை விளக்கவே இக்கடிதம்!

அன்புள்ள,

மு.க.

19-4-2003

2905. உள்ளத்தில் பதிய வைத்து ஊர் அறிய விளக்கிடுக!

உடன்பிறப்பே,

தீவிரவாதிகள், பயங்கரவாதிகள் ஆகியோர் செயல்களால், வன்முறைக் கலவரங்கள் - சாதிக் கலவரங்கள் - மதக் கலவரங்கள் போன்ற கலவரங்களுக்கு தூபம் போடப்படுகின்றன என்பது மறுக்க முடியாத உண்மை. அவற்றில் ஈடுபடுவோரைக் கடுமையான முறையில் தண்டிப்பது என்ற நிலையினால் அவற்றைத் தடுத்து நிறுத்தி விட முடியும் என்ற நம்பிக்கையுடன், தீவிரமான சட்டங்கள் இயற்றப்படுவதும், அவை எந்தக் குறிக்கோளுடன் கொண்டுவரப்பட்டதோ அதற்கு மாறான விளைவுகளை ஏற்படுத்துவதும் நடைமுறையில் கண்ட உண்மையாகும்.

தமிழ்நாட்டில் கழக ஆட்சியில்கூட, கோவை போன்ற இடங்களில் மதக் கலவரம் பூதாகாரமாக வெடித்துக் கிளம்பிய போது அதைத் தடுக்கவும் - தணிக்கவும் - என்ற நோக்குடன் தீவிரச் சட்டம் ஒன்று கொண்டுவரப்பட்டு, பின்னர் எதிர்க்கட்சிகளின் எதிர்ப்புக்கும், கருத்துக்கும் மதிப்பளித்து அச்சட்டத்தைக் கழக அரசு கைவிட்டு விட்டதென்பதும் அனைவரும் அறிந்த உண்மையாகும். நாங்கள் கொண்டு வந்தால் கொண்டு வந்ததுதான், அதைக் கைவிட முடியாது என்று மமதையுடன் மல்லுக்கு நிற்காமல் மாற்றுக் கருத்துக்கு மதிப்பளித்து, அதில் உள்ள உண்மையை உணர்ந்து அச்சட்டத்தைக் கழக அரசு, தூக்கிப் போட்டு விட்டது.

அத்தகைய வரலாறும், அனுபவமும் நமக்கு உண்டு என்ற காரணத்தினால்தான், இப்போது தமிழ்நாட்டில் ஜெயலலிதா அரசில் தவறான முறையில் - பழிவாங்கும் நோக்குடன் பயன்படுத்தப்பட்டு - தம்பி வைகோ - நண்பர் நெடுமாறன் - நக்கீரன் கோபால் ஆகியோர் மீதும், அவர்களையன்னியில் 20க்கு மேற்பட்ட அரசியல்வாதிகள் மீதும், நடைபெற்றுள்ள பொடா

சட்டத்தின் தாக்குதலை நாம் வன்மையாக எதிர்ப்பதுடன், இந்த மாநில அரசின் கையில் உள்ள அந்தப் பழிவாங்கும் ஆயுதத்தை இந்திய நாடு முழுமைக்கும் திரும்பப் பெறுவதன் மூலம், மனித சுதந்திரத்தைக் காப்பாற்றுங்கள் என்று மத்திய அரசை வலியுறுத்துகிறோம்.

தீவிரவாத வன்முறைகளை என்றைக்கும் தி.மு.க. ஆதரித்ததில்லை. எதிர்த்தே வந்துள்ளது. தி.மு.க. ஆளுங்கட்சியாக இருந்த காலகட்டங்களிலும், தீவிரவாதிகளின் வன்முறைகளுக்குத் துளியும் இடம் கொடுத்ததில்லை.

தமிழ் ஈழப் போராளி பத்மநாபாவும், அவரது நண்பர்கள் பத்துக்கு மேற்பட்டோரும் சென்னை நகரில் விடுதலைப் புலிகளால் கொல்லப்பட்ட பிறகு அடுத்து இரண்டு மாதத்திற்குள் அன்றைய எதிர்க்கட்சித் தலைவியாக இருந்த ஜெயலலிதா கூட, விடுதலைப் புலிகள் இப்போது சரியாகி விட்டார்கள். அவர்களுக்கு தமிழக அரசும் கருணாநிதியும் உதவி செய்ய வேண்டும். தமிழ் மக்களும் அவர்களை ஆதரிக்க வேண்டும் என்று ஆங்கிலப் பத்திரிகைகளில் சிறப்புப் பேட்டி கொடுத்தார். எனினும், அந்த வன்முறையை தி.மு.க. ஆதரிக்கவில்லை. சகோதர யுத்தம் கூடாது என்றே கூறியது.

ஆனால் இப்போது வேதனையான வேடிக்கை என்னவென்றால், தி.மு.க. ஆட்சி என்னவோ தீவிரவாதிகளை அனுமதித்துக் கொண்டிருந்தது போலவும் - அ.தி.மு.க. ஆட்சியில்தான் வீரப்பனின் ஆட்களும், மற்றும் தீவிரவாதிகளும் அதிகமாகக் கைது செய்யப்பட்டார்கள் என்றும் கருத்துப்பட ஒரு தவறான தகவலை முதலமைச்சர் பொறுப்பிலிருக்கும் ஜெயலலிதா, சில நாட்களுக்கு முன்புகூட சட்டப் பேரவையில் காவல் துறை மானிய விவாதத்தின் போது வெளியிட்டிருக்கிறார்.

அதாவது, அ.தி.மு.க. அரசு பொறுப்பேற்ற பிறகு தான் வீரப்பனின் ஆட்கள் பிடிபட்டிருக்கிறார்கள் என்றும், வீரப்பனுடன் தொடர்புகொண்டிருந்த தீவிரவாதிகள் பிடிபட்டிருக்கிறார்கள் என்றும், இவையெல்லாம் தன்னுடைய சாதனைகள் இல்லையா என்றும் ஜெயலலிதா கேட்டிருக்கிறார்.

உடன்பிறப்பே, பிடிபட்டதும், கைது செய்யப்பட்டதும் உண்மையல்ல என்று நான் கூறவில்லை. அது சாதனையல்ல என்றும் நான் சாதிக்க விரும்பவில்லை. ஆனால் அதற்காக, தி.மு.க. ஆட்சியிலே வீரப்பனின் ஆட்கள் யாருமே கைது செய்யப்பட வில்லை - தீவிரவாதிகளும் கைது செய்யப்பட வில்லை - என்பது போல தெரிவிக்கப்படும் உள்நோக்கம் கொண்ட குற்றச்சாட்டுக்கு விடையும், விளக்கமும், அளிக்கவே, சில புள்ளி விபரங்களைத் தருகிறேன். ஒப்பிட்டுப் பார்த்திட உதவிடும் என்பதற்காக!

1991ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் முதல் 1996 மே திங்கள் வரையில், ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் கைது செய்யப்பட்ட வீரப்பனின் ஆட்கள் எண்ணிக்கை 121 பேர்!

1996 ஜூன் திங்கள் முதல் 2000ஆம் ஆண்டு நவம்பர் 13 வரையில் தி.மு.க. ஆட்சியில் கைது செய்யப்பட்ட வீரப்பனின் ஆட்கள் எண்ணிக்கை 135 பேர்!

இப்புள்ளி விபரத்தை நான் ஆட்சியிலிருந்தபோதே சட்டப் பேரவையில் வெளியிட்டிருக்கிறேன்.

அடுத்து, தீவிரவாதிகள் மீது எடுத்த நடவடிக்கைகளில் - தி.மு.க. ஆட்சி என்றைக்குமே தயக்கம் காட்டியதில்லை என்பதற்கான சான்றுகள் வருமாறு :- டி.என்.ஆர்.டி. எனப்படும் தமிழ் தேசிய மீட்புப் படை மற்றும் டி.என்.எல்.ஏ. எனப்படும் தமிழ்நாடு விடுதலைப் படை ஆகிய இந்த இயக்கங்கள் 1984-85ஆம் ஆண்டிலிருந்து, (எம்.ஜி.ஆர். ஆட்சியிலிருந்து) தமிழகத்தில் இருக்கின்றன. அப்போதெல்லாம் அந்த இயக்கத்தினர் அதிகம் பேர் கைது செய்யப்படவில்லை.

ஆனால் தி.மு.க. ஆட்சிக்காலத்தில் 1999-2000ஆம் ஆண்டில் தமிழ் தேசிய மீட்புப் படையின் சார்பில் 25 பேரும் - தமிழ்நாடு விடுதலைப் படையின் சார்பில் 141 பேரும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்கள். இந்த இரு தீவிரவாத இயக்கங்களையும் தடை செய்யவேண்டுமென்று தி.மு.க. ஆட்சியில் மத்திய அரசுக்கு 16-12-2000 அன்று கடிதம் எழுதப்பட்டது.

அதற்கு மத்திய அரசு 3-1-2001 அன்று எழுதிய பதிலில், வேறு சில விபரங்களைத் தமிழக அரசிடம் கேட்டிருந்தது.

அந்த விபரங்களும் உடனடியாக மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

14.5.2001 அன்று ஆட்சி மாறியது - பின்னர் அ.தி.மு.க. ஆட்சியில் ஏற்கனவே நாம் அளித்த விவரங்களையும் வைத்து, அந்த இயக்கங்கள் தடை செய்யப்பட்டன.

இஃதன்னியில் ஒன்றை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டியது முக்கியம்.

1991 ஆகஸ்டு முதல் 1996 மே வரையில் ஜெயலலிதா ஆட்சியில் தமிழக எல்லையிலே மாத்திரம் வீரப்பன் கும்பலால் கொலை செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 63 பேர்!

1996 ஜூன் முதல் 13-11-2000 வரையில் தி.மு.க. ஆட்சிக் காலத்தில் வீரப்பன் கும்பலால் கொலை செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 3 பேர்!

இந்த ஒப்பீடுகளை உன் உள்ளத்தில் பதிய வைத்துக் கொண்டால், ஊரார் அறிய விளக்குவதற்குப் பயன்படுமென்பதால்தான், நேற்றும், இன்றும் எழுதிய இரு கடிதங்களில் இந்த விபரங்களைக் குறிப்பிட்டிருக்கிறேன்.

அன்புள்ள,

மு.க.

20-4-2003

2906. விழிநீர் துடைத்திட விரைந்தெழுவீர்!

உடன்பிறப்பே,

வரும் 23ஆம் தேதியன்று அனைத்துக் கட்சிகளின் ஆதரவுடன், அந்தக் கட்சிகளின் முன்னணியினர் கலந்து கொள்ளும் கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அலுவலகங்களின் முன்பு நடைபெற இருக்கிறது.

இந்த ஆர்ப்பாட்ட அறப்போராட்டத்தின் குறிக்கோள், தி.மு.க. ஆட்சிக்காலத்தில் 13 ஆண்டுகளுக்கு முன்பு வழங்கப்பட்ட இலவச மின்சாரத்தை விவசாயிகளுக்கு ரத்து செய்யக் கூடாது என்று வலியுறுத்துவதாகும்.

பொதுத் தேர்தல் நேரத்திலும், இடைத்தேர்தல்கள் நடைபெற்ற அண்மைக் காலத்திலும், மின்சாரக் கட்டணங்கள் உயர்த்தப்பட மாட்டாது என்றும், இலவச மின்சாரம் விவசாயிகள் எவருக்கும் ரத்து செய்யப்பட மாட்டாது என்றும் முதலமைச்சர் ஜெயலலிதாவும் மற்ற அமைச்சர்களும் அளித்த வாக்குறுதிகள் வெறும் வெத்து வேட்டுகளாகி, ஏற்கனவே வறட்சிப் பிடியில் சிக்கியுள்ள உழவர்கள் சமுதாயம் பெருங் கொடுமைக்கு உள்ளாகியிருக்கிறது.

இந்த இருட்டிலிருந்து விவசாயிகளை மீட்டு ஒளி வழங்கத்தான், அனைத்துக் கட்சிகளின் ஆதரவுடன் விவசாயிகளின் அணிவகுப்பு வருகிற 23ஆம் தேதி மாவட்ட ஆட்சித் தலைவர்களின் அலுவலகங்களின் முன்பு கறுப்புக் கொடி ஏந்துகிறது.

கழக உடன்பிறப்புகளை கேட்டுக் கொள்கிறேன், அன்றைய தினம் கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்கிற நீங்கள் கறுப்புச் சட்டைகளோ அல்லது கறுப்புத் துண்டுகளோ, பெண்டிர்களாயின் கறுப்பு ஆடைகளோ அணிந்திட வேண்டுமென்று!

இது தேர்தலுக்கான கூட்டணி சேரும் முன் அறிவிப்புப் போராட்டமல்ல. தேர்தல் நேரத்தில் அணிகள் எப்படியெப்படியோ

அமையக் கூடும். நண்பர் சிதம்பரம் போன்றவர்கள் அடிக்கடியும், அண்மையில் நேற்றையதினமும் கூறியுள்ளது போல தி.மு.க., அ.தி.மு.க. அல்லாத மூன்றாவது அணி கூட அவரது முயற்சியால் அமையக் கூடும்.

எனவே, 23ந் தேதி அமைகிற இந்த கறுப்புக் கொடி ஆர்ப்பாட்ட அணி, எந்த வகையிலும் தேர்தலுக்குத் தொடர்புடையதல்ல. தேம்பியழும் விவசாயிகளுக்குத் தேறுதல் வழங்கிட - களம் இறங்கிடும் அணி என்பதைக் கழக உடன்பிறப்புகள் மறந்திட வேண்டாம்.

13 ஆண்டுக் காலத்திற்கு மேலாக, அனுபவித்து வந்த இலவச மின்சாரத்தால் பயனடைந்த விவசாயப் பெருங்குடி மக்கள், அதனை வழங்கிய தி.மு.க. ஆட்சியை நன்றியுடன் நினைத்தார்களோ இல்லையோ, இன்று அந்தச் சலுகை பறிபோகிறதே என்கிறபோது நம்மைப் போன்ற கட்சிகளைப் பார்த்துத்தான் கண் கலங்குகிறார்கள். அவர்களின் கவலையைத் துடைக்க அமைந்திடும் களம்தான், அனைத்துக் கட்சிகளின் அணிவகுப்பு 23ஆம் தேதி மாவட்டத் தலைநகரங்களில் கறுப்புக் கொடி ஏந்தும் களம்!

இதுபற்றிய விபரங்களையும், கழகச் சார்பில் கலந்து கொள்வோர் பெயர்கள் - ஊர்கள் ஆகியவற்றையும் நமது விவசாய அணிச் செயலாளர் தம்பி கே.பி.இராமலிங்கம் அறிவித்துள்ளார். அதேபோல, ஒவ்வொரு கட்சியின் சார்பிலும் கலந்து கொள்வோர் விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, உழவர்களுக்கான இந்த அறப்போரில் உடன்பிறப்புகள் பல்லாயிரக்கணக்கில் கலந்து கொண்டு, தோழமை உணர்வுடன் அனைத்துக் கட்சியினரையும் அரவணைத்து,

விவசாயிகளின் விழிநீர் துடைத்திட,
விரைந்தெழுவீர் என வேண்டுகிறேன்.

அன்புள்ள,

மு.க.

21-4-2003

2907. ஓரங்க நகைச்சுவை நாடகம்!

உடன்பிறப்பே,

இன்று இந்த ஓரங்க நாடகம், படித்துச் சுவைத்திடுக!

(நீதிமன்றத்தில் பெருங்கூட்டம் காத்துக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு நீதிபதி, மாண்புமிகு நீதிபதி, மாண்புமிகு நீதிபதி என்று மூன்று முறை குரல் ஒலிக்கவே, எல்லோரும் எழுந்து மரியாதை செலுத்துமுகத்தான் நிற்கிறார்கள். நீதிபதி வருகைதந்து, தனது ஆசனத்தில் அமருகிறார். அமர்ந்தவர் எதிரே உட்கார்ந்துள்ள வழக்கறிஞர்களை ஒரு பார்வை பார்க்கிறார். உட்கார்ந்த வழக்கறிஞர்கள், கோர்ட்டில் இடமில்லாமல் நின்ற வழக்கறிஞர்கள் நீதிபதியையே அமைதியாகக் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.)

இன்னும் அரசு வழக்கறிஞர் வரவில்லையோ? என்று நீதிபதி மெல்லிய குரலில் வினவுகிறார்.

அரசு வழக்கறிஞரல்லவா? அதனால் முன்னால் ஒருவர் பின்னால் ஒருவர் கோப்புகளைத் தூக்கிக் கொண்டு வர, குறித்த காலத்திற்கு ஐந்து நிமிடம் தாமதமாக வந்து இருக்கையில் அமருகிறார்.

சாரி! ஐந்து நிமிடம் லேட்டாயிடுத்து!

நீதிபதி கொஞ்சம் ஹாஸ்ய உணர்வு கொண்டவர். சிரித்துக் கொண்டே சொன்னார்.

சாரின்னா பத்து நிமிடம் கூட லேட் ஆகலாம்! நீங்க வேஷ்டிதானே, சீக்கிரம் வந்திருக்கலாமே!

நான் லேட்டா வந்ததாலேதான் இந்த ஜோக்கை அனுபவிக்க முடிஞ்சது!

(கோர்ட்டே சிரிக்கிறது.)

நீதிபதி:- சரி!.... எதிர்தரப்பு வக்கீல்! என்ன உங்க வாதம்?

எதிர்தரப்பு வக்கீல் :- என் கட்சிக்காரர் கந்தசாமி மேல போலீஸ் போட்டிருக்கிற கொலை முயற்சி வழக்கு சுத்தப் பொய்!

நீதிபதி :- வழக்கு போட்டிருப்பதே பொய்யா? அல்லது குற்றச்சாட்டு பொய்யா?

எதிர்தரப்பு வக்கீல் :- வழக்கு போட்டிருப்பது உண்மை! அந்தக் குற்றச்சாட்டுதான் உண்மையல்ல, பொய் என்கிறேன்.

நீதிபதி :- எந்த ஆதாரத்தில் பொய் என்கிறீர்கள்?

எதிர்தரப்பு வக்கீல் :- கொலை முயற்சியில் என் கட்சிக்காரர் ஈடுபட்டார் என்பது குற்றச்சாட்டு! அதுவும் போலீஸ்காரரை, கொல்ல முயன்றார் என்பதாகக் குற்றச்சாட்டு! அதுதான் பொய் என்கிறேன்.

அரசு வக்கீல் :- நீதிபதி அவர்களே! என் நண்பர் எதிர்தரப்பின் வழக்கறிஞர் சொல்வது போல கொலை முயற்சி என்பது எப்படிப் பொய்யாகும்? கொலைக்கு முயற்சி மேற்கொண்டவர், இதோ இந்த கந்தசாமி! கொலைக்கு உள்ளாக இருந்தவர், இதோ இந்த கான்ஸ்டபிள் கருத்தசாமி! இருவரும் எப்படிப் பொய் இல்லையோ! அதுபோலக் கொலை முயற்சிக் குற்றச்சாட்டும் பொய் இல்லை.

நீதிபதி:- மிஸ்டர் கான்ஸ்டபிள் கருத்தசாமி! உம்மைக் கொலை செய்ய மிஸ்டர் கந்தசாமி முயற்சி செய்தது உண்மையா?

கருத்தசாமி :- சத்தியமாக உண்மைங்க! அரிச்சந்திரன் மேல் ஆணையா சொல்றேன், உண்மைங்க!

நீதிபதி :- அதாவது உம்மை, கந்தசாமி கொலை செய்ய முயற்சித்தார்! இல்லையா?

கருத்தசாமி :- ஆமாம், கனம் நீதிபதி அவர்களே! என் மீது பாய்ந்து பிராண்டி, குதறிக் கொலை செய்ய முயன்றார்.

நீதிபதி :- எங்கே; உம்மை அவர் பிராண்டிய இடத்தைக் காட்டும்! காயம் ஏதாவது இருக்கிறதா?

அரசு வக்கீல் :- கனம் நீதிபதி அவர்களே! காயம் தனியாகவா இருக்க வேண்டும்? ஞானிகளும், சித்தர்களும் சொல்லியிருக்கிறார்கள், இந்த உடம்பே ஒரு காயம் என்று!

நீதிபதி :- ஓ! நீங்கள் அப்படிப் போகிறீர்களா? இதற்குக் குற்றம் சாட்டப்பட்ட கந்தசாமியின் வக்கீல் எடுத்து வைக்கும் வாதம் என்னவோ?

எதிர்தரப்பு வக்கீல் :- இந்த உடம்பே காயம் என்று அரசு வக்கீல் சொன்னதை ஏற்றுக் கொண்டு, மற்றொன்றும் சொல்கிறேன்....

நீதிபதி :- என்ன?

எதிர்தரப்பு வக்கீல் :- உடம்பே காயம் என்று சொன்ன ஞானிகளும் சித்தர்களும், காயமே இது பொய்யடா என்றும் கூறி யிருக்கிறார்கள். அதனால் காயம் என்பதும் பொய்! இந்த வழக்கும் பொய்!

நீதிபதி :- நீங்கள் சொல்வதே மெய் - அதனால் குற்றம் நிரூபிக்கப்படவில்லை.

எதிர்தரப்பு வக்கீல் :- கனம் நீதிபதி அவர்களே! குற்றமே நடக்கவில்லை. நடந்தால் தானே நிரூபிக்கப்படுகிற பிரச்சினையே எழும்!

(நீதிபதி, எழுந்து நிற்கிறார். பிறகு சேம்பருக்குள் நுழைகிறார். அலமாரியில் உள்ள சட்ட புத்தகங்களைப் புரட்டுகிறார். அந்தப் புத்தகங்களுக்கிடையில் அறிஞர் அண்ணா எழுதிய நீதி தேவன் மயக்கம் என்ற புத்தகம் இருக்கிறது. தீர்ப்பு கூற வேண்டியதை மறந்து விட்டு, நீதிபதி அந்தப் புத்தகத்தில் ஆழ்ந்து விடுகிறார்)

உடன்பிறப்பே, ஒவ்வொரு நாளும் கடிதமோ, கேள்வி பதிலோ என்று எழுதி எழுதி, எனக்கும் அலுத்துப் போயிற்று! உனக்கும் அலுத்துப் போகக் கூடாதே என்று தான் சற்று வித்தியாசமாக இது ஒரு சிறிய ஓரங்க நாடகம்!

அன்புள்ள,

மு.க.

23-4-2003

2908. உணர்வு எது? வெறி எது? உணர்வீரே!

உடன்பிறப்பே,

சட்டமன்றத்தில் - பாராளுமன்றத்தில் பயன்படுத்தப்படக் கூடாத மரபு மீறிய வார்த்தைகள் என்று சிலவற்றை, அவைத் தலைவர்கள் அனுமதிப்பதில்லை - யாராவது ஒரு உறுப்பினரோ அல்லது அமைச்சரோ அத்தகைய சொற்களைப் பயன்படுத்தி விட்டாலும், அந்த வார்த்தை அவைக் குறிப்பில் ஏறாது என்று அவைத்தலைவர் அறிவித்து விடுவார்.

இப்போதெல்லாம் நமது பேரவையில் ஆளுங் கட்சியினரோ அல்லது ஆளுங்கட்சிச் சார்பினரோ அல்லது முதலமைச்சரோ, அமைச்சர்களே இதற்கெல்லாம் விதிவிலக்காக விளங்குகிறார்கள்.

காவிரிப் பிரச்சினையில் தி.மு.க. ஆட்சி துரோகம் செய்துவிட்டது என்று முதலமைச்சர் சொன்னால், அது அவைக் குறிப்பில் ஏறுகிறது.

இல்லை! அ.தி.மு.க. ஆட்சிதான் துரோகம் செய்துவிட்டது என்று எதிர்க்கட்சித் துணைத் தலைவர் துரைமுருகன் சொன்னால் அது அனுமதிக்கப்படுவதுமில்லை. அவைக்குறிப்பில் ஏறுவதுமில்லை.

அரசின் பொறுப்பற்ற செயல் என்று காங்கிரஸ் தலைவர் திரு.எஸ்.ஆர்.பி. சொன்னால், அது அவைக் குறிப்பில் ஏறாது.

எதிர்க்கட்சிகளின் பொறுப்பு கெட்டத்தனம் என்று முதலமைச்சர் சொன்னால், அதைத் தங்கம் தங்கமெனத் தாங்கி அவைக் குறிப்பில் ஏற்றி விடுகிறார் அவைத்தலைவர்.

இப்படியாகத்தானே தராசு முள்ளைப்போல நடுநிலை தவறாது, (?)

தமிழ் ராஜ்யத்து ஜனங்கள் முன்னால் அபேட்சகர்களாக நின்று ஓட்டுப் பெற்று மெம்பர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள

அசெம்பிளியில் தினந்தோறும் கதாகாலட்சேபம் களைகட்டிக் கொண்டிருக்கிறது.

அந்தத் திவ்யப் புண்ய சேவையின் தொடர்ச்சியாக நேற்று, (22.4.2003 செவ்வாயன்று) முதலமைச்சர் தனது திருவாய் மலர்ந்து சில அனுக்கிரக வார்த்தைகளைப் பாஷ்யமாகப் பொழிந்துள்ளார்.

டாக்டர் ராமதாஸ், டாக்டர் கிருஷ்ணசாமி இருவரும் சாதி வெறியைத் தூண்டுபவர்களாகத்தான் இருக்கிறார்கள்.

(இது பேரவையில் முதலமைச்சர் பேசியது)

நான் பாப்பாத்திதான் என்று பகிரங்கமாக சட்டப் பேரவையில், ராஜாஜிக்கு இல்லாத துணிவோடு தலை நிமிர்ந்து தோள் தட்டிக் கூறியவர், டாக்டர் ராமதாசும், டாக்டர் கிருஷ்ணசாமியும் சாதி வெறியைத் தூண்டுபவர்களாக இருக்கிறார்கள் என்று குற்றம் சாட்டுவது விந்தைதான்!

இப்படியொரு குற்றச்சாட்டை, அதாவது முதலமைச்சர் ஜெயலலிதா சாதி வெறியைத் தூண்டுபவராக இருக்கிறார் என்ற குற்றச்சாட்டை எதிர்க்கட்சியினர் கூறினால், அதை அவைத்தலைவர் அனுமதிப்பாரா? அந்த வாசகம் அவைக் குறிப்பில் ஏற்றப்படுமா?

தெரிந்த விஷயத்தை அவைக் குறிப்பில் ஏற்றத் தேவையில்லை என்று அங்கிருந்து பதில் கிடைத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஏற்றவும் செய்வர்! ஏற்றாமலும் இருப்பர்! அவர்கள் இஷ்டத்தைப் பொறுத்தது அது!

முதல்வர் ஜெயலலிதாவின் குற்றச்சாட்டுக்கு பா.ம.க. சார்பில் அதன் தலைவர் திரு.ஜி.கே.மணி அவர்கள் பேரவையிலே பதில் சொல்கிறார்.....

எங்கள் தலைவர் ராமதாஸ் சாதி உணர்வு கொண்டவரே ஒழிய, சாதி வெறியர் அல்ல!

உடனே முதலமைச்சர் ஜெயலலிதா, இரண்டும் ஒன்றுதான்!

பட பட பட பட பட!

அது என்ன படபட என்கிறாயா?

அதுதான் ஆளுங்கட்சி மேஜைகளைத் தட்டும் ஒலி!
வெறி என்றாலும் உணர்வு என்றாலும்
இரண்டும் ஒன்றுதான்!
இது முதலமைச்சர் ஜெயலலிதா மொழிந்துள்ள
தத்துவம்!

நானும் விவேகானந்தர் மொழிந்த தத்துவம் முதல்; நமது ஊர் வீணாய்ப் போன ஆனந்தர்கள் தத்துவம் வரையில் படித்திருக்கிறேன்.

யாரும், வெறி என்றாலும்

உணர்வு என்றாலும்

இரண்டும் ஒன்றுதான் என்று

வாதிட்டதில்லை.

வெறிநாய் கடித்து விட்டது என்றுதான் கூறுவோம் - அம்மையார் சொல்லிவிட்டாரே இரண்டும் ஒன்றுதான் என்று என்பதற்காக, உணர்வு நாய் கடித்து விட்டது என்று சொல்ல மாட்டோம்!

தொடுவதால் - ஏற்படுவது உணர்வு!

தொண்டையை நெரிப்பது? நெரிப்பதும் உணர்வோடு செய்கிற காரியமல்ல! நெரிக்கப்படுபவனும் உணர்வோடு ரசிக்கிற காரியமல்ல! அது வெறியினால் விளைகிற காரியம்!

இழிவாக ஒருவன் பேசினால் கேட்பவனுக்கு ஏற்பட வேண்டியது, ஏற்படக் கூடியது, மான உணர்வு!

வேண்டுமென்றே ஒருவன் இழிவாகப் பேசினால், அது மான உணர்வைத் தூண்டுகிற வெறிப் பேச்சு!

நம் மொழி மீது பிற மொழியைத் திணிப்பது வெறி! மொழி வெறி!

அதை எதிர்ப்பது நமது மொழி உணர்வு!
காதலரிருவர் தழுவிக் களிப்பது காதல் உணர்வு!
கன்னியொருத்தியின் கற்பை அழிக்க முனைவது காம
வெறி!

டாக்டர் ராமதாஸ் அவர்களோ, டாக்டர் கிருஷ்ணசாமி அவர்களோ, எப்படியோ மிகவும் பிற்படுத்தப்பட்டதும் அழுத்தப்பட்டதுமான இரு சமுதாயங்களைச் சேர்ந்தவர்கள் - அந்த சமுதாயங்கள் விழிப்புறவும் - விடியலைக் காணவும் விரும்புவது வெறியாக முடியாது!

இந்த உண்மையை உணர மறுப்பின்
அவர்களுக்கு,
உணர்வுக்கும் வெறிக்குமிடையே உள்ள
உண்மையான முரண்பாட்டை
உணர முடியாது!

அன்புள்ள,

மு.க.

24-4-2003

2909. நாரதர் கலகம் நன்மையில் முடியும் (?)

உடன்பிறப்பே,

(கலாப மயில்கள் ஆட்டத்தை நிறுத்தி விட்டு, அங்குமிங்கும் ஓடி இரை தேடிடும் காட்சி - மான்கள் உலாவும் மலர்ச் சோலையையொட்டி அமைந்துள்ள பொய்கையில் நீரை விட்டு வெளியே தலையை நீட்டி வானத்தைப் பார்த்துக் கொண்டு இசையெழுப்பும் தவளைகளின் ஒலி - நீண்டுயர்ந்து நிற்கும் வாழை, கமுகு மரங்கள், தங்கள் அடர்த்தியின் காரணமாக, ஆங்கு நடுவில் அமைந்துள்ள ஆசிரமத்துக்குப் பாதுகாப்புக் கோட்டையாக விளங்குகிற மாட்சி)

(ஆசிரமத்து வாயிலில் கைகளைக் கட்டிக் கொண்டு இளந்தாடியைத் தடவியபடி ஒரு குட்டி முனிவர் - நாராயணா! நாராயணா!! என்ற குரல் கேட்டு அந்தக் குட்டி முனிவர்,

ஓ! நாரதரா? என்று ஆச்சரியத்துடன் ஓடி வந்து பார்க்கிறார்)

ஆம், நாரதரேதான்! நாராயண மந்திரத்துடன் மேலேயிருந்து கீழே இறங்குகிறார், கையில் தம்புராவுடன்!

தன்னை வணங்கி குனிந்து நிற்கிற குட்டி முனிவரை நாரதர் பார்த்து,

என்னப்பா சிஷ்யா! உன் குருநாதர் வசிஷ்டர் இருக்கிறாரா?

இருக்கிறார் - இப்போதுதான் அயோத்தியிலிருந்து வந்தார். உள்ளே சயனித்திருக்கிறார்.

அயோத்தியிலிருந்து வருகிறாரா? ஆமாம்! அயோத்திக்கு ஏன் சென்றார்? அங்கென்ன அப்படி விசேஷம்?

நாரத முனிவருக்கு இது தெரியாதா?

தெரியாதப்பா! தெரிந்தவன் நீதான் சொல்ல வேண்டும்.

தசரத ராஜகுமாரன் ஸ்ரீராமச்சந்திர மூர்த்திக்குப் பட்டாபிஷேகமல்லவா? அதற்கு நாளும், நட்சத்திரமும் வசிஷ்ட

மகா முனிவர்தான் குறித்துக் கொடுக்க வேண்டுமென்று அயோத்தியிலிருந்து அழைப்பு வந்தது. அந்த அழைப்பை ஏற்று குருநாதர் வசிஷ்ட மாமுனிவர் அங்கு சென்று பணியை முடித்து விட்டு, இப்போதுதான் திரும்பி வந்துள்ளார்!

(இருவரும் பேசிக் கொண்டிருக்கும்போதே வாசல் கதவைத் திறந்து கொண்டு, வசிஷ்டர் வெளியே வருகிறார்)

நாரதர் :- நமஸ்தே வசிஷ்டரே!.

வசிஷ்டர் :- நமஸ்தே நாரத முனிவரே! என்ன திடீர் விஜயம்? இன்றைக்குக் கலகத்தை நமது ஆஸ்ரமத்தில்தான் ஆரம்பிக்கிறீரா?

நாரதர் :- கலக உணர்வு என் ரத்தத்துடன் கலந்தது - காலம் காலமாக கடவுள்களின் குடும்பங்களிலே கூட, கணவனுக்கும் மனைவிக்கும், தந்தைக்கும் மகனுக்கும், அண்ணனுக்கும் தம்பிக்கும் இடையிலே கலகம் செய்வதே பிறவியெடுத்த பயன் எனக் கருதுகிறவன் நான் - நாரதர் கலகம் நன்மையில் முடியும் என்பதற்குப் பொருள் தெரியுமோ? அதாவது நான் செய்யும் கலகம், இந்த நாரதனுக்கே நன்மையில் முடியும்..... இப்போது புரிகிறதா? இருவருக்குமிடையே நான் கலகம் செய்வதின் நோக்கம் என்ன வென்று?

வசிஷ்டர் :- அதிருக்கட்டும்! நீர் அயோத்திக்குப் போகவில்லையா? எப்போது புறப்படுகிறீர்?..

நாரதர் :- அயோத்தியில் என்ன விசேஷம்?

வசிஷ்டர் :- என்ன விசேஷமா? ஸ்ரீராமனுக்குப் பட்டாபிஷேகம்.....

நாரதர் :- யார் சொன்னது? அதுதான் ரத்துசெய்யப்பட்டு விட்டதே!

வசிஷ்டர் :- வதந்தியை நம்பாதீர் நாரதரே! இந்த வசிஷ்டன்தான் ஸ்ரீராமன் பட்டாபிஷேகத்துக்கு நாள் குறித்துக் கொடுத்தவன்....

நாரதர் :- நாள் குறித்துக் கொடுத்தவர் நீர்! ஆனால் நீரே பட்டாபிஷேக விழாவுக்குப் போகவில்லையென்றால் காரணம் என்னவோ?

வசிஷ்டர் :- என்ன? நானா? நாள் குறித்துக் கொடுத்தேனா? நம்பாதீர் நாரதரே! நம்பாதீர்! யார் சொன்னது அப்படி? நான் பட்டாபிஷேகம் நடத்தச் சொல்லவுமில்லை, அதற்கு நாள் குறித்துக் கொடுக்கவுமில்லை.

நாரதர் :- ஓ! இராமன் நாடாள இயலாது, காடேக வேண்டும், ஆம்!கைகேயி யின் ஆணைப்படி காட்டுக்கு செல்ல வேண்டும் - அதுவும் 14 ஆண்டுகள் வனவாசம் அனுபவிக்க வேண்டும் என்று முடிவானவுடன் - அடேடே, வசிஷ்டர் பார்த்த நாளே இப்படி ஆகி விட்டதே என்ற கெட்ட பெயர் வந்து விடுமே எனப் பயந்து, நீர் நாள் பார்த்துக் கொடுக்கவேயில்லை என்கிறீர்! சத்தியம் தவறுகிறீர்! சமாளிக்கப் பார்க்கிறீர்! ஒன்று சொல்வேன் வசிஷ்டரே! பதினாலு ஆண்டு அல்ல, இன்னும் பதினாலு ஆண்டு அதிகமாகக் கூட இராமன், வனவாசத்துக்குத் தயார்! அதை அவன் இன்பமாகவே கருதுவான்! தியாகமாகவே நினைப்பான்! ஆனால் நீர் சொல்லிவிட்டு, அப்படிச் சொன்ன வார்த்தை மாறுவது என்பது எனக்கு உம் மீதுள்ள அபாரமான மதிப்பையும், மரியாதையையும் குலைப்பதாகவே இருக்கிறது. பட்டாபிஷேகத்துக்கு நாள் பார்த்துக் கொடுத்தது நீர்தான் என்று என்னிடமே சொல்லிவிட்டு, அதை என்னிடமே மறுக்கிறீர் என்றால் - இராமனைக் காட்டுக்குப் போகச் சொல்லும் கைகேயி உம்மை விட எவ்வளவோ மேலானவள்! நாராயணா! நமோ நாராயணா! கிருஷ்ண, கிருஷ்ணா!

(என்று உச்சரித்துக் கொண்டே நாரதர், அந்த ஆஸ்ரமத்தை விட்டு வெளியேறுகிறார் - வசிஷ்டர், தான் சொல்லிவிட்ட பொய்க்காக மனம் வருந்தி, தலை குனிந்தவாறு பெரு மூச்சுடன் - ஆசனத்தில் அமர்கிறார்)

அன்புள்ள,

மு.க.

26-4-2003

2910. தமிழ் நிலத்துக்கும் மொழிக்கும் உழைத்திட நீண்டகாலம் வாழவே விரும்புகிறேன்!

உடன்பிறப்பே,

கிடுகிடு பள்ளத்தில் விழ இருந்த இந்தப் பழைய பார வண்டி, விழுந்தே விட்டது என்று சிலர் சிரித்து மகிழ்வதற்குள் - முனையில் ஒரு கல் பட்டுச் சக்கரம் திரும்பி தப்பித்துக் கொண்டதைப் போல, கோவை நிகழ்ச்சிகளுக்குச் சென்ற நான் திரும்பி வந்துள்ளேன்.

கோவையில் காலையில் தொல்காப்பியப் பூங்கா எட்டு, ஒன்பது, பத்தாம் பதிப்புகளின் வெளியீட்டு விழா - விளம்பரத்தில் எட்டாவது பதிப்பு எனக் குறிப்பிட்டிருந்த போதிலும், ஒரு பதிப்பு என்பது ஆயிரம் புத்தகங்கள் என்ற கணக்கில் கோவை விழாவுக்கு தேவைப்பட்ட மூவாயிரம் புத்தகங்கள், மேற்குறிப்பிட்டவாறு மூன்று பதிப்புகளாகவே வெளியிடப்பட்டு, அடுத்து 11ஆம் பதிப்பு வெளியிட வேண்டிய நிலை உருவாகி இருக்கிறது.

இந்த விபரங்களை கோவை சென்றடைந்ததும், வெளியீட்டு விழா நடத்துகின்ற பொறுப்பேற்றிருந்த தம்பிகள் கோவை இராமநாதனும், பொங்கலூர் பழனிசாமியும் என்னிடம் விளக்கியபோது, மிக்க மகிழ்ச்சியுடன் தம்பி துரைமுருகன், அப்படியானால் 11வது பதிப்பு எந்த ஊரில் வெளியீடு வைத்துக் கொள்வது என்று கேட்டுப் பூரிப்பை வெளிப்படுத்தினார்.

எனக்கும் பூரிப்புதான்! இருக்காதா? ஓர் இலக்கணத்தை இலக்கிய வடிவில் நூலாக்கி - அந்த நூல், அறிஞர்கள், கவிஞர்கள், கலைஞர்கள், புலவர்கள், பேராசிரியப் பெருமக்கள் அனைவரது பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் பெற்று - ஏறத்தாழ 12 ஆயிரம் புத்தகங்கள் விற்பனையாகும் அளவுக்கு 11வது பதிப்பும் வெளியிடப்படப் போகிறது என்றால், அந்தப் பூங்காவை அமைத்த எனக்கு பூரிப்பு எழுவது இயற்கைதானே! எனவே தாங்கொணா மகிழ்ச்சியுடன் கோவையில் விழா மண்டபத்திற்குச் சென்றேன்.

கோவை என்றாலே, நீலகிரி மலைத்தாயின் குளிர்க் கரத்து வருடல் இருக்கும் என எதிர்பார்ப்பதில் தவறில்லை அல்லவா!

ஆனால் அந்த எதிர்பார்ப்புக்கு மாறாக - இது கோவையல்ல, இதுதான் கோடை எனக் கூறும் அளவுக்கு வெப்பம், காலையிலிருந்தே தகித்துத் தாக்கத் தொடங்கியது.

விழாவுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட மண்டபம் விசாலமானதுதான் - ஆனால் அந்த மண்டபத்தில் இனிமேல்தான் குளிர்ப்பதன வசதி செய்யப் போகிறார்கள். அதற்காக, திறந்துள்ள கதவுகளையும் அடைத்து வைத்திருந்தார்கள். மேடையில் சில மின் விசிறிகள் சுழன்று கொண்டிருந்தன - அவைகளும் அனலை அள்ளிக் கொண்டு வந்து மேலே தெளித்துக் கொண்டிருந்தன.

பேராசிரியர் மன்சூர் - ஈ.ரோடு தமிழன்பன் - சிலம்பொலியார் - மத்திய அமைச்சர் கண்ணப்பன் - விழாத் தலைவர் காவியக் கவிஞர் வாலி ஆகியோர் பேசி முடிவதற்கு ஏறத்தாழ பிற்பகல் ஒரு மணி ஆகி விட்டது. அடுத்து நான் ஏற்புரை ஆற்ற வேண்டும் - ஆனால் அதற்கு முன்பே அரை மணி நேரமாக அந்த மண்டபத்து வெப்பச் சூழல் என்னை நசுக்கி, மயக்கமுறச் செய்திருந்தது. உடற் சூடு தணிப்பதற்கு விடப்படும் நீர் போல வியர்வை இயற்கையாகவே கொட்டுகிறது - அதற்கும் பற்றாக்குறை ஏற்பட்டு உதடுகள் காய்ந்து விட்டன - நா வரண்டு விட்டது. பக்கத்திலிருந்த தம்பி கண்ணப்பனிடம் நிலையைச் சொன்னேன். அவர் காட்டிய ஜாடையில் எதிரே வீற்றிருந்த தம்பிகள் டி.ஆர். பாலுவும், துரை முருகனும் மேடைக்கு ஓடி வந்தனர். என் குடும்ப டாக்டர் மேடையிலேயே என்னைச் சோதித்து விட்டு - பேச வேண்டாம் எனத் தடுத்தார். அதைக் கேட்காமல் நான் பத்து நிமிடங்கள் நன்றி உரை ஆற்ற முற்பட்டேன்.

முழுமையாக வாக்கியங்களை நிறைவு செய்ய முடியவில்லை.

அதன்பிறகு, ஒரு மணி நேரத்திற்கு நடந்தது எனக்கு நினைவில்லை.

கோவை பக்தவத்சலம் மருத்துவமனையில் என்னுயிரைப் பாதுகாத்து - மாலையில் நான் தங்கியிருந்த சூர்யா ஓட்டலுக்கு என்னை அனுப்பி வைத்தனர்.

இலட்சக்கணக்கில் மக்கள் பொதுக்கூட்டத்தில் குழுமியிருப்பதாகச் சொல்கிறார்கள். நான் புறப்படுகிறேன்.

சேலத்திலிருந்து தம்பி வீரபாண்டி ஆறுமுகம் பொதுக் கூட்டத்திற்குப் போக வேண்டாமென்று கண்ணீரால் கட்டளையிடுகிறார். அவ்வாறே நமது பொருளாளர் ஆர்க்காட்டாரும் சொல்கிறார். இருவருமே பிறகு கோவை வந்து சேருகிறார்கள்.

டாக்டர்கள் நல்ல நல்ல மருந்து வழங்கி என்னைக் காப்பாற்றி விட்டார்கள் என்றாலும் - முழுமையாக என்னைக் குணமடையச் செய்யும் மருந்து - உடன் பிறப்புகள் - தமிழ்ப் பெருங்குடி மக்கள் - குழுமியிருந்த அந்தக் கூட்டமாக அல்லவா இருந்தது.

அந்த மருந்தைத் தேடிச் சென்றேன் - பேசினேன்.

பாசமுள்ளோர் அனைவரும் கோவையில் என்னைச் சூழ்ந்து வாழ்த்தினர். அந்த வாழ்த்துகளைப் பெற்றுக் கொண்டு, இன்று (28-4-2003) காலை சென்னை வந்து சேர்ந்தேன்.

சென்னையில் என்னைப் பரிசோதித்த டாக்டர்கள் - கோவையில் நடந்ததை என் குடும்ப டாக்டர் மூலம் அறிந்து கொண்ட டாக்டர்கள் - அனைத்தையும் அக்கறையுடன் உன்னிப்பாக கவனித்து விட்டு, எனக்கும் உடல்நிலைக்கான அறிவுரை கூறி விட்டு -

நல்லவேளை, புத்தக வெளியீட்டு விழாவில் பத்து நிமிடப் பேச்சுடன் முடித்து விட்டீர்கள் - இன்னும் ஓரிரு நிமிடம் பேசியிருந்தால்கூட மிகவும் ஆபத்தாகியிருக்கும் என்றார்கள். நான் சொன்னேன், அது தெரிந்திருந்தால் இன்னும் கொஞ்சம் பேசியிருப்பேன் என்று!

பக்கத்திலிருந்தோர் பதைத்தார்கள்! என்ன பேச்சு இது? என்று சீறினார்கள்.

நீ பதைக்கத் தேவையில்லை - உன் போன்ற எதையும் எதிர்பாராத உடன்பிறப்புகளுடன் இணைந்து பணியாற்றி - இந்தத் தமிழ் நிலத்துக்கும், மொழிக்கும் உழைத்திட நீண்ட காலம் உன்னுடன் வாழவே நான் விரும்புகிறேன். அதனால்தான் இப்போதும் பிழைத்து வந்துள்ளேன்.

நேரில் வந்து நலம் விசாரித்தும், தொலைபேசியில் விசாரித்து வாழ்த்துக் கூறியும் ஆறுதல் அளித்த

மேதகு குடியரசுத் தலைவர்,
மாண்புமிகு இந்தியப் பிரதமர்,
பல்வேறு கட்சிகளின் இனிய தலைவர்கள்,
தமிழ்ச் சான்றோர், உன் போன்ற உடன்பிறப்புகள்
அனைவருக்கும் நன்றி குவிக்கிறேன்.

அனபுள ள,

மு.க.

29-4-2003

2911. நாற்பது ஆண்டுகள் நான் கட்டிக்காத்த அண்ணா தந்த கருவூலம் எண்ணித்துணிக கருமம் (1)

உடன்பிறப்பே,

திருச்சியில் 1956ஆம் ஆண்டு நடைபெற்ற தி.மு.க. மாநில மாநாட்டில்; கழகம் தேர்தலில் ஈடுபட்டு ஆட்சி மன்றங்களில் இடம் பெறலாமா? என்ற கேள்வியை முன்வைத்து அறிஞர் அண்ணா அவர்கள் ஒரு வாக்கெடுப்பு நடத்தினார். தேர்தலில் ஈடுபடலாம் என்பதற்கு மாநாட்டில் கூடியிருந்தோரின் முக்கால் பகுதியினர் வாக்குகள் கிடைத்த காரணத்தால்;

1957 ஆம் ஆண்டு நடைபெற்ற இரண்டாவது பொதுத் தேர்தலில் தி.மு.க. களம் புகுந்தது. அந்தத் தேர்தலில் பாராளுமன்ற வேட்பாளர்களாக நிறுத்தப்பட்ட சொல்லின் செல்வர் ஈ.வெ.கி. சம்பத் அவர்களும், திருவண்ணாமலை தீரர் தர்மலிங்கமும் வெற்றி பெற்றனர். சட்டப் பேரவைத் தேர்தலில் அண்ணா உள்ளிட்ட 15 பேர் வெற்றி பெற்று தமிழக அரசியல் அரங்கையே ஆச்சரியத்தில் ஆழ்த்தினோம்.

அடுத்து 1962ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றப் பொதுத் தேர்தலில் காஞ்சித் தொகுதியில் அண்ணா வெற்றி வாய்ப்பை இழந்தார் எனினும்

தி.மு.க., சார்பில் 50 பேர் வெற்றி பெற்று, பிரதான எதிர்க்கட்சியாகப் பேரவையில் அமர்ந்தோம்.

1957ஆம் ஆண்டு கழகம் பெற்ற வெற்றி; ஆளுங்கட்சியான காங்கிரசுக்கு ஆச்சரியத்தை உண்டு பண்ணியது என்றால், 1962ல் கழகம் பெற்ற வெற்றி அகில இந்திய அளவில் காங்கிரசுக்கு அதிர்ச்சியை உண்டாக்கியது எனலாம். கழக வளர்ச்சியை முடக்க

என்ன செய்யலாமெனத் திட்டம் தீட்டத் தொடங்கினர் டெல்லிப் பட்டணத்தில்!

அதிர்ச்சியின் அளவைக் காங்கிரசுக்கு மேலும் அதிகப்படுத்தும் விதமாக அப்போது திருவண்ணாமலையில் நடைபெற்ற சட்டமன்ற இடைத் தேர்தலில், பெருந்தலைவர் காமராசர் அவர்களே நேரடியாக இறங்கிப் பணியாற்றிய நிலையிலும்; தி.மு.க. வேட்பாளர் ப.உ. சண்முகம் அவர்கள் வெற்றி பெற்றார்.

இனி தி.மு.க.வை ஒழித்துக் கட்டாமல் விடக் கூடாது என்று காங்கிரஸ் கட்சியின் டெல்லி மேலிடமும் - தமிழகக் காங்கிரஸ் தலைவர்களும் கூடிப் பேசி; கொண்டு வந்தனர் ஒரு சட்டத்தை!

அந்தச் சட்டம் நடைமுறைக்கு வந்துவிட்டால்; தி.மு.கழகம் பிரிவினைக் கொள்கையைப் பேச முடியாது - பேசினால் கழகமே இருக்க முடியாது - இப்படி ஒரு சூழ்நிலையில், "சுவரா? சித்திரமா?" என்ற கேள்விக்கு விடைகாண ஆழ்ந்த சிந்தனையில் கழகத்தினர் இருந்தபோது; அதுபற்றிய விவாதம் அரசியல் வட்டாரத்தில் சூடு பிடித்துக் கொண்டிருந்த போது - தி.மு.கழகத்தின் பொதுக்குழு 1963ம் ஆண்டு சூன் திங்கள் 8,9,10 நாட்களில் கூட்டப் பெற்றது.

அந்தப் பொதுக்குழுவில் இந்தச் சிக்கலான பிரச்சினைக்குத் தீர்வுகாண ஆரோக்கியமான விவாதம் நடைபெற வேண்டுமென்று விரும்பிய அண்ணா அவர்கள், அக்குழுவில் அவர் பேச எண்ணியதை முன் கூட்டியே ஒரு பெரிய நோட்டுப் புத்தகத்தில் தனது கைப்படவே எழுதி வைத்துக் கொண்டார். பொதுக்குழுவில் பேசும்போது பெரும் பகுதி; அவர் தன் கைப்பட எழுதி வைத்திருந்ததை அடிப்படையாக வைத்தே கருத்துகளை அள்ளிப் பொழிந்தார்.

திராவிட இயக்க வரலாற்றிலும் - தமிழக அரசியலிலும் ஒரு திருப்பு முனையாக அமைந்த அந்தப் பொதுக்குழுவில் அண்ணா பேசுவதற்காக அவரே எழுதித் தயாரித்த அந்த உரையை; பொதுக்குழு முடிந்த பிறகு என்னிடம் ஒப்படைத்தார்.

அண்ணாவின் அந்தக் கையெழுத்துப் பிரதியை நாற்பது ஆண்டுகளாகப் பாதுகாத்து வைத்துள்ள நான்; அதனை இப்பொழுது நாற்பது ஆண்டுகளுக்குப் பிறகு வெளியிட விரும்புகிறேன்.

அரசியல் வரலாற்றையே மாற்றிய அந்தப் பொதுக்குழுவின் முடிவையும் - அக்குழுவில் அண்ணா நிகழ்த்திய அற்புதமான விளக்க உரையையும் - படித்துணர ஓர் அருமையான வாய்ப்பு; 'முரசொலி' வாயிலாக, வருகிற மே திங்கள் 3ந்தேதி முதல் கழக உடன்பிறப்புகளுக்கும் - அரசியல் ஆர்வலர்களுக்கும் கிடைக்க இருக்கிறது.

அந்தப் பொதுக்குழுவில் அண்ணா ஆற்றிய உரையில் குறிப்பிட்டிருப்பதுபோல பொதுக்குழு உறுப்பினர்கள் நீண்ட நேரம் விவாதித்து அண்ணாவின் வேண்டுகோளுக்கிணங்க மனம் விட்டுப் பேசி கருத்துப்படி தி.மு.கழக சட்ட திட்டப் புத்தகத்தில்; இன்றளவும் இடம் பெற்றுள்ள,

குறிக்கோள்

அறிஞர் அண்ணா வகுத்த குறிக்கோளுக்கு ஏற்ப தமிழகம், ஆந்திரம், கேரளம், கருநாடகம் ஆகிய நான்கு மொழி வழி மாநிலங்களிலும் இந்திய அரசுரிமை ஒருமைத்தன்மை , அரசியல் அமைப்புச் சட்டம் ஆகியவற்றுக்கு உட்பட்டு நெருங்கிய திராவிட கலாச்சார கூட்டுறவு நிலவப் பாடுபடுவது; அரசியல் நிர்ணயச் சட்டத்தில் முழு நம்பிக்கையும், பற்றுறுதியும் கொண்டு சமதர்மம், சமயச் சார்பின்மை, ஜனநாயகம் ஆகிய லட்சியங்களில் முழு ஈடுபாடும், பற்றும் கொண்டு இந்திய நாட்டின் இறையாண்மை, ஒற்றுமை, ஒருமைப்பாடு ஆகியவற்றைக் கட்டிக் காப்பது,

கோட்பாடு

அறிஞர் அண்ணா அறிவுறுத்திய கடமை - கண்ணியம்- கட்டுப்பாடு அடிப்படையில், அரசியலில் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாத்து, ஆதிக்கமற்ற சமுதாயத்தை அமைத்திடவும்; பகுத்தறிவு அடிப்படையில் மறுமலர்ச்சிக்கான சீர்திருத்தப் பணி ஆற்றிடவும்; பொருளாதாரத் துறையில் வறுமையை வென்று; சமதர்ம அடிப்படையில் எல்லோரும் நல்வாழ்வு பெற வழிவகை கண்டிடவும்; பிறமொழி ஆதிக்கத்திற்கு இடங்கொடாமல் அந்தந்த மாநில மொழிகளை வளர்த்திடவும் அவைகளுக்கான உரிய இடத்தைப் பெற்றுத் தரவும்; மத்திய அரசில் குவிந்து கிடக்கும் அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டு, மாநிலங்களில் சுயாட்சியும் - மத்தியில் கூட்டாட்சியும் (Autonomy for States and Federation at Centre) உருவாகிடவும் தொண்டாற்றுவது என்று திருத்தப்பட்டு;

அதுவே இன்றைக்கும் நமது கழகத்தின் கொள்கை குறிக்கோள் கோட்பாடுகளாக அமைந்துள்ளன.

இந்தத் திருத்தம் தி.மு.கழகச் சட்டதிட்டத்தில் இடம்பெற; அண்ணா ஆற்றிய பொதுக்குழு உரை எவ்வாறு வழிகாட்டுதலாக அமைந்தது என்பதை அவரது கையெழுத்துப் பிரதி வாயிலாக 'முரசொலி' வெளியிடுவது; அனைவருக்கும் ஓர் அரிய வாய்ப்பு,

கழகத்தின் கடந்த கால வரலாற்றையும் - நாம் கடந்து வந்த பாதையையும் - அந்தக் காடுமுரடான பாதையில் நமது கரம் பிடித்து நமது அண்ணா அவர்கள் எப்படி நம்மை அழைத்து வந்துள்ளார் என்பதையும் உன் போன்றோர்க்கு விளக்கிடவே அண்ணா என் கையில் ஒப்படைத்துச் சென்ற அந்தக் கருவூலத்தை மே 3 முதல் வெளியிடுகிறேன். -

நாம் நடந்து வந்த பாதையை அறிந்துகொள்ள, அண்ணா வழியைப் புரிந்துகொள்ள; நமது குறிக்கோள், கோட்பாடு இவற்றில் தெளிவாக விளங்கி அவ்வாறே செயல்பட இது பயன்படும் என்று நம்புகிறேன்.

அன்புள்ள,

மு.க.

01-05-2003

குறிப்பு:

அண்ணா எழுதித் தந்த உரை யடங்கிய அந்த நோட்டுப் புத்தகத்தின் தலைப்பு; "எண்ணித் துணிக கருமம்" என்பதாகும். அதனால்தான் இத் தொடருக்கு அவர் கையெழுத்தையே தலைப்பாகச் சூட்டியுள்ளேன்.

2912. நாற்பது ஆண்டுகள்

நான் கட்டிக்காத்த அண்ணா தந்த கருவூலம்

எண்ணித் துணிக கருமம் (2)

உடன்பிறப்பே,

எதிர்ப்படும் நண்பர்களோ, உடன்பிறப்புகளோ எவராயினும் கேட்கின்றனர். எப்படி "எண்ணித் துணிக கருமம்" என்ற தலைப்பில் அண்ணா அவர்களே தன் கைப்பட எழுதிய அந்த நோட்டுப் புத்தகத்தை 40 ஆண்டுகள் பாதுகாத்து வந்தீர்கள் என்று!

தமிழில் மட்டுமல்ல; ஆங்கிலத்திலும் அதே கருத்தை அவர் கைப்பட ஒரு நோட்டுப் புத்தகத்தில் எழுதியிருந்தார். அதை என் அன்புக் கண்மணியும், அண்ணாவின் இதயத்தில் சிறந்த இடம் பெற்றவருமான தம்பி முரசொலி மாறனிடம் கொடுத்து வைத்திருந்தார். அதில் சில பக்கங்களை அவர் வீட்டில் கறையான் நுகரத் தொடங்கிய காரணத்தால் அந்தக் கையெழுத்துப் பிரதியை மாறன், முரசொலி அலுவலகத்தில் பத்திரப்படுத்தி யிருந்தார். 1991ஆம் ஆண்டு ஆளுநர் ஆட்சியில் மாற்றுக் கட்சிக் குண்டர்கள் முரசொலி அலுவலகத்தைத் தீக்கிரையாக்கியபோது, முரசொலி பைல்கள், புத்தகங்களுடன் அண்ணாவின் அந்த ஆங்கிலக் கையெழுத்துப் பிரதியும் சாம்பலாக்கப்பட்டுவிட்டது.

அனைத்து ஆபத்துக்களையும் தாண்டி என்னிடம் பத்திரமாகப் பாதுகாக்கப்பட்டதுதான் அண்ணா எழுதிய 301 பக்கங்கள் கொண்ட இந்தக் கையெழுத்துப் பிரதி நோட்டுப் புத்தகம் "எண்ணித் துணிக கருமம்" என்பதாகும்.

இது தி.மு. கழகத்தின் பலம் - பலவீனம் இரண்டையும் ஒளிவு மறைவின்றி அண்ணா அவர்களால் படம் பிடித்துக் காட்டப்படும் நேர்மையான விமர்சனம் என்றே எடுத்துக் கொள்ளலாம்.

தன் வலிமையும் - மாற்றார் வலிமையும் களம் புகுமுன் கணக்கிடப்படல் வேண்டும் என்ற கருத்துக்கு உரம் சேர்க்கும் அறிவுரைப் பெட்டகமே அண்ணாவின் இந்தக் கையெழுத்து ஏடு!

அடக்குமுறையேற்கக் கூடிய - தியாகம் செய்யக் கூடிய - இழப்புகளைச் சந்தித்துத் தீரவேண்டிய எந்தவொரு போராட்டமாயினும்; அதனை அண்ணா அவர்கள், தன்னுடைய அல்லது தன்னுடன் இருக்கக் கூடிய நாலைந்து பேர்களின் மனத்திண்மையை மட்டும் கணக்கில் கொண்டு அந்தக் களத்தில் அவசரப்பட்டு இறங்குவதில்லை. அவர் தலைமையேற்றிருந்த காலகட்டத்தில் கல்லக்குடி போராட்டம் - குலக் கல்வி எதிர்ப்புப் போராட்டம் - ரயில் நிறுத்தப் போராட்டம் - இந்தித்திணிப்பு எதிர்ப்புப் போராட்டம் - விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டம் என எத்தனையோ போராட்டங்கள் நடைபெற்றிருக்கின்றன.

ஆனால் பிரிவினைத் தடைச் சட்டத்தை எதிர்த்து ஒரு போராட்டம் நடத்துவதென்றால்; கழகத்தினர் வாழ்வு பறிபோகும் என்பதுடன் கழகமே பறிபோகும் என்ற உண்மையை; எவ்வளவு வலிவு மிக்க வாதங்களை எடுத்து வைத்து அண்ணா கருத்தறிவித்தார் என்பதை இந்த "எண்ணித் துணிக கருமம் !" என்ற அவரது கையெழுத்து உரை தெளிவாக்குகிறது.

"ஆகா! திராவிட நாடு கொள்கையை விட்டு விட்டார்கள், கோழைகள்!" என்று சில கட்சியினர் எள்ளி நகையாடினர். அப்போதும்; காங்கிரஸ் கட்சியின் சார்பில் அமைச்சராக இருந்த பெரியவர் பக்தவத்சலம் அவர்கள், பிரிவினைக் கோரிக்கையை தி.மு.க. கைவிட்டுவிட்டு; இந்திய ஒருமைப்பாட்டில் நம்பிக்கை கொண்டு நாட்டின் ஒற்றுமைக்கும் பாதுகாப்புக்கும் ஒத்துழைப்பு தர முன்வந்தமைக்காகப் பாராட்டு தெரிவிப்பதாக அறிவித்தார்.

அவரையும் மீறி அவரது காங்கிரஸ் கட்சியினர் - மற்றும் மாற்று முகாமில் இருந்தோர் - தி.மு.க. எடுத்த முடிவு குறித்துப் பழித்தும் இழித்தும் பேசாமல் இல்லை. அவர்களின் நோக்கம் என்ன என்பதை அறிந்திருந்த அண்ணா அவர்கள் அதையும் இந்தக் கையெழுத்துக் கருவூலத்தில் ஆங்காங்கு சுட்டிக் காட்டத் தவறவில்லை.

- இந்தக் கருவூலத்தை இவ்வளவு நாள் வெளியிடாமல் இருந்த காரணம் என்ன?
- எப்படி இத்தனை நாள் பத்திரப்படுத்தினாய்?

இந்தக் கேள்விகள் நிரம்ப எழத்தான் செய்யும்; எழுகின்றன!

என்னிடம் பத்திரமாக இருக்கும் வேறு சில விஷயங்கள் எல்லாவற்றையுமே வெளியிட்டு விட முடியுமா? அவை எத்தனை பேருடைய முகத்தை சுளிக்க வைக்கும்; அகத்தை சுருங்க

வைக்கும் அதனால்தான் அவற்றை விடுத்து யாருக்கும் இடர் விளைவிக்காத ஓர் அரசியல் வரலாற்று ஏட்டினை அண்ணாவின் கையெழுத்து கொண்டே நாளை மே 3ஆம் நாள் முதல் முரசொலியில் வெளியிடுகிறேன்.

இந்தக் கையெழுத்துப் பிரதி நோட்டுப் புத்தகத்தை மத்திய நல்வாழ்வுத் துறை இணை அமைச்சர் தம்பி ராஜாவிடம் நேற்றையதினம் இரவு காட்டினேன். அண்ணாவின் கையெழுத்துக்களை ஒருசேர இத்தனை பக்கங்களைப் பார்த்ததும், அவர் உணர்ச்சிவசப்பட்டு அந்த எழுத்துக்களைத் தொட்டுக் கும்பிட்டதும் கண்களில் ஒற்றிக் கொண்டதும் நினைவில் நிலைத்து விட்ட நிகழ்ச்சியாகும்.

நாற்பதாண்டுக் காலம் கண் போலக் காத்த இந்தக் கருவூலத்தை இனியும் வெளியிடாமல் இருப்பதா? எப்போது வெளியிடலாம்? என்று என்னைத் துளைத்துக் கொண்டிருந்த கேள்விக்கு ; இதனை வெளியிடுவதற்கான உரிய நேரம் இதுதான் என்று விடை கிடைத்தது.

எனவே இப்போது வெளியிடப்படுகிறது. இதனை, நமதியக்கப் பயணத்தில் எதிர்ப்பட்ட திருப்பு முனையில் எவ்வளவு திறமையுடன் சமாளித்து விபத்தின்றி கழக வாகனத்தை அண்ணா செலுத்தினார் என்பதற்கு இந்தக் கருவூலமே கண்கண்ட சான்று.

இளைய தலைமுறையினர்க்கு இப்போதெல்லாம் இதுபோன்ற விஷயங்களை - வரலாற்று உண்மைகளைத் தெரிந்து கொள்ளும் ஆர்வம் குறைந்து வருவது; நான் எண்ணி வருந்துகின்றவற்றில் ஒன்றாகும்.

இனியாவது கழக உடன்பிறப்புகளும் இளைய தலைமுறையினரும் இழந்துவிட்ட அந்த ஆர்வத்தை - ஒதுக்கி வைத்துள்ள அந்த அக்கறையை - திரும்பப் பெற்று திராவிட இயக்கத்துக்கு எல்லா வகையிலும் அறிவு வளம் சேர்த்திட வாரீர் என அழைக்கிறேன்.

அன்புள்ள,

மு.க.

02-05-2003

2913. ஊரே மூக்கறையன்களாக மாற வேண்டாம் !

உடன்பிறப்பே,

ஏதோ ஒரு விபத்தில் மூக்கறுபட்ட ஒருவனை; அந்த ஊரார் "மூக்கறையன்" என்று தொடர்ந்து கேலி செய்து வந்தார்கள். அதை எப்படித் தவிர்ப்பது என்று அந்த மூக்கறையன் யோசிக்கலானான்.

ஒருநாள் மூக்கறையன் திடீரென்று அந்தவூர்க் கடைத்தெருவில் வந்து நின்று; ஆகாயத்தைப் பார்த்து "அதோ சூரியனும் சந்திரனும் கை குலுக்கிக் கொள்கிறார்கள். ஆகா! ஆகா! எவ்வளவு அற்புதமாக இருக்கிறது" என்று ஆனந்தமாகக் குதித்தான். ஒருவன் அவனை நெருங்கி; "உண்மையாகவா? அவர்கள் கைகுலுக்கிக் கொள்வது உன் கண்ணுக்குத் தெரிகிறதா?" என்று ஆவலுடன் கேட்டான்.

உடனே மூக்கறையன்; "ஆமாம் தெரிகிறது. இந்தக் காட்சியைப் பார்த்தால் ஒரு மனிதன் இறந்த பிறகு சொர்க்கத்துக்குப் போகலாம். அங்கே ஊர்வசி, ரம்பை, மேனகையுடன் உல்லாசமாக இருக்கலாம்!" என்றான்.

அதைக் கேட்டவன்; "அய்யோ; அப்படியா? நானும் சொர்க்கத்துக்குப் போகவேண்டுமே?" என்று பல்லை இளித்தான்.

"அப்படியானால்; நீ மூக்கை அறுத்துக் கொண்டு, ஆகாயத்தைப் பார். சூரியனும் சந்திரனும் கைகுலுக்குவது தெரியும். பிறகு உனக்கு சொர்க்கம் - அங்கே ஊர்வசி, ரம்பை, எல்லாம் கிடைக்கும்"

"இதோ; மூக்கை அறுத்துக் கொள்கிறேன்" என்றவன் அவ்வாறே அறுத்துக்கொண்டு ஆகாயத்தைப் பார்த்தான். சூரியனும் சந்திரனும் கைகுலுக்கிக் கொள்ளவில்லை. எத்தன், ஏமாற்றி விட்டான் என்று புரிந்து கொண்டான். இருந்தாலும் சமாளித்துக் கொண்டு, "ஆமாம்! அதோ தெரிகிறது அருமையான

காட்சி! சூரியனும் சந்திரனும் கைகுலுக்கிக் கொள்வது ஜகஜோதியாகத் தெரிகிறது'' என்று மகிழ்ச்சியால் குதிப்பதுபோல் நன்றாக நடித்தான், அந்த ஏமாந்த பேர்வழி!

இதை ஊரில் உள்ள மற்றவர்களும் ஆச்சரியத்துடன் பார்த்தார்கள். அவர்கள் மனத்தில் சொர்க்கம் - ஊர்வசி - ரம்பை - மேனகை - காமதேனு - கற்பக விருட்சம் - என்று இப்படிக் காட்சிகள் கனவுகளாயின. இவர்களை சொர்க்கத்தில் காணவும், அனுபவிக்கவும்-ஆகாயத்தில் சூரியனும் சந்திரனும் கைகுலுக்குவதையல்லவா முதலில் பார்க்க வேண்டும்; அதற்கு மூக்கை அறுத்துக் கொண்டால் தானே முடியும்,

எனவே; அடுத்தடுத்து ஒவ்வொருவராக மூக்கை அறுத்துக் கொண்டு; ஏமாந்து போய் - தன்னைப் போல மற்றவரையும் ஏமாளியாக்க முடிவு செய்து - இப்படி அந்த ஊர் மக்கள் அனைவரும் மூக்கறையர் களானார்கள். அதனால் யாரும் மூக்கறையனைப் பார்த்து, அதற்குப் பிறகு கேலி செய்ய முடியவில்லை!

இந்த வேடிக்கைக் கதை இப்போதும் கூட அரசியல் ரீதியாக நடக்கிறது. நடக்கவில்லையென்று எவரும் கூறிவிட முடியாது.

அதற்கு இதோ ஆதாரம் :

25-4-2003 அன்று தமிழகச் சட்டப் பேரவையில் சத்துணவுத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் பாலபாரதி பேசிக் கொண்டிருந்தபோது வழக்கம்போல் முதலமைச்சர் ஜெயலலிதா குறுக்கிட்டுப் பேசியதாவது:

> "இந்திய அரசியல் சாசன சட்டத்தில் பெண்களுக்கு பெரிய அந்தி இழைக்கப்பட்டுள்ளது. நான் பதவிப் பிரமாணம் எடுக்கும்போது, இந்திய அரசியல் சாசன சட்டத்தின் உண்மையான "குடிமகனாக" இருப்பேன் என்று படிக்க வேண்டியது இருக்கிறது. இது குறித்து "குடிமகள்" என்று ஏன் சொல்லக் கூடாது என்று பல தடவை கேட்டிருக்கிறேன். அதற்கு குடிமகள் என்ற சொல், வழக்கத்தில் இல்லை என்று கூறினார்கள். குடிமகள் என்ற வார்த்தை வழக்கத்திற்கு வர வேண்டும். அதற்கு இயக்கம் நடத்த இருக்கிறேன்."

இவ்வாறு ஜெயலலிதா பேசினார்.

மேலும் அவர் பதவிப் பிரமாணம் எடுத்தபோது, இந்திய அரசியல் சாசன சட்டத்தின் உண்மையான "குடிமகனாக" இருப்பேன் என்று படிக்க நேர்ந்ததாகவும் ஜெயலலிதா பேரவையிலே கூறியிருக்கிறார். அவர் கூறியது அனைத்து ஏடுகளிலும் வெளிவந்துள்ளது.

இந்திய அரசியல் சட்டத்திலே உள்ளவாறு அமைச்சர்கள் பதவியேற்கும்போது சொல்லப்பட வேண்டிய வார்த்தைகள் என்ன தெரியுமா?

- "அ.ஆ. ஆகிய நான், சட்டத்தினால் நிறுவப்பெற்றவாறான இந்திய அரசமைப்பில் உண்மையான பற்றார்வமும், பற்றுறுதியும் கொண்டிருப்பேன் என்றும், நான் இந்தியாவின் இறையாண்மை யையும், ஒருமைப்பாட்டையும் உறுதியாகப் பற்றி நிற்பேன் என்றும், நான் ..... மாநில அமைச்சர் என்னும் முறையில் என்னுடைய கடமைகளை நான் பற்றார்வத்தோடும் மனச் சான்றுக்கு ஒப்பவும் ஆற்றுவேன் என்றும், நான் அரசமைப்பிற்கும் சட்டத்திற்கும் இணங்கியவாறு அச்சமோ ஓரவுணர்வோ, விருப்போ வெறுப்போ இன்றி, எத்தன்மைத்தான மக்களுக்கும் நேர்மையானதைச் செய்வேன் என்றும் கடவுளின் பெயரால் ஆணையிட்டுக் கூறுகிறேன் உளமாற உறுதி கூறுகிறேன்"

(கடவுளின் பெயரால் என்றோ, உளமாற என்றோ உறுதி கூறலாம்)

முதலமைச்சரோ அல்லது மற்ற அமைச்சர்களோ, பதவிப் பிரமாணம் எடுக்கும்போது பயன்படுத்தப்படும் வார்த்தைகள்தான் இவை. அரசியல் சட்டத்திலே குறிப்பிடப்பட்டுள்ள வார்த்தைகளும் இவைதான். ஆனால் முதலமைச்சர் ஜெயலலிதா பேரவையிலேயே தான் பதவிப் பிரமாணம் எடுத்தபோது "இந்தியக் குடிமகன் ஆகிய நான்" என்று ஒரு முறையல்ல, பல முறை சொல்ல நேரிட்டதாகவும், அப்போது இந்தியக் குடிமகள் என்று சொல்லக்கூடாதென்று தடுக்கப்பட்டதாகவும், அதன் காரணமாக இந்திய அரசியல் சட்டத்திலேயே பெரிய அநீதி பெண்களுக்கு இழைக்கப்பட்டுவிட்டதாகவும், அதை எதிர்த்து; தான், இயக்கம்

நடத்தப்போவதாகவும் பேரவையிலே தெரிவித்து அந்தப் பேச்சு அனைத்து ஏடுகளிலும் வெளிவந்திருக்கின்றது.

ஆனால் ஜெயலலிதா அவையிலே தெரிவித்தவாறு, எந்தவிதமான இயக்கமும் நடத்தாமல், மூன்றே நாட்களில் தமிழக அரசின் சார்பில் ஒரு அரசாணையைப் பிறப்பித்து, அதையும் பேரவையிலே ஒரு அறிக்கை மூலம் படித்ததோடு, ஒரு புதிய சரித்திரத்தை உருவாக்கிவிட்டதாக தனக்குத் தானே பெருமைப்பட்டுக் கொண்டிருக்கிறார்.

அரசாணைகள் பிறப்பிக்கப்படும்போது, அதிலே எந்தவிதமான தவறான தகவலோ, விதிக்குப் புறம்பான செய்திகளோ இடம் பெறக் கூடாது. ஆனால் தமிழக அரசின் சார்பில் 28-4-2003 தேதியிட்டு பிறப்பிக்கப்பட்டுள்ள அரசாணை எண். 62இல் முதல் பாராவில், "தமிழ் மொழியில், அரசமைப்புச் சட்டத்திலேயே பெண்களுக்கு ஒரு பெரிய அநீதி இழைக்கப்பட்டுள்ளது. முதல்வராக பதவிப்பிரமாணம் எடுக்கும்போது, இந்தியக் குடிமகன்" ஆகிய நான் இப்பதவியை ஏற்கிறேன் என்றுதான் கூறுகிறோம்.

"குடிமகள்" ஆகிய நான் என்று கூறி பதவி ஏற்கக் கூடாதா என்று போராடி இருக்கிறேன். குடிமகன் என்று கூறித்தான் பதவி ஏற்க வேண்டும் என்பதே பெண்குலத்துக்கு இழைக்கப்பட்ட அநீதி. குடிமகள் என்ற சொல் புழக்கத்துக்கு வருவதற்காகப் பெரிய இயக்கமே நடத்தத் தீர்மானித்திருக்கிறேன்" என்று முதலமைச்சர் உரையாகக் கூறப்பட்டுள்ளது.

இதிலிருந்து இந்த அரசாணையில் அரசமைப்புச் சட்ட உறுதிமொழிப் படிவத்தில் இடம் பெறாத வார்த்தைகள் எல்லாம் இடம் பெற்றிருப்பதைத் தெளிவாகத் தெரிந்துகொள்ள முடியும்.

அரசியல் சட்டம் வகுத்துள்ள உறுதிமொழி (பதவிப் பிரமாணம்) எடுக்கும் பிரிவில் குடிமகன் என்றோ, குடிமகள் என்றோ எந்தவொரு வார்த்தையும் குறிப்பிடப்படவில்லை என்ற நிலை இருக்கும்போது, முதல்வர் ஜெயலலிதாவே கற்பனை செய்து கொண்டு நிழலோடு போராட்டம் என்பதைப் போல, "குடிமகள் போராட்டம் நடத்துவேன் என்று குதிப்பது ஏன்? அரசியல் சட்டத்தில் உறுதிமொழி எடுக்கும் பிரிவில் இல்லாத ஒன்றை அவையில் கூறி தவறான தகவல் தந்து திசை திருப்பியதற்காக அவர் மீது உரிமைப் பிரச்சினை கூடக் கொண்டுவரப்படலாம்.

அதற்குள் முதலமைச்சர் தன் தவறைத் திருத்திக் கொள்வது நல்லது. இல்லையேல் எத்தன் ஒருவனின் பேச்சை நம்பி ஊர் முழுதும் மூக்கறுத்துக் கொண்டவர்களின் கதையாக ஆகிவிடும்.

இதுபோலவேதான் தாயாரின் பெயரினை முதல் எழுத்தாகப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதுமாகும்! தாயாருடைய பெயரை முதல் எழுத்தாகப் பயன்படுத்தக் கூடாது என்று ஏதாவது சட்ட விதி இருக்கிறதா?

முதல் எழுத்து இனிஷியலாக தாயார் பெயரையோ அல்லது தந்தை பெயரையோ அல்லது இரண்டு பெயரையும் இணைத்தோ இஷ்டம்போல் இனிஷியலாக வைத்துக் கொள்ளலாம் என்பது இப்போதே நடைமுறையில் இருக்கும்போது அதற்கு ஒரு அரசாணை எதற்காக?

மூக்கறுத்துக் கொண்டது ஒருவரோடு முடியட்டும்! ஊரே மூக்கறையன்களாக மாறவேண்டாம் என்பதற்காகவே எச்சரிக்கையாக இந்தக் கடிதம்

அன்புள்ள,

மு.க.

05-05-2003

2914. கெட்டிக்காரன் புளுகு எட்டே நாள் !

உடன்பிறப்பே,

இந்தியப் பிரதமராக வீற்றிருந்த இந்திரா காந்தி அவர்களின் கருத்துக்கேற்ப; தமிழக அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் முடிவெடுத்து காவிரிப் பிரச்சினையில் தமிழக அரசு தொடர்ந்திருந்த வழக்கை 1972ஆம் ஆண்டு திரும்பப் பெற்றதற்கும்; கழகத்தினர்மீது மத்திய அரசு தொடர்ந்த வழக்குகளை 1980ஆம் ஆண்டு திரும்பப் பெற்றதற்கும் முடிச்சுப் போட்டு ஒரு தவறான தகவலை சட்டப்பேரவையில் முதலமைச்சர் ஜெயலலிதா சொல்லி; ஆண்டுக் கணக்கு முரண்படுவதை பேரவையில் திரு. எஸ்.ஆர்.பி., மற்றும் துரைமுருகன் போன்றவர்கள் சுட்டிக் காட்டிய பிறகு "நானும் மனுஷிதானே; நாத்தவறி (Tongue Slip) சொல்லிவிட்டேன்" என்று சமாளித்தது இன்னமும் எல்லோருக்கும் பசுமையாக நினைவிருக்கும்போதே முதலமைச்சர் ஜெயலலிதா இப்போது மற்றொரு தவறான தகவலையும் பேரவையில் தந்துள்ளார்.

அதாவது; "முதலமைச்சராகப் பதவிப் பிரமாணம் எடுக்கும்போது, இந்தியக் குடிமகனாகிய நான் இப்பதவியை ஏற்கிறேன் என்றுதான் கூறுகிறோம். குடிமகள் என்று கூறி பதவி ஏற்கக்கூடாதா என்று போராடி இருக்கிறேன். குடிமகன் என்று கூறித்தான் பதவி ஏற்க வேண்டுமென்பது பெண் குலத்துக்கு இழைக்கப்பட்ட அநீதி" என்றும்; ஓர் அரசாணையில் குறிப்பிட்டு, அதைப் பேரவையில் முதலமைச்சர் ஜெயலலிதாவே அறிவித்துள்ளார்.

எனவே முதலமைச்சர் வாய்ச் சொல்லால் மட்டுமல்ல; அவையில் அவரே படித்த அறிக்கை, அவரது அரசே பிறப்பித்த அரசாணை ஆகியவற்றிலும் - அவைக்கும், அவை வாயிலாக நாட்டு மக்களுக்கும் பொறுப்பற்ற முறையில் ஒரு தவறான தகவலைச் சொல்லியிருக்கிறார்.

பதவிக்கான உறுதிமொழி எடுத்துக் கொள்ளும் போது "குடிமகன்" என்ற சொல்லே இடம் பெறாத படிவத்திலேதான் அந்தப் பதவிப் பிரமாணம் இருக்கிறது. ஆனால் ஜெயலலிதா உண்மைக்கு மாறான தகவலைச் சொல்லி, இது அரசியல் சட்டத்தில் பெண்களுக்கு இழைக்கப்பட்டுள்ள அநீதி என்று குறிப்பிட்டுப் பேசியதும் அரசாணை பிறப்பித்ததும் இமாலயத் தவறு ஆகும்.

உடன்பிறப்பே, நேற்று நான் எழுதிய கடிதத்தில் இது பற்றி விளக்கமாகவும் - அரசியல் சட்ட ஆதாரம் - பதவிப் பிரமாணப் படிவ ஆதாரம் - இவைகளை எடுத்துக்காட்டி ஆதாரபூர்வமாக அனைத்தையும் குறிப்பிட்டிருக்கிறேன்.

பிறகு ஒரு சந்தேகம்; ஒருவேளை இவர் முதலமைச்சராகப் பதவிப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டபோது "குடிமகனாகிய நான்" என்று சொல்லவேண்டுமென அரசியல் சட்டத்தில் தனியாக ஏதாவது குறிப்பாணை இருந்திருக்குமோ என்றும், அதனால்தான் ஜெயலலிதா "குடிமகள்" போராட்டத்துக்குக் கொடி தூக்குகிறாரோ என்றும் எனக்கு நானே கேட்டுக் குழப்பிக் கொண்டேன்.

இது போன்ற விஷயங்களில் தெளிவான எனக்கே குழப்பமென்றால்; பாமரர்களை - அதிலும் குறிப்பாகப் பாமரத்தனமான சில தாய்மார்களைப் பற்றிக் கேட்கவா வேண்டும்!

நல்லவேளையாக திடீரென்று இன்று காலை (5-5-2003) தொலைக்காட்சியில் 8 மணி செய்தியில் ஒரு பழைய காட்சியைப் பார்க்க நேரிட்டது.

அது என்ன பழைய காட்சி?

கவர்னர் முன்னிலையில் ஜெயலலிதா அமைச்சரவை பதவியேற்ற காட்சிதான்!

அந்தக் காட்சியில் முதலமைச்சராக ஜெயலலிதா பதவியேற்க அழைக்கப்படுகிறார். அவர் ஒலி பெருக்கி முன்னால் போய் நிற்கிறார். ஆரவாரம் ஆம்; அ.தி.மு.க. மகிழ்ச்சி ஆரவாரம்!

பதவிப் பிரமாணச் சடங்கு ஆரம்பமாகிறது.

கவர்னர் "ஜெயலலிதா என்னும் நான்" என்கிறார்.

உடனே, "ஜெயலலிதாவாகிய நான்" என்று ஜெயலலிதா ஆரம்பித்து "ஆண்டவன் ஆணையாக உறுதி கூறுகிறேன்"

என்று அவர் முடிக்கிற வரையில் அந்தக் காட்சியை உன்னிப்பாகக் கவனித்தேன்; காதைத் தீட்டிக் கொண்டு!

ஒரு இடத்திலாவது 'குடிமகனோ' அல்லது 'குடிமகளோ' என்ற சொற்கள் வரவே இல்லை! இன்னும் சொல்லப் போனால் "குடி" என்ற சொல்லே இல்லை அந்தப் படிவத்தில்! -

"குடிமகன்" என்ற சொல் வந்திருந்தால் தானே பெண்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி என்று அதைச் சுட்டிக்காட்டி "குடிமகள்" போராட்டத்திற்கான முதல் ஏவுகணையைப் பிரயோகித்திருக்க முடியும்?

அதில்தான் மகனுமில்லை; மகளுமில்லையே; பிறகு எப்படி அரசியல் சட்டத்தில் அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது என்று போர்க்கொடி உயர்த்த முடியும்? போர் முரசு தட்ட முடியும்?

ஏதோ வாய் தவறி (Tongue Slip) வருடம் மாதம் தேதியைச் சொல்லி விட்டேன், நானும் மனுஷி தானே என்று காவேரிப் பிரச்சினையில் சமாளித்து விடலாம்.

ஆனால் இது தன் வாயினாலேயே பதவிப் பிரமாண வைபவத்தில், கவர்னருக்கு முன்னால் மொழிந்து, அது இப்போதும் தொலைக்காட்சிச் சாட்சியாக "விசுவரூபம்" எடுத்து நிற்கும் போது - சட்டப் பேரவையிலேயே சபாநாயகர், உறுப்பினர்கள், பத்திரிகையாளர்கள் முன்னிலையில் வேண்டுமென்றே திட்டமிட்டு தாய்க்குலத்தை ஏமாற்றுவதற்காகச் செய்த திசை திருப்பும் காரியம் என்பதைத் தவிர வேறென்னவாக நாம் கருத முடியும்!

சும்மாவா பழமொழி சொன்னார்கள்,

"கெட்டிக்காரன் புளுகு எட்டே நாள்தான்" என்று!

ஓ! இதிலும் "காரன்" என்பதை "காரி" என ஆக்க வேண்டும் என்று களம் இறங்கினாலும் இறங்குவார்கள்!

ஒரு வகையில் அதுவும் சரிதான்!

அன்புள்ள,

மு.க.

06-05-2003

2915. தமிழ் நெஞ்சமாவது தக்க பதில் கூறுமா?

உடன்பிறப்பே,

"குப்புற விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை"

என்று மல்யுத்தக்காரன் சொன்னது போல்;

"ஊருக்கெல்லாம் குறி சொல்லுமாம் பல்லி; கழுநீர்ப் பானையில் விழுந்ததாம் துள்ளி"

என்ற பழமொழியைப் போல்;

ஜெயலலிதா, தன்னுடைய 110வது எண்ணுள்ள அறிக்கையிலும், தனது அரசின் ஆணை எண். 62லும்; ஆரம்பத்தில் காட்டிய சூரத்தனத்தைக் கை விட்டுவிட்டு; விளக்கெண்ணெய் ஊற்றித் தாளித்த கத்தாழைக் கிழங்குக் குழம்பை, மைதா மாவுக் கூழில் கலந்து சாப்பிடச் சொன்னதுபோல ஒரு வழா வழா திருத்த அறிக்கையை விதி 110க்கு மாற்றாக, விதி 111 என்ற எண்ணில் கொடுத்துள்ளார்.

தவறு செய்துவிட்டால்; அது தெரிந்தோ தெரியாமலோ செய்துவிட்டால் அதற்காக வருத்தம் தெரிவித்து அதைத் திருத்திக் கொள்வதாக அறிவிப்பது அல்லது திருத்திக் கொள்வது தக்கார் செயலாகும்.

அந்தத் தக்கார் முறையைப் பின்பற்றி தவற்றினைத் திருத்தி அறிவிக்குமாறு இரண்டு நாட்களுக்கு முன்பு குறிப்பிட்டிருந்தேன்.

நேற்று 111 அறிக்கையில் ஜெயலலிதா, தனது தவற்றினை உணர்ந்திருக்கிறார் - ஒப்புக் கொண்டிருக்கிறார் - ஆனால் 110வது விதிப்படி வெளியிடப்பட்ட தனது அறிக்கை முழுமையாகவே தவறானது என்பதை மட்டும் ஒப்புக் கொள்ள அவருக்குரிய வீம்பு மனம் இடம் தரவில்லை.

110வது அறிக்கை மூலம் அவர் அவைக்கும் தமிழக மக்களுக்கும் சொன்னது என்ன?

“தமிழ் மொழியில் அரசமைப்புச் சட்டத்திலேயே, பெண்களுக்கு ஒரு பெரிய அநீதி இழைக்கப்பட்டுள்ளது, முதல்வராகப் பதவிப் பிரமாணம் எடுக்கும்போது, இந்தியக் குடிமகன் ஆகிய நான் இப்பதவியை ஏற்கிறேன் என்றுதான் கூறுகிறோம். குடிமகள் ஆகிய நான் என்று கூறி பதவி ஏற்கக் கூடாதா என்று போராடி இருக்கிறேன். குடிமகன் என்று கூறித்தான் பதவி ஏற்க வேண்டும் என்பதே, பெண் குலத்துக்கு இழைக்கப்பட்ட அநீதி.”

“முதல்வராகப் பதவிப்பிரமாணம் எடுக்கும்போது” என்று முதல் அமைச்சர் ஜெயலலிதா அவையில் 29.4.2003 அன்று திட்டவட்டமாகக் கூறி அது அனைத்து ஏடுகளிலும் வெளிவந்ததற்கு மாறாக, தற்போது திடீரென்று தீண்டாமை உறுதிமொழி என்று புதிதாக ஒன்றைக் கொண்டு வந்து புகுத்தியிருக்கிறார். தீண்டாமை உறுதிமொழி ஏற்கும்போது எந்தப் பதவிப் பிரமாணமும் எடுத்துக் கொள்ளப்படுவதில்லை. தீண்டாமை உறுதிமொழி எடுத்துக் கொள்ளப்படும்போது குடிமகள் என்று கூறக் கூடாது என்றும் அரசியல் சட்டத்தில் குறிப்பிடப்படவில்லை.

இப்படியொரு உண்மைக்கு மாறானதும் - பதவிப் பிரமாணப் படிவத்தில் இல்லாததுமான - அரசியல் சட்டத்தைப் பற்றியும் - அரசியல் சட்டத்தின் கர்த்தா அண்ணல் அம்பேத்கர் அவர்களின் முற்போக்கு எண்ணத்திற்கு விரோதமாகவும் - “இந்திய அரசியல் சாசனத்தில் பெரிய அநீதி பெண்களுக்கு இழைக்கப்பட்டுள்ளது” என்ற ஒரு தவறான தகவலை 110வது விதி அறிக்கை மூலம் அவையில் ஜெயலலிதா வெளியிட்டது உண்டா இல்லையா?

அப்படிச் சொன்னது தவறு என்று - அப்பட்டமாக - வெளிப்படையாக - ஒளிவுமறைவின்றி - சப்பைக் கட்டு எதுவும் கட்டாமல்; சொல்ல முடியாமல் ஜெயலலிதாவைத் தடுப்பது எது?

முதலமைச்சர் ஜெயலலிதா, சபாநாயகரின் ஒப்புதலுடன் படித்த அந்த 110வது விதி அறிக்கை, முற்றிலும் தவறானது என்பதையும், அவர் முதல்வர் பதவியேற்றபோது பெண்களை இழிவுபடுத்தும் எந்த வார்த்தையும் பதவிப் பிரமாண உறுதிமொழிப்

படிவத்தில் இல்லை என்பதையும் - அப்படி இருப்பதாகச் சொல்வது தவறான தகவல் என்பதையும் திட்டவட்டமாகத் தெளிவாகச் சுட்டிக்காட்டி நான் இரண்டு மூன்று தடவை விடுத்த அறிக்கையைக்கூட சில ஏடுகள்தான் வெளியிட்டன. மற்ற ஏடுகளோ, பாவம் வெலவெலத்துப் போய்க் கிடக்கின்றன. அதனால் அவைகள் வெளியிடவில்லை.

அம்மையாரின் அறிக்கையும் - அவர் முதலமைச்சராகப் பதவி ஏற்கும்போது படிக்கப்பட்ட பதவிப் பிரமாண உறுதிமொழி என்று சுட்டிக் காட்டியதும் - உண்மைக்கு மாறான - தவறான தகவல்கள் - அதுவும் அரசியல் சட்டத்தைப் பற்றியே அபாண்டமான குற்றச்சாட்டு - இதைவிட உரிமைப் பிரச்சினைக்குரிய ஒரு விஷயம் வேறொன்றிருப்பதாகக் கூற முடியாது,

இதிலேகூட 25-4-2003 அன்று நடைபெற்ற விவாதத்தில் முதல் அமைச்சர் குறுக்கிட்டுப் பேசிய போது "இந்திய அரசியல் சாசனத்தில் பெரிய அநீதி பெண்களுக்கு இழைக்கப்பட்டுள்ளது" என்றுதான் பேசினார். அதற்குப் பிறகு 29-4-2003 அன்று 110வது விதியின்கீழ் அறிக்கை படித்தபோது "தமிழ் மொழியில் அரசமைப்புச் சட்டத்திலேயே, பெண்களுக்கு ஒரு பெரிய அநீதி இழைக்கப்பட்டுள்ளது" என்று மாற்றி "தமிழ் மொழியில்" என்ற வார்த்தையைப் புதிதாகச் சேர்த்துக் கொண்டார்.

மேலும் முதல் அமைச்சர் ஜெயலலிதா 111வது விதியின்கீழ் தற்போது படித்த அறிக்கையிலேகூட, "தமிழ் மொழியில், அரசியல் அமைப்புச் சட்டத்திலேயே பெண்களுக்கு ஒரு பெரிய அநீதி இழைக்கப்பட்டுள்ளது" என்று கூறி, அரசியல் அமைப்புச் சட்டத்திலே பெண்களுக்கு அநீதி இழைக்கப்பட்டிருப்பதாக ஒரு பெரிய குற்றச்சாட்டினை சுமத்தியிருக்கிறார். இந்தக் குற்றச்சாட்டிற்கான பதிலை அரசியல் சட்ட விற்பன்னர்கள்தான் விளக்கமாகக் கூற வேண்டும்.

ஆனால் கடுகு போகிற இடம் தெரிகிறது; பூசணிக்காய் போகிற இடம் தெரியவில்லை; என்பது போல எவை எவைகளுக்கோ உரிமைப் பிரச்சினைகள் உறுமிக் கொண்டு கிளம்புகிற போது இந்தப் பிரச்சினை மட்டும் மூச்சுவிட முடியாமல் முடக்கப்பட்டது ஏன்?

அல்லது முடங்கிக் கிடந்தது ஏன்?

ஆடவரை 'குடிமகன்' என்று சொன்னால் பெண்டிரை 'குடிமகள்' என்று சொல்ல வேண்டும் என்பதில் இருவேறு கருத்துக்கு இடமே இருக்க முடியாது.

இப்போது பிரச்சினையே அதுவல்ல; முதலமைச்சரோ, அமைச்சர்களோ, பதவி ஏற்கும்போது எடுத்துக் கொள்ளும் பதவிப் பிரமாண படிவத்தில் "குடிமகன்" என்றுதான் சொல்ல வேண்டும் என்று இருப்பதாகவும், ஜெயலலிதா முதல்வராகப் பதவியேற்றபோது அப்படிக் 'குடிமகன்' என்று சொல்லும்படியான நிலைக்கு உள்ளானதாகவும் - ஜெயலலிதா 110வது விதியின்படி அறிக்கை படித்து அவைக்குத் தவறான தகவலைத் தந்தாரா இல்லையா என்பதுதான்!

அந்தத் தவற்றினை அவர் வெளிப்படையாகவே ஒப்புக்கொண்டு, அதற்காக அவையில் வருத்தம் தெரிவித்திருக்கலாம் - அதுதான் பண்பாடும் பெருந்தன்மை!

எல்லாமே தனக்குத் தெரியும் என்பது போல; மற்ற 'மதியூக' அமைச்சர்களைக்கூடப் பேச விடாமல் குறுக்கிட்டு குறுக்கிட்டு அவைக்கு அநேக விஷயங்களைச் சொல்லுகிறார் ஜெயலலிதா - சார்ஸ் நோய்க்கு பப்பாளியும் துளசியும் என்ன பக்குவத்தில் சாப்பிட வேண்டும் என்கிற வரையில் சகல விஷயங்களிலும் சகல கலா வல்லியாக இருக்கும் முதல் அமைச்சருக்கு; அரசியல் சட்டத்தைப் பற்றியும் - பதவிப் பிரமாணப் படிவத்தைப் பற்றியும் - ஓர் இமாலயப் பொய்யை உரைத்து விட்டு; அது தவறு என்று கூறி வருத்தம் தெரிவித்துக் கொள்ளும் பெருந்தன்மையைக் கற்றுக் கொள்ளக்கூட முடியவில்லையா?

பிறகேன்; வழா வழா கொழ கொழா என்று விளக்கமளித்துக் கொண்டிருக்கிறார்?

தமிழ் நெஞ்சமாவது
தக்க பதில் கூறுமா?
அல்லது அதுவும் தடுமாறுமா?

அன்புள்ள,

மு.க.

08-05-2003

2916. மணி மண்டபமும் - “ குர் - ஆன் ” மணிமொழியும்!

உடன்பிறப்பே,

கண்ணியத்துக்குரிய காயிதே மில்லத் அவர்களுக்கு, கழக ஆட்சியில் கட்டி முடிக்கப்பட்டு; பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்ட காலகட்டத்தில் அரசு விழா எதையும் நடத்தக்கூடாது என்ற தேர்தல் ஆணையத்தின் விதிமுறை காரணமாக திறப்பு விழா நடத்தாமல் விடப்பட்ட காயிதே மில்லத் மணி மண்டபத் திறப்பு விழா இரண்டாண்டுக் காலமாக அ.தி.மு.க. ஆட்சியில் கிடப்பிலே போடப்பட்டு கழகச் சார்பில் விடுத்த பல கண்டன அறிக்கைகளுக்குப் பிறகு இன்று மாலை (8-5-2003) அமைச்சர் இருவரைக் கொண்டு திறப்பு விழா நடைபெறுவதாக விளம்பரம் செய்யப்பட்டுள்ளது.

அந்த மணிமண்டபம் கட்டுவதற்கான பணி தொடக்க அடிக்கல் நாட்டு விழா; என்னை வெற்றி பெற வைத்த சேப்பாக்கம் தொகுதியில் 25-2-2001 அன்று விமரிசையாக நடைபெற்றது. முஸ்லீம் இயக்கங்களைச் சேர்ந்த எல்லாப் பிரிவினரும் - அவர்களின் தலைவர்களும் அடிக்கல் நாட்டு விழாவில் கலந்து கொண்டு கழக அரசின் அந்தப் பணியைப் பெரிதும் போற்றிப் பேசினார்கள். பாராட்டினார்கள். வாழ்த்தினார்கள்.

இளமைக்கால முதல் இஸ்லாமியப் பெரு மக்களுடன் இணைந்து பொதுவாழ்வு நடத்தியவன் என்ற முறையிலும் - கான் பகதூர் கலிபுல்லா சாகிப் அவர்கள் கலந்துகொண்ட திருவாரூர் முஸ்லீம் லீக் மாநாட்டில் 1940களிலேயே பங்கேற்றுப் பணியாற்றிய காலந்தொட்டு - கண்ணியத்துக்குரிய காயிதே மில்லத் இஸ்மாயில் சாகிப் அவர்களுடன் அவரின் இறுதிக் காலம் வரையில் நட்புணர்வுடன் பழகியவன் என்ற முறையில், அந்த இனிய தலைவரின் எளிமையும், இதயத் தூய்மையும், என்னை

மிகவும் கவர்ந்தவை என்ற காரணத்தால் எழுப்பப் பெற்றதே என் தொகுதியில் அமைந்துள்ள காயிதே மில்லத் மணி மண்டபமாகும்.

பணி தொடங்கப்பெற்ற அதே வேகத்திலும் ஆர்வத்திலும் கட்டுமானப் பணிகள் நடைபெற்று முடிந்துவிட்ட போதிலும் - பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்டு விட்ட காரணத்தால்; கழக ஆட்சியில் திறப்பு விழா தள்ளி வைக்கப்பட்டு, இரண்டாண்டுகளுக்குப் பிறகு இந்த ஆட்சியில் இன்று திறந்து வைக்கப்படுவதிலே எனக்கு மகிழ்ச்சிதான்.

என் பெயர் பதிக்கப் பெற்ற அடிக்கல்லை அகற்றி விட்டதாகச் சிலர் என்னிடம் சொன்னார்கள். அது உண்மையோ அல்லவோ எனக்குத் தெரியாது - உண்மையெனில் அதற்காக கவலைப்படப் போவதில்லை.

வள்ளுவர் கோட்டம் திறப்பு விழாவின் போது கூட நான் அழைக்கப்படவுமில்லை; நான் நாட்டி வைத்த அடிக்கல்லும் அந்தக் கோட்டத்தின் திறப்பு விழாவின்போது காணப்படவில்லை. அதற்காக வள்ளுவர் கோட்டம்; யாரோ கட்டியது என்றா வரலாறு கூறியது!

அதேபோல காயிதே மில்லத் மணி மண்டபத்தில் நான் பதித்த அடிக்கல் அகற்றப்பட்டிருந்தாலும்; அந்தக் கல் அடியேன் பெயரைச் சொல்லிக் கொண்டுதானிருக்கும். கல் இருந்தால்; பார்த்து விட்டுப் போய்விடுவார்கள்! இல்லாவிட்டால் அதைப் பற்றிச் சிறிது நேரம் பார்வையாளர்கள் உரையாடிவிட்டுப் போவார்கள்.

இப்போது பிரச்சினை அடிக்கல் பற்றியது அல்ல! - அது இருக்கட்டும் அல்லது இல்லாமற் போகட்டும் - ஆனால் திடீரென்று இந்த அரசுக்கு காயிதே மில்லத் மணி மண்டபத் திறப்பு விழா நினைவு வந்தது எப்படி என்பதே கேள்வி! இந்தக் கேள்விக்கு ஒரே பதில்; "திசை திருப்புவதற்காக" என்பதுதான்!

இவர்கள் ஆட்சிக்கு வந்து இந்த இரண்டாண்டுகளில் எத்தனை எத்தனை துன்ப துயரங்கள்; எத்தனைப் போராட்டங்கள்; எல்லாப் பிரிவு மக்களிடையிலேயும்!

1991 முதல் 1996 வரையில் ஐந்தாண்டுகள் நடத்திய அ.தி.மு.க. ஆட்சியின் அநியாய, அக்கிரம, ஊழல்களைத்

தாங்கிக்கொள்ள முடியாமல் தவித்த மக்கள் 1996ல் நல்ல தீர்ப்பு அளித்து ஆட்சியையே அகற்றினார்கள்.

இப்போது ஐந்தாண்டு இடைவெளிக்குப் பிறகு மீண்டும் 2001ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்துள்ள அ.தி.மு.க. வின் சேட்டைகள், அவர்களது பழைய ஐந்தாண்டு ஆட்சியைவிடப் பயங்கரமாக மாறி யிருக்கின்றன என்பதை மக்கள் அனுபவரீதியாக உணர்ந்தே இருக்கிறார்கள்.

திருக்குர்ஆனில் பாகம் 11இல் அத்தியாயம் 10ல் பின்வரும் பகுதி, இன்றைய நிலைக்கு எவ்வளவு பொருத்தமாக இருக்கிறது பாருங்கள் !

‘மனிதர்களுக்குத் துன்பம் ஏற்பட்ட பின் நாம் அவர்களுக்கு அருட் கொடையை சுவைக்கச் செய்தால், உடனே அவர்கள் நம் சான்றுகளுக்கு எதிராக சூழ்ச்சி செய்யத் தொடங்கி விடுகின்றார்கள். “அல்லாஹ் சூழ்ச்சிகளை முறியடிக்கச் செய்வதில் மிக விரைவானவன். அவனுடைய வானவர்கள் நீங்கள் மேற்கொள்ளும் சூழ்ச்சிகளை எழுதிக் கொண்டிருக் கின்றார்கள்’’ தரையிலும், கடலிலும் உங்களை இயங்கச் செய்பவன் அவனே! பிறகு நீங்கள் கப்பல்களில் ஏறி, சாதகமாக வீசும் காற்றோடு மகிழ்ச்சி பூர்வமாக பயணம் செய்து கொண்டிருக்கும்போது திடீரென்று கடுமையான எதிர்க்காற்று வீசுகிறது. மேலும், எல்லாப் பக்கங்களிலிருந்தும் அலைகள் தாக்குகின்றன. அப் பொழுது தாம் கடும் பிரளயத்தால் சூழப்பட்டுள்ளதாகப் பயணிகள் எண்ணுகிறார்கள். அந்நேரத்தில் அவர்கள் கீழ்ப்படிதலை (தீனை) அல்லாஹ்வுக்கு மட்டுமே உரித்தாக்கி, “இறைவா! இத்துன்பத்திலிருந்து நீ எங்களைக் காப்பாற்றினால் திண்ணமாக நாங்கள் நன்றியுடையவர்களாய் இருப்போம்” என்று அவனிடம் இறைஞ்சுகின்றார்கள். ஆயினும் அல்லாஹ் அவர்களைக் காப்பாற்றி விட்டாலோ, உடனே அவர்கள் சத்தியத்திற்கு எதிராக பூமியில் வரம்பு மீறி. நடக்கத் தலைப்பட்டு விடுகின்றார்கள்.”

இறைவனிடம் இறைஞ்சி; இறைவனால் காப்பாற்றப்பட்ட பிறகு, மீண்டும் அந்த மனிதர்கள் வரம்பு மீறி நடப்பது போலவே -

அ.தி.மு.க. ஆட்சியாளரும் வாக்காளர்களிடம் இறைஞ்சி; அவர்களின் மன்னிப்பைப் பெற்று, ஆட்சிக்கு வந்தவுடன் வரம்பு மீறி நடக்கத் தலைப்பட்டு விட்டார்கள்.

"இந்த வரம்பு மீறுதல் உங்களுக்குத்தான் கேடு விளைவிக்கும்" என்று திருக்குர் ஆன்; அதே அத்தியாயத்தில் தெளிவுற எச்சரிக்கவும் தவற வில்லை என்பதை, காயிதே மில்லத் மணி மண்டபம் திறக்கப்படும் நாளில் கவனமூட்டுகிறேன்.

அன்புள்ள,

மு.க.

09-05-2003

2917. நடக்கக் கூடாததும்; நடந்ததும்!

உடன்பிறப்பே,

இப்படி நடந்து விடக் கூடாது என்பதற்காக ஒரு கடிதமும் -

ஏற்கனவே கழக ஆட்சியில் எப்படி நடந்தது என்பதை விளக்கிட ஒரு கடிதமும் -

ஆக - இரண்டு கடிதங்கள் இன்றைய கடிதத்தில் அடக்கம்.

நடக்கக் கூடாதது:

தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணி விதிகள், விதி 12 (டி) இன்படி, அடிப்படை கல்வித் தகுதி பத்தாம் வகுப்பு என்றால், அந்தத் தகுதியிலே உள்ள பதவிகளிலே சேர விரும்புவோருக்கு வயது வரம்பை நிர்ணயிக்கும் போது,

விண்ணப்பம் செய்வோர் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவராக இருந்தால் அவர்கள் விண்ணப்பம் செய்துகொள்ள அதிகப்பட்ச வயது வரம்பு 35 ஆகும். இதன்படி அத்தகைய பதவிகளுக்கு விண்ணப்பம் செய்வோர் தங்களுடைய 35வது வயது வரை விண்ணப்பம் செய்வதற்கு தகுதி உடையவர்களாக இருந்தார்கள்.

ஆனால் தமிழ்நாடு காவல் துறையிலே உள்ள காவலர் பதவிக்கு விண்ணப்பிப்போருக்கு தற்போது நிர்ணயிக்கப்பட்டுள்ள அதிகப்பட்ச வயது வரம்பை, தாழ்த்தப்பட்ட இனத்தவருக்கு இதுவரை 35 வயது என்றிருந்ததை, 29 வயது என்று குறைக்க அரசு முடிவெடுத்திருப்பதாக தகவல் கிடைத்துள்ளது. இது உண்மையாக இருக்கும்பட்சத்தில் இனிமேல் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த 30 வயது முதல் 35 வயது வரை உள்ளவர்கள், விண்ணப்பம் செய்ய முடியாது.

"கல்வித் தகுதி பத்தாம் வகுப்பு" என்று நிர்ணயிக்கப்பட்டுள்ள பதவிகளுக்கு விண்ணப்பம் செய்வோரில் பெரும்பாலோர்

தாழ்த்தப்பட்ட சமுதாயத்தையும், பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தையும் சேர்ந்தவர் களாகத்தான் இருப்பார்கள். முன்னேறிய சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் யாரும் இந்தப் பணிகளை பெறுவதற்காக விண்ணப்பிக்க மாட்டார்கள்.

எனவே தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த இனத்தவர்களைப் பெரிதும் பாதிக்கக்கூடிய வகையில் குறிப்பிட்ட பணிக்கு விண்ணப்பம் செய்வதற்கான அதிகப்பட்ச வயது வரம்பை 35 வயதிலிருந்து 29 வயதாக அரசு குறைத்திடுவது என்பது வேண்டுமென்றே இந்த வகுப்பினர்களைத் துன்புறுத்துகின்ற காரியமாகிவிடும்.

அதேபோல பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் இதுவரை 32 வயது வரை அத்தகைய பணிகளுக்கு விண்ணப்பிக்கலாம் என்று அனுமதிக்கப்பட்டிருந்தது. தற்போது தமிழ்நாடு காவல் துறையில் உள்ள காவலர் பதவிக்கு அதிகப்பட்ச வயது வரம்பு பிற இனத்தினருக்கு இதுவரை 32 வயது என்றிருந்தது 24 வயதாகக் குறைக்கப்படுவதாகத் தகவல் கிடைத்துள்ளது. இந்தத் தகவல் உண்மையாக இருக்கும் பட்சத்தில் பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் இனிமேல் 25 வயதாகவோ, 26 வயதாகவோ, 27 வயதாகவோ இருப்பார்களானால் அவர்களால் இந்தப் பணிக்கு விண்ணப்பம் செய்ய முடியாது. 24 வயது வரை உடையவர்கள் மட்டுமே இந்தப் பணிக்கு விண்ணப்பிக்க முடியும். இதுவரை 24 வயது முதல் 25/32 வயது வரை ஆகியிருந்த பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த மக்கள் இத்தகைய பணிகளில் சேருவதற்காக விண்ணப்பம் அளிக்க இருந்த வாய்ப்பு, தற்போது இந்த ஆட்சியில் மறுக்கப்பட்டிருப்பதாக புகார்கள் வந்துள்ளன. இந்தப் புகார் உண்மையாக இருக்கக் கூடாது. உண்மையாகாமல் பார்த்துக்கொள்ள வேண்டிய பொறுப்பை இந்த அரசினர் உணர்ந்து நடந்து கொள்ள வேண்டும்.

இந்த "அநீதி" நடக்கக் கூடாது என்பதே நமது உறுதியான கருத்து!

நடந்தது :-

கழக ஆட்சியிலே நடந்ததை நினைவூட்ட இந்தக் கடிதம்.

தி.மு. கழகம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது தமிழ்நாடு முழுவதும் உள்ள மருத்துவக் கல்லூரி மாணவர்கள் மற்றும் பயிற்சி டாக்டர்கள் தமிழகத்தில் தனியார் மருத்துவக் கல்லூரிகள் தொடங்க அனுமதிக்கக் கூடாது, தமிழ்நாட்டில் உள்ள பயிற்சி டாக்டர்களுக்கு மாதம் 14 ஆயிரம் ரூபாய் வழங்க வேண்டும் என்பது உட்பட 16 கோரிக்கைகளை வலியுறுத்தி 17-2-2000 முதல் காலவரையற்ற போராட்டத்தைத் தொடங்கினார்கள். இந்தப் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது நான் சுற்றுப் பயணத்திலே இருந்தேன்.

எனவே 19-2-2000 அன்று இரவு திருச்சியிலிருந்து நான் விடுத்த அறிக்கையிலே, கோரிக்கைகளைப் பேசித் தீர்த்துக் கொள்ளலாம் என்றும், எனது சுற்றுப் பயண நிகழ்ச்சி முடிந்து 24-2-2000 அன்று சென்னை திரும்பியதும் நேரில் பேசலாமென்றும் அதுவரையில் வேலைநிறுத்தப் போராட்டத்தை நிறுத்தி வைக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டேன். இதன் தொடர்ச்சியாக 21-2-2000 அன்று தலைமைச் செயலாளரையும் அவர்களிடம் பேசிடுமாறு கேட்டுக் கொண்டேன். தலைமைச் செயலாளர், மாணவர்களைப் பேசுவதற்கு அழைத்ததோடு, வேலை நிறுத்தத்தையும் தள்ளிவைக்குமாறு கேட்டுக் கொண்டார். ஆனால் அவர்கள் அதைக் கேட்காமல் தொடர்ந்து போராடினார்கள். அந்த நிலையில் 24-2-2000 அன்று பயிற்சி டாக்டர்களின் மாத உதவித் தொகை ரூ. 2250 என்றிருந்ததை 3000 ரூபாயாகவும், பட்ட மேற்படிப்பு பணிசாரா மருத்துவர்களுக்கு மாத உதவித் தொகை 2500 ரூபாயை 4000 ரூபாயாக உயர்த்தி 1-3-2000 முதல் அந்த உத்தரவு அமலுக்கு வரும் என்று கழக அரசு அறிவித்தது.

இதற்குப் பிறகும் அவர்கள் போராட்டத்தை நிறுத்தவில்லை. தொடர்ந்து போராடிக் கொண்டிருந்தார்கள்.

3-3-2000 அன்று பேரவையில் த.மா.கா., சார்பில் திரு. ஞானசேகரன் இந்தப் பிரச்சினை குறித்து சிறப்பு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்தார். அந்தத் தீர்மானத்தின் மீது அ.தி.மு.க. சட்டப் பேரவை உறுப்பினர் சுந்தரம் தடையின்றிப் பேசுவதற்கு அனுமதிக்கப்பட்ட போது,

> "இப்போது மருத்துவமனைகளில் பயிற்சி டாக்டர்கள் இல்லாததால் புற நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கும்

பணி தடைபடுகிறது. கவுரவம் பார்க்காமல் அவர்களை அழைத்துப் பேசுங்கள். ஆளுங்கட்சி பிரமுகர்கள் புதிய மருத்துவக் கல்லூரி தொடங்க சிக்கல் ஏற்பட்டுவிடும் என்பதால் தனியார் மருத்துவக் கல்லூரிக்கு தடை விதிக்க நீங்கள் பயப்படுகிறீர்கள்" என்றார். (இந்தப் பேச்சு அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படாமல் இடம் பெற்றது)

உடனே மக்கள் நல்வாழ்வுத் துறையின் அமைச்சர் ஆர்க்காடு வீராசாமி குறுக்கிட்டு; "காஞ்சி சங்கராச்சாரியார், பங்காரு அடிகளார், ஏ.சி. முத்தையா, ஜேப்பியார், ஏ.சி. சண்முகம், ஜெகத்ரட்சகன் போன்ற சிலர் சுய நிதி மருத்துவக் கல்லூரிகளுக்கு அனுமதி கோரியுள்ளனர். ஆனால் எந்தச் சூழ்நிலையிலும் தனியார் மருத்துவக் கல்லூரிகளை அனுமதிப்பதில்லை என்பதே இந்த அரசின் கொள்கை" என்றார்.

எதிர்க்கட்சித் தலைவர் திரு. சோ. பாலகிருட்டினன் கூறியதற்கிணங்க மருத்துவ மாணவப் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசுவதற்கு முதலமைச்சர் தயார் என்று பேரவையிலேயே அறிவிக்கப்பட்டது. அதன்படி மார்ச் 4ந்தேதி, அதாவது மறுநாளே பேச்சுவார்த்தை நடைபெற்றது. பேச்சுவார்த்தை சுமுகமாக முடிந்து போராட்டத்தை அன்றையதினமே திரும்பப் பெற்றார்கள்.

கழக ஆட்சிக் காலத்தில் மருத்துவக் கல்லூரி மாணவர்கள் மற்றும் பயிற்சி மருத்துவர்கள் போராட்டம் நடத்தியபோது எந்த அளவிற்கு அந்தப் பிரச்சினை தீர்க்கப்பட்டது என்பதற்கு இந்தக் கடிதம்.

அன்புள்ள,

மு.க.

10-05-2003

2918. முதுகைக் காட்டியவனுக்கு "மூட்டைகனம்" இருந்தது!

உடன்பிறப்பே,

* சட்டப் பேரவையில் இரண்டு திராவிடக் கட்சிகளும் இலாவணி பாடிக்கொண்டு நேரத்தைப் போக்குகிறார்களே தவிர, மக்கள் பிரச்சினையைப் பற்றி பேச மறந்து விடுகிறார்கள்.

* தி.மு.க. - அ.தி.மு.க. இரண்டுமே காவேரித் தண்ணீர் வராததற்கு யார் காரணம் என்று சண்டை போடுகிறார்களே தவிர, ஆக்கபூர்வமான கருத்துக்களுக்கு இடமளித்து டெல்டா விவசாயிகளைக் காப்பாற்றத் தவறி விடுகிறார்கள்.

* சட்டப் பேரவையில் இரண்டு திராவிடக் கட்சிகள் ஒன்றோடொன்று இலாவணி பாடுவதால் எங்கள் கருத்துக்களைச் சொல்லி மக்கள் பிரச்சினைக்காக கவனம் செலுத்த முடியாமல் போய்விடுகிறது.

இவ்வாறு, தி.மு.க. - அ.தி.மு.க. அல்லாத சில கட்சிகள் அ.தி.மு.க. வுடன் தி.மு.க. வையும் ஒப்பிட்டு இரண்டுமே மோசம் என்று குற்றம் சுமத்துவதிலே ஒரு சுகம் கண்டு வந்தார்கள். தி.மு.க. என்றாலே எரிச்சலுடன் நோக்கும் சில ஏடுகள் கூட இந்த மாதிரி விமர்சனங்களிலே பெருமகிழ்ச்சி அடைந்து கொண்டிருந்தன.

உடன்பிறப்பே; நான் சொல்வதில் உனக்கு சந்தேகம் இருந்தால் இந்தத் தடவை கவர்னர் உரை விவாதத்தின் போதும் - நிதி நிலை அறிக்கை மீது நடைபெற்ற பொது விவாதம் - ஆரம்பக் கட்டங்களிலும்; காவல் துறை மானிய விவாதம் முடிய இருந்த கடந்த காலத்திலும் - இதே மாதிரிதான் தி.மு.க.வையும், அ.தி.மு.க.வையும் ஒரே மாதிரி ஒப்பிட்டு சில கட்சியினர் பேசினர். இதழாளர்கள் எழுதினர்.

காலப் போக்கில்; நடுநிலையும் ஜனநாயகமும் ஆழக் குழிதோண்டி நடப்பட்ட நிலைமைக்கு உள்ளாகிவிட்ட காரணத்தால் கூட்டத் தொடரை முற்றாகப் புறக்கணிக்க தி.மு.க. சட்டமன்ற கட்சி முடிவெடுத்து வெளிவந்த பிறகு; "இரண்டு திராவிடக் கட்சிகளின் இலாவணி" என்று நம்மையும் சேர்த்து சில கட்சிகள் பாடிய பல்லவியைக் கேட்க முடியவில்லை.

காரணம்; வசைமொழிகளையும் தடித்த வார்த்தை களையும் தாங்கித் தீரவேண்டிய வரிசையில் நின்ற நாம்; அந்த வரிசையிலிருந்து விலகி ஒதுங்கிப் போய் விடவே அவ்வரிசைக்கு வழங்க வேண்டிய பரிசை, ஆளுங்கட்சி அட்டியின்றி அமோகமாகவே வழங்கி வந்தது!

எழுதப்பட்ட மொய்ப்பணத்தையோ, கொடுக்கப்பட்ட பரிசையோ திருப்பித் தர உரிமையுடன் முன் வந்தவர்கள் தடுக்கப்பட்டார்கள். முறை மீறப்பட்டது. எரிச்சலூட்டக்கூடிய வார்த்தைகளை எடை போடாமலே - எண்ணிக்கையில்லாமலே - எடுத்து வீசும் உரிமை எங்களுக்கே உண்டு; எதிர்க்கட்சி, இதழையும் அசைக்கக்கூடாது - இமையையும் திறக்கக் கூடாது - எதிர் வார்த்தை பேச எழுந்து நின்றாலே - அனுமதி மறுப்பு! - அதையும் மீறி வாயசைத்து விட்டால்; அவைக் குறிப்பில் இடம் பெற விட மாட்டோம் - இப்படியொரு அனுபவத்தை; தி.மு.க. கலந்து கொள்ளாமல் ஒதுங்கியிருந்த கால கட்டத்தில் அந்தக் கட்சிகள் பெற முடிந்தது - ஏடுகள் உணர முடிந்தது!

"இரு திராவிடக் கட்சிகளின் இலாவணி" என்ற பல்லவி; அவர்கள் மீது இடித்த இடி முழக்க ஒலியில் பேய்க் கூச்சல் பிரளயத்தில் - ஈனஸ்வர மெல்லிசையாகிப் போனது.

உடன்பிறப்பே; 'இலாவணி' என்று சிலர் கேலி செய்தார்களே; அலுத்துக் கொண்டார்களே; அதிலே கூட எனக்கு வருத்தமில்லை ..... இரு திராவிடக் கட்சிகள் என்று தி.மு.க.வுடன், அ.தி.மு.க. வையும் ஒப்பிட்டு, அந்தக் கட்சியையும் திராவிடக் கட்சி என்றார்களே, என்கிறார்களே, அதுதான் எனக்குப் பெரும் வேதனை!

இப்படிப் புரியாமல் இருக்கிறார்களே என்கிற வேதனை - அவ்வப்போது அரசியல் ரீதியாக சில வேறுபாடுகள் ஏற்படினும் - சமுதாய ரீதியாக - சுயமரியாதைச் சுடர் ஏந்தி - பகுத்தறிவுப்

பாதையிலே பெரியார் அவர்களின் அடிபொற்றி நடை போட்டு - அண்ணா கற்றுத் தந்த அணுகுமுறை கடைப்பிடித்து, அய்யாவின் கொள்கை குறிக்கோளுக்கு வெற்றி தேடும் முயற்சியில் தன்னையே பணயமாக வைத்துச் செயல்படும் தியாகக் கோட்டம் - தீரர் பாசறை -1 தி.மு. கழகத்தை - ஆம்; அண்ணாவின் இயக்கத்தை "அம்மா"வின் இயக்கத்துடன் ஒப்பிடுவதை எப்படி ஒப்ப முடியும்?

எப்படியோ எஞ்சிய நாட்களும் கூட்டத் தொடரை நாம் முற்றாகத் தவிர்த்து ஒதுங்கியிருந்த காரணத்தால் "இலாவணி" என்ற விமர்சனத்திலிருந்தும் "திராவிடக் கட்சிகள்" என்ற ஒப்பீட்டிலிருந்தும் தப்பித்தோம்.

ஆனால் நமது அன்பிற்குரிய மற்ற கட்சி நண்பர்கள் சிக்கிக் கொண்டார்கள். உளி நிகர்த்த வார்த்தைப் பிரயோகங்கள் - வெளி நடப்புகள் - நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும் இதுவே "நித்ய நிகழ்ச்சி" என ஆயிற்று!

தி.மு.க. - அ.தி.மு.க. என்று விமர்சிக்கப்பட்ட "இலாவணி"- "அ.தி.மு.க. - மற்ற கட்சிகள்" என்று இடம் மாறியது.

இப்படி இடமாற்றம் ஏற்படுவதற்கு முன்பும், ஏற்பட்ட பின்பும்; பேரவையில் மற்ற அமைச்சர்கள் வீசிய சொற்கள் கிடக்கட்டும்; பிரதான அமைச்சர் ஜெயலலிதா எப்படி முத்து முத்தான (2) சொற்கள் எடுத்து மூத்தோர் இளையோர் என்று வித்தியாசம் பாராமல் கணைகளாக்கி வீசியுள்ளார் என்பதைச் சற்று கவனிப்போம்.

ஜெயலலிதா பேரவையில் சிந்திய பொன்மொழிகள்.

"எதிர்க்கட்சி வரிசைகள் எல்லாம் காலியாக இருக்கின்றன. அதற்காக நான் கவலை கொள்வேன் என்று நினைத்தால் ஏமாந்து போவார்கள், எதிர் வரிசை காலியாக இருப்பது நம்மை எதிர்ப்பதற்கு தமிழ்நாட்டில் யாருமே இல்லை என்பதை காட்டுகின்றது. பத்திரிகைகள் மீது நான் என்றைக்கும் நம்பிக்கை வைத்தது இல்லை. இப்போதும் வைக்கவில்லை.

தி.மு.க. தலைவர் ஏன் இன்னும் எம்.எல்.ஏ. பதவியில் ஒட்டிக் கொண்டிருக்கிறார்?

தளபதி என்றால் எந்நேரமும் மவுனம் சாதிக்கிறார்.

எதிர்க்கட்சித் தலைவர் பேராசிரியர் பாவம், இரண்டு வார்த்தைகள் பேசி விட்டு கும்பிடு போட்டு விட்டுப் போய் விடுகிறார்.

ஆர்க்காடு வீராசாமிக்கு என்ன பிரச்சினையோ தெரியவில்லை.

துரைமுருகனுக்கு ஏதோ உபாதைகள்.

காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரை எஸ்.ஆர்.பி. அவர்களுக்கு எப்படி அரசியல் நடத்துவது என்று புரியவில்லை. எஸ்.ஆர்.பி. அவர்களுக்கு இவ்வளவு அகம்பாவம் கூடாது.

வறட்சி ஏற்பட்டுள்ள நிலையில் எதிர்க்கட்சிகள் எங்கே மரணம் ஏற்படுகிறது என்று காத்திருந்து பட்டினி சாவு என்று சொல்வது மலிவான அரசியல் ஆகும்.

பத்திரிகைகள் எல்லாம் வழக்கமாக எங்களை கரித்துக் கொட்டும் பத்திரிகைகள்தான். இந்தப் பத்திரிகைகள் பற்றி எல்லாம் எங்களுக்கு கவலை இல்லை. அவை என்ன எழுதினாலும் கவலைப்பட மாட்டோம்.

ஆளுங்கட்சியில் புதிதாகச் சேர்ந்த குமாரதாஸ் அரசை குறை கூறி ஒரு வார்த்தை கூறினார் என்பதற்காக முதலமைச்சர் ஜெயலலிதா குறுக்கிட்டு "இப்போது குமாரதாஸ் ஆளுங்கட்சி உறுப்பினர் என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன். ஏதாவது தகவல் கிடைத்தால், என்னிடமோ, சம்பந்தப்பட்ட அமைச்சரிடமோ அவர் எழுதித் தரலாம். இப்படி சட்டசபையில் சொல்ல வேண்டிய அவசியமில்லை" என்றார்.

இள. புகழேந்தி பேச்சில் முதலமைச்சர் குறுக்கிட்டு, "உங்கள் தலைவர் சபைக்கு வருவதில்லை, அவர் சார்பில் நீங்கள் பேசுவதாகச் சொல்கிறீர்கள். அவர் சபைக்கு வராததற்கு ஆற்றாமை, இயலாமைதானே காரணம்" என்றார்.

கழுதை என்பது உழைப்புக்கு இலக்கணமான சொல். அவைக் குறிப்பில் அந்தச் சொல் இருப்பதில் தவறில்லை.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் மார்க்சிஸ்ட் சித்தாந்தம் பற்றிக் குறிப்பிட்டார்.

இதனால்தான் கம்யூனிஸ்டுகள் மக்களுக்கு பயன் இல்லாமல் போய்விட்டனர். எப்போது பார்த்தாலும் எங்கே பார்த்தாலும்

போராட்டம், போராட்டம் என்றுதான் இருப்பார்கள். அல்லது செயற்குழு கூட்டம் கூட்டி மூன்று நான்கு நாட்கள் பேசிக் கொண்டே இருப்பார்கள். இதைத் தவிர ஆக்கபூர்வமான நடவடிக்கையில் ஈடுபடுவதே கிடையாது.

மேற்கு வங்காளத்தில் மார்க்சிஸ்ட் கட்சி தொடர்ந்து ஆட்சியில் இருக்கும் ரகசியம், ஒவ்வொரு தேர்தலிலும் தேர்தல் முறைகேடு செய்வதாகக் கேள்விப்படுகிறோம்.

முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி சாலை மறியல் செய்தால், அவரை தூக்கிக் கொண்டு போய் வீட்டில் விடுங்கள் என்று உத்தரவிட்டேன். ஆனால் கருணாநிதி - அத்தகைய சாகசங்களில் ஈடுபடவில்லை. போட்டோவுக்குப் போஸ் கொடுத்துவிட்டு போய்விட்டார்.

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மக்கள் கடமை ஆற்றாமல் தங்களது பொறுப்பை மறந்து பொறுப்பு கெட்டத்தனமாக நடக்கிறார்கள் என்று மக்கள் வெறுக்கிறார்கள்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் ஜனநாயகத்தைப் பற்றியும், சுதந்திரத்தைப் பற்றியும் இங்கு பேசுவது வேடிக்கையாக இருக்கிறது. அவர்கள் கட்சி ஆட்சி செய்யும் மேற்கு வங்காளத்தில் 19 ஆயிரம் உள்ளாட்சி மன்றத் தொகுதிகளில் எதிர்க்கட்சியினர் வேட்பு மனு தாக்கல் செய்யவே அனுமதிக்கப்படவில்லை.

நிதானம் இழந்து எஸ்.ஆர். பாலு அபாண்டமாக பழி சுமத்துகிறார்.

பொது உடைமை தத்துவம் இப்போது உலக அளவில் மாறுதலுக்கு உட்பட்டிருக்கிறது. ஆனால் தமிழக கம்யூனிஸ்டு கட்சிகள் தங்களை மாற்றிக் கொள்ள மறுக்கின்றன.

வனத்துறை பற்றி பாட்டாளி மக்கள் கட்சியினர் பேசுவது வேடிக்கையானது. எத்தனையோ வளர்ந்த மரங்களை பாட்டாளி மக்கள் கட்சியினர் வெட்டி சாய்த்துள்ளனர். பா.ம.க. என்றாலே மரம் வெட்டும் கட்சி என்ற பெயர் உள்ளது.

மத்திய அமைச்சர் டி.ஆர். பாலு தன்னிச்சையாக அரசியல் சட்டத்திற்கு விரோதமாக செயல்பட்டிருக்கிறார். அவர் ஒன்றும் இந்த நாட்டின் சர்வாதிகாரி இல்லை. டாக்டர் ராமதாஸ் எனக்கு

அறிவுரை கூறுவதை இத்தோடு நிறுத்திக் கொள்ள வேண்டும். உடன்பிறப்பே, இந்த அர்ச்சனைகள், பூஜைகள், அனைத்தும் நிறைவேறி இனிது நடந்துள்ள சட்டப் பேரவை இன்றுடன் இந்தக் கூட்டத் தொடரை முடிக்கிறது. வாழ்க சட்டமன்ற உறுப்பினர்கள்!

விடிய விடிய மகா பாரதக் கதை கேட்கப் போனான் ஒருவன்!

அவன் முதுகில் ஒருவன் ஏறி உட்கார்ந்து கொண்டு அவனும் கதை கேட்டான்!

பாரதக் கதை எப்படி இருந்தது என்று கேட்டான் மற்றொருவன்!

பச்சைக் குதிரை தாண்டுவது போல இருந்தது என்றான்; முதுகில் ஏறி உட்கார்ந்தவன்!

முதுகைக் காட்டிக் கொண்டிருந்தவன் சொன்னான்; "மூட்டை கனம் இருந்தது" என்று!!

அன்புள்ள,

மு.க.

11-05-2003

2919. இலைமறை காயாக ஓர் இடித்துரை!

உடன்பிறப்பே,

‘இலையுடன் போய் ஒட்டிக் கொண்டதால் தானோ என்னவோ தம்பி காளிமுத்து இலைமறை காயாகப் பேசி நிலை விளக்கம் தர வேண்டிய சூழ்நிலைக் கைதியாகத் தன்னை மாற்றிக் கொண்டிருக்கிறார். ஏதோ ஓர் அச்சத்தின் காரணமாக - நினைத்ததை - அல்லது சொல்ல வேண்டியதை நேரடியாகச் சொல்லாமல்; அதாவது அப்பட்டமாகச் சொல்லாமல் மறை பொருளாகச் சொல்வதை இலைமறை காயாகச் சொல்கிறார்கள் என்று கூறுவது வழக்கம். அந்த வழக்கத்தைப் பின்பற்றி; பேரவையில் பட்ஜெட் கூட்டத் தொடர் இறுதி நாளில் அவர் சில விஷயங்களை ஒளிவு மறைவாக உணர்த்தி, இந்த அண்ணனுக்குப் பெருமை சேர்த்திருக்கிறார். ‘இலை’ அணி என்பதால்; “எதையும் பகிரங்கமாக அறிவித்து விட்டால் பரிமாறப்படாத இலை” என தன் இலை ஆகி விடும் என்ற உண்மையை உணர்ந்து - அந்தப் பயத்துடன் ‘இலை மறை காயாக’ கருத்தொன்றை அந்த அவையில் ஊன்றியிருக்கிறார்.

கழக அணியில் நம்முடன் இருந்த போது; அவர் காலைச் சூரியனாக எழுந்து பனி மூட்டம் கலைப்பதையும் - மாலைச் சூரியனாகத் திகழ்ந்து மந்த மாருதம் பொழிவதையும் - உச்சிச் சூரியனாக நின்று தனல் உமிழ்ந்து கயவர்களை சுட்டெரிப்பதையும் கண்டிருக்கிறோம்.

ஆனால் இப்போது சட்டப் பேரவைக் கூட்டத் தொடர் இறுதி நாளில் அவர் என்னைப் பாராட்டியுள்ள விதத்தைத்தான் - இலை மறை காய்ப் புகழ்ச்சி என்றும், காளமேகப் புலவர்,

“பெருமாள் நல்ல பெருமாள் அவ்தம்

திருநாளும் நல்ல திருநாள் - பெருமாள்

இருந்திடத்திற் சும்மா இராமையினாலையோ

பருந்தெடுத்துப் போகிறதே பார்”

- என்று கடவுள் மீது பாடிய நிந்தாஸ்துதிக்கு நிகரானது என்றும் உண்மையிலேயே எடுத்துக் கொள்கிறேன்.

முதலில் அவர்; முதலமைச்சருக்கு சூட்டியுள்ள புகழாரத்தைச் சற்று ஆய்வு செய்யலாம்!

‘அரசியல் ஞானி’ என்று பட்டமளித்துப் பாராட்டியிருக்கிறார். தம்பி காளிமுத்துவின் கிண்டல்’ என்று சொல்லாமல் இதனை வேறென்ன சொல்வது?

“பதவிப் பிரமாணம் எடுக்கின்ற படிவம் அரசியல் சட்டத்தில் இடம் பெற்றிருக்கிறது. அதில் ‘குடிமகன்‘ என்று மாத்திரம் குறிப்பிடப்பட்டு, ‘குடிமகள்’ என்பது மறுக்கப்பட்டு பெண்களுக்கு அரசியல் சட்டத்தில் அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது. அதை மாற்றி இதோ அரசாணை பிறப்பிக்கப்படுகிறது”

என்று - அரசியல் சட்டத்தின் மீதும், அதை இயற்றிய கர்த்தா அண்ணல் அம்பேத்கர் மீதும் வீண் பழி சுமத்தி - அவதூறு கூறி - அரசியல் சட்டத்தைப் பற்றித் தனக்கு ‘அரிச்சுவடி’ கூடத் தெரியாது என்று அவை நடுவே காட்டிக்கொண்ட அம்மையாரை “அரசியல் ஞானி” என்று அவைத் தலைவர் அருமைத்தம்பி காளிமுத்து பாராட்டுவதைவிடக் கேலி மொழி என்னவாக இருக்க முடியும் ?

“அரசியல் சட்டத்தைப் பற்றித் தவறாகச் சொல்லுகிறீர்கள் - அதில் உள்ள பதவிப் பிரமாணப் படிவம் எதிலும் நீங்கள் சொல்வதுபோல பெண்களுக்கு அநீதி இழைக்கும் எந்த வார்த்தையும் இல்லை” என்று நான் திட்டவட்டமாகத் தெரிவித்த பிறகு -

“அரசியல் சட்டத்தில் தீண்டாமை ஒழிப்பு உறுதி மொழியில் அப்படி இருக்கிறது” என்று திருத்த அறிக்கை கொடுத்து; அந்த அறிக்கையும் ‘அபத்தம்’ என்று ஆன பிறகு -

“அரசியல் ஞானி” என்று விருது அளிப்பது வேண்டுமென்றே செய்யும் கிண்டல் எனினும்; அதனை எவ்வளவு நாசுக்காக - நாகரிகமாக - தனக்கேயுரிய நாவன்மையுடன் தம்பி காளிமுத்து செய்திருக்கிறார்! அந்தக் கூட்டத் தொடர் இறுதி நாள் அவர்

ஆற்றிய உரையில் கோடிட்டுப் பத்திரப்படுத்திப் பாதுகாத்து; நாம் எடுத்து, எடுத்து; எழுத்து எழுத்தாகப் படிக்க வேண்டிய வரிகள் வருமாறு :

வரிகள் என்றதும் இந்த அரசு அள்ளிப் பொழிந்திருக்கும் 'வரி விதிப்பு'களை கற்பனை செய்து கொள்ளக் கூடாது! வாக்கியங்களை அமைக்கும் வரிகளைத்தான் குறிப்பிடுகிறேன். இதோ பேசுகிறார்; அவைத் தலைவராக அமர்ந்து - தம்பி காளிமுத்து; கேளுங்கள் !

> "நான் இந்த மாமன்றத்தில் எதிர்க் கட்சி உறுப்பினராகப் பணியாற்றிய போது, எவ்வளவு கடுமையாக நான் பேசினாலும் அப்போதைய முதல்வர் ஓர் ஏளனப் புன்னகையோடு பார்த்துக் கொண்டிருப்பாரே தவிர, அவர் பதில் சொல்வதில்லை. மற்ற அமைச்சர்கள் எனக்குப் பதில் சொல்ல எழுந்தாலும், தடுத்து விடுவார். இத்தனைக்கும் என்னை மாணவப் பருவத்திலிருந்து நெருக்கமாக அறிந்தவர் அவர்.
>
> ஓர் உறுப்பினருடைய பேச்சில் முதல்வரோ அமைச்சர்களோ குறுக்கிடாமல் இருப்பதற்கு என்ன காரணம்? அது தான் அந்த உறுப்பினருக்கும் அவர் பேசும் கருத்துக்கும் முக்கியத்துவம் இல்லாமல் ஆக்கப்படும் உத்தி என்பதைப் பின்னாளில் நான் புரிந்து கொண்டேன்"

இப்படிப் பேசியுள்ள அவைத் தலைவர் காளிமுத்து எதிர்க்கட்சி உறுப்பினராக இருந்த போது - அதாவது தி.மு.க. வில் வெற்றி பெற்று அ.தி.மு.க. வில் இருந்த போது - நான் முதலமைச்சராக இருந்ததைத்தான் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் ஒன்று; சட்டமன்ற நடவடிக்கைக் குறிப்புப் புத்தகத்தை எடுத்துப் பார்த்தால் - குறுக்கிட்டுப் பதில் அளிக்க வேண்டிய நேரங்களில் அண்ணா அவர்களோ, நானோ, அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களோ முதலமைச்சர்களாக இருந்தபோது குறுக்கிட்டுப் பதில் அளித்திருக்கிறோம். வேலை அதிகமில்லாத சபாநாயகர் பதவியில் இருப்பதால், தம்பி காளிமுத்து பேரவை நடவடிக்கைப் புத்தகங்களை நூல் நிலையத்திலிருந்து வரவழைத்துத் தெரிந்து கொள்ளலாம். அவருக்கே அனுபவ ரீதியாக அது தெரியும்! இருந்தாலும்; இந்த ஆட்சியில் குறுக்கீடுகள்

அதிகம் என்பதை அவர் இவ்வாறு குத்திக்காட்டியிருக்கிறார் என்பதை நாமும் புரிந்து கொள்ளலாம்.

அவர் தனக்குப் பிடிக்காத எந்த விஷயத்தை ஜாடையாக இடித்துச் சொல்கிறார் என்று தெளிவாகவே புரிகிறது.

“இந்தக் கூட்டத் தொடரில் முதல்வர் ஜெயலலிதா 440 தடவை குறுக்கிட்டுப் பேசினார். குறுக்கிட்டு பேசிய நேரம் சுமார் 5 மணி நேரம்” என்று அவைத் தலைவர் தம்பி காளிமுத்து புள்ளி விவரம் கொடுத்திருக்கிறார்.

கொஞ்சம் கூட பொறுமை காட்டாமல், தனக்குத் தான் எல்லாம் தெரியும் என்பதைப் போல் சும்மா சும்மா எழுந்து ஜெயலலிதா பதில் அளித்ததையும் அதற்கு நெடு நேரம் எடுத்துக் கொண்டதையும் ‘டங் ஸ்லிப்’பால் தவறான தகவல் சொன்னதையும் இதை விட சுட்டிக்காட்ட வேறு யாரால் முடியும்?

“நான் எவ்வளவு கடுமையாகப் பேசினாலும் அன்றைய முதல்வர் ஓர் ஏளனப் புன்னகையோடு பார்த்துக் கொண்டிருப்பார்!”

இது தம்பி காளிமுத்து, இந்த அண்ணனுக்கு அளித்த பாராட்டு அல்லவா!

“இப்போது அப்படியில்லை. இன்றைய முதல்வர் யாரேனும் இந்த ஆட்சியைப் பற்றி கடுமையாகப் பேசாவிட்டாலும் - இவர் கனல் கக்குவார் - டாக்டர் ராமதாஸ் அவர்களும், டாக்டர் கிருஷ்ண சாமி அவர்களும் ஜாதி வெறி பிடித்தவர்கள் என்பார் - காங்கிரஸ் தலைவருக்கு இவ்வளவு அகம்பாவம் கூடாது என்பார் - கம்யூனிஸ்ட் கட்சி கள்ள ஓட்டு போட்டு மோசடி செய்து வெற்றி பெற்று ஆட்சி அமைத்தது என்பார் - தி.மு.க. துரோகக் கட்சி என்பார் - கருணாநிதிக்கு ஆற்றாமை, இயலாமை என்பார் - வந்த வம்போடு மோதினாலும் பரவாயில்லை; வராத வம்புடன் வலுவில் மோதுவார் - எதிர்க்கட்சிகளை எப்படி சமாளிப்பது என்ற உத்தி தெரியாதவர்”

இப்படிச் சொல்லாமற் சொல்லி; இலைமறை காயாக முதல்வர் ஜெயலலிதா ஆளுநர் உரையின்போது 75 முறையும், நிதிநிலை

அறிக்கை தொடரின் போது 365 முறையும் குறுக்கிட்டு ஐந்து மணி நேரம் அவை நேரத்தை எடுத்துக் கொண்டதை தம்பி காளிமுத்து அழகாக இடித்துரைத்து விட்டு;

இலை காலியாகி விடக் கூடாது என்ற எச்சரிக்கை! உணர்வுடன்;

"எந்த உறுப்பினர் பேசினாலும் அவர் பேசுவதை எழுத்து எழுத்தாக உன்னிப்பாக கவனித்து, அவர் பேச்சுக்கு உடனடியாக பதிலளிக்கிற முதல் முதல்வர் ஜெயலலிதாதான்"

என்றும் ஒரு பாராட்டுப் படுதாவைப் போட்டு, பரிமாறுவதை நிறுத்தாமலும் பார்த்துக் கொண்ட தம்பி காளிமுத்தின் சாமர்த்தியத்தைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

அன்புள்ள,

மு.க.

12-05-2003

2920.ஜூன் முதல் வாரம் -
கழகப் பொதுக்குழு!

உடன்பிறப்பே,

தமிழகத்தின் ஜனநாயகப் பேரியக்கமான திராவிட முன்னேற்றக் கழகம், 1949ல் தொடங்கப் பெற்று 54 ஆண்டுக் காலமாக; .

அறிஞர் அண்ணாவின் வார்த்தைகளில் சொல்வதென்றால்,

உழைப்பின் உருவமாக -

தியாகிகளின் குருதி

கொட்டிக் கட்டப்பட்ட

பாசறையாக -

எதேச்சாதிகாரத்தை

எதிர்த்திடும் போர் முகாமாக -

மக்கள் தொடர்பு நாள்தோறும்

கொண்ட கூடாரமாக -

விளங்கி வருவதுடன், அப்படி விளங்குவதற்கான வலிவும் பொலிவும் தொடர்ந்து பெற்றிட அமைப்பு முறையை உட்கட்சி ஜனநாயகத்தின் வாயிலாகக் கட்டிக் காத்து வருகிறது.

இந்த 54 ஆண்டுகளில் 11 முறை கழகத்தின் பொதுத் தேர்தல்கள் நடைபெற்று; இப்போது 12வது பொதுத் தேர்தல் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

75 இலட்சத்துக்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட இந்த இயக்கம் - சிற்றூர், பேரூர், ஒன்றியம், நகரம், மாநகரம், மாவட்டங்கள் என எல்லாட் பகுதிகளிலும் பல்லாயிரக்கணக்கான அமைப்புகளுடன் திகழ்வதைத் திகைப்புடன் பார்ப்போர் உண்டு.

நூற்றுக்கு ஒன்று அல்லது இரண்டு என்ற அளவில் சில அமைப்புகளில் மட்டுமே நிர்வாகப் பொறுப்புக்கான தேர்தலில் தலைமைக் கழகம் தலையிட்டு - அந்த அமைப்புகள் சார்ந்த கழக முன்னணியினருடன் கலந்துபேசி; தேர்தல் போட்டிகள் தவிர்க்கப்பட்டு நிர்வாகிகளின் தேர்வு நடைபெறுகிறதேயல்லாமல் - மற்ற எல்லா அமைப்புகளுக்குமே தலைமைக் கழகத் தலையீடு இல்லாமல்தான் பல்லாயிரக்கணக்கானவர் பேரூர்கள், நகர்கள், மாநகர்கள், மாவட்டங்கள் - மற்றும் செயற்குழுக்கள், பொதுக்குழுக்களுக்குத் தேர்வுகள் நடைபெற்று கழக உறுப்பினர்கள் பொறுப்புகளுக்கு வருகின்றனர்.

இந்த 12வது பொதுத் தேர்தலிலும் அதே முறைதான் கடைப்பிடிக்கப்பட்டு - பேசி முடிக்கப்பட்ட ஒன்றிரண்டு அமைப்புகள் தவிர மற்ற அமைப்புகள் அனைத்தும் தேர்தலைச் சந்தித்து; வரும் ஜூன் திங்கள் முதல் வாரத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய பொதுக்குழுவும் கூட இருக்கிறது.

ஜனநாயகத்தில்; அது உட்கட்சி ஜனநாயகமாயிருப்பினும் போட்டி தவிர்க்க முடியாதது. கழகப் பணிக்கான பொறுப்பு ஏற்பதின் வாயிலாக; அந்தப் பொறுப்புக்கான வாய்ப்பை பெற்றவர் உயர்ந்தவர் என்றோ; வாய்ப்பைப் பெற இயலாதவர் தாழ்ந்தவர் என்றோ இல்லாமல்; முதலாமவர், இரண்டாமவர் என்றுகூட வரிசைப்படுத்தாத நிலையில் - இரு சாராரும் ஒரே சாராரே தான்; கழகக் கண்மணிகள்தான் என்ற உணர்வுடன்தான் நான் அவர்களைப் பார்க்கிறேன். தலைமைக்கழகமாயினும்; வேறு எந்த அமைப்பாயினும் அவ்வாறே பார்க்கிறது! பார்க்கவேண்டும்.

தேர்தல் காரணமாகவோ - அல்லது வேறு பகைப் புகையாலோ - கழகத்தில் குழுக்கள் தோன்றுவது; புழுக்கள் தோன்றுவதற்குச் சமம்!

கழகத் தேர்தலில் வெற்றி வாய்ப்பை இழந்தவர்கள், ஒரு சில இடங்களில் நடந்துகொண்ட விரும்பத்தகாத முறையை நான் கேள்விப்பட்டு மிக வேதனை அடைகிறேன். தூண்டி விடப்பட்ட சில துரோகிகளின் விஷமத்தால் கழகத்தின் தூய்மைக்குச் சிறு ஊனம் விளைவிக்கப்பட்டாலும்; அதற்கு இடம் தந்தோர் - அவர்களுடன் கலந்து நின்று கலாம் விளைத்தோர் எவராயினும்

- கழகச் சட்டதிட்டப்படி ஒழுங்கு நடவடிக்கைக்கு உள்ளாக வேண்டியவர்கள் என்பதில் இரு வேறு கருத்துக்கு இடமில்லை.

பணியாற்ற ஒரு வாய்ப்பு பெறுவோம் என்ற ஆர்வத்துடன் போட்டியிட்டு வாய்ப்பு பெற முடியாதோர்; வாய்ப்பு பெற்றவர்களுடன் இணைந்து பணியாற்றுவதும் - அதே போல வாய்ப்பு பெற்றோர்; வாய்ப்பு பெறாதவர்களை அரவணைத்துக் கொண்டு அவர் துணையையும் பெற்று தொண்டினைத் தொடர் வதும் - ஏற்றிப் போற்றி உச்சி மீது வைத்துப் புகழப்பட வேண்டிய செம்மை நிறை செயலாகத் திகழும்.

கடமையாற்றிட - கழகப் பணி தொடர்ந்திட - எத்தனையோ வாய்ப்புகள் உள்ளன. இத்துடன் எல்லாம் முடிந்து விட்டது என எண்ணுவது; ஆர்வத்தின் வெளிப்பாடாக அமையாமல் - அவசரத்தின் அல்லது ஆத்திரத்தின் பிரதிபலிப்பாக அமைந்து விடும் என்பதை மறந்துவிடக் கூடாது.

கழக அமைப்புக்குள் நாம் கலந்து கொள்ளும் இது போன்ற உட்கட்சித் தேர்தலை - அடுத்து நாம் சந்திக்க இருக்கும் பொதுமக்கள் அதாவது வாக்காளப் பெருமக்கள் வாக்களிக்கும் சட்டமன்றம் - நாடாளுமன்றம் - உள்ளாட்சி - கூட்டுறவு அமைப்புகளின் மூலம் பொதுப்பணியாற்றும் வாய்ப்பு பெறும் தேர்தல்களுக்கான ஒத்திகை என்றே கருதிக் கொள்ள வேண்டும்.

கிரிக்கெட் மேட்ச் - கால் பந்தாட்டப் போட்டி - போன்றவைகளுக்குப் பிற அணிகளுடன் மோதுவதற்கு முன்பு; தம் அணிக்குள்ளேயே ஒருவருக் கெதிராக ஒருவர் பந்தை வீசியோ - பந்தை உதைத்தோ - பயிற்சி பெற்றுக் கொள்வதில்லையா, அதைப் போல என்று எண்ணிக் கொண்டால்; இந்த வாய்ப்புகளைத் தவற விடும்போது நட்புக்கு - உறவுக்கு - கழகப் பற்றுக்கு - எந்தவிதமான முறிவும் ஏற்படாது! ஏற்படவிடக் கூடாது!

இவையனைத்தையும் நான் உரிமையுடன் உரைப்பது; இலட்சியத்தில் பற்றும் - கழகம் வலிவுடன் வளர வேண்டும் என எண்ணமும் கொண்ட உடன்பிறப்புகளுக்கு மட்டுமே!

அன்புள்ள,

மு.க.

15-05-2003

2921. இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து.....!

உடன்பிறப்பே,

★ "நன்மை எது, தீமை எது என ஆராய்ந்து அறிந்து நற்செயலில் மட்டுமே நாட்டங் கொண்டவர்கள் எப்பணியினை ஆற்றிடவும் தகுதி பெற்றவராவார்கள்" என்ற கருத்தை;

"நன்மையும் தீமையும் நாடிநலம் புரிந்த
தன்மையான் ஆளப் படும்" என்ற

திருக்குறள் விளக்குகிறது.

★ "அன்பு, அறிவு, செயலாற்றும் திறமை, பேராசைப்படாத குணம், ஆகிய நான்கு பண்புகளையும் நிலையாகப் பெற்றிருப்பவரைத் தேர்வு செய்வதே நலம்" என்ற கடமையை;

"அன்பறிவு தேற்றம் அவாவின்மை இந்நான்கும்
நன்குடையான் கட்டே தெளிவு" எனும்

திருக்குறள் உணர்த்துகிறது.

★ "ஆய்ந்தறிந்து செய்து முடிக்கும் ஆற்றல் உள்ளவர்களை அல்லாமல் வேறொருவரைச் சிறந்தவர் எனக் கருதி ஒரு செயலில் ஈடுபடுத்தக் கூடாது" என்ற எச்சரிக்கையை;

"அறிந்தாற்றிச் செய்கிற்பாற்கு அல்லால் வினைதான்
சிறந்தானென்று ஏவற்பாற் றன்று"

என்ற திருக்குறள் விடுக்கிறது.

★ "ஒரு காரியத்தை ஒருவர் எப்படிச் செய்து முடிப்பார் என்பதை ஆராய்ந்து பார்த்து, அதற்குப் பிறகு அந்தக் காரியத்தை அவரிடம் ஒப்படைக்க வேண்டும்" என்ற அறிவுரையை;

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்" என்ற

திருக்குறள் வழங்குகிறது.

இந்த நான்கு குறட்பாக்களும், நமது கழக அமைப்புகளின் நிர்வாகிகளுக்கான தேர்தல்களில் வாக்களிக்கும் உடன்பிறப்புகளுக்குத் தேவையானவை என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கழகத்தின் ஒவ்வொரு அமைப்பும் அதன் கட்டுப்பாட்டுக்குள்ள பகுதியில் இருக்கக் கூடிய கழக உறுப்பினர்களான உடன்பிறப்புகளுக்கு வழிகாட்டிப் பணியாற்றக் கூடியவை என்பதாலும் - நிகழ் காலத்துக் கழக வலிவுக்கும், வளர்ச்சிக்கும், உறுதிக்கும், ஒற்றுமைக்கும் பொறுப்பேற்றிருப்பவை என்பதாலும் - எதிர்கால வெற்றிகளுக்குக் களம் காணக்கூடியவை என்பதாலும் - அந்த அமைப்புகளில் அணி செய்யும் நிர்வாகிகள் எப்படிப்பட்டவர்களாக இருக்கவேண்டுமென்பதைச் சிந்தித்துச் செயல்பட்டுத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதைத்தான் நான் குறிப்பிட்டுள்ள இந்த நான்கு குறட்பாக்களும் எடுத்துக் காட்டுகின்றன.

பொதுவாக இந்த அடிப்படையில்தான் நமது கழக அமைப்புகளின் தேர்தல்கள் நடைபெறுகின்றன. ஒரு சில இடங்கள் தவிர, மற்ற எல்லா இடங்களிலும் பரந்த மனப்பான்மையுடன் - தெளிந்த சிந்தனையுடன் - போட்டியிருந்தால்தான், அதுவும் கடுமையாக இருந்தால்தான், அது "ஜனநாயகம்" என்று பிடிவாதம் காட்டாமல் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து - நான் எடுத்துக் காட்டியுள்ள குறள் வழி நின்று அமைப்புகளின் நிர்வாகிகளைத் தேர்வு செய்து அறிவிப்பதின் வாயிலாக என் அகம் குளிரும் அரிய செயல் திறனைக் காட்டி வருகிறார்கள்.

"தலைவரிடமோ பொதுச்செயலாளரிடமோ சென்று என்ன புதிதாகக் கேட்டறிவது; "குற்றம் பார்க்கிற் சுற்றமில்லை!" என்று பல ஆண்டுகளுக்கு முன்பே நமது அறிவுக்கடலாம் அறிஞர் அண்ணா அவர்கள் விட்டுக் கொடுத்து விரிவாக்கப்பட வேண்டிய கழக ஒற்றுமையை வலியுறுத்தி எழுதியது எல்லோரின் நெஞ்சங்களிலும் பதிந்திருக்கிறதே; அந்தப் பொன்மொழியைப் போற்றி - கழக ஒற்றுமை காத்திடும் வகையில் - அமைப்பின் பொறுப்புக்கு தக்கார் ஒருவரைக் குறள் வழி நின்று நாங்களே தேர்வு செய்து அறிவிக்கிறோம்"

என்று சொல்லாமல் சொல்லி, செயல் முடிக்கும் உடன்பிறப்புகளின் கரங்களுக்கு முத்தமிடுகிறேன்.

ஆயிரம் நன்றியினை அவர்கட்குக் காணிக்கை ஆக்குகிறேன்.

தேர்வு செய்யப்படுகிற ஒருவர், நன்மைக்கும் தீமைக்குமிடையே காணும் வேறுபாடு உணர்ந்து - தீமையை விலக்கி, அத்தீமை உள்ளத்தில் இடம் பெறாமலே தீய்த்து; நன்மையை மட்டும்; நீரிலிருந்து பாலை மாத்திரம் பிரித்தருந்திடும் அன்னத்தைப் போல உட்கொண்டு; நற்செயலில் நாட்டங் கொண்டவராக இருக்க வேண்டுமென்கிற குறள்; அவர் அன்புடையவராகவும், அறிவுடையவராகவும், பேராசை இல்லாதவராகவும் இருப்பார் என்று சொல்வதின் மூலம் அன்பற்றவராகவோ - அறிவற்றவராகவோ - பேராசை பிடித்தவராகவோ இருத்தலாகாது என்பதையும் வலியுறுத்துகிறது.

அத்துடன் நிறுத்தவில்லை - சிந்தித்து செயலாற்றுகிறவர்களை விடுத்து வேறு ஒருவரைத் தேர்வு செய்து அவரைப் பின்பற்றுவதும் பின்னடைவுதான் என்பதை முன்னறிவிப்பாகச் செய்கிறது குறள்.

இத்துணை சிறப்புகளும் - பண்புகளும் - கொண்டவராயினும் அவர்களில் யார் ஒருவர் ஒப்படைக்கப்பட்ட பொறுப்பை ஒழுங்குறவும் வெற்றிகரமாகவும் செய்து முடிக்கக் கூடியவர் என்று பார்த்து அவரை அந்தப் பொறுப்பில் அமர்த்த வேண்டும் என்றும் உறுதிபட உரைக்கின்றது.

அவர் என்னுடன் நீண்ட நாள் பழக்கமுடையவர் - இவருக்கு ஏற்கனவே வாக்குறுதி கொடுத்து விட்டேன் - அவருக்கு இல்லையென்றால் மன முடைந்து விடுவார் - இது போன்ற சமாதானங்களுக்கும் சாக்குப் போக்குகளுக்கும் அப்பாற்பட்டு - தகுதியுடையோரை பொறுப்பில் அமர்த்த வேண்டுமென்ற பரந்த நோக்கு ஏற்பட வேண்டும்.

அதுதான் பயனுள்ள நோக்கமாக அமையும் - பணி, செம்மையாக நடைபெறும்- ஏதோ எனக்கு வேண்டியவர் 'ஒப்புக்குச் சப்பாணி' யாக இருக்கட்டும் என்று; கட்சி வேலையில் திணித்து விட்டால் நோக்கமும் நிறைவேறாது - பணியும் நடைபெறாது!

ஒரு தேர்வால் -

ஒரு நியமனத்தால் -

கட்சி ஒற்றுமை, சரிப்படுத்தப்பட்டால் மட்டும் போதாது; கட்சிப் பணிகளும் மாற்றார் மலைக்குமளவுக்கும் - மக்கள் மகிழுமளவுக்கும் நடை பெற்றாக வேண்டும். நமக்கு வேண்டியவர் என்பதற்காக விழலுக்கு நீர் இறைத்தலும் கூடாது -

வேண்டாதவர் என்பதற்காக அவர் ஆற்றிடும் பணியை இழந்திடவும் கூடாது -

வேண்டியவர் -

வேண்டாதவர் -

நண்பர் -

பகைவர் -

இந்த வேற்றுமைகளை விட கட்சி பெரிது!

கட்சியைக் காத்திடும் கடமை பெரிது!

இதை உணர்ந்து விட்டால் கடுகளவு கலவர உணர்வும் கழக உடன்பிறப்புகளின் மத்தியில் தலைகாட்டாது.

அன்புள்ள,

மு.க.

16-05-2003

2922. பலர் மகிழ்வார்; சிலர்தான் மலைப்பார்!

உடன்பிறப்பே,

70களில் நான் முதல்வராக ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது; மதுரை மாநகரில் காவல் துறை அணிவகுப்பு விழாவுக்குச் சென்றிருந்தேன். காவல் துறையினரின் நீண்ட காலக் கோரிக்கைகள் - உயர்த்தப்படாமலே வாழ்க்கை நடத்துவதற்கு எட்டிப் பிடிக்க முடியாத உயரத்தில் கிடைத்து வந்த மாத ஊதியம் - உரிமைகளோ, சலுகைகளோ அற்ற நிலை - இவற்றைப் பற்றியெல்லாம் பரிந்துரை செய்யவும், அவற்றை ஏற்று நிறைவேற்றவும் - அந்தத் துறையினருக்காக இரண்டு கமிஷன்களை நியமித்துச் செயல்படுத்தியது இந்தியாவிலேயே தி.மு.க. ஆட்சியில்தான் முதன் முதலாக என்பதை நினைவுக்குக் கொண்டு வந்தால்; அந்தத் துறையில் உள்ளவர்களும் மனிதர்கள்தான், அவர்களுக்கும் எல்லா அரசு அலுவலர்களையும் போலத் தேவைகள் உண்டு - வாழ்க்கைப் பிரச்சினைகள் உண்டு என்பதை உணர்ந்துகொள்ள முடியும்.

அந்த உணர்வுடன் அவர்களை நடத்தியது தி.மு.க. ஆட்சி என்பதால், அவர்களின் பணிச் சிறப்புக்காகப் பதக்கம் வழங்குவது - வீரச் செயல்களுக்காக விருது வழங்குவது - நாணயமான நடவடிக்கைகளுக்காக நற்சான்றுகள் அளிப்பது - கடமையுணர்வுக்காக அண்ணா பெயரில் நினைவுச் சின்னம் தருவது எனப் பல சிறப்புகள் அவர்களுக்குச் செய்யப்பட்டன. கழக அரசு காவல் துறைக்குச் செய்த சாதனைகளை விரிக்கிற் பெருகும், விரிவுக்கு அஞ்சி விடுத்தேன் என்பதைவிட; இக்கடிதத்தில் நான் வேறொரு விஷயத்தைக் குறிப்பிட விரும்புவதால் மதுரையில் நான் காவல் துறை விழாவில் கலந்து கொண்டதை மட்டும் குறிப்பிட்டேன்.

மாலையில் விழா முடிந்ததும் - இரவு 7 மணி யளவில் பொதுக் கூட்டம் - மதுரை மாவீரர் முத்து வாழ்ந்த காலத்தில்

நான் பேசத் தொடங்கும்போது, சென்னையிலிருந்து அவசரச் செய்தி - ஆட்சிப் பொறுப்பில் இருக்கின்ற நேரமல்லவா; அதனால் அந்தச் செய்தி அதிகாரிகள் மூலம் மேடைக்கே பறந்து வந்தது.

என் மருமகனும்; தம்பி முரசொலி மாறனின் இளவலுமான முரசொலி செல்வத்துக்கு நெஞ்சு வலி - சற்றுக் கடுமையான நிலை - என்பதே அந்தச் செய்தி.

கூட்டத்தில் பேசி முடித்துவிட்டு, மதுரையிலிருந்து திருச்சி வந்து - அங்கிருந்து ரயிலில் சென்னை புறப்படத் திட்டமிட்டு திருச்சி வந்தால்; அங்கே மாறனிடமிருந்து தொலைபேசி; "இன்னும் புறப்பட வில்லையா?" என்று!

திருச்சியிலிருந்து சென்னை வந்து நேராக அரசு மருத்துவமனைக்குச் சென்றேன். ஏராளமான டாக்டர்கள் சூழ்ந்திருந்தனர். ஒவ்வொரு நோய்க்குமுரிய சிறப்பு மருத்துவர்கள், செல்வத்தின் அறைக்குப் பக்கத்து அறையில் குழுமியிருந்தனர்.

அன்றும் நிலைமை சரியாக இல்லை - டாக்டர்களுக்கிடையே விவாதம் - குழப்பமான முறையில்!

நோயாளியைத் தூங்க வைக்க வேண்டும் - அந்த ஓய்வுதான் இப்போது அவருக்கு முக்கியமான மருந்து - அதற்கு என்ன வழி என்று டாக்டர்கள் விவாதித்தனர் எங்கள் முன்னிலையில்.

ஒருவர் சொன்ன மருந்தையோ, மாத்திரையையோ இன்னொரு டாக்டர் ஒப்புக் கொள்ளவில்லை - சுமார் ஒரு மணி நேரம் மிகக் கடுமையான கோப தாப விவாதத்திற்குப் பிறகு; தூங்குவதற்கு மருந்தாக "வேலியம்" மாத்திரை கொடுப்பது என்று முடிவு எடுக்கப்பட்டது. சரி; அதைக் கொடுக்கலாம் என்ற தீர்மானம் நிறைவேறியது.

அந்தச் சமயம்; செல்வத்தின் அறைக்கதவு திறக்கப்பட்டு; நர்ஸ் ஒருவர் வெளியில் வந்தார். அவர் எதற்கு வருகிறார்; என்ன சொல்லப் போகிறார் என்று வெளியில் இருந்த நாங்களும், டாக்டர்களும் பரபரப்புடன் எதிர்பார்த்தபோது -

அந்த நர்ஸ் சொன்னார்; "பேஷண்ட் நன்றாகத் தூங்கி விட்டார்" என்று.

டாக்டர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர். "செயற்கை மருந்தால் இல்லாமல் இயற்கையாகவே நோயாளிக்குத்

தூக்கம் வந்தது; அவர் குணமாகி விட்டார் என்பதைக் குறிக்கிறது; இனி பயப்படத் தேவையில்லை" என்று டாக்டர்கள் ஓரிருவர் மகிழ்ச்சி பொங்கவும் கூறினர்.

இது ஒரு செய்தி; கடந்த காலத்தில் நடந்த நிகழ்ச்சி

நோய் -

திகில் -

டாக்டர்கள் விவாதம் -

வதந்தி -

நோயாளி நலம் -

இதோ இன்னொரு செய்தி வதந்தி - விவாதங்கள் - நாளேடுகள் சிலவற்றைப் படித்தாலும் - வார ஏடுகளைக் கையில் எடுத்தாலும் - கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாகக் கடுமையான பிரச்சாரம் - இன்று காலையில் சென்னையில் வெளியான ஒரு தமிழ் நாளேடு வரையில் பார்த்தால் - கழகத்தின் எதிர்காலம் பற்றி ஒரு கலக்கம்-1 நிகழ்காலம் பற்றி ஒரு நெருடல் -'

இல்லாதது கூறல் -

இட்டுக் கட்டி எழுதுதல் -

இயக்கம் இரு கூறாகி விட்டது -

இதனை எண்ணி மகிழ்தல் -

எதிர்பார்த்துச் சிரித்தல் -

அண்ணன் தம்பி தகராறு -

அழகிரி கோஷ்டி -

ஸ்டாலின் கோஷ்டி -

இந்தச் செய்திகளின் தொகுப்பாக இன்றைய நிலவரம் என்று; "தேனி மாவட்டத்தில் விரக்தியின் உச்சத்தில்" - எனப் பெருந்தலைப்பிட்டு ஸ்டாலின் ஆதரவாளர்கள் அணி என்றும் - அழகிரி ஆதரவாளர்கள் அணி என்றும் - இவை போதாதென்று இன்னொரு புது அணி என்றும் - ஒரு தினப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இதைப் பார்த்து சிலர் சிரிப்பார் - சிலர் வேதனைப்படுவார் - இப்படிச் செய்திகள் வரும் போதெல்லாம் அழகிரியும் ஸ்டாலினும் தனித் தனியாக ஏடுகளுக்கு அளித்த பேட்டிகளில் கழகத்தின் கட்டுப்பாடு - கண்ணியம் - இவற்றுக்குக் கடுகளவும் களங்கம் வராமல் கவனமாகவே இருந்து வந்துள்ளனர்.

இன்று தேனி மாவட்டத் தி.மு.க. பற்றி தின ஏடு வெளியிட்டுள்ள செய்தியைப் படித்துக் கொண்டிருக்கும்போது

அமெரிக்காவில் ஊஸ்டன் மருத்துவமனையில் உடல் நலிவுடன் இருக்கும் என் அன்புக் கண்மணி முரசொலி மாறனைப் பார்க்கச் சென்ற ஸ்டாலினிடமிருந்து தொலைபேசிச் செய்தி வந்தது.

மாறன் நலம் பெற்று வருகிறார் என்ற மகிழ்ச்சிச் செய்தியுடன் மற்றொரு செய்தியும் ஸ்டாலின் சொன்னார்,

"மதுரைக்கு தொடர்பு கொண்டு நேற்றிரவு அண்ணன் அழகிரியுடன் நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்தேன்" என்பதாக!

நெஞ்சு வலியால் உடல் நலிவுற்ற முரசொலி செல்வத்துக்கு டாக்டர்கள் விவாதத்திற்கும் அப்பாற்பட்டு செயற்கை மருந்து தராமலே - இயற்கை மருந்தினாலேயே தூக்கம் வந்து உடல் நலம் பெற்றது போன்று -

அழகிரியும் ஸ்டாலினும் அவர்களாகவே ஒருவருக்கொருவர் தொடர்பு கொண்டு பேசிக் கொண்டதும் அமைந்து விட்டது - இது கேட்டு;

<u>பலர் மகிழ்வார் - சிலர்தான் மலைப்பார்!</u>

கருணாநிதி குடும்பத்து அண்ணன் தம்பிகள் மட்டுமல்ல; கழகமெனும் இந்தப் பெருங்குடும்பத்து அண்ணன் தம்பிகள் அனைவரும் ஒற்றுமையுடன் கரங்கோத்து நடக்கிறார்கள் என்றால்தானே எனக்கு முழுமையான இன்பமும்; மகிழ்ச்சியும்.

அன்புள்ள,

மு.க.

17-05-2003

2923. திருநாடு; திரும்பக் காண இருக்கும் மாட்சி!

உடன்பிறப்பே,

மகன் மீது கொண்ட பாசத்திற்கும் மண்ணாளும் மகராசனாம் தன் மணாளன் மீது கொண்ட பாசத்திற்கும் மான மறவர் பூமியின் குடி மக்கள் மீது கொண்ட பாசத்திற்கும் ஒரே எடுத்துக்காட்டாக ஒப்பற்ற எடுத்துக்காட்டாகத் திகழ்ந்த மகாராணியாம் தன் மாசற்ற தாய் பத்மாவதியை; வசந்தசேனை எனும் வஞ்சகி - வாய் நீளக்காரி - பழித்துரைத்தாள், 'வேசி' என இழித்துரைத்தாள் என்பதைக் கேட்டு, அதைத் தடுத்து அவளைத் தண்டிக்க முடியாமல் தாயின் ஆணை குறுக்கிட்ட காரணத்தால்; அந்த ஆணையை விலக்கிக் கொள்ளுமாறு அன்னையிடம் கேட்க மனோகரன் ஓடி வருகிறான். -

"மனோகரா" திரைப்படத்தில் நீ கண்ட காட்சி; இதோ தொடர்கிறது.

மனோகரன்:- அம்மா! அம்மா! துள்ளிவரும் வேல், ஆவேசத்தை அள்ளி வரும் வாள் - அவைகளை எல்லாம் தடுத்திருக்கிறேன். அவைகளை விட பெரியவளா என்னை நகையாடிய இந்தக் கள்ளி? ஆனால் அவளைத்தான் எதிர்க்க முடியாமல் ஓடி வந்திருக்கிறேன்; யாராலம்மா? தங்களால் தங்கள் கட்டளையால் சத்தியத்தால்.

தாய்:- மனோகரா, விஷயத்தை சொல்; என்ன நடந்தது?

மனோ:- தன்மானம் தரைமட்டமானது; வீரம் விலை கூறப்பட்டது; அவமானச் சின்னம் ஆணவத்தால் ஆடியது, அம்மா தங்கள் கட்டளையை உடனே மாற்றிக் கொள்ள வேண்டும்.

தாய்:- சத்தியம் செய்திருக்கிறாய் செல்வா!

மனோ:- வீரன் கோழையாவதா? துடிக்கும் தோள்கள் துவண்டு போவதா? வேண்டாம், அந்த விபரீத சத்தியத்தை நான் காப்பாற்ற வேண்டாம். (மனோகரன் போகிறான்)

தாய்:- (விஜயாவிடம்) என்ன நடந்தது விஜயா?

விஜயா:- அந்தப் பாதகி வசந்தசேனை; தங்களை - மிக இழிவாக... (விம்மி அழுகிறாள்)

தாய்:- அப்படியா சொன்னாள், அதை அரசர் கேட்டுக் கொண்டா நின்றார்? அப்போது அமைச்சர் அங்கே இருந்தாரா விஜயா?

விஜயா:- இருந்தார்.

தாய்:- மனோகரனைத்தான் தாயின் ஆணை தடுத்தது, சத்யசீலரை எது தடுத்தது? அந்தக் கொடுமையை எதிர்த்துப் பேச முடியாமல் குரலிலே நடுக்கம் ஏற்பட்டதா? அல்லது நெஞ்சிலே கோழைத்தனம் குடி கொண்டதா? (தோழியிடம்) கூப்பிடடி சத்யசீலரை உடனே போ.- இப்போதே அழைத்து வா!

(வசந்தசேனை; அறையில் அவளது முத்தாரத்திலிருக்கும் ஆசைநாயகன் உக்ரசேனன் படத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறாள்)

தோழி:- என்னம்மா? ஏன் இப்போது அதை.

வசந்த:- நான்தான் சொல்லியிருக்கிறேனடி..... ஆபத்தில் கை கொடுக்கும் கடவுள் இதுதானென்று

தோழி:- அதன் உதவி இப்போது தேவையில்லை.

வசந்த:- அதிருக்கட்டும்.... போன செய்தி.

தோழி:- மனோகரன் கோபாவேசமாய் இருக்கிறார். மகாராணியும் விஷயத்தைக் கேட்டுத் துடித்துப் போய்

வசந்த:- அடுக்காதே! சீக்கிரம் சொல்.--

தோழி:- சத்யசீலரை உடனே அழைத்து வரும்படி தோழியை அனுப்பியிருக்கிறார்கள்.

வசந்த:- இந்நேரத்திலா?

தோழி:- ஆமாம்....

வசந்த:- இருட்டு வேளையிலா?

தோழி:- ஆமாம்.....

வசந்த:- பத்மாவதியின் அந்தப்புரத்திற்கு சத்யசீலர் வருகிறார் - இரவு நேரத்தில் இல்லையா?

தோழி:- ஆமாம்; வசந்தவிழா சம்பவம் பற்றி விசாரிக்க.....

வசந்த:- தெரியுமடி எனக்கு.... அவர் ஏன் அழைக்கப்பட்டிருக்கிறார். அது தெரியும். அதைத்தான் திருப்பிவிட வேண்டும், இருட்டு வேளை பத்மாவதியின் அந்தப்புரம், அங்கே சத்யசீலர். அதை நேரே காணவேண்டும், யார்? யாரடி? அரசர் காணும்படி நாம் செய்ய வேண்டும்... அதற்கு ஒரு வழி செய்ய வேண்டும். வா! (அரசரின் அறைக்கதவை தோழி தட்டுகிறாள்)

தோழி:- மகாராஜா! மகாராஜா! ஆபத்து.-- கதவைத் திறங்க மகாராஜா! காரியம் கெட்டுவிடும் ஆபத்து மகாராஜா!

அரசர்:- என்ன இது?

தோழி:- மகாராஜா அய்யோ!

அரசர்:- சொல்லு விஷயத்தை

தோழி:- வசந்தசேனையம்மா தூக்கு போட்டுக்கிட்டுட

அரசர்:- ஆ!

தோழி:- சாகப் போறாங்க..... சீக்கிரம் போனாத்தான் காப்பாத்தலாம்...

அரசர்:- எங்கே ?

தோழி:- இந்தப் பக்கம்தான் போனாங்க.... அய்யோ - அம்மா!

(ஓடுகிறார்கள் - ஒரு மரத்தடியில் வசந்தசேனை தூக்குப் போட எத்தனிப்பவள் போல் நிற்கிறாள்)

வசந்த:- ஆண்டவனே! அடியாளை உன் திருவடிகளிலே ஏற்றுக் கொள். அரசன் மீது நான் காட்டிய விஸ்வாசமெல்லாம் விழலுக்கிரைத்த நீராகி விட்டது. அவர்மேல் குற்றமில்லை. என் விதி, நான்தானே அனுபவிக்க வேண்டும்

அரசர்:- சேனா! சேனா! (ஓடி வருகிறார்) வசந்தி என்ன காரியம் செய்தாய்? இது என்ன பைத்தியக்காரத்தனம்?

வசந்தி:- இல்லை, உண்மை காதலுக்குக் கிடைத்த பரிசு மகாராஜா! இனி நான் ஒரு கணமும் உயிரோடிருக்க

விரும்பவில்லை. உங்கள் கண் எதிரிலேயே கண்ணை மூடுகிறேன், அதுவே எனக்குப் பேரானந்தம் பிரபு!

அரசர்:- வசந்தி வேண்டாம்....

வசந்தி :- விட்டு விடுங்கள் பிரபு

அரசர்:- வசந்தி - வேண்டாம், வா! இங்கே!

வசந்தி:- என்னை விட்டு விடுங்கள்..... மகாராஜா! மரண முகப்பிலே ஒரு வேண்டுகோள், தயவுசெய்து நிறைவேற்றுங்கள். தற்கொலை செய்து கொண்டாள் வசந்தசேனை என்ற அவச்சொல் தங்களுக்கு வேண்டாம். தாங்களே கொன்று விடுங்கள், இதோ (கட்டாரியைக் காட்டி) தங்கள் நினைவுகளை ஏந்திக் கொண்டிருக்கும் என் நெஞ்சிலே இதைப் பாய்ச்சுங்கள்- அதைக் கத்திக் குத்தாகக் கருதமாட்டேன், என் கண்ணாளன் தந்த கடைசி முத்தமாகக் கருதுவேன்.

அரசர்:- வசந்தி, உனக்கு என்ன புத்தி மாறாட்டமா?

வசந்தி:- உங்கள் அன்பை இழந்த பிறகு நான் யாருக்காக வாழ வேண்டும்?

அரசர்:- வசந்தி. ஏதோ கோபத்தில் சொல்லி விட்டேன்.

தோழி:- நல்ல கோபம்.. கொஞ்சம் தாமதித்திருந்தால் இந்த நேரம் கொலை விழுந்திருக்கும். ஏமாற்றி வாழ்பவர்களெல்லாம் இன்பலோகம் போக வேண்டும், நீங்கள் எமலோகம் - நல்ல நியாயம் அம்மா இது?

வசந்தி:- சி என்னடி தத்துவார்த்தம் பேசுகிறாய்? மகாராஜாவிடம் பேசுகிறோம் என்ற மரியாதை கூட இல்லாமல்

தோழி :- மனம் கொதிக்குதம்மா! மகாராணியும்...

அரசர்:- என்ன?

வசந்தி:- வாயை மூடு போ இதை விட்டு!

தோழி:- என்னை அடியுங்கள், கொல்லுங்கள், கவலையில்லை! என்றைக்கு இருந்தாலும் உண்மை வெளிவரத்தான் போகிறது. பல நாள் திருடன் ஒருநாள்

வசந்தி :- மாலினி! நீ போக மாட்டாய்

தோழி:- முடியாது வந்து பாருங்கள், மகாராணி அந்தப்புரத்தை! அர்த்த ராத்திரியிலே அங்கே சத்யசீலருக்கு என்ன வேலை?

வசந்தி :- அய்யோ! அய்யோ!

அரசர் :- ஆ! அப்படியா - உண்மையாகவா? (ஓடுகிறார்) (வசந்தியும், தோழியும் சிரிக்கின்றனர்)

(ராணி பத்மாவதி அறை)

பத்மாவதி :- :-அமைச்சரே! மகாராஜாவையே கேளுங்கள்? என்ன சொல்கிறாரென்று!

சத்ய:- மகாராஜா, இதையெல்லாம் கவனிக்கவே மாட்டார்.

பத்மா :- மனோகரனை நினைத்தால் எனக்குப் பயமாயிருக்கிறது.

சத்ய:- பயப்படத் தேவையில்லை, நான் பார்த்துக் கொள்கிறேன். (அரசனும் வசந்தசேனையும் ஒட்டுக் கேட்கின்றனர்)

வசந்த :- மகாராஜா கவனிக்கமாட்டார். மனோகரனுக்குப் பயப்படத் தேவையில்லை.

(அரசர், அரசி மீது சந்தேகப்படுகிறார்) -

அரசர் :- (தனிமையில் நிலவைப் பார்த்தபடி) களங்கம், களங்கம். என் பரம்பரையிலேயே இல்லாத களங்கம், பாதகி - (பக்கத்திலிருந்த ராணியின் சிலையை உடைத்தெறிகிறார்)

வசந்த:- பிரபு அமைதியாக இருங்கள்.

அரசர்:- அமைதி அவளுடைய சாவிலே தான் எனக்கு அமைதி

வசந்த:- இதைக் கேளுங்கள் மகாராஜா மகாராணி!

அரசர் :- மகாராணி... மறுபடியும் சொல்லாதோ/ அவள் மானமிழந்தவள் நாடோடி! வசந்தி நீயே உத்திரவிடு! அவளை பாதாள சிறையில் போட வேண்டும்...

வசந்த :- ராணியை சிறையில் போடுவதால் உங்கள் ஆத்திரம் அடங்கும்.. வசந்த விழாவில் தாயைக் குறை கூறினேன் என்று தாண்டி விழுந்தானே, மனோகரன். இப்போது என்ன சொல்கிறான்? மன்னிப்பு கேட்டுக் கொள்ளுவானா என்னிடம்..

அரசர் :- கேட்கச் சொல்கிறேன்..... உன்னை எதிர்த்துப் பேசியதற்கு கொலு மண்டபத்திலேயே மன்னிப்பு கேட்கச் சொல்லுகிறேன். மகாராணி பத்மாவதிக்குச் சிறைச்சாலை! மனோகரன் வசந்தசேனையிடம் மன்னிப்பு கேட்க வேண்டும். அவன் நாடு கடத்தப்படவும் ஆணையிடுகிறேன்.

★★★

உடன்பிறப்பே,

மகாராணி சிறையிலடைக்கப்பட்டாள் -
மனோகரன் நாடு கடத்தப்பட்டான் -
இரண்டு தண்டனைகளும் நிரந்தரமா?
இல்லை - இல்லவே இல்லை....

இன்பச் சோலையின் இடையில் ஏற்பட்ட
கணவாய் வழியாக வந்து புகுந்த வஞ்சக
வசந்தசேனைக் கூட்டம்
இடுப்பொடியத் துரத்தப்பட்டது.
மகாராணியின் விலங்கு உடைபட்டது.
மண்டிலம் மறுமலர்ச்சி பெற்றது.
மனோகரன், மீண்டும் நல்லாட்சி
தொடங்கினான்.

இது திரையில் கண்ட காட்சி மட்டுமல்ல; இந்தத்
திருநாட்டிலும் திரும்பக் காண இருக்கும் மாட்சி!

★

அன்புள்ள,

மு.க.

25-05-2003

2924. கழக அமைப்புகளில் கட்டாய இட ஒதுக்கீடு!

உடன்பிறப்பே,

நமது கழகத்தின் இரு பெரும் மூத்த தளகர்த்தர்களாக விளங்கும் தம்பி கோ.சி. மணிக்கும், தம்பி வீரபாண்டி ஆறுமுகத்திற்கும் அடித்தள அமைப்புகள் உள்ளிட்ட அனைத்து அமைப்புகளிலும் ஒருமித்த கருத்துடன் ஆதரவு மலர்ந்து, இருவரும் முறையே தஞ்சையிலும், சேலத்திலும் மாவட்டச் செயலாளர் பொறுப்புக்கு வேட்பு மனுக்கள் வழங்கி - இருவர்க்கும் யாருமே போட்டியில்லாத காரணத்தால் ஒருமனதாகத் தேர்வு பெற்றனர் என்ற செய்தி எனக்குத் தேனாக இனிக்கிறது.

தேனுடன் தினைமாவும் கலந்து இனிப்பது போன்று மற்றும் இரு செய்திகளும் உண்டு. மத்திய அமைச்சரவையில் இருக்கும் தம்பி ராஜா, பெரம்பலூர் மாவட்டக் கழகச் செயலாளராகவும் - நாடாளுமன்ற உறுப்பினர் தம்பி விஜயன் நாகை மாவட்டக் கழகச் செயலாளராகவும் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளனர் என்பதுதான் அத்தகைய இனிப்பான செய்தியாகும். இரட்டிப்பு இனிப்பு எனக்கு என்பதற்கு முக்கியமான காரணம்; இரு இளைஞர்களும் ஆதி திராவிட இனத்தினர் என்பதுதான்!

ஏற்கனவே 70களில் தஞ்சை மாவட்டம் ஒன்றுபட்ட ஒரே மாவட்டமாக இருந்தபோது தம்பி தாழை கருணாநிதியை அந்த மாவட்டக் கழகச் செயலாளராகப் போட்டியின்றித் தேர்ந்தெடுக்க நான் எடுத்துக் கொண்ட முயற்சியும் - அதில் பெற்ற வெற்றியும் அனைவரும் அறிந்ததேயாகும்.

அடுத்தடுத்துத் திருத்தப்பட்ட நமது கழகச் சட்டதிட்டப் புத்தகத்தில் பேரூர்க் கழகம் தொடங்கி தலைமைக் கழகம் வரையில் பொறுப்புக்களுக்கு நடைபெறும் தேர்தலில் ஒவ்வொரு அமைப்பிலும் மூன்று பேர் துணைச் செயலாளர்களாகத் தேர்வு செய்யப்பட வேண்டுமென்றும் அவர்களில் கட்டாயமாக ஒருவர்

ஆதிதிராவிடர் அல்லது மலைவாழ் வகுப்பினராகவும், ஒருவர் பெண்மணியாகவும் ஒருவர் பொதுத் தொகுதியினராகவும் இருக்க வேண்டுமென்றும் குறிக்கப்பெற்று இந்தத் திருத்தம் நடைமுறையில் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

எனவே, கழகத்தின் சட்டதிட்டப்படியுள்ள எந்தவொரு அமைப்பிலும் ஆதிதிராவிடர்க்கும், மகளிர்க்கும் கட்டாயம் இடம் உண்டு,

மேலும் மாவட்டக் கழகச் செயலாளர்களாகவே ஆதிதிராவிடர்கள் இருவர் நாகை மாவட்டத்திலும், பெரம்பலூர் மாவட்டத்திலும் இடம் பெற்றுள்ளனர் என்பதுடன் திருமதி வாசுகி முருகேசன்; கரூர் மாவட்டக் கழகச் செயலாளராக மீண்டும் தேர்வு பெற்றுள்ளார்.

போட்டியிட்டு தேர்வு பெற்று; மாவட்டக் கழக - மாநகரக் கழக - ஒன்றியக் கழக - நகரக் கழக, பகுதிக் கழக - பேரூர்க் கழக - ஊர்க்கிளை - உட்கிளைக் கழகச் செயலாளர்களாகப் பொறுப்பேற் றுள்ளவர்கள், போட்டியிட்டோ - போட்டியில்லாமலோ பொறுப்பேற்க இருப்பவர்கள் அனைவரையும் பாராட்டி வாழ்த்துகிறேன்.

வருகிற ஜூன் 2ஆம் நாள் அவர்களைப் பொதுக் குழுவில் சந்தித்து வாழ்த்துகிற வாய்ப்பையும் பெறுவேன். அநேகமாகப் பெரும்பான்மையான மாவட்டங்களில் அமைப்புகளின் தேர்தலும் மாவட்டக் கழகத் தேர்தலும் முடிவுற்று எஞ்சியுள்ள மாவட்டங்களாக

சென்னை

மதுரை

இராமநாதபுரம்

தேனி

விருதுநகர்

சிவகங்கை

ஆகிய ஆறு மாவட்டங்கள் மட்டுமே உள்ளன. அவற்றின் தேர்தல்களுக்கான நாட்களும் இன்றோ நாளையோ பொதுச் செயலாளரால் அறிவிக்கப்பட்டு அனைத்தும் இந்த மே

திங்களுக்குள் முடிவுற்று - தலைமைக் கழக நிர்வாகிகளைத் தேர்ந்தெடுக்கும் புதிய பொதுக்குழு ஜூன் 2ஆம் நாள் கூடுகிறது.

அன்று மாலை புதிய பொதுக்குழுவில் நிறைவேற்றப்படும் தீர்மானங்களை விளக்குகிற பொதுக் கூட்டம் நடைபெறுகிறது.

உடன்பிறப்பே, சுமார் இரண்டு ஆண்டுக் காலமாக நாடும் ஏடும் முறையே நமது கழகத் தேர்தல் பற்றிய செய்திகளை அறியவும் வெளியிடவும் - விபரம் தெரிந்து கொள்ளவும் - வாய்ப்பு பெறுகின்றன என்றால் - காரணம்; நாம் தான் கடந்த ஐம்பதாண்டுக் காலமாக முறைப்படி 11 பொதுத் தேர்தல்களை நடத்தி விட்டு, இப்போது 12வது பொதுத் தேர்தலை நடத்திக் கொண்டிருக்கிறோம். தேர்தலே நடத்தாத கட்சிகள் - தேர்தலைப் பற்றி நினைக்கவே நினைக்காத கட்சிகள் - அதற்கென சட்ட திட்டம் வகுக்காத கட்சிகள் - வகுத்தாலும் அதனைச் சட்டை செய்யாத கட்சிகள் - எனப்படும் பல கட்சிகளுக்கு மத்தியில்; "நிர்வாண தேசத்தில் கோவணம் கட்டியவன் பைத்தியக்காரன்" என்ற பழமொழிக்கொப்ப நாம் தான் உட்கட்சி ஜனநாயகத்தை உளமாரக் காப்பாற்றிக் கடைப்பிடித்து வருகிறோம்.

இதோ; கழகத்தின் இந்தப் பன்னிரண்டாவது பொதுத் தேர்தல்; முறைப்படி - கட்டம் கட்டமாக - அமைப்புகளுக்கு நடைபெற - மூலாதாரமாக; உறுப்பினர்கள் சேர்த்தல், புதுப்பித்தல் என்ற பணி (2001ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் தொடங்கப்பெற்றது. அடுத்து உறுப்பினர் அட்டைகள் 2002 ஜூன் மாதம் வழங்கப்பட்டது. கிளைக் கழகங்களில் தொடங்கி அமைப்புகளுக்கான தேர்தல் 2002 ஆகஸ்டு மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டு, அனைத்தும் தலைமைக் கழகத் தேர்தல் உட்பட 2003 மே திங்களில் நிறைவடைகிறது என்றால், 75 லட்சம் உறுப்பினர்கள் கலந்துகொண்டுள்ள இந்தத் தேர்தலை நடத்தி முடிக்க எந்த அளவுக்கு உழைப்பு வழங்கப்பட்டு, முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதை; ஜூன் திங்கள் பொதுக் குழுவுக்குப் பிறகு எழுதும் கடிதங்களில் விரிவாகக் குறிப்பிட இருக்கிறேன்.

இந்தத் தேர்தல் பணிகள் நடைபெற்றுள்ள ஒன்றரை ஆண்டுக் காலத்தில் அமைப்புகளுக்கான தேர்தல் களத்தில் நின்ற அருமை உடன்பிறப்புகள் ஆயிரக்கணக்கானவர்கள் முன்வைத்த பிரச்சினைகளை தீர்த்து வைக்கும் சந்தர்ப்பங்கள்

பலவற்றை நானும், பொதுச் செயலாளரும், பொருளாளரும், மண்டலப் பொறுப்பாளர்களும் பெற்றிருந்ததுகூட உற்சாகமூட்டக் கூடியதாகத்தானிருந்தது.

அவர்களுக்கிடையே என்ன பிரச்சினை - கழகப் பணியினை யார் நிறைவேற்றுவது என்பதில்தானே போட்டி - ஆளுங்கட்சியின் அடக்குமுறைகளைத் தாங்கிக் கொள்வது யார் முந்தி என்பதில்தானே போட்டி - வளரும் ஒரு இயக்கம் - வளர்ந்துவிட்ட ஒரு இயக்கம் - வரலாறு படைத்திட்ட ஒரு இயக்கம் - வரவேற்கத்தக்க போட்டிதானே இது!

அதனால்தான் இந்தப் போட்டியிலே வென்றவர்களை; நான் வென்றவர்கள் என்று சொல்லாமல், தோ்வு செய்யப்பட்டவர்கள் என்றே சொல்லி; போட்டியின்றி பொறுப்பேற்றுள்ளவர்களையும் - போட்டியிட்டுப் பொறுப்பேற்றிருப்பவர்களையும் - போட்டியிட்டும் பொறுப்பேற்க இயலாமற் போனவர்களையும் - ஒரு தாய்க்கும் தந்தைக்கும் எல்லாப் பிள்ளைகளும் தங்கள் பிள்ளைகள்தான் என்ற உணர்வும் பாசமும் இருப்பதுபோல்; கழகத்தின் எல்லா உடன்பிறப்புகளும் என் உயிரினுமேலான உடன்பிறப்புகள்தான் எனக் கூறி உளமார வரவேற்று வாழ்த்துகிறேன்.

அன்புள்ள,

மு.க.

27-05-2003

2925. "இந்து" வுக்கு இது பொன்னான சந்தர்ப்பம்!

உடன்பிறப்பே,

நோய்க் கிருமிகள் பயங்கரமானவை. கண்ணுக்குத் தெரியாமல்; நுண்ணிய பூதக் கண்ணாடிகளுக்குக்கூடத் தெரியாமல் நம் உடலின் உறுப்புகளுக்குள் புகுந்து புலன்களை அழிக்கக் கூடியவை. அவ்வப்போது அவற்றை எதிர்த்துப் போராடி - வென்றிட அல்ல - தற்காத்துக் கொள்ள மருந்துகள் உண்டெனினும்; நோய்க் கிருமிகளே நம்மைத் தொற்றிடாமல் இருக்கவேண்டுமானால் அதற்கு மிகச் சிறந்த பாதுகாப்பான வழி; அந்தக் கிருமிகளை எதிர்த்து தாங்கும் சக்தியுடன் நமது ஆரோக்கியத்தைக் கட்டிக்காப்பதுதான்.

இது தனிப்பட்ட மனித உடலைப் பற்றிய ஆய்வும் - நிரந்தர ஆரோக்கியத்திற்கான வழியுமாகும். ஒவ்வொரு கிருமியாக ஒழித்துக் கட்டி உடலைப் பாதுகாக்க - வந்தபின் முனைவதைவிட - வருமுன் எச்சரிக்கையாக இருப்பதே; உண்மையான பாதுகாப்பாக அமையுமல்லவா?

கிருமிகளே ஆக்ரமிக்க முடியாத அளவுக்கு ஆரோக்கியம் பெற்றிருக்க வேண்டும் திராவிட இனம் என்பதற்காகத்தான்; நோய் தினிக்கும் கிருமிகளை எதிர்ப்பது ஒருபுறமிருந்தாலும்- அந்தத் தினிப்புக்கே வழியின்றி நமது இனம் திடகாத்திரமாய் இருக்க வேண்டுமென்பதை எண்ணித்தான்; இந்த இனத்துக்கெனக் கட்டப்பட்ட இயக்கத்துக்கு பார்ப்பனரல்லாதார் இயக்கம் என்பதற்குப் பதிலாக திராவிட இயக்கம் என்ற பெயரையே நமது முன்னோடிகள் சூட்டினர்.

கிருமிகள் பெருகி நோய் முளைத்து, அது முற்றிய பிறகு அந்த நோயுடன் போராடுவது என்பதற்கு மாறாக; நோய்க்கான கிருமிகளே நுழைந்திட வொட்டாமல் தடுத்திடும் வலிமையைப்

பெறும் நோக்கில்தான், "நோயில்லாத மனிதன்" என்பதற்கு மாற்றாக - "ஆரோக்கியமான மனிதன்" என்று கூறுவதுபோல; 'பார்ப்பனரல்லாதார் இயக்கம்' என்பதை "திராவிட இயக்கம்" எனப் பெயரிட்டு அழைக்கத் தொடங்கினர் அன்றிருந்த அறிஞர்கள்.

அந்த இயக்கத்தின் முதலாண்டு விழா 1914ஆம் ஆண்டு; 'திராவிடர் சங்க முதலாண்டு விழா' என்ற பெயரால் திருவல்லிக்கேணியில் டாக்டர் நடேசனார் அவர்கள் முன்னின்று நடத்திய விழாவாக அமைந்தது. விழா நிகழ்ச்சியில் சிறப்புரையாற்றிய டாக்டர் நாயர் அவர்கள், தனது உரையின் இறுதியில் திராவிட இளைஞர்களையும், பெரியவர்களையும் பார்த்து முழங்கிய வாசகம்தான்,

"விழியுங்கள்!
எழுங்கள்!!
இன்றேல் என்றும் நீவிர் வீழ்ந்து பட்டோராவீர் "
(Awake, Arise or be forever fallen)

எனபதாகும்.

விழித்தோமா?
எழுந்தோமா?
முணுமுணுத்துக் கொண்டே
புரண்டுபடுத்தோம்.

தொடர்ந்து நம்மை எழுப்பும் குரல்கள் - கண்ணைக் கசக்கிக் கொண்டு விழித்து நோக்கி; நம்மை எழுப்பியவர் உள்ளம் புண்ணாகத் திட்டித் தீர்த்தோம்!

நடேசனார், தியாகராயர், நாயர் போன்றோரால் விழித்தெழுந்தோம் - நம்மைச் சுற்றிப் பார்த்தோம்!

"இன்றேல் என்றும் நீவிர் வீழ்ந்துபட்டோராவீர் !"

எனும் அச்சுறுத்தலை அய்யா பெரியாரும்- அறிஞர் அண்ணாவும் - நினைவுபடுத்திக் கொண்டேயிருந்ததால் முற்றாக அழிந்துவிடாமல் திராவிட இனம் காத்திடும் திருத்தொண்டினைச் செய்து வருகிறோம்.

திராவிட இனம் காத்திடும் பணியென்பது; திராவிடக் கலாச்சாரம், திராவிட நாகரிகம் எனும் அடிப்படையில் மூட

நம்பிக்கையை வீழ்த்தி ஆதிக்கமற்ற சமுதாயத்தை அமைத்திடவும், பகுத்தறிவு அடிப்படையில் மறுமலர்ச்சிக்கான சீர்திருத்தம் மேற்கொண்டிடவும், வறுமையை வென்று சமதர்ம சமத்துவ சமுதாயம் கண்டிடவும், பிற மொழி ஆதிக்கத்திற்கு இடம் தராமல் தமிழ் மொழிக்கு உரிய இடம் பெற்றிடப் பாடுபடவும், மாநில சுயாட்சிக் கொள்கை வென்றிடவுமான குறிக்கோள், கோட்பாடுகளைக் கொண்டதாகும்.

"திராவிட" எனும் சொல்லை போர்வையாகப் போட்டுக்கொண்டு - அதற்குரிய கோட்பாடுகளையும் குறிக்கோளையும் குப்பையில் எறிந்து விட்டு - ஏமாற்றித் திரியும் சில எத்தர்களுக்கு மத்தியில்; அவர்களின் ஓமகுண்ட யாகசாலை வாஸ்து ஜால மாயா வித்தைகளையும் அவர்க்கு மண்டியிடுவோர் மானமிழந்து இனத்தைக் காட்டிக் கொடுக்கும் நிலையையும் - சுட்டிக்காட்டிச் சுட்டெரிக்கும் சூரியச் சுடராக இன்றைக்குத் திகழ்ந்து கொண்டிருக்கும் தி.மு.கழகத்தை ஒழித்துக் கட்டிவிட்டால் - பிறகு தமது கூட்டத்துக்கு நிரந்தர நிம்மதி என நினைத்துக் கொண்டிருப்போரை நாம் புரிந்து வைத்துக் கொள்ள வேண்டும்.

கடந்த வாரம் எழுதியிருந்தேன், கலைவாணரும் பாகவதரும் இருக்கும் வரையில் தமக்குக் கலை உலகில் இடமில்லை எனக் கண்டு, அவர்களுக்கு ஓர் இடர் வந்துற்றது என்றதும் அவர்களை அறவே ஒழித்துக்கட்ட "அவாள் வட்டாரம்" எந்த அளவுக்குப் பிரச்சாரம் செய்தது - எந்த அளவுக்கு விஷம் வேலைகளில் ஈடுபட்டது என்பது அந்நாள் திராவிட இயக்கத்தார் அறியாதது அல்லவே!

கலைவாணர், பாகவதர் விடுதலைக்குக் குறுக்கே நின்று பழி கூறிய கழிசடைக் கும்பலை மக்களுக்கு அடையாளம் காட்டி, அன்றைக்கு பெரியாரும் அண்ணாவும் மாநில முழுதும் மாபெரும் கூட்டங்களிலே பேசினார்கள். அந்தத் திராவிடத் திலகங்களை விடுதலை செய்யுமாறு வேண்டுகோள் கிளர்ச்சி நடத்தினார்கள். இறுதியாக நீதி வென்றது. எனினும்; இடையே 'ஆரிய மாயை' தன்னாலியன்றதையெல்லாம் செய்து அவர்கள் விடுதலையைத் தடுக்கப் பார்த்தது.

அதைத்தான் இப்போதும் ஒரு கல்லில் இரண்டு மாங்காய் அடிக்கும் முயற்சிக்குத் துணையாக நின்று செய்து கொண்டிருக்கிறது.

நமதருமை தளகர்த்தர் தா.கி.யை இழந்து நிற்கிறோம்.

- உண்மையான கொலையாளியைப் பிடித்திருந்தால் வரவேற்றிருப்போம்.

அண்மைக்கால உதாரணம் ஒன்றைப் பார்க்கலாம்.

ஆளுங்கட்சியின் திருப்போரூர் தொகுதி சட்டப் பேரவை உறுப்பினர் திருமதி கணிதா சம்பத்.

அ.தி.மு.க.வைச் சேர்ந்த ஊராட்சி மன்றத் தலைவியின் கணவர் ஒருவர் கொலை செய்யப்பட்டார். கொலை செய்யப்பட்டவரின் மனைவியான ஊராட்சி மன்றத் தலைவி காவல் துறையினரிடமும், செய்தியாளர்களிடமும் தன் கணவன் கொலைக்குக் காரணம், அந்தத் தொகுதியின் அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் கணிதா சம்பத்தான் என்று வெளிப்படையாக குற்றஞ்சாட்டினார். அது அனைத்து ஏடுகளிலும் வெளிவந்தது.

அவ்வாறு குற்றஞ்சாட்டி ஓராண்டு ஆகிறது.

ஜெயலலிதாவின் காவல்துறை அந்த குற்றச்சாட்டினை ஏற்று, ஆளுங்கட்சியின் சட்டப்பேரவை உறுப்பினர் வீட்டுப் பக்கம் திரும்பிப் பார்க்கக்கூட இல்லை.

இந்தக் கொலை விவகாரத்தில் அவசரமும் காட்டவில்லை; அக்கறையும் சிறிதுகூட இல்லை,

ஆனால் தற்போது 24 மணி நேரத்திற்குள் அழகிரியை அவசர அவசரமாக கைது செய்து வழக்கு போட்டிருப்பதோடு, ஒரு கல்லில் இரண்டு மாங்காய் அடித்த இரட்டிப்பு மகிழ்ச்சி அடைய - அதற்கு 'இந்து' ஏடும் பக்கம் பக்கமாக பிரச்சாரம் செய்கிறது.

போலீஸ் உளவுத் துறையே 'இந்து' ஆபீசில் குடியிருப்பது போலச் செய்திகள் பாவம்; இந்துவே போலீஸ் வேலை பார்க்கிறது; அவ்வளவு வழக்குகள் அதன்மீது! என் செய்யும் இந்து!

வழக்குகளும் வாபஸ் ஆக வேண்டும்!

விளம்பர வருமானமும் வர வேண்டும்!

இதையெல்லாம்விட முக்கியமாக 'இந்து'வின் ஒரே குறிக்கோளான திராவிட இயக்கத்தை வீழ்த்த இது பொன்னான சந்தர்ப்பம் என்று அது கருதுகிறது.

அம்மையாரும் அப்படித்தான் கருதுகிறார் - அடிமைகளோ துணை போகின்றனர்!

ஆனால் ஒன்று; நான் ஆரம்பத்தில் குறிப்பிட்டிருப்பதுபோல; தி.மு.க. ஆரோக்கியமான திராவிடம் இயக்கம். இதனைக் கிருமிகள் அண்டி அழித்து விட முடியாது!

அன்புள்ள,

மு.க.

28-05-2003

2926. இந்தக் “ கடுகு ” மனிதனின் கண்ணோட்டம் இது !

உடன்பிறப்பே,

அகவை 80 எனக்கு ஆரம்பமாகிறது; வரும் ஜூன் திங்கள் மூன்றாம் நாள்!

இந்த எண்பது வயது நிறைவு பெறும்போது ஆயிரம் பிறைகள் கண்ட வாய்ப்பு பெற்றவன் என்ற சிறப்புக்குரியவனாகவும் விளங்கிடுவேன். என் வாழ்க்கை வரலாற்றுத் தொகுப்பு எனப்படும் ’நெஞ்சுக்கு நீதி’ புத்தகம் நான்கு பாகங்களாக வெளிவந்துள்ளது. அதில் முதல் பாகம் – என்னுரையில் “வாழ்க்கையை ஒரு போராட்டம் என வர்ணிப்போர் உளர்! எனக்கோ; போராட்டமே வாழ்க்கையாகி விட்டது” எனக் குறிப்பிட்டது பொய்யாகாமல் எண்பது வயதைத் தொடும் இந்தக் கால கட்டத்திலும் என் வாழ்க்கை வரலாறு போர்க்கள நடை போட்டுக் கொண்டுதானிருக்கிறது.

நெஞ்சுக்கு நீதி நாலு பாகங்கள் மொத்தம் ஏறத்தாழ மூவாயிரம் பக்கங்கள் – அவற்றில் இந்த விரிந்து பரந்த உலகம் – சிறந்த நாடுகள் – சீர்குலைந்த தேசங்கள் – இந்தியப் பொன்னாடு – திராவிடத் திருநாடு – தமிழ்த் தாயகம் – அனைத்திலும் இந்தக் ‘கடுகு’ மனிதனின் கண்ணோட்டமெனப் பின்னிப் பிணைந்து வரும் நிகழ்ச்சிக் கோவை; நிரந்தினிது சொல்லப் பெற்றிருக்கிறது.

பழத்தை அழுத்திப் பிழிந்து சாறெடுத்துத் தருவது போல் தருகின்றேன், 1924ஆம் ஆண்டு ஜூன் 3ஆம் நாள் தஞ்சைத் தரணி – இன்றைய நாகை மாவட்டம் – திருக்குவளைச் சிற்றூரில் – வேளாண் தொழிலில் பெரிதும் ஈடுபட்டிருந்த ஓர் இசைக் குடும்பத்தில் பிறந்தேன். பிறந்தது என் சாதனையல்ல. அஞ்சுகம் அம்மையார், முத்துவேலர் எனும் என் அருமைப் பெற்றோரின் சாதனை.

முறைப்படி ஆரம்பப் பள்ளியில் அரிச்சுவடி - அத்துடன் ஆசான் ஒருவரிடம் இசைப்பயிற்சி - மிட்டா மிராசுகள், ஆதிக்க சமுதாயத்தினர் எதிரே வந்தால் எங்கள் தோளில் இருக்கும் துண்டு; இடுப்புக்குக் கீழே இறங்க வேண்டும்! இந்த இழிநிலை பிடிக்காமல் - இயற்கையாகவே சுய மரியாதையின் தூண்டுதலால் இசைப் பயிற்சிக்கு முற்றுப் புள்ளி.

1936ல் திருவாரூர் உயர்நிலைப் பள்ளியில் போராடி இடம் பெற்று ஐந்தாம் வகுப்பில் சேர்ந்த கதை! -

1938 ஜூன் 3ந்தேதி சென்னையில் பெரியார் இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போர் தொடங்குகிறார். திருவாரூர் மாணவர்களும் இந்தி ஆதிக்க ஒழிப்பு அறப்போரில் ஈடுபடுகிறோம். இந்தி வகுப்பில் ஆசிரியருடன் பிரச்சினை. நாள்தோறும் ஆரூர் வீதிகளில் என் தலைமையில் மொழிப்போர் ஊர்வலம்.

1942 ஆகஸ்டு திங்களில் 'முரசொலி' எனும் அச்சிட்ட துண்டு அறிக்கை வெளியிடுவதற்கு முன்னால் - 'மாணவநேசன்' என்ற கையெழுத்துப் பிரதி வாயிலாகத் தமிழ் இன உணர்வுப் பிரச்சாரம் - பகுத்தறிவுக் கொள்கை விளக்கம்!

1944ல் திருமணம் - சில ஆண்டுகள் சென்று வாழ்க்கைத் துணைவி பத்மாவதி நோயுற்றுக் கிடந்த போது அருகிலிருந்து கவனிக்க முடியாமல் புதுக்கோட்டை மாவட்டச் சுற்றுப் பயணம் - இரவோடிரவாக லாரியில் ஏறி திருவாரூர் திரும்பி வருவதற்கும்; தேனினுமினியாள் இறுதியாக விழிகள் மூடுதற்கும் நேரம் சரியாக இருந்த கொடுமை.

1948ஆம் ஆண்டு செப்டம்பர் 15ஆம் நாள் இந்தியை எதிர்த்து நாடெங்கும் உள்ள பள்ளிகளின் முன்னே ஒருநாள் அடையாள மறியல் எனப் பெரியார் அறிக்கை! அப்போது அந்த நாள் அண்ணா பிறந்த நாள் என்று யாருக்கும் தெரியாது. அந்த நாளில்தான் எனக்கும் தயாளுவிற்கும் திருவாரூரில் திருமணம்! நான் திருமணப் பந்தல் முகப்பில் நின்று கொண்டிருந்த போது அந்த வழியாக வந்த இந்தி எதிர்ப்பு ஊர்வலத்தில் என்னையும் இணைத்துக் கொள்கிறேன். மாப்பிள்ளை எங்கே என்று தேடுகிறார்கள். அடையாள மறியல் முடிவுற்ற பிறகே மணவிழா நடைபெற்ற விந்தை.

அதற்கிடையே பாண்டிச்சேரியில் தொடர்ந்து பகுத்தறிவு நாடகங்கள் - கட்சி மாநாடு வேறு - கலந்துகொண்டோர் பெரியார், அண்ணா , புரட்சிக் கவிஞர், நாவலர், நான், பேராசிரியர் - அந்த மாநாட்டில் எதிர்க்கட்சி அமளி! பாரதிதாசனும் நானும் குறி வைத்துத் தாக்கப்படுதல் என் உயிரைப் பறிக்குமளவுக்கு தாக்கப்படும்போது; அண்மையில் காலமான பானுமதி என்ற அம்மையார்தான் காப்பாற்றி மறுநாள் காலையில் என்னைப் பெரியார் இருக்குமிடத்திற்கு அழைத்துச் செல்கிறார்கள். 1945இல் ஈரோடு குரு குலத்தில் - பெரியாரின் 'குடி அரசு' இதழில் துணை ஆசிரியர் பொறுப்பு!

பின்னர், ராஜகுமாரி, பராசக்தி, மனோகரா, திரும்பிப்பார், பூம்புகார், நீதிக்குத் தண்டனை திரைப்படங்கள் மூலம் கலையுலகில் பெரும் புரட்சி - அவற்றின் தொடர்ச்சியாக எழுபத்தி ஐந்து திரைப்படங்கள், அவற்றில் சில படங்களில் திரைக்கதை உரையாடல் மட்டுமின்றி பாடல்களும் கூட!

பலத்த எதிர்ப்பும் - அதனை மீறிய பாராட்டும் - கலையுலகப் போராட்டத்தின் விளைவுகளாயின!

கலையுலகப் பணி என்பதற்காக களம் புகும் பணிகளை ஒருக்கணமும் ஒத்தி வைக்காததினால்தான் - இருபது தடவைகளுக்குக் குறையாமல் இடர்மிகு சிறைவாசம் - கல்லக்குடி போராட்டம் - கடுங்காவல் தண்டனை - கட்டாய இந்தி எதிர்ப்பு மொழிப் புரட்சி - பாதுகாப்புச் சட்டம் பாய்ச்சல் - பாளையங்கோட்டை தனிமைச் சிறைவாசம் - "தன்னை வெல்வான் தரணியை வெல்வான் என்பதற்கு எடுத்துக்காட்டான என் தம்பி கருணாநிதி அடைபட்டிருக்கும் பாளை சிறைச்சாலை; எனக்கு யாத்திரை ஸ்தலம்" என்று அண்ணா அவர்கள் தாமிரபரணியாற்றங்கரையில் பாடிய பாராட்டுத் தமிழ்ப்பண்!

இலங்கைத் தமிழர்க்காக - விவசாயிகளுக்காக - தொழிலாளர் உரிமைகளுக்காக போராட்டங்கள், சிறைவாசங்கள் எத்தனை எத்தனையோ! -

ஆட்சி அமைப்பதற்கு முன் நடந்த தேர்தலில் வாக்காளர்களைச் சந்திக்கச் சென்ற என்னை; வளைத்துக் கொண்டு மரண ஓலையே தயாரித்து விட்டவர்களின் கொடிய ஆயுதங்களிலிருந்து என்னை மீட்டு இரவு முழுதும் குடிசையில்

பாதுகாத்துக் காலையில் அண்ணாவின் கையில் ஒப்படைத்த கோட்டூர்புரம் சாரங்கபாணி குடும்பத்தினரின் தியாகச் செயல் - வீரச் செயல்!

14 ஆண்டுக் காலம் ஆட்சி புரிந்து எதிர்க்கட்சி ஆன பிறகு; பழி வாங்கும் அடக்குமுறைப் போலீஸ் ராஜ்யத்தில் நள்ளிரவுக் கைது - என் மனைவி ராஜாத்தி நெயப்புடைக்கப்பட்ட வேதனை, மாறன், டி.ஆர். பாலு, அழகிரி, ஸ்டாலின் மற்றும் 50 ஆயிரம் கழகத்தினர் சிறையில் அடைக்கப்பட்ட அக்கிரமம்,

இப்படிக் களங்கள் பல அமைந்து கொண்டேயிருந்து - போர்க்கொடி உயர்ந்து கொண்டேயிருந்து - போர் முழக்கம் கேட்டுக் கொண்டேயிருந்த அந்தக் கால கட்டங்களில்தான் - அரசியல் பணி ஒரு புறம் இலக்கியப் பணி ஒரு புறமென இரண்டும் இருவிழிகளாக அமைந்து நூற்றுக்கணக்கான சிறிய பெரிய நான் எழுதிய நூல்கள் வெளிவந்தன.

குறளோவியம், திருக்குறள் உரை, சங்கத் தமிழ், பூம்புகார், தொல்காப்பியப் பூங்கா போன்ற இலக்கியங்கள் - பொன்னர் சங்கர், ரோமாபுரிப் பாண்டியன், பண்டாரக வன்னியன், தென்பாண்டிச் சிங்கம் போன்ற புதினங்கள் தமிழர் கரங்களை அலங்கரித்தன. இடையிடையே என் பிறந்த நாளான ஜூன் 3ம் வந்து, வந்து உன் போன்றோரின் வாழ்த்து பெற்று விடையும் பெற்றது. ஒவ்வொரு பிறந்த நாள் விழாவினையொட்டி ஏழையெளியோருக்கான நல்வாழ்வுத் திட்டங்கள் அறிவிக்கப்பட்டு அவைகளும் சிறப்பாக நடைபெற்றதுண்டு.

அதிலே கூட 1976 நெருக்கடி கால ஜூன் 3ஆம் நாள் ஒன்றில்; மத்திய மாநில அரசுகளின் எமர்ஜன்சி தணிக்கையை எதிர்த்து; என் கையாலேயே சென்னை அண்ணா சாலையில் துண்டு அறிக்கை களை நடந்தே சென்று வழங்கி; அண்ணா சிலை இருக்குமிடத்தில் மறியலில் ஈடுபட்டு கைதான சம்பவமும் உண்டு! பலர் ரத்தக் காயங்கள் பெற்ற நிகழ்வும் உண்டு!

அந்த ஜூன் 3ந்தேதி போன்றே; அதேவகையில், அமையாவிடினும் இது வேறு வகையில் என் மனக் கிலேசத்தைப் பெருக்கிடும் வண்ணம் அமைந்து; கடந்த காலத்தில் ஓரிரு பிறந்த நாட்களைக் கொண்டாடாமல் தவிர்த்தது போல இந்தப் பிறந்த நாளையும் கொண்டாடாமல் செய்துவிட்டது.

உனக்குத் தெரியும்; நான் தூக்கி வளர்த்த பிள்ளை - என் தோளில் சுமந்த பிள்ளை - மூதறிஞர் ராஜாஜியும், பேரறிஞர் அண்ணாவும், காயிதே மில்லத்தும் முன்மொழிந்தும் வழிமொழிந்தும் நாடாளுமன்றம் சென்றவர் - நாடும் ஏடும் போற்றும் மத்திய அமைச்சராகத் திகழ்ந்து; நானிலத்தில் நமது நாட்டின் கீர்த்தியை நிலைநாட்டியவர் - என் அன்புக் கண்மணி மாறன் சுமார் ஒன்பது மாதங்களுக்கு மேலாக உயிருடன் போராடிக் கொண்டு; வெளிநாட்டு மருத்துவமனையில் நான் சென்று பார்க்கக் கூட முடியாத நிலையில் இருக்கிறார் என்றால் இந்த நிலையில் நான் பிறந்தநாளை நினைத்துப் பார்க்க முடியுமா?

இதோ இடி விழுந்தாற் போல இன்னொரு அதிர்ச்சித் துயரம்- என் இனிய தம்பிகளில் ஒருவரும் - ஈடற்ற தளகர்த்தர்களில் ஒருவருமான - முன்னாள் அமைச்சரும் எந்நாளும் என் பாசத்துக்குரியவருமான தா.கி. படுகொலை.

அதற்கு அரசியல் வண்ணம் பூசிட முயன்று தி.மு.க.வையே அழித்திடும் திட்டத்துடன் என் மகன் அழகிரியையும், மேலும் சில கழகக் காளையரையும் அடித்துத் துவைத்து சித்ரவதை செய்து பொய் வழக்கு ஜோடிக்க முயன்றிடும் கொடுமை! ஒரு கல்லில் இரண்டு மாங்காய் அடிக்கும் திறமை!

இவைகளோ; வீட்டுப் பிரச்சினைகள்; நாட்டுப் பிரச்சினையோ சொல்லத் தரமன்று! - வேட்டைக் குட்பட்ட காட்டு மிருகங்களைப் போல ஆக்கப்பட்டு விட்டனர் எல்லாப் பிரிவு மக்களும் இந்த ஆட்சியில்!

செங்கோல் ஏந்தியோர் கொடுங்கோலர்களாக மாறிப் புரிந்திடும் சேட்டைகளுக்கோ அளவில்லை!

இந்நிலையில் இயற்கையும் வஞ்சித்து வறட்சியும் வறுமையும் தாண்டவமாடுகிறது.

கொலை - கொள்ளை - விபத்து - நாள்தோறும் நாள்தோறும்!

தேள் போல் இச்செய்திகளும் - செயல்களும் - என் சிந்தையில் கொட்டிக் கொண்டேயிருப்பதால்,

பிறந்த நாள் விழா வேண்டாமென்று பிடிவாதமாகச் சொல்லிவிட்டேன்.

பேராசிரியரும், ஆர்க்காடும்கூட பிறந்தநாளை யொட்டி விழா வேண்டாம் - பிறந்தநாள் பொதுக் கூட்டம் வைத்துக் கொள்ளலாம் என்றனர்.

பேராசிரியர் இட்ட ஆணையாக அதனை நான் கருதினாலும்; அவரை வேண்டிக் கேட்டுக் கொண்டிருக்கிறேன் - பொதுக்குழு தீர்மான விளக்கப் பொதுக்கூட்டமாக - அதுவும் ஜூன் 3ல் அல்ல - ஜூன் 2ல் வைத்துக் கொள்ளலாம் என்று!

அவரும் ஏற்றுக் கொண்டிருக்கிறார் - என் உயிரினுமேலான உடன்பிறப்பே; இந்த அகவை 80 உன் அருமைச் சகோதரனின் வேண்டுகோளை ஏற்று - "பிறந்த நாள் விழா" என்பதைத் தவிர்த்திடக் கேட்டுக் கொள்கிறேன். வாழ்த்துகளுக்கும் பஞ்சமில்லை; அதனை மட்டும் வாரி வழங்குகிறேன்.

அன்புள்ள

மு.க.

30-05-2003

2927. கோட்டை நாற்காலி இன்றுண்டு; நாளை கொண்டு போய்விடுவான் திராவிடக்காளை !

உடன்பிறப்பே,

மணவிழா முடிந்த அலங்கார மண்டபமும், பந்தலும் வெறிச்சோடிக் கிடப்பது போல -

தேர்த் திருவிழா நிறைவுற்ற திருக்கோயில் தெருக்களில் நடமாட்டம் குறைந்து களையற்று இருப்பது போல -

மாநாடு நடைபெற்று மறுநாள் காலி மைதானம் காணப்படுவது போல -

நேற்று திடீரென ஒரு நாள் நமது அண்ணா அறிவாலயத்தில் அந்த நிலை ஏற்பட்டு விட்டதை; களைப்பற்று மூச்சு வெளிப்படக் கண்டு; "அப்பாடா! இன்று ஒரு நாள் நமக்கெல்லாம் ஓய்வு" என்று நானும் பொதுச் செயலாளரும், பொருளாளரும், தம்பி துரைமுருகன் போன்றவர்களும், தலைமை நிலையத்தில் பணியாற்றும் பத்மநாபன், ஜெயகுமார், இளங்கோவன், ராதாகிருட்டிணன் என மற்றும் பல தம்பிமார்களும் பேசி மகிழ்ந்தோம்.

ஆம் அந்த அளவுக்கு 2001 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல்; அண்ணா அறிவாலயம் கழக அலுவலகத்தில் கூட்டம். உறுப்பினர் சேர்க்கவும் புதுப்பிக்கவும் தேவையான படிவங்களைப் பெறுவதில் தொடங்கி - உறுப்பினர் அட்டைகள் வழங்கப்படும் பணியும் அதில் ஏற்படும் நிறைகுறைகளும் எடுத்துக்காட்டப்பட்டு - 2002 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் கிளைக் கழகத் தேர்தல் 65,000 கிளை அமைப்புகளுக்கு நடை பெற்றபோது உருவான பிரச்சினைகளில் அவ்வப்போது நல்ல தீர்வு காண கழக உடன்பிறப்புகள் கூட்டம் கூட்டமாக வந்தும், அடுத்து பேரூர், ஒன்றியம், மாநகர், மாவட்டமென அனைத்து அமைப்புகளிலும் படிப்படியாக தேர்தல் நடைபெறுவதற்கு - விண்ணப்பம் அளிப்போர் - ஏதேனும் புகார் இருப்பின் தெரிவிப்போர் - ஜனநாயகத்தில்

போட்டி தவிர்க்க முடியாதது என்பதாலும் - கழகப் பணியாற்று வதில் யாருக்கு வாய்ப்பு என்பதில்தான் போட்டி என்பதாலும் - அவற்றில் ஏற்படும் சிறு சிறு மனத் தாங்கல்களுக்கு அன்பெனும் மருந்தால் நாங்கள் ஒத்தடம் கொடுப்பதால் குளிர்வோர் என ஏராளமானவர் அறிவாலயத்தை அனுதினமும் முற்றுகையிட்டுக் கொண்டேயிருப்பர்.

சில அமைப்புகளுக்கு போட்டியிடுவோர் அவர்களாகவே தலைமையை அணுகி; "நாங்கள் எங்களுக்குள் போட்டியிடாமல் பொறுப்புகளைப் பகிர்ந்து கொண்டு பணி புரிகிறோம். அதற்கு வழி காட்டுங்கள்" எனக் கேட்டு சுமுகமாக முடிவு செய்து கொள்ளவும் வந்து குழுமிய வண்ணமிருந்தனர்.

போட்டியிடும்போது வரும் பிரச்சினைகள் - சமரசமாகத் தீர்த்து வைக்கும்போது ஏற்படும் தர்ம சங்கடங்கள் - அனைத்தையும் காலை முதல் மாலை வரையில்; ஏன் - சில நாட்கள் இரவு முழுதுங்கூடக் கலந்து பேசி நல்ல முடிவுகள் கண்டு; இதோ 65000 கிளை அமைப்புகளில் இருந்து பேரூர், நகரம், ஒன்றியம், மாநகரம், மாவட்டமெனவும் தலைமைக் கழக நிர்வாகிகளைத் தேர்வு செய்ய பொதுக்குழு எனவும் பல கட்ட அமைப்புகள் - புதிய அமைப்பு களாக அறிவிக்கப்பட்டுள்ளன. அந்த அமைப்புகளின் புதிய நிர்வாகிகளின் பெயர்களும் வெளியிடப்பட்டுள்ளன.

இதோ அந்தப் பட்டியல் :

1. மாவட்டக் கழகச் செயலாளர்கள் 30 பேர் உள்ளிட்ட மாவட்டக் கழக நிர்வாகிகள் - 210 பேர்
2. ஒன்றியக் கழகச் செயலாளர்கள் - 393 பேர்
3. நகரக் கழகச் செயலாளர்கள் மற்றும் பகுதிக் கழகச் செயலாளர்கள் - 159 பேர்
4. தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் - 126 பேர்
5. பொதுக்குழு உறுப்பினர்கள் - 298 பேர்

இவர்கள் அனைவருமே; அதாவது மொத்தம் 1,186 பேரும், அவர்கள் தேர்வு பெற்றுள்ள பொறுப்புத் தகுதி அடிப்படையில் பொதுக்குழு உறுப்பினர்களாகிறார்கள்.

பொதுக்குழுவின் முதல் கூட்டம் முடிந்த பிறகு - தலைமைக் கழகத் தேர்தல் முடிந்த பிறகு - ஓரிரு வாரங்களில் கழகத் தலைவரும், பொதுச் செயலாளரும் கலந்து பேசி - அமைத்து அறிவிக்கப்படும் பல்வேறு பணிக் குழுக்களில் இடம் பெறுவோரையும் சேர்த்து செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர் எண்ணிக்கை மேலும் சிறிது பெருகிடும்.

கடிதத் தொடக்கத்தில் நான் குறிப்பிட்டிருப்பது போல் நேற்றும் இன்றும் நமது உடன்பிறப்புகளின் நடமாட்டம் குறைவாக இருந்திடும் அறிவாலயத்தில் நாளை முதல் மீண்டும் களை கட்டும் - கடல் அலையெனக் கழகத்தினர் குவிந்திடுவர்.

புதிய பொறுப்பு மேற்கொண்ட பூரிப்பில்

புதிய முறுக்குடன்,

சிரிப்பது பூப்போல என்றாலும்

சிலிர்ப்பது சிங்கம் போல

நமது இனப்பகை எதிர்க்க, என

நிமிர்ந்த நடை போட்டிடுவர்!

கூண்டோடு குழி தோண்டிப் புதைத்து விட்டோம் என்றிருந்தோம் -

பூண்டோடு அழிந்தது திராவிட இன உணர்வு எனத் திருப்தி கொண்டிருந்தோம் - ஆனால்; இதோ அந்தக் கூண்டு, "ஆண்டாண்டுக் காலம் முனைந்தாலும் அசைக்க முடியாதப்பா என்னை" என்று அறைகூவல் விடுக்கும் அண்ணா அறிவாலயமாக எழுந்து நிற்கிறதே, அதனால்தான் சொல்லுகிறேன், அருமை உடன்பிறப்பே; அழிப்பதென்றால் என்னை அழிக்கலாம்; ஆனால் அறுபத்தி ஐந்து ஆண்டுக் கால என் பொது வாழ்வுக் கருவூலத்தை எப்படி அழிக்க முடியாதோ, என்னை இழித்துரைத்து, இடித்துரைத்து என் இதயத்தைப் புண்படுத்துவதின் மூலம் எப்படி என்னை எரிச்சல்படுத்த முடியாதோ, அதே போலவும், அதை விடவும் அதிக எதிர்ப்புகள், இடையூறுகள் கொண்டு மோதினாலும் என் உயிர் மூச்சாம் இந்தக் கழகத்தை எவரும் - எந்தச் சக்தியும் - எந்தப் பிரச்சாரமும் வீழ்த்தி விட முடியாது. விட மாட்டோம் வீழ்த்துவதற்கு என வீம்பல்ல; வீரம் பேசி அதனை விளைவித்துக்

காட்டும் ஆற்றலையும் பெற்றுள்ளோர் ஆயிரமாயிரம் என்று லட்சோப லட்சமென்று அணி திரண்டவாறு இருக்கின்றனர். நாட்டின் பிணி தீர்க்கவும் முனைகின்றனர்.

"கோட்டை நாற்காலி இன்றுண்டு; நாளை
கொண்டு போய்விடுவான் திராவிடக் காளை"

என்ற புரட்சிக் கவிஞரின் கனவு மீண்டும் நிறைவேறவும் -

"ஆண்ட இனத்தால் மீண்டும் முற்றுகை
மாண்டிடும் புழுவே மகுடம் கழற்று"

என "குடியரசு" அலுவலகத்தில் பணியாற்றும் போது, நான் விடுத்த அறை கூவல் வெற்றி பெறவும் காலம் கனிந்து கொண்டிருக்கிறது.

இதனைக் கண் எரியக் காண்பதால்தான் கழகத்தின் வளர்ச்சியைத் தடுத்திடக் கற்பனைக் கதைகளைக் கட்டுகிறார்கள் - களங்கப்படுத்தக் கயிறு திரிக்கிறார்கள் - நம் கை விரலைக் கொண்டே நம் கண்களைக் குத்தப் பார்க்கிறார்கள் - நமது ஆறாத் துயரத்தை நம்மை வீழ்த்தும் ஆயுதமாக்கத் திட்டம் வகுக்கிறார்கள்.

ஆம், உடன்பிறப்பே; "தி.மு.க; வீட்டுக்கு விளக்கு - நாட்டுக்குத் தொண்டன்!" என்றார் அண்ணா .

அந்த அண்ணாவையும் மறவாமல்; அவர் தந்திட்ட இந்த விளக்கையும் அணையாமல், பாதுகாத்தால்தானே நாம் நாட்டுக்குத் தொண்டன் என்ற நம்பிக்கை வலுப்பெறும்; நயவஞ்சகர் ஆதிக்கம் முடிவுக்கு வரும்!

அன்புள்ள,

மு.க.

01-06-2003

2928. குதிரையா ? மாடா ?
கோர்ட்டில் குழப்பம் வராதா ?

உடன்பிறப்பே,

இரவு நேரத்தில் பெரும் பகுதியைப் புத்தகங்கள் படிப்பதிலேயே கழிப்பதை நான் வழக்கமாகக் கொண்டிருப்பதை நீ அறிவாய்.

நேற்றிரவு மூன்று புத்தகங்கள் - அவற்றை முழுமையாகப் படித்து முடிக்கவில்லை. மூன்றில் இரண்டு; மூதறிஞர் இராஜாஜியின் வாழ்க்கை பற்றியது. மூன்றாவது புத்தகம்; "ஓஷோ" எழுதி, டாக்டர் திரு. ரமணி தமிழில் தந்துள்ள "தம்ம பதம்" எனப்படும் "புத்தரின் வழி". அது பற்றிப் பிறிதோர் நாள் எழுதுகிறேன்.

இராஜாஜி வரலாறு எனக்கு ஏற்கனவே படித்துத் தெரியும் என்பதாலும், கேட்டுத் தெரியும் என்பதாலும் நானே அறிந்தவன் என்பதாலும், அதில் சில பக்கங்களை மட்டுமே புரட்டினேன். ஆம், இரண்டு புத்தகங்கள், இராஜாஜி பற்றி!

ஒன்று 'கௌசிகன்' என்பவர் எழுதி வானதி பதிப்பகம் வெளியிட்ட நூல் - "ராஜாஜி" என்ற தலைப்பில்

இன்னொரு நூல் "ராஜாஜி வாழ்க்கை வரலாறு" என்ற தலைப்பில்

கல்கி சி.ராஜேந்திரன்

தமிழாக்கம் செய்து வெளிவந்துள்ளதாகும்!

ராஜாஜி வாழ்க்கையில் 1909ஆம் ஆண்டு நடந்த ஒரு சம்பவத்தை அதன் "மூலம்" கெடாமல் இருவரும் தமிழில் தந்திருந்த போதிலும் - ஒரு கிரிமினல் வழக்கு அளவுக்குச் சென்றிருந்த அந்த சம்பவத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது; குதிரை வண்டியே மாட்டு வண்டியாக மாறிவிடுவது எவ்வளவு

பெரிய மாயா ஜாலம்! கவனக் குறைவா? அல்லது மாடு, குதிரையாகவோ - குதிரை, மாடாகவோ மாறிய அதிசயம் நடந்ததா? அந்த வியப்புக்குரிய விஷயம் பற்றி, அந்த நூல்களை வெளியிட்ட பாரதி பதிப்பகமும் வானதி பதிப்பகமும்தான் நமக்கு விளக்க வேண்டும்.

சம்பவம் என்னவோ அவர்கள் கணக்கில் சதாரணமானதுதான்! அதாவது இராஜாஜி அவர்கள் இரவு நேரத்தில் ஒரு சுங்கச் சாவடி ஊழியன், தனது வண்டியை மறித்தான் என்று அவனைச் சுட்டுத் தள்ளிவிட்டார் என்ற சம்பவம் தான்!

இதைப் பற்றிய தகவலைத் தமிழில் திரு. கல்கி. ராஜேந்திரன் எப்படித் தருகிறார் ? திரு. கௌசிகன் எப்படித் தருகிறார்?

இரண்டையும் படிக்க நேர்ந்தது; அதனால் படித்து விட்டு திடுக்கிட்டேன்!

இராஜாஜியா ஒருவனைச் சுட்டார் என்று திடுக்கிடவில்லை - நீதிமன்றமே திடுக்கிடாத காரணத்தினால்தான் அவரை விடுவித்து விட்டது; துப்பாக்கியை மாத்திரமே பிடுங்கிக் கொண்டார்கள் என்று இரு புத்தகங்களின் மொழி பெயர்ப்பாளர்களும் சம்பவத்தை முடித்திருக்கிறார்கள்.

நான் படித்ததை நீயும் படித்துப் பாரேன்! முதலில் திரு. கல்கி ராஜேந்திரன் தமிழாக்கம் செய்து வெளியிட்ட நூலில்:

> ‘1909 வாக்கில்தான் - ஓர் இரவு ஒரு தவறான அனுமானத்தின் காரணமாக சி.ஆரின் துப்பாக்கியிலிருந்து புறப்பட்ட ஒரு தோட்டா, ஒரு பாவமும் அறியாதவனை கிட்டத்தட்ட கொன்றே விட்டது. நாமக்கல்லில் ஒரு வழக்கில் ஆஜராகி வாதித்து விட்டு சி.ஆர். மாட்டு வண்டியில் இரவோடு இரவாக சேலம் திரும்பிக் கொண்டிருந்தார். ரிவால்வரைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு வண்டியில் படுத்துத் தூங்கி விட்டார். அச்சாலையில் வழிப்பறிக்கு ஆளானவர்கள் உண்டு. “பணம்” என்று யாரோ உரக்கக் குரல் எழுப்புவது கேட்டு விழித்தெழுந்த சி.ஆர். தம்மை ஒரு கொள்ளைக்காரன்தான் வழி மறிக்கிறான் என்று எண்ணி விட்டார். இருட்டில் துப்பாக்கியை உயர்த்தி, குரல் வந்த திசை நோக்கிச் சுட்டார். லாந்தர் விளக்குடன் ஒருவன்

அவசரமாக வந்தான். அந்த வெளிச்சத்தில் சி.ஆர். சுங்கச் சாவடி வாசலில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஒரு மனிதனை தாம் சுட்டு விட்டதைக் கண்டார். தமது மாட்டு வண்டியிலேயே அவனை ஏற்றி மருத்துவமனைக்கு அழைத்துப் போனார். - ஆண்டவன் கருணையால் தோட்டா மண்டையோட்டினைத் துளைக்கவில்லை என்பது அங்கே புரிந்தது. அம்மனிதனுக்கு நஷ்ட ஈடு கொடுத்த சி.ஆர். சி. விஜயராகவாச் சாரியாரிடம் போய் நடந்ததைச் சொன்னார். வழக்கு தொடுக்கப்பட்ட போது, வயது முதிர்ந்த அந்தக் கனவான் சி.ஆர். சார்பில் ஆஜரானார். சி.ஆர். குற்றவாளி யல்ல என்று தீர்ப்பான போதிலும் அவரது துப்பாக்கி லைசென்ஸ் சிறிது காலத்துக்குப் பறிமுதல் செய்யப்பட்டது" (பக்கம் 43)

இதோ அடுத்த புத்தகம் திரு. கௌசிகன் எழுதியது. அந்த நூலில்;

"ராஜாஜி ஒரு சமயம், சேலத்தை அடுத்துள்ள ஓர் ஊருக்கு ஒரு கிரிமினல் வழக்கு விஷயமாகச் செல்லவேண்டி யிருந்தது. குதிரை வண்டியில் பிரயாணம் செய்வதென்று தீர்மானித்தார். அவர் செல்லும் வழியில் கொலை, களவுகள் அடிக்கடி அதிகமாக நிகழ்வது வழக்கம் என்றும் கேள்விப்பட்டார். ஆகவே மறக்காமல் தன்னுடன் கைத் துப்பாக்கியையும் எடுத்துக் கொண்டு கிளம்பினார் ராஜாஜி. அன்று கோர்ட்டில் ராஜாஜிக்கு சரியான வேலை, ஆகவே ரொம்பக் களைத்திருந்தார். வண்டி சேலத்திற்குத் திரும்பிக் கொண்டிருந்தது. இருட்டி நேரமாகி விட்டது. வண்டிக்குள் இருந்த ராஜாஜி அசதி யினால் தூங்கிக் கொண்டிருந்தார்.

அந்த வழியில் ஒரு சுங்கச் சாவடி (டோல் கேட்) உண்டு. வண்டி அங்கு நின்றது. சுங்கச் சாவடிக்காரன் சுங்கப் பணம் வசூலிப்பதற்காக வண்டியின் பின் பக்கத்திற்கு வந்தான். தூங்கிக் கொண்டிருந்த ராஜாஜி எழுப்பப்பட்டார். அந்த வழியில் கொலை, களவுகள் நடப்பதுண்டு என்று அவர் கேள்விப்பட்டிருந்ததாலும், நல்ல வெளிச்சம் இல்லாததாலும், அரைத் தூக்க நிலையில் இருந்த அவர் தன் வண்டியைத்தான் திருடர்கள் மறித்து நிறுத்தித்

தாக்குகிறார்கள் என்ற முடிவோடு தயாராக கெட்டித்து வைத்திருந்த கைத்துப்பாக்கியை உபயோகப்படுத்தி விட்டார். அந்த மங்கிய வெளிச்சத்திலும் நிதானம் இழக்காமல் காவல்காரனை குறி பார்த்துச் சுட்டு விட்டார். குண்டடிபட்ட சுங்கச்சாவடிக்காரனும் சுருண்டு கீழே விழுந்தான். ராஜாஜியின் தூக்கமும் நன்றாக கலைந்து விட்டது. துப்பாக்கி சத்தம் கேட்டு அக்கம்பக்கத்து ஜனங்களும் கூடிவிட்டார்கள். நல்ல வெளிச்சமும் கொண்டுவரப்பட்டது. நிலைமையை உணர்ந்த போது ராஜாஜி அடைந்த அதிர்ச்சி எத்தகையது என்பதை சொல்லவா வேண்டும்? வண்டியின் பின்னால் வந்து தன்னை எழுப்பியவன் திருடனல்ல, வண்டி தாக்கப்படவும் இல்லை, தன் கடமையைச் செய்ய வந்த சுங்கச் சாவடிக்காரனைச் சுட்டு விட்டோம் என்பதை அறிந்த பிறகு - அப்பப்பா, அவர் அடைந்த மன வேதனை! குண்டடி பட்டவனை தம் வண்டியிலேயே போட்டுக் கொண்டு ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வந்தார். அவனுக்கு தக்கபடி சிகிச்சை அளிக்கப்பட்டது. கொஞ்ச நாளில் அவன் உடல் நலமுற்று வீட்டிற்குத் திரும்பினான். ராஜாஜி மீது இதற்காக வழக்கு தொடரப்பட்டது. விசாரணையும் விரிவாக நடந்தது. நகரத்தில் பிரபலமான வக்கீல், கௌரவமான மனிதர் வேண்டுமென்று சுடவில்லை, தவறுதலாக தூக்கக் கலக்கத்தில் தற்காப்பை உத்தேசித்து சுட்டு விட்டார் என்று வழக்கு தள்ளுபடியானது. (பக்கம் 46)

உடன்பிறப்பே, சுட்டது உண்மை என்ற வழக்கே தள்ளுபடியாகிறபோது; சுடாத வழக்குகளுக்காக சூழ்ச்சி மூளைகள் எப்படியெல்லாம் சுற்றிச் சுற்றி அலைந்து சுறுசுறுப்பாக வேலை செய்கின்றன என்பதை எடுத்துக்காட்ட இதை நான் எழுதவில்லை.

என் எழுத்தில் யார் பிழை காணினும் அதைத் திருத்திக் கொள்ளும் இயல்பினன் நான் என்பதால் இந்த இரு புத்தகங்களையும் படித்தவுடன் இதில் “குதிரை வண்டி” என்பது சரியா? “மாட்டு வண்டி” என்பது சரியா என்ற குழப்பம் ஏற்பட்டு விட்டது. -

நல்லவேளை; எத்தனையோ ஆண்டுகளுக்குப் பிறகு மாட்டு வண்டியா? குதிரை வண்டியா? என்றா கேள்வி எழுகிறது.

அப்போதே இராஜாஜி அந்த ஏழை ஊழியனை கட்டுத் தள்ளிய வழக்கு நடந்த போது இந்த வண்டிக் குழப்பம் வந்திருந்தால் - வாதப் பிரதிவாதங்களில் எவ்வளவு சிக்கல் ஏற்பட்டிருக்கும்.

எனவே இந்த இரு நூல் ஆசிரியர்களும் கூடிப் பேசியாவது குதிரை வண்டியா? மாட்டு வண்டியா?

எது சரி என்பதை தமது நூலில் திருத்திக் கொள்ளட்டும் என்பதே ஓர் எழுத்தாளன் என்ற முறையில் என் அவா!

அன்புள்ள,

மு.க.

06-06-2003

2929. அண்ணா விரும்பிய உண்மையான அணி !

உடன்பிறப்பே,

கழகத்தின் 12வது பொதுத் தேர்தலின் நிறைவாக புதிய பொதுக் குழு கூடி தலைமை நிர்வாகிகளைத் தேர்ந்தெடுத்தும் - குழுவினரை நியமித்தும் - அதன் தொடர்ச்சியாகத் தலைமைக் கழக நிர்வாகிகளும் நியமிக்கப் பெற்று அமைப்புகளும் அறிவிக்கப்பட்டுள்ளன.

இன்னும் கலந்து பேசி முடிவெடுத்து அறிவிக்கப்பட வேண்டியது மகளிர் அணி நிர்வாகக் குழுக்கள் மாநில அளவிலும், மாவட்டங்களின் அளவிலும் என்பதும் தலைமைக் கழக அறிவிப்பில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. மற்ற அணிகளுக்கும் இது பொருந்தும்.

தேவைப்படும் நேரத்தில் பணியாற்றித் தலைமைக்குத் தக்க ஆலோசனைகளை வழங்கிட தேர்தல் பணிக்குழு அமைந்ததும் - கழகத்தின் கடந்த கால அணுகுமுறையாகும். வணிகர் நலக் குழு ஒன்றும் அமைத்திடல் நன்று என்ற கருத்தும் ஆராயப்படுகிறது. இவை பற்றியெல்லாம் முடிவெடுத்து உரிய நேரத்தில் அறிவிக்கப்பட இருக்கிறது.

அதற்கிடையே இப்போது தலைமைக் கழகக் குழுக்களில் இடம் பெற்றுள்ளவர்களையும், செயலாளர்களாகவும் அணிகளின் அமைப்பாளர்களாகவும் தலைவர்களாகவும் பணியாற்றும் பொறுப்பேற்பவர்களையும் பாராட்டி வாழ்த்துகிறேன்.

இந்தப் பொறுப்புகளைப் பெற்றுள்ள உடன்பிறப்பு களுக்கு உரிமையுடன் கூறிக் கொள்கிறேன். நமது பெயர்களை 'லெட்டர் பேடிலோ', 'விசிட்டிங் கார்டிலோ' அச்சியற்றி வைத்துக் கொள்வதற்காக மட்டும் இந்தப் பதவியோ பொறுப்போ நமக்களிக்கப்படவில்லை என்பதை உணர்ந்து; கழகத்தின்

ஒவ்வொரு அங்குல வளர்ச்சியிலும் நமக்கு அக்கறையுண்டு - நமது பங்கு உண்டு - நமது ஓய்வறியா உழைப்பு உண்டு - என்ற நினைவோடு பாடுபட வேண்டும்.

நான் இன்னும் கூட மனம் விட்டு உடன்பிறப்புகளுடன் உரிமையுடன் பேச விரும்புகிறேன்.

நவராத்திரி கொலுவில் பொம்மைகளை அடுக்கிப் பார்த்து அழகை ரசிக்கும் ஒரு சீமாட்டியைப் போல, உங்களை அழகு பார்ப்பதற்காக - இந்தப் பொறுப்புகளில் அமர்த்தவில்லை. தலைமை; அத்தகைய சிமாட்டியுமல்ல! உங்களிடமிருந்து இந்த இயக்கம் நிரம்ப எதிர்பார்க்கிறது. அந்த எதிர்பார்ப்பு கடந்த காலங்களில் (என்னையும் சேர்த்துச் சொல்கிறேன்) நேரடி உழைப்பு வாயிலாகக் கிடைக்கவில்லை என்பது; யாரும் வாதாடி மறுக்க முடியாத உண்மையாகும்.

ஜனநாயக நாட்டில் கட்சிகள்; வெற்றி தோல்விகளைச் சந்திப்பது தவிர்க்க முடியாதது - இயல்பானது!

வெற்றி கண்டு வெறி கொண்டு ஆடவும் கூடாது - தோல்வியினால் துவண்டு விடவும் கூடாது.

இந்த இரண்டு அறிவுரைகளில் முதல் அறிவுரையை ஏற்றுக் கொண்டு அப்படியே அதனைப் பின்பற்றி அடக்கமாக இருந்தவர்கள் நாம் - அதற்கு நாம் தந்த ஆட்சியே தக்க சான்று!

ஆனால்; "தோல்வியினால் துவண்டு விடக் கூடாது" என்ற அறிவுரையிலிருந்து சற்றுத் தொலைவில் போய்விட்டோம் என்பதை மறைத்துப் பேசிப் பயனில்லை.

இந்த நிலை, நமது கட்சிக்கு மட்டுமல்ல; ஆளுங் கட்சியாக ஒரு முறை இருந்து விட்ட எல்லாக் கட்சிகளுக்கும் ஏற்படக் கூடியதுதான்.

ஒன்றை நினைவூட்டுகிறேன்; 1967ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் வாக்குப் பதிவு முடிவுற்று வாக்குகள் எண்ணப்பெற்று முடிவுகள் வந்து கொண்டிருக்கின்றன. மாலை ஆறு அல்லது ஏழு மணிக்கெல்லாம் தி.மு.கழகம் வெற்றி பெற்ற இடங்கள் நூறு என்ற எண்ணிக்கையை நெருங்கிக் கொண்டிருக்கிறது. "ஆகா! நூறு வந்து விட்டது" என்று கழக முன்னணித் தலைவர்களில் ஒருவரான

என்.வி. நடராசன் எழுந்து குதிக்கவே ஆரம்பித்து விட்டார். ஆனால் அண்ணா , அவர் ஆட்டத்தை ரசிக்க வில்லை. சற்றுக் கோபமாக "சரிதான் உட்காரய்யா!" என்றார். பிறகு மளமளவென கழகம் வெற்றி பெற்ற இடங்கள் நூறையும் தாண்டி 120ஐ தொட்டவுடன்; அண்ணா என்ன சொன்னார் தெரியுமா? தனக்கு இதில் எள் முனையளவு மகிழ்ச்சியும் இல்லை என்றார்.

- "என்ன அண்ணா ஆட்சியையே பிடித்து விட்டோம்;

நீங்கள் இப்படி சோகமாப் பேசுறிங்களே?"

என்று செல்லக் கோபமாகக் கேட்டார் என்.வி. நடராசன். அதற்கு அண்ணா சொன்னார்;

"இனிமேல் தானய்யா கட்சியைக் காப்பாற்றுவது கஷ்டமான காரியம்! கையிலே ஆட்சி இருக்கும் வரை சந்தோஷமாக இருக்கும் - ஆட்சி கையை விட்டுப் போனால் எப்படியிருக்கும் தெரியுமா? இப்போது நாம் இல்லாததைப் பெற்றிருக்கிறோம்; அதனால் மகிழ்ச்சி அடைகிறாய் - நாளைக்கு இருந்ததை இழந்து விட்டால் மகிழ்ச்சி அடைவாயா? நல்லது நடக்கும்போது; கெட்டதைச் சந்திக்கவும் நமக்குத் துணிச்சல் வரவேண்டுமே!"

உடன்பிறப்பே; அண்ணா அன்று சொன்னது இன்று சொன்னதைப் போல் இன்னமும் என் காதுகளில் ஒலித்துக் கொண்டுதானிருக்கிறது.

1971ல் பெருந்தலைவர் காமராசரும், மூதறிஞர் ராஜாஜியும் ஒரு சேர அணி வகுத்து நம்மை எதிர்த்தபோது, அண்ணாவையும் இழந்து விட்ட நிலையில் இருந்த நாம்; எத்தனையோ இடையூறு களை வென்று இதுவரை தமிழகத்தில் யாரும் பெறாத வரலாற்றுப் புகழ் வெற்றியைப் பெற்றோம்; 185/ இடங்களில்!

1976ல் எமர்ஜென்சி கொடுமை - ஆட்சிக் கவிழ்ப்பு - எதையும் தாங்கும் இதயங்களையும் அப்போது கண்டோம்; - எதிரியிடம் காட்டிக் கொடுத்த துரோகிகளையும் காண நேரிட்டது.

1989ல் மீண்டும் வென்றோம் - 1991ல் ஜனநாயக விசுவாமித்திரர் ஆர். வெங்கட்ராமன் அருளால் (ஆளுநர் பர்னாலா

அவர்கள் அறிக்கை தர மறுத்துவிட்டும்கூட) 'அதர்வைஸ்' (Otherwise) என்ற அநியாயத்தைக் கடைப்பிடித்து நமது ஆட்சி கலைக்கப்பட்டது.

அப்போது பதவி சுகம் அனுபவித்தவர்கள் சிலர் பச்சோந்திகளாயினர். அதையும் பார்த்தோம்.

பின்னர் 1996ல் மீண்டும் ஆட்சிக்கு வந்தோம்.

ஐந்தாண்டுக் காலம் நாம் நடத்திய ஆட்சியைப் பொற்கால ஆட்சி எனப் போற்றினர் - ஆனால், தேர்தலில் வெற்றி வாய்ப்பை இழந்தோம்.

தோல்வி கண்டு நம்மவரே சிலர் துவண்டனர்!

பழி வாங்கும் படலம் -

அடக்குமுறை -

மிரட்டல் நடவடிக்கை -

பொய் வழக்கு -

கைது படலம் - சிறைச்சாலை -

இன்னோரன்ன கொடுமை விளையாட்டுக்கள் -

"தலைக்கு மேல் போய் விட்ட வெள்ளம் சாண் போனால் என்ன, முழம் போனால் என்ன?" என்ற தைரியத்தைத்தான் வழங்கியுள்ளது; - நம்மில் பலருக்கும்!

ஆனால் பதவி சுகம் கண்டிருந்த சிலருக்கு இந்த நிலை பழக்கமாவது சற்று சிரமந்தான்!

ஆனால் எல்லாவற்றுக்கும் தயாராக இருக்கக் கூடியவர்கள் - இருப்பவர்கள் - இடையில் நழுவி விடாதவர்கள் - தலைமைக் கழக நிர்வாகப் பொறுப்பிலிருந்து; 65,000 கிளைக் கழக நிர்வாகப் பொறுப்புகள் வரையில் இடம் பெற்றுள்ளார்கள்.

உடன்பிறப்புகள் தந்த ஆதரவைப் பெற்று உரிய பொறுப்புகளுக்கு தேர்வாகி வந்திருப்போர் -

இப்போது தலைமை நிர்வாகப் பொறுப்புகளை ஏற்றிருப்போர் - தேவைப்படும்போது ஏற்க இருப்போர் -

அனைவரின் உழைப்புத்தான் கழகம்!

உள்ளத்து உறுதிதான் கழகம்!

உடன்பிறப்பு உறவுதான் கழகம்!

இதனை ஒருக்கணமும் மறவாமல் ஆற்றுவோம் பணி -

அதுவே அண்ணா விரும்பிய உண்மையான அணி

அன்புள்ள,

மு.க.

07-06-2003

2930. யார் தயவுக்கும் தவம் கிடக்க மாட்டோம்!

உடன்பிறப்பே,

"பொடாவை எதிர்த்து தி.மு.க. ஒரு கூட்டத்துக்கு ஏற்பாடு செய்திருந்தது. தேசிய ஜனநாயகக் கூட்டணியில் உள்ள தி.மு.க., பா.ம.க., ம.தி.மு.க. கட்சிகள் இரட்டை நிலையைக் கடைப்பிடிப்பதால் அதில் கலந்து கொள்ள முடியாது என்று மார்க்சிஸ்ட் வரதராசன் ஓர் அறிக்கை விடுத்தார். தி.மு.க. நடத்தும் அந்தக் கூட்டத்தில் பங்கேற்கலாமா வேண்டாமா என்று நாங்கள் குழம்பிப் போயிருந்த போது வரதராசனின் அறிக்கை எனக்கு ஒளி வெள்ளம் பாய்ச்சுவது போல் இருந்தது. எனவே எங்கள் காங்கிரஸ் கட்சியும் அதே நிலை எடுத்து தி.மு.க. ஏற்பாடு செய்த அந்தக் கூட்டத்தைப் புறக்கணித்தோம்."

இவ்வாறு தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் திரு. சோ. பாலகிருஷ்ணன் அவர்கள், மார்க்சிஸ்ட் கட்சி நடத்திய பொடா சட்ட எதிர்ப்பு மாநாட்டில் பேசியுள்ளார். இந்தப் பேச்சு 'தீக்கதிர்' உள்ளிட்ட சில ஏடுகளில் வெளிவந்துள்ளது.

இருட்டில் இருந்தவருக்கு ஒளிவெள்ளம் பாய்ச்சியது போல் நண்பர் வரதராசனின் அறிக்கை அமைந்ததை; சந்திரனுக்கு சூரிய ஒளி கிடைத்தது போலவும், அந்த ஒளியைப் பெற்று சந்திரன் பிரகாசித்ததைப் போலவும்; இயற்கையாக சந்திரனுக்கு ஒளியில்லை என்ற விஞ்ஞான உண்மையை நிரூபிக்கின்ற அளவுக்கு எடுத்துக் காட்டியுள்ளார் திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் என்றே நாம் கருத வேண்டிய சூழலுக்கு நம்மை ஆளாக்கிவிட்டார் என்று கூறலாம்,

என்ன இருந்தாலும் - உண்மையை ஒளிவு மறைவின்றி உரைத்திட்ட அந்த உத்தம குணத்தைப் பாராட்டத்தான் வேண்டும்.

நண்பர் வரதராசன் அவர்கள் ஒளி வெள்ளம் பாய்ச்சியது போல் அண்மையில் மேற்கு வங்கத்தில் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி அவர்கள் ஓர் ஒளி வெள்ளத்தைப் பாய்ச்சினார். மேற்கு வங்கத்தில் நடைபெறும் மார்க்சிஸ்ட் தலைமையிலான கூட்டணி ஆட்சியை ஒரு பிடிபிடித்து; அந்த ஆட்சி "மக்கள் விரோத ஆட்சி" என்று மகுடம் சூட்டி - எதேச்சாதிகார ஆட்சி என்று இடித்துரைத்து - மிக மூர்க்கத்தனமான ஒரு தாக்குதலைப் பொது மேடையில் நடத்திவிட்டுத் திரும்பினார்.

அது சோ.பா. அவர்களின் கண்களுக்கோ , கருத்துக்கோ ஒளி வெள்ளமாகப் பாயவில்லை. அந்தக் காங்கிரசுடன் மேடையில் அமர்வது இரட்டை நிலையாகத் தெரியவில்லை.

அப்படித் தெரியலாகாது என்பதுதான் என்னுடைய கருத்துமாகும். கொல்கத்தாவில் திருமதி சோனியா மார்க்சிஸ்டுகளைத் தாக்கிப் பேசியது என்னவோ; தேர்தலுக்காக!

அதை அத்துடன் மறந்து விட்டு - பொதுப் பிரச்சினையான "பொடா" எதிர்ப்புக்கு ஒரே மேடையில் முழங்குவது தவறில்லைதான்!

காங்கிரஸ் ஆட்சியில் எமர்ஜன்சி கொண்டு வந்ததையும் - மிசா சட்டம் என்ற மிகக் கொடுமையான சட்டம் கொண்டு வந்ததையும் - அச் சட்டம் லட்சக்கணக்கானோரைத் தீண்டியதையும் - இப்போது நினைத்துக் கொண்டு; அந்தக் காங்கிரசுடன் ஒரே மேடையில் ஏறுவது "இரட்டை நிலை" என்று கூறித் தட்டிக் கழிக்க முடியுமா?

"இப்போதைய நிலை"யைக் கூறும்போதும் - இந்த நிலையை மாற்றப் போராடும் போதும் - இரட்டை நிலை என்றெல்லாம் ஒளிபாய்ச்சிக் கொண்டிருக்க முடியுமா; என்ன!

மிக மிக அராஜக முறையில், பத்திரிகை உரிமைகள் - பத்திரிகையாளர் உரிமைகள் - பொடாவினால் பறிக்கப்படுவதைக் கண்டிக்கும் போதும் அதைச் சுட்டிக்காட்டி பொடாவைத் திரும்பப் பெறுக என்று கூறும்போதும்;

காங்கிரஸ், கம்யூனிஸ்டு கட்சிகள் வீற்றிருந்த சென்னை காமராஜர் அரங்கத்தில் கழகத்தின் சார்பில் நானும்தான் வீற்றிருந்தேன்- அதுவும் இப்போது சமீப காலத்தில்

அன்றைக்கு "இரட்டை நிலை" சுட்டிக்காட்டப் படவுமில்லை - ஒளி பாய்ச்சப்படவுமில்லை - எல்லோரும் ஒரே குரலில் அன்றைய பொதுப் பிரச்சினையாக "பொடா"வைத் தமிழக அரசு தவறாகப் பயன்படுத்துவது பற்றியும் - எனவே அச்சட்டத்தைத் திரும்பப் பெற வேண்டுமென்பதை வலியுறுத்தியும்தான் பேசினோம்.

'மிசா' சட்டம் கொண்டு வந்தது ஒரு நிலை - இப்போது 'பொடா' சட்டத்தை எதிர்ப்பது ஒரு நிலை? என்று இரட்டை நிலையை எவரும் அந்தக் கூட்டத்திற்கு முன்பும் சரி; கூட்ட மேடையிலும் சரி; விமர்சிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்க விஷயமல்லவா?

இத்தனை இரட்டை நிலைகளையும் மீறி ஒரு குறிப்பிட்ட பிரச்சினைக்காக - மக்கள் விரோதமானதும் - உரிமை பறிக்கக் கூடியதுமான - ஜனநாயகத்தைக் குழி தோண்டிப் புதைப்பதுமான - பழி வாங்குவதற்குப் பயன்படுவதுமான - பயன்படுத்தப்படுவது மான ஒரு கொடிய நிலையை எதிர்த்துக் குரல் கொடுத்த கூட்டம்தான்; தி.மு.க. நடத்திய அனைத்துக் கட்சிக் கூட்டம் என்பதை அந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானமே தெளிவாக விளக்குகிறது.

அத்தீர்மானம் வருமாறு:

"கடந்த 22ந்தேதி டெல்லியில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னணி தலைவர் திரு. ரூப்சந்த் பால் அவர்கள் தலைமையில் காங்கிரஸ் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, சமாஜ்வாடி கட்சி, ஆர்.ஜெ.டி. கட்சி ஆகிய முக்கிய கட்சிகள் கலந்து கொண்ட எதிர்க்கட்சிகளின் கூட்டத்தில் தமிழகம் போன்ற சில மாநிலங்களில் பொடா சட்டம் தவறாகப் பயன்படுத்தப்படும்போது, அதில் தலையிட மத்திய அரசால் முடியாத காரணத்தால் அச்சட்டத்தையே ஒட்டுமொத்தமாக ரத்து செய்ய வேண்டு மென்றும், அல்லது; பொடா சட்டத்தில் திருத்தம் செய்ய வேண்டுமென்றும் இக்கருத்தை வலியுறுத்தி விரைவில் நாடு தழுவிய போராட்டம் நடத்துவதென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. நம்மைப் பொறுத்தவரையில் பொடா சட்டத்தில் திருத்தம் கொண்டு வருவதைவிட,

அந்தச் சட்டத்தையே திரும்பப் பெறுவது ஒன்றுதான் அ.தி.மு.க. போன்ற மாநில அரசுகளின் பழி வாங்கும் போக்கு தொடர் நிகழ்ச்சி ஆகாமல் முற்றுப்புள்ளி வைக்கக் கூடியதாக அமையும் என்பதால் - உடனடியாக மத்திய அரசு முறைப்படி பொடா சட்டத்தைத் திரும்பப் பெற வேண்டுமென்று இக்கூட்டம் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது"

இருந்தாலும் - நண்பர் வரதராசனின் ஒளி பாய்ச்சும் அறிக்கை கண்டு, தி.மு.க. கூட்டிய கூட்டத்துக்கு வராமல் ஒதுங்கிக் கொண்டோம் என்று திரு. சோ.பா. அவர்கள் சொல்வதுதான், புதிராக இருக்கிறது.

அது மட்டுமல்ல; உடன்பிறப்பே! "நாடாளுமன்றத் தேர்தலின் போது கருணாநிதி 'பொடா'வை எதிர்த்து நமது அணிக்கு வர முனைவார். அப்போது அவரை நாம் சேர்த்துக் கொள்ளக்கூடாது" என்றும் மார்க்சிஸ்டுகள் நடத்திய அந்த அனைத்துக் கட்சி மாநாட்டில் முடிவெடுத்து அறிவித்தார்களாம் - "தீக்கதிர்" ஏடு கூறுகிறது அப்படி!

நானும் பார்க்கிறேன், நீயும் படித்துக் கொண்டிருக்கிறாய் -

"தி.மு.க.வுடன் உறவு வைக்க மாட்டோம் -
அணி சேர மாட்டோம் -
தேர்தல் கூட்டு இல்லை"

இப்படிப் பல கட்சிகள் அவைகளாகவே அறிவித்துக் கொண்டிருக்கின்றன. கூட்டணி என்றால் அதற்கு நிபந்தனை வேறு விதிக்கின்றன.

நாம் போய்; இவர்களைக் கெஞ்சிக் கூத்தாடி கையைப் பிடித்து எங்களை உங்களோடு சேர்த்துக் கொள்ளுங்கள் என்று பல்லைக் காட்டியது போல கருதிக் கொண்டு கதைக்கிறார்கள்.

நமக்கென்று ஒரு வலிவு உண்டு -

நல்ல கட்சிகள் துணைக்கு வரும் என்ற தெளிவு உண்டு -

நாட்டின் கேடு போக்கும் துணிவு உண்டு -

எனவே யார் தயவுக்கும் நாம் தவம் கிடக்கவில்லை.

தன்மான இயக்கம்; நமது தாய் இயக்கம் என்றும் அந்த உணர்வு ஒரு போதும் அழியாது! அழிய விட மாட்டோம். மீண்டும் சொல்கிறேன்; என்னவோ கடைக்கண் காட்ட மாட்டார்களா என்று எந்தக் கட்சிக்காரர் பின்னாலோ நாம் போவது போல கற்பனை செய்து கொண்டு எங்களுக்குக் கொள்கை போதிக்க - நிபந்தனை விதிக்க - எவருக்கும் உரிமை இருப்பதாக ஏற்பதற்கில்லை!

எங்களுக்குத் தெரியும்
எது சேரத் தக்க அணி
எது என்றைக்குமே பிணி என்ற உண்மை!

அன்புள்ள,

மு.க.

09-06-2003

2931. திரும்பவும் ஒரு முறை திறனை அறியும் வாய்ப்பு!

உடன்பிறப்பே,

மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம் 18-6-2003 அன்று அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்று; அதில் சில முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

(1) மகளிர் அணி - மாநில, மாவட்ட, ஒன்றிய அமைப்புகள்

(2) மாவட்ட மாநாடுகள்

(3) தேர்தல் நிதி 25 கோடி ரூபாய் திரட்டுதல்

இவற்றைக் குறித்து மாவட்டக் கழகச் செயலாளர்கள் கருத்துகள் அறிவித்தனர். அவற்றின் அடிப்படையில் எடுக்கப்பட்டுள்ள முடிவுகள் வருமாறு :

மாவட்ட வாரியாக மாவட்டக் கழகச் செயலாளர்கள், மாநில மகளிர் அணியில் இடம் பெறக் கூடிய தகுதி வாய்ந்தவர்கள் என தேர்வுச் செய்யப்படும் பத்து மகளிர் பற்றிய விபரங்களையும், அந்த மகளிர்களையும் தலைமைக் கழகம் குறிப்பிடும் நாளில் அனுப்பி வைப்பார்கள். அப்படி அனுப்பி வைக்கப்படுவோரில் எந்த மகளிர் மாநில அணியிலும் - எந்த மகளிர் மாவட்ட அணியிலும் இடம் பெறலாம் என்பதை ஆய்ந்து தலைமைக் கழகம் துணைப் பொதுச்செயலாளர் திருமதி சற்குண பாண்டியன் மூலமாக அறிவிக்கும்.

இப்படி எல்லா மாவட்ட விபரங்களும் விரைவில் கிடைத்திட ஆவன செய்து; அமைப்புகள் உருவாக்கப்பட்டு விபரம் வெளியிடப்படும்.

அதுவரையில் மாவட்டக் கழகங்களுடன் நேரிடையாகவோ அல்லது கடித வாயிலாகவோ - மகளிர் அணி; மாநில, மாவட்ட அமைப்புகளுக்கான விளக்கங்களுக்கும் தகவல்களுக்கும் துணைப்

பொதுச்செயலாளர் சற்குணபாண்டியன், தலைமைக் கழகத்திற்காக தொடர்பு கொள்வார். அவருக்கு மகளிர் அணி சார்பில் ஒத்துழைப்பையும் உதவியையும் வண்ணை தேவகி, நூர்ஜகான் பேகம், காரல் மார்க்ஸ், காஞ்சனா கமலநாதன், சங்கரி நாராயணன், சுலக்ஷனா, ராஜம் ஜான் ஆகியோர் வழங்கிடுவர். இவர்களே மாநில மகளிர் அணியின் தற்காலிக தலைமை அமைப்பினர் ஆவார்கள். பின்னர் நிலையான மாநில மகளிர் அணி தலைமைக் கழகத்தினால் அமைத்து அறிவிக்கப்படும்.

மாவட்டந்தோறும் மாநாடுகள் நடத்திட மாவட்டக் கழகச் செயலாளர்கள் கருத்தறிவித்தனர். அதற்கும் தலைமைக் கழகம் ஒப்புதல் வழங்கியிருக்கிறது எனினும் அந்த மாவட்ட மாநாடுகளை எழுச்சியுடன் நடத்துவதற்கும் அதே சமயம் எளிமையுடன் நடத்து வதற்கும் தேவைப்படும் ஆலோசனைகளைப் பெற்றிட - மாவட்ட மாநாடு நடத்திட முனைவோர்; தலைவரையும், பொதுச் செயலாளரையும் கலந்து பேசி முடிவெடுப்பதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மாவட்டங்களில் முதல் மாநாடு நடத்துவதற்குள்ளாகவே நமது கழகத்தின் தொண்டரணி இன்னும் வலிவுடையதாகவும் பயிற்சி பெற்றதாகவும் கட்டுப்பாடு காத்திடும் திறனுடையதாகவும் அமைய வேண்டுமென தொண்டரணிச் செயலாளர் தம்பி மாசிலாமணியிடம் வலியுறுத்திக் கூறியிருக்கிறேன். அப்படி அமைந்திடும் தொண்டரணிதான் அடுத்தடுத்து எல்லா மாவட்டங்களிலும், ஒன்றிய, நகரங்களிலும் அமையக் கூடிய தொண்டரணிகளுக்கு வழிகாட்டியாக விளங்கக் கூடும்.

பெரும்பாலும் குறைவான இடைவெளியில் நாம் நாடாளுமன்றத் தேர்தலையும் - சட்டமன்றப் பொதுத் தேர்தலையும் சந்திப்பதற்கும் வெற்றி பெற்றிடுவதற்கும் - முக்கிய முதலீடாக பெரும்பான்மையான வாக்காளப் பெருமக்கள் நமது அணியில் நாளும் பெருகி வருகிறார்கள் எனினும்; இரண்டு பெரிய தேர்தல் களங்களில் ஏற்படும் நியாயமான செலவினங்களுக்குத் தேவையான பணத்தைத் திரட்டுவது என்பது வருமுன் காத்திடும் வகையான செயலன்றோ!

அதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள நிதி திரட்டும் நன்கொடைச் சீட்டுகள் மாவட்டக் கழகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இந்தக்

கடிதம் கிடைக்கும் நேரம்; அந்த எழில்மிகு சீட்டுகள் மாவட்டக் கழகங்களுக்குப் போய்ச் சேர்ந்திருக்கும்.

மாவட்டக் கழகக் கூட்டங்களும் - மாவட்டச் செயல்வீரர் கூட்டங்களும் நடைபெறுகிற நாட்களும் - கலந்து கொள்வோர் விவரங்களும், ஏடுகளில் வெளி வந்து கொண்டிருக்கின்றன.

துள்ளியெழுந்து துடிப்புடன் மாவட்டச் செயல் வீரர்கள் பணியாற்றக் கிளம்பியுள்ளதைக் காணும் பொழுது; அள்ளிப் பொழிவர் தேர்தல் நிதியை என்றே நம்புகிறேன்.

போட்டி போட்டுக் கொண்டு நிதி வழங்குவதிலும் - மாவட்ட மாநாடுகளை ஒன்றையொன்று மிஞ்சக் கூடிய வகையில் நடத்துவதிலும் - வசூலையும் அவ்வண்ணமே காட்டுவதிலும் - நமது செயல் மறவர்களாம் உடன்பிறப்புகள் ஒருவருக்கொருவர் சளைத்தவர்களல்லர் என்பது எனக்குத் தெரியாதா என்ன ?

தெரிந்திருப்பினும் திரும்பவும் ஒருமுறை அவர்களின் திறனை அறிவதில் எனக்கு அவா இருப்பதில் தவறு இருக்க முடியாதே!

அன்புள்ள,

மு.க.

11-06-2003

2932. இதோ அந்தச் சர்க்கரைத் துகள்கள்!

உடன்பிறப்பே,

‘புத்தரின் வழி” எனக் குறிப்பிட்டு “தம்ம பதம்” என்ற தலைப்பில் ஓஷோ எழுதியுள்ளதை பேராசிரியர் டாக்டர் என். ரமணி அவர்கள் தமிழாக்கம் செய்யப்பட்ட நூலாகத் தந்துள்ளார், அதுபற்றிப் பின்னர் எழுதுகிறேன் எனக் குறிப்பிட்டிருந்தேன். எழுதாமலிருந்து உனக்கு ஏமாற்றம் தரக் கூடாதேயென்று; ஓஷோ அவர்கள் தனது கருத்தை வலியுறுத்துவதற்குப் பெரும்பாலும் புத்தரின் மொழிகளைத் துணைக் கொண்டுள்ளார் எனினும் - அந்த நூலின் மூலம் முடிந்த முடிவாக நான் எதையும் அறுதியிட்டுச் சொல்லாமல்; தனது கருத்தை வெளிப்படுத்த ஓஷோ கையாண்டுள்ள முறையையும், குட்டிக் கதைகளையும், புத்தரின் பொன்மொழி களையும் நான் சுவைத்தது போன்று நீயும் சுவைப்பதற்காக மட்டுமே தருகிறேன்.

சர்க்கரையும் மணலும் கலந்த ஒரு கையளவுக் குவியலில் எறும்பு; மணலையா எடுத்துக் கொள்ளும்? சர்க்கரையைத்தானே! இதோ நீயும் எறும்பு போல மாறி எடுத்துக் கொள்க; சர்க்கரைத் துகள்களை:

> “இயற்கைக்கு இறந்த காலமும் தெரியாது. எதிர் காலமும் தெரியாது. இயற்கை அறிந்ததெல்லாம் நிகழ் காலம் மட்டுமே. ஆனால் நாமோ உள்ளே அமர்ந்து சாவித் துவாரத்தின் வழியாகப் பார்த்துக் கொண் டிருக்கிறோம். முதலில் யாரும் தெரிவதில்லை. பிறகு சட்டென ஓர் ஆள் தோன்றுகிறான். உடனே மறைந்து விடுகிறான். இப்போது நீங்கள் காலத்தை உருவாக்க வேண்டி வருகிறது. அந்த ஆள் தோன்று முன் அவன் எதிர்காலத்தில் இருக்கிறான். அவன் அப்பொழுதே இருக்கத்தான் செய்தான். ஆனால் உங்களைப் பொறுத்த அளவில் அவன் எதிர்காலத்தில் இருந்தவன் தான்.

அப்புறம் அவன் தோன்றுகிறான். தோன்றியவுடனே நிகழ்காலத்துக்கு வந்து விடுகிறான். அதே ஆள்தான். அதற்குப் பிறகு சின்னத் துளை வழியாக அவனைப் பார்க்க முடிவதில்லை. அவன் இறந்த காலத்துக்குள் போய் விடுகிறான். இறந்த காலம் என்று எதுவும் இல்லை. எதிர் காலமும் இல்லை. இருப்பதெல்லாம் எப்பொழுதும் நிகழ்காலமே. நாம் பார்க்கும் விதம் வேறு பட்டிருப்பதால் வரையறைக்கு உட்பட்டிருப்பதால் அப்படியெல்லாம் தோன்றுகிறது”

★★★

“மனிதன் ஒரு சோம்பேறி. தூங்கிக் கிடப்பதாலேயே சோம்பிக் கிடக்கிறான். ஒரு கணவன் மனைவி கதை, யார் முதலில் பேசுகிறாரோ அவர் காற்றின் போக்கில் திறந்து கொண்ட கதவை மூடி வைக்க வேண்டுமென்று ஒரு பந்தயம். திறந்து கிடந்த கதவு திருடர்களைக் கைகாட்டி அழைத்தது. பந்தயம் கட்டியபடி கணவனும் மனைவியும் ஒன்றும் பேசாமல் இருக்கவும், வந்த திருடர்கள் வயிறு புடைக்கச் சாப்பிட்டு விட்டு இருந்ததை எல்லாம் சுருட்டிக் கொண்டு, அவளைக் கற்பழித்து அவன் தாடியை மழிக்க வந்தார்கள். அதுவரை சும்மாயிருந்த கணவன், “சரி, சரி, பாழாய் போன கதவை நானே மூடி விடுகிறேன்” என்றானாம். மக்கள் சோம்பேறிகள், சோம்பேறித்தனம் தூக்கத்தின் ஒரு பகுதி. எனவே விடா முயற்சியும் முனைப்பும் இடைவிடாச் செயலும் தேவையாகின்றன”

என்று சுட்டிக் காட்டி விட்டு தூங்கிக் கொண்டே இருந்து விடாதே, மூடனாக இருந்து விடாதே, குடிகாரனாக இருந்து விடாதே என எச்சரிப்பவர் அதை விளக்கிட வேடிக்கைத் துணுக்கு ஒன்றையும் சொல்லுகிறார்.

“மூன்று குடிகார்கள் ஒரு தெரு வழியே போய்க் கொண்டிருந்தார்கள். ஒருவன் கையில் ஒரு ரொட்டித் துண்டு. மற்றவன் கையில் ஒரு மதுப்புட்டி. இன்னொருவன் கையில் ஒரு காரின் கதவு. போலீஸ்காரர் ஒருவர் அவர்களை நிறுத்தி, “எங்கே போய்க்

கொண்டிருக்கிறீர்கள்?” என்று கேட்டார்.

ரொட்டித் துண்டுக்காரன், “பிக்னிக்” என்றான்.

போலீஸ்காரர், “பிக்னிக்கா? சரிதான். பசிக்கு ரொட்டி, தாகத்துக்கு மது. கார்க் கதவு எதற்கு? புரியவில்லையே!” என்றார்.

மூன்றாமவன், “அதுவா? குளிரடித்தால் கண்ணாடியை ஏற்றிக் கொள்வதற்கு” என்றான்.

குடிபோதையின் பல நிலைகளிலிருந்து நீங்கள் விடுபட வேண்டும்.

★★★

புத்தர் பொன்மொழியை ஓஷோ நினைவூட்டுகிறார்;

“பிரதிபலிக்காத மனம்
ஓட்டைக் கூரை வீடு.
உணர்வெனும் மழை வெள்ளம்
நிரப்பி விடும் வீடு.
ஓட்டையில்லாக் கூரையே
வீட்டைப் புகலிட மாக்கும்”

“பிரதிபலிக்கும் மனம் எனும்போது சிந்திக்கும் மனம் என்று கொள்ளவில்லை. பிரதிபலிப்பது என்றால் பிரதிபலிப்பதுதான். ஒரு கண்ணாடி பிரதிபலிக்கிறதே அப்படி. ஒரு கண்ணாடிக்கு முன் நிற்கும்போது கண்ணாடி உன்னைச் சிந்தித்தா பார்க்கிறது? கண்ணாடி வெறுமனே திருப்பிக் காட்டுகிறது. அப்படித் திருப்பிக் காட்டுவதைத்தான் புத்தர் இங்கே குறிப்பிடுகிறார்.

பிறந்த குழந்தை பற்றி ஒரு கணம் எண்ணிப் பாருங்கள், முதன் முதலாகக் கண்ணைத் திறந்து மரங்களைப் பார்க்கும் குழந்தைக்கு, அவை மரங்கள் என்று தெரியுமா? மரங்களைப் பார்க்கும்தான் என்றாலும் இவை மரங்கள் என்று தனக்குத் தானே சொல்லிக் கொள்ளுமா?

எல்லாவற்றையும் பார்த்தாலும் எதைப் பற்றியும் ஒன்றும் சொல்லிக் கொள்ளாது. இதுதான் பிரதிபலிப்பது என்பது. அப்பழுக்கின்றி இருந்தால் பிரதிபலிக்கப்பட்ட

மரங்கள் இயற்கையாக இருப்பதையும்விடப் பசுமையாக இருக்கும். ஆமாம், தூசு படியாத கண்ணாடி, எண்ணங்களே தூசுத் துகள்கள்.

ஜாக்கிரதை. பிரதிபலிக்க வேண்டுமானால் உன் கண்ணாடியில் தூசு படியாது வைத்திரு.

★★★

'புத்தர் கடவுளைப் பற்றியே பேசவில்லை. தூக்கத்திலிருப்பவனிடம் கடவுளைப் பற்றிப் பேசிப் பயனென்ன? தூங்கிக் கொண்டே கேட்டுக் கொண்டிருப்பார்கள். கேட்டதை வைத்துக் கொண்டு கனவு காண்பார்கள். கடவுளரைப் படைத்துக் கொள்வார்கள்.

அதனால்தான் புத்தர் கடவுளைப் பற்றிய கவலை ஏதுமில்லாமல் இருந்திருக்கிறார். அவருடைய முழுக் கவனமும் பிறரை விழிப்படைய வைப்பதிலேயே இருந்திருக்கிறது.

ஒரு பௌத்தத் துறவி, ஞானம் கைவரப் பெற்றவர்.

ஒருவர் அவரிடம் வந்து, "ஒரே வார்த்தையில் உங்களுடைய மதத்தின் சாராம்சத்தைச் சொல்ல முடியுமா?" என்று கேட்டார்.

ஞானி மௌனமாக இருந்தார். அந்தக் கேள்வியே அவர் காதில் விழவில்லையோ என்று நினைக்க வைக்கும் ஆழ்ந்த மௌனம். வந்தவர், "நீங்களென்ன செவிடரா?" என்று இரைந்தார்.

ஞானி, "உன் கேள்வியைக் கேட்டுக் கொண்டுதான் இருக்கிறேன். பதிலைத்தான் சொல்லி விட்டேனே. மௌனமே எனது பதில். மௌனமாகக் கழிந்த அந்தக் கணங் களே உன் கேள்விக்கான பதில்" என்றார்.

வந்தவரோ, "புதிரான பதில்களையெல் லாம் என்னால் புரிந்து கொள்ள முடியாது. இன்னும் கொஞ்சம் தெளிவாகச் சொல்லலாமே" என்றார்.

ஞானி மணலில், "தியானம்" என்று எழுதிக் காண்பித்தார்.

“ஓ..... படிக்க முடிகிறது. முன்னதை விடப் பரவாயில்லை. ஒன்றுமில்லாததற்கு ஒரு வார்த்தையாவது இருக்கிறதே. இன்னமும் கொஞ்சம் வெளிப்படையாகச் சொல்லுங்களேன்” என்றார் வந்தவர்.

மீண்டும் ‘தியானம்’ என்ற வார்த்தையையே பெரிய எழுத்துக்களில் எழுதிக் காண்பித்தார். கேட்டவருக்குக் கோபம் கூட வந்தது.

“மறுபடியும் ‘தியானம்’ என்றுதானே எழுதியிருக்கிறீர்கள்? இன்னும் கொஞ்சம் விளக்கமாகச் சொல்லக் கூடாதா?” என்றார்.

அவரோ மறுபடியும் இன்னும் பெரிய எழுத்துகளில் நன்றாக இடம் விட்டு ‘தியானம்’ என்று எழுதிக் காண்பித்தார்.

வந்தவர், “உங்களுக்குப் பைத்தியம்தான் பிடித்திருக்க வேண்டும்” என்றார்.

ஞானியோ, “ஏற்கெனவே வெகு தூரம் இறங்கி வந்துவிட்டேன். முதல் பதில் சரியான பதில். இரண்டாவது பதில் அவ்வளவாகச் சரியான பதிலல்ல. மூன்றாவது பதில் தவறான பதில். நான்காவது பதில் மிகவும் தவறாகிப் போன பதில். ஏனென்கிறாயா? தியானம் என்று பெரிய எழுத்துகளில் எழுதும் போது அதையே கடவுளாக்கி விடுகிறாய்” என்றார்.

மௌனம் என்பது மனிதனின் விழிப்புக்கான களம். சலசலக்கும் மனம் மனிதன் தூங்கும் படுக்கை. மனம் சலசலத்துக் கொண்டிருந்தால் நீ தூங்கிக் கொண்டிருக்கிறாய் என்று பொருள். மௌனத்தில் ஆழ்ந்திருக்க, மனம் இல்லாது போயிருக்க, பறவைகளின் பாடலையும் நதியின் நாதத்தையும் கேட்டுக் கொண்டிருக்கும்போது விழிப்புணர்வு உனக்குள் மெல்ல மெல்ல மலர்கிறது. வெளியேயிருந்து வருவதல்ல. உனக்குள்ளேயிருந்து எழுவது, உனக்குள்ளேயே வளர்வது. அப்படி எதுவும் நடக்க வில்லையென்றால் நீ தூக்கத்திலிருக்கிறாய் என்பதை நினைவில் கொள்.

ஒரு கணவனும் மனைவியும் தூங்கிக் கொண்டிருக்கிறார்கள். விடியற்காலை மூன்று மணியிருக்கும். இன்னொருவனை ரகசியமாகச் சந்திப்பதாக மனைவி கனவு காண்கிறாள். அப்போது தன் கணவன் அங்கே வருவதாகத் தெரிகிறது.

தூக்கத்தில், "அய்யோ, என் புருஷன்" என்று கத்துகிறாள். அவள் கணவன் திடீரெனத் தூக்கம் கலைந்து எழுந்து ஜன்னல் வழியாக எட்டிக் குதித்து ஓடினான்.

இது ஒன்றும் சிரிப்பதற்காகச் சொன்னதல்ல. அதுதான் நிஜம். அப்படித்தான் மனிதன் சாதாரண நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறான்.

ஒருத்தி தன் கணவனின் பிரியத்தைச் சம்பாதிக்க வேண்டும் என்று விரும்புகிறாள். இன்னொருத்தியின் ஆலோசனையின் பேரில் ஒரு நாள் இரவு அவனுக்குச் செருப்பெடுத்துப் போட்டு விட்டுப் புகை பிடிப்பதற்குப் பைப் எடுத்துக் கொடுத்து, குடிப்பதற்கு நல்ல மது ஊற்றிக் கொடுத்து, மெல்லிய சில்க்கில் நைட் கவுன் மட்டும் போட்டுக் கொண்டு பூனைக் குட்டி போல அவன் மடியில் சுருண்டு படுத்துக் கடைசியாக, "மாடிக்குப் போகலாமா? கண்ணாளா?" என்கிறாள்.

அவனோ, "போய்த்தான் ஆக வேண்டும். எப்படியானாலும் வீட்டில் உதைதானே விழப் போகிறது" என்றான். (எங்கிருக்கிறோம் என்ற நினைவில்லை அவனுக்கு)

நம்மைச் சுற்றி என்ன நடக்கிறது என்ற உணர்வில்லாமலேயே வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இயந்திரத்தனமாகி விட்டது, அனிச்சையாகச் செய்வதாகி விட்டது. இயந்திர மனிதர்களாகி விட்டோம். இன்னமும் மனிதர்களாகவில்லை. மனித இயந்திரங்களாகத்தான் இருக்கிறோம்.

★★★

மௌனம் – தியானம் இவற்றின்

முக்கியத்துவத்தை விளக்கும் பகுதி இது!

மஞ்சளாடை பற்றி புத்தர் என்ன சொல்லியிருக்கிறார் என்பதையும் இந்த நூலில் 'ஓஷோ' குறிப்பிட்டிருக்கிறார்.

"தன்னியல்பை ஆள்பவன் எவனோ,
ஒளியும் தெளிவும் உண்மையுமானவன்
எவனோ, அவனே மஞ்சளாடை
அணியலாம்"

அன்புள்ள,

மு.க.

13-06-2003

2933. இன்று போல் என்றும் பாதுகாப்பு அரணாக இருப்போம்!

உடன்பிறப்பே,

மத மாற்றத் தடைச் சட்டம் குறித்து மத்திய அரசின் வழக்கறிஞர் அட்டார்னி ஜெனரல் திரு. சோலி சொராப்ஜி தெரிவித்துள்ள கருத்து பற்றி தமிழ்நாட்டுப்பத்திரிகைகள் வெவ்வேறு விதமான தலைப்புகளில் செய்தி வெளியிட்டுள்ளனவே என்று உன் போன்ற உடன்பிறப்புகள் சிலர் கேட்டுள்ளனர். அவர்களுக்கு இந்த விளக் கத்தை விடையாக அளிக்கிறேன்.

மத்திய அரசின் வழக்கறிஞர், அட்டார்னி ஜெனரல், திரு. சோலி சொராப்ஜி நேற்று பி.டி.ஐ. செய்தி நிறுவனத்திற்கு பேட்டியளித்து அது அனைத்து ஏடுகளிலும் வெளிவந்துள்ளது. ஆனால் அந்தக் கருத்துக்கு ஏடுகள் வெவ்வேறு விதமான தலைப்புகளைத் தந்துள்ளன.

கட்டாய மத மாற்றத்தை அனுமதிக்கக் கூடாது என்று சில ஏடுகளும், தமிழக மத மாற்றத் தடைச் சட்டம் தனி மனித உரிமையைப் பாதிக்கலாம் என்று சில ஏடுகளும் அவருடைய கருத்துக்கு தலைப்பு தந்துள்ளன.

தினமணி ஏடு வெளியிட்டுள்ள செய்தியில் சோலி சொராப்ஜி கூறியதாக வந்துள்ள கருத்து வருமாறு:

“தமிழக அரசும், குஜராத் அரசும் இயற்றியுள்ள கட்டாய மத மாற்றத் தடைச் சட்டத்தின் சில பிரிவுகள் சரி யானவை அல்ல. மத நம்பிக்கை என்பது ஒருவருடைய தனிப்பட்ட விஷயமாகும். ஒரு மதத்திலிருந்து மற்றொரு மதத்திற்கு மாறுவதும் அவரது தனிப்பட்ட விஷயமாகும். ஒருவருக்கு ஏற்படும் உள்ளுணர்வின் அடிப்படையில் ஒருவர் ஒரு மதத்தைப் பின்பற்றுகிறார்.

கட்டாயப்படுத்தியோ, ஏமாற்றியோ ஒருவரை மதம்

மாற்றினால் அதை உண்மையானதாகக் கருத முடியாது. அத்தகைய மதமாற்றத்தை அனுமதிக்கக்கூடாது.

மத மாற்றத் தடைச் சட்டமானது, சிறுபான்மையினரின் நம்பிக்கையைத் தகர்ப்பதாக உள்ளது. அவர்களுக்கு பாதுகாப்பற்ற உணர்வை அதிகரிப்பதாகவும் உள்ளது. தற்போதுள்ள நிலையில் இத்தகைய நடவடிக்கை சரியானதல்ல.

ஒரு மதத்திலிருந்து வேறு மதத்துக்கு ஒருவரை மாற்ற நினைக்கும் நபர், அதுபற்றி குறிப்பிட்ட படிவத்தில் மாவட்ட மாஜிஸ்திரேட்டிடம் தெரிவிக்க வேண்டும் என்று மத மாற்ற தடைச் சட்டத்தில் கூறப்பட்டிருப்பது சரியல்ல."

இந்தக் கருத்துக்கு தினமணி வழங்கியுள்ள தலைப்பு: "கட்டாய மத மாற்றத்தை அனுமதிக்கக் கூடாது" என்று மத்திய அரசு வழக்கறிஞர் கூறினார் என்பதாகும். -

அதே நேரத்தில் தினகரன் இதழ் "தமிழக மத மாற்றத் தடைச் சட்டம் தனி மனித உரிமையைப் பாதிக்கலாம்" என்ற தலைப்பில் வெளியிட்டுள்ள செய்தி வருமாறு:

"மத மாற்றத் தடை சட்டத்தை குஜராத், தமிழகம் ஆகிய மாநிலங்கள் அமலுக்குக் கொண்டுவந்துள்ளன. ஆனால் அந்த மாநிலங்களின் சட்ட விதிகள் விமர்சனத்துக்கு உரியவை யாக இருக்கின்றன.

தனி மனித உரிமை அதனால் பாதிக்கப்படலாம் என்கிற அளவுக்கு அந்த இரு மாநிலங்களின் மத மாற்றத் தடை சட்ட விதிகள் உள்ளன. இந்திய அரசியல் சட்டத்தில் மதச் சுதந்திரம் அளிக்கப்பட்டு உள்ளது. மனப்பூர்வ மாக நடைபெறும் மாற்றங்கள் ஏற்கப்படலாம். ஆனாலும் குஜராத், தமிழ் நாடு மாநிலங்களில் அதற்கும்கூட பாதிப்பு வருமோ என்கிற அளவுக்கு நிலைமை உள்ளது. மற்றபடி கட்டாயப்படுத்தி மத மாற்றம் செய்வதை தடுத்தே ஆக வேண்டும். அதை நானும் ஒப்புக் கொள்கிறேன். ஒரு மதத்திலிருந்து இன்னொரு மதத்துக்கு மாறுவது ஒருவருடைய தனிப்பட்ட விஷயம். அதில் யாரும் தலையிட உரிமை இல்லை."

மத்திய அரசின் வழக்கறிஞர் மத மாற்றத் தடைச் சட்டம் குறித்து இவ்வாறு கருத்து அறிவித்திருக்கும் நிலையில், இதே பிரச்சினை பற்றி இத்திங்கள் முதல் வாரத்தில் போப்பாண்டவர் தனது கருத்தைத் தெரிவித்திருந்தார். அப்போது அவர், "இந்து மத வெறியர்களின் வற்புறுத்தலுக்கு அடிபணிந்து இந்தியாவில் ஒருசில மாநிலங்களில் கட்டாய மத மாற்றத் தடைச் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இது மக்களின் மதச் சுதந்திரத்தை பறிக்கும் செயலாகும். மேலும் கிறிஸ்தவர்களாக மதம் மாறிய, தாழ்த்தப்பட்டவர்களுக்கு சலுகைகள் வாபஸ் பெறப்பட்டுள்ளன. இந்திய மக்களின் மதச் சுதந்திரத்தைக் காக்க முயற்சிக்க வேண்டும். இதற்காக மற்ற மதத் தலைவர்கள், அரசு நிர்வாகிகளோடு கலந்து பேச வேண்டும்" என்று கூறியிருந்தார்.

போப் அவர்களின் இந்தக் கருத்து பற்றி தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா அளித்த பேட்டியில், "இந்தியாவில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுகள் நிறைவேற்றும் சட்டங்கள் குறித்து கருத்து தெரிவிக்கவோ, எதிர்ப்புத் தெரிவிக்கவோ போப்புக்கு எந்தவிதமான அதிகாரமும் கிடையாது, உரிமையும் கிடையாது. இந்தியாவில் மதச் சுதந்திரம் இல்லை என்று போப் கூறுவது தவறான கருத்து. மக்களுக்கு இப்போதும் மதச் சுதந்திரம் முழுமையாக இருக்கிறது, தமிழ்நாட்டிலும் இருக்கிறது" என்றார். ஜெயலலிதாவின் இதே கருத்தை பா.ஜ.க.வின் சார்பில் இல. கணேசன் அவர்களும் தெரிவித்திருந்தார்.

கத்தோலிக்க கிறித்தவர்களின் மாபெரும் தலைவர் போப் அவர்களுக்கு ஜெயலலிதா பதில் கூறி, அந்தப் பதிலுக்கு பா.ஜ.க.வின் அகில இந்திய செயலாளரும் ஆதரவு தெரிவித்துள்ள இதே நேரத்தில் ஜெயலலிதா அ.தி.மு.க.வின் பொதுச் செயலாளர் என்ற முறையில் 26-3-2001 அன்று தமிழ்நாட்டிலே உள்ள திருச்சபைகளின் தலைவர்களுக்கெல்லாம் எழுதிய ஒரு கடிதத்தை நினைவு கூர்வது சரியாக இருக்கும். அக்கடிதத்திலே இருந்த வாசகங்கள் வருமாறு:

> "கர்த்தர் திருக்கருணையை மக்களுக்கு வழங்கி உலகம் உய்யச் செய்யும் புனிதப் பணிக்கு ஒப்படைத்துக் கொண்டிருக்கும் தங்களின் மேலான கவனத்தை அன்போடு ஈர்க்கிறேன்.

நாட்டின் மதச்சார்பின்மைக்கும், அனைத்து மத நல்லிணக்கத்திற்கும் தி.மு.க. அங்கம் வகிக்கும் பி.ஜெ.பி. அரசில் பெரும் பாதகம் ஏற்பட்டுள்ளதைத் தாங்கள் அறிவீர்கள்.

ஓட்டுக்காகச் சிறுபான்மை மக்களை மகிழ்ச்சிப்படுத்த சில தலைவர்கள் தற்காலிகமாக முயல்வதும் தாங்கள் அறியாதது அல்ல. பி.ஜெ.பி., தி.மு.க. கூட்டணி ஆட்சியில் நாட்டில் சிறுபான்மை மக்களுக்குப் பாதுகாப்பு இல்லாத நிலையும், மக்களைப் பீதியிலும் பதற்றத்திலும் துடிக்க வைக்கும் கொடுமையும் தொடர்ந்து நிகழ்ந்து வருகிறது. சிறுபான்மை மக்களின் நலன் காக்கவும், அனைத்து மத மக்களிடையே சகோதரத்துவத்தை வளர்க்கவும், அ.தி.மு.க. தலைமையிலான மதச் சார்பற்ற ஜனநாயக முற்போக்குக் கூட்டணி உறுதி எடுத்துக் கொண்டு தேர்தல் களத்தில் மக்களைச் சந்திக்கிறது. எனவே நடைபெறவுள்ள தமிழகச் சட்டமன்றப் பொதுத் தேர்தலில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தலைமையிலான மதச்சார்பற்ற ஜனநாயக முற்போக்குக் கூட்டணிக்கு தங்கள் ஆதரவும், தாங்கள் பங்கேற்றுள்ள திருச்சபை உறுப்பினர்களின் நல்லாதரவையும் பெற்றுத் தருமாறு அன்போடு கேட்டுக் கொள்கிறேன்"

தேர்தல் நேரத்தில் ஜெயலலிதா திருச்சபைகளின் தலைவர்களுக்கு எழுதிய இந்தக் கடிதத்திற்கும், தற்போது அந்தத் தலைவர்களுக்கெல்லாம் தலைவராகிய போப் பற்றி விமர்சனம் செய்துள்ள கருத்துக்கும் எவ்வளவு வேறுபாடு என்பதை சிறுபான்மை மக்கள்தான் எண்ணிப் பார்க்க வேண்டும்.

எனவே, ஜெயலலிதா அரசின் மத மாற்றத் தடைச் சட்டத்தை, அதன் அறிமுக நிலையிலிருந்து இன்று வரையில் எதிர்த்து வருகின்ற, எப்போதும் எதிர்க்கின்ற திராவிட முன்னேற்றக் கழகம் சிறுபான்மை சமுதாய மக்களுக்கு இன்று போல் என்றும் பாதுகாப்பு அரணாக இருக்கும் முற்போக்கு சக்திகளில் ஒன்று என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

தேர்தல் நேரத்தில் ஒன்று; பதவியில் அமர்ந்த பிறகு ஒன்று என நாடகம் நடத்தும் இரட்டை வேடம் அரசியல்வாதிகளை சிறுபான்மை மக்கள் இனிமேலாவது புரிந்து கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

அன்புள்ள,

மு.க.

25-06-2003

2934. நீதி நிமிர்ந்து கொள்ளும் - இறுதியில் நேர்மையே வெல்லும்!

உடன்பிறப்பே,

ஆளுங்கட்சி எதிர்க்கட்சி என்று பாராமல் சட்டத்தை மீறுகிற காரியங்கள் எந்த முகாமில் நடைபெற்றாலும் சரிசமமாக நீதி வழங்கிடும் அரசியல் அறத்தைப் பின்பற்றியது தி.மு.க. ஆட்சி என்பதற்கு எத்தனையோ எடுத்துக்காட்டுகளைச் சொல்ல முடியும்.

மதுரையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநகர் மன்ற உறுப்பினர் லீலாவதி என்ற பெண்மணி கொலை செய்யப்பட்ட செய்தி கிடைத்த அடுத்த சில மணி நேரத்திலேயே கொலையில் சம்பந்தப்பட்டவர்கள் தி.மு.க. வினர் என்று கூறப்படுகிறது; அவர்கள் யாராயிருப்பினும் சட்டப்படி உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று சட்டப்பேரவையிலேயே அறிவித்தேன். அவ்வாறே அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு தண்டிக்கப்பட்டுமிருக்கிறார்கள். மார்க்சிஸ்ட் கட்சி நிர்வாகிகள் கோரியதற்கிணங்க அவர்கள் குறிப்பிட்ட வழக்கறிஞர்களையே பிராசிகியூஷன் தரப்பில் ஆஜர் ஆவதற்கும் வகை செய்யப்பட்டது.

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகச் செயல்வீரர் பழனிவேல் சிதம்பரத்தில் கொலையுண்ட போது; அனைத்துக் கட்சிப் பொதுக்கூட்டங்கள் நடைபெற்று அக்கூட்டங்களில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களுக்கு இணங்க வாண்டையார் சகோதரர்கள் கைது செய்யப்பட்டதும், பின்னர் வழக்கில் அவர்கள் விடுதலை செய்யப்பட்டதும் எல்லோரும் அறிந்த செய்தியாகும்.

எனவே எதிர்க்கட்சியினர் என்பதற்காகவோ - ஆளுங்கட்சியினர் என்பதற்காகவோ, இரு நிலை கடைப்பிடிக்காமல் ஒரே நிலையில் நீதியின் பாதையில் தி.மு.க. ஆட்சி நடைபோட்டது என்பதற்காகவே இவற்றை சுட்டிக்காட்டினேன்.

இதற்கு நேர்மாறாக அ.தி.மு.க. ஆட்சியில் அநியாயம் புரிந்த ஆளுங்கட்சியினர் தப்பி விட்டதற்கும் - நிரபராதிகளான எதிர்க்கட்சியினர் பொய் வழக்குகளில் சிக்க வைக்கப்பட்டதற்கும் எத்தனையோ உதாரணங்கள் உண்டு.

உடன்பிறப்பே, ஒன்றை நினைவில் வைத்துக் கொண்டு; இந்தக் கடிதத்தைப் படித்திட வேண்டும்.

இன்றுள்ள ஜெயலலிதா ஆட்சியில் சேலத்தில் தாளமுத்து நடராசன் என்ற காங்கிரஸ் முன்னோடி யொருவர் கொலை செய்யப்பட்டு, மாதங்கள் பல கடந்துவிட்டன. கொலையாளிகள் மீது நடவடிக்கை எடுக்கச் சொல்லி தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் திரு. இளங்கோவன் அவர்கள் சேலத்துக்கே சென்று மறியல் போராட்டம்கூட நடத்திவிட்டார். இன்னும் அந்தக் கொலை பற்றிய மேல் நடவடிக்கை எதுவுமில்லை.

அதேபோல திருப்பூர் பகுதியில் கம்யூனிஸ்ட் தோழர் ரத்னசாமி அவர்கள் படுகொலை செய்யப்பட்டு பல மாதங்கள் உருண்டோடி விட்டன. அந்தப் பகுதியில் உள்ள அனைத்துக் கட்சிகளின் சார்பில் எத்தனையோ கூட்டங்கள் - எவ்வளவோ தீர்மானங்கள், குற்றவாளிகளைப் பிடிக்கச் சொல்லி! ஆனால் ஆட்சியாளரும் அதிகார வர்க்கமும் அசைந்து கொடுக்கவில்லை.

அதேபோல வேலூர் நகரில் நகைக்கடைக்குள் புகுந்து கொள்ளை அடித்துவிட்டு முதலாளி சுபா என்கிற சீனிவாசன், ஊழியர் திருமலை, ஆகியோரைச் சுட்டுக் கொன்றுவிட்டு ஓடியபோது வழியில் ஸ்கூட்டரில் வந்த ஆசிரியர் ராமு என்பவரையும் கொன்று விட்டு தப்பியோடிச் சென்ற குற்றவாளியை இரண்டே நாட்களில் கண்டுபிடித்து விடுவோம் என்று அதிகாரிகள் செய்தியாளர்களிடம் உறுதி கூறினர். ஆனால் இரண்டு மாதங்கள் முடிந்தும் கூட கொலையாளி பிடிபடவில்லை.

இப்படியொரு ஆட்சி நடத்துகிற அம்மையார் ஜெயலலிதாதான், அவர் எதிர்க்கட்சியில் இருந்த போது 6-11-2000 அன்று ஆண்டிப்பட்டியில் பேசி அந்தப் பேச்சு அவரது கட்சியின் அதிகாரபூர்வமான "நமது எம்.ஜி.ஆர்." ஏட்டில் சென்னை 7-11-2000, வெளியூர் 8-11-2000 அன்று முதல் பக்கத்தில் வந்திருந்தது.

அந்தப் பேச்சின் தலைப்புகளில் ஒன்று; இதோ அந்த ஏட்டில் வந்ததையே அப்படியே அச்சுப் பிசகாமல் இணைத்துத் தருகிறேன்.

"தி.மு.க. விலிருந்து விலகி கழகத்தில் சேர்ந்த ஊராட்சி மன்றத் தலைவரை தி.மு.க.வினர் வெட்டிச் சாய்த்த கொடூரம்; நடவடிக்கை எடுக்காமல் காவல்துறை கை கட்டி வேடிக்கை பார்ப்பதா?"

இந்தத் தலைப்பையொட்டி ஜெயலலிதா பேசியதும் அதே ஏட்டில், அதே நாளில் வெளிவந்துள்ளதை இதோ அப்படியே இக்கடிதத்தில் இணைத்துள்ளேன்.

"பசும்பொன் மாவட்டத்தில் உள்ள அரசனூர் ஊராட்சி மன்றத் தலைவர் முனியசாமி 5 மாதங்களுக்கு முன்பு அரசனூர் தி.மு.க.வைக் கூண்டோடு கலைத்து என் முன்னிலையில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்தார். இரண்டு நாட்களுக்கு முன்பு தி.மு.க. அமைச்சர் கிருஷ்ணன் வன்முறையைத் தூண்டும் வகையில் ஜெயலலிதாவை பசும்பொன் மாவட்டத்தில் நுழையவிடமாட்டேன் என்று பேசியிருக்கிறார். அதன் எதிரொலியாக இன்று காலை 6 மணியளவில், அரசனூர் ஊராட்சி மன்றத் தலைவர் முனியசாமி உட்பட ஆறு கழக உடன்பிறப்புகளை வெளியூரிலிருந்து அடியாட்களைக் கொண்டுவந்து தி.மு.க.வினர் வெட்டிச் சாய்த்திருக்கிறார்கள். இவர்கள் சிவகங்கை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். கழக உடன்பிறப்புகளின் வீடுகளும், கார்களும் அடித்து நொறுக்கப்பட்டிருக்கின்றன. இந்தச் சம்பவம் குறித்து இன்று பகல் 12 மணி வரை காவல்துறையினர் எந்தவித மேல் நடவடிக்கையும் எடுக்காமல் கை கட்டி வேடிக்கை பார்த்திருப்பது மிகவும் வேதனைக்குரியதாகும். கேவலமாகும்"

உடன்பிறப்பே! காலை 6 மணிக்குக் கொலை முயற்சி நடைபெற்றது. பகல் 12 மணி வரையில் போலீசார் நடவடிக்கை எடுக்கவில்லை என்று மாலைக் கூட்டத்தில் ஜெயலலிதா பேசியவுடன் - அதை அலட்சியப்படுத்தாமல் - எதிர்க்கட்சி

குரலுக்கு மதிப்பளித்து ஜெயலலிதா அந்தக் கூட்டத்தில் கேட்டுக் கொண்டபடி உடனடியாக காவல் துறை நடவடிக்கை எடுக்க ஆணையிடப்பட்டு; அப்போது அமைச்சராக இருந்த தா. கிருஷ்ணன் அவர்களின் தம்பி இராமய்யா, வக்கீல் இளங்கோவன், அவரது தந்தை சின்னசாமி அம்பலம் ஆகியோர் உள்ளிட்ட 13 பேர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது.

புலன் விசாரணை முடிவடையாத நிலையில், பொதுத் தேர்தலில் தி.மு.க. தோல்வியுற்று ஆட்சி மாறியது. ஆம்; அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்தது. எனவே அந்தக் கொலை முயற்சி வழக்கு சம்பந்தமான புலன் விசாரணை முடிவுற்று - குற்றப் பத்திரிகை எவ்வாறு தயாரிக்கப்பட்டது என்பது போன்ற விபரங்கள் என் கவனத்திற்கு வரவில்லை.

இந்த விபரங்களை நான் 23-6-2003 அன்று திருச்சி நிருபர்கள் கூட்டத்தில் வெளியிட்டவுடன் - ஆளுங்கட்சியின் தொலைக்காட்சியில் அந்த ராமய்யாவை விட்டு மறுப்பு தெரிவிக்கச் செய்கிறார்கள்.

மறுப்பு தெரிவித்து விட்டதால் அந்த மாபெரும் உண்மை மண்ணில் புதைந்து விடுமா?

இந்தக் கும்பலின் தாக்குதலால் ஏற்பட்ட முனியசாமியின் மண்டைத் தழும்பு மாறிவிடுமா?

நெடுஞ்சாலையில் விதியை மீறிக் கட்டப்பட்ட பெரிய கட்டிடமும் - அதைப்பற்றி இந்த அரசு விடுத்துள்ள நோட்டீசும் - மாயமாகிவிடுமா?

கொலை முயற்சி வழக்கு குற்றப்பதிவு எண். 188/ 2000 என்பது தலைகீழாகிவிடுமா?

147, 148, 323, 324, 336, 427, 307 என்ற இ.பி.கோ. பிரிவுகள் இறக்கை முளைத்துப் பறந்துபோய் விடுமா?

ஆட்சியாளர்களின் "அபிலாஷை" தீர வேண்டு மென்பதற்காக - அவர்களின் பழிகார எண்ணம் பலிக்க வேண்டுமென்பதற்காக - கொள்கையைப் பலி கொடுத்துவிட்டு கொத்தடிமை வேலைக்கு அச்சாரம் வாங்கிவிட்டவர்கள் - தற்காலிகமாக சட்டத்தின் கைகளை பிடித்துக் கொண்டு; நீதியின் விழிகளை மூடப் பார்க்கலாம்;

ஆனால் ஓர் உண்மையை மறந்து விடக் கூடாது - நீதி; வளைந்தாலும், பாண்டியன் கொலு மண்டபத்தில் நிமிர்ந்தது போல நிமிர்ந்து கொள்ளும் - இறுதியில் நேர்மையே வெல்லும்!

அன்புள்ள,

மு.க.

26-06-2003

2935. அண்ணாவின் அரசாணையும் தமிழண்ணல் தடுமாற்றமும்!

உடன்பிறப்பே,

"திராவிட இயக்க ஆட்சியில் விழுந்த மரண அடி" என்ற தலைப்பில் திரு. தமிழண்ணல் அவர்கள் தினமணி இதழில் ஆசிரியர் கடிதம் பகுதியில் 24-6-2003 அன்று எழுதியிருக்கின்றார்.-

அந்தக் கடிதத்தில், திராவிட இயக்க ஆட்சியில் தமிழுக்கு மரண அடி தரப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார். தமிழ்ச் சான்றோர்களில் ஒருவர் என்பதிலே அவர் மீது எனக்கு பற்று உண்டு என்றபோதிலும், அவர் திராவிட இயக்க ஆட்சிப் பற்றிக் கடுமையாகக் குறை கூறி வடித்துள்ள கருத்துக்கு விளக்கம் அளிக்கவேண்டியது என் கடமை என்று உணர்கிறேன்.

"தமிழுக்கு மரண அடி" என்று அவர் குறிப்பிட்டிருப்பது பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சித் தலைமையிலே இருந்தபோது பிறப்பிக்கப்பட்ட ஒரு ஆணையைப் பற்றி என்பதால் அவருக்குத் தெளிவாக விளக்க வேண்டியுள்ளது.

தமிழண்ணல் அம்மடலின் தொடக்கத்திலே குறிப்பிடும்போது

> "1968ல் பிறப்பிக்கப்பட்ட ஓர் அரசாணை முதற் பாகம் தாய்மொழி என்று மட்டும் குறிக்கிறது. இரண்டாம் பாகம் ஆங்கிலம் எனத் தெளிவாக உள்ளது. மூன்றாம் பாகம் பொருட் பாடங்களைக் குறிக்கிறது. முதல் பாகம் என்பதில் தமிழ் என்ற சொல் விடுபட்டதால் தமிழக மாணவர்கள் பல ஆயிரவர் தமிழை விட்டுவிட்டு, பிரெஞ்சு, இந்தி, சம்ஸ்கிருதம் எடுத்துப் படிக்கின்றனர்"

என்று எழுதியிருக்கிறார். இதில் எந்த அளவுக்கு உண்மை உள்ளது?

1968இல் பிறப்பிக்கப்பட்ட அரசாணை என்று தமிழண்ணல் குறிப்பிடுவது, பேரறிஞர் அண்ணா அவர்கள்

முதல் அமைச்சராக இருந்தபோது, தமிழ் நாட்டுப் பள்ளிகளில் இனி இந்திக்கு இடமில்லை என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க முடிவினை எடுப்பதற்காக 23-1-1968 அன்று தமிழகச் சட்டப் பேரவையிலே நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் 24-1-1968 தேதியிட்டு வெளியிடப்பட்ட அரசாணையாகும். (G.O. MS. No. 105, Education, Dated 24" January 1968 - இந்த ஆணையின் நகல் இன்றைய முரசொலியில் 6-ம் பக்கத்தில் வெளியிடப்பட்டிருக்கிறது)

தமிழண்ணல் தனது கடிதத்தில் "அந்த அரசாணையில் முதற்பாகம் தாய்மொழி என்று மட்டும் குறிக்கிறது. இரண்டாம் பாகம் ஆங்கிலம் எனத் தெளிவாக உள்ளது. மூன்றாம் பாகம் பொருட் பாடங்களைக் குறிக்கிறது." என்கிறார். ஆனால் அண்ணா அவர்கள் பிறப்பித்த அரசாணையில் மூன்று பாகங்கள் என்று குறிப்பிடப்படவில்லை. அரசாணையில் இரண்டு பாகங்கள்தான் இடம் பெற்றுள்ளன.

தமிழண்ணல் முதற் பாகம் தாய்மொழி என்று மட்டும் குறிக்கிறது என்கிறார். ஆனால் அரசாணையில் முதற்பாகத்தில் உள்ள வார்த்தைகள் - வட்டார மொழி அல்லது வட்டார மொழியைத் தாய்மொழியாகக் கொண்டில்லாதவர்களின் தாய்மொழி (Regional Language or mother tongue, when it is different from the regional language) என்றுதான் உள்ளது.

தமிழண்ணல், தன் கடிதத்தில் இரண்டாம் பாகம் ஆங்கிலம் எனத் தெளிவாக உள்ளது என்கிறார். ஆனால் அரசாணையில் "ஆங்கிலம் அல்லது இந்திய மொழி அல்லாத ஏதேனும் ஒரு மொழி" என்று உள்ளது.

மேலும் தமிழண்ணல் தன் கடிதத்தில், மூன்றாம் பாகம் பொருட் பாடங்களைக் குறிக்கிறது என்று எழுதியிருக்கிறார். ஆனால் அண்ணா அவர்களின் ஆட்சியில் 1968இல் வெளியிடப்பட்ட ஆணையிலே மூன்றாம் பாகம் என்ற ஒன்றே இல்லை. 1968ஆம் ஆண்டு அதாவது 24-1-1968 வரையில் தமிழகத்திலே பின்பற்றப்பட்டுவந்த ஆணையிலேதான் மூன்று பாகங்கள் இருந்தன. அது கழக ஆட்சியில் இரண்டே பாகங்களாக மாற்றப்பட்டு விட்டது. அதைத்தான் சரியாகத் தெரிந்துகொள்ளாமல் தமிழண்ணல் அவர்கள் 1968இல் அண்ணா

ஆட்சியில் பிறப்பிக்கப்பட்ட அரசாணை தவறு நிறைந்தது என்கிறார். 1968க்கு முன்பு இருந்த நிலையை; 68க்குப் பிறகு வந்த நிலையாகத் தமிழண்ணல் தவறாக எண்ணிக் கொண்டு, அந்தத் தவற்றின் அடிப்படையில் தவறான சில கருத்துகளை வெளியிட்டு, கழக ஆட்சியின் தவறான ஆணை என்று தவறாகக் கூறுகிறார்.

அவர் தன்னுடைய குற்றச்சாட்டாக மேலும் கூறுவது, "முதல் பாகம் என்பதில் தமிழ் என்ற சொல் விடுபட்டதால், தமிழக மாணவர்கள் பல ஆயிரவர் தமிழை விட்டு விட்டு, பிரெஞ்சு, இந்தி, சம்ஸ்கிருதம் எடுத்துப் படிக்கின்றனர்" என்பதாகும். அண்ணா காலத்தில் பிறப்பிக்கப்பட்டுள்ள அரசாணையில், முதல் பாகத்தில், வட்டார மொழி அல்லது வட்டார மொழியைத் தாய்மொழியாகக் கொண்டிராதவர்களுக்கு அவரவர் தாய்மொழி என்று தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. அரசாணையில் வட்டார மொழி என்று குறிப்பிடாமல் தமிழ் என்று போடப்பட்டிருக்க வேண்டும் என்கிறார் தமிழண்ணல். 1956ஆம் ஆண்டு சென்னை மாகாண சட்டமன்றத்தில் இயற்றப்பட்ட ஆட்சிமொழி சட்டத்தின்படி இந்த மாநிலத்தின் வட்டார மொழி என்பது தமிழ்தானே! அப்படியிருக்கும்போது அரசாணையில் வட்டார மொழி என்று போட்டிருப்பது தமிழைத்தானே குறிக்கும். இதைக் கூடத் தெரிந்து கொள்ளாமல், தமிழண்ணல் 1968ஆம் ஆண்டு பிறப்பிக்கப்பட்ட அரசாணையைப் பற்றி இதுவரை வாய் திறக்காமல் இருந்து விட்டு தற்போது திடீரென்று திராவிட இயக்க ஆட்சியில் தமிழுக்கு விழுந்த மரண அடி என்று எதைக் குறிப்பிடுகிறார்?

அண்ணா பிறப்பித்த அரசாணையில் தமிழ்நாட்டில் வேறு மாநிலத்தைச் சேர்ந்தவர்களோ, அல்லது வேறு மொழியை தாய்மொழியாகக் கொண்டவர்களோ இருப்பார்களானால் அவர்கள் தமிழை எடுத்துக் கொள்ளலாம் அல்லது அவர்களுடைய தாய் மொழியை எடுத்துக் கொள்ளலாம் என்று தெளிவாகவே கூறப்பட்டுள்ளது.

தமிழண்ணல் கூறுவது போல் திராவிட இயக்க ஆட்சியில் மரண அடி கொடுக்கப்பட்டது என்பது உண்மையாக இருக்குமேயானால், அந்த திராவிட இயக்க ஆட்சியில் குறள் பீடத்திற்கு துணைத் தலைவர் பதவி அளிக்கப்பட்டபோதே, "தமிழுக்கு மரண அடி கொடுத்துள்ள இந்தத் திராவிட இயக்க ஆட்சியில் நான் இந்தப் பொறுப்புகளை ஏற்றுக் கொள்ளமாட்டேன்"

என்று தெரிவித்திருக்க வேண்டும். ஆட்சி மாறிய பிறகும் அதனை முழுமையாக விட மனமின்றி புதிய அரசுக்குக் கடிதம் எழுதியவர்; கல்வித் துறையிலேயே தன் வாழ்நாள் முழுவதும் கழித்துவிட்டு, தற்போது திடீரென்று எதற்காக திராவிட இயக்க ஆட்சி மீது வெறுப்பைக் கக்குகிறார்?

தமிழண்ணல் தனது கட்டுரையில் "திராவிட இயக்க ஆட்சியில் விழுந்த இந்த மரண அடி கடந்த 35 ஆண்டுகளாக தொடர்வதை யாரும் மாற்ற வில்லை, இந்த அவலம் பற்றி சிந்திக்கவுமில்லை, இதை எதிர்த்துக் கருத்துக் கூற யாரும் முன்வரவுமில்லை" என்கிறார். மற்றவர்களைப் பற்றி குறை கூறும் இந்தப் பேராசிரியர் செய்தது என்ன? முதல் அமைச்சர்கள் மற்றும் அமைச்சர்கள் யாரிடமாவது இவ்வளவு பெரிய தமிழ் ஆர்வலர் இதைப் பற்றி முறையிட்டது உண்டா?

தனது கடிதத்தை அவர் முடிக்கும்போது, "தமிழை அறவே புறக்கணிக்க வழிவகுத்த திராவிட இயக்கத்தவர்கள் தங்களை தமிழ்க் காவலர்கள், தமிழினத் தலைவர்கள், தமிழ்த் தெய்வங்கள் என முழங்கிக் கொண்டிருப்பது அருவருப்பானது" என்று கூறியிருக்கிறார். இவரே அப்படியெல்லாம் கூறி, ஆதாயம் பெற்று, இன்றைக்கு ஏனோ மாற்றிக் கொண்டிருக்கிறார். தமிழ்ப் புலமைக்கே இது தலைக்குனிவு!

1968இல் பிறப்பிக்கப்பட்ட அரசாணையில் தமிழ் புறக்கணிக்கப்பட்டு விட்டதாக தமிழண்ணல் கூறுகிறார். அந்த அரசாணை பிறப்பிக்கப்பட்டதற்கு மூல காரணமே 1968ஆம் ஆண்டு ஜனவரி 23ந்தேதி சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானம்தான். அந்தத் தீர்மானத்தில் எங்கேயாவது தமிழ் புறக்கணிக்கப்பட்டதா என்பதையும் பார்க்கலாம்.

- மத்திய அரசின் இந்தித் திணிப்புத் திட்டத்தை இந்த மன்றம் ஏற்க மறுக்கிறது.
- மத்திய அரசின் மொழித் தீர்மானத்தை இந்த அரசு செயல்படுத்த மறுக்கிற வகையிலும், தமிழக மக்களும் மாணவர்களும் வெளியிட்டுள்ள கருத்துக்கு மதிப்பளிக் கிற முறையிலும், தமிழகத்தின் எல்லாப் பள்ளிகளிலும் மும்மொழித் திட்டத்தை அகற்றிவிட்டு தமிழ், ஆங்கிலம்

ஆகிய இரு மொழிகளுக்கு இடமளித்து, இந்தி மொழியை நீக்கிட இம் மன்றம் தீர்மானிக்கிறது.

● தமிழகத்தில் தமிழ் பயிற்சி மொழியாகவும், பாடமொழியாகவும் எல்லாக் கல்லூரிகளிலும், நிர்வாக மொழியாக பல்வேறு துறைகளிலும் ஐந்தாண்டு காலத்துக்குள் நடைமுறைக்கு வருவதற்கான துரிதமான நடவடிக்கையை மேற்கொள்வது என்று இம்மன்றம் தீர்மானிக்கிறது.

இதுதான் அண்ணா அவர்கள் நிறைவேற்றிய அந்த முக்கிய தீர்மானம். இதிலே எங்கேயாவது தமிழுக்கு தீங்கிழைக்கப்பட்டிருக்கிறதா என்பதை தமிழண்ணல் அவர்களும், தமிழ்நாட்டிலே உள்ள தமிழ்ச் சான்றோர்களும்தான் கூறவேண்டும். இந்தத் தீர்மானத்தின் அடிப்படையில் அரசு ஆணை இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட மறுநாளே பிறப்பிக்கப்பட்டது.

இதையெல்லாம் தமிழண்ணல் அறியாதவர் அல்ல, இருந்தாலும் என்ன காரணத்திற்காகவோ 1968ஆம் ஆண்டு பிறப்பிக்கப்பட்ட அரசாணையினால் தமிழுக்கு மரண அடி விழுந்து விட்டதாக 35 ஆண்டுகளுக்குப் பிறகு கூறுகிறார்.

தமிழ்நாட்டில் தனது தாய்மொழி தமிழ்தான் என அறியாத தமிழன் இருக்கமாட்டான் என்ற நம்பிக்கையில்தான் "தாய்மொழி" என்ற சொல்லும் தமிழை தாய்மொழியாகக் கொண்டிராத பிறமொழி மாணவர்க்கும் நீதி வழங்குவதற்காக 'வட்டார மொழி' அல்லது வட்டார மொழியைத் தாய்மொழியாகக் கொண்டிராதவர்களின் தாய்மொழி என்ற சொற்களும் அண்ணாவின் ஆட்சியில் அரசாணைகளில் இடம் பெற்றுள்ளன என்பதைத் தமிழண்ணல் புரிந்து கொண்டால் "தமிழுக்கு மரண அடி" என்று கூறித் தடுமாறியிருக்கமாட்டார்.

அன்புள்ள,

மு.க.

27-06-2003

2936. தூங்குவது போலப் பாசாங்கு செய்தால்...

உடன்பிறப்பே,

பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்க விரும்பி இக்கடிதம் எழுதுகிறேன்.

20.5.2003 அன்று காலை அருமைத் தம்பி தா.கி. கொலையுண்ட கொடுஞ்செய்தி வருகிறது.

அதற்கு 18 நாட்களுக்கு முன்புதான் அவர் எனக்கு எழுதிய கடிதம் ஒன்று என் கைக்குக் கிடைக் கிறது. அக்கடிதம்; அவரும் அழகிரியும் கலந்து கொண்டு சிவகங்கையில் நடைபெற்ற கழக ஆர்ப் பாட்டப் பேரணி பற்றிய விளக்கங்கள் அடங்கியது.

ஆம்; 2.5.2003 அன்று அவர் கையெழுத்திட்ட தட்டச்சு செய்த கடிதம் அது. அக்கடிதம் கிடைத்த பிறகு அழகிரியும் வருத்தம் தணிந்து எனக்கோர் கடிதம் 5.5.2003 அன்று எழுதி; எல்லாக் கடிதங்களும் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

வழக்கு இருப்பதால் நான் விபரங்களுக்குள் போக விரும்பவில்லை.

தா.கி. படுகொலைக்காக நான் ஒரு சொட்டுக் கண்ணீர்கூட வடிக்கவில்லையென்று; கொலைப்பழி புரிந்தவர்களினும் கொடிய நெஞ்சுடன் சிலர் கூறுவதும் அதனைச் சில ஏடுகளும் வெளியிடுவதும் - எனக்கும் தா.கி. அவர்களுக்குமிருந்த தணியாத நேசத்தையும் பாசத்தையும் உணராத - அல்லது உணர்ந்தும் அந்த உண்மையை வெளியிட விரும்பாத சூழ்ச்சியும் சூதும் என்றுதான் சொல்ல வேண்டும்.

அவரை மாவட்டச் செயலாளராக - மண்டிலப் பொறுப்பாளராகக் கண்டு அழகு பார்த்தவன் நான்! அவரை இரண்டு மூன்று முறை டெல்லி நாடாளு மன்றத்து உறுப்பினராக்கி மகிழ்ச்சியடைந்தவன் நான்!

என் அமைச்சரவையிலேயே ஓர் அமைச்சராக வீற்றிருக்கச் செய்து பூரிப்பும் புளகாங்கிதமும் கொண்டவன் நான்!

அவருக்கு மணிவிழா நடத்தி ஆனந்தக் கண்ணீர் வடித்தவன் நான்! அப்படிப்பட்ட நான்; அவருக்கு விளைந்த கொடிய முடிவு கேட்டு விழி நீர் சிந்தவில்லையென ஒரு விபீஷணக் கூட்டம் விஷமச் செய்தி பரப்புகிறது.

இதோ, அவர் படுகொலைக்கு ஆளாக்கப்பட்டார் என்ற செய்தி கிடைத்தவுடன், நான் வெளியிட்ட அறிக்கை :-

"தா.கி. என அழைக்கப்பட்ட என் தம்பியே; என் உயிருக்கு உயிரானவனே, உன் உயிரையா பறித்தார்கள் உன்மத் தர்கள்? நம்ப முடியவில்லையே தம்பி!

இரண்டு நாட்களுக்கு முன்புதானே சென்னை வந்து என் இல்லத்தில் என்னிடமும் உன் அண்ணியிடமும் பிறந்த நாள் வாழ்த்துப் பெற்று இருவருக்கும் பொன்னாடை அணிவித்துச் சென்றாய்!

நேற்று 19-5-2003 மாலை 6 மணி அளவில் கூட மதுரையிலிருந்து தொலைபேசியில் என்னிடம் பேசி, மதுரை வட்டாரத்து கழகத் தேர்தல்கள் குறித்து விளக்கமளித்து என்னிடமும் விளக்கம் பெற்று வினையாற்றிக் கொண்டிருந் தாயே; அதற்குள் இப்படியொரு செவி பிளக்கும் - சிந்தை தகர்க்கும் செய்தியா?

அதற்கு முதல் நாள் 18-5-2003 அன்று காரைக்குடி தொகுதி சட்டமன்ற அ.தி.மு.க. முன்னாள் உறுப்பினர் சுப. துரைராஜ் அவர்களை அண்ணா அறிவாலயம் அழைத்து வந்து கழகத்தில் சேர்த்தாயே; அந்தப் புகைப்படம்கூட இதோ என் எதிரில் காட்சியாகி என்னைத் தணலில் தள்ளுகிறதே!

தம்பி, உன்னையெல்லாம் இழந்து விட்டு நான் எப்படிக் கழகம் நடத்துவேன் - அய்யகோ! துடிக்கிறேன் - துவளு கிறேன் - எனக்கு ஆறுதல் சொல்லும் ஆற்றல் எனக்கே இல்லையே!"

இந்த என் அறிக்கையைத் தொடர்ந்து வெளி நாட்டிலிருந்த ஸ்டாலினை உடனே புறப்படச் சொல்லி, அவரும் செய்தி கேட்டு அலறித்துடித்து அமெரிக் காவிலிருந்தவர் ஆறு அல்லது ஏழு விமானங்களில் மாறி மாறி ஏறி இறுதிச் சடங்கிற்கு வந்து சேர்ந்தார். (இதற்கிடையே அழகிரி கைது செய்யப்பட்டதும் குறிப்பிடத்தக்கது)

கழகத்தின் பொதுச் செயலாளர் இனமானப் பேராசிரியரும், பொருளாளர் ஆர்க்காடு வீராசாமியும், முன்னாள் அமைச்சர்களும் ஓடோடி வந்து கண்ணீர் அஞ்சலி செலுத்தினர். கழகத்தினர் திரண்டனர் கொம்புக்காரனேந்தலில்!

கோவை நிகழ்ச்சியில் உடல்நிலை கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்த நான் வெளியூர் செல்லக் கூடாது என்ற டாக்டர்கள் அறிவுரையின் காரணமாக ஒரு மாத ஓய்வில் சென்னையில் இருக்க நேரிட்டது. இல்லையேல் முதல் ஆளாக நானும் அங்கு இருந்திருப்பேன்.

தம்பி தா. கிருட்டிணன் அவர்களுக்கும் எனக்கு மிருந்த நட்புணர்வை - உண்மையான பாசத்தை உணராதவர்கள்; அல்லது சந்தர்ப்பத்தின் சதியால் உணர மறுப்பவர்கள் - உணர்ந்திருந்தும் ஒளிப்பவர்கள்; இதோ தா.கி. அவர்கள் கடைசியாக எனக்கு எழுதிய கடிதத்தில் முடிவுரையாக குறிப்பிட்டுள்ள பகுதியைப் படித்துப் பார்க்கட்டும். -

தா.கி. அவர்கள் கொலைக்கு ஆளாக்கப்பட்டதற்கு 18 நாட்களுக்கு முன்பு 2.5.2003 அன்று எனக்கு எழுதிய மடலின் இறுதிப் பகுதி வருமாறு:

> "திரு. கோபால்சாமி அவர்கள் பிரிந்த போது மதுரையிலும் தென் மாவட்டங்களிலும் திரு. மு.க. அழகிரி அவர்களோடு துணை நின்று கழகத்தை காப்பாற்ற உழைத்தவன். தங்களுக்கும் தங்கள் குடும்பத்துக்கும் எள் அளவு - எள்ளின் முனையளவுகூட துரோகம் நினைக் காதவன் - தங்களால்தான் கழகத்தில் எனக்குப் பெருமை, உயர்வு கிடைத்தது என்பதை இன்னும் மறக்காமல் நன்றி உணர்வோடு அலைபவன். நான் பெற்றுள்ள சமூக அந்தஸ்து என்பது கழகத்தால்தான் என்றாலும் அது தங்களால் கிடைத்ததுதான்.

அந்த மரியாதையை என்னுடைய இறுதிக் காலத்தில் இழந்துவிடாமல் காப்பாற்றிக் கொள்ள விரும்புகிறேன். கழகத்தின் நன்மைக்காகவும் தங்கள் குடும்பத்தின் நன்மைக்காகவும் எனது மரியாதை நான் பெற்றுள்ள அந்தஸ்து பறிபோகுமானால் அதற்காக மகிழ்ச்சி அடைவேன்."

தா.கிருட்டிணன்
25.2003.

உடன்பிறப்பே

தா.கி. மறைந்தவுடன் நான் வடித்த கண்ணீரில் தோய்ந்த வார்த்தைகளையும் - தா.கி. எனக்கு எழுதிய கடிதத்தின் இறுதியில் குறிப்பிட்ட வாசகங்களையும் படிப்போரில்; வஞ்சக நெஞ்சம் படைத்தவர்களாக இருப்பவர்கள் மட்டுமே; எங்கள் அண்ணன் தம்பி எனும் அன்பு உறவுக்கு இன்னமும் களங்கம் கற்பிக்க முனைவார்கள். அவர்களைத் திருத்தவே முடியாது. மெய்யாகவே தூங்குபவரைத்தானே எழுப்ப முடியும்? தூங்குவதுபோல பாசாங்கு செய்பவரை எவ்வளவு பாடுபட்டாலும் எழுப்ப முடியுமா?

அன்புள்ள,

மு.க.

29-06-2003

2937. தமிழச்சி என்றால் இளக்காரமா?

உடன்பிறப்பே,

ஒரு நாளேட்டில் - “கண்ணகி சிலை” என்ற தலைப்பில் துணுக்குச் செய்தியொன்று வெளியிடப்பட்டுள்ளது. கண்ணகி சிலை ஜெயலலிதாவுக்குத் தான் கண்ணைக்கரித்து; அதை லாரி மோதி உடைந்து விட்டதாக ஒரு பொருந்தாப் பொய்யைக் கூறி அப்புறப்படுத்தி விட்டார்கள். இப்போது சென்னை அன்பகம் முகப்பில் இளைஞர் அணியினரால் அமைக்கப்பட்டுள்ள கண்ணகி சிலையும் இந்த இதழாளருக்கு எரிச்சலூட்டி; அதன் காரணமாக நடக்காத ஒன்றை நடந்ததுபோல் இட்டுக்கட்டி எழுதியுள்ளார். -

காப்பியங்களில் கதைத் தலைவனைப் பற்றி முதலில் கூறி பிறகுதான் அடுத்துத் தலைவி பற்றிக் கூறுவது மரபாக இருந்தபோதிலும்; இளங்கோ வடிகள் அதற்கு மாறாகச் சிலப்பதிகாரத்தில்,

“போதிலார் திருவினாள்
புகழுடை வடிவென்றும்
தீதிலா வடமீனின்
திறமிவள் திறமென்றும்
மாதரார் தொழுதேத்த
வயங்கிய பெருங்குணத்துக்
காதலாள் பெயர் மன்னுங்
கண்ணகி .....”

என்று முதலில் வைத்துக் கூறுகிற அளவுக்குச் சிறப்புப் பெற்ற மங்கையர்க்கரசி கண்ணகி என்பதும்; மதுரைப் பாண்டியன் அவைக் களத்தில் நேருக்கு நேர் நின்று நீதிக்குப் போராடி வென்றவள் என்பதும்

“கொங்குச் செல்வி
குடமலையாட்டி
தென் தமிழ்ப்பாவை
செய்த தவக் கொழுந்து

ஒரு மாமணியாய்
உலகிற்கு ஓங்கிய
திருமா மணி”

என அவளை சிலம்பு புகழ்கிறது என்பதும், தெரிந்திருந்தும் கூட அந்தக் கண்ணகியை ஏதோ; அபசகுனச் சின்னம்” என்பது போலச் சித்தரிப்பது தமிழுக்கே - தமிழ் இலக்கியத்துக்கே - தமிழர் பண்பாட்டுக்கே எதிரான செயலாகும்.

அப்படியென்ன எழுதியிருக்கிறது அந்த ஏடு என்று கேட்கத் தோன்றும் உனக்கு! இதோ அந்த ஏடு எழுதியுள்ளதை அப்படியே எழுத்துவிடாமல் தருகிறேன்; படித்துப்பார்.

“சொன்னாலும் வெட்கமடா, சொல்லாவிட்டாலும் துக்கமடா” என்றார் கலைஞரின் தொண்டர் ஒருவர். என்ன விஷயம்? என்று கேட்டபோது, அக்கம் பக்கம் பார்த்துவிட்டு மெதுவாக சொன்னார்.

‘நம்பவும் முடியவில்லை, நம்பாமலும் இருக்க முடியவில்லை. தலை வரின் பகுத்தறிவு கொள்கையும், பத்தினித் தெய்வம் கண்ணகி மேல் அவருக்கு இருக்கும் அபரிமிதமான மரியாதையும் இதை சொல்லவே வாய்க்கு பூட்டு போட்டு விடுகிறது. அன்பகம் வளாகத்தில் கண்ணகி சிலையை வைத்த நாளில் இருந்தே கழகத்துக்கு சோதனை மேல் சோதனைதான். இதை யார் எப்படி சொல்லமுடியும்? யோசித்து பாருங்கள், நான் சொல்வது சரியாகத்தான் இருக்கும். பலருடைய கருத்தும் இப்போது இதுதான்’ என்றார் அந்த தொண்டர்.”

அந்தத் தொண்டரின் பெயரை அந்த ஏடு குறிப்பிடாமல் மறைத்ததிலிருந்தே; அப்படியொரு தொண்டரே இல்லை என்பதும் - இருந்தாலும் அவர் கழகத் தொண்டராக இருக்க மாட்டார் என்பதும் - இந்தக் கட்டுரையே அந்தப் பத்திரிகையாளரின் கற்பனைப் பிள்ளை என்பதும் தெளிவாகவே விளங்குகிறது.

அந்தத் துணுக்கு வாயிலாக; மூடநம்பிக்கைக் கொள்கைக்கு “மொய்” எழுதுகிறார் நண்பர் - ஆம், கண்ணகி சிலையை அன்பகம் முகப்பில் வைத்ததால் கழகத்துக்கு சோதனை மேல் சோதனையென்று கூறி - ஒரு மாயத் தொண்டர் மூலமாகக்

கண்ணகி சிலையை அன்பகத்திலிருந்தும் அகற்றிவிட வழி தேடுகிறார் பாவம்!

1968-ல் சென்னை கடற்கரையில் அண்ணா அவர்களால் வைக்கப்பட்டது கண்ணகி சிலை - கண்ணகி சிலை மட்டுமல்ல ஔவையார், கம்பர், வள்ளுவர் சிலைகள் எனப் பல சிலைகள்! கண்ணகி சிலை வைத்ததால்தான் அண்ணா அதிக நாள் வாழவில்லை என்று கூறியவர்களும் உண்டு - எந்தச் சிலையும் வைக்காத பாரதியார் கூட 39 வயது வரையிலேதான் வாழ்ந்தார். அண்ணாவுக்கு மட்டுமல்ல; அந்த நோய் ரமண முனிவருக்கும் வந்து அவர் உயிரைக் கொள்ளை கொண்டது என்பதை மூடநம்பிக்கையாளர்கள் தங்களுக்கு வசதியாகவே மறந்து விடுகிறார்கள். கடற்கரை நீளத்துக்குச் சிலைகள் வைத்த நிலையில் ஒரு கண்ணகி சிலையால் மட்டுமா கஷ்ட நஷ்டங்கள் வந்து விடும்? சிந்திக்க வேண்டாமா?

கனகவிசயர் தலையில் இமயத்தின் கல்லை ஏற்றிக் கொண்டு வந்து கண்ணகிக்கு முதலில் சிலை அமைத்த சேரன் செங்குட்டுவன் புகழை இன்னமும் சிலப்பதிகாரம் பரப்பிக் கொண்டிருக்கிறதே; அதைக் கூடவா மறந்து விடுவது? பரிதாபம்!

ஏறத்தாழ 35 ஆண்டுகளாகக் கடற்கரையில் கண்ணகி சிலை இருந்தது. அதனால் தமிழகத்திற்கு என்ன கேடு வந்துவிட்டது; இடையில் ஜெயலலிதா வின் ஆட்சி இருமுறை வந்ததைத் தவிர!

எனவே; கண்ணகி எனும் கற்புப் பெட்டகத்தை - அன்பும் அமைதியும் நிறைந்த பண்பின் உருவத்தை - தமிழ்ப் பண்பாட்டின் சிகரத்தை - ஒரு துஷ்ட தேவதை போலக் கற்பித்து; துஷ்ட தேவதைகளால் கேடு விளையும் என்ற மூடநம்பிக்கையை விதைத்து அதனை விளைத்திட முனைவது, தமிழர் நெறிக்கே எதிரான காரியமாகும்.

“மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத்
தீவலம் செய்து...’

நடைபெற்ற திருமணம்தான் கண்ணகிக்கும் கோவலனுக்கும்!

ஆனால் கண்ணகியின் வாழ்வு, புயலாக மாறியதை; இந்த ஏட்டின் கட்டுரையாளர் எண்ணிப் பார்த்து - இனி தனது இல்லத்திலோ, தன் உறவினர் இல்லங்களிலோ -

"மாமுது பார்ப்பான் மறைவழி காட்டும்" மண விழாக்கள் வேண்டாமென முடிவு செய்வாரா? அல்லது உறவினர் - உற்ற நண்பர்களிடம் கூறித் திருத்த முனைவாரா?

தமிழச்சி என்றால் எதுவும் சொல்லலாம்; இதுவே பாஞ்சாலி சிலை என்றால் பக்தி சிரத்தையுடன் பாதம் தொழுது கிடக்கலாம் என்ற இளக்காரமல்லவா இன்று தமிழர்கள் சிலருக்கு ஏற்பட்டுவிட்டது -

இந்த இருள் நீங்கி -
பகுத்தறிவு ஒளி மேலும் மேலும்
பரவாமலா போய்விடும்?
நமது தொடர்பணி,
அதற்குத் துணை
நிற்கட்டும்!

அன்புள்ள,

மு.க.

30-06-2003

2938. தமிழன் நாட்டிய புகழ்க்கொடி!

உடன்பிறப்பே,

தமிழர்கள் ஒவ்வொருவரும் படித்து இன்புறத் தக்க வகையில் நேற்றைய காலை ஏடு ஒன்றில் முதல் பக்கத்திலே ஒரு செய்தி வந்திருந்தது. அதற்குத் தலைப்பு "அண்டார்டிகா பனிமலைக்கு ஸ்ரீதர் ஆனந்த கிருஷ்ணன் பெயர்" என்பதாகும். அந்தச் செய்திச் சுருக்கம் வருமாறு :

> "அண்டார்டிகா கண்டத்தில் உள்ள பனிமலைக்கு அண்ணா பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் மு. ஆனந்த கிருஷ்ணனின் மகன் ஸ்ரீதர் ஆனந்த கிருஷ்ணனின் பெயர் சூட்டப்பட்டுள்ளது. அண்டார்டிகாவின் ரூபர்ட் கடற்கரைக்கு அருகில் உள்ளது இப்பனி மலை. பூமத்திய ரேகையில் இருந்து 75 டிகிரி 32 மினிட் தொலைவில் தெற்கு நிரைகோடும், 140 டிகிரி 05 மினிட் தொலைவில் மேற்கு வீச்சு எல்லைக் கோடும் சந்திக்கும் பகுதியில் உள்ளது. 15 மைல் நீளம் கொண்டது. அண்டார்டிகாவில் உள்ள பனித்தகடுகள், பனி ஆறுகளின் ஓட்டங்கள், அங்கு ஏற்படும் நில நடுக்கங்கள் பற்றிய ஆராய்ச்சியில் ஸ்ரீதர் ஆனந்தகிருஷ்ணன் ஆற்றிய பங்களிப்பைக் கௌரவிக்கும் விதமாக இப்பெயர் சூட்டப்பட்டுள்ளது. அமெரிக்காவில் உள்ள அண்டார்டிகா பகுதிகளுக்குப் பெயர் சூட்டும் குழு இதற்குப் பரிந்துரை செய்தது. இத்துறையில் கௌரவிக்கப்படும் முதல் தமிழர் இவர்."

இந்தச் செய்தியைப் படித்ததும் என் மகிழ்ச்சி எல்லை கடந்தது. நினைவுகள் பின்னோக்கிச் சென்றன. ஸ்ரீதர் ஆனந்தகிருஷ்ணனின் அருமைத் தந்தையான டாக்டர் ஆனந்தகிருஷ்ணனைப் பற்றிய நினைவுகள்தான் அவை.

1989-1990ஆம் ஆண்டு தி.மு.கழகம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்த போது உலகத் தரத்திற்கு ஒப்பான அண்ணா பல்கலைக்கழகத்திற்கு ஒரு துணைவேந்தரை நியமிக்க வேண்டிய வேளை வந்த சமயத்தில், என் நினைவிற்கு வந்த பெயர்தான் டாக்டர் ஆனந்தகிருஷ்ணன் என்பதாகும். அதற்கு முன்பு அவர் 1952ஆம் ஆண்டு வாக்கில் தன் படிப்பைத் தமிழகத்திலே முடித்துவிட்டு, மேற்கல்லி தொடருவதற்காக அமெரிக்கா சென்றவர், படிப்புக்குப் பிறகு சிறிது காலம் மட்டும் கான்பூரில் பணியாற்றிவிட்டு பின்னர் அமெரிக்காவிற்கே சென்று விட்டார். 1978ஆம் ஆண்டு முதல் 1989வரை ஐ.நா.வில் பணியாற்றி முடித்துவிட்டு ஓய்வு பெற்ற நிலையிலே இருந்த போது நான்தான் அவரை அழைத்து வலியுறுத்தி அண்ணா பல்கலைக்கழகத் துணைவேந்தர் பொறுப்பினை ஏற்றிட வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். அவரும் என் வலியுறுத்தல் காரணமாக அந்தப் பொறுப்பினையேற்று, அண்ணா பல்கலைக்கழகத்தின் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டார்.

மீண்டும் 1996இல் தமிழ்நாட்டில் நான்காவது முறையாக என் தலைமையில் ஆட்சிப் பொறுப்பேற்ற நிலையில் மாநிலத்தில் உயர்கல்வி குறித்த கொள்கை முடிவுகளை எடுக்கக்கூடிய மாநில உயர் கல்விக் குழுவின் துணைத் தலைவராக அவர் நியமிக்கப்பட்டார். தகவல் தொழில் நுட்பத்திற்கென்றே தலைமைச் செயலகத்தில் புதிதாகவே ஒரு துறை 5-10-1998 முதல் உருவாக்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக தமிழ்நாட்டில் தகவல் தொழில் நுட்பம் வேகமாக வளர்ச்சி அடையவும், அதற்கான அணுகுமுறைகளை உருவாக்கிச் செயல்படுத்தவும், முதலமைச்சரின் தலைமையில் பணி முனைப்புக் குழு (I.T. Task Force) ஒன்று உருவாக்கப்பட்டது. அப்போது அரசுத் துறையை கம்ப்யூட்டர் மயமாக்கவும், பள்ளிக் கல்வியில் தகவல் தொழில் நுட்பத்தை இணைக்கவும்,

தமிழ் மென்பொருளை உருவாக்கிப் பரப்பவும், டாக்டர் ஆனந்த கிருஷ்ணன் அவர்கள் தலைமையில் ஒரு துணைக் குழுவும் உருவாக்கப்பட்டது. மேலும் டாக்டர் ஆனந்த கிருஷ்ணன் அவர்கள் தகவல் தொழில் நுட்ப வியல் மற்றும் மின்னணு ஆளுமை (e-Governance) ஆகியவை தொடர்பாக முதலமைச்சருக்கும்,

அரசுக்கும் ஆலோசனைகள் வழங்கிட முதலமைச்சரின் ஆலோசகராகவே 20-9-2000 அன்று நியமிக்கப்பட்டார்.

தகவல் தொழில் நுட்ப வளர்ச்சிக்காக தனியாக ஒரு கொள்கையை உருவாக்கி அறிவித்த முதல் மாநிலம் இந்தியாவிலேயே தமிழ்நாடுதான். 340 கோடி ரூபாய் மதிப்பீட்டில் டைடல் மென்பொருள் பூங்கா சென்னை தரமணியில் உருவாக்கப்பட்டு 4-7-2000 அன்று பிரதமர் வாஜ்பாய் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

தமிழகத்திலே தற்போது பொறியியல் கல்லூரிகளிலும், பாலிடெக்னிக் போன்றவைகளிலும் மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான "ஒற்றைச் சாளர முறை" (Single window System) என்பதைக் கண்டுபிடித்து அறிமுகப்படுத்திய பெருமைக்குச் சொந்தக்காரர் டாக்டர் ஆனந்த கிருஷ்ணன் அவர்கள்தான்.

கணினி பயன்பாடுகளில் உலக அளவில் போதுமான தமிழ்க் குறியீடுகள் இல்லாததால் தமிழ் மென் பொருள் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்படாமல் இருந்தது. இதைக் கருத்தில் கொண்டு, தம்பி முரசொலி மாறனின் இடைவிடாதத் தூண்டுதலால் டாக்டர் ஆனந்தகிருஷ்ணன் அவர்களின் பெருமுயற்சியினால் "தமிழ்நெட் 1999"- என்ற உலகத் தமிழ் இணைய கருத்தரங்க மாநாட்டினை சென்னையிலே 99 ஆம் ஆண்டு பிப்ரவரி 7 மற்றும் 8 ஆகிய நாட்களில் சிறப்பாக நடத்தினோம். அந்த மாநாட்டில் ஒருமனதாக மேற்கொள்ளப்பட்ட முடிவுகளின்படி, தமிழ் விசைப் பலகையும், தமிழ்க் குறியீடுகளும் தரப்படுத்தப்பட்டு அறிவிக்கை செய்யப்பட்டதற்கும் மூலக் காரணமாக இருந்தவர் டாக்டர் ஆனந்தகிருஷ்ணன் அவர்களாகும்.

தமிழ்நாட்டில் 1996 மே மாதத்திற்கு முன்புவரை 34 மென்பொருள் நிறுவனங்களே இருந்தன; கழக ஆட்சி யில் 666 மென்பொருள் நிறுவனங்களாக உயர்ந்தன. 1999-2000ஆம் ஆண்டில் மட்டும் 430 மென் பொருள் நிறுவனங்கள் தமிழகத்தில் உருவாக்கப்பட்டன.

1994 - 95 ஆம் ஆண்டில் மென்பொருள் ஏற்றுமதியில் தமிழகத்தின் பங்கு 12 கோடி ரூபாய் என்கிற அளவிற்குத்தான் இருந்தது. 1999-2000ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிலிருந்து

மென்பொருள் ஏற்றுமதியின் அளவு 1,914 கோடி ரூபாய் என்ற அளவிற்கு உயர்ந்தது என்றால் அதற்கு டாக்டர் ஆனந்த கிருஷ்ணன் போன்றவர்களின் அரிய ஆலோசனைகளும், கழக ஆட்சியின் முயற்சிகளும் காரணம் என்று திட்டவட்டமாகக் கூறலாம்.

இந்தப் புலிக்குப் பிறந்தவர்தான் தம்பி ஸ்ரீதர் ஆனந்த கிருஷ்ணன். அவரது புகைப்படத்துடன் அண்டார்டிகா பனிமலைக்கு அவரது பெயர் சூட்டப்படுகிறது என்று வெளிவந்துள்ள செய்தி ஒவ்வொரு தமிழனுக்கும் பெருமை சேர்க்கக் கூடிய ஒன்றாகும்.

ஆனால் தமிழகத்திலே கழக ஆட்சி முடிவுற்ற பிறகு டாக்டர் ஆனந்த கிருஷ்ணன் போன்றவர்களின் திறமையைப் பயன்படுத்திக் கொள்ள இந்த அரசு முன்வர வில்லை. அதன் காரணமாக கற்றார்க்கு சென்றவிடம் எல்லாம் சிறப்பு என்பதற்கொப்ப அவர் தற்போதெல்லாம் தனது பெரும்பாலான நேரத்தை டெல்லியிலும், அமெரிக்காவிலுமாக செலவிட்டு வருகிறார். அவரது மைந்தரோ அமெரிக்காவில் உள்ள பென்சில்வேனியா மாநிலப் பல்கலைக்கழகத்தில் ஜியோ பிசிக்ஸ் பேராசிரியராகப் பணியாற்றிக் கொண்டே அண்டார்டிகாவில் புகழ்க் கொடி நாட்டிவிட்டார். 41 வயதிலேயே இந்த அரும்பெரும் சாதனையைச் செய்துள்ள தம்பி ஸ்ரீதர் ஆனந்த கிருஷ்ணன் தன் வாழ்நாளில் மேலும் பல சாதனைகளைக் குவிப்பார் என்பதில் ஐயமில்லை. தமிழகத்திற்கு பெரும் புகழ் சேர்த்துள்ள இந்தக் குடும்பத்தினரை பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன்.

அன்புள்ள,

மு.க.

02-07-2003

2939. இவரைத் திருத்த முடியுமா?

உடன்பிறப்பே,

"புதிய தொழில் முதலீடுகளை ஈர்ப்பதில் இந்தியாவிலேயே தமிழ்நாடு உச்சக்கட்ட வளர்ச்சியில் உள்ளது'' என்று இந்திய தொழில் வர்த்தகக் கூட்டமைப்பின் தேசிய செயற்குழு கூட்டத்தில் உரையாற்றிய தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா தன்னுடைய வீரப் பிரதாபத்தை அத்துடன் நிறுத்திக் கொள்ளாமல், தேவையில்லாது தி.மு.க.வை வம்புக்கு இழுத்து, "தி.மு.கழக ஆட்சியில் முன்னேற்றம் முடக்கி வைக்கப்பட்டிருந்தது" என்று உளறிக்கொட்டியிருக்கிறார். எனவே உண்மை நிலையை எடுத்து விளக்க வேண்டியது என் கடமையாகிறது. -

1994ஆம் ஆண்டு இதே ஜெயலலிதா தமிழக முதலமைச்சராக இருந்தபோது, "பிசினஸ் இந்தியா" என்ற ஆங்கிலப் பத்திரிகையிலே வெளிவந்த கட்டுரை ஒன்றைப் படித்தாலே தொழில்துறை எந்த ஆட்சிக் காலத்தில் முடக்கி வைக்கப்பட்டிருந்தது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

"சென்னையைச் சேர்ந்த தொழில் அதிபர் ஒருவர் சொல்வது எனக் குறிப்பிட்டு, குப்பன், சுப்பன், முனியனை எல்லாம் நீங்கள் தாஜா செய்யவேண்டிய அவசியமில்லை. மூல விக்கிரகத்தை, ஜெயலலிதாவை தாஜா செய்துவிட்டாலே போதும், உங்களுடைய நலன்கள் பாதுகாக்கப்படும். அதிலிருந்து தவறிவிட்டாலோ உங்களுடைய வாழ்க்கை முழுவதுமேகூட குழப்பம்தான். ஜெயலலிதாவின் நிர்மூலமான குணாம்சங்கள் பல பெரிய தொழிலகங்களை வரவிடாமலேயே செய்து விட்டன"

என்று அ.தி.மு.க. ஆட்சியின் தொழில் வளர்ச்சியை(?) பற்றி அந்த ஏடு எழுதியிருந்தது. -

இது ஒன்று மாத்திரமல்ல; 1995ஆம் ஆண்டு நவம்பரில் - பொருளாதார நுண்ணறிவு அமைப்பு (Economics Intelligence Unit), "தெற்கே உள்ள வாய்ப்புகள்" என்ற தலைப்பில் வெளியிட்ட

அறிக்கையில், "ஏதாவது ஒரு மாநிலம் ஊழலிலே சிறந்து விளங்குகிறது என்று சொல்ல வேண்டுமானால், அந்தச் சிறப்புக்குரிய மாநிலம் தமிழ்நாடுதான்" (If there is any State with a reputation for corruption, It is Tamil Nadu) என்று குறிப்பிட்டிருந்தது. மேலும் அந்த அறிக்கையில் "The goingrate for backhanders in the form of Commission is said to be about 10 to 15 percent of even the project cost" (ஒவ்வொரு திட்டத்தினுடைய மதிப்பீட்டிலே 10 முதல் 15 சதவிகிதம் வரையில் இடைத்தரகர்களுக்கு கமிஷன் கொடுக்க வேண்டும்) என்றும் எழுதப்பட்டிருந்தது.

முதமைச்சர் ஜெயலலிதா தனது பேச்சிலே "இந்தியப் பொருளாதார கண்காணிப்பு மையம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், புதிய தொழில் முதலீட்டை ஈர்ப்பதில் தமிழ்நாடு முதல் இடத்தில் உள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது" என்று கூறியுள்ளார்.

1989-91ஆம் ஆண்டுகளில் தி.மு.கழக ஆட்சிக் காலத்தில் தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்கு, அரசு அளித்த ஊக்கத்தின் காரணமாக தமிழகம் இந்தியாவில் மூன்றாம் இடத்தை அடைந்திருந்தது. 1991-96 கால கட்டத்தில் அ.தி.மு.க. ஆட்சியின்போது தமிழ்நாடு தொழில் வளர்ச்சியில் பின்தங்கி, ஐந்தாம் இடத்திற்கு இறங்கிவிட்டது. 1996இல் தி.மு.கழக அரசு மீண்டும் பொறுப்பு ஏற்றதற்குப் பின்னர் தமிழகம் தொழில் வளர்ச்சியில் மீண்டும் முன்னணிக்கு வந்தது என்பது தான் உண்மை .

ஜெயலலிதா குறிப்பிட்டுள்ள அதே இந்தியப் பொருளா தார கண்காணிப்பு மையம் - Centre for Monitering indian Economy - கழக ஆட்சிக் காலத்தில் 22-5-2000 அன்று வெளியிட்ட அறிக்கையில் அன்றைய நிலையில் 1 இலட்சத்து 56 ஆயிரத்து 893 கோடி ரூபாய் முதலீடுகளைப் பெற்று தமிழகம் தொழில் முதலீடுகளில் இந்தி யாவிலேயே முதலாவது மாநிலமாக முன்னேற்றம் கண்டது என்பதைச் சுட்டிக் காட்டியுள்ளது.

மேலும் இதோ சில ஆதாரங்கள் :

● 28-4-1999 தேதியிட்ட "எகனாமிக் டைம்ஸ்" ஏட்டில், "தாராளமயமாக்கப்பட்ட பொருளாதார நடவடிக்கைகளுக்குப் பின், முழுவதும் ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட தொழில்

நிறுவனங்களை (Hundred percent export-oriented units) நிறுவுவதில் தமிழகம் முதல் இடத்தைப் பெற்றுள்ளது" என்று எழுதப்பட்டிருந்தது.

● லண்டன் மாநகரிலிருந்து வெளிவரும் "பைனான்சியல் டைம்ஸ்" என்ற பத்திரிகை 1997, ஏப்ரல் மாதத்தில் "சென்னை, இந்தியாவின் டெட்ராய்ட்" என்று வர்ணித்திருந்தது.

● 18-12-1998 நாளிட்ட "எகனாமிக் டைம்ஸ்" இதழில் லண்டன் மாநகரத்தைச் சேர்ந்த சர்வதேச ரியல் எஸ்டேட்ஸ் என்னும் நிறுவனத்தின் ஆலோசகர் ஜோன்ஸ் லாங்க் ஊட்டன் என்பவர் "Chennai has distincil strength over other cities for attracting investments" (முதலீடுகளை ஈர்ப்பதில் இந்தியாவில் மற்ற நகரங்களை விட சென்னை சிறப்பான வளங்களைப் பெற்று முன்னணி இடம் பெற்றுள்ளது) என்று பாராட்டியதாக செய்தி வந்தது.

● கடன் வைப்புத் தொகை விகிதாச்சாரத்தில் (Credit Deposit Ratio), அகில இந்திய அளவில் தமிழகம் முதல் இடத்தைப் பெற்றிருக்கிறது என 6-7-1998 தேதியிட்ட "டைம்ஸ் ஆப் இந்தியா" தெரிவித்திருந்தது. கடன் வைப்புத் தொகை விகிதாச்சாரம் அதிக அளவில் இருப்பது தொழில் வளர்ச்சிக்கு உகந்த சூழ்நிலையை உருவாக்கும். அனைத்திந்திய சராசரி கடன் வைப்புத் தொகை விகிதாச்சாரம் 56 விழுக்காடாக அப்போது இருந்தபோது, தமிழகத்தில் அது 92 விழுக்காடாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

● 10-4-1997 தேதியிட்ட "பைனான்ஷியல் டைம்ஸ்" இதழில், தலைசிறந்த பத்திரிகையாளர் மார்க் நிக்கல்சன் எழுதிய கட்டுரையில் "வெளிநாட்டு முதலீடுகளை ஈர்த்து புதிய தொழில்களை உருவாக்கி வளர்ப்பதில் மாநிலங்களுக்கு இடையேயான போட்டியில், தமிழ்நாட்டின் கார் தொழில் வியக்கத்தக்க முன்னேற்றத்தைக் கண்டுள்ளது" - என்று எழுதியிருந்தார். -

● 2000ஆண்டு ஏப்ரலில் "இண்டஸ்ட்ரியல் ஹெரால்ட்" என்ற நாளிதழ், "வாகன உற்பத்தி, வாகன உதிரி பாகங்கள் உற்பத்திப் பிரிவுகள் அமைப்பதில் மிகுந்த கவனம் செலுத்திடும் சென்னை மாநகரம் இந்தியாவின் டெட்ராய்ட்" என்று குறிப்பிட்டிருந்தது.

● 7-2-2000 தேதியிட்ட "எகனாமிக் டைம்ஸ்" இதழ், "இந்தியாவில் பெரிதும் தொழில்மயப்படுத்தப்பட்ட மாநிலங்களில் ஒன்றாக தமிழ்நாடு விளங்குகிறது. நாட்டின் ஏற்றுமதிக்கு தமிழ்நாட்டின் பங்களிப்பு மிகப் பெரிதாகும்" என்று தெரிவித்திருந்தது.

தி.மு.கழக ஆட்சியில் தொழில் முன்னேற்றம் முடக்கி வைக்கப்பட்டதாகவும் இவர்தான் எழுப்பி நடமாடவிட்ட தாகவும் தற்போது கூறும் ஜெயலலிதாவிற்கு இத்தனை சான்றுகளும் போதாதென்றால் மற்றுமோர் சான்றினை யும் கூற விரும்புகிறேன். 1992-93ஆம் ஆண்டில் அ.தி.மு.க. ஆட்சியில் தமிழ்நாட்டில் இருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களின் மதிப்பு 6,808 கோடி ரூபாய். நான் முதலமைச்சராக இருந்த கழக ஆட்சியில் 1996-97ஆம் ஆண்டில் தமிழகத்திலிருந்து ஏற்றுமதி யான பொருட்களின் மதிப்பு 17,802 கோடி ரூபாய். 1997-98ஆம் ஆண்டில் 18,982 கோடி ரூபாய்.1999-2000ஆம் ஆண்டில் தமிழகத்திலிருந்து ஏற்றுமதி மதிப்பு 21,387 கோடி ரூபாய். எனவே முன்னேற்றம் எதுவும் முடக்கி வைக்கப்படவில்லை என்பதையும், அது படிப்படியாக உயர்ந்துகொண்டுதான் வந்துள்ளது என்பதையும் சாதாரண அறிவுடையோர்கூடப் புரிந்து கொள்ள முடியும்!

கழக ஆட்சிக் காலத்தில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான திறனை மாநில அரசு இழந்திருந்தது என்கிறார் ஜெயலலிதா! அவர் பொய் உரைக்கிறார் என்பதற்கான புள்ளிவிவரம் இதோ!

2000ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் இந்தியப் பொருளாதாரக் கண்காணிப்பு மையம், அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளைப் பற்றி வெளியிட்டுள்ள அறிக்கையில், கர்நாடகம் 106.12 குறியீட்டு எண்களையும், ஆந்திரப் பிரதேசம் 104.01 குறியீட்டு எண்களையும், தமிழ்நாடு 145.62 குறியீட்டு எண்களையும் பெற்றுள்ளன என்று குறிப்பிட்டுள்ளது. அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளில் மாநகரங்களுக்கு இடையேயான மதிப்பீட்டில் ஐதராபாத் 153.70 குறியீட்டு எண்களையும், பெங்களூர் 100.28 குறியீட்டு எண்களையும் சென்னை மாநகரம் 472.46 குறியீட்டு எண்களையும் பெற்றுள்ளன என்றும் குறிப்பிட்டுள்ளது.

நீ என்ன விளக்கம் வேண்டுமானாலும் சொல்; என்ன ஆதாரம் வேண்டுமென்றாலும் காட்டு; நான் தி.மு.க.வைப் பற்றி என்ன பொய் வேண்டுமானாலும் சொல்லிக் கொண்டுதானிருப்பேன் என்று செயல்படும் இவரைத் திருத்த முடியுமா?

அன்புள்ள,

மு.க.

03-07-2003

2940. ஒப்பீட்டுக்கு உகந்தவரல்ல!

உடன்பிறப்பே,

தமிழக அரசின் கல்வி அமைச்சர் செம்மலை ஏற்கனவே பொய்கள் பல சொல்லி இமாலயப் புகழ் பெற்றவர். உதாரணமாக சட்டப் பேரவையில் திரு. வள்ளல்பெருமான் பேசும்போது, அரசாணை 56ன் மூலமாக மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் தமிழ் மீடியம் வகுப்புகளை மூடவும், ஆங்கில மீடியத்திற்கு இணையாக தமிழ் மீடியம் கோரிக்கைகள் ஏதாவது வந்தால் அதைத் தடுக்கவும் வழிவகுத்திருக்கிறார்கள் என்று குறிப்பிட்டபோது, பேரவைத் தலைவர் திரு. காளிமுத்து அவர்கள்; எந்த ஆண்டு அந்த ஆணை பிறப்பிக்கப்பட்டது என்று கேட்டதற்கு, வள்ளல் பெருமானை முந்திக் கொண்டு கல்வி அமைச்சர் செம்மலை அவையிலே எழுந்து, "அந்த அரசாணை தி.மு.கழக ஆட்சியிலே போடப்பட்டது, அதிலிருந்தே தி.மு.க.விற்கு தமிழ் மீது எவ்வளவு அக்கறை இருந்தது என்பது புலனாகிறது'' என்று ஆளுங்கட்சியினரின் கைதட்டலோடு கூறினார். ஆனால் அதற்கு மறுநாளே அந்த அரசாணையை அப்படியே முரசொலியில் வெளியிட்டு, அது 12-9-2002 அன்று ஜெயலலிதா ஆட்சியிலேதான் பிறப்பிக்கப்பட்டது என்பதைச் சுட்டிக்காட்டியதோடு அமைச்சர் பேரவையிலே எப்படிப்பட்ட பொய்யைச் சொல்லியிருக்கிறார் என்பதும் நாட்டிற்கு எடுத்துக் காட்டப்பட்டது.

அடுத்து, தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் செயல் தலைவர் திரு. இளங்கோவன் அவர்கள் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளுக்கு தமிழக அரசின் சார்பில் அனுமதி இரண்டொரு நாட்களில் வழங்கப்பட இருக்கிறது, அதிலே லஞ்சம் விளையாடுகிறது என்று அறிக்கை விடுத்தார். அதை அமைச்சர் செம்மலை வீராவேசமாக மறுத்து அறிக்கை ஒன்றை விட்டார். இளங்கோவன் சொல்வது தவறானால் அவதூறு வழக்குகள் போடுவதில் புகழ்பெற்ற இந்த அரசு இளங்கோவன் மீது வழக்கு போட்டிருக்கலாம். அதற்கு

மாறாக "இளங்கோவன் என் மீது வழக்குப் போடத் தயாரா?" என்று அமைச்சர் தோள்தட்டினார்.

இத்தனை சிறப்புக்குரிய அமைச்சர் செம்மலைதான் நேற்று விடுத்த அறிக்கையில் "கடைத்தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைப்பதைப் போல தேர்தல் காலத்தில் அரசு ஊழியர்களையும், ஆசிரியர்களையும் பயன்படுத்திக் கொள்வதற்காக ஆசைகாட்டி மத்திய அரசு ஊழியர்களுக்கு இல்லாத சலுகைகளை வாயளவில் கருணாநிதி தன் ஆட்சிக் காலத்தில் அறிவித்தாரே தவிர அறிவிக்கப்பட்ட சலுகைகளையும் 3 ஆண்டுகளுக்குப் பிறகு தருவதாகச் சொல்லி அல்லவா ஏமாற்றினார்" என்று பேசியிருக்கிறார்.

பரவாயில்லை, மத்திய அரசு ஊழியர்களுக்குக் கூட இல்லாத சலுகைகளை என்னுடைய ஆட்சிக் காலத்தில் அறிவித்ததாக தெரிந்தோ தெரியாமலோ ஒப்புக் கொண்டுவிட்டார். அதற்காக நன்றி. ஆனால் அவற்றையெல்லாம் வாயளவில் நான் அறிவித்ததாகக் கூறுகிறார். நான் வாயளவில் அறிவித்தேனா, அல்லது அறிவித்ததற்கான ஆணைகளைப் பிறப்பித்திருக் கிறேனா என்பதை நிதித்துறை செயலாளரைக் கொண்டு அறிவிக்க அமைச்சர் தயாராக இருக்கிறாரா? நான் அறிவித்த எந்த அறிவிப்புக்கு அரசாணை பிறப்பிக்கப்படாமல் இருக்கிறது என்று அவர் கூறுவதற்கு தயாரா? நான் அறிவித்துவிட்டு ஆணை பிறப்பிக்காமல் இருந்திருந்தால், இப்போது தெருவிலே காவல் துறையினரிடம் உதை வாங்கிக் கொண்டு பரிதாபமாகப் போராடிக் கொண்டிருக்கும் அரசு அலுவலர் சங்கத்தினர் கேட்காமல் இருந்திருப்பார்களா? போராடாமல் இருந்திருப்பார்களா? ஜெயலலிதாவின் இந்த இரண்டு ஆண்டு கால ஆட்சியில் அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் எத்தனைமுறைப் போராடி சிறைக்குச் சென்று கொண்டிருக்கிறார்கள். தி.மு.கழக ஆட்சியிலே ஐந்தாண்டுக் காலத்தில் ஒரு முறையாவது அவர்கள் இந்த அளவிற்குப் போராடியது உண்டா? சிறைக்குச் சென்றது உண்டா? அமைச்சர் இதற்கான விளக்கங்களைத் தரத் தயாராக இருக்கிறாரா?

அரசு அலுவலர்களுக்காகவும், ஆசிரியர்களுக்காகவும் வெறும் வாயளவில்தான் நான் அறிவிப்புகளைச் செய்தேனா? பட்டியலிட அமைச்சர் தயாரா?

1989ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்தபோதே, மாநில அரசின் ஐந்தாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளுக்கேற்ப 443 கோடி ரூபாய் அளவிற்கு ஊதிய உயர்வு அளித்தது கழக ஆட்சி, அது வாயளவில் செய்த அறிவிப்பா?

சலுகைகளை மூன்றாண்டுகளுக்குப் பிறகு தருவதாகச் சொல்லி ஏமாற்றியதாக தற்போது அமைச்சர் செம்மலை அறிக்கை விடுகிறார். 1996ஆம் ஆண்டு மே திங்களில் கழக அரசு பதவியேற்றபோதிலும், ஊதிய உயர்வு 1-1-1996 தேதியிலிருந்து கிடைக்கத்தக்க அளவிற்கு முன்கூட்டிய தேதியிலிருந்தே அமல்படுத்திய ஆட்சிதான் தி.மு.கழக ஆட்சி. 96ஆம் ஆண்டு மட்டும் 1230 கோடி ரூபாய் அளவிற்கு கூடுதல் சுமைகளையேற்று புதிய ஊதிய விகிதங்கள் அறிவிக்கப்பட்டதோடு நிறுத்தப்படவில்லை, அமல்படுத்தப்பட்டது. அமைச்சருக்கு விவரம் தெரியாவிட்டால், அரசுக்கு இப்போது ஆதரவு தருகின்ற ஒன்றிரண்டு சங்கங்கள் இருந்தால் அந்தச் சங்கப் பிரதிநிதிகளை அழைத்துக் கேட்டு தெரிந்து கொள்ளட்டும்.

ஊதியக் குழுவின் பரிந்துரைகளிலே சில முரண்பாடுகள் இருப்பதாக தெரிவித்ததும் ஒரு நபர் குழு அமைத்து 75 கோடி ரூபாய் அளவிற்கு ஊதிய உயர்வு அறிவிக்கப்பட்டு; வழங்கப்பட்டது. சத்துணவு பணியாளர்களுக்கு சுமார் 60 கோடி ரூபாய் அளவிற்கு ஊதிய உயர்வு தரப்பட்டது. மத்திய அரசின் ஐந்தாவது ஊதியக் குழுவிற்கு இணையாக ஊதிய உயர்வு கொடுத்த வகையில் மட்டும் அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு 1,448 கோடி ரூபாய் செலவாயிற்று.

தற்போது அ.தி.மு.க. ஆட்சியில் ஓய்வூதியம் பெற்றுக் கொண்டிருப்பவர்களைக்கூட பாதிக்கும் வகையில் ஆறு அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. ஆனால் கழகம் ஆட்சியில் ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதிய தாரர்களுக்கு 40 விழுக்காடு உயர்வு மற்றும் பல ஓய்வூதியப் பயன்களை வழங்கியதின் காரணமாக 462 கோடி ரூபாய் கூடுதல் செலவாகியது.

1-1-96 முதல் 31-3-1998 வரை ஊதிய உயர்வு நிலுவைத் தொகையைத் தவணை முறையில் வழங்கியதில் மட்டும் அரசுக்கு 2,400 கோடி ரூபாய் செலவானது.

அரசு அலுவலர்களின் கோரிக்கையை ஏற்று வீட்டு வாடகைப்படி 1-4-1998 முதல் உயர்த்தப்பட்டதால் 100 கோடி ரூபாய் கூடுதல் செலவு.

கிராம உதவியாளர்களுக்கு ரூ. 600 - 750 என்றிருந்த ஊதிய விகிதம் ரூ. 1800 - 2240 என்ற அளவிற்கு உயர்த்தப்பட்டதால் 26,250 பேர் பயனடைந்தனர்.

சத்துணவு அமைப்பாளர்களுக்கு ரூ. 200 - 400 என்றிருந்த ஊதிய விகிதம் ரூ. 600 - 1100 என்ற அளவிற்கு உயர்த்தப்பட்டதால் பயன்பெற்ற சத்துணவு அமைப்பாளர்களின் எண்ணிக்கை 91,000.

தொகுப்பூதியம் பெற்று வந்த பணியாளர்களுக்கு 40 விழுக்காடு ஊதிய உயர்வு அளித்து, அவர்களுக்கு குறைந்தபட்ச உயர்வாக 50 ரூபாய்க்குக் குறையாமல் வழங்கப்பட்டது. இதன் காரணமாக 2,04,571 பேர் பயனடைந்தனர்.

கழக அரசு பொறுப்பேற்றிருந்த காலத்தில் மத்திய அரசு அகவிலைப்படியை உயர்த்தியபோதெல்லாம் அப்படி உயர்த்தி அமல்படுத்திய நாளில் இருந்தே தமிழக அரசும் அகவிலைப்படியை உயர்த்தி வந்துள்ளது. தற்போது இந்த இரண்டாண்டுகளில் ஒருமுறையாவது அவ்வாறு உயர்த்தப்பட்டுள்ளதா? - அமைச்சரோ, முதல்வரோ பதில் கூறத் தயாரா?

அரசு ஊழியர் குடும்பப் பாதுகாப்புத் திட்டத் தொகை தி.மு.க. தேர்தல் அறிக்கையிலே அறிவித்தவாறு ஒரு இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டது.

அரசு அலுவலர்களுக்கு போனஸ் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை ஏற்கப்பட்டதும் கழக ஆட்சிக் காலத்திலேதான்.

இன்னும் சொல்லிக் கொண்டே போகலாம். தற்போது தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியச் சங்கத் தலைவராக பணியாற்றி வருகின்ற திரு. சூரியமூர்த்தி அவர்களையும், மற்ற சங்கத் தலைவர்கள், நிர்வாகிகளையும் நள்ளிரவிலே கைது செய்து சிறையிலே போட்டு அழகு பார்க்கிறது இந்த அரசாங்கம். ஆனால் சூரியமூர்த்திக்கு முன்பு இந்தச் சங்கத்தின் தலைவராக இருந்த சிவ. இளங்கோ பெயரால் அவரது வீடு அமைந்துள்ள சாலைக்கு


சிவ. இளங்கோ சாலை என்றே பெயரிட்டு மகிழ்ந்தது தி.மு.கழக ஆட்சி.

உடன்பிறப்பே, உயரமானதையும், உறுதியானதையும் "மலை" என்று ஒப்பிடுவர்; அந்த ஒப்பீட்டுக்குத் தன்னை உகந்தவரில்லை என்று காட்டிக்கொள்கிறாரே; செம்மலை! அந்தோ பரிதாபம்! -

அன்புள்ள,

மு.க.

05-07-2003



1924 - 2018

நூல் கிடைக்குமிடம் :

கௌரா புத்தக மையம்
9, செ. ஜான் சர்ச் வணிக வளாகம்,
ராக்கின்ஸ் சாலை, திருச்சி - 1.
gowraputhagamaiyam@gmail.com

கௌரா ஏஜென்ஸீஸ்
1, சாமி தெரு, திருவல்லிக்கேணி,
சென்னை - 5. gowra09@gmail.com.
www.facebook.com/gowrabookcentre

கௌரா
பதிப்பகக் குழுமம்

அட்டை : ஜே.ஜே டிசைன்ஸ்

GO 2300
ரூ.300

டிசம்பர் 2022